
நூற்றாண்டு விழா அடிப்படையில் நினைவு கூறுகின்ற இத்தருணத்தில் திரு.நல்லையா அவர்களையும் அவர்களின் சேவைகளையும் சமூகத்திற்கு வெளிச்சம் போட்டுக் காட்டுவது அவரது அளப்பரிய சேவைகளுக்கு செய்யும் நன்றிக் கடனாகவே நான் கருதுகிறேன்.

திருவாளர் V.நல்லையா அவர்கள் மட்டக்களப்பு அரசினர் வைத்தியசாலையை அண்டியுள்ள சிங்களவாடி என்னும் குடியிருப்புப் பிரதேசத்தில் 1907 இல் பிறந்தார். இவரது குடும்பம் கல்வியோடு மிகவும் பரிச்சயமானது. இவரது மச்சான் முறையான கணபதிப்பிள்ளை என்பவரே சிவானந்தா வித்தியாலயத்தில் பல வருடங்களாக அதிபராக இருந்தார். அப்போது அதே பாடசாலையில் திரு. நல்லையா அவர்களும் கற்பித்துக் கொண்டிருந்தார்.

இக்கால கட்டத்தில் மட்டக்களப்பு மாவட்டத்தில் பட்டதாரிகள் இல்லையென்றே கூறலாம். இவரது ஆரம்பக் கல்வியை மட்டக்களப்பு மத்திய கல்லூரியில் பெற்றார். இவர் மகரகம ஆசிரியப் பயிற்சிக் கலாசாலையில் ஆங்கில நெறி பயிற்சி பெற்றவராவார். இதைத் தொடர்ந்து ( B.A.Hons ) பட்டத்தை லண்டனில் பெற்றார். தமிழ், ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளிலும் பேச்சாற்றல் பெற்றவராகத் திகழ்ந்தார். விபுலானந்த அடிகளிடம் கற்ற தமிழும் இவர் நாவுகளில் நடனமிடும்.

**ஆசிரிய கலாசாலையில் அதிபராக ஆரம்பப் பணி:-**

முன்னொருவர் அதிபராக இல்லாத சூழ்நிலையில் திரு.நல்லையா அவர்களுடைய பணி பொறுப்பு வாய்ந்ததாகவும் சிறந்த முன்மாதிரியாக அமைந்ததாகவும் இருந்ததாக இவரை நன்கு அறிந்தவர்கள் கூறுவார்கள். இவருக்கு இருந்த நற்பெயரும் புகழும் காரணமாக அப்போது இருந்த பெரியார்கள் திரு. S. தர்மரட்ணம் MSC, திரு. A.L. சின்னலெப்பை M.P, திரு. M.M. இப்ராஹிம் M.P ஆகிய மூவரும் தனித்தனியாக 80"x 20" தற்காலிக கட்டடங்களை அமைத்துக் கொடுத்தார்கள். இதுவும் திரு. நல்லையா அவர்களின் முயற்சியே ஆகும். அக்காலத்தில் கலாசாலையைச் சுற்றிவர பெரும் காடு. இரவில் நுளம்புத் தொல்லை, சமையலறை, குளியலறை வசதிகள் மிகவும் குறைவு. இவ்விதமான இக்கட்டான சூழ்நிலையில் அதிபர் அவர்கள் பணிபுரிந்தார்கள். அரசியல் தலைவர்கள் அடிக்கடி வந்து கலாசாலையை கவனிப்பார்கள்.

இருப்பினும் போதனாசிரியர்கள் பற்றாக்குறை ஒரு பெரும் குறையாகவே காணப்பட்டது. இக்குறையை நீக்கும் பொருட்டு தற்காலிகமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதுரைத் தமிழ்ச் சஙகப் பண்டிதர். திருவாளர் குஞ்சுத்தம்பி, சான்றோர் சங்கரதாஸ் முதலியவர்கள் தமிழ் மொழிக் கல்விக்கும் உடற்பயிற்சி கல்விக்கும் சீரிய பங்காற்றினர்.

அதிபர் நல்லையா அவர்கள் கற்பித்தலில் கைத்தேர்ந்த வல்லுனர். வரலாறு,ஆங்கிலம்,உளநூல் ஆகிய பாடங்களை இவர் கற்பித்தார். இவரது விரிவுரை மணித்தியாலக் கணக்கில் அமைந்தாலும் இனிப்பாகவே இருக்கும்.

இவ்விதமாக திறமையான அதிபராகவும் சிறந்த ஆசிரியராகவும் கடமையாற்றியதை அவரிடம் கல்வி கற்ற எவராலும் மறக்க முடியாது. இவ்வாறு 1944 கடைசி வரையும் அதிபராக இருந்தார்.

**அரசியல் பிரவேசம்**

கிழக்கு மாகாணம் மூன்று தொகுதிகளாக பிரிக்கப்பட்டு அப்போது தேர்தல்கள் நடந்தன. மட்டக்களப்பு வடக்கு, மட்டக்களப்பு, தெற்கு, திருகோணமலை என்பன அவை. இதில் மட்டக்களப்பு வடக்கிலிருந்து MSC இல் ( Member of State Council ) பிரதிநிதியாக இருந்த திரு. தம்பி என்பவர் துரதிஷ்டவசமாக பதவியிழந்தார். காலியான அந்த இடத்திற்கு தகுதியான ஒருவரை தெரிவு செய்வதில் அறிஞர்கள் ஈடுபட்டனர். இந்த பதவிக்கு திரு. நல்லையா அவர்களும் போட்டியிட்டார்கள். அப்போது போட்டிக்கு நிறங்கள் கொடுக்கப்படும். இவரது நிறம் மஞ்சள் அப்போது கொழும்பிலிருந்து வந்து Mr. Mihlar என்பவரும் போட்டியிட்டார். இவர் மேல்மாகாணத்தவர் என்பதால் திரு. நல்லையா அவர்கள் பெருவாரியான வாக்குகளால் தெரிவு செய்யப்பட்டார்கள், முஸ்லிம்களும் இவருக்கு ஆதரவாக வாக்களித்தனர்.

திரு. நல்லையா அவர்களுக்கு ஆசிரிய கலாசாலையில் பிரியாவிடை நடந்தது. இதில் கல்முனை பிராந்தியத்துக்கு கல்வியதிகாரியாகவிருந்த யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த அம்மணி ஒருவரும் கலந்து கொண்டார்கள். இவ்விழாவின் போது சமுகம் தந்திருந்த சிலர் அம்மணியையும் நல்லையா அவர்களையும் இணைத்து ஜோடியாக்கிக் கதைத்தனர் இதுவே உண்மை வாழ்க்கையிலும் அவர்களை சதிபதிகளாக ஆக்கிவிட்டிருந்தது.

திரு. நல்லையா அவர்களுக்கு முன்பிருந்த அரச சபை பிரதிநிதிகள் எவரும் பேச்சாற்றல் உள்ளவர்களாக இருக்கவில்லை. எனினும் வடமாகாண அரசியல் பிரதிநிதிகள் பேச்சாற்றல் உள்ளவராக விளங்கினார்கள். G.G. பொன்னம்பலம் முதலியவர்கள் அரசியல் சாணக்கியம் உடையவர்களாக விளங்கினார்கள். இந்த நிலையில் தான் திரு. நல்லையா அவர்கள் தமது அரசியல் சிந்தனையை ஆணித்தரமாக முன்வைத்தார்கள். இதில் பலரின் பாராட்டைப் பெற்றதோடு சிலரின் பொறாமையையும் சம்பாதித்துக் கொண்டார். இந்த எரிச்சலும் பொறாமையும் திரு. நல்லையா அவர்களுக்கு தொடர்ந்து விரோதிகளாக மாறிவிட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொறாமை கொண்ட சிலர் பல திருகுதாளங்களையும் சூழ்ச்சிகளையும் செய்யத் தொடங்கினர். இச் சூழ்ச்சிகளில் திரு. நல்லையா அவர்கள் தற்செயலாக அகப்பட வேண்டியதாயிற்று. அப்போதிருந்த பிரதம மந்திரி Sir. ஜோன் கொத்தலாவெல அவர்கள் திரு. நல்லையா அவர்களுக்கு பக்கபலமாக இருந்தார்.

இவருடைய குடும்ப வாழ்க்கையில் இவருக்கு இரு இரட்டைக் குழந்தைகள் பிறந்ததாகவும் அறிய முடிகிறது. அக்குடும்ப வாழ்க்கையும் நிம்மதியான முறையில் நீடித்து நிற்கவில்லை.

அரசப் பிரதிநிதி காலம் முடிந்ததும் சட்டத்துறையில் ஆர்வம் கொண்டு மிகவும் தீர்க்கமான அறிவைப் பெற்றார். இக்காலத்தில் சட்டத்தரணிகளுக்குரிய உடையை அணிவதற்காக தன் பாரம்பரிய வேட்டி சால்வையை களைய வேண்டி வந்தது. நீதி மன்றங்களில் பல புகழ்பெற்ற வழக்கறிஞர்களிடையே வாதாடி வெற்றி பெற்றார். இதுவும் அவர் மீதிருந்த பொறாமையை மேலும் கொழுந்து விட்டெரியச் செய்தது. இதன் விளைவாக அவரது மன நிம்மதி மேலும் பாதிப்படைந்தது. இதனால் அவர் தன்னம்பிக்கையை இழக்க வேண்டியேற்பட்டது. அதைத் தொடர்ந்து இவருக்கு பல துரதிஷ்டமான சந்தர்ப்பங்களும் ஏற்பட்டன. இவர் அனுதாபத்திற்குரிய ஒரு மனிதராக நோக்கப்பட்டார்.

இந்நிலையில் மட்டக்களப்பு மக்கள் அவரை சரியாக மதித்து நடக்கவில்லை. மட்டக்களப்பு மண்ணுக்குச் சிறந்த பல பணிகளை அவர் புரிந்திருந்தார். மட்டக்களப்பு ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை, வாழைச்சேனை காகிதத் தொழிற்சாலைக்கும் இவரே வழி வகுத்தார். மட்டக்களப்பின் மகிமையை வெளிச்சம் போட்டுக் காட்டிய மகானின் இறுதிக் காலம் மிகவும் பரிதாபத்திற்குரியதாக அமைந்தது வருத்தத்திற்குரியதே.

இப்போது இவரிடம் கல்வி கற்றவர்களும் இவரை நன்கு விளங்கியவர்களும் மாத்திரமே இவரை நினைவு கூறுகின்றார்கள். அன்னாரின் நூற்றாண்டு நினைவு விழா அனுஷ்டிக்கப்படும் இவ்வேளையில் கலாசாலைக்காக இத்தகவல்களை வழங்குவதில் பெருமையடைகின்றேன்.

அல்ஹாஜ் J.M. சம்சுதீன் மௌலானா - அட்டாளைச்சேனை.
(திருவாளர் நல்லையா அவர்களின் மாணவன்)

தொகுப்பு
கே.கணேஷமூர்த்தி
எம்.ஏ.எம். ஷபீக்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளைப்பாறும் எம் தமிழ்க் காற்று

கருணை மிகு கருங்கொடித் தீவின் கலைக்குடும்பமாம் நெ.அலியார் க. அவ்வாக் குட்டி ஆகியோரின் அருந்தவப் பயனாய் 1950.06.05 ஆம் நாளில் சுலைமா லெவ்வை என்னும் சுட்டிக் குழந்தை மண்ணில் தவழ்ந்து. இம்மழலை மலர அக்/அரசினர் ஆண்கள் பாடசாலையில் தன் இளமைக் கல்வியையும் அக்/தேசிய பாடசாலையில் தன் ஆரம்பக் கல்வியையும் இனிது முடித்து நிமிர்ந்தது.

வாலிபனாகி வளர்ந்த ஆற்றல்மிகு இளைஞனது கல்வி வளர்ச்சிக்கு களனிப் பல்கலைக்கழகம் கரம் தந்தது. இது பொருளியல் துறையில் சிறப்புப் பட்டத்தை இவருக்குத் தந்து கௌரவித்தது. தொடர்ந்து தேசியக் கல்வி நிறுவகம் தான் நடாத்திய முதலாவது பட்டப்பின் கல்வி டிப்ளோமா தேர்வில் இவருக்கு திறமைச் சித்தியை தந்து பாராட்டியது.

இக்கல்வி ஆர்வலர் 15.02.1982 இல் பட்டதாரி ஆசிரியராகி மட்/ ஏறாவூர் அலிகார் தேசிய பாடசாலையில் நெடுங்கடமைப் பயணத்தை ஆரம்பித்ததுடன் 1984.02.14 இல் அட்டாளைச்சேனை தேசியப் பாடசாலைக்கு மாற்றம் பெற்று அங்கு 1997.04.08 வரை நீண்ட காலம் நிலைபெற்றார்.

ஓ....! எம் தமிழாசானாய் 09.04.1997 அன்று அரசினர் ஆசிரிய கலாசாலையின் முதற் நிலை விரிவுரையாளராக நியமனம் பெற்றுக்கொண்டார்.

இவர், 20.08.2000மாம் ஆண்டில் இலங்கை கல்வி நிர்வாக சேவையின் தரம் - III இற்கான நியமானத்தைப் பெற்றுக் கொண்டார்.

இக்கலாசாலையில் ஆரம்பக்கல்வி, தமிழ்மொழி (பொது), தாய்மொழி (ஆரம்பநெறி) கல்விக் கொள்கை பொருளியல் ஆகிய பாடங்களை கற்பித்து மாணவரை கடைத்தேற்றியதோடு கலாசாலையின் கலை அமுதத்தினதும் ஆசிரியர் நலன் புரிச் சங்கத்தினதும் பொறுப்பாசிரியர்களில் ஒருவராக 2005, 2006 ஆம் ஆண்டுகளில் கடமையாற்றியுள்ளார்.

அத்தோடு தேசிய கல்வி நிறுவகத்தால் நடாத்தப்படும் பட்டப்பின் கல்வி டிப்ளோமா, கல்வி மாணி பாடநெறிகளின் கல்முனை மத்திய நிலையத்தின் விரிவுரையாளராகவும் 2009 ஆம் ஆண்டிலிருந்து இணைப்பாளராகவும் நியமனம் பெற்றதோடு அதனை திறம்படவும் இன்றும் செய்து வருகிறார்.

அக்கரைப்பற்றைச் சேர்ந்த ஏ.எம். கெமீனாவை தனது இல்லத்தரசியாகக் கரம் பிடித்து S.L.A. அஸ்கி, S.L.A. அஸ்றி ஆகியோருக்கு தந்தையுமாவார்.

நீளமாய்..........ஆழமாய் விரிந்த எங்கள் ஆசானின் சேவைக்காலம் இதோ இன்றுடன் வற்றிப் போகிறது. இனி எங்கள் தமிழ்த்தாகம் விக்கித் தவிக்கும். உங்கள் உன்னத சேவைக்காகவும், நீண்ட உங்கள் நிம்மதி கொண்ட வாழ்வுக்காகவும் இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

- மலர்க்குழு -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளைப்பாறும் எம் இசை ஆசான்...

கிழக்கு மாகாணத்தின் அம்பாறை மாவட்டத்தில் அமைந்துள்ள சாய்ந்தமருது 10ஆம் பிரிவில் 188 கல்யாண வீதியை வதிவிடமாகக் கொண்ட முஹம்மது முகையதீன் உம்மு சல்மா தம்பதியினருக்கு சிரேஷ்ட புதல்வராகப் பிறந்த முஹம்மது முகையதீன் முஹம்மது மஹ்ரூப் தனது ஆரம்பக் கல்வியை சாய்ந்தமருது கமு/அல் - ஹிலால் வித்தியாலயத்திலும் உயர்தரக் கல்வியை கமு/சாஹிராக் கல்லூரியிலும் பயின்று 1974 இல் க.பொ.த சாதாரண தரப் பரீட்சையில் கர்நாடக சங்கீதப் பாடம் உட்பட ஆறு திறமைச் சித்திகள் பெற்று சித்தியடைந்தமையாலும் 1975ஆம் ஆண்டு யாழ் - வட இலங்கை சங்கீத சபை வாய்ப்பாட்டுப் பரீட்சை (4ஆம் வருடம்) சித்தி பெற்றமையாலும் 1979 மார்ச் 27ஆம் திகதி கமு/மஹ்மூத் மகளிர் மகா வித்தியாலயத்தில் இசைத்துறை உதவி ஆசிரியராக நியமனம் பெற்று கடமையாற்றினார்.

சிறுவயதிலிருந்து இசைக்கலையில் ஆர்வம் இருந்தமையால் 1973ஆம் ஆண்டு இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் நடைபெற்ற இஸ்லாமியக் கீத கலைஞர் தேர்வில் சித்தி பெற்று முஸ்லிம் சேவையில் இஸ்லாமிய கீதக் கலைஞராக கால் நூற்றாண்டுகளுக்கு அதிகமான காலம் ஈடுபாடு கொண்டு செயற்பட்டு நிகழ்ச்சியில் பங்காற்றியதுடன் 1981 ஆம் ஆண்டு யாழ் - கோப்பாய் அரசினர் ஆசிரியர் கலாசாலையில் இசைப்பாடத்துறையில் மூன்றாண்டுகள் பயிற்சி பெற்று இறக்காமம் கமு/அல் -அஸ்றப் மகா வித்தியாலத்திலும், நிந்தவூர் அல் - அஸ்றக் தேசிய கல்லூரியில் பயிற்றப்பட்ட இசைத்துறை ஆசிரியராகப் பணியாற்றி 1984 ஆம் ஆண்டு ஆசிரியர்களுக்கான சேவை முன் பயிற்சிப் போதனாசிரியராகவும், 1991 இல் தேசிய கல்வி நிறுவகமும், கல்வி அமைச்சும் நடைமுறைப்படுத்திய ஆசிரியர்களுக்கான தொலைக்கல்விப் பாடநெறியின் இசைத்துறைப் போதனாசிரியர் நியமனம் பெற்று கல்முனை சாஹிரா மத்திய நிலையத்திலும், சம்மாந்துறை தொலைக்கல்வி மத்திய நிலையத்திலும் பணியாற்றியதோடு 1996இல் இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தில் "மீலாதுன்நபி" சிறப்பு நிகழ்ச்சியில் பங்கு கொண்டு இஸ்லாமிய கீத நிகழ்ச்சி ஒளிபரப்பு செய்யப்பட்டது.

1994ம் ஆண்டு பகுதி நேர இசைத்துறை விரிவுரையாளராக அட்டாளைச்சேனை ஆசிரியர் கலாசாலையின் நியமனம் பெற்று 14.07.1997முதல் நிரந்தர விரிவுரையாளராகப் பணியாற்றியும் ஆசிரிய மாணவர்களுக்கான அழகியற் துறைக் கல்விக்கான விருத்திக்கு 2000ஆம் ஆண்டு முற்பகுதியில் I - ஆரம்ப நெறி ஆசிரியருக்கான சங்கீதம் II -அழகியல் ஆக்கத் தொழிற்பாடுகள் என்ற நூல்களை வெளியிட்டு பணியாற்றியதோடு 2000.08.24ம் திகதி முதல் கல்வி நிருவாக சேவை SLEAS -III பதவி நியமனம் கிடைக்கப்பெற்று 2006ம் ஆண்டு புனித ஹஜ் கடமை நிறைவேற்றியதோடு சேவைக்காலத்தின் 31 வருட கால பூர்த்தியின் பின் 2010ம் ஆண்டு இறுதியில் ஓய்வு பெறவுள்ளார்.

ஓ............எம் கலைஞனே! உன் ஆத்மாவின் சங்கீதம் காற்றில் கரையும் மெதுவாய்........மெது மெதுவாய் எம் உணர்வுடன் உறையும் கலையின் மேகதாகம் எப்போதும் இருக்கும் உன் உறவின் சாஸ்வதம் நிலை பெறவும், நிம்மதியோடு வாழவும் பிராத்திக்கின்றோம்.

- இதழ்க் குழு -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் கலாநிலையம்

யூ.எம். நயிமுடீன்.
விரிவுரையாளர்

1956 ஆம் வருடக் கலையமுதத்தில் பிரசுரமான விரிவுரையாளர் யூ.எம். நயிமுடீன் அவர்களின் இக்கட்டுரை வரலாற்றின் சில தடங்களைக் காட்டுதற்காய் இங்கே மீள்பிரசுரம் செய்யப்படுகிறது. -இதழாசிரியர்-

முஸ்லிம்களின் பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் குறைவாயிருந்ததன் காரணமாக முஸ்லிம் பாடசாலைகளில் கல்வி பயிலும் மாணவர்கள் இஸ்லாம் மதக் கோட்பாட்டுக்கும், இஸ்லாமிய கலாசாரத்துக்கும் ஏற்ப பூரணக் கல்வியைப்பெற முடியாதிருக்கும் நிலை கண்டு வருந்தியோர் பலர். இஸ்லாமிய சமுகம் எழிலுற்று விளங்கவேண்டுமானால் முஸ்லிம் ஆசிரியர்கள் பெருமளவில் பயிற்றப்பட வேண்டும், என கனா கண்ட பல முஸ்லிம் பெரியார்களும் இப்பணியிலே முயற்சிக்கத் தலைப் பட்டனர்.

1941ம் ஆண்டு அக்கரைப்பற்றைச் சேர்ந்த திரு. தர்மரத்தினம் அவர்களின் உதவியினாலும், இன்று அகில இலங்கை இஸ்லாமிய சோனகரின் தலைவரும், கொழும்பு மத்திய தொகுதியின் இரண்டாவது பிரதிநிதியுமாகிய அல்ஹாஜ் Sir. றாஸிக் பரீத், பாகிஸ்தானில் இலங் கைத்தூதராக இருக்கும் ஜனாப் T.B. ஜாயா ஆகியோர்களின் பெரு முயற்சியினாலும், இன்னும் அட்டாளைச் சேனை முஸ்லிம் பெரியார்கள் பலரின் சலியாத ஒத்துழைப்பினாலும் மட்டக்களப்பு ஆண்கள் ஆசிரிய கலாசாலை (Batticaloa Mens Training College) என்ற நாமத்தில் இக்கலாசாலை 1941ம் ஆண்டு ஏற்படுத்தப்பட்டு முஸ்லிகளும் தமிழர்களும் 50 % வீதப்படி இருந்து கல்விப் பயிற்சி பெற்று வரலாயினர். அன்னவர்களின் சேவைக்கு இஸ்லாமிய ஆசிரியருலகம் என்றும் கடமைப்பட்டிருக்கிறது.

இதே காலத்தில் (1941 ஒக்டோபர்) முஸ்லிம்களுக்கென்று ஒரு கலாசாலை மேற்கு மாகாணத்தில் அளுத்கமை என்ற இடத்தில் நிறுவப்பட்டு அதில் முஸ்லிம்களும் தமிழர்களும் 75க்கு 25 என்ற வீதப்படி சேர்ந்து கல்விப்பயிற்சி பெற்று வரலாயினர். இதனால் பயிற்சிக்காகத் தெரிவு செய்யப்படும் இஸ்லாமிய ஆசிரியர்கள் இரு கலாசாலைகளுக்குமே தெரிவு செய்யப் படலாயினர்.

இக்காலத்தில் இக்கலாசாலையின் முதல் அதிபர் திரு V. நல்லையா அவர்களாவர். இவர் சீரான முறையில் மூவாண்டு கடமையாற்றிய பின் சட்டசபையில் ஒரு அங்கத்தவராக நியமிக்கப்பட்டுச் சென்றார். இவருக்குப் பின் V.T. ஞானசூரியம் (B.A. Lond) அவர்கள் 1944ம் ஆண்டில் பதில் அதிபராகப் பதவி ஏற்றுப்பாங்குடன் பணி செய்து வரலானார். அடுத்த ஆண்டிலேயே திரு. ஞானசூரியம் மட்டக்களப்பு கல்லூரிக்கு (Batticaloa College) மாறிச் செல்ல, காத்தான்குடி மத்திய கல்லூரியின் அதிபராயிருந்த திரு. S. கந்தசாமி ( B.Sc. Lond. Dip. in. Ed) அவர்கள் அதிபர் பதவியை ஏற்றார். இவரின் காலத்தில் இக்கலாசாலை கட்டட வசதிகளின்றி இடைக்கிடையே காடுகளுள்ள இடங்களாக இருந்த போதிலும் இவர்கள் தம்மாலியன்ற அளவு அரும்பெரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேவையைச் செய்தது மிகவும் பாராட்டுக்குரியது. இவரது இரண்டு வருட சேவையிலே ஒரு குறிப்பிடத்தக்க மாற்றம் நிகழ்ந்தது. அதாவது இக்கலாசாலையின் 5வருட சீவியத்திலும் ஒன்றி வாழ்ந்த தமிழர் முஸ்லிம்கள் பிரிக்கப்பட்டனர். அதாவது முஸ்லிம்களும் தமிழர்களும் அவரவர்களின் கலாசார வித்தியாசத்தினால் பிரிய ஆசைப்பட்டனர். ஒவ்வொரினத்தவரினதும் கலாசார வளர்ச்சிக்காக தனித்தனி கலாசாலைகளில் பயிற்சி பெறவேண்டுமென்று கருதியதன் பயனாகத் தமிழர் மட்டக்களப்புப் பயிற்சிக் கலாசாலைக்கு மாற்றப்பட்டு இக்கலாசாலை (கிழக்கு மாகாண) முஸ்லிம்களுக்குத் தனிப்பட்ட ஒரு கலாசாலையாக மாறியது. பிரிவோடு பிரிவாக இதே காலத்தில் திரு. கந்தசாமி அவர்களும் மட்டக்களப்பு ஆசிரியர் கலாசாலைக்கு அதிபராக மாற்றப்பட்டுச் செல்ல 1946ம் ஆண்டின் இறுதிக்கட்டத்தில் களுத்துறையைச் சேர்ந்த ஜனாப் A.A.ஜிப்ரி (B.A. Lond) அவர்கள் இக்கலாசாலையின் அதிபராக நியமிக்கப்படலாயினார்.

இதுவரை தமிழர் வகித்து வந்த அதிபர் பதவி முதன் முதல் இக்கலாசாலையில் ஜனாப். ஜிப்ரி அவர்களுக்கே கிடைத்தது. இவர் காலத்தில் இக்கலாசாலை மின்னல் வேகத்தில் வளரத்தலைப்பட்டது. அதாவது இக்கலாசாலை கிழக்கு மாகாண முஸ்லிம்களுக்கு மாத்திரம் ஒரு தனிக்கலாசாலையாக்கப் பட்டதுடன் இன்று வரையும் தற்காலிக ஓலைக் கட்டிடமாயிருந்து வந்த இக்கலாசாலை மாடிக்கட்டுடன் துலங்கும் விடுதி அறைகளுடனும் ஏறக்குறைய 100 பேர் வரை இருந்து பயிற்சி பெறக்கூடிய பாரிய வகுப்பறைகளும் கொண்ட நிரந்தரக் கட்டிடங்களாக - இன்று காட்சிய ளிக்கும் இதே நிலையில் - அமைக்கப் படலாயின. இதன் பயனாகப் பல வருடங்களாக எத்தனையோ அல்லல்களை மேற்கொண்டுவந்த பயிற்சி மாணவர்கள் ஆனந்தமாக இருந்து பயிற்சி பெறக்கூடியவர்களாயினர். அரசாங்கம் இப்பணியிலீடுபட மூலகர்த்தாவாயிருந்தவர் நிந்தவூர் வாசியும் 1947ம் 52ம் ஆண்டுகளில் பொத்துவில் தொகுதிக்குப் பாராளுமன்றப் பிரதிநிதியாயிருந்து சமீபத்தில் காலஞ்சென்ற ஹாஜி எம். எம் .இப்றாஹீம் அவர்களாவர். இதுவன்றியும் அவர்கள் இத்தொகுதியின் பிரதி நிதியாகத் தெரிவுசெய்யப்பட்டுச் சென்றதிலிருந்து அவர் இறையடி சேருமட்டும் எம் கலாசாலைக்கு அளப்பரிய சேவைகள் செய்துள்ளார். அவர் ஆத்மா சாந்தியடைவதாக! இன்னும் அவருக்குப் பக்கபலமாக அட்டாளைச்சேனைப் பல பெரியார்களும், இக்கலாசாலையின் பழைய மாணவர்களும், கிழக்கு மாகாண முஸ்லிம் பெரியார்களும் இருந்து ஒத்துழைத்தனர். உதாரணமாக காலஞ்சென்ற மருதமுனை ஹாஜியார் இக்கலாசாலைக்குத் தேவையான வளவு கொடுத்து உதவி செய்தார்.

இன்னும் ஜனாப். ஜிப்ரி அவர்கள் விளையாட்டு, கல்விச் சம்பந்தமாக மாணவர்களைப் பெரிதும் ஊக்குவித்தார். அவை இன்றும் ஒழுங்காக நடைபெற்று வருகின்றன. இந்த நிலையில் இவர் புகழ் அட்டாளைச்சேனையுடன் மாத்திரம் நின்று விடக்கூடாது என்பதற்காகப் போலும் அரசாங்கம் இவரை அளுத்கமை ஆசிரியர் கலாசாலைக்கு 1951ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் தொடக்கம் அதிபராக பணியாற்று மாறு பணித்தது. ஆயின் அளுத்கமை ஆசிரியர் கலாசாலையில் 11வருட காலமாக அதிபராயிருந்து தொண்டாற்றி முஸ்லீம் சமுதாயத்தில் அறிவொளி பரப்பிய ஜனாப் I.L.M. மன்சூர் (B.A.) அவர்கள் மிகவும் உன்னத நிலையில் இன்று எங்கள் கலாசாலையை வழி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடத்துகின்றார். இவர் ஆசிரியர் கலாசாலை வாழ்வில் 16 வருட அனுபவம் நிரம்பியவர். இவரது அகப்புறப்பொலிவே அவர்தம் அனுபவத்தையும் அறிவாழத்தையும் ஆற்றலையும் காட்டுகிறது. ஆசிரியர் களுக்கு வேண்டற்பாலதாய கல்வியில் முக்கியமான உளநூலில் இவர் மேம்பட்டவர் என்று இவருடன் கலந்து பழகிய ஒவ்வொருவரும் பெருமைப் படுவதுண்டு.

எங்களதிபரவர்கள் இக்கலாசாலையில் பதவியேற்று வரும் பொழுது இ்.து எப்போது மூடப்படும்? என்ற ஒரு சந்தேக நிலைமை எங்கும் காணப்பட்டது. கல்லோயாக் கிறிஷிகத் திட்டத்திற்கு உபயோகிக்கக் கூடிய ஒரு கட்டடமாக்கிக் கொண்டால் என்ன? என்றும் கூட சிபாரிசுகள் செய்யப்பட்டிருந்தன. அல்லாமலும் சாதாரணமாக இக்கலாசாலையை கனிஷ்ட அல்லது சிரேஷ்ட பாடசாலையாக்கிக் கொள்ளவும் கூட பல வகைப்பட்ட அபிப்பிராயங்கள் இருந்து கொண்டிருந்த சங்கடமான நிலையிலேயே இங்கு வரப்பெற்ற எங்களதிபரவர்கள் இவற்றை எல்லாம் ஒழுங்காக மேற்கொண்டு எம் கலாசாலை முன்னேறுவதில் பெரிதும் முயற்சி எடுத்து எம் கலாசாலையை ஓர் உன்னத நிலைக்குக் கொண்டு வந்துள்ளார்.

பாலனின் வளர்ச்சியைப் போன்று எம் கலாசாலையும் பல படிகளையும் தாண்டிச் செல்ல வேண்டியிருந்தது. எங்களதிபர் கடமையேற்ற ஆரம்ப காலத்தில். அதிபர் ஜிப்ரி அவர்களின் காலத்தில் வளர்ச்சி யடைந்த எம் கலாசாலை விருத்தியடையத் தலைப்பட்டது. இதுகுறித்து 1952ம் ஆண்டில் எங்களதிபரவர்களால் ஏற்படுத்தப்பட்ட பழைய மாணவர் சங்கமும் எம் கலாசாலை வளர்ச்சியிலும் விருத்தியிலும் பெரிதும் சிரத்தை எடுத்ததும், குறிப்பிடத்தக்கது. இன்னும் இதே ஆண்டில் மின்சாரத் திட்டமும் அமுலுக்குக் கொண்டுவரப்பட்டது. இதையடுத்துக் குழாய் நீர் திட்டம், டெலிபோன் வசதி முதலியனவும் கிடைக்கப் பெற்றுள்ளன. இவற்றில் குழாய் நீர்த்திட்டம் நிறைவேறிக் கொண்டிருக்கும் நிலையில் இருக்கிறது. இது சம்பந்தப்பட்ட வேலைகளில் 90% மும் இன்று முடிந்து விட்டது. டெலிபோன் வசதியும் 57ம் ஆண்டு முதலாம் தவணையோடு இணைக்கப் பட்டிருக்கிறது. அதுவன்றியும் இன்னுமோர் மண்டபத்திற்காக ரூபா 50,000மும் வடிகால் மலசலக்கூடம் திட்டமொன்றமைக்க ரூபா 15,000 மும், அரசாங்கத்தால் ஒதுக்கப்பட வேண்டும் என்று சிபார்சு செய்யப்பட்டுள்ளது. வேலைகள் முடிந்ததும் படிப்படியாக மற்றவை யாவும் பகிரங்க வேலைப் பகுதியாரால் தாமதமின்றி செய்து வைக்கப்படும்.

எங்களதிபரவர்களின் காலத்தில் நடந்த முக்கியமான இன்னொன்று யாதெனில் அழுத்கமை ஆண்கள் கலாசாலையும் இக்கலா சாலையோடு இணைக்கப்பட்டு "அகில இலங்கை முஸ்லிம் ஆண்களின் ஏக கலாசாலையாக" இதன் அந்தஸ்த்தை உயர்த்தி விட்டு, அளுத்கம கலாசாலையை முஸ்லிம் பெண்களின் ஏக கலாசாலையாக அரசாங்கம் வகுத்ததே. இம்மாற்றம் நிகழ்ந்ததன் காரணமாகத்தான் மேற் குறிப்பிட்ட சகல வசதிகளும் இன்று எம் கலாசாலைக்குக் கிடைக்கக் கூடியதாயிருந்தன.

இதுவரையில் தமிழ் ஆசிரியர் கலாசாலைகளில் என்றுமே பயிற்சி பெறாத அளவில் பெருந்தொகையான மாணவர்கள் எங்கள் கலாசாலையினல் பயிற்சி பெற்றிருக்கின்றனர். இப்பொழுது 134 பேர் பயிற்சி பெறுகின்றனர். சுருங்கக்கூறின் எம் கலாசாலை இப்பொழுது சிறப்புடன் விளங்கும் தமிழ்க் கலாசாலைகளுள் ஒன்றாகத் திகழ்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்ஙனமாக எம் கலாசாலை விருத்தி யடைந்து வருவதுடன் எங்களதிபர் அவர்கள் திருப்தியடைந்து விடவில்லை. அடுத்த வளர்ச்சிப் படியின் அவசியமும் கருதி இன்னும் பல வசதிகள் செய்து தருமாறு அரசாங்கத்திடம் கோரியுள்ளார ன்றியும் அவை சிபாரிசும் செய்யப் பட்டிருக்கின்றன.

அவையாவன:-

1. ஏறக்குறைய 8 ஏக்கர் நிலத்தில் அமையப்பெற்ற இக்கலாசாலைக்கு இன்னும் 8 ஏக்கர் நிலம் சேர்க்கப்படல் வேண்டும்.

2. இன்றுள்ள விடுதியறைகள் 56 பேர்களுக்கென்றே கட்டப்பட்டுள்ளன. ஆதலால் இதேயளவில் இன்னுமோர் விடுதியறை அமைக்கப்படல் வேண்டும்.

3. கைப்பணி வேலைத்தளம் இன்னொன்று ஸ்தாபிக்கப்படல் வேண்டும்.

இம்மூன்று அம்சங்களும் கூடிய விரைவில் அரசாங்கத்தாரால் கவனிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. இனி எம் கலாசாலை வளர்ச்சியிலும் விருத்தியிலும் தற்பொழுது பொத்துவில் M.P. யாக இருக்கும் புறொக்டர் ஜனாப் M.M. முஸ்தபா அவர்களும், கல்முனை M.P.யாயிருக்கும் கேட் முதலியார் ஜனாப் M.S. காரியப்பர் அவர்களும், இஸ்லாமிய சோனகர் தலைவரும் மத்திய கொழும்பின் 2வது பிரதி நிதியுமான ஜனாப். அல்ஹாஜ் Sir ராஸிக் பரீத் (O.B.E.,J.P.U.M.,M.P) அவர்களும் எங்கள் கலாசாலை முன்னேற்றத்தில் போதிய ஒத்துழைப்பைத் தந்து அதிகம் ஊக்கம் காட்டி வருகின்றனர். இவர்களைப் போன்றே இப்பகுதியிலுள்ள பல முஸ்லிம் பெரியார்களும் பழைய மாணவர் சங்கத்தாரும் எம் கலாசாலை வளர்ச்சிக்குக் காரணமாக இருக்கின்றனர்.

இன்று எம் கலாசாலையில் 135 பேர்கள் வரை பயிற்சி பெற்று வருகின்றனர். இன்னும் அதிபரவர்களைத் தவிர பேராசிரியர்கள் பதின்மரும் கடமையாற்று கின்றனர். எங்கள் பேராசிரியர்களுடன் ஒன்றுபட்டு ஒற்றுமையாக எங்கள் கலாசாலை முன்னேற்றத்தில் ஒத்துழைத்து வருகின்றனர்.

இது வரை எங்கள் கலாசாலையிலிருந்து 313 ஆசிரியர்கள் பயிற்சி பெற்று வெளியேறி இலங்கையின் நாலா பக்கங்களிலும் இருந்து பணியாற்றி வருகின்றனர். இக்கலாசாலையிலிருந்து வெளியேறிய ஒவ்வொரு ஆசிரியருக்கும் எங்கள் கலாசாலைப் புகழ் உரித்தாகும். இவர்கள் வருங்காலத்திலும் எங்கள் கலாசாலையை முன்னேற்ற உதவி புரிவார்கள் என்பது எங்கள் பூரண நம்பிக்கை. இவர்கள் ஒவ்வொருவரையும் எங்கள் கலாசாலைப் பழைய மாணவர் சங்கம் அன்போடு அழைக்கிறது.

வாழ்க எங்கள் கலாநிலையம்
வாழ்க எங்கள் "கலையமுதம்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிவின் பெருவெளிக்குள்..

விழிகளின் கருமை போக்கி
வெண்மணிகளை செம்மணிகளாக்கி
தீயின் கொழுந்தென
நிமிர்ந்த நிமிடங்களில்
அறிவு பிளிறும் – தன்
அகண்ட வாய் பிளந்து....
இனி விழுங்கிக் கொள்ள ஏதுமில்லை
வெளியைத் தவிர என்றபடி.....

**முதலில் முகிழ்ப்பன.....**

- **கல்விப் பரிமாணங்கள்**
- **அறிவின் தெறிப்புக்கள்**
- **யதார்த்தங்கள்**

இவற்றுடன் இயைந்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிவுப் பழக்கட்டுகள்

01. மனித உயர் பண்பு விருத்திக்கு இரசனையின் பங்களிப்பு — 01
02. Stress A WORSE ENEMY? — 05
03. ஆளுமைப் பண்புகள் கொண்ட ஆசிரியர் ஒருவருக்கு இருக்கவேண்டிய இலட்சணங்கள் — 11
04. தரமான கல்வி முறையும் இலங்கையில் இவற்றை ஏற்படுத்தும் போது எதிர்கொண்ட தடைகளும் அவற்றை தீர்ப்பதற்கான வழிவகைகளும் — 14
05. ළමයා, අධ්‍යාපනය හා ගුරුවරයා — 21
06. The Need of Benchmarking Process in Teacher Education Isstitutions In SriLanka — 24
07. பிள்ளை நேயப் பாடசாலை — 28
08. Secret of Success — 29
09. முகலாய ஓவியம் — 30
10. இன்றைய கல்வியும் மனித விழுமியங்களும் — 33
11. மாணவர் கல்வி வளர்ச்சியில் சைவ சமயத்தின் பங்களிப்பு — 37
12. உளவியல் கல்வியும் ஆசிரியத்துவமும் — 39
13. ஆசிரியத் தொழிலின் மகத்துவம் — 41
14. ஒலிம்பிக் போட்டிகள் — 42
15. How to we Breathe? — 44
16. சமாதானம் பற்றிய பல்வேறு கூற்றுக்கள் — 45
17. உலக விருதுகள் — 47
18. வளர் இளம் பருவத்தினரின் பாலியல் பிரச்சினைகளும் தீர்வுகளும் — 49
19. வெற்றிக்கான வைர வரிகள் — 52
20. ஹதீஸ் கலையின் அடிப்படைச் சட்டவிதிகள் — 53
21. குழப்பதை நிறுத்து — 55
22. Modern Dictionary of Cool Meanings — 56
23. இஸ்லாமிய குற்றவியல் சட்டம் தனிமனித சமூகத்திற்கு ஒரு பாதுகாப்பு அரண் — 58

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

24. பராலிம்பிக் போட்டிகள் எவ்வாறு அறிமுகமாகின? — 63
25. சினிமாத்துறை தகவல்கள் — 66
26. இன்றைய சிறுவர்களே நாளைய தலைவர்கள் — 68
27. பணச் செலவின்றி நீரினால் குணப்படுத்தக்கூடிய நோய்கள் — 70
28. The Personality you have and want to be — 71
29. நீரிழிவும் உணவுக்கட்டுப்பாடும் — 73
30. பிள்ளைகளின் கல்வி வளர்ச்சியில் ஆசிரியரின் பங்களிப்பு — 75
31. Health is Wealth — 78
32. முஸ்லிம் பெண்களின் உடை — 79
33. சட்டமும் பெண்களுக்கெதிரான பாலியல் வன்முறைகளும் — 83
34. சமுதாயத்தில் ஆசிரியர் வகிக்கும் பங்கு — 85
35. சிந்தனைக்கு — 87
36. Wise men tell us — 88
37. பிள்ளையின் தாய்மொழி விருத்தி சமூகத்தின் கைகளில் — 89
38. நமது நாட்டில் பண்டைய காலம் தொட்டு வந்த விளையாட்டுக்கள் சில — 92
39. போதைப் பொருள் பாவனையை முடிவுக்கு கொண்டுவருவோம் — 95
40. மனவெழுச்சி தொடர்பான ஆசிரியரின் பங்களிப்பு — 99
41. உடல் உறுப்புகளுக்கான உணவு முறைகள் — 100
42. கிழமைக்கு பெயர் வந்த விதம்? — 102
43. Mobile Phones a Threat to Tender Hearts — 103
44. சன்மார்க்க கல்வியின் அவசியமும் முக்கியத்துவமும் — 104
45. சமுதாயமயமாக்கலில் பாடசாலையின் பங்களிப்பு — 106
46. பொன் மொழிகள் — 108
47. நாடுகளும் சிறப்புமிக்க பெயர்களும் — 110
48. ஆரோக்கிய வாழ்விற்கு மானிடத் தேவைகள் — 111
49. முன்மாதிரிகளும் சமூகக் கற்றலும் — 112
50. How to Achieve Goals — 115
51. உலகத்தை விழுங்கும் இலத்திரனியல் — 116
52. பாடசாலை இடை விலகல் — 118

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

53. உலகப் புகழ் பெற்ற மொழிகளும் அவற்றிலுள்ள மொத்த எழுத்துக்களும் — 119
54. தலைமைத்துவ ஆற்றல் — 120
55. One Word for Many — 122
56. சிறந்த மனிதர்களை உருவாக்குவதில் கல்வியின் பங்களிப்பு — 123
57. அதிசய உடல் பற்றிய அதிசயத் தகவல் — 125
58. Thoughts for Your Life — 126
59. உலக மயமாக்கலும் மனித சுதந்திரமும் ஒரு அரசியல் பொருளாதாரப் பார்வை — 127
60. சிறுவர் கல்வி உரிமையும் அல்லது கல்வி உரிமை ஏற்பாடுகளும் நடைமுறையில் அதனை அமுல்படுத்துவதிலுள்ள சவால்களும் — 130
61. சாரணியம் பற்றி அறிந்து கொள்வோம் — 134
62. மலையக நாட்டார் பாடல்களின் தொழிற்பாடல் ஒரு நோக்கு — 136
63. கற்பதற்கான நுணுக்கங்கள்... — 140
64. சூழலின் முக்கியத்துவம் — 141
65. My Dear Teacher — 143
66. வகுப்பில் மெல்லக் கற்கும் மாணவர்கள் உருவாவதற்கான காரணங்கள் — 144
67. பேனாவின் மகத்துவம் — 147
68. Official Olympic Anthem — 148
69. பங்குச் சந்தை முச கொழும்பு பங்கு பரிவர்த்தனை — 149
70. Better Pronounciation — 152
71. புகை எமக்குப் பகை (நுகர்வதனால் நகரும் உயிர்) — 154
72. Brilliant Lady — 156
73. பாரதி என்றாரு இமயம் — 157
74. சமாதானம் — 159
75. Failure is an Inner Boost — 160
76. 21 ம் நூற்றாண்டில் பாடசாலைக் கல்வியில் உடற்கல்வித்துறையின் முக்கியத்துவம் — 161
77. உடலின் உறுதிக்கு உடற்பயிற்சி ஊன்றுகோல் — 163
78. Pronounciation — 164

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

79. கட்டுருவாக்க கோட்பாட்டின் அடிப்படையில் அமைந்த புதிய கலைத்திட்ட

சீராக்கமும் ஆசிரியர் வகிபாகமும் — — — — — — — — — — — — — 165

80. The Validity of Punctuality — — — — — — — — — — — — — 168

81. மாற்றம் வேண்டும் — — — — — — — — — — — — — — — — — 170

82. சிறுவர்களின் கல்வி உரிமையும், அதனை பெறுவதிலுள்ள சவால்களும் —172

83. Suggestions for Difficulties of Speaking English in Sri Lanka —176

84. நேரத்தைப் பேணி நடப்போம் — — — — — — — — — — — — — —177

85. English Training Class (ETC) — — — — — — — — — — — —178

86. மகிழ்ச்சிகரமான கற்றல் — — — — — — — — — — — — — — — 180

87. Alexander The Great — — — — — — — — — — — — — — — 183

88. விலங்கின விநோதங்கள் — — — — — — — — — — — — — — — 184

89. எண்களின் விந்தை — — — — — — — — — — — — — — — — — 186

90. Sars — — — — — — — — — — — — — — — — — — — — — 187

91. சிந்திக்க சில வரிகள் — — — — — — — — — — — — — — — — 188

92. உலக தாபனங்கள் – நிறுவனங்கள் — — — — — — — — — — — —189

93. Top Keys to be a Successfull Teacher — — — — — — — — —190

94. Importance of Disaster Safety Education at Schools — — — 192

95. வாழ்வதற்காக உணவா அல்லது உண்பதற்காக வாழ்வா? — — — — — 193

96. What is Teaching — — — — — — — — — — — — — — — — —194

97. Prophet Muhammeth's Peace Be Upon him Teaching in

Peration to Women — — — — — — — — — — — — — — — — 195

98. නව විධ රසය — — — — — — — — — — — — — — — — — — 196

99. படி — — — — — — — — — — — — — — — — — — — — — — 198

100. සාරධර්මවලින් තොර සංවර්ධනයක් නොමැත — — — — 200

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனித உயர் பண்பு விருத்திக்கு இரசனையின் பங்களிப்பு



அல்ஹாஜ் எம். எம். எம். மஹ்ரூப்
விரிவுரையாளர், அழகியற்துறை

சங்கீதம், நடனம், சித்திரம், நாடகம் போன்ற பாடங்களினூடாக மேற்கொள்ளப்படும் தனியாள் தொழிற்பாடுகள், கூட்டுத் தொழிற்பாடுகள் போன்றவற்றினூடாக தேசிய உணர்வையும், ஒற்றுமை உணர்வையும் மதிக்கக் கூடிய மனப்பாங்குகளை விருத்தி செய்யவும், தீய உணர்வுகளையும் தீய மனவெழுச்சிகளைக் கட்டுப்படுத்தவும், அறநெறிக்கான வழிமுறை ஒழுங்கும் மனித உள்ளத்தின் உயர்பண்பு நிலையை வளர்க்கவும், ஒழுக்கம் பேணல், நற்குணம் உயர்வடைதல் போன்ற பண்புகளை வளர்க்கவும் முடியும்.

வகுப்புகள் மட்டத்தில் பல்வகைப்பட்ட அழகியல் தொழிற்பாடுகளில் மாணவர்களையும் பங்கேற்கச் செய்து இரசனைப்பாட செயற்பாடுகள் ஊக்கப்படுத்துவதால், சுமுகமான சுற்றாடலும், சிறந்த சூழ்நிலையும் நிலவுவதற்குத் தேவையான அம்சங்களில் மாணவரைப் பயிற்றுவிக்கலாம். அழகியல் பாடங்களின் ஊடாக தனியாள்களின் முரட்டுத்தன்மை, கடினத்தன்மையான மனநிலையை படிப்படியாகக் குறைத்து அவர்களை மென்மையான, இதமான மனமுடையவர்களாக மாற்றிவிட முடியும். இது சமாதானப் பண்பையும் தோற்றுவிக்கும் ஒரு சிறப்புச் செயல்பாடாகும். முன்பள்ளிச் செயற்பாடுகள் அனைத்தும் மாணவப் பருவத்தை இன்பமூட்டி சிறந்த மனவளத்தை விருத்தி செய்யும் தூண்டற் செயற்பாடாகவே அமைந்து காணப்படுகின்றன.

கற்பனைத்திறனை வளர்ச்சியடையச் செய்யும் தனித்தனித் திறமையை இனங்கண்டு குழுச்செயற்பாடுகளை நெறிப்படுத்தி மகிழ்ச்சிக் கற்றலை துலங்கச் செய்து ஆற்றலை விரிவடையச் செய்யப் படுகின்றது. இதனால் மாணவப் பருவத்தில் அன்னியோன்னிய உறவும் சகோதரப் பண்பும், விட்டுக் கொடுக்கும் மனப்பாங்குகளும் எதையும் ஆய்ந்தறிந்து சரியானதை ஏற்றுக்கொள்ளும் நற்பண்பும் வளர உதவியளிக்கிறது.

குழந்தை முதல் முதியவர் வரை மன அழுத்தங்களும், நெருக்கடிகளும் அனைவரையும் அல்லல்படுத்துகின்றது என்றே கூறலாம். இன்று எல்லா நிலையிலும் இதன் பாதிப்பு உணரப்படுகின்றது. காலநெருக்கடி, வேலை நெருக்கடி, போட்டிகள் என பல முனைத்தாக்குதல்களுக்கு நாம் ஆளாகும் போதே எமது முயற்சிகள் அனைத்தும் ஒரு குறிக்கோளை அடிப்படையாகக் கொண்டு அமைகின்றது. அடைய வேண்டிய இலக்குகளை அடைய முடியாமல் போகும் போதும், அதற்கு இடர்பாடுகள் ஏற்படும் போதும் மனம் போராட்டத்திற்குள்ளாகிறது.

சிந்தனைத் தெளிவு, ஆக்கசிந்தனை, பிரச்சினைகளைச் சமாளிக்கும் ஆற்றல், உற்சாகம் போன்றவை இருந்தால் பிரச்சினை பூதாகரமாகி விடாது. தன்தனித் திறமையை ஆட்சிப்படுத்தி வெற்றிகொள்வர். ஆனால் பதட்டம், கவலை, பொறாமை, அச்சம், பொல்லாங்கு போன்றவை எதிர்மறை மனப்போக்கிற்கு வழி செய்துவிடும். மேலும் தொடர்ச்சியான விமர்சனங்கள், ஊக்கமூட்டி ஒருவரை உற்சாகம் செய்பவர்கள் இல்லா






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருப்பதும் மனநிலையை குறைத்து சோர்வடையச் செய்து இயலாமையைத் தோற்றுவித்து உடனலக் குறைவுக்கான வழி சமைக்கும் காரணியாகும். மாறாக நமது திறமைகளை வளர்த்துக் கொள்வதும், இதைவிட முயற்சியும் உற்சாகமுமான உழைப்பும் சுயக் கட்டுப்பாடுகளும், தகுதிக்கு ஏற்ற இலக்குகளாகக் கொள்வதும், வெற்றிக்கு மட்டுமல்ல மன அமைதிக்கும் உதவும்.

I. வாழ்வில் நடந்த ஒரு சுவையான நிகழ்ச்சியை கற்பனை செய்து பாருங்கள்.

II. நகைச் சுவையூட்டும் ஜோக்குகளை படித்து மகிழுங்கள்.

III. நீங்கள் விரும்பும் பாடலை, சங்கீதத்தைச் கேளுங்கள்.

IV. மகிழ்ச்சி தரும் நற்செயற்பாடுகளில் ஈடுபடுதல் போன்ற விடயங்கள் மன அழுத்தத்தை நீக்கி மன அமைதியை வழங்கி இருப்பதை ஆய்வுகள் சான்றுடன் கூறுகின்றன.

புரிந்துணர்வின்மை, விட்டுக்கொடுக்காமை, சந்தேகம், விதண்டாவாதம், வைராக்கியம், குரோதமனப்பான்மை மற்றும் கடின வார்த்தைப் பிரயோகம், இவை எல்லாவற்றையும் விட ஈகோ போன்றவை வாழ்க்கையில் பெரும் பிளவை ஏற்படுத்துகின்றன. வக்கிரமும் வன்முறைகளும் நிறைந்த வார்த்தைப் பிரயோகம் பெரும்பாலும் மன அழுத்தத்தை ஏற்படுத்துகின்றன.

மிகவும் ஊறு விளைவிக்கக்கூடிய சூழ்நிலை அல்லது எதற்குமே இனி நம்மால் ஈடுகொடுக்க முடியாத நிலை என்று வரும்போது அது வெளிப்படுத்தும் பல அறிகுறிகள் தான் மன அழுத்தம். இது உடல் ரீதியாகவும், மனரீதியாகவும் ஓர் இறுக்கமான நிலைக்கு வந்து விடுவதனையே உளவியலாளர்கள் குறிப்பிடும் விடயமாகும் நிம்மதியற்ற சூழலும் மேலும் பல உபாதைகளும் இந்நிலைமைக்கு வித்திடுகின்றன.

கவலை, சோர்வு, டென்சன் என்பவற்றுடன் சீரற்ற இதயத்துடிப்பு போன்றவை உடலில் தாக்கத்தை உருவாக்கி உடல் சீராக்கத்திற்கு ஊறுவிளைவிக்கின்றன. அன்பு, அரவணைப்பு பந்தபாசம் என்பவற்றின் அனுசரணை உள்ளத்தின் தேவையில் கூடிய பங்களிப்பு செய்யும் பிரதான காரணியாகும் என்பதை மனிதன் நடைமுறைப்படுத்த வேண்டிய ஒரு விடயமாகின்றது.

வேதனை, கவலை, விரக்தி என்ற பலவிதமான உணர்வுகளை உள்ளத்தில் உள்வாங்கி இறுதியில் நோயாளியாகி விடுவதற்கும் காரணமாகின்றது. பயமும் அச்சமும் உள்ள மன இறுக்க நிலையில் வாழும் மனிதனின் உடலில் கோபமான நிலைமை உள்ளபோது இதயத்துடிப்பு குருதியோட்டத்தைப் பாதிப்படையச் செய்கின்றது. இதனால் நிம்மதியற்ற வாழ்வு நிலை காணப்படவும் மன முறிவுக்குள்ளாகும் தன்மையும் உருவாக முடியுமென மன நோய் மருத்துவர்கள் குறிப்பிடுகிறார்கள். இதனால் உடல் பலவீனம் உருவாகக் காரணமாகும் இவை என வைத்திய நிபுணர்கள் கூட கூறுகின்றனர்.

அன்பு நிறைந்த இன்சொல் இரும்புக் கதவைக் கூடத்திறக்கும் என்று நாம் படித்திருக்கிறோம். அன்பு உலகை ஆட்சி செய்யும் என்றும் அறிந்திருக்கிறோம். மன அழுத்தத்தைக் குறித்து மருத்துவர்கள் குறிப்பிடுகையில் எதிர்ப்பார்ப்பான சூழலுக்கு மனிதன் தள்ளப்படும்போதே அதிக மன அழுத்தத்துக்கு உள்ளாகிறான் என்கின்றனர். எதிர்பார்ப்புக்களைக் குறைக்கும் போதும் தியான நிலையையடையும் நிலையிலும் இதன் போது மன நெகிழ்வு ஏற்பட்டு பெருமளவு குறைந்து போவதாகவும் அவர்கள் அனுபவ ரீதியாக கண்டுள்ளனர். குழந்தைகள் எதிர்பார்ப்புக்கள் அதிகம் இல்லாதவர்கள். அவர்கள் எதையும் ஆனந்தத்துடன் பெற்றுக்கொள்ளும் தன்மை உடையவர்கள். எனவே, அவர்கள் மன



பணம் வருவதற்கு முன்பே செலவைத் துவக்கி விடாதீர்கள். GTC

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழுத்தமில்லாமல் வாழமுடிகின்றது. தாய்மை நிலையிலிருக்கும் பெண்களுக்கு மன அழுத்தம் மிகப்பெரிய எதிரி. அது தாயையும் கருவிலிருக்கும் குழந்தையையும் நேரடியாகப் பாதிக்கின்றது என்கின்றார் அமெரிக்காவின் "மாயோ கிளினிக்ஸ" என்னும் மருத்துவர்.

எனவே தான் தாய்மை நிலையிலிருக்கும் பெண்கள் நல்ல புத்தகங்கள் படிப்பது ஆனந்தமடைந்து மகிழ்வுறுவதும் நல்ல கருத்துள்ள இன்னிசைகளை கேட்டு மகிழ்வுற்று மனதை இலகுவாக வைத்துக் கொள்ள வேண்டும் என்று அறிவுறுத்தப்படுகிறார்கள். சிறந்த உளவியல்துறை சார்ந்த வைத்திய நிபுணர்கள் சிறந்த எண்ணங்கள் மன ஆரோக்கியத்திற்கான செயற்பாடு கள் கருவின் வளர்ச்சிக்கு பெரும் துணை புரிவதாகவும் அமைதியான மனச்சூழல் பெரிதும் நன்மை பயக்கும் விடயங்களாகும் எனவும் இன்பப் பொழுதுபோக்கும் இடங்கள் பூங்காக்கள், திறந்த காற்றோற்ற மிக்க இரசனையுடனான வெளிகளைப் பார்த்து இன்புறுவதும் உடல் ஆரோக்கிய நிலைக்கு சிறப்புடையது என வைத்திய நிபுணர்களின் ஆய்வு மூலம் தரும் கருத்துக்களாகும்.

**அறிவுள்ள குழந்தைக்கு கருவிலேயே பாட்டு**

தங்கள் குழந்தைகள் புத்திசாலியாக வரவேண்டும். முதன்மையானவர்களாக திகழ வேண்டும் என்று அனைத்து பெற்றோர்களும் விரும்புவார்கள். அதற்காக கருவிலிருந்தே பயிற்சி கொடுக்கலாம் என்கிறார்கள் விஞ்ஞானிகள். அதற்கான ஒரு புதுமையான முயற்சியே இது. குழந்தைகள் கருவில் இருக்கும்போதே பல விஷயங்களைக் கற்றுக்கொள்கின்றனர் என்று ஆய்வுகள் கூறுகின்றன. கேட்கும் திறனும் அறிவுத் திறனும் வேகமாக வளர்கின்றன. கருவில் 17 வார வளர்ச்சி உடைய குழந்தை ஒரு செயலை எதிர்நோக்கும் விளைவுடன் கவனிக்கத் தொடங்குகிறதாம். அதே போல் இசையானது கருவில் இருக்கும் குழந்தையின் மூளைத்திறனை அதிகரிப்பதும் ஆய்வில் தெரியவந்துள்ளது. எனவே, தாயும் குழந்தையும் சேர்ந்து இசை கேட்பதன் மூலம் அறிவுள்ள குழந்தையை உருவாக்க முடியும் என்று ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

இதற்காக நவீன கருவி வடிவமைக்கப்பட்டு உள்ளது. கர்ப்பிணித் தாய்மார்கள் வயிறு இடுப்பில் எளிதாக பொருத்திக் கொள்ளும் ' பெல்ட்' வடிவில் இந்த கருவி அமைந்துள்ளது. இதில் 2 வரிசைகளில் ஸ்பீக்கர் மற்றும் இயர்போன் இணைந்திருக்கும். குழந்தையின் தலைப்பகுதி எந்தப் பக்கம் இருந்தாலும் பாட்டு கேட்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. அமெரிக்காவின் தெற்கு கரோலினா நகரைச் சேர்ந்த ஒரு நிறுவனம் இதை தயாரித்துள்ளது.

1920ம் ஆண்டுகளில் ஒலியைக் கொண்டு நோயை அறியும் முறை காணப்பட்டதாக அமெரிக்காவில் வாழ்ந்த நரம்பியல் மருத்துவரான "அல்பர்ட் அப்ரம்ஸ்" என்பாரின் ஆய்வில் தெளிவாக கூறப்பட்டிருக்கிறது. அவரிடம் வயிற்றுப் புற்று நோயால் பாதிக்கப்பட்ட ஒருவரை அவரின் வயிற்றுப் பகுதியை தட்டிப்பார்த்த போது "சப்" என்ற ஓர் உயிர்ப்பில்லாத ஒலியைக் கேட்டார் எனவும், மருத்துவருக்கு வியப்பு ஏற்பட்டதாகவும், இந்த வியப்பான ஒலிக்குக் என்ன காரணம் என ஆராய்ந்தார்.

பொதுவாக உள்ளே எதுவுமில்லாத வெற்றிடத்தையுடைய வயிற்றுப் பகுதியைத் தட்டிப்பார்த்தால், என்ன ஒலி உண்டாகுமோ அப்படிப்பட்ட ஓர் ஒலியைத்தான் இதுவரை அவர் கேட்டிருந்ததாகவும், இந்நோயாளியின் வயிற்றில் ஏன் வித்தியாசமான "சப்" என்ற ஒலி எழுகிறது. வயிற்றுப் புற்று





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோயினால் பாதிக்கப்பட்ட வேறு சில நோயாளிகளின் வயிற்றுப் பகுதியை தட்டிப் பரிசோதனை செய்தார். அது போன்ற உயிர்ப்பற்ற ஒலி கேட்டது. வேறு நோய்களால் பாதிக்கப்பட்டவர்களை அணுகி அவர்களின் வயிற்றுப் பகுதியையும் தட்டி ஒலியை ஒப்பிட்டறிந்து இவ்வாறான பல்வேறு சோதனையினால் அவரால் ஒரு முடிவுக்கு வர முடிந்ததாகவும். ஒவ்வொரு நோயாலும் பாதிக்கப்பட்டவர்களின் வயிற்றைத் தட்டும் போது ஒவ்வொரு விதமான ஒலி எழுப்பப்படுகிறது. ஒரு குறிப்பிட்ட நோய் யாருக்கு ஏற்பட்டிருந் தாலும் அவர் வயிற்றின் ஒரு குறிப்பிட்ட பகுதியை தட்டிப்பார்க்கும் போது ஒரேவிதமான ஒலியைத்தான் எழுப்பும் என்ற முடிவுக்கு வந்ததாகவும் கூறுகின்றார்.

இவ்வாறு முற்காலங்களில் இயற்கையுடன் இணைந்த மருந்து முறையை எம் முன்னோர்கள் வைத்திய முறையில் கையாண்டிருக்கின்றனர். இதயத்துடிப்பு உள்ள ஒலியமைவுகள் போன்றவை நவீன வைத்தியமுறைகள் வளர்ச்சியடைவதற்கு முன்னுள்ள காலங்களில் ஒலிமுறை பேதங்களைக் கொண்டே செயற்பட்டதாக இணையங்கள் தரும் செய்திகள் மூலம் அறிகின்றோம்.

**குரல் இனிமை**

அல்குர்ஆனை ஓதும் போது ஒவ்வொருவரும் தமக்கு எந்த அளவு குரலினிமை வழங்கப்பட்டிருக்கிறதோ அதனை முழுமையாக உபயோகித்து ஓத முயற்சிக்க வேண்டும் (ரஸுல் (ஸல்) அவர்கள் கூறினார்கள் குர்ஆனை அழகாக ஓதாதவர் எம்மைச் சாந்தவர் அல்ல

(அபூதாவூத்)

ஒரு முறை அபூமூஸா அல் அஷ்அரீ(றலி) அவர்கள் இனிமையாக அல்குர்ஆனை ஓதியதை செவிமடுத்த ரஸுல் (ஸல்) அவர்கள் பின்வருமாறு புகழ்ந்தார்கள் "நீர் தாவூத் (அலை) அவர்களுடைய சமூகத்து புல்லாங்குழல்களுள் ஒன்று கொடுக்கப்பட்டிருக்கின்றீர்"

(அல் புகாரி - முஸ்லிம்)

இத்துணை தூரம் அழகிய ஓதலுக்கு நபி (ஸல்) அவர்கள் முக்கியத்துவம் அளித்துள்ளமையால் ஒவ்வொருவரும் அல்-குர்ஆனை அழகாக தொனியுடன் ஓதுவது ஒரு முயற்சியும் அடிப்படையான தஜ்வீத் சட்டங்களை அறிந்து அதற்கேற்ப அல் குர்ஆனை ஓதிவர முயற்சிப்பது அவசியத் தேவையாகும். இது மனதிற்கும் ஆத்மீக வளத்திற்கும் எப்போதும் நிம்மதியை வளர்க்கும் ஒரு விடயமாகும்.

உசாத்துணை - இணையம்

## ஆவிகளா.... பாவிகளா?

ஆவியுலகில் 2 ஆவிகள் பேசின. "நீ எப்படி செத்தாய்" என்றது ஒரு ஆவி. "என் மனைவியை சந்தேகித்து ஒரு நாள் திடீரென்று வெளியூர் போவதுபோல் போய் நடு இரவில் வந்து சோதனை பண்ணினேன். தப்பு நடக்கவே. வீணாக சந்தேகப்பட்டேன் என்று மாடியிலிருந்து குதித்து செத்தேன்" என்றது. "அட பாவி, நீ செத்ததுதான் செத்தே, கடைசியா ஃப்ரிஜ்-ஜ திறந்து பார்த்திருந்தா நான் செத்திருக்க மாட்டேன்" என்றது மற்றொரு ஆவி.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# STRESS – A WORSE ENEMY?

Mr. Ml. Abdul Lathief
Deputy Principal

**1.0 STRESS – AN INTRODUCTION**

"The silent killer in companies" remarks a writer in reference to stress, Lower Productivity in industries is increasingly associated with occupational stress, commonly referred to as work related stress, which in now a matter of major concern to management and productivity specialists, Sri Lanka, some believe, has such a high rate of suicide because of stress. Stress related disorders are the most common psychological problems today's society is faced with.

**Stress – what is it? Hans selye,** a Canadian doctor (born in Humagary), who first recognized stress in 1936, called it the General Adaption syndrome or GAS. Cox in 'stress, coping and problem solving' defined stress as "the perceived imbalance in the HANS SELYE interface between an invividual and the environment and other individuals". [2] According to a psychologist, "it is the opposite of the feeling relaxed or nervous tension that results from the external situation" [3] Put simply, stress is the feeling that is created in an individual when he or she reacts to particular situations.

Stress occurs when animals undergo what **Walter Cannon,** an American Havard university physiologist, term the ***"fight or flight response".*** In his ground – breaking studies during 1920s, Cannon noted that when faced with danger, animals instinctively prepare to stand their ground or run. Their reaction to the potential harm triggers changes within their bodies by activating the nervous system [4] The adrenal glands produce hormones: adrenaline and cortisol, releasing them into blood stream and them to muscles and organs. Heart-beat rate, respiration and blood preseure all increase as a result of it, Muscles tighten and liver releases some of its stored glucose so that body's energy increases, All the senses go on the alert. All those changes occurred within body prepare the animals to react quickly to the threatening situation. The fight or flight response in a living organization is, therefore, its ability to respond appropriately and spontaneously to physical threat.

Man also experiences the **fight or flight response.** But, as human society has grown more complex, the reaction has been extended beyond direct physical threats. It is now applied to emotional situations as well. Thus situation covers a whole range of situation form out right physical danger to situation like presenting a speech or sitting for an examination where there is no actual



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

danger. It also can be a positive situation as well as negative one. Cox suggest "when people are faced with demands from others or from physical or psychological demands to which they are unable to respond adequately the response of organism is activated to cope with the situation."[5]

The situation that provokes physical changes is called stressor. The natural reaction of the body is known as a stress response or 'fight or flight' response. Accordingly, stress is a physiological state resulting from stressor, setting in motion a complex set of reaction within body. It is the natural and necessary physiological reaction of the body to the challenge and the body's way of preparing to meet a tough situation.

It should noted that stressor may not be actual one, in which case it would exist only as a conjecture about what might happen. Man not only feels but also speculates and imagines. Thus much of stress he encounters emanates from his own emotions and mind.

1.1 Stress – Positive and Negative

As explained above, Stress is normal and necessary in our life as it energizes People to work harder. Stress response, for example, is activated in milder form at a time when a student is preparing for an examination so that he is motivated to study hard. Likewise, emergency situations warrant stress response. It for example, is critical for a driver halting his car suddenly to avoid an accident. In these instances activated nervous system returns to normal state as soon as stressful situation diffuses and stress subsides.

Too much of stress, however, could mean trouble indorsing a wide spectrums of mental and physical illnesses. This excessive stress is referred to as stress over load where pressure is too much for the body to cope with it. Presence of stressors that last too long too intense causes people to feel stress overload. It can keep some people in a more or less constant state of fight or flight and the consequence of living in this state can be brutal. Hans selye describes describes this state as distress. "Damaging or unpleasant stress" he wrote.

Increased job pressure, being exposed to violence or injury, family conflicts, heavy emotions that accompany a broken heart or the death of a loved one and being bullied are some of the things that can overwhelm the body's ability to cope if they continue for a long time. For an example, in the case of ongoing family conflict that lasts long, the nervous systems of those involved in the conflict sense continued pressure and may remain slightly activated, releasing extra stress hormones over extended period. It produces a lasting low – level stress which can leave a person feeling depleted and over whelmed, causing physical and psychological illnesses. Likewise stressing out too much over a task (qualitative over heard) or too much work such as crammed schedule not having enough time to rest and relax(quantities Overhead) exerts too much pressure beyond the body's ability to cope with it.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

As one takes on increasing responsibilities and risks, the numbers of stressful situations are bound to increase. A worker may face family or health problems, financial worries and job pressure – such factors increase stress load in the worker.

Many physical and psychological ailments are associated with excessive stress. The signs that manifest in people who are undergoing excessive stress include:

a) On the psychological side:

1. Anxiety - Feeling constantly being pressured, tense, upset, worried and hassled.
2. Sadness or depression and paranoia with side effects like impotence and obesity.
3. Impulsive reactions, irritability, angry and being illogical.
4. Panic attack – repeated episode of tense fear that strike often without waring.
5. Inability to relax
6. Mental confusion, inability to concentrate.
7. Insomnia – inability sleep.
8. Tobacco, alcohol and substance abuse.
9. Eating disorder –Any pattern of atypical eating e.g. Over eating.

b) On the Physical Side:

1. Physical symptoms such as blood pressure, chest pain, migraine, headache, neck pain lower back pain, and stomach problems – irritable bowel movement, ulcer etc.
2. Allergic reactions such as eczema, asthma, scratching and other skin reactions.

Extreme stressful situations generate very strong stress. Warfare, torture, sexual abuse, serious accident and natural disaster such as earthquake and tsunami are some of the examples of such situations. The people who live through such traumatic events can develop what is known as post Traumatic stress Disorder (PTSD), where grief reaction is prolonged and takes longer to resolve. PLSD, according to experts, can last weeks, months or even years. It may need treatment.

The people having anxiety problems can overact to stress making small difficulties seem crises. Chronic anxiety requires specialized intervention.

Just like stress overload causing troubles, of equal concern is stress under load, which also is hard on people. The stress or too little stressful. It leads to boredom, feeling sleepy, depression,carelessness, hopeless - ness and lack of achievement that in turn makes them lose their self – esteem. If they work, they will tend to be accident – prone, have a high absentee rate and lack of judgment. Furthermore, they are liable to be wakeful, withdrawn, and have poor appetites. "Complete freedom from stress is death" wrote Hans selye[7]. What people subject to stress under load are missing clearly is the energizing tension which stresses exerts.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

When there exists right amount of stress, which is not either excessive or inadequate, there will be neither Strain nor slack on a person. This is the optimal level of stress. Experts in the field call " Stress comfort zone" Performance at the optimal level is higher. People experiencing the optimum stress derive better satisfaction from the job well done and are relaxed, energetic, enthusiastic, happy and self - confident. And they have feelings of well-being. The dimensions of the zone vary with personalities.

1.2 Stress-Performance Curve

Research findings as to how stress affects the performance are shown using stress performance curve (see the curve). The first stage of the curve indicates boredom as there is too little stress. Performance increase stress with increased stress up to the point of pak performance. Stress load beyond this point manifest negative effects with diminishing performance, finally burn out-break down-appears.

**1.1 Factors involved in stress phenomenon**

One's accommodation to stress depends on different factors. It depends partly on what types of personalities we have. Broadly speaking, those who are highly competitive, insecure, materialistic and abrasive are more likely to succumb to the effects of stress than those who are less prickly.

It also depends on the kind of the lives people lad. The stress one undergoes at executive level or upper management level is of different sort to that of clerical or manual worker. Besides these two, other factors also involve. Cox, out lining these factors says, "Stress response could depend upon combination of different elements including the extent of demand, the personal characteristics and coping resources of the person and constrain on the person in trying to cope and the support received".[8]

Further more, the stress phenomenon seems to be a rather sexist one. Most people agreed that women are better able to cope with stress, One reason for this is because they have more out lets of release than male counter parts. "Women bend and men break under stress" reads a management slogan[9]. Doctors make the point that stress related ailments do not usually stem directly from stress as such. You can take two people under the same amount of pressure and one will be healthy while the other is sick. It depends on the person's ability to cope with it.

**1.2 Children and stress**

Teachers should realize that children would easily fall victims to stress related problems. Stressful elements prevailing at home or school cause stress over load in children. Factors contributing towards stress related disorders in children in clued:

1. Forcing children to do things they dislike.
2. Setting unrealistic goals beyond children's capacity and forcing them to achieve them.


நல்ல நண்பர்கள் துயரத்தை எளிதாக்குகிறார்கள். GTC
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. Partiality of parents – giving partial treatment to their children.
4. Unfavorable, poor home conditions, broken home.
5. Lack of basic needs.
6. Being unfairly treated & unfair punishment.
7. Unsympathetic treatment by the teachers.
8. Ongoing problems with school works, unreasonable home works, giving assignments at short notice.
9. Conditions that make a child feel insecure.
10. Weak nervous system-children born with weak nervous system are more vulnerable.

It should be noted that today education has become competition for young people. Event primary school children are being pushed into competition. Grade five examination, for example, place a severe strain on students whose expected results are beyond their capacity. Parents pressure to achieve scholastically or academically, sometimes beyond their ability. Children have little time for play and relaxation which, in many ways provide an excellent therapy for overcoming stress. These factors can cause the children to develop mental stress. Irritability, short temper, inability to cope with learning activities, being restless, low performance and pessimistic thinking are some of the symptoms which could appear in children in this respect.

Teacher should be mindful that the way they treat the children can put them under stress. Therefore they should be extra careful not to cause stressful situation for children with their behaviors. The steps teachers should take in order to avoid stress build-up in children include:

1. Identifying all the children and their talents, acceptance and recognition of them.
2. Avoiding harsh punishment, unsympathetic treatment and comparison between children.
3. Avoiding unfair evaluation and partiality towards the children, and
4. Giving the children opportunities to develop their potentialities to maximum.

Teacher should create a cordial atmosphere in the classroom. He should be loving kind, affectionate and sympathetic to his pupils' and always ensure his pupils' emotional stability and security.

## 1.3 Stress Management

The stress can over take any of us at any time, any where, and it is something that cannot be avoided in our day to day living. It has motivational property. It arouses an individual to action at heightened level. Without it, life would be boring and that would be stressful. Nevertheless, the aspects of stress associated with excessive stress lead to physical or mental illnesses. Thus the most important factor is being in control of it. That is – 'stress management'. It means acting at one's optimal level managing situations that generate stress. It involves the right type, amount and timing stress for one's personality. Emphasizing this point a





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

psychiatrist says, "as long as you pitch your life to a level you want stress your life to that point where your equilibrium is not affected stress will not affected stress will not bother you".

One can manage stress by planning one's action, managing time well, handing things in the order of importance, learning to relax and identifying what one can control and what can not be controlled. "Learn to ignore what you can't control; learn to control what you cant', says Dr. Peter G. Hanson, author of 'The joy of stress', [11] Unfitness is major source of negative stress in its own right. By following healthful diet and exercising, one can keep one's self physically fitter. And one can reduce one's stress load by being assertive and flexible, where necessary. A positive attitude and positive self concept are important.

There are number of activities which have significant bearing on stress prevention and control. Some of them are as follows:

1. Activities such as yoga, meditation, prayer or other religious activities leave one with sense of relaxation and peacefulness.

2. The creative and the recreational activities are proven ways of reducing stress level.

3. Sharing concerns such as fear anxieties and communication with trusted friends or family members help one feel that he is not alone with problems.

Job satisfaction greatly reduces stress at work place. Sense of humour also helps de-stress.

Today's turbulent society plays vital role in stress phenomenon, giving rise to stressful life situations in numerous ways. The question of whether or not stress takes heavy toll on our physical and mental health ultimately depends on how we handle it. The movement we begin to crumble under it emotionally, mentally or physically is the movement we need to control and over come it.

We should control stress before it controls us. Stress, when uncontrolled, can play havoc with our life becoming silent killer.

**Notes:**

1. Rathnja Arandare – The silentkiller in companies.
2. RRanjith de silva – Stress reduction; A significant factor in productivity improvement.
3. Rathirija Arandra – op. cit
4. ...... Stress in perspective, Royal Bank of Canada.
5. Ranjith de Silva – op. cit.
6. .... Stres in perspective – op. cit
7. Ibid
8. Ranjith de Silva – op. cit
9. Rausan Akbar – The Great worriers
10. ..... Stress in perspective op.cit
11. Ibid

(The all sources cited above are articles published in new papers)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆளுமைப் பண்புகள் கொண்ட ஆசிரியர் ஒருவருக்கு இருக்க வேண்டிய இலட்சணங்கள்



எஸ். ஸ்ரீதரன்
விரிவுரையாளர், சித்திரநெறி

ஒரு நாட்டின் அனைத்து விதமான அபிவிருத்திக்கும் பாடசாலை வகுப் பறைகளே மைய நிலையங்களாகவுள்ளன. ஒரு வெற்றிகரமான வகுப்பறையென்பது வினைத்திறன் கொண்ட ஆசிரியர்களைப் பற்றிய மாணவர்களின் புலக்காட்சியிலே பெரிதும் தங்கியுள்ளது. பொதுவாக பாடசாலை என்பது ஓர் உயரி. அதாவது, சிந்தனைத் திறனும் செயற்பாடுகளும் வளர்ச்சியும் விருத்தியும் கொண்ட ஒரு முழுமையான உயிரியாக பாடசாலை காணப்படுகின்றது. இன்றைய நிலையில் இந்தச் சிந்தனையானது பாரிய அளவில் ஒரு விசைப்படுத்தும் அம்சமாக முதன்மை பெற்று வருகின்றது. இதனால் பாடசா லையில் அடங்குவோர்களது வகிபாகம் மிக விரைவாக முக்கியத்துவப் படுத்தப்பட்டும் எதிர்பார்க்கப்பட்டும் வருகின்றது. இன்று ஆசிரியர் ஒருவர் மாணவர் சார்பாக பல்வேறு தொழிற்பாடுகளை ஆற்ற வேண்டியவராக உள்ளார். ஆயினும் இவற்றுள் மாணவன் ஒவ்வொருவன் பொறுத்தும் அவனது உள்ளார்ந்த ஆக்கத்திறன் இனங்காணப்பட, வெளிப் படுத்தப்பட விருத்தியாக்கப்பட உதவுவது அவரது தலையாய தொழிற்பாடாக உள்ளது. மாணவனிடம் சுயமான சிந்தனைத் தூண்டலை வளர்த்தல், அவனைத் தர்க்க ரீதியாக, ஆக்கரீதியாக சிந்திக்கச் செய்தல், செயற்படச் செய்தல், மாணவன் தன் உள்ளார்ந்த திறன்களை அடையாளங்காண உதவுதல், அத்தகைய திறன்கள் வெளிக் கொணரப்படுவதற்கும் வளர்த்தெடுக்கப் படுவதற்குமான சந்தர்ப்பங்களை வழங்குதல் போன்றவற்றைத் தன் அடிப்படைத் தகுதி களாகக் கொண்ட ஓர் ஆசிரியருக்கு இருக்க வேண்டிய இலட்சணங்கள் பற்றி இக்கட்டுரை கோடி காட்ட முனைகிறது.

"மாணவர்களிடம் மறைந்து கிடக்கும் உணர்வை, உள்ளார்ந்த திறன்களை வெளிக்கொண்டு வருபவனே ஆசிரியன்" என்ற சுவாமி விபுலானந்தரின் சிந்தனை யோடு ஒப்பு நோக்கிப் பார்க்கின்ற போது ஓர் ஆசிரியன் வினைத்திறன் மிக்க கற்பித்தலில் ஆற்றவேண்டிய கடமைக் கூறுகள், அவரின் செயற்பாடுகளில் ஏற்படவேண்டிய மாற்றங்கள், கவனத்திற் கொள்ளப்படவேண்டிய நிபந்தனைகள் மேலும் ஓர் ஆசிரியரின் நடிபங்குகள் முதலியன குறிப்பாக எடுத்து நோக்க வேண்டியதாக இருக்கின்றன. இவை குறித்து நாம் ஒவ்வொன்றாக இங்கு சுருக்கமாகப் பார்க்கலாம்.

மாணவர்களது சாதனை மட்டத்தை உயர்த்துவதே ஆசிரியர்களின் கடமைக் கூறுகளில் முதன்மையானது என்பது தற்காலக் கல்விச் செல்நெறியின் முக்கிய இயல்பாகும். அவ்வாறான சந்தர்ப்பங்களில் ஓர் ஆசிரியர் ஆற்றவேண்டிய கடமைக் கூறுகளை ஆராய்கின்ற போது,

1. கல்விசார் இலக்குகளுக்கு அழுத்தம் கொடுத்தல்.
2. கலைத்திட்டம் தொடர்பான பூரண அறிவை தான் கொண்டிருப்பதுடன் மாணவர்களுக்கும் வழங்கல்.
3 கலைத்திட்டத்தை அவதானமாக ஒழுங்கமைத்துக் கொள்வதுடன் பாகுபடுத்திக் கொள்ளல்.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. மாணவர்கள் கற்க வேண்டிய விடயங்களைத் தெளிவாக விளக்கல்.
5. மாணவர்கள் கற்ற விடயம் தொடர்பாக பயிற்சியினைப் பெறுவதற்கு அதிக சந்தர்ப்பங்களை வழங்கல்.
6. மாணவர்களது வெற்றியை உறுதி செய்யக்கூடிய ஊக்குவிப்புக்களையும் பின்னூட்டல்களையும் வழங்கல்.
7. மாணவர் ஆற்றிய கடமைகளில் ஒழுங்கான மீளாய்வுகளை மேற்கொள்ளல்.
8. மாணவர்கள்ஆற்றிய கடமைகளுக்கு வகை சொல்லும் ஆற்றலை வளர்த்தல்.
9. ஆசிரியர் தான் ஆற்றிய பணிகளை மீளாய்வு செய்து கொள்ளல்.

மாணவர்களின் சாதனை மட்டம் உயர்வதற்கு மேற்கூறிய செயற்பாட்டு முறையில் ஓர் ஆசிரியர் ஈடுபடுவது மிகுந்த பலனை தருவதாகும் என எதிர்ப்பார்க்கப் படுகின்றது.

அது போலவே, "மனிதனின் நடத்தைக் கோலங்களில் மாற்றத்தை ஏற்படுத்தவதே கற்றல் நடவடிக்கையின் இலக்காகும்" என்ற கருத்தின் அடிப்படையில் நோக்கும் போது,

முன் நடத்தை




பின் நடத்தை

மாணவரில் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டுமாயின் ஓர் ஆசிரியருக்கு அறிவு மட்டும் போதுமானதல்ல அதனையும் தாண்டிய செயற்பாடுகள் வேண்டும். குறிப்பாக பின்வருவனவற்றில் மாற்றங்கள் ஏற்படவேண்டும்,

1. மனப்பாங்குகள்
2. அர்ப்பணிப்பு
3. ஊக்கம்
4. தேடல்
5. தத்துவம்

திறமையான ஓர் ஆசிரியர் எப்போதும் பிள்ளையின் உளவியற்றன்மையை இனம் காண்பவராக இருக்க வேண்டும். இதற்கான திறன்களை வளர்த்துக் கொள்வது குறிப்பிட்ட ஆசிரியருக்கு இன்றியமையாத தாகும்.

மேலும், கவனத்திற் கொள்ளப்பட வேண்டிய நிபந்தனைகளைப் பார்க்கின்றபோது கல்வி கற்பிக்கும் சுதந்திரம் எந்த சர்வதேசப் பிரகடனத்தாலோ மட்டுப்படுத்தப் படவில்லை. பிள்ளைகளின் உரிமையினூடாக இதனைப் பார்த்தால் தரமுள்ள கல்வியை பெறும் உரிமை அவர்களுக்கு பூரணமாகக் கிடைக்கும். இதனபடி கவனத்திற் கொள்ளப்படவேண்டிய நிபந்தனைகளாவன,

01. நோக்கம் :- ஓர் உறுதியான அரச பாடசாலை முறைமை மூலமாக சுதந்திரம், சமத்துவ தன்மை. முதலிய வற்றை ஓர் ஆசிரியர் ஏற்படுத்த வேண்டும்.

02. ஆளுகை :- முன்னேற்றங்களைக் கண்காணிக்கவும் பரந்த வழிகளை அமைத்துக் கொடுப்பதற்கும் ஆசிரியர் திடசங்கற்பம் கொண்டிருத்தல்.

03. முரண்பாடற்ற தன்மை:- பெறுபேறுகளைத் தரக்கூடிய நோக்குடைய நீண்ட. குறுகிய திட்டங்களை ஓர் ஆசிரியர் கொண்டு இருத்தல் வேண்டும்.

04. சான்று மாணவனின் கற்றல் தேர்ச்சிகளில் அல்லது ஏதுக்களில் கவனம் செலுத்துதல்.

05. பின்னூட்டலும் மாணவனின் இடர்


நல்லொழுக்கம் என்பது உனக்கு நீயே அளித்துக் கொள்ளும் நன்மதிப்பாகும். GTC
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடுகளை இனங்கண்டு அவற்றை களைவதற்கு உதவுதலும்.

ஆசிரியர் தன் ஆசிரியர் தன், தொழிலிமையில் தனது முழுமையான கவனத்தை செலுத்துவதற்கு வசதியாகக் வினைத்திறனுடனான கற்றலை முன்னேற்றக் கூடிய சேவை நிபந்தனைகளை ஆசிரியர்கள் கட்டாயமாக செயற்படுத்தக் கூடியதாக இருத்தல் வேண்டும்.

"நல்லதொரு ஆசிரியர் குழாம் இன்றி நல்லதொரு பாடசாலையை உருவாக்க முடியாது" என்ற ஐக்கிய அமெரிக்காவின் எதிர்கால ஆசிரியர்கள் தொடர்பாக கல்வி ஆணைக்குழுவின் கொள்கைக்கிணங்க நல்ல ஆசிரியரில் காணப்பட வேண்டிய இலட்சணங்க ளாவன,


1. தொழிற்சார் அறிவு
2. ஆளணியினர்க் கிடையிலான தொடர்பு
3. சிறந்த ஆளுமை

அதாவது, பாடத்தைத் திட்டமிட்டு அவற்றைப் பிரயோகிக்கின்ற திறனோடு தொடர்ந்து கற்றுக் கொண்டிருக்கக் கூடியவராகவும் ஓர் ஆசிரியர் அமைதல் வேண்டும். மேலும் உளவியல் ரீதியான தேவையை உணர்ந்து கொள்வதோடு வினைத் திறனுடைய கற்பித்தல் திறன்களையும் பெற்றிருக்க வேண்டும்.

இறுதியாக, ஓர் ஆசிரியரின் நடிபங்குகளாக குறிக்கப்படுபவை பற்றி சொல்லிச் சுருக்கலாம்.

1. ஒரு நண்பர்
2. ஒரு ஆலோசகர்
3. துன்பத்தில் கை கொடுப்பவர்
4. ஆய்வாளர்
5. அவதானிப்பவர்
6. தாய்/தந்தை
7. வழிகாட்டி
8. ஆராய்ச்சியாளர்
9. நீதிபதி
10. மேற்பார்வையாளர்

மேலே சொல்லப்பட்ட அனைத்து விடயங்களையும் நாம் ஒருங்கு சேர்த்துப் பார்க்கின்ற போது, ஆசிரியர்கள் வெறும் சடப்பொருட்களுடன் தொடர்பு கொள்கின்றவர்கள் அல்லர். மாணவர்கள், அதிபர், கல்விச் சமூகம், அயல் சமூகம், பெற்றோர் போன்ற பல்வேறு மட்டத்தினருடன் அவர்களின் விருப்பு வெறுப்புகளுக்கு ஏற்ப செயல்பட வேண்டிய தேவையும் உள்ளது. உண்மையில் ஆளணியினருக்கிடையிலான தொடர்பு என்பது மற்றவர்களின் மீது ஆதரவு கொள்ளல் எனப்படும். அதற்கு நேர்மை, நம்பிக்கை, பல்வகைக் கருத்துக்கு மதிப்பளித்தல் சுயநலமின்மை, நல்ல தெடர்பாடல் திறன் முதலியனவும் ஓர் ஆளுமைப் பண்பு கொண்ட ஆசிரியரின் இலட்சணங்களைக் கொள்ளப்படுகின்றன.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தரமான கல்வி முறையும், இலங்கையில் இவற்றை ஏற்படுத்தும் போது எதிர்கொண்ட தடைகளும், அவற்றைத் தவிர்ப்பதற்காக மேற்கொண்ட வழிவகைகளும்.

ஏ. சுலைமா லெவ்வை
விரிவுரையாளர், தமிழ்த்துறை

நியமங்களை அனுசரித்தல், நோக்கத்துக்குப் பொருத்தமாக அமைதல்,நிறுவனத்தின் குறிக்கோளை அடைவதில் வினைத்திறன், குறிப்பாக உணர்த்தப்படும் தேவைகளை நிறைவேற்றுவதல், கல்வியில் தரத்தை நிச்சயப்படுத்திக் கொள்ளல் எனும் பல்வேறு வரையறைகளுக்கேற்ப 'தரம்' எனும் எண்ணக்கரு முக்கிய இடம் வகிக்கிறது. தரம் பற்றிய வரையறைகளைச் சமரப்பிப்போர் அனைவரும் இது கல்வி நிறுவனங்களின் முக்கியமானப் பணி என்பதை ஏற்றுக் கொள்கின்றனர். ஆனால் எமதுநிறுவனங்கள் அதனை உறுதியாகவும், வெற்றிகரமாகவும் வழங்கத்தக்கதாக அதை எண்ணக்கருவாக்கவும், உருவாக்கவும் முடியாமையே பிரச்சினையாக உள்ளது.

பொது மக்களின் எழுதப்படிக்கும் திறன், அடிப்படைத் திறன்களான தொடர்பாடல் திறன், கணிதத்திறன், ஒழுக்க நெறி, மனச்சாட்சி, உயர்மட்டத் திறன்களான பகுப்பாய்வு, தொகுப்பு அல்லது மதிப்பீடு, தீர்மானம் எடுத்தல், ஆக்கச் செயற்பாடு, விசேட பாடங்களில் அல்லது பொதுத் திறமைகளில் நிபுணத்துவம் பெறல் காரணிகள் மேல் நோக்கிய அசைவினைப் பெறின் அது கல்வியின் தரம் எனப்படும்.

கல்வியின் தரம் உள்ளக, வெளிவாரியான வினைத்திறன்களில் தங்கியுள்ளது. கல்வியில் மாணவர் பங்குபற்றுவதில் செல்வாக்குச் செலுத்தும் காரணி கல்வி முறைமையின் உள்ளக வினைத்திறனாகும். கல்வி முறைமையின் உள்வாரியாக வினைத்திறன் ஏற்படுவதற்கு பின்வரும் விடயங்களில் கவனம் செலுத்த வேண்டும்.

1. பாடசாலையில் நுழைந்த மாணவர்களை அந்தந்த கல்வி மட்டங்களை வெற்றிகரமாக முடிக்கும் வரை இடைவிலகுவதற்கு இடமளியாது தடுத்தல் வேண்டும்.
2. அந்த மாணவர்கள் ஒரு வகுப்பில் தடைப்பட்டு இருக்காது ஆண்டிலிருந்து ஆண்டிற்கு சித்தியடைவதற்கு தேவையான அடைவு மட்டத்தை பெற்றுக்கொடுக்கக் கூடியதாக இருத்தல் வேண்டும்.

உள்ளக வினைத்திறனின் மீது தாக்கத்தை ஏற்படுத்தும் முக்கியமான ஒரு காரணியாக ஆசிரியர் மாணவர் விகிதாசாரத்தை காட்டுவர். அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் அபிவிருத்தி அடைந்த நாடுகளை விட அதிகமான ஆசிரியர் - மாணவர் விகிதாசாரமொன்று காணப்படுகிறது. வளர்ச்சியடைந்த நாடுகளில் 25 மாணவர்களுக்கு ஒரு ஆசிரியரும் சில வளர்ச்சி அடைந்து வரும் நாடுகளில் 50 அல்லது 60 மாணவர்களுக்கு ஒரு ஆசிரியரும் இருப்பர். இலங்கையில் 1997இல் 23 மாணவர்களுக்கு ஒரு ஆசிரியர் விகிதம் இருக்கின்றனர். ஆனால் மாவட்டங்களுக்கு இடையிலான ஏற்றத்தாழ்வுகளை கருத்தில் கொள்ளவில்லை. தரமான கல்வி முறையினைக் காட்டும் அம்சங்களாக பின்வருவன அமைகின்றன.

1. கலைத்திட்டத்தின் தன்மை - விஷேடமாக அன்றாட வாழ்க்கையுடன் தொடர்புடையதாக இருத்தல்.



கடுமையான உழைப்பைத் தவிர வெற்றிக்கு வேறு வழியில்லை. GTC

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. கற்பிக்கப்படும் கற்பித்தல் முறைகள்.
3. ஆசிரியர்களின் கல்வி, தொழில் தகைமைகளும் தியாகமும்.
4. கல்வி வசதிகளும் வளங்களும்.

**கலைத்திட்டம் :**

இவற்றுள் முக்கியமாக கருதப்படும் சிக்கலான ஒரு அம்சம் கலைத்திட்டம். அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகள் பலவற்றில் முன்னர் சிலருக்காகத் தயாரிக்கப் பட்ட கலைத்திட்டம் இன்றைய நிலைக்குப் பொருத்தமான விதத்தில் அதாவது பெருந்தொகையானவர்களின் தேவைக்கு ஏற்றவாறு நவீன மயமாக்கப்படவில்லை. இதைத்தவிர இன்று சமூகத்தில் பல்வேறு பொதுசன ஊடகங்களினூடாக உலக நிலைமை பற்றிய அறிவு வழங்கப்படுவதால் கற்ற சூழலில் ஏற்பட்ட மாற்றத்தைப் பற்றி கவனத்தில் எடுக்கவில்லை.

**கற்பித்தல் முறைகள்:**

ஆசிரியர்களினால் பின்பற்றப்படும் கற்பித்தல் முறைகள் கற்றலைத் தூண்டுவதாக அமையவில்லை. வெண் கட்டியையும் பேச்சையும் பயன்படுத்தும் கற்பித்தல் முறையைக் கொண்ட பாடநூல் மையக் கலைத்திட்டம் மெல்லக் கற்கும் மாணவர்களைப் பாதிக்கின்றது. வசதிகள் குறைந்த குடும்பப் பின்னணிகளிலிருந்து வரும் பிள்ளைகளைப் பாதிக்கின்றது. உள்ளக வினைத்திறனை ஏற்படுத்துவதாக கற்பித்தல் முறைகள் அமையவில்லை.

**ஆசிரியர்களின் கல்வித்தொழில் தகைமைகளும் தியாகமும்:**

இலங்கையைப் பொறுத்தவரையில் பட்டதாரிகள், பயிற்றப்பட்ட பட்டதாரிகள் 28% ஆகவும், பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் 50.6% ஆகவும், தராதரப்பத்திரமுள்ள ஆசிரியர்கள் 2.4% ஆகவும் தராதரப் பத்திரமற்ற ஆசிரியர்கள் 12.8% ஆகவும், ஆசிரிய பயிலுனர் 6.2% ஆகவும் 1997 இல் ஆசிரியர் வகைப்பாடு அமைந்தது.

கல்வித்தரத்தின் முன்னேற்றத்தைக் காட்டும் இன்னுமொரு அம்சம் ஆசிரிய பயிற்சிக்காக ஒதுக்கும் கால எல்லையாகும். பெரும் பாலான வளர்ச்சியடைந்து வரும் நாடுகளில் ஆசிரியர்களுக்கான முன்பயிற்சி ஒரு குறுகிய காலத்துக்கு மட்டுமே இடம் பெறுகிறது. பெரும்பாலும் தமது தொழில் பயிற்சி அறிவை முன்னேற்றிக் கொள்ள சேவைக்காலப் பயிற்சி பெறும் சந்தர்ப் பங்களும் மிகக் குறைவாகும். ஆயினும் வளர்ச்சியடைந்த நாடுகளில் ஆசிரியராக நியமனம் பெறுவதற்கு முன் உயர்கல்வி பெற்றிருப்பினும் தொழில் பயிற்சி பெறுதல் அவசியமாகும். இலங்கையில் க.பொ.த சா/த சித்தியடைந்தவர்களுக்கும் கூட ஆரம்பப் பயிற்சி கொடுக்கப்படாமல் பாடசாலைகளில் ஆசிரியர் நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

உயர்கல்வித் தகைமையோ, பயிற்சியோ மாத்திரம் சிறந்த ஆசிரியரை உருவாக்கி விடுமோ? இல்லை என்பதே பொதுவான நம்பிக்கை. சில தசாப்தங்களாக ஆசிரியர்களின் அர்ப்பணிப்புத் தன்மை குறைந்து விட்டது. என்ற குற்றச் சாட்டுகளும் அடிக்கடி சுட்டிக்காட்டப்படுகிறது. காரணம் கவர்ச்சியற்ற ஆசிரிய சேவை நிபந்தனைகள் காரணம் எனக் கூறப்பட்டது. ஆசிரியர்களின் சம்பளக் குறைவு அவர்களின் கடமை உணர்ச்சியைப் பாதிக்கின்றது.

எவ்வாறாயினும் ஆசிரியர்கள் தியாக உணர்வுடனும் போதுமென்ற மனமே பொன் செய்யும் மருந்து என்ற மனப்பக்குவத் துடனும் நடக்கும் போதே உள்ளக வினைத்திறனை அதிகரிக்கச் செய்யலாம்.

**மூலவளப்பங்கீடு:**

கல்விக்காக செலவிடப்படும் பணத்தில் கற்பித்தல் உபகரணங்களுக்காக என்ன




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூற்றுவீதம் ஒதுக்கப்படுகின்றது என்பதும் கல்வியின் தரத்தைக் காட்டும் இன்னுமொரு அம்சமாகும். இலங்கையில் மொத்தச் செலவீனத்தில் 85% ஆசிரியர் சம்பளங்களுக்காகச் செலவிடப்படுகிறது.

பாடசாலைகளிலும் பாடசாலைச் சமுதாயத்திலும் உள்ள மூலவளப் பற்றாக்குறை கலைத்திட்டச் சீர்திருத்தங்களைச் சீராக அமுற்படுத்த முடியாமல் இருப்பதற்கும், பாரம்பரிய முறைகளையே கையாள்வதற்கும் பெரிதும் காரணமாகின்றது.

கிராமிய அல்லது பின்தங்கிய பகுதிகளில் (1,2 அல்லது 3 வகைகளைச் சேர்ந்தவை) நிலைமை முற்றிலும் வேறுபட்டதாகக் காணப்படுகிறது. இப்பாடசாலைகள் சில வேளைகளில் தண்ணீர், மின்சாரம் மற்றும் அடிப்படை வசதிகள் என்பவற்றையும் பெற்றுக் கொள்ளாத நிலையில் காணப்படுகின்றன.

பின்தங்கிய நிலையில் உள்ள பாடசாலைகளில் கலை, வரத்தகம், விஞ்ஞானம் போன்ற கலைத்திட்ட துறைகள் இக்கல்லூரி மட்டத்தில் கிடைக்கப் பெறுவதில்லை. இம்மூன்று கலைத்திட்டத் துறைகளும் 1AB வகைப் பாடசாலைகளிலேயே கற்பிக்கப்படுகின்றன. 1C வகைப் பாடசாலையில் க.பொ.த உயர்தர வகுப்புக்களில் கலைத்துறைப் பாடங்கள் மட்டுமே போதிக்கப்படுகின்றன. கிளிநொச்சி, மன்னார், வவுனியா, மொனராகல ஆகிய பிரதேசங்களில் க.பொ.த (உ.த) வகுப்பு மட்டத்தில் விஞ்ஞானக் கல்விக்கான வசதி வாய்ப்புகள் மிக அரிதாகவே உள்ளன.

**மேற்பார்வையும் முகாமைத்துவமும்:**

வினைத்திறன் மிக்க பாடசாலை முகாமைத்துவம் கல்வியின் தர மேம்பாட்டிற்கு முக்கிய கருவியாகும். பாடசாலை தேசிய மட்டங்களில் தமக்குக் கீழ் பணியாற்றுவோர்களைத் தாண்டி அதிகபட்ச வேலைகளைச் செய்வதற்குத் தேவையான தலைமைத்துவப் பண்புகளைக் கொண்ட தகுதி வாய்ந்த முகாமையாளர்களால் கல்வியின் தரம் உயர்த்தப்படும்.

**இலங்கையில் கல்வியின் தரத்தை மேம்படுத்துகையில் சில தடைகள் ஏற்படுகின்றன.**

1. மாணவர் பெருந்தொகையைக் கொண்ட வகுப்பறை :-

செயல் மூலம் கல்வி, பிள்ளை மையக்கல்வி அணுகுமுறைகள் என்பவற்றை நடைமுறைப்படுத்துவதில் மிகக்குறைவான நிலையிலுள்ள பாடசாலைகள் நகர்ப் புறங்களில் காணப்படுகின்ற பெரிதும் புகழ் பெற்ற பாடசாலையாக உள்ளன என்பது அவதானிக்கப்படாது. இப்பாடசாலையில் வகுப்புக்கள் ஒவ்வொன்றிலும் 40,45,50 என மாணவர்கள் தொகை காணப் படுகின்றது. எனவே, கலைத்திட்ட மற்றும் இணைப் பாடவிதானச் செயற்பாடுகளுக்குத் தேவையான ஆசிரியர்களையும் மாணவர்களையும் பொறுத்தவரையில் மாணவர்கள் நன்மை பெறும் சூழ்நிலையில் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

2. பாடப்புத்தகம் குறைவு:

இலங்கையில் வருடாந்தம் 600கோடி ரூபாவிற்கு மேல் பெறுமதியான இலவசபாடநூல்கள் வழங்கப்படுகின்றன என அரசாங்க அறிக்கைகள் பறைசாற்றுகின்றன. பின்தங்கிய பாடசாலைகளில் உரிய வேளைகளுக்கு உரியளவு பாடநூல்கள் கிடைப்பதும் இல்லை. பாடசாலையில் முதலாம் தவணை முடிந்த பிறகே சில பாடசாலைகளுக்குப் பாடப்புத்தகங்கள் கிடைக்கின்றன.

3. கல்வித் தகுதி குறைந்த ஆசிரியர்:- ஆசிரியர்கள் பட்டதாரிகள், பயிற்றப்பட்ட பட்டதாரிகள் 28% ஆகவும் பயிற்றப்பட்ட


உலகத்திலேயே தவிர்க்க முடியாத விடயம் ஒன்று உண்டென்றால் அது வாழ்வுதான். GTC

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியர்கள் 50.6% ஆகவும் தராதரப் பத்திரமுள்ள ஆசிரியர்கள் 2.4% வும் தராதரப்பத்திரமுள்ள ஆசிரியர்கள் 12.8% வும் ஆசிரியப்பயிலுனர் 6.2% வும் உள்ளனர் என்பதை 1997ன் தகைமைகளில் அடிப்படையில் அரசாங்க ஆசிரியர்களின் வகைப்பாடு காட்டுகின்றது. பட்டதாரிகள் 28% எனில் மிகுதி 72% ஆக உள்ள ஆசிரியர்கள் தகுதி குறைந்தவர்களாக உள்ளனர் என்பதை மேற்காட்டிய புள்ளி விபரம் உணர்த்துகின்றது. 1990ல் ஆசிரியர்களைச் சேர்ப்பதற்குக் குறைந்தபட்ச தகைமையாக க.பொ.த. (உ/தரம்) இருந்தது என்பதும் ஆசிரியர்களின் கல்வித் தகுதி குறைந்ததை எடுத்துக் காட்டுகிறது.

4. மேற்பார்வை இல்லாதிருத்தல்:
பாடசாலைகள் மாகாண தேசிய மட்டங்களில் தமக்கு கீழ் பணியாற்றுவோர்களைத் தூண்டி அதிகபட்ச வேலைகளைச் செய்வதற்குத் தேவையான தலைமைத்துவப் பண்புகளைக் கொண்ட தகுதி வாய்ந்த முகாமையாளர்களின் பற்றாக்குறை பற்றி அடிக்கடி பிரஸ்தாபிக்கப்படுகிறது. அரசியல் குறுக்கீடுகளும், தொழிற்சங்க நெருக்குதல்களும், சகல மட்டங்களிலும் பயனுறுதி வாய்ந்த முகாமைத்துவத்திற்கு இடையூறான இரு காரணிகளாக விளங்குகின்றன.

5. கலைத்திட்டத்தில் இடைநிலைக் கல்வி தேவையான அளவு பன்முகப்படுத்தப் பட வில்லை. இதற்கான காரணங்கள் பின்வருமாறு :-

1. விஷேட ஆசிரியர்கள் பற்றாக்குறை, தொழில்நுட்ப விஞ்ஞான தொழில் சார் கல்வியைப் பெற்றுக் கொடுப்பதற்கு திறமையுள்ள ஆசிரியர்களின் பற்றாக்குறை.

2. பொருளாதாரக் கஷ்டம் காரணமாக ஏற்படும் ஆய்வு கூடங்கள் வேலையறைகள், உபகரணங்கள் பற்றாக் குறை.

3. மாணவர்களிடமும் பெற்றோர்களிடமும் தொழில்சார் துறை, கல்விசார் துறை தாழ்ந்தது என்ற பிழையான மனப்பாங்கு காரணமாக அத்துறையைத் தெரிவு செய்வதற்குமான தூண்டுதல் குறைவு.

6. கலைத்திட்டத்தில் சுமையான இடைநிலைப் பாடசாலைக் கலைத் திட்டம்

பாடத்திட்டத்தை முடிக்க வேண்டும் என்ற உணர்வில் ஆசிரியர்கள் விரைவாகவும் வேகமாகவும் கற்பிக்கின்றனர். பாடங்களைக் கற்பிப்பதற்கான கால அளவு போதாததாகக் காணப் படுகின்றது.

7. ஆசிரியர் பற்றாக்குறை:

செய்முறை மற்றும் தொழில்நுட்பத் திறன்கள், சுகாதாரமும் உடற்கல்வியும் மற்றும் அழகியல் கல்வி போன்ற பாடங்களைக் கற்பிப்பதற்கு ஆசிரியர் பற்றாக்குறையாக உள்ளனர். ஆங்கில மொழி மூலம் கற்பிக்கும் ஆசிரியர்கள் குறைவாக பாண்டித்தியம் உடையவர்களாக உள்ளனர்.

8. கற்பித்தல் முறைகள் நவீனமயமாக்கப்படவில்லை:

ஆசிரியர் மையமான கற்றல் கற்பித்தல் செயன்முறை பெரும்பாலும் பழைய கற்பித்தல் முறைகளையே பயன்படுத்தினர். செயற்பாட்டு ரீதியான கற்றல் அனுபவங்களை வழங்குவதற்கான முயற்சிகள் குறைவாக இருந்தது (NEC 2003 பக்கம் 42)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்கு, தெற்கு, வடமேற்கு மாகாணங் களைச் சேர்ந்த சில மாணவர்களே செய்முறைகளைப் பூரணப்படுத்தினர். (கருணாரட்ன 2003)

**மேற்படி தடைகளைத் தவிர்ப்பதற்காக பாடசாலை மட்டத்திலும் தேசிய மட்டத்திலும் மேற்கொள்ள வேண்டிய வழிமுறைகள்**

1. மாணவர் பெருந்தொகையைக் கொண்ட வகுப்பறை:

இவை பெரும்பாலும் நகர்ப்புறங்களில் சிறந்த அடைவு மட்டங்களைப் பெற்ற பாடசாலைகளிலே காணப்படும். தனவந்தர்கள், பாடசாலை நலன் விரும்பிகள், சிறந்த பெறுபேற்றைப் பெற்ற மாணவர்களின் பெற்றோர்கள் என்பவரிட மிருந்து பணத்தைப் பெற்றோ அல்லது அவர்களின் மூலமோ இடவசதி, காற்று, சூரியஒளி என்பன பெறக் கூடியதான பாட சாலைக் கட்டங்களைக் கட்டி எடுக்கலாம். தேசிய மட்டத்தில் அரசியல் தலைவர்கள், பாராளுமன்ற அங்கத்தவர்கள் கொடை வள்ளல்கள் மூலம் கட்டடம் கட்டுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம்.

2. பாடப் புத்தகம் குறைவு :-

வெளியிடப்பட்ட பாடப்புத்தகங்களை விரைவாகப் பெற நடவடிக்கைகளை பழைய மாணவர் சங்கம், நலன்விரும்பிகள் வாசகர் வட்டங்கள் மூலம் மேற்கொள்ளல்.

தேசிய ரீதியிலும் அலுவலக ரீதியிலும் பாராளுமன்ற அங்கத்தவர்கள் மூலமும் இதற்கான தீர்வை மேற்கொள்ளலாம்.

3. கல்வித்தகுதி குறைந்த ஆசிரியர்கள்

ஆசிரியர்களின் தகைமைகளை கூட்டுவதற்கான முயற்சிகளை பாடசாலை அதிபர்கள் விழிப்புணர்வுக் கூட்டங்கள், பெற்றோர் அதிபர் தொடர்பாடல்களின் மூலம் ஏற்படுத்தச் செய்யலாம்.

அரசாங்கம் பட்டப்பின்படிப்பு, கல்விமாணி போன்ற பரீட்சைகளில் மூலம் அதிகமான ஆசிரிய மாணவர்களை உருவாக்க முயற்சிகள் மேற்கொள்ள வேண்டும். தொழில் புரியும்போதே மேற்படிப்புகளை மேற்கொள்வதற்கான சந்தர்ப்பங்களை அளிக்க வேண்டும்.

4. சிறந்த மேற்பார்வை இல்லாதிருத்தல்.

பாடசாலையில் குழுவொன்றைத் தெரிவு செய்து அதன் மூலம் சிறந்த மேற்பார்வையை மேற்கொள்ளலாம். வலயத்தலைவர், பாடத்தலைவர்கள், வகுப்பாசிரியர்கள் என்பவர்களிடம் சிறப்பாக சேவை பெறுவதற்காக அவர்களுக்கு ஊக்குவிப்புக்களை வழங்க வேண்டும் வலய மேற்பார்வைகள் இறுக்கமான அமைய வேண்டும்.

அரசாங்கம் சிறந்த ஆசிரியர்கள், ஒழுக்கம் உள்ள மாணவர்கள், சிறந்த நிருவாகத் தினர்களுக்கும் ஊக்குவிப்புக்களை வழங்க முற்பட வேண்டும் அரசியல் குறுக்கீடுகள், தொழிற்சங்க நெருக்கடிகள் நீக்கப்பட வேண்டும்.

5. சுமையான கலைத்திட்டம்:

கலைத்திட்டத்தின் பரப்பளவைக் குறைக்க வேண்டும். பாடம், கற்பிக்கும் கால அளவைக் கூட்ட வேண்டும். தொழில் நுட்ப விஞ்ஞான தொழில்சார் கல்வியை கற்பிக்கும் ஆசிரியர்களைத் தோற்றுவிக்க வேண்டும். பயிற்சிகள் வழங்க வேண்டும்.

ஆய்வுகூடங்கள், வேலையறைகள், உபகரணங்கள், போன்றவற்றை பெற்றுக்கொடுக்க பெற்றோர்கள் தனவந்தர்கள் அரசியல் பிரமுகர்கள் உதவ வேண்டும். மாணவர்கள் பெற்றோர்கள் ஆகியோரிடம் தொழில்சார் துறை கல்விசார் துறையை விட குறைவானது என்ற வாறான மனப்பாங்கை நீக்கி அத்துறையைத் தெரிவு செய்யத்தூண்ட வேண்டும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. ஆசிரியர் பற்றாக்குறை

தொழில்நுட்பத்திறன்கள், தொடர்பாடல் தொழில் நுட்பம் போன்றவற்றில் ஆசிரியர்களை உருவாக்க வேண்டும். அல்லது அவர்களுக்குப் பயிற்சி அளிக்க வேண்டும். ஆங்கில மொழி மூலம் கற்பிக்கும் ஆசிரியர்களின் கல்வித் தகைமைகளைக் கூட்ட அரசாங்கம் உதவி செய்ய வேண்டும்.

7. கற்பித்தல் முறைகள்

மாணவர் மையக்கற்பித்தலை மேற்கொள்வதற்கும், செயற்பாட்டு முறைகற்பித்தலை மேற்கொள்வதற்கும் பிரச்சினைகளைத் தீர்த்தல் முறை, கண்டறி முறை நுண்முறைக் கற்பித்தல் முறை, அணிமுறைக் கற்பித்தல் முறை, சிந்தனைக்கிளறல் முறை நவீன, கற்பித்தல் முறைகளை மேற்கொள் வதற்கு பாடசாலையும், அரசும் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

**வெளிவாரியான வினைத்திறன்**

சமூகத்தேவைக்கும் கல்விக்கும் இடையில் காணப்படும் சிறந்த பொருத்தப்பாட்டை இது குறிக்கும். கல்விக்கும் தொழில் வாய்ப்புக்கும் இடையில் காணப்படும் ஒவ்வாமை அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் நீண்டகாலமாக இருந்து வருகின்றது. விடயப்பரப்பும் கற்பித்தல் முறையும் கல்விக்கும் தொழில் வாய்ப்புக்கும் இடையில் ஒவ்வாமைக்கும் காரணமாக அமைகிறது. இந்நிலைமைக்குப் பின்வரும் காரணங்கள் துணையாயமைந்தன.

1. மூன்றாம் நிலைக்கல்வியின் தேவைக்கு ஏற்றவாறு விசேடமாக விஞ்ஞான தொழில் நுட்பத்திறன்களை விரிவாக்கு வதற்கு வளர்ச்சி அடைந்து வரும் நாடுகளால் பெருந்தொகைப் பணத்தைச் செலவழிக்க முடிய வில்லை.

2. மூன்றாம் நிலைக்கல்வியை முடிக்கும் எல்லோரையும் பயனளிக்கும் வகையில் உற்பத்தித் துறையில் பங்காளராக்கிக் கொள்வதற்கு தொழில் வாய்ப்பை வழங்கமுடியாமை.

இக்காரணங்களால் அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் மூன்றாம் நிலைக்கல்வியில் மானிட சமூகவியல் துறையில் மட்டுமே விரிவாக்கம் ஏற்பட்டுள்ளது. தொழில்சார் தொழில் நுட்பத்துறைகளில் அத்தகைய விரிவு ஏற்படவில்லை. எனவே, தரமான கல்விமுறையில் பாதிப்பை ஏற்படுத்து வதாக அதாவது வெளிவாரி வினைத்திறன் அமைந்துள்ளது எனலாம்.

**2007 ஆம் ஆண்டிலிருந்து மேற் கொள்ளப்பட்டிருக்கும் தரமேம் பாட்டுத்திட்டங்கள்**

1. மாணவரின் திறன் தகவுகளைக் கலைத்திட்டத்தின் வாயிலாக மேம்படுத்தல்.
2. செயல்முறைகளை அடிப்படை யாகக் கொண்ட கற்றல்.
3. ஆக்கத்திறன், பிரச்சினை விடுவித்தல், சமூகத்திறன், கற்பனையாற்றல் முதலியவற்றை முன்னெடுத்தல்.
4. தேவையற்ற பளுக்களை அதிகரிக்காது பயனுள்ள அடிப்படைகளைக் கற்கச் செய்தல்
5. நெருக்கீடுகளை விடுவித்து பிள்ளை நேயச் சூழலை உருவாக்குதல்.
6. குழந்தை நட்புக் கற்றற் சூழலை ஏற்படுத்தல்.

**ஆரம்ப நிலைக் கலைத்திட்ட முன்னெடுப்புக்கள்**

1. முதன்மை நிலைகள் தொடரும்.
2. விளையாட்டுச் செயற்பாடுகளும், மேசை வேலைகளும் மேலும் வலிதாக்கப்படும்.
3. வகுப்பறைகள் மேலும் தரமுயர்த் தப்படும்.
4. முதலாம் வகுப்பிலிருந்து ஆங்கிலக் கல்வி வலிதாக்கப்படும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. ஆங்கிலக் கல்வி கணிதப்பாடத்துடன் இணைத்து விரிவாக்கப்படும்.
6. முதலாம் வகுப்பிலிருந்து தமிழ் பேசுவோருக்கு சிங்களப் பேச்சும், சிங்களம் பேசுவோருக்குத் தமிழும் அறிமுகமாகும்.
7. ஆரம்ப நிலையில் கணினி மற்றும் தகவல் தொழில்நுட்ப எண்ணக் கருக்கள் அறிமுகமாகும்.
8. பாடசாலை மேம்படுத்த தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் துணைவாசிப்பு நூல்கள் உருவாக்கப்படும்.

**6 ஆம் வகுப்பு முதல் 9ஆம் வகுப்பு வரை**

1. பொதுக் கலைத்திட்டம் தொடர்புபடும்.
2. ஆறாம் வகுப்பில் சுற்றாடற் கல்விக்குப் பதிலாக விஞ்ஞானம், வரலாறு, புவியியல், வாழ்க்கைத் தேர்ச்சிகள் முதலியவை தனிப்பாடங்களாகக் கற்பிக்கப்படும்.
3. செயற்றிட்டங்கள் ஒன்றிணைக்கப் படும்.
4. எல்லா இடைநிலைப் பாடசாலை களுக்கும் விஞ்ஞான ஆய்வுகூடம், செயற்பாட்டு அறை, நூலகம் முதலியவை வழங்கப்படும்.

**10 ஆம் 11 ஆம் வகுப்புக்கள்**

ஐந்து உள்ளீட்டுப் பாடங்களும் ஐந்து தெரிவுப்பாடங்களுமாக மொத்தம் பத்துப் பாடங்களைத் தெரிவு செய்தல் வேண்டும்.

1. உள்ளீட்டுப் பாடங்கள்.
   சமயம், சிங்களம், அல்லது தமிழ் மொழியும் இலக்கியமும், கணிதம், ஆங்கிலம், வரலாறு, விஞ்ஞானம் என்பன
2. தெரிவுப் பாடங்கள் ஐந்தினைப் பின்வரும் மூன்று தொகுதிகளில் இருந்தும் தெரிவு செய்தல் வேண்டும்.
3. தொகுதி ஒன்று பௌதிகவியல், இரசாயனவியல், உயிரியல், பொதுவிஞ்ஞானம், புவியியல், குடியியலும் ஆட்சியியலும்.
4. தொகுதி இரண்டு சித்திரம், நடனம், இசை, நாடகமும் அரங்கியலும், ஊடகமும் தொடர்பாடலும், இரண்டாம் மொழியாக மொழிகள்
5. தொகுதி மூன்று தகவல் தொழில் நுட்பம், விவசாயமும் கால்நடை வளர்ப்பும், வர்த்தகமும் கணக்கீட்டுக் கல்வியும், உயிர்வளத்தொழில்நுட்பம், கட்டுமானத் தொழில் நுட்பம், மின் மற்றும், இலத்திரன் தொழில் நுட்பம், கைவினை, வேக எழுத்து, விளையாட்டும் உடற்கல்வியும்.

1. தொகுதி ஒன்றில் மூன்றையும், ஏனையவற்றில் ஒவ்வொன்றையும் தெரிவு செய்யலாம்.
2. அல்லது தொகுதி ஒன்றில் இரண்டையும் ஏனைய தொகுதிகளை உள்ளடக்கி மூன்று பாடங்களையும் தெரிவு செய்யலாம்.

**12 ஆம் 13 ஆம் வகுப்புக்கள்**

1. மூன்று பாடஅமைப்பு தொடரும்.
2. பொது ஆங்கிலம் கட்டாய மாக்கப்படும்.
3. பொதுத் தகைமைப் பாடம் மேலும் திருத்தி அமைக்கப்படும்.
4. பொது தகவல் தொழில்நுட்பம் 12ஆம் வகுப்பில் தனியாகக் கற்பிக்கப்பட்டுப் பரீட்சிக்கப்படும்.
5. ஆங்கில மொழி மூலக் கற்கைகள் மேலும் விரிவாக்கப்படும்.
6. கலை, வர்த்தகம் கற்போருக்கு நவீன தொழில்நுட்பப் பாடங்கள் அறிமுகம் செய்யப்படும்.
7. க.பொ.த (உ.த) பரீட்சை முறையில் மாற்றங்கள், முதலாம் வினாத்தாள் இரண்டு மணிநேரமும் நாற்பது புள்ளிகளைக் கொண்ட தாகவும் இரண்டாம் வினாத்தாள் மூன்று மணிநேரமும் அறுபது புள்ளிகளைக் கொண்ட தாகவும் அமையும்.


உண்மையான பெரிய மனிதனுக்கு அடையாளம் பணிவாக இருத்தல்.
GTC
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ළමයා, අධ්‍යාපනය හා ගුරුවරයා

මොහමඩ් තුවාන් එම්.
සිංහල කථිකාචාර්ය,

පාසැල යනු උද්‍යානයකි. එහි මල් පැළැටි වනුයේ දරුවන් ය. කාලට වේලාවට නිසි ලෙස පොහොර, බෙහෙත් යොදා සුදුසු කල මල් පිබිදීම දක්වා උයන බලා ගන්නා උයන් පාලකයා වන්නේ ගුරුවරයා ය.

ඕනෑ ම රටක ජීවනාලිය බවට පත්වන්නේ එම රටේ අධ්‍යාපනයයි. අධ්‍යාපනයේ සමස්ථ අරමුණ වන්නේ ඉගෙන්වීම නොව ඉගෙනීම යි. ළමයා යනු සමාජයට ආගන්තුක සත්ත්වයෙන් වෙයි. දරුවා හෝ දැරිය අත්දැකීම් ලබාගැනීම ඇසුරෙන් ඉගෙනීම නිරායාසයෙන් සිදු කර ගනු ලබයි.




රටක අධ්‍යාපනය තුළින් අපේක්ෂිත ජාතික අරමුණු ඉටුකර ගනුවස් ගැලපෙන සේ එකී අරමුණු මල් / ඵල ගන්වා ගැනීමට අධ්‍යාපනයට සම්බන්ධ සෑම අංශයක් ම එකට අත්වැල් බැඳ ගත යුතුය. එහි දී ළමයා මෙකී කාර්යය සඳහා යොමු කරනු ලබන සෘජු මැදිහත්කරුවන් බවට පත්වන්නේ ගුරු භවතුන් බව සැබෑ ය.

ඉගෙන්වීම වෘත්තියක් වශයෙන් ලැළකිය යුතු වුව ද එය එක්තරා ආකාරයක පොදු සේවයකි. ඒ සඳහා ඇඩි උත්සාහයක් දරමින් නොකඩවා කර ගෙන යන අධ්‍යාපනයෙන් රැක පවත්නා විශේෂතා ඥානයක් විශේෂ දක්ෂතා රැසක් මෙකී මැදිහත්කරු වන ගුරුවරයා තුළ තිබිය යුතුය.

ගුරුවරයා විශේෂයෙන් ම තමා භාරයේ සිටින ශිෂ්‍ය ශිෂ්‍යාවන්ගේ අධ්‍යාපනය කෙරෙහි මෙන්ම සුභ සිද්ධිය කෙරෙහි පෞද්ගලික මෙන්ම සාමූහික වශයෙන් ද තමන් වගකීමට බැඳී සිටින බව පිළිබඳ හැඟීමක් ගුරුවරයා තුළ ඇති විය යුතුය.

ගුරුවරයා හා ශිෂ්‍යයා අතර පැවතිය යුත්තේ පිය පුතු සබඳතාවයකි. එකී සබඳතාවය බබළන්නේ එවිට ය. ගුරු ජීවිතයේ භූමිකාව සංස්කෘතිය ගුරුවරයා මැනවින් දත යුතුය.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


- ♣ දර්ශනය ♣ ආකල්ප
- ♣ අත්දැකීම් ♣ කැපවීම
- ♣ තෘප්තිය යන ලක්ෂණ දක්ෂ ගුරුවරයා දත යුතු මන්තර "ගුරුවරයා ජෝන්ට ලතින් ඉගෙන්වීමේ දී ගුරුවරයා ලතින් ගැන පමණක් නොව ජෝන් ගැන ද දත යුතුය." යන්න ගුරුවරයා සම්බන්ධයෙන් බෙහෙවින් වැදගත් වේ. ගුරුවරයා පිළිබඳව සෘජුව බොහෝ දෙනා කතා කරන්නේ විභාග ප්‍රතිඵල සම්බන්ධයෙනි. එහෙත් බොහෝ දෙනා කතා නොකරන සාධනීය ලක්ෂණය වන්නේ ආකල්ප හා කුසලතා සම්බන්ධයෙනි. ඒවා විභාග ප්‍රතිඵලට වඩා ජීවිතය හා බැඳී පවතින්නේ ය.

ගුරුවරයාගේ හූමිකාව

- විශ්ව ශක්තිය හඳුනා ගැනීම මතුකර ගැනීම, වර්ධනය සඳහා දැකිම් ලබා දීම.
- බුද්ධිමය ශක්තිය හඳුනා ගැනීම, පෝෂණය කිරීම, වර්ධනය කිරීම සඳහා අත්දැකීම් ලබා දීම.

ගුරුවරයෙකු ස්වකීය භූමිකාව රඟ දැක්වීමේ දී එය ශිෂ්‍යයාට බෙහෙවින් බලපාන අතර ගුරුවරයෙකු ශිෂ්‍යයෙකුට ආත්මිය හා සමාජ සංවර්ධනය ආදී පාති දෙකක් සඳහා උපකාරී විය යුතුය. දැනුම, සංකල්ප කුසලතා, චර්යා වෙනස්කම් ජීවිතයට එකතු වන්නේ ළමයාගේ ස්වයට අත්දැකීම් බවට ගුරුවරයා පත් කළ විටය. ඉගෙනීම හා ඉගැන්වීම යනු එම ක්‍රියාවලියයි. අධ්‍යාපනය ලෙස හඳුනා ගත්තේ මේ තුලින් ලබන පෝෂණයයි.

ශිෂ්‍යා හා ඉගෙනුම් ක්‍රියාවලිය රූප සටහනක් මගින් පෙන්විය හැකිය.




මේ සඳහා රජය, අධ්‍යාපන අමාත්‍යාංශය පොත්පත්, ගුරුවරු, දෙමාපියන් ආදී සෑම අංශයක්ම ශෂ්‍යයාගේ මේ කී ඉගෙනුම් කාර්යය සඳහා උපකාරී වන බව දත යුතුයි.

රටක සංවර්ධනයට බෙහෙවින් ම උපකාරී වන්නේ බුද්ධිමතුන්ගෙන් පිරවීම මත නොව ප්‍රඥාවන්තයින්ගෙන් පිරවීම තුළිනි. ප්‍රඥාවන්තයින් යනු විවිධ විෂය ක්ෂේත්‍රවල දැනුමක් තිබෙන කරුණාවෙන් මෛත්‍රීයෙන් හදවත් උතුරා යන ගුණයත්, ඥානයත් හෙබි පුද්ගලයින් ය.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

අවසාන වශයෙන් කිව යුතුව ඇත්තේ ළමයා අධ්‍යාපනය හා ගුරුවරයා අවියෝජනීය සම්බන්ධතාවයකින් බැඳී පවත්නා වූ සාධනීය තත්ත්වයන් බවයි.

අධ්‍යාපනය සම්බන්ධයෙන් 1235 කාලය තුළ දෙවන ලෝක යුධ සමයේ ජන රැඳවුම් කඳවුරක රැඳවියෙක් ඇසින් දුටු දේ ලියා පාසලේ දොරේ අලවා තිබුණේ මෙවැනි අදහසකි.

<u>ආදරනීය ගුරුතුමණී,</u>

මම මිනිසෙකුගේ ඇසින් නොදැකිය යුතු දේ දැක්කෙමි. නො ඇසිය යුතු දේ ඇසුවෙමි. වෛද්‍යවරුන්, පුහුණු හෙදියන් විෂ එන්නත කර බිළිඳුන් මරා දමනවා මම දැක්කෙමි. ඉංජිනේරුවරු, ගණිතඥයන් සරුණියන් දූෂණය කර මරා දමනවා මම දැක්කෙමි.

ගුරුතුමණී, මට අධ්‍යාපනය ගැන සැකයි.

ඔබ දරුවාට ගණිතය, විද්‍යාව ඉගෙන්මීමට පෙර සාහිත්‍යය උගන්වන්න. අවශ්‍යනම් පසුව ගණිතය, විද්‍යාව උගන්වන්න.

මෙයට,
ජනරැඳවුම් කඳවුරෙන් නිදහස් වූ
රැඳිවියක්

උගන්වන හැම මොහොතකම ගුරු සිසු සබඳතාවය හා නිසි එල ලබාගනුවස්, ළමයාගේ ශ්‍රවනයත් දෘශ්‍යයත් ඔබවෙත රඳවා ගන්න උත්සුක වන්න. එසේ නොවන්නේ නම් ඔබේ ඉගෙන්වීමෙන් එතරම් එලදායිත්ත්වයක් නොලැබෙන අතර, ළමයා එම පුරප්පාඩුව පිරිමසා ගැනීම සඳහා වියුෂත් පන්තිවලට යාම නම් නැවැත්විය නො හැක.

## சோலைக் கொல்லை பொம்மை

சோலைக் கொல்லை பொம்மையைப் பார்த்து ஒரு முறை நான் சொன்னேன். "இந்தத் தன்னந்தனி வயலில் நின்று கொண்டிருப்பதில் உனக்கு அலுத்துப் போய் இருக்கும்!"

அது சொன்னது, 'அச்சுறுத்துவதில் உள்ள மகிழ்ச்சி ஆழ்ந்தது. அது ஒரு போதும் தீராதது. அதனால் நான் எப்போதும் அலுத்துக் கொள்வதில்லை!

ஒரு நிமிடம் யோசித்த பின் நான் சொன்னேன் 'உண்மை, ஏனெனில் நானும் அந்த மகிழ்ச்சியை, அறிந்திருக்கிறேன்!'

அது சொன்னது 'வைக்கோலால் நிரப்பப்பட்டவர்களே அதனை அறிய முடியும்!'

அது என்னைப் பாராட்டியதா.........பரிகசித்ததா என்றறியாமல் நான் அதை விட்டுச் சென்றேன்.

ஒரு வருடம் சென்றது. அதற்குள் அந்தச் சோலைக் கொல்லை பொம்மை ஒரு தத்துவ ஞானியாய் மாறியிருந்தது.

நான் மீண்டும் அதைச் கடந்து சென்ற போது, இரு காகங்கள் அதன் தொப்பியின் கீழ் ஒரு கூடு கட்டுவதைப் பார்த்தேன்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# THE NEED OF BENCHMARKING PROCESS IN TEACHER EDUCATION INSTITUTIONS IN SRI LANKA

A.M.Jazeel
Lecturer

**Introduction:**

The teacher education institutions in Sri Lanka have, of late, been subject to a spectrum of criticisms over the quality of education and the training offered in these institutions. There are notable differences found among them in the administration, learning teaching process, and the method of evaluation albeit virtually a common curriculum is being pursued. The inconsistent national educational policy, rampant corruption, irregularities, and waste found among teacher education institutions and department of education, failure of employing tools for organizational development, and the inferior quality of academic staffer are some of the reasons attributed to this deplorable state of the teacher institutions.

The benchmarking process, a tool for continuous improvement and competitive advantage, which gained popularity in the global arena, is the one of the optimum tools to develop the teacher education institutions in Sri Lanka to achieve the real standard and excellence.

This paper deals with the need of bench marking process in teacher education institutions in Sri Lanka to provide a competitive and quality education and training to the teachers in service and the trainee teachers. The first segment discusses an overview of benchmarking process and its application in teacher education institutions, the second segment illustrates the reasons and the perceived benefits of benchmarking and the final segment delineates the ethical aspects of benchmarking.

**The overview of benchmarking process and its application in teacher education institutions**

Benchmarking has become a popular adopted procedure and is used to gain competitive advantages. The essence of it is the process of identifying the highest standards of excellence for products, service or processes and then making the improvements necessary to reach those standards, commonly called best practices, (Elmuti, D and Kathwala, Y.2003).

Though the buzzword "Benchmarking" was coined in late 1980, to mean applying of best practices necessarily to improve bottom line, Benchmarking was begun in the late 70s by Xerox Corporation. During this time, Xerox was losing market share and feeling a lot of pressure from its competitors. In an attempt to try and "get back into the game", Xerox decided to compare its operations to those of its competitors. After finding quality standard with which it compared itself, Xerox began one of the greatest trends in the business world today (McNair and Leibfried, 1992).



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Benchmarking is, in fact, a very structured process that consists of several steps to be taken. These steps are often provided for in a model. It is noted that even though the process is very structured, it should not add complexity to the process. According to "The Nuts and Bolts of Benchmarking" authored by Margaret Matters and Anne Evants (1997), there are five stages included that could be applied to Sri Lankan Teacher Education Institutions.

**1. Planning the exercise:**

*The teacher education institutions, in this stage, needs to identify the strategic intent of the institutions, obviously from their mission statement. The quality of education and training the teachers and the trainee teachers the country demands should be found out on a par with the global trend in teacher education.*

**2. Form the benchmarking team:**

*A bench marking team should be selected from among the staffers of the teacher educational institutions, preferably inclusive of the staff from Academic, Administration and Financial Units. They should be trained over the process of benchmarking and have a smooth co-ordination among them. The team could also be subdivided among themselves according to the work assigned for.*

**3. Collection of Data:**

*This involves gathering information on the best practice teacher education institutions and their performances. This step allows the institution to fully realize the extent of improvements available for the teacher education institution when it compares its own present process, the product and service.*

**4. Analysis of Data for Gaps:**

*This step identifies the gap between where the teacher education institution would like to be and where it actually is. The performance gaps and their possible causes could be identified.*

**5. Take Action:**

*This involves determining what needs to be done in the teacher education institution in order to match the best practices for the process. The changes need to implement as per the work plan prepared (Ibid).*

**The perceived benefits of benchmarking in teacher education institutions**

*The benchmarking process is of tremendous help to the grumbling teacher education institutions in Sri Lanka. The decision to begin benchmarking is valuable to any institution by opening up various ideas to processes, approaches, and concerns (Allen, 1997). The most significant benefits the benchmarking process offer to the teacher education institutions are as follows:*

*a. Increase the quality of education and training:*

*By breakthrough in thinking, the teacher trainees and the trainee teachers receive an ample of new opportunities available in the world with regard to teacher education. This will help increase the quality of the education and the training provided in the teacher education institutions in Sri Lanka.*

*b. An strategic tool for organizational development:*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Several tools are nowadays used for changing the organizational culture and the attitudes of the employees to be more competitive in the market. The tool of benchmarking functions as a change agent in the development of the teacher education institutions, its academic staff, the structure, and the administration.

c. An opportunity to make use of the modern technology in learning teaching process:
The teacher education institutions in this country still lack modern technologies. The lecture halls and the laboratories remain a place for conventional methodology in learning teaching process. Benchmarking process pave the way for rethinking of the resources available and integrating information technologies to enhance the learning teaching process.

d. A tool for assessment of performance:
Benchmarking process help the teacher education institution learn from best practices from other institutions so that they know where they really are and assess their own performance continuously. This will definitely give solutions to the problems identified for better improvement.

e. Opportunity for professionalism:
The staff, both academic and non academic will get opportunities to receive the professional training and education to improve their qualifications and experiences to be more professionalism in the award of training and services provided by them.

f. Eradication of irregularities, corruption and waste:
Most of the teacher education institutions seem to be rooted with the irregularities, rampant corruption and waste due to various reasons. The benchmarking process would help eradicate them from the education sector of the country to a greater extent and save a large sum of public fund.

**The ethical and legal aspects of benchmarking process in Sri Lankan teacher education institutions:**

The process of benchmarking in Sri Lankan teacher education institutions might encounter a string of ethical aspects. Since the most of them are governed by the department of education of the Government of Sri Lanka, the launching of benchmarking in their institution, the process of data collection and the analysis and of the taking action are subject to the law of the country. Thus, the responsibility of launching and regularizing the benchmarking process should be taken at top level of the government to ease the legal snags.

There involves the issues of the ethical aspects in gathering information of confidentiality and the role of the team engaged in the benchmarking process. The team might get to know the information of the institution and even get the personal credit for the changes and improvement.

**Conclusion:**

The benchmarking is a process which is adapted to best practices in the organization to improve to its productivity. This process provides ample opportunities and could be applied to the teacher education institutions through five sequential stages such as planning the





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

exercise, forming the benchmarking team, collect the data, analyze data for gap, and take action. As far as teacher education institutions are concerned, benchmarking process enhances the quality of the learning teaching process, the professionalism of service, the organizational development and the assessment of the performance. This process is expected to reduce the corruption and waste found in education sector to a considerable extent.

The teacher education institutions, such as national colleges of education, teachers colleges and the teachers centres found in Sri Lanka, if the benchmarking tool is used, will reach the status of the education par excellence and give a meaning to the dream of president "wonder of Asia" to a lot.

References:

1. Allen, S (1997) "Partners Benchmarking" http://www.benchmarking.co.uk/bmark.htm#partners.

2. Elmuti, D and Kanthawala, Y (2003) "An Overview of Benchmarking Process: A tool for continuous improvement and competitive advantage", Benchmarking for Quality Management & Technology: MCB University Press.

3. Mc Nair, C.J. and Leibfried, K.H.J. (1992), "Benchmarking: A tool for Continuous Improvement" Oliver write: Essex Juction.VT

## விருந்து என்றால் சும்மாவா...?

கஞ்சத்தனமான வீட்டிற்கு விடாக்கண்டன் விருந்தாளியாகச் சென்றான். அந்தக் கஞ்சன் ''நம்ப வீட்டுல சாப்பிடுன்னா சாப்பிடவா போறீங்க! எங்க வீட்டுல சாப்பிட்டு வந்திருப்பீங்க!;; என்றான். விடாக்கண்டன் ''நான் சாப்பிட்டுவிட்டேன் என்றாலும் நீங்க விடவா போறீங்க! உங்க வீட்டுல சாப்பிடாமல் விட மாட்டீர்கள்;; என்றான். கஞ்சனோ, ''அப்படியே சாப்பிட்டாலும் எங்க பசங்க கிட்டே ஆளுக்கு 10,20 தராம போக மாட்டீங்களே; என்றான். விடாக்கண்டன், ''உங்க பசங்க கவரிமான் ஆச்சே. மத்தவங்க கிட்டே ஒத்த பைசா வாங்கற மாதிரியா வளர்த்திருப்பீங்க! என்று ஒரு போடு போட்டான்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிள்ளை நேயப் பாடசாலை



ஏ.எம். பைசல்
விரிவுரையாளர், உடற்கல்வி நெறி

இப்பாடசாலையானது பிள்ளை நேசிக்கும் பாடசாலை என்றும், பிள்ளையை நேசிக்கும் பாடசாலை என்றும் கூறப்படுகிறது. இது பிள்ளையின் நட்புறவோடு அமைந்த பாடசாலையாகும். சிறுவர் உரிமைச் சாசனத்திற்கு அமைவாக சிறுவர் உரிமைகளை நிறைவேற்றுகின்ற பாடசாலையாகும்.

பிள்ளை நேயப்பாடசாலையானது பல சிறப்பம்சங்களைக் கொண்டிருப்பது அவசியமாகும்.

1. உரிமை அடிப்படையில் பிள்ளை முன்வருதல் அதாவது இடை விலகலைத் தடுப்பதற்கான பயன்மிக்க நுட்பங்களைப் பயன்படுத்தி பாடசாலைக்கு உள்வாங்கச் செய்வதன் மூலம் மதிப்பளிக்கச் செய்தல். மேலும் பிள்ளைகளை எல்லாச் செயற் பாடுகளிலும் சமமாக பங்கேற்கச் செய்தல் அத்துடன் உடல், உள, அவதூறுகளை தவிர்த்து பிள்ளையை துலங்கச் செய்தல். பாடசாலை சமூகம் சிறுவர் உரிமைச் சாசனங்களை விளங்கிச் செயற்படுதல்.

2. பால்நிலைத் துலங்கல் அதாவது சிறுவர் எல்லோருக்கும் ஆரம்பக் கல்வியை நிறைவு செய்வதற்கும், இரண்டாம் நிலைக் கல்விக்கு மாறுவதற்கும் சம சந்தர்ப்பம் வழங்குதல், ஆண், பெண் இரு பாலாரும் பாடசாலையில் எல்லாச் செயற்பாடுகளிலும் சமமாகப் பங்கெடுத்தல், பௌதீக வள வசதிகள் இரு பாலாருக்கும் பொருத்தமாக அமைதல்.

3. தரமான கற்றல் விளைவுகளை அதிகரிப்பதற்காக பிள்ளைகளுக்குத் தேவையான அறிவு, திறன்களை வழங்குதல், இங்கு அத்தியவசியக் கற்றல் தேர்ச்சிகள் ஒழுங்காக மதிப்பிடப்படுதல், பொருத்தமான பரிகாரக் கற்றல்களும் பயன்படுத்தாத பிள்ளை மையக் கற்பித்தல் முறை பயன்படுத்தல், போதுமான மனித வளங்களும் வகுப்பறை வசதிகளும் வழங்குதல், வகுப்பறைச் சூழல் அழுத்தமற்றதாகவும் ஜனநாயகத் தன்மையுடையதாகவும் இருத்தல், பாடவிதானம் சமூகச் சூழல், கலாசாரம் அறிவு என்பவற்றிற்கு பொருத்தமுடையதாகவிருத்தல். தமக்கு கிடைக்கும் சந்தர்ப் பத்தையும் சொந்த முயற்சியையும் பயன்படுத்தி ஆசிரியர்கள் தொடர்ச் சியாக தமது தகைமைகளை விருத்தி செய்து கொள்ளல்.

4. சுகாதாரம், பாதுகாப்பு மற்றும் சிறுவர்களுக்கு தற்காப்பு வழங்கல் இங்கு பாடசாலை மட்ட சுகாதார நடைமுறைகள், பாதுகாப்பு என்பன நடைமுறையில் இருத்தல் வேண்டும். பாடசாலைச் சூழல் சுத்தமாகவும் கவர்ச்சியாகவும் அமைந்திருத்தல், நீர், சுகாதார வசதிகள் போன்றன சிறப்பாகப் பேணப்படுதல், பொருத்தமான விளையாட்டு வசதிகள் பாவனையிலும் நல்ல பராமரிப் பிலும் இருத்தல், தேர்ச்சி அடைப் படையிலான சுகாதாரக் கல்வியை வினைத்திறனுள்ளதாக மாணவர்களுக்கு வழங்குதல், வினைத்திறனுடைய உள, ஆலோசனைக்காகவும், சமூக ஆதரவும் நடைமுறையில் இருத்தல். மேலும் அவசர





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலத்திற்கான ஆயத்த நிலைத்திட்டங்கள் நடைமுறையிலிருத்தல்..

5. பிள்ளை சமூகத்துடன் நெருக்கமாக இணைந்திருத்தல் அதாவது பாடசாலை அபிவிரு த்தித் திட்டமிடல் கருமங்களில் மாணவர், பெற்றோர், சமூகம் இணைந்து செயற்பட்டு பாட சாலை சுய மதிப்பீட்டில் ஈடுபடல். இத்திட்ட மானது அதிபர் ஆசிரியர், பெற்றோர் சமூகத்தின் பங்களிப் புடன் உருவாக்கப்படல். பாட சாலையில் திட்ட அமுலாக்கல் களை அதிபர், ஆசிரியர், மாணவர் இணைந்து செயற்படுத்தவும் கண்காணித்தலும் மதிப்பிடலும் மேலும் சிறுவர் நேய சமூகச் சூழலை வளப்படுத்த பாடசாலை உதவுதல்.

6. பிள்ளை நேயமுறைமை, கொள்கைள், பயிற்சிகள் பிரமாணங்களுக்கூடாக உதவுதல், அதாவது சிறுவர் நேயப் பாடசாலையை அங்கீகரிப்பதற்கு அரசக்கொள்கைகள், பிரமாணங்கள் நடைமுறைகள் என்பன உதவுதல் எல்லா மட்டத்திலும் இணைந்து செயற்படுதல். பொருத்தமான வளங்களை அதற்கேற்ப வெவ்வேறு மட்டங்களில் ஒதுக்குதல், மேலும் தரமான தொழில்நுட்ப உதவிகளை சகல மட்டத்திலும் வழங்குதல். கலைத்திட்டங்கள் பாடநூல், ஆசிரிய கைநூல் என்பன சிறுவர் நேயக் கொள்கைகளுடன் இணைந்து செயற்படல் போன்ற அம்சங்களை பூர்த்தி செய்யக்கூடிய பாடசாலையே பிள்ளை நேயப் பாடசாலை யெனக் கருத முடியும்.

# SECRET OF SUCCESS

**S. Selvakumar**
2nd Year, Primary

**A REPORTER ASKED A MANAGER**

**What is the secret of your success?**
**Two Words**

**What are they?**
**Right Decisions**

**And how do you make right decisions?**
**One Word**

**What is that?**
**Experience**
**And how do you get experience?**
**Two Words**

**What are they?**
**Wrong Decisions**

*உயருபவன், தன்னிலிருந்தே உயர்கின்றான்*
*தாழ்பவன், தன்னிலிருந்தே தாழ்கின்றான்*
*இலையுதிர்க் காலப் பனித்துளி,*
*வசந்த காலத் தென்றல்*
*எதனாலும் இடையூறு செய்யவே இயலாது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# முகலாய ஓவியம்

எம். எஸ். ஏ. அஸீஸ்
விரிவுரையாளர், உடற்கல்வி நெறி

ஆசியாவிலுள்ள வேறு எந்தக் கலைகளையும் பார்க்க முகலாய வர்ணக் கலையைப் பற்றி, கலை சம்பந்தப்பட்ட பல்வேறு கலை சிருஷ்டிகளையும் ஒப்பிட்டுப் பார்த்துப் படித்தவர்களிடையே தப்பான அபிப்பிராயம் நிலவி வந்தது. சிலகாலம் நகர்ந்த பின்னர் முகலாயக் கலையை ஒருவித பாரசீகவர்ணக் கலையைச் சார்ந்தது என அபிப்பிராயம் கொண்டிருந்தனர். இக்காலத்திலேயே இக்கலை ஏற்பட்டதாகவும் கருதுகின்றனர். முகலாயக் கலையை திறமான இரசிகத் தன்மையோடு உற்று நோக்குமிடத்து ஆசியாவின் கலாசாரத்தில் சிறந்தது, உயர்ந்தது என ஆணித்தரமாகக் கூறலாம்.

முகலாய ஓவியத்தில் மனித உருவம் வரைவது ஒரு பகுதி. இந்தியக்கலைப் படைப்பின் சரித்திரத்திலே முகலாய ஓவியம் ஓர் உயர்ந்த தானத்தை வகித்து வருகின்றது என்றால் ஒவ்வொரு முஸ்லிமும் பெருமிதமும் பூரிப்பும் அடைவதில் ஆச்சரியமின்றி சந்தோஷப்படுவர், இந்தியாவிலுள்ள ஹிந்து பௌத்த ஓவியங்களுடன் ஒப்பிட்டு நோக்குமிடத்து வித்தியாசங்கள் இதில் காணப்படுகின்றன. முகலாய கலையை ஊண் ஊட்டி, உயிர் கொடுத்து வளர்த்தவர்கள் இந்தியாவிலிருந்து வந்து குடியேறிய ஆளும் வர்க்கத்தினரும், மாட மாளிகைகளில் சல்லாப வாழ்வை உல்லாசமாக நடத்திய கலைஞர்களுமே ஆவார்கள். ஆளும் அரசர்களின் அபிலாசையைப் பூர்த்தி செய்ய இக்கலைஞர்கள் இக்கலையை சிருஷ்டிக்க வேண்டி இருந்தது. முகலாயக் கலையானது முஸ்லிம் சம்பிராயத்தை ஒட்டிய ஒரு கலை எனக் கூறலாம். இக்கலையைச் சிருஷ்டிப்பதற்கு அடிப்படையானவை இஸ்லாமிய இலக்கியங்களில் பொதிந்து கிடக்கும் அரிய கருத்துக்களே. இக்கருத்துக்களை கலைஞனின் சிந்தனைக்கு ஒப்ப தூரிகையினால் ஏட்டிலே தீட்டப்பட்டு பின் இவ்வோவியங்கள் அச்சு வாகனம் ஏறியிருக்குமென அறிய வருகிறது.

முகலாய சக்கரவரத்தி அக்பர் இவ்வர்ணக் கலைக்கு ஆதிகர்த்தா. வறுமையின் சூழலில் சிக்குண்டு வாடி வதங்கிய சிறந்த ஓவியர்களை தனது அரண்மனையில் அமர்த்தி இவர்கள் ஓவியம் தீட்டும் நேரமெல்லாம் இவ்வோவியங்களை இரசித்து வருவார். முகலாயக் கலையை வளர்க்கச் செல்வமெல்லாம் வாரி இறைத்தார். இதன் காரணமாக அழியாச் செல்வத்தை உருவாக்கினார். அக்பர் மறைந்தாலும் அவர் வளர்த்த கலை இன்றும் மங்காமல், மறை யாமல் உலகத்தின் பல திறப்பட்ட கலைஞர்கள் போற்றிக் கூறும் நிலையிலுள்ளது.


மதம் என்பது மனித முன்னேற்றத்திற்கு ஒருமிகப் பெரிய முட்டுக்கட்டை. GTC
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தியாவில் இந்தக் கலையானது ஆதிகாலம் துவக்கம் இருந்ததாக சரித்திர ஆராச்சியாளர் கூறுகின்றனர். உலகப் பிரசித்தி பெற்ற குகைச் சித்திரங்களான அஜந்தா, எல்லோரா, இலங்கையில் சிகிரியா போன்றவைகள் முதலாம் நூற்றாண்டிலிருந்து 7ம் நூற்றாண்டு வரையுள்ளன. இக்காலத்தில் இப்படியான ஆக்கவேலைகள் இந்நிலைக்கு வருவதற்கு எவ்வளவோ காலத்துக்கு முன்னே இக்கலை முன்னேற்றம் அடைந்திருந்தது.

முகலாயக் கலையானது மனிதப்பிம்பத்தை ஒட்டியுள்ளது. மனித உருவத்தையே அப்படியே தத்ரூபமாக பலவித தோற்றத்தில் வர்ணிக்கப்பட்டிருக்கிறது. அஜந்தாவின் முதலாம் குகையில் உள்ள போதிசத்துவத்தைக் காட்டும் தவக்கோலம் பூண்ட மனித உருவமானது மனித பிம்பத்தையே அடிப்படையாக வைத்து மிகவும் தெள்ளத் தெளிவாக தீட்டப்பட்டுள்ளது. ஆனால், இலக்கியக் கூற்றின் படி பௌத்த, ஹிந்துக் கலையானது பல வருடங்களாக கோயில் திருப்பணி சிருஷ்டிகளாக இருந்து வருகின்றன.

முகலாய சாம்ராஜ்யத்தின் தேச பிதாவாகிய துருக்கிய அரச குமாரனான பாபர் பாரசீகக் கலையிலும் பண்பிலும் ஊறித்திளைத்த ஒருவராவர். பாபர் அவர்கள் ஹீரத் என்னும் நகரத்துக்கு விஜயம் செய்த போது அந்நகரம் இஸ்லாமிய இலக்கியக்கலை வாழ்வில் மிகவும் உயர்ந்த நிலையடைந்திருந்ததைக் கண்டு அகமகிழ்ந்தார். இந்நகரத்தில் பீர்சாத் பாரசீக கலைஞர்களில் சிறந்தவர். இவரது புகழ் இந்நகரத்தில் மட்டுமன்றிப் பல திசைகளிலும் பரவியிருந்தது.

பாபர் தமது ஓய்வு நேரங்களில் ஈடுபட்டு இதன் உயர்வுக்காக செல்வத்தை வாரி இறைத்தார். ஆனால், அவரது புதல்வரான ஹுமாயூன் இந்தியாவை நீண்ட காலம் வரை ஆட்சி செலுத்த முடியாமல் போய்விட்டது. இதனால் இவர்களுக்குப் பின் பாரசீகக்கலை கீரத்தி பெற்று விளங்கியதாக சரித்திர ஆதாரங்கள் எதுவும் காணப்படவில்லை. இவரது காலத்தில் புகழ் வாய்ந்த பாரசீக சைத்திரிகளான மீர் சையத் அலி, காஜா அப்துஸ் ஸமது போன்றவர்களுடன் கூடிப்பழகும் வாய்ப்பும் வசதியும் இவருக்குக் கிடைத்தது. இக்கலைஞர்கள் இந்தியாவிலே பாராட்டப்பட்டவர்களாவார்கள்.

முகலாய குடும்பத்தில் அக்பர் தான் மாபெரும் சக்கரவர்த்தியாவார். தமது பதின்மூன்றாம் வயதில் (1556) தந்தையின் வாரிசு ஆனார். தன்னுடைய இராணுவ, அரசியல் திறமையாலும் பரந்த மனப்பான்மையாலும் ஐம்பது வருட ஆட்சிக் காலத்தில் ஒருவித ஹிந்து முகலாய கலப்புள்ள நாகரிகத்தை ஏற்படுத்தி வெற்றி கண்டார். இவருக்குப் பின் ஆட்சி பீடம் ஏறியவர் இவருடைய ஹிந்து மனைவியான ராஜபுத்திர அரசகுமாரியின் மகனான ஜஹாங்கீர் எனப்படுபவராவார்.

அக்பரது கலைஞர்களுக்கு கலையை விருத்தி செய்வதற்கு பல வழிகள் இருந்தன. அக்பர் சக்கரவரத்தி தனது வாலிபப் பிராயத்தில் சித்திரக்கலையில் பயிற்சி பெற்றார். அவர் தமது நூல் நிலையத்தில் பல அரிய பாரசீக ஏடுகளைத் திரட்டி வைத்தார். இவ்வாறு கலை ரசனையும்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆர்வமும் உள்ள அக்பர் தமது அரண்மனையில் இருக்கும் கலைஞர் களுக்கு தங்கள் கலையை விருத்தி செய்ய வழி வகுத்துக் கொடுத்ததில் ஆச்சரியமில்லை. அரண்மனையில் வாழ்ந்த கலைஞர்கள் பாரசீக இந்தியப் பெருங் களஞ்சியங்களைப் பார்த்து மாதிரி ஏடுகளைத் தயாரிப்பதற்கு பலவாறு கலைஞர்களைத் தூண்டி இருக்கிறார். தம்முடைய மூதாதை களைப் பற்றியும், அவர்கள் வாழ்க்கையைச் சித்தரிக்கும் சரித்திர நூல்களைத் திரட்டுவதிலும் பாடு பட்டார். இதைவிட அவர் காலத்தில் வாழ்ந்த மகான்களின் படங்களைத் திரட்டி ஒரு புத்தக ரூபமாக்கினார், மிருகங்களைப் பற்றி வர்ணிக்கப்பட்ட புத்தகங்களைச் சேகரித்தும் வைத்தார்.

அக்பர் ஆட்சியைச் சித்தரிக்கும் நூல்களிலே வரும் வர்ணச் சித்திரங்களில் அவருடைய அரண் மனையையும் படைகளையும் படம் பிடித்து தத்ரூபமாக வர்ணித்திருக் கிறார்கள். சில சிறிய சித்திரங்களில் அக்பரை உயிர் ஓவியமாக சித்தரித்துள் ளார்கள். மிருகங்களைச் சித்தரிக்கும் ஓவியங்களில் நாம் அறிவது என்னவென்றால் முகலாயர்கள் மிருகங்களிடத்தில் எவ்வளவு அன்பு பாராட்டி இருக்கிறார்கள் என்பது தான்.

சமய ஆசிரியர்களையும் (ஆலீம்கள்) கூட்டம் கூட்டமாக பக்கீர்கள் இருக்கும் காட்சியினையும் கமக்காரர்கள் வயலில் உழும் காட்சிகளையும், சிற்பிகள் சிற்பம் செதுக்குவதையும் கட்டடக் கலைஞர்கள் கட்டடம் கட்டுவதையும், இடையர்கள் மந்தை மேய்ப்பதையும் தீட்டியுள்ள சித்திரங்கள் கீர்த்தி வாய்ந்தவைகள். முகலாயச் சித்திரங்களில் அநேகமாக மாடமாளி கைகளையும், அரண்மனை களையும், கூடாரங்களையும் ஆங்காங்கே அந்தப்புரங்களில் வசித்த சேவர்களையும் சங்கீத வித்துவான் களையும் நடன ராணிகளையும் மல்யுத்த வீரர்களையும் நாம் காணலாம். ஏறக்குறைய நூற்றைம்பதுக்கு மேற்பட்ட ஓவியக் கலைஞர்கள் அக்பரது அரண் மனையில் வாழ்ந்தார்கள். சாதித்துவேசம் காட்டாது கலை என்ற போர்வை பூண்ட கலைஞர்களுக்கு கலையை வளர்க்க உதவியுள்ளார் அக்பர் என்பது நமக்குத் தெள்ளத் தெளிவாக விளங்குகின்றது. அக்பரது சரித்திர நூலான (ABU 'L FAZIL) அபுல் பசில் இக்கலை ஞர்களின் கலைப் பெருமையைப் போற்றுகின்றது.

**"தான் செய்த உதவியைச் சொல்லிக்காட்டுபவனும் பெற் றோரின் கட்டளைக்குக் கீழ் படியாதவனும், சதா குடிப்பவனும் சொர்க்கம் புகுவதில்லை" - அண்ணல் நபி.**

1957ம் ஆண்டு கலையமுதத்தில் விரிவுரையாளர் மர்ஹூம்எம்.எஸ்.ஏ. ஆஸீஸால் எழுதப்பட்ட இக்கட்டுரை அன்னாரின் நினைவாக மீள்பிரசுரம் nraaggLfpJ . - *இதழாசிரியன்* -





அச்சத்திற்கு மருந்தில்லை.

GTC

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்றையக் கல்வியும் மனித விழுமியங்களும்

பெ. பிரேம்குமார்
விடுகை வருடம், ஆரம்பநெறி

இன்றைய நடைமுறையில் கல்வி அறிவற்ற ஒரு வாழ்க்கையைப் பற்றி கற்பனை செய்து பார்த்தலென்பது மிக கஷ்டமான ஒரு விடயம் என்பது புரியும். ஒவ்வொரு நாளையும் கடத்துவதுதென்பது அறிவுடன் சார்ந்த விடயமாக இருக்கிறது. இதில் எந்தவொரு மனிதனும் விதிவிலக்காக முடியாது. ஏனென்றால் இன்று அடிமட்ட தொழிலாளி கூட நவீன வசதிகளுடன் கூடிய தொலை பேசியோடு உலாப்போகிறான். இன்றைய அவசர உலகில் ஒருவருடன் ஆர அமர இருந்து பேசுவதற்கு நேரமில்லை காலம் மிகவும் விலை உயர்ந்து போய் விட்டது.

முன்பெல்லாம் ஒரு விலாசத்தை கண்டுபிடிக்க பாதையில் நடமாடித் திரியும் எவரிடமேனும் விசாரித்தால் அவர் அவ்விலாசத்தைக் கண்டுபிடிக்க ஏதேனும் ஒரு வகையில் உதவுவார். ஆனால் இன்றைய நிலைமை அவ்வாறில்லை. முற்றிலும் மாறி விட்டது. அப்படியே உதவி கிடைக்கும் பட்சத்தில் கூட அது எந்தளவுக்கு எம்மிடம் இருக்கும் பொருளுக்கும் முக்கியமாக எம் உயிருக்கும் பாதுகாப்பாக அமையும் என்பது சற்று சந்தேகம் தான். எதனாலென்றால் அந்தளவுக்கு மனித நேயம் சீர் கெட்டு அறிவை வளர்த்துக் கொள்ள வேண்டியதுடன் அதனைக் கொண்டு தமது அலுவல்களை (அனைத்தையும் அல்ல) சுயமாக நிறைவேற்ற முனைதலானது காலத்தின் தேவையாகும்.

இன்று தனிமனிதன் தொட்டு நாடு, உலகம் என்று செல்கையில் அதன் வளர்ச்சியின் பின்னால் இருப்பது கல்வி தான். கல்வியானது மாறி வரும் சமூக அமைப்பிற்கேற்ப ஒவ்வொரு காலப் பகுதியிலும் நிறைய மாற்றங்களுக்கு உள்ளாகி தற்போது பாரிய முன்னேற்றம் கண்டிருப்பதானது வரவேற்கத்தக்க நிகழ்வாகும். விஞ்ஞானம், அறிவியல், மருத்துவம், போக்குவரத்து, தொடர்பாடல் என்று ஒவ்வொரு துறையிலும் புகுந்து தனது முழுப் பங்களிப்பை வழங்கிய வண்ணமுள்ளது. இருந்த போதிலும் இந்த கல்வியினது வளர்ச்சி உண்மையானது தானா என ஆழமாக சிந்திக்கையில் தற்போதுள்ள கல்வியானது சடப்பொருட் களுடன் கூடிய ஒரு துறை சார்ந்த வளர்ச்சியை மட்டுமே காட்டி நிற்கின்றது. அதனை புரிகின்ற அல்லது அப்பணியில் ஈடுபடுகின்ற மனிதர்களின் உளமானது உலகைப் போசிக்கக் கூடிய (சமூகச் சூழல், உயிரியற் சூழல், பௌதீகச் சூழல்) விதத்தில் அமையவில்லை என்பது தெளிவு. இதற்கு சில உதாரணங்களை கொள்ளலாம். உலக வெப்பமயமாக்கல், மனித உரிமை மீறல், இன வன்முறை, தீவிரவாதம் இப்படி அடுக்கிக் கொண்டே போகலாம்.

அப்படி கல்வி உண்மையான வளர்ச்சியை கண்டிருக்குமாயின் மேற்சொன்ன உதாரணங்களுக்கு இன்று இடமில்லாமல் அல்லவா போயிருக்கும். இது வளர்முக நாடாக இருந்தாலும் வளர்ச்சியடைந்த வல்லரசாக இருந்தாலும் அனைத்து நாட்டுக்கும் பொருந்தும்.

எனவே தான் இதன் தாற் பரியத்தை உணர்ந்து கல்வித்துறை சார்ந்தோர் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வதன் ஊடாக ஒரு மாற்றத்தினை கொண்டு வந்து வன்முறை, படுகொலைகள் அற்ற சமாதான உலகை ஏற்படுத்த வேண்டியது கல்வியின் முன்னால் உள்ள மிக முக்கிய சவால்.





எப்போதும் அச்சத்தில் இருப்பதைவிட ஆபத்தை ஒருமுறை சந்திப்பதே மேல்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகவே அம்மாற்றத்தின் தேவை குறித்து தெளிவுபடுத்துவதே இக் கட்டுரையின் நோக்கமாகும்.

இலங்கையை பொருத்தமட்டில் இலங்கையில் முறை சார், முறை சாரா, முறையில் என்ற துறைரீதியிலான கல்வி நடைமுறையிலுள்ளது என்பதை இத்துறை சார்ந்த அனைவரும் அறிவர். ஒவ்வொரு துறைசார் கல்வியிலும் அவற்றின் தேவைக்கேற்ப கற்பித்தல் உபகரணங்கள் பயன்படுத்தப்படுகின்றன. மேற் குறிப்பிட்ட மூன்று துறைசார் கல்வியிலும் முறை சார்ந்த கல்வியானது பாரம்பரியமாக ஒவ்வொரு நாட்டிலும் இன்று வரையில் நடைமுறையில் உள்ள ஓர் அம்சமாகும். பிள்ளை ஆரம்பக் கல்வியிலிருந்து தனது பயணத்தை இங்கே தான் ஆரம்பிக்கிறான். எனவே முறைசார் துறையின் நிறுவனமாக தொழிற்படும் பாடசாலைகளுக்கு அப் பிள்ளையின் கல்வி தொடர்பான வளர்ச்சியில் பாரிய பங்குண்டு என்பதை மறுதலிக்க முடியாது.

இதன் காரணமாக ஒவ்வொரு பாடசாலையும் தனது நிறுவனத்தில் இணைந்து கொள்ளும் மாணவர்களை அங்கே கற்பிக்கும் பாடங்களில் சிறந்த புள்ளிகளைப் பெற வைப்பதில் பின்னிற்காமல் தன்னாலான அத்தனை வழிமுறைகளையும் கையாண்டு இறுதியில் (க.பொ.த சா/த, உ/த) சிறந்த பெறுபேறுகளை அடையச் செய்வதில் வெற்றியடைகின்றது. அதனைத் தொடர்ந்து அம்மாணவன் தன் உயர் கல்வியை மேற்கொண்டு அதிலும் சிறந்த பேறுகளைப் பெற்று பொறியியலாளர், வைத்தியர், முகாமையாளர்,கணக்காளர் இப்படி ஏதேனும் துறை சார்ந்த அறிவின் மூலம் பாண்டித்தியம் அடைகின்றான். பின் தமது துறைக்கேற்ப தொழிலைப் பெற்று சமூதாயத்தில் உரிய அந்தஸ்த்துடன் வாழ்க்கை நடத்துகிறான்.

இவனது வளர்ச்சியில் ஆசிரியரின் பங்கை நிச்சயமாக மறந்து விட முடியாது. தமது சேவை மூலம் வழங்கிய பங்களிப்புக்கு எல்லா மட்டங்களில் இருந்தும் பாராட்டைப் பெறுவார். ஆனால் இது ஆசிரியரின் உண்மையான வெற்றியை உணர்த்துவதில்லை.

இதை மாணவரில் ஒரு பகுதியின் முன்னேற்றத்தை மாத்திரம் வெளிப்படுத்தும் நிகழ்வாகவே பார்க்க முடிகிறது. மாறாக சமூகத்தில் சாதாரண தொழிலொன்றில் ஈடுபடுகின்ற ஒருவராக இருந்த போதிலும் ஒருவர் சமூகத்தில் சிறந்த விழுமியங்களை வெளிப்படுத்துவதில் ஆவலுடன் செயற்படுபவராக இருக்கின்ற நிலைமையே கல்வியின் முன்னேற்றம் பற்றிய மாற்றமாக கொள்ள முடியும்.

தன்னிடம் கற்கும் பிள்ளைகளை ஆசிரியராகவோ, வைத்தியராகவோ அல்லது பொறியியலாளராகவோ வளர்த்து விடுவதற்கு முன்பதாகவே அவர்களை சிறந்த மனிதர்களாக உருவாக்குவதற்கு முயற்சிக்க வேண்டும். இது சிரமமானதும் சவாலான துமான ஒரு பணி என்பதை மறுப்பதற்கு இல்லை. இருந்த போதிலும் ஆசிரியரின் உண்மையான வெற்றியானது இவற்றை ஏற்படுத்துவதில் தான் தங்கியுள்ளது. என்பதானது வெளிப்படையான உண்மையாகும் அத்தோடு இதனை ஏற்படுத்த முயற்சிப்பது ஒவ்வொரு ஆசிரியரின் கடமையும் கூட.

இன்றைய கல்வி முறையின் கீழ் ஒவ்வொரு துறை ரீதியாகவும் மிகச் சிறந்த கல்விமான்கள் உருவாகிறார்கள். எதிர்காலத்திலும் உருவாகுவார்கள் இது தொடர்ந்து நிகழ்ந்து வரும் விடயம் ஆனால்,அவர்களிடம் நல்ல விழுமியங்களை வெளிப்படுத்துவோர் சிலராகத் தான் இருப்பார்கள். இன்று நன்றாக கற்றவர்களில் எத்தனைப் பேர் போக்குவரத்து விதிமுறைகளைக் கடைப்படிக்கின்றார்கள்? எத்தனைப் பேர் இயற்கைச் சுற்றாடலை







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதிக்காத விதத்தில் செயற்படுகிறார்கள்? எத்தனைப் பேர் தமக்குவழங்கப்பட்ட பதவிகளை துஷ்பிரயோகம் செய்யாமலும் பொது உடமைகளை தமது சொந்த தேவைகளுக்கு பயன்படுத்தாதிருக்கிறார்கள்? இப்படி எத்தனை எத்தனையோ! இவை யாவும் எவற்றை காட்டுகிறதென்றால் ஆசிரியர்களின் இயலாமையை அதாவது "கற்க கசடற கற்றவை கற்ற பின் நிற்க அதற்கு தக" என்ற படி ஒழுக்கம் பற்றி வகுப்பறைகளில் மாணவர்களுக்கு கற்பிக்கப்படுகின்ற போதிலும் அவை வாழ்க்கையில் கடைப்பிடிக்கப்படுகின்ற வகையில் கற்பித்தல் அமையவில்லை என்பதோடு, கணிப்பீடும் மதிப்பீடும் மாணவர்களின் அறிவை சோதிப்பதாக மாத்திரம் அமைவதனால் அங்கே மனப்பாங்குகளை அறிவதற்கான எந்த முன்னெடுப்புகளும் மேற்கொள்ளப்படுவதாக தெரியவில்லை. எனவே இக் கல்வியானது மாணவர்களது எதிர்கால வாழ்க்கையை பற்றியோ, நாட்டின் தேசிய குறிக்கோள்களை பற்றியோ, கருத்தில் கொள்ளவில்லை என்பதனையே எடுத்துக் காட்டுகிறது. கற்றலின் பின் மாணவர்கள் அவற்றிற்கு ஏற்றாற் போல் சார்பான மனவெழுச்சியை வெளிப்படுத்த செய்வதே ஆசிரியரின் பணியாகும். இதுவே மாணவரில் கற்றல் இடம் பெற்றிருப்பதை அறிய தரும் சான்றாகும். ஒரு சிறந்த சமுதாய நல் வாழ்வுககான ஆரம்பம் அதுவாகத் தான் இருக்க முடியும்.

எனவே, இதனை கருத்திற் கொண்டே தான் ஒவ்வொரு நாடும் தமக்கு உசிதமானதாக கருதுபவற்றை கொண்டு தேசிய குறிக்கோள்களை உருவாக்கி அக் குறிக்கோள்களை போஷிக்கும் வகையில் தமது கல்வி முறைகளை கட்டமைத்து நடைமுறைப் படுத்துகின்றன.

இலங்கையிலும் *1980* காலப் பகுதிக்கு பின் இடம் பெற்ற அசாதாரண நிலைமைகளைத் தொடர்ந்து அவ் அசாதாரண நிலைமை தொடர்பாக ஆராய்ந்து அதன் பின் தேசியக் குறிக்கோள்களை ஏற்படுத்தி அதன் நிமித்தமாக கல்வி மறுசீரமைப்புகள் மேற்கொள்ளப்பட்டு நடைமுறைப் படுத்தப்பட்டு வருகிறது. நாட்டிலுள்ள அனைத்து மக்களும் சமாதானத்துடன் ஜனநாயக முறையில் தமது உரிமைகளை அனுபவிக்கும் பொருட்டே தேசியக் குறிக்கோள்களில் இவை தொடர்பான அம்சங்கள் சேர்க்கப்பட்டுள்ளன. ஆனால் அவ்வாறான வாழ்க்கை இன்னும் எத்தனை வருடங்களில் அடையப்படும் என்பதனை திட்டவட்டமாக கூற முடியாதிருக்கின்றது.

தற்போதுள்ள தேசியக் குறிக் கோள்கள் எட்டையும் மிக நுணுகி ஆராய்வோமானால் அவற்றிலே சமாதானம், தேசிய ஒற்றுமை, இணக்கம், மனித உரிமைகளை மதித்தல், ஜனநாயக வாழ்க்கை முறை, மனித விழுமியங்களுக்கு மதிப்பளித்தல் இப்படியான மனிதர்களுக் கிடையிலான வாழ்க்கை சம்பந்தப்பட்ட விடயங்களை உள்ளடக்கியதாகவே காணப் படுகின்றது. எனவே, ஒருவரது வாழ்க்கை மற்றவரது வாழ்க்கைக்கு எந்த தடையாகவும் அமையாமல் தனக்குள்ள அத்தனை சுதந்திரமும் ஏனையோருக்கும் உண்டென் பதை கருத்திற் கொண்டு செய்ற்படக்கூடிய எதிர்கால மாணவ சந்ததியினரை உருவாக்கும் பணி ஆசிரியரைச் சார்ந்தது. இதனை அனைத்து ஆசிரியர்களும் தனக்கு முன்னுள்ள சவாலாகக் கருதி தமது கற்பித்தலின் போது மாணவர்களின் விழுமிய மனப்பாங்கில் கவனஞ் செலுத்தி ஒழுக்கமும் நற்பண்புகளும் அவர்களிடத்தில் மேன்மையுற செய்ய வேண்டியது. ஆசிரியர்களின் தலை யாய கடமையாகும். அது மட்டுமன்றி இயற்கையாகவும் செயற்கையாகவும் சில சந்தர்ப்பங்களை ஏற்படுத்தி மாணவர்களின் மனப்பாங்கு





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாற்றத்தை மதிப்பீடு செய்து அவை தொடர்பாக மேலும் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் பற்றி பாடசாலைகள் புத்திசாதுரியத்துடன் செயற்பட வேண்டியது கட்டாய தேவையாகும்.

இவ் விடயத்தில் ஆசிரியர்கள் தம்மை முழுமையாக அர்ப்பணம் செய்தல் இன்றியமையாத ஒன்றாகும். முக்கியமாக ஆரம்பக் கல்வி ஆசிரியர்கள் அதைத் தொடர்ந்து சமயப் பாடத்துக்கு பொறுப்பான ஆசிரியர்கள், இவ்வாசிரியர்கள் தங்களது நடை, உடை, பாவனை என்பவற்றில் எந்நேரமும் கவனத்துடன் செயற்பட வேண்டியதும் அவசியமான ஒன்று.

எனவே, இவ் விடயத்தில் அனைத்து கல்வி நிறுவனங்களும் தீர்க்கதரிசனத்துடன் செயற்பட வேண்டியதுடன், மேற்கொள்ள வேண்டிய திருத்தங்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு இவ்விடயத்ததில் வழங்கக்கூடிய ஆலோச னைகளை ஏனைய வசதி ஏற்பாடுகள் என்பவற்றை ஏற்படுத்துவதோடு மட்டுமன்றி பாடசாலை செயற்பாடுகளை தனது பூரண கண்கானிப்பில் வைத்திருப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். மேலும், தனியார் வகுப்புகளின் செயற்பாடுகள் குறித்து தெளிவான அவதானத்தை செலுத்துவது வரவேற்கக் கூடிய விடயமாகும். ஏனெனில் இன்றைய கல்வியில் தனியார் வகுப்புகளின் ஆதிக்கம் முக்கிய இடத்தை வகிக்கிறது என்பதை மறந்து விடுவதற்கில்லை.

ஆகவே, இன்றைய உலகில் கல்வியை பெறுவதற்கு எத்தனையோ வழிகள் இருந்த போதிலும் அவை அடுத்தவருடன் கரிசனையாக செயற்படுவதற்கான போதிய பங்களிப்பை வழங்கவில்லை. மனிதன் மனிதனை மதிக்க வேண்டும். அடுத்தவர் பால் அக்கறை கொள்ளல் வேண்டும். ஒழுக்கத்தை இயல்பாகவே கடைப்பிடிக்க வேணடும். அவ்வாறில்லை எனில் அவர் எப்பேர் பெற்ற புத்திஜீவியாக இருந்தாலும் பயன் என்ன?

இதைத் தான் திருவள்ளுவர் மிக அழகாக சொன்னார் **"உலகம் ஒட்ட ஒழுகல் பல கற்றும் கல்லார் அறிவிலார்"** என்று. எனவே, கல்வி என்பது எல்லோரையும் போஷித்து வாழ்தலுடன் இயற்கையையும் நேசிக்க பழகிக் கொள்ள வேண்டும். அவ்வாறு நிகழும் பட்சத்திலே கல்வியின் பணி முழுமையடையும்.

இலங்கையை பொருத்தவரை அண்மைய நாடுகளுடன் கல்வியில் சமனான முன்னேற்றத்தை காட்டி வரும் நாடாக விளங்குவதுடன் சிறந்த எழுத்தறிவு வீதத்தை கொண்டுள்ள தென்பது பெருமை தரும் விடயமாகும். ஆகவே உலக நாடுகளுக்கு உதாரண நாடாக விளங்க எல்லா நாடுகளிலும் இல்லாத கல்வியுடன் கூடிய மனித விழுமியங்களை நாங்களேனும் வெளிப்படுத்துவோமாக.

**அம்மா**

**''மம்'' என்று கூப்பிட்டான்**
**சிறுவன். அம்மா உடனே**
**''ஏண்டா 'மம்மி' ன்னு**
**கூப்பிடறத சுருக்குறே. சரி..**
**சின்னம்மாவ எப்படி**
**கூப்பிடுவே?'' என்றாள்.**
**''மினிமம்'' என்றான். ''அப்ப**
**பெரியம்மாவ எப்படி கூப்பிடுவே?**
**'' என்றாள் அம்மா,**
**''மேக்சிமம்'' என்றான்**
**குறும்புக்கார சிறுவன்.**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மாணவர் கல்வி வளர்ச்சியில் சைவ சமயத்தின் பங்களிப்பு

ஆறுமுகம் சரவணகுமார்
விடுகை வருடம், உடற்கல்வி நெறி

ஒவ்வொரு எண்ணங்களும் தடம் பதிக்கும் வாழ்க்கையை நெறிப்படுத்துகின்றது. சித்திரத்தின் வடிவம் சித்தரிப்பவன் கையிலேயே உள்ளது. விதிகளின் செயல்கள் விதிப்பவன் கையிலேயே உள்ளது. வாழ்க்கையின் தத்துவங்களை வாழ்பவனே உணர்வான். அத்தகைய தத்துவ கருத்துக்களை தந்து மனித வாழ்க்கையை அவனை நெறிப்படுத்துவது மதங்கள் ஆகும்.

ஒவ்வொரு மனிதனுடனும் பின்னி பிணைந்த மதங்கள் மாணவனின் கல்வி வளர்ச்சியிலும் தனது ஆதிக்கத்தை கொடுக்க மறக்கவில்லை. பொதுவாக மாணவர் கல்வி வளர்ச்சியில் வழிப்பாட்டு முறைகள், காலை நேர இறைவழிபாடு போன்றவை மாணவரின் கல்வி வளர்ச்சியோடு, ஒன்றித்து மாணவரை நெறிப்படுத்துகின்றது. குறிப்பாக காலை இறைவணக்கம், இறை சிந்தனை போன்றவை மன ஒருமைப்பாட்டோடு இயங்க வழிவகுக்கும். பொதுவாக பார்க்கும் போது சைவ பாடப்பரப்பிலே மாணவ மையக் கல்வி முறையோடு அவனது வாழ்க்கை அனுபவங்களை போதிக்கின்றது. குறிப்பாக பஞ்ச புராணங்களான தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப் பல்லாண்டு, பெரியபுராணம் போன்றவை மாணவர்களை சைவத்தின் பாற் ஈர்ப்பதோடு அவனது சிந்தனைகளைக் கிளரி அறிவுக்கும், வாழ்க்கைக்கும் வழிப்படுத் துகிறது.

சைவ சமய வரலாற்றில் நாயன்மார் களையும், ஆழ்வார்களையும் பற்றி அறிந்து கொள்ளும் அவர்கள் இறைவனை வழிபடும் முறைகளையும் அவர்கள் இறைவனோடு வைத்த பக்தியினையும் அதனால் அடைந்த முக்தியினையும் உணர்வதோடு இறை நம்பிக்கையினையும் அவ் இறைவனை அடையும் பக்தி மார்க்கத்தினையும் கற்றுக் கொள்கின்றான். எனவே, இம் மார்க்கங்களை கற்பிப்பதன் மூலம் தன்னை அறியாமலே மாணவன் நல்வழிப்படுத்தப் படுகின்றான்.

"இசையால் வசமாகா
இதயம் ஏது............"

எனும் கோட்பாட்டுக்கமைய இன்றைய கல்வித் திட்டத்தில் சங்கீதம் எனும் பாடம் கற்பிக்கப்படுகின்றது. இவ் சங்கீத கல்வியானது மனதை ஒரு நிலைப்படுத்தி உள்ளத்தையும் உணர்வுகளையும் ஒரு நிலைப்படுத்த உதவிபுரிகின்றது.

அதிகமான தோத்திரங்கள், கீர்த்தனைகள் போன்றவற்றை போதிப்பதன் மூலம் இறை நம்பிக்கை அதிகரிக்கின்றது. பாடசாலை வாழ்க்கையில் கல்விச் சுற்றுலா விற்காக மாணவர்களை அழைத்துச் செல்லும் போது வரலாற்று முக்கியத்துவம் பெற்ற ஆலயங்களுக்கு அழைத்துச் செல்கையில் அவ் ஆலயங்கள் தொடர்பான வரலாற்று நிகழ்வினை கற்றுக் கொள்ள முடிகிறது. அத்தோடு ஆகம முறைகளையும் பூசை முறைகளையும் அறிய முடிகின்றது.

"எண்ணங்களும் செயல்களும்
நல்லவையாக இருந்தால்
தனியே இறை வழிபாடு
தேவையில்லை"

எனும் கூற்றுக்கிணங்க மனிதன் புனிதனாக வேண்டிய நிலைப்பாடு





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவைப்படுகின்றது. இன்றைய கால கட்டத்தில் மனிதனது ஒவ்வொரு செயல்களும் தவறான பாதையை நோக்கி சென்று கொண்டிருக் கின்றது. தீய எண்ணங்களையும் தீய செயல்களையும் செய்பவனாக மனிதன் வாழ்கின்றான். இவ்வாறான ஒரு சமூகத்தை மாற்றம் பெற செய்ய வேண்டியே ஆரம்ப கட்டமாக பாடசாலைகளில் இறையருளை போதிக்கின்றனர். தியானங்களும் யோகாசன வகுப்புக்களையும் நடாத்தி வருகின்றனர். இதனை பாடசாலைகளில் விடுமுறை நாட்களில் தியான வகுப்புக்கள், அறநெறி வகுப்புக்கள் யோகாசனக் கலை வகுப்புகள் என்பன நடாத்தப்படுகின்றன.

“வெள்ளை நிற மல்லிகையோ
வேறெந்த மாமலரோ
வள்ளல் அடியிணைக்கு
வாய்த்த மலர் எதுவோ
வெள்ளை நிற பூவும் அல்ல
வேறெந்த மலரும் அல்ல
உள்ளக் கமலமடி
உத்தமனார் வேண்டுவது”

என்ற வாசகத்திற்கு அமைய இறைவன் உண்மையான உள்ளத்தையே நேசிக்கின்றான் என்பது புலனாகின்றது. இவ்வாறான மேதைகளின் எண்ணங்களை கல்வியின் மூலம் மாணவர்களுக்கு நல்ல எண்ணங்களை ஊட்டும் போது உள்ளதில் அன்பு இறைவன் பால் ஈர்க்கப்படுகின்றது. சிந்தனைகள் சிறைப்பட்டு இறைவனின் அன்பை நோக்கிய பயணமாக தொடர்கின்றது. இதனால் உள்ளத்திலே நல்ல எண்ணங்களும், வாழ்க்கையிலே நல்ல செயல்களும் உருவாக வழிவகுக்கி ன்றது.

மேலும் விழாக்கள், விரதங்கள், பண்டிகைகள் என்பவற்றை பாடசாலையில் கற்பதன் மூலமும் அதனை வாழ்க்கையில் நடைமுறைப்படுத்துவதன் மூலமும் மாணவனின் இதயத்தில் நல்வழியில் செல்ல வேண்டும் என்ற எண்ணம் தோன்றுகின்றது. பொதுவாக பார்க்கும் போது சைவ சமய புராண இதிகாசங்களில் வரும் செயற்பாடுகள் மூலமாகவும் கதைகள் மூலமாகவும் மனிதன் தான் மனிதனாக வாழ வழிப்படுத்தப்படுகின்றான்.

ஆகவே, மாணவர் சமுதாயத்திற்கு சைவ சமயம் பாடசாலையில் போதி க்கப்படும் போது மாணவன் செப்பனிடப்பட்ட ரத்தினமாய் முன்னெடுக்கப்பட்டு சமூகத்தில் நல்ல பிரஜையாக உருவாக்கப்படுகின்ான்.

**“இந்துவாக வாழ்வோம்
இந்து தர்மம் காப்போம்”**

### கொடுப்பதும் கொள்வதும்

ஒரு காலத்தில், ஒரு பள்ளத்தாக்கு நிறைய ஊசிகளை வைத்திருந்த ஒரு மனிதன் வாழ்ந்தான்.

ஒரு நாள், இயேசுவின் தாய் அவனிடம் வந்து சொன்னாள் நண்பனே! என் மகனின் அங்கி கிழிந்துள்ளது. அவன் ஆலயத்திற்குச் செல்லுமுன்னம் அவனது அங்கியை நான் தைக்க வேண்டும். எனக்கொரு ஊசியை தரமாட்டாயா............!'

அவன் அவளுக்கு ஊசியைக் கொடுக்காமல், கொடுப்பதும் கொள்வதும் குறித்த ஓர் அறிவார்ந்த சொற்பொழிவை, அறிவுரையை அவளது மகன் ஆலயத்திற்குச் செல்லுமுன் அவனிடம் சேர்ப்பிக்க வேண்டி கொடுத்தான்.





வாங்குபவனுக்கு நூறு கண்களும் குறைவே. அனால் விற்பவனுக்கு ஒரு கண் போதும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# உளவியல் கல்வியும் ஆசிரியத்துவமும்

ஆர். பன்னீர்ச்செல்வம்
விடுகை வருடம், உடற்கல்வி நெறி

எந்த தொழிற்துறையை சேர்ந்தவர்களும் இரண்டு வகையான உழைப்புக்குள் உள்ளீர்க்கப்படுகின்றனர். அவற்றுள் ஒரு வகையினர் தமது உடல் சக்தியை பயன்படுத்தி உற்பத்தியில் ஈடுபடுகின்றனர். மறுசாரார் உள்ளத்தை பயன்படுத்தி உற்பத்தியில் ஈடுபடுகின்றனர். இதில் முதல் பகுதியினரை உடலுழைப்பாளிகள் என்றும் அழைக்கின்றோம். இதில் வைத்தியதுறை சார்ந்த தொழில், சட்டத்துறை சார்ந்த தொழில், பொறியியல் துறை சார்ந்த தொழில், எழுதுவினைஞர் தொழில், ஆசிரியர் தொழில் என்பன மன உழைப்புக்குள்ளேயே அடங்குகின்றன. அதிலும் விசேடமாக ஆசிரியர் தொழில் என்பது ஓர் மகத்தான தொழிலாகும். இது உலகில் காணப்படுகின்ற எல்லாதொழில் முறைகளையும் விட முதன்மையானது, சமூக தேவையின் அடிப்படையில், இத்துறை தனிச்சிறப்பு வாய்ந்ததாக மதிப்பிடப்பட்டு வருகின்றதைக் காணலாம்.

மேற்குறிப்பிட்ட மன உழைப்பு தொழில் வகைகளில் அடங்கும் ஆசிரியர்கள் தமக்கென சில தனித்துவமான இலட்சணங்களை கொண்டிருக்க வேண்டும். ஓர் ஆசிரியர் தமது பாடம் தொடர்பான அறிவையும், அதற்கு அப்பால் உளவியல் தொடர்பான அறிவையும், அனுபவத்தையும் பெற்றிருத்தல் இன்றியமையாததாகும். அதாவது ஒரு ஆசிரியருக்கு தாம் கற்பிக்கும் பாடம் பற்றிய அறிவை விட அப்பாடத்தை கற்பிக்கும் மாணவர்களை தயார்ப்படுத்தும் ஆற்றலை கொண்டிருத்தலே இன்று பெரும் பாலும் வேண்டப்படுகின்றது. எனவே ஓர் ஆசிரியர் தமது பாடம் தொடர்பான அறிவையும் கல்வி உளவியல் (Education Psychology) அல்லது அடிப்படை உளவியல் (Foundation of Psychology) தொடர்பான அறிவையும் பெற்றிருத்தல் மிக அவசியமானதாகும்.

## ஆசிரியருக்கு உளவியல் கல்வியின் அவசியம்

நல்ல மனைவியை வறுமையிலும் சிறந்த நண்பனை கஷ்ட காலத்திலும் சுற்றத்தவனை துன்பத்திலும் அறியலாம் எனும் தமிழ் பழமொழியும் உண்டு. எழுத்தாளர் மு. வரதராஜன் அவர்கள் "ஈயும் எறும்பும் கூட இன்பத்தில் உதவும் ஆகவே துன்பத்தில் உதவுவோரை தேடு" என்று தனது நாவலில் குறிப்பிட்டுள்ளார். ஆழ்ந்த விருப்பங்கள் ஆசைகள், உணர்ச்சிகள் ஆகியவற்றை பகிர்ந்து கொள்வதற்கு வாழ்வில் ஒருவர் இருப்பது மிக அவசியமாகின்றது. இப்படியான தேவைகள் உடைய மாணவர்கள் எம்மைத் தேடி வரும் போது அவர்களுக்குள்ள உளவியல் சார்ந்த பிரச்சினைகளை பொருத்தமான முறையில் அணுகி கையாண்டு பொருத்தமான தீர்வை நோக்கிச் செல்ல உதவுவதற்காக உளவளத் துணைச் செயற்பாட்டில் பல நுட்பங்கள் கையாளப்படுகின்றன.இவை உளவியளாளர்களின் கொள்கைக்கேற்ப கையாளப்படும் முறைகளிலும் நுட்பங்களிலும் மாற்றங்கள் ஏற்படலாம்.

பிள்ளை மையக் கல்விக்கு வலுச் சேர்த்த கார்ல் றொஜெர்ஸ் அவர்களுடைய நுட்பவியல்கள் கூடுதலாக பயன்படுத்தப் படுகின்றன. பிள்ளைகள் ஒவ்வொரு வருக்கும் தனிப்பட்ட உலகம் இருக்கும். அந்த உலகினுள் புகுந்து ஆசிரியர் அதை தனது பழக்கமான இடமாக ஆக்கிக் கொள்ளும் போது பிள்ளைகளை புரிந்து கொள்ளல் இலகுவாகும். உளவியல் கற்ற ஆசிரியரால் மாணவர்களின் நடத்தைகளை விளங்கி கொள்வதற்கும், எதிர்வு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறுவதற்கும் உதவியாக அமைவதோடு தேவை யேற்படும் சந்தர்ப்பத்தில் அதனை மாற்றி அமைப்பதற்கும் உறுதுணையாகின்றது. கல்வி என்பது மனித நடத்தையை உருவாக்குவதும் அதனை வடிவமைப்பதுமாகும். மனம், நடத்தை என்பன பற்றி உளவியல் வழங்குகின்ற அறிவின் வளர்ச்சியானது கல்வி சார் பிரச்சினையை தீர்ப்பதற்கான ஒரு பயனுள்ள வழிகாட்டியாக அமைகிறது. ஒரு பிள்ளை எதிர்காலத்தில் எவ்வாறான ஒருவராக வரவேண்டும் என தீர்மானிப்பதாயின் அப்பிள்ளை எவ்வாறானது என்பதை முதலில் ஆசிரியர் அறிந்திருத்தல் வேண்டும். இன்னுமொரு வகையில் கூறின் கல்வி போதனையை ஆசிரியர் மேற்கொள்வதற்கு அவர் உளவியல் கல்வி தொடர்பான அறிவை பெற்றிருப்பாராயின் தனது கடமைகளை இலகுவாக நிறைவேற்றலாம். இதனாலேயே இதனை வேறு வார்த்தைகளில் பிரயோக உளவியல் (Applied Psychology) என்று இன்று புதிய பரிமாணத்தை கொடுத்துள்ளனர்.

இன்றைய நவீன கல்வியின் குறிக்கோள் யாதெனில், பாடத்தில் உள்ள கருப்பொருளை கற்று கொடுப்பதை விட மாணவர்களுக்கு அவர்களின் அறிவாற்றல், திறன்களுக் கேற்ப போதனையை வழங்க வேண்டும் என்பதாகும். பாடம் தொடர்பான அறிவையும் அது தொடர்பான திறன்கள், ஆற்றல்கள், மனப்பான்மைகள் என்பவற்றை மாணவர்களுக்கு அளிக்க வேண்டிய பொறுப்புக்களை சுமந்துள்ள ஆசிரியர்களுக்கு கல்வி உளவியல் துணை நிற்கின்றது. இவற்றுடன் மட்டுமன்றி மாணவர்களின் ஆளுமை விருத்தி என்பவற்றை திறம்பட மேற்கொள்வதிலும் அது பங்களிப்பு செய்கிறது. ஒரு ஆசிரியர் கல்வி தொடர்பான அறிவை பெற்றிருப்பது முதலில் தன்னைதான் அறிந்து கொள்வதுடன் தன்னை சூழலுடன் இயைபாக்கி கொள்வதற்கும் சூழலின் தேவையை புரிந்து கொள்வதற்கும் இன்றியமையாததாக அமைகின்றது. இன்னும் ஆசிரியர்கள் மாணவர்களை தன்னம்பிக்கையுடன் அணுகுவதற்கும், அவர்களை கட்டுப்படுத்துவதற்கும் அவர்களை கற்றலின் பால் ஊக்குவிப்பதற்கும் அவர்களுக்கு கற்றலுக்கான சூழ்நிலையை தோற்றுவிப்பதற்கும், அதனை எளிமையாக்குவதற்கும், முகாமை செய்வதற்கும், தனது கற்பித்தல் முறைகள் நுட்பங்கள் சாதனங்கள் என்பனவற்றை பெருக்கிக் கொள்வதற்கும் உளவியல் துணை புரிகின்றது. எனவே, இன்று சமூக விஞ்ஞான பாடங்களில் முன்னிலை வகிக்கும் உளவியல் கல்வியே ஆசிரியத்துவத்தின் அடித்தளமாக அமைந்துள்ளது என உறுதியாக கொள்ளலாம்.

கார்ள்ரொஜெர்ஸினால் முன்மொழியப்பட்ட உளவளத்துணை செயற்பாட்டை அடியொற்றிய முறையில் ஆசிரியர் ஈடுபடுவதனால் மாணவர்களுடன் மனவெழுச்சி சார்ந்த தொடர்பாடலுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டு செயற்படுவது சிறப்பான விடயமாகின்றது. மாணவர்களின் உணர்ச்சி கலந்த மொழியை விளங்கிக் கொண்டு ஆசிரியர் அறிகை நிலை மொழியிலேயே துலங்களை வழங்குவார். மாணவர்கள் மனம் திறந்து உணர்ச்சி கலந்த முறையில் உரையாடவும் மாணவர்களின் உளப்பிரச்சினைகளை ஆசிரியர் தெளிவாகப் வழங்கும் போது நல்ல புரிந்துணர்வுடன் தொடர்பாடல் ஏற்படுவதால் பயனுள்ள கற்றல் செயற்பாடு இடம் பெறுவதாக குறிப்பிடப்படுகின்றது.

எனவே, சமூகத்தின் செல்வமாக விளங்கும் பாடசாளைகளிலே சிறப்பான கற்பித்தல் முறையை ஏற்படுத்துவதற்கு உளவியல் பெரும் பங்காற்றுவதனை நாம் உள்ளங்கை நெல்லிக்கனி போல் தெளிவாக அறியக் கூடியதாக உள்ளது.

உசாத்துணை:-
உளவளத்துணை நுட்பங்களுடனான கற்பித்தல்

திரு.எஸ்.ஜெயராஜா:-
ஆசியத்துவத்தின் வெற்றிக்கு கல்வி உளவியல், உளவியல் சார் பாட நூல்கள்.



புத்தகம் குழந்தைகளுக்கு வழிகாட்டி முதியவர்களுக்குப் பொழுதுபோக்கு. GTC

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# GOVERNMENT TEACHERS' COLLEGE - ADDALAICHENAI

## COURSE - PRIMARY

## ACADEMIC YEAR 2009/2010




**Row 1 (L/R) :** (Seated) Mrs.M Anwar, Mrs.BS Beham, Mr.M Devadasan, Mr.MAMM Asmir, Mr.P Wijayendran, Mr. MIA Lathief (Deputy Principal), Alhaj. Moulavi. MSA Hafeel "Sharqiyy" Principal (SLEAS), Alhaj. Moulavi. ACM Zubair "Sharqiyy" (Deputy Principal), Mr.SMA Jiffry (Lectr.), Mr.MH Jazar, Mr.K Shanthakumar, Mr.K Ganeshamoorhty, Mrs.S Shangeeth, Ms.P Ganeshpathy.

**Row 2 (L/R) :** Mr.V Illangovan, Mr.N Puvaneswaran, Mr.K Sathiyabalan, Mss.DK Subashini, Ms.A Sivajothy, Ms.F Doren, Mrs.MAH Fauziya, Ms.S Asmin, Ms.R Thajina, Mrs.M Siyamala, Mrs.G Gnanapushpam, Mr.T Pakkiyanathan, Mr.KM Anwar, Mr.s Selvakumar.

**Row 3 (L/R) :** Mr.R Vicknesh, Mr.T Chandramohan, Mr.S Rojman, Mr.P Premakumar, Mr.A Kumar, Mr.K Yogeshwaran, Mr.R Kuvendran, Mr.K Ravichandran.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# GOVERNMENT TEACHERS' COLLEGE - ADDALAICHENAI

## COURSE - ENGLISH LANGUAGE

## ACADEMIC YEAR 2009/2010



**Row 1 (L/R) : (Seated)** Mss.Y Rajakanthan, L Jeyakala, Messrs.K Yoganathan, P Shivakumar, S Nafeer, MJM Amanullah, A Muralikrishna, Mr.AM Jazeel (Lectr.), Mr. MIA Lathief (Deputy Principal), Alhaj. Moulavi. MSA Hafeel "Sharqiyy" Principal (SLEAS), Alhaj.Moulavi.ACM Zubair "Sharqiyy" (Deputy Principal), AM Faizal (Lectr.), Messrs.AHM Safeek, M shiyatasa, MCM Arooz, NA Kifary, MA Rameesullah, Mss.P Kanchani, K Parimalakanthy.

**Row 2 (L/R) :** Mss.G Dhushyanthy, PR Sellammah, S Yogeswari, S Thavamanohary, DD Priyaraj, S Rihana, MS Muneera, LT Najeena, NS Miskin, MF Farhana, MJF Shafeeka, S Siyasteen, NI Jahan, A Mazahirah, ARF Rifka, M Fathumma, IF Farisa, S Fameela, S Subashini, G Paripushpam, T Vijayakumaary, K Saradhadevi.

**Row 3 (L/R) :** Messers.J Surendra Kumar, A Puviyarasan, S Sureshkumar, S Sebastipathikraj, K Shankar, KG Krishnan, SS Thilakarathnam, S Wimaleshwarn, Mss.S Gnanasugamya, K Thanaletchumy, R Yogamalar, R Mohenraj, N Meera, K Vennila, J Arulvannan, SF Rose, Messrs.R Paraneetharan, S Subashem, M Sivabalan, S Maheshwaran, P Thilageshan, K Malarvanan.

**Row 4 (L/R) :** Messrs.R Sridharan, K Thiyagarajah, S Jayachandran, L Kalidhasan, MYM Aslam, R Suresh, S Sasikumar, K Manickkavasan, S Vijayasuandaram, V Subash Chandramohan, A Surehwaran, S Jeevaratnam, S Arunasalam, P Ranjith, K Yogeswaran, AM Sweedon, M Srirajan.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# GOVERNMENT TEACHERS' COLLEGE - ADDALAICHENAI

## COURSE - ISLAM

## ACADEMIC YEAR 2009/2010



**Row 1 (L/R) :** (Seated) Mr.AMM Ramees, Mr.KM Rizwan, Moulavi.AL Faleel, Mr.MM Irfan, Mr.AM Nageem, Mr. MIA Lathief (Deputy Principal), Alhaj. Moulavi. MSA Hafeel "Sharqiyy" Principal (SLEAS), Alhaj.Moulavi. ACM Zubair "Sharqiyy" (Deputy Principal), Alhaj.Moulavi. VTM Haneefa "Sharqiyy" (Lectr.), Moulavi.M Nawfar, Mr.I Mubrak, Mr.S Marsookdeen, Moulavi.A Azar, Moulavi.AM Shakkir.

**Row 2 (L/R) :** Mss.SS Saneeha, SHR Fathima, S Rifaya, ARS Begam, JF Nihara, MAS Minsara, SA Dhulfi, MNF Asana, AMS Bhanu, IR Kamila, AAF Rushdha, AC Shakira, EU Sevuruna, AH Shamila, AMI Mumthaj, PM Fasmiya.

**Row 3 (L/R) :** Mss.MM Jawzy, MSF Farzana, MH Aziya, AM Mufeedha, AC Fajeela, MFF Shafrina, ARF Jumana, ASF Begam, ZAS Zahra, S Suhaira, KR Begam, JS Salla, AH Muneera, SS Himaya, MLS Jemsiya.


**Row 4 (L/R) :** Moulavi.SS Amjath, Moulavi.YM Fairoos, Mr.AHM Risvin, Mss. NKR Begum, AH Sithywaliha, T Razmila, AS Najimunnisa, Mr.MTM Riyasath, Mr.PT Fareeddeen, Moulavi.MM Askardeen.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியத் தொழிலின் மகத்துவம்

சசிகலா சிவநேசன்
விடுகை வருடம், கணித நெறி




அறிவின் ஒளிமயமாய் அன்பின் இருப்பிடமாய்
அவனியிலே வந்துதித்த ஆசிரிய பெருந்தகைகள்
அட்டாளைச்சேனை ஆசிரிய கலாசாலையில் கலைகள் பல பயின்று
அனுபவத்தால் அறிந்தவற்றை அறிவுடனே எடுத்தியம்பி

அன்றாடம் பள்ளியிலே பலகலையும் பயிற்றுவித்து
அறிவுச் சுடரொளியை ஏற்றிடுவோம் எம் சந்ததிக்கு
ஆற்றலும் எழுச்சிபெற சாஸ்திரங்கள் பலவுண்டு
ஆசிரியம் முழுமைபெற கற்றல் அனுபவமும் பலவுண்டு

கற்றறிந்த கல்விதனை சமூகத்திற்கு கற்பித்து
கருத்துடனே கடமைதனை கண்ணியமாய் போற்றி
காத்திருக்கும் எம் சந்ததிக்கு கல்விதனை போதித்து
கண்ணியமாய் எம் சந்ததியை கரை சேர்த்திடுவோம்.

ஆசான் என்றென்றும் ஏணியாய் நிலைத்திருக்க
ஆதாரமாய் பற்றிக் கொண்டு உயரும் மாணவ சந்ததிகள்
அறிஞனாய் ஆசானாய் தனவானாய் ஆனபிறகு
அறிவற்ற மூடனாய் ஏற்றிய ஏணியை உதைக்கிறான்.

சீர் கெட்ட சமுதாயம் சிறப்பு பெற உழைத்திடுவோம்
சீர் திருத்தம் பலசெய்து சிந்தனை வளர்த்திடுவோம்
வசைமொழிகள் வந்தபோதும் பொறுமையாய் இருந்திடுவோம்
வளர்ந்து வரும் சமுதாயம் வையகம் போற்ற வாழ்ந்திடுவோம்.





பூமியில் செருக்காக நடக்காதீர்கள். ஏனெனில் உம்மால் பூமியைப் பிளந்து விட முடியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒலிம்பிக் போட்டிகள்

எம். புனிதவதி
தொடுகை வருடம், உடற்கல்வி

உலகில் அனைத்து நாடுகளையும் உள்ளடக்கி நான்கு ஆண்டுகளுக்கு ஒரு முறை நடைபெறும் பழமையும் பிரபலமும் மதிப்பும் மிக்க ஓர் விளையாட்டுப் போட்டி இதுவாகும். கிறிஸ்துவிற்கு முற்பட்ட காலத்தில் இருந்தே (கி.மு.776) கிரேக்கத்தின் கிறீஸ் ஒலிம்பியா பள்ளத்தாக்கில் பாரம்பரியமாக விளையாடப்பட்டு வந்தன.

*1894* - ஒலிம்பிக்கை நடாத்துவதற்கு சர்வதேச ஒலிம்பிக் சம்மேளனம் ( INTERNATIONAL OLYMPIC COMMITTE - IOC ) அமைக்கப்பட்டது. *1896* -நவீன ஒலிம்பிக் போட்டிகள் மியரே கூபர்மீன் எனும் பிரான்ஸ் நாட்டவரின் முயற்சியால் ஆரம்பிக்கப்பட்டு முதல் முதலாக கிரேக்க நாட்டின் எதென்ஸ் நகரில் நடைபெற்றன. இதில் பதின்மூன்று நாடுகள் பங்கேற்றன.

### ஒலிம்பிக்கின் குறிக்கோள்

போட்டிகளில் வெற்றி பெறுவதல்ல பங்கேற்பது தான் அதாவது போட்டியிட்டு வெற்றி பெற வேண்டும் என்பதல்ல நோக்கம் பங்கேற்று சிறப்பாக செயற்பட வேண்டும் என்பதாகும்.

ஒலிம்பிக்கின் கோட்பாடு - விரைவு - உயர்வு - துணிவு

### ஒலிம்பிக் உறுதி மொழி

"இங்கு பங்கேற்கும் அனைத்து விளையாட்டு வீரர்களின் பெயரால் நான் எடுத்துக்கொண்ட உறுதி மொழி என்னவென்றால் ஒலிம்பிக் சட்டதிட்டங்களுக்கு கட்டுப்பட்டு உண்மையான விளையாட்டு உணர்வுடன் நடந்து கொள்வேன். விளையாட்டின் பெருமையை காப்பதாகவும், நான் சார்ந்த அணியைப் பெருமைப்படுத்துவதாகவும், எனது செயற்பாடுகள் அமையும்."

ஒலிம்பியாட் - ஒரு ஒலிம்பிக் போட்டி தொடங்கிய ஆண்டிலிருந்து அடுத்த ஒலிம்பிக் போட்டி தொடங்கும் வரையான நான்கு ஆண்டு காலப் பகுதி ஆகும்.

ஒலிம்பிக் போட்டிகள் இடம்பெற்ற வருடமும், நாடும், நகரமும் வருமாறு.



நகைச்சுவை மிகுந்தவர் அனைவரும் அன்பு மிகுந்தவர் என்பதை அனுபவத்தில் அறிவேன். GTC

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| இல | வருடம் | நாடு | நகரம் |
|---|---|---|---|
| 01 | 1896 | கிறீஸ் | எதென்ஸ் |
| 02 | 1900 | பிரான்ஸ் | பரிஸ் |
| 03 | 1904 | அமெரிக்கா | சென் லூயிஸ் |
| 04 | 1908 | இங்கிலாந்து | லண்டன் |
| 05 | 1912 | சுவிடன் | ஸ்டொக் ஹோம் |
| 06 | 1916 | ஜேர்மனி | பேர்லின் - நடைபெறவில்லை |
| 07 | 1920 | பெல்ஜியம் | அண்டவெப் |
| 08 | 1924 | பிரான்ஸ் | பரிஸ் |
| 09 | 1928 | நெதர்லாந்து | அம்ஸ்ரடாம் |
| 10 | 1932 | அமெரிக்கா | லொஸ் ஏஞ்சல்ஸ் |
| 11 | 1936 | ஜேர்மனி | பேர்லின் |
| 12 | 1940 | ஜப்பான் | டோக்கியோ-நடைபெறவில்லை |
| 13 | 1944 | இங்கிலாந்து | லண்டன் - நடைபெறவில்லை |
| 14 | 1948 | இங்கிலாந்து | லண்டன் |
| 15 | 1952 | நோர்வே | ஹெல் சிங்கி |
| 16 | 1956 | அவுஸ்திரேலியா | மெல்போர்ன் |
| 17 | 1960 | இத்தாலி | ரோம் |
| 18 | 1964 | ஜப்பான் | டோக்கியோ |
| 19 | 1968 | மெக்சிக்கோ | மெக்சிக்கோ சிட்டி |
| 20 | 1972 | ஜேர்மனி | மியூனிச் |
| 21 | 1976 | கனடா | மொன்றியல் |
| 22 | 1980 | ரசியா | மொஸ்கோ |
| 23 | 1984 | அமெரிக்கா | லொஸ் ஏஞ்சல்ஸ் |
| 24 | 1988 | தென் கொரியா | சியோல் |
| 25 | 1992 | ஸ்பெயின் | பார்சிலோனா |
| 26 | 1996 | அமெரிக்கா | அட்லான்ரா |
| 27 | 2000 | அவுஸ்திரேலியா | சிட்னி |
| 28 | 2004 | கிறீஸ் | எதென்ஸ் |
| 29 | 2008 | சீனா | பீஜீங் |
| 30 | 2012 | இங்கிலாந்து | லண்டன் - நடைபெறவில்லை |





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# HOW DO WE BREATHE ?

Mrs. S. Kannadhasan
2[nd] Year, English Course

Every living creature must breathe in same way. All animals life breathes lay taking in Cygnet. Man gets he's Cygnet try taking air into the lungs. it seems a simple thing for us to breahe. We do not even think about it as we do it. But it involves quite a complicated process. When a person breathes in air passes into the through a series of tubes called "the upper reseratory tract" This starts with the nose. Here particles which could be harmful to the lungs are stopped or strained out. The nose also warms the air.

From the nose the air turns down through the "pharynx" or throat. From here, the air goes through two smaller tues called "bronchi" enters each lung. The lungs are large, organs. Around the entire lung is a thin Covering called "the pleura"

The lung tissue is like a true Sponge in some ways. But in the lung there are spaces, or air sacs and it is here that air is received from the trachea, the needed gases are used and unwanted gases are Send out. These air spaces are called "alveoli"

The air we take in contains oxygen, nitrogen,carbondiaxide and water vapour. These same gases are present in the lood but in different amounts when a fresh breath is drawn in, there is more oxygen in the alveoli than in the blood. so the oxygen passes through the very thin walls of the blood vessels (capillaries) and into the blood. carbon dioxide goes from the blood into the air sacs of bungs and is exhaled.

While there is much more to the process of breathing, of course. This is the most vital part of it The exchange of it, the exchange of gases that enables all the cells to obtain oxygen and to get rid of carbon dioxide.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமாதானம் பற்றிய பல்வேறு கூற்றுக்கள்



எஸ். கோமதி
விடுகை வருடம், உடற்கல்வி நெறி

01. சமாதானமும் ஒரு வகையில் வெற்றியைப் போன்றதே; இரு தரப்பாரும் அதில் பணிகின்றனர். உத்தமமாய் ஒருவரும் அதில் தோற்றவர் இல்லை.

*வில்லியம் ஷேக்ஸ்பியர்*

02. சமாதானத்தை விரும்புகிறவன் போருக்கு ஆயத்தம் செய்து கொள்ளட்டும்.

*வெஜிட்டியஸ்*

03. போருக்கு ஆயத்தமாய் இருப்பதே சமாதானத்தைப் பாதுகாப்பதற்குப் பயனான வழிகளில் தலையாயது.

*ஜார்ஜ் வாஷிங்டன்*

04. தானே உருவாக்கிய சக்திகளால் ஆட்டிப் படைக்கப்பட்டு இறுதியில் அளிக்கப்படுவதற்கு எலும்பற்ற, மூளையற்ற உயிரினமல்ல மனித இனம். அணுகுண்டுக்கு பின்னும் நம் கதியை நிர்ணயிக்கும் தளப திகள் நாமேதான். நாம் எதை விழைகின்றோமோ அவ்வாறே நம் கதியை நம்மால் அமைத்துக் கொள்ள முடியும்.

*ரேமாண்ட ஃபாஸ்டிக்*

05. இப்பொழுது நம் முன்னுள்ள பணி சமாதானம். இப்போருக்கு முடிவுத் தேடுவது மட்டுமல்ல, எல்லாப் போர்களின் தொடக்கத்திற்கும் முடிவு காண்பது.

*ஃபிராங்க்ளின் டெ ரூஸ்வெல்ட்*

06. இறுதியில் அறிவியலும் அமைதியும் அறியாமையும் போரை உறுதியாக வெல்லும் என்றும் முடிவில் உலக நாடுகள் ஒன்றை ஒன்று அழித்துக் கொள்ளாமல் ஆக்க ரீதியாக கட்டிவளர இசையும் என்றும் நான் ஐயத்தின் நிழலுக்கு கூட இடமின்றி நம்புகின்றேன்.

*லூயி பாஸ்ட்டியர்*

07. தங்கள் போர்வாள்களை ஏர்க் கலப்பைகளாய் மாற்றுவார்கள் தங்கள் ஈட்டிகளை துரட்டிகளாக மாற்றுவார்கள். ஒரு நாடு இன் னொரு நாட்டுக்கு எதிராய் வாளைத் தூக்காது. போரை இனி இவர்கள் பயிலவும் மாட்டார்கள்.

*ஏஸாயா (விவிலியம்)*

08. போராடும் இனங்கள், வளமிழந்து வரும் பூமி இக்காட்சிகளுக்கு அப்பால் அமைதி எனும் கனவுத் தோற்றம் என் கண்முன் சற்றே மின்னுகிறது.

*ஆலிவர் வெண்டேல் ஹோல்ம்ஸ்*

09. போர் பாழ்படுத்துவது போலவே சமாதானமும் சீர்கெடுகின்றதை நாம் காண்கின்றோம்.

*ஜான் மில்ட்டன்*

10. போர்கள் மூள்வது மனிதரின் உள்ளங்களில் என்பதால் சமாதானத்தின் அரண்கள் எழுப்பப்பட வேண்டியது மனிதனின் உள்ளங்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*களில் தான்.*

*யுனேஸ்கோவின் அமைப்பு சாசனம்*

11. சென்ற ஐம்பது ஆண்டுகளின் வரலாறு ஏதேனும் ஒரு படிப்பினையை நமக்குத் தருகின்றதென்றால் அது ஆயுதக்களைவைத் தொடர்ந்து சமாதானம் வருவதில்லை. சமாதானத்தை தொடர்ந்தே ஆயுதக்களைவு வருகின்றது என்பதுதான்

*பெர்னார்ட் மேன்னஸ் பரூஷ்*

12. போரும் இல்லை சமாதானமும் இல்லை என்ற நிலையை உலக வெப்பமானிக் காட்டும் போது இராணுவ முடிவுகளைப் பின் பற்றுவதா, அரசியல் முடிவு களைப் பின்பற்றுவதா என்று முடிவு செய்வது கடினம்.

*ஜான் ஃபாஸ்ட்டர் டல்லஸ்*

13. வெளிப்படையான போரை விட, வஞ்சகமான சமாதானம் பெருங் கேடு விளைவிக்கும்.

*டேஸிட்டஸ்*

14. சர்வதேச விவகாரங்களில் இரண்டு போராட்டங்களுக்கு இடையில் நடக்கும் ஏமாற்றுப்படலம் சமா தானம் என்று பெயர் பெற்று விடுகின்றது.

*ஆம்ப்ரோஸ் பியர்ஸ்*

15. அச்சத்தை அடிப்படையாகக் கொண்ட சமாதானம் அடக்கி வைக்கப்பட்ட போரன்றி வேறொன் றும் இல்லை.

*ஹென்ரி வேன் டைக்*

16. சமாதானத்தை நாம் நேசிக்கின் றோம், ஆனால் எந்தவிலைக் கொடுத்தாகிலும் அதைப்பெறச் சித்தமாயில்லை. ஈட்டித் துப் பாக்கிகளை விட அடிமை விலங்குகள் மிகப்பயங்கர மானவை.

*டக்லஸ் ஜெர்ரொல்ட்*

17. நியாய உணர்வு உள்ளத்தை ஆளும் இடத்தில் சமாதானம் நாளும் ஆளும், நின்று நிலவும்

*வில்க்கி காலின்ஸ்*

18. அவர்கள் சமாதானத்தைச் சிறிதும் விரும்பவில்லை. போரிலிருந்து காக்கப்பட வேண்டுமென விரும் பினார்கள். போர் இல்லாமல் இருப்பதும் சமாதானமும் ஒன்று தான் என்று எண்ணி விட்டார்கள் போலும்.

*டாரத்தி தாம்ப்ஸன்*

19. வெற்றி வெறுப்பை மூட்டுகிறது தோல்வி அடைந்தோர் வேத னையில் வாழ்கின்றனர். வெற்றி யையும் தோல்வியையும் விட்டுக் கொடுத்து, சமாதானமாக வாழ் வோர் இன்பமாக வாழ்வர்.

*கௌதம புத்தர்*

20. நம் சமாதானம் வெற்றிப் பெற்றவர்கள் சமாதானமாக இருக்க வேண்டும், தோல்வியுற் றோர் சமாதானமாக அல்ல.


*ஃபெர்டினாண்ட் ஃபாக்*





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலக விருதுகள்



ஞா. ஞானபுஷ்பம்
விடுகை வருடம், ஆரம்ப நெறி

## நோபல் விருது

சுவீடன் தேசத்து விஞ்ஞானியான அல்பிரட் நோபல் டைனமற் எனும் சேர்வையைக் கண்டு பிடித்து பெருஞ் செல்வம் சேர்த்தார். தனது சொத்துக்களின் கணிசமான ஒரு பங்கை வங்கியில் வைப்பிலிட்டு அதன் மூலம் பெறப்படும் வட்டித் தொகையிலிருந்து ஆண்டுதோறும் உலக சமாதானம், மருத்துவம் அல்லது உடற்கூற்றியல், இலக்கியம், இரசாயனவியல் அல்லது வேதியல், பௌதீகவியல் அல்லது இயற்பியல் ஆகிய துறைகளில் சிறந்து விளங்குவோருக்கு விருது வழங்கப்பட வேண்டுமென உயில் எழுதி வைத்து விட்டு 1896 இல் காலமானார்.

1901 ஆம் ஆண்டிலிருந்து ரோயல் சுவீடிஸ் அக்கடமி எனும் நிறுவனம் மேற்குறித்த துறைகளில் சிறந்து விளங்கவோருக்கு பரிசு வழங்கி வருகின்றது.

1969ஆம் ஆண்டிலிருந்து சுவீடன் நாட்டு "ரிக்ஸ்" வங்கியின் அன்பளிப்புத் தொகையைக் கொண்டு பொருளாதாரத் துறையில் சிறந்து விளங்குவோருக்கும் பரிசு வழங்கப்பட்டு வருகின்றது. ஒவ்வொரு வருடமும் ஒக்டோபர் மாத நடுப்பகுதியில் ஒவ்வொரு துறைகளிலும் பரிசுக்கென தேர்ந் தெடுக்கப்பட்டவர்களது பெயர் விபரங்களை பரிசுக்குழு அறிவிக்கும். பரிசு அல்பிரட் நோபல் மறைந்த தினமாகிய டிசெம்பர் 10ஆம் திகதியன்று சுவீடனில் வழங்கப் படுகின்றது. இலக்கியத்திற்கான நோபல் பரிசு பின்வரும் 07 ஆண்டுகளில் வழங்கப் படவில்லை என்பது குறிப்பிடத் தக்கது. 1914, 1918, 1935, 1940, 1941, 1942, 1943.

நோபல் பரிசைப் பெற்ற முதல் தமிழர் சேர் C.V. இராமன். நோபல் பரிசை ஆசியாவில் முதல்முதலாகப் பெற்றவர் கவிஞர் ரவீந்திரநாத் தாகூர். இவர் தமது கீதாஞ்சலி எனும் கவிதை நூலுக்காக 1913 இல் இலக்கியத்திற்கான நோபல் பரிசைப் பெற்றவர். மிகக்குகுறைந்த வயதில் நோபல் விருது வென்றவர் லோரன்ஸ் பிராக்.

உலக அமைதிக்கான நோபல் விருதை அதிக தடவைகள் பெற்றுள்ள நாடு ஐக்கிய அமெரிக்கா. நோபல் விருதை வென்ற முதல் பெண் மேரி கியூரி அம்மையார். இவர் 1903இல் பௌதீகத்திற்காகப் பரிசு பெற்றார்.

## ரமன் மச்சே சே விருது

விமான விபத்து ஒன்றில் கொல்லப்பட்ட பிலிப்பைன்ஸ் அதிபர் ரமன் மச்சே அவர்களின் நினைவாக இவ் விருது 1957ம் ஆண்டு முதல் வழங்கப்பட்டு வருகின்றது சிறந்த அரசாங்கப்பதவி சமுக சேவை என 4 துறைகளில் சிறந்து விளங்குவோர் வருடாந்தம் இவ்விருதைப் பெறுவார்கள். இவ்விருதும் உலகில் குறிப்பிடத்தக்க மதிப்புமிக்க விருதாகக் கருதப்படுகின்றது.

## புலிட்ஸர் விருது

ஐக்கிய அமெரிக்காவினால் ஆண்டு தோறும்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பத்திரிகைத் தொழில், நாடகம், இலக்கியம் ஆகிய துறைகளில் உலகளாவிய ரீதியில் சிறந்து விளங்குபவர்களுக்கு ஆண்டு தோறும் இவ்விருது வழங்கப் படுகின்றது. "New york world" எனும் பத்திரிகையின் ஆசிரியராக இருந்து உன்னதமான பத்திரிகைப் பணியாற்றிய ஜோசப் புலிட்ஸர என்பவரின் நினைவாகவே இப்பரிசு வழங்கப்பட்டு வருகின்றது.

### பால்கன் விருது

1956 இல் இத்தாலியப் பெண் தொழிலதிபர் ஒருவரால் இவ்விருது ஆரம்பிக்கப்பட்டது. சுவிஸ்லாந்து நாட்டின் உயரிய விருது இதுவாகும்.

### காந்தி சமாதான விருது

மகாத்மா காந்தியின் நினைவாக இந்திய அரசினால் 1995ம் ஆண்டு முதல் இவ்விருது வழங்கப்பட்டு வருகிறது. 1கோடி ரூபா பணம், பாராட்டுப்பத்திரம், கேடயம் என்பன விருதாக வழங்கப்படுகின்றன. இலங்கையின் சர்வோதய இயக்கத் தலைவர் கலாநிதி ஆசியர்தன அவர்களும் இவ் விருதை 1996ம் ஆண்டில் பெற்றுள்ளார்.

### புக்கர் விருது

உலகின் சிறந்த இலக்கிய நூலுக்கான இவ்விருது 1918ம் ஆண்டு முதல் வழங்கப்பட்டு வருகின்றது.

## ஒரு புல்லின் இதழின் கூற்று

இலையுதிர் காலச் சருகான இலையிடம் ஒரு புல்லின் இலை கூறியது, "நீ விழும் போது எவ்வளவு இரைச்சலை உண்டாக்குகிறாய். என் குளிர் காலக் கனவுகள் எல்லாவற்றையும் சிதறடிக்கிறாய்"

வெறுப்படைந்த சருகு இலை கோபத்துடன் சொன்னது, "இழிவான பிறப்பும் இழிவான குடியிடமும் கொண்ட புல்லே! ஒரு புகழும் இல்லா அற்பத்தனமான சிடுசிடுப்பான பொருளே! நீ உயர்ந்த காற்றில் வாழ்கிறவனில்லை. அதனால் இசையின் ஒலியை உன்னால் சொல்ல முடியாது!"

பின்னர் இலையுதிர்காலச் சருகு மண்ணில் கீழே விழுந்து கிடந்து தூங்கிப் போனது - வசந்தம் வந்தவுடன் அது மீண்டும் விழித்தது ஒரு புல்லின் இலையாய்..........!

இலையுதிர்காலம் வந்த போது, குளிர்காலத் தூக்கத்தில் இருந்த புல்லின் இலையின் மேல் வீசி எல்லா இலைகளும் விழுந்தன. அப்போது அது தனக்குள் முணுமுணுத்தது. "ஓ.... இந்தச் சருகு இலைகள்....... எவ்வளவு இரைச்சலை உண்டாக்குகின்றன. அவை என் குளிர்காலக் கனவுகள் அனைத்தையும் சிதறடிக்கின்றனவே!"



அதிக வறுமைப்பட்டவரும் அதிக செல்வமுடையவரும் நியாயத்தைச் சொன்னால் கேட்கமாட்டார்கள். GTC

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# வளர் இளம் பருவத்தினரின் பாலியல் பிரச்சினைகளும் தீர்வும்

எஸ். சுரேஸ்குமார்
விடுகை வருடம், உடற்கல்வி நெறி

மனித வாழ்வில் பலவகையான பருவ நிலைகளை குறிப்பிட்டுச் சொல்ல முடியும். குழந்தைப் பருவம், வளர் இளம் பருவம், வாலிபப்பருவம், இடைநிலை பருவம், முதியோர் பருவம் என பெயரிடலாம். எல்லாப் பருவ நிலைகளிலும் பொதுவாக இதையே ஆண்கள், பெண்கள் என இரு பாலர்களுக்கும் ஒவ்வொரு பருவகால கட்டங்களிலும் அந்தந்த பருவ நிலைக் கேற்ப உடல் மற்றும் மன நிலைகளில் மாறுதல்கள் தோன்றக்கூடும். நலமான வாழ்க்கை என்பது பொதுவாகவே நலமான உடல், நலமான மனம் என்ற இரண்டையும் உள்ளடக்கியது தான். ஒன்றுக்கொன்று தொடர்புடையதும் கூட. நல்வாழ்விற்கு உடல், மனம் என்ற தனிமனித பக்கமும் சமூகம் என்ற மூன்றாம் பக்கமும் உண்டு. இந்த மூன்று பக்கங்கள் அல்லது முப்பரிமாணங்கள் ஒன்றோடு ஒன்று தொடர்புடைய காரணத்தினால் ஒன்றின் குறை ஒன்றை பாதிக்கவே செய்யும். உடல் குறை மனதைப் பாதிக்கும், பாதிக்கப்பட்ட மனநிலை உடல் நலனைப் பாதிக்கும் சமூகச் சூழல் உடல், மனம் இவ் விரண்டையுமே பாதிக்கும் தன்மை உடையது.

இது தாண்டிய ஆன்மீக உணர்வு என்பது உடலையும், மனதையும் பாதிக்கவல்லது. தெளிவாக சொல்லப் போனால் மாற்றவல்லது. என்றாலும் கூட இக்கட்டுரையில் ஆன்மீக தொடர்பு பற்றி நாம் பேசப் போவது இல்லை. அதிலும் குறிப்பாக வளர் இளம் பருவத்தில் பெண்களுக்கு ஏற்படக்கூடிய பாலியல் சார்ந்த பிரச்சினைகளை மட்டுமே இங்கு தொட்டுச் செல்லப் போகிறோம். மேலை நாட்டு மருத்துவமான ஆங்கில மருத்து வத்தில் நாம் முன்னர் பேசிய ஒருங்கி ணைந்த விஷயங்களான உடல் நலம், மனநலம், மூன்றாவதான சமூகநலம் என்ற மூன்றின் ஒருங்கிணைந்த நலப்போக்கு [Vintrgrated health perspective] அவ் வளவாகக் காணப்படுவதில்லை. ஆங்கில மருத்து வத்தில் நல் வாழ்க்கை எது என்று கேள்வி கேட்கப்படும் பொழுது அது சிக்கலான கேள்வியாக இருக்கிறது.

மனிதர்களின் நல் வாழ்வுக்கு பொறுப்புடைய அரசுகள் பெரும் பாலும் மேலை மருத்துவத்தின் அடிப்படையிலேயே பார்க்கின்றன. அரச மருத்துவமனைகள் மேலை நாட்டு மருத்துவத்தின் அடிப்படையி லேயே அமைந்திருக்கின்ற காரண த்தினால் பெரும் செலவில் மருத்துவ நிலையங்கள் (மருத்துவக்கல்வி + மருத்துவமனைகள்) நடத்தப்படுகின்றன. பல பரிசோதனை ஆய்வுகள், கருவிகள் சார்ந்தனவாகவே இருக்கிறன. அதனால் குணப்படுத்துதல் என்பது பணத்தின் அடிப்படையில் அமைந்து விடுகிறது. எல்லா மக்களுக்கும் சென்ற டையக் கூடிய மருத்துவம் மாற்று மருத்துவம் தான்; ஏனெனில் இது ஒரு ஒருங்கிணைந்த நல் வாழ்வுக் கொள்கை அடிப்படையில் அமைந்துள்ளது.

வளர் இளம் பருவத்தில் பாலியல் மாற்றம் மற்றும் பாலியல் உறுப்புகள் வளர்ச்சி காரணமாக ஒரு சுதந்திரப் போக்கினை மனதில் இனம் கண்டு கொள்ள முடியும். இது பெரும்பாலும் உடல் இயல் சார்ந்த



GTC நாணயமாக இருப்பவர்கள் ஒளிக்கும் அஞ்வதில்லை, இருளுக்கும் அஞ்சுவதில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாகவே இருக்கின்றது. இதுவரை பெற்றோர்கள் கூறும் ஆலோசனைக்கு முக்கிய த்துவம் கொடுத்து வந்த இந்த வளர் இளம் பருவத்தினர் தம் வயது ஒத்தவர்களின் ஆலோசனைகளுக்கே முக்கியத்துவம் தருவார்கள். இது சுதந்திரமான மனக்போக்கின் முதல் அறிகுறி ஆகும். இந்த கால கட்டங்களில் பெற்றோர்கள் தங்கள் கருத்துக்களை அறிவுரையாக கூறுவதை விடுத்து ஆலோசனை களாகக் கூறும் போக்கினைக் கைக்கொள்ள வேண்டும். குழந்தைத்தனமாக வாழ்க்கையை நோக்குகின்ற போக்கிலிருந்து இந்த பருவத்தினர்கள் முற்றிலும் விடுபட்டு விட்டார்கள் என்று சொல்ல முடியாது. ஆயினும் இவர்கள் வயது முதிர்ந்தவர்களாக தங்களை தாங்களே கருதிக் கொள்வார்கள். தங்கள் பாலியல் சார்ந்த பிரச்சினைகளை தங்கள் வயது ஒத்தவர்களிடமே பகிர்ந்து கொள்ளும் காரணத்தினால் அவர்களுடைய தோழமை யார், யாரிரோடு இருக்கின்றன என்பதிலும் பெற்றோர்கள் கவனமாக இருக்க வேண்டும். நல்ல பழக்க வழக்கங்களை உடையவர்களோடு பழகுவதற்கு ஊக்கப்படுத்த வேண்டும்.

ரகசியங்களை அறிந்து கொள்ளும் ஆர்வம் இந்த பருவத்தினரிடம் அதிகம் காணப்படும். எதிர் பாலினரிடம் அதிக கவர்ச்சி தோன்றக் கூடிய பருவம் இது. இதில் மிக அதிகமான கண்டிப்பு காட்டுவதன் மூலம் பெற்றோர்கள் தங்களிடமிருந்து வளர் இளம் பருவத் தினரை நெருக்கமான மன உறவு நிலையிலிருந்து தள்ளி வைத்து விடும் அல்லது கண்டு கொள்ளாத மனநிலை தோன்ற வாய்ப்பு ஏற்பட்டு விடும் [Distanting or indifferent attitude]. எதிர் பால் இனக்கவர்ச்சி காரணமாக தங்களை மிகவும் அழகுபடுத்திக் கொள்கின்ற ஆர்வ மிகுதியும் காணப்படும். கண்ணாடியின் முன்பு அதிக நேரம் நின்று தாங்களை முன்னும், பின்னும் பார்த்து தங்களாகவே தங்கள் தோற்றத்தை ரசிக்கும் போக்கும் காணப்படும். இதை மிகப்பெரிய தவறாக எண்ணிவிடக் கூடாது. அழகு சாதனங்கள் மூலம் தங்கள் அழகை மிகைப்படுத்திக் கொள்ள எண்ணுகின்ற இவர்களின் போக்கை வியாபார நோக்கோடு பயன்படுத்துகின்ற விளம்பரங்கள் இன்றைய கால கட்டத்தில் மிக மிக அதிகம். தொலைக்காட்சி விளம்பரங்கள் இந்த மனப்போக்கை முதலீடாக வைத்துதான் கொள்ளை லாபம் சம்பாதிக்கின்றன என்று சொன்னால் மிகையாகாது.

அன்பு என்பது ஒரு அற்புதமான உணர்வு. அது தீவிரமானதாக ஆகும்பொழுது அதனை காதல் என்றும் சொல்லலாம். இந்த அன்பு அல்லது பாசம் பரிமாற்றத்தின் மூலம் தான் புரிந்து கொள்ளப்படுகிறது. அன்னை குழந்தையிடம் கொள்ளும் அன்பு, ஆசிரியர்கள் மாணவர்களிடம் கொள்ளும் அன்பு, மனிதர்கள் மிருகங்களிடம் கொள்ளும் அன்பு, குடும்பத்தார்கள் இடையில் ஒருவருக் கொருவரிடம் ஏற்படுகின்ற அன்பு, மனிதர்கள் கடவுளிடம் கொள்ளும் அன்பு என்பதான பல பரிமாணங்கள் உண்டு. என்றாலும் கூட காதல் என்றவுடன் ஓர் ஆணுக்கும் ஒரு பெண்ணுக்கும் இடையில் ஏற்படுகின்ற அன்பு என்பதாக மட்டுமே பல சமயங்களில் தவறாகப் புரிந்து கொள்ளப்படுவதுண்டு. வளர் இளம் பருவத்தினரான ஆண், பெண் இடையே தோன்றும் இனக்கவர்ச்சி கூட பல சமயங்களில் தீவிரமான அன்பாக புரிந்து கொள்ளப் படுவதுண்டு. இவர்களுக்கிடையே ஏற்படக்கூடிய அன்பு பரிமாற்றம் உடலியல், பாலியல் ரீதியாக மாறி உடலுறவு கொள்ளுதல் என்னும் நிலையாக உருப் பெறுமேயானால் அந்த அன்புறவு திருமணம் எனும் உறவால் முழுமை பெறாமல் முறிந்து விடும் போது அது பெருமளவில் பெண்களைத்தான் பாதிக்கும் என்பதனை நாம் மறந்து விடக்கூடாது.








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிலும் ஆணாதிக்க சமூக அடிப்படையில் அமைந்துள்ள நம் இந்திய கலாச்சாரத்தில் இது போன்று பாதிப்புக்குள்ளாகிய ஆண்களை விட பெண்களுக்கு திருமண வாய்ப்பு என்பது மிகவும் அரிதாகி விடுவதாகவோ அல்லது திருமண வாழ்வுக்குப் பின் நிம்மதியற்ற வாழ்க்கையாக அமைந்துவிடவே கூடும்.

எனவே, வளர் இளம் பெண்கள் என்பது பற்றிய புரிதலை பக்குவமாக கற்றுத்தர வேண்டியது பெரியவர்களான எல்லாருடைய கடமையாகும். இது படிக்கின்ற குழந்தைகள் மற்றும் பணி செய்யும் குழந்தைகள் எல்லோருக்கும் பொருந்தக் கூடிய ஒன்றுதான். என்றாலும் பணி செய்யும் குழந்தைகளை விட பள்ளிக் குழந்தைகளிடம் இந்த காதல் வயப்படும் மனநிலை தோன்றும் போது படிப்பில் கவனம் சிதறுதல் காரணமாக தொடர்கல்வி கடுமையாக பாதிக்கப்படும்.

நம்மவர்களிடையே மனநல ஆலோசனைக்காக நிபுணர்களை கலந்து ஆலோசிக்கும் பழக்கம் மிகவும் குறைவு. அடிப்படை நிலையிலேயே இனம் கண்டு கொண்டால் மனச்சிதைவு ஏற்படும் நிலைக்கு தள்ளப்படாமல் தப்பிக்கலாம். ஆங்கில மருத்துவத்தை விட ஹோமியோபதி மற்றும் மலர்? மருத்துவங்களில் நல்ல குணம் பெற வாய்ப்புகள் உண்டு என்பதோடு மிகக்குறைந்த செலவிலேயே பூரண மிக்க நலம் பெற முடியும்.





துளியொரு வேட்கையுமுண்டு
எனது இயற்கையை
அதன் வழியே இயங்க
விட்டேன்.
பத்து நாட்களுக்குரிய அரிசியே
எனது பையில்,
ஒரு கட்டு விறகே
கணப்பில்.
மாயையோ நிர்வாணமோ
யார் உளறிக் கொட்டுவார்கள்?
புகழோ, செல்வமோ,
சரிநிகர் சாம்பல்களே
என்பதையும் மறந்து,
எனது கூரையில் விழும்
இரவு மழையின் இசையைக்
கேட்கிறேன்.
அமைதியாக நான்
அமர்ந்திருக்கிறேன்,
இரு கால்களையும் நீட்டிக்
கொண்டு.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெற்றிக்கான வைர வரிகள்

எஸ். ஆர். பானாயகம்
விடுகை வருடம், வர்த்தக நெறி




வெற்றியின் இரகசியம்
எடுத்த செயலில்
நிலையாக நிற்பதே

தெளிவாகத் திட்டமிடுதல்
வெற்றி மாளிகைக்கு
அடிப்படை

(கிளேடர்)

செய்வதற்கு எப்போதும்
வேலை இருக்க
வேண்டும்
அப்போது தான்
முனனேற முடியும்

(மில்டன்)

உலகம் மிகப் பரந்தது
அதில் அவர்கள்
முயற்சியைப் பொறுத்தும்
திறமையைப் பொறுத்துமே
எல்லோரும்
முன்னேறுகிறார்கள்

(ஜன்ஸ்டின்)

முறையான சிந்தனையால்
வெற்றி கிட்டுகிறது
கண்ணுறங்காக்
கவனத்தினால் அது
காப்பாற்றப் பெறுகிறது

(ஜேம்ஸ் ஆலின்)

சோம்பல் என்பது
மனத்தின் உறக்கம்

(பிரான்ஸ் பழமொழி)

சுறு சுறுப்போடு
இயங்கும் போது தான்
மனிதன்
ஒளிர்கிறான்

அருஞ்செயல்களை
நிறைவேற்றுவது
வலிமையினால் அல்ல
விட முயற்சியினால்


செயலை விதையுங்கள்
பழக்கம் உருவாகும்
பழக்கத்தை விதையுங்கள்
பண்பு உருவாகும்
பண்பை விதையுங்கள்
உங்கள் எதிர்காலம்
உருவாகும்

வேதனையைப் பொறுத்துக்
கொள்பவனே
வெற்றி பெறுவான்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஹதீஸ் கலையின் அடிப்படைச் சட்டவிதிகள்

ஏ.கே. தாஜுல் முனீர்
விடுகை வருடம், அரபு நெறி

இஸ்லாமிய மார்க்கம் இரண்டு அடிப்படையான அம்சங்களை மையமாக கொண்டுள்ளது. அதில் அல்குர்ஆனே அடிப்படை நூலாகும். ஆனாலும் அதில் கூறப்பட்டிருக்கும் அதிகமான அம்சங்கள் சுருக்கமாகவே இருப்பதனால் அதன் விரிவாக்கமாக நபி(ஸல்) அவர்களின் சொல், செயல், அங்கீகாரம் ஆகிய ஹதீஸினை இறைவன் ஆக்கியிருக்கின்றான். எனவே ஹதீஸ் என்பது இஸ்லாத்தின் இரண்டாவது அம்சமாகும். எனினும் அல்குர்ஆனைப் போலல்லாது ஹதீஸில் பிற்பட்ட கால முனாபிக்களால் பல ஹதீஸ்கள் இட்டுக்கட்டப்பட்டன. எனவே, இதனைத் தரப்படுத்தி ஹதீஸின் தூய்மையை பாதுகாக்கும் நோக்குடன் அறிஞர்களால் உருவாக்கப்பட்ட கலைகளே "உஸுலுல் ஹதீஸ் முஸ்தலஹுல் ஹதீஸ்,அஸ்மாஉர் ரிஜால், இல்முல் ஜரஹ் வத்த..தீல்" என்பனவாகும். எனவே இச்சிறு கட்டுரையில் இக்கலை சம்பந்தப்பட்ட முக்கிய சில விடயங்களை சுருக்கமாக ஆராய்வோம்.

ஹதீஸ்களை அறிவிப்பாளரின் எண்ணிக்கையை அடிப்படையாக வைத்து இரு பிரிவுகளாக பிரிக்கலாம்.

1. அல் - முதவாதிர்
2. அல் - ஆஹாத்

அல் முதவாதிர் என்பது அறிவிப்பாளர் எவரும் பொய்யுரைத்தல் சாத்திய மாகாது எனக் கருதக் கூடிய, எண்ணிக்கையில் அதிகமான அறிவிப்பாளர்களால் அறிவிக்கப்படும் ஹதீஸாகும். இவ் விதிக்குட்பட்ட ஹதீஸ் இஸ்லாமிய அறிஞர்களிடையே மிக ஆதாரபூர்வமான ஹதீஸாக கருதப்படுகிறது.

அல் - ஆஹாத் என்பது முதவாதிர் எனும் ஹதீஸ் வகையின் அறிவிப்பாளர்களின் எண்ணிக்கையை எவ்வகையிலும் அடையாத ஹதீஸ்க ளாகும்.

இதன் உப பிரிவுகளாவன:-

1.அ. அல் - மஷ்ஹூர் :- இது முதவாதிருடைய எல்லையை அடையாமல் ஒவ்வொரு படித்தரத்திலும் (ஸஹாபி, தாபிஈ, தபஉத்தாபிஈ) மூன்று அல்லது அதற்கு மேற்பட்டவர்களால் அறிவிக்கப்பட்ட ஹதீஸ்.

ஆ. அல் - அஸீஸ் :- இது ஒவ்வொரு படித்தரத்திலும் ஆகக் குறைந்தது இரண்டு அறிவிப்பாளர்களைக் கொண்டிருக்கும் ஹதீஸாகும்.

இ. அல் - கரீப் :- ஒரு இஸ்னாதின் (அறிவிப்பாளர் வரிசையில்) முழுத் தொடரிலோ அல்லது ஏதாவதொரு தரத்திலோ ஓர் அறிவிப்பாளரை மட்டும் கொண்டிருக்கும் ஹதீஸ்

ஆஹாதான ஹதீஸ் இரு பிரிவுகளாக பிரிக்கப்படுகிறது.

1. மக்பூல்        2. மர்தூத்

மக்பூல் - இது அறிவிப்பாளர்களின் நம்பகத்தன்மை சரி காணப்பட்ட ஹதீஸாகும். இவ்வகை ஹதீஸ்களை கொண்டு அமல் செய்வது வாஜிப் ஆகும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மர்தூத் - இது அறிவிப்பாளர்களின் நம்பகத்தன்மை சரி காணப்படாத ஹதீஸாகும். இவ்வகை ஹதீஸ்களை கொண்டு அமல் செய்வது கூடாது என அறிஞர்கள் தீர்ப்பளிக்கின்றனர்.

**மக்பூலான ஹதீஸின் வகைகள்.**

மக்பூலான ஹதீஸ் படித்தர வேறு பாட்டிற்கேற்ப நான்கு பிரிவுளாக பிரிக்கப்பட்டுள்ளது. அவையாவன,

ஸஹீஹ் லிதாதிஹி :- ஒரு ஹதீஸின் அறிவிப்பாளர் வரிசை அதன் ஆரம்பம் முதல் இறுதி வரை, நேர்மையான நன்கு மனன சக்தியுடையவர்களைக் கொண்டிருக்கும் ஹதீஸ் ஆகும்.

ஹஸன் லிதாதிஹி :- ஒரு ஹதீஸின் அறிவிப்பாளர் வரிசை நேர்மையான குறைந்த மனன சக்தியுடையவர்களைக் கொண்டிருக்கும் ஹதீஸ் இவ் வகையைச் சாரும்.

ஸஹீஹ் லிகைரிஹி :- இது ஹஸன் லிதாதிஹியைச் சார்ந்ததாக இருந்தாலும் அதைவிட சற்று பலமானது.

ஹஸன் லிஹைரிஹி:- இது ஹதீஸாகும். ஆனால் பல அறிவிப்பாளர் வரிசைகள் இதிலிடம் பெறுவதால் இது ஏற்றுக் கொள்ளப்பட்டதாக மாறுகின்றது.

**மர்தூதான ஹதீஸின் வகைகள்**

இது பொதுவாக ழஈபான ஹதீஸையே குறிக்கிறது. ழஈபான ஹதீஸ் எனும் போது ஸஹீஹான ஹதீஸின் பண்புகளோ ஹஸனான ஹதீஸின் பண்புகளோ காணப்படாத ஹதீஸாகும்.

மர்தூதான ஹதீஸ் கீழ்கண்டவாறு வகைப்படுத்தப்பட்டுள்ளது.

01. முஅல்லகி :- ஒரு இஸ்னாதின் ஆரம்பத்தில் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட அறிவிப்பாளர் / அறிவிப்பாளர்கள் விடுபடல்.

02. முர்ஸலி:- ஒரு ஹதீஸின் அறிவிப்பாளர் தொடரில் ஸஹாபியை விட்டு ஒரு தாபிஈ நேரடியாக றஸூல் (ஸல்) அவர்களிடமிருந்து அறிவிக்கும் ஹதீஸ்

03. முஅல்லலீ:- ஒரு இஸ்னாதில் தொடர்ச்சியாக இரண்டு அறிவிப்பாளர்கள் ஓரிடத்திலோ அல்லது அதற்கு மேற்பட்ட இடங்களிலே விடுபட்டிருக்கும் ஹதீஸ்.

04. முதல்லஸீ :- வெளிப்படையாக நன்றாக தெரிந்தாலும் இஸ்னாதில் ஒரு குறையை மறைத்து வைக்கப்பட்டுள்ள ஹதீஸ்.

05. முன்கத:- ஒரு இஸ்னாதின் மத்திய பகுதியில் ஓர் அறிவிப்பாளர் விடுபட்டுள்ள ஹதீஸ்.

06. முர்ஸல் கபிய் :- ஒரு அறிவிப்பாளர் தான் சந்தித்தவரிடமிருந்து அல்லது சம காலத்தில் வாழ்ந்தவரிடமிருந்து அவர் கேட்காத ஒரு ஹதீஸை அவர் சொல்ல தான் கேட்டதாக அறிவிக்கும் ஹதீஸ்.

மர்தூதான ஹதீஸ் அதன் அறிவிப்பாளரின் தகைமைகளை மையமாக வைத்து இன்னும் பல பிரிவுகளாக பிரிக்கப்படுகிறது. அவற்றில் சிலதை இங்கு காண்போம்.

மவ்ழூஉ:- இது நபி மீது இட்டுக்கட்டப்பட்ட ஹதீஸ்களைக் குறிக்கும். இதை அறிவித்தவன் நபியவர்கள் மீது பொய்யுரைத்தவன் எனக் குற்றம் சாட்டப்படுகிறான். இவ்வாறு இட்டுக்கட்டுவது மிகப் பெரும் பாவமாகும்.

முன்கர்:- ஒரு ஹதீஸின் இஸ்னாதில் பொய்யைக் கொண்டு குற்றம் சாட்டப்பட்ட நபரொருவர் இடம்பெறல்.

ஷாத் :- ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒருவர்,





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரை விட மிக ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒருவருக்கு அல்லது பலருக்கு மாற்றமாக அறிவித்தல்.

இவற்றைத் தவிர ஹதீஸ் இறுதியாக யாருடன் இணைக்கப்படுகிறது. என்ற அடிப்படையில் கீழ் வரும் நான்கு பிரதான பிரிவுகளாக வகைப்படுத்தப்பட்டுள்ளது.

01. அல் ஹதீஸுல் குத்ஸி :- இது அல்லாஹ் கூறுவதாக றஸூல்(ஸல்) அவர்கள் அறிவித்த தாக ஹதீஸ் ஆகும்.

02. மர்பூஉ :- இது ஒரு ஹதீஸின் இஸனாத் நபி(ஸல்) அவர்கள் வரை சென்று அவர்களின் சொல், செயல், அங்கீகாரம் முதலான வற்றில் முடிவடைவதாகும்.

03. மௌகூப் :- இது ஒரு ஹதீஸின் இஸ்னாத் ஸஹாபி வரை சென்று அவரோடு முடிவடைவதாகும்.

04. மக்தூஉ :- இது ஒரு ஹதீஸின் இஸ்னாத் தாபிஈ வரை சென்று அவருடன் முடிவடைதாகும்.

இவ்வாறான இக் கலையின் சில முக்கிய பிரிவுகளையும் அது பற்றிய சுருக்கமான விளக்கங்களையுமே இங்கு அவதானித் தோம். எனவே, தூய ஹதீஸ்களை மிக நுணுக்கமாக வடிகட்டும் இக்கலையை நாமும் கற்று அதன் தூய வடிவத்தோடு எமது வாழ்வை அமைத்துக் கொள்ள அல்லாஹு துணை புரிவானாக. ஆமீன்

உசாத்துணைகள்

1. தய்சீறுல் முஸ்தலஹில் ஹதீஸ்
2. முகத்தமதுல் மிஷ்காத்

# குடிப்பதை நிறுத்து

**சனீஹா சரிப்தீன்**
*விடுகை வருடம், இஸ்லாம் நெறி*

வடிவடித்து விற்பவனோ
பணத்தைச் சேர்க்கிறான்
வம்பு கும்பாய்க்குடிக்கும் நீயோ
வருந்திச் சாகின்றாய்!

உடல் வருந்தி மாடாக
நாளும் உழைக்கின்றாய்
உடம்பை உருக்கும் மதுவிற்காய்
பணத்தைக் கொடுக்கின்றாய்!

குடித்ததனால் கண்ட சுகம்
உலகில் ஏதடா?
உன் குடும்ப வாழ்வு உயரந்திடவே
நீயும் நினைத்ததுண்டா?

மதுவை விட்டால் உயர்ந்திடுவாய்
என்பதனை மனதில் வையடா
மனைவி மக்கள் மதித்திடுவர்
என்பதனை நினைந்து வாழடா!







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# MODERN DICTIONARY OF COOL MEANINGS.

S. Maheswaran
2nd Year, English

**Cigarette** :- A pinch of tobacco rolled in paper with fire at one end and a fool at the other.

**Conference** :- The confusion of one man multiplied by the number present

**Compromise** :- The art of deviding a cake in such a way that everybody believesgot the biggest

**Classic** :- A Book which people praise,but do not read

**Committee** :- Individuals who can do thing indiuidvally and sit to decide that nothing can be

**Doctor** :- A person who kills your ills by pill and kills you with his bills

**Dictionary** :- A place where divorce comes before marriage

**Diplomat** :- A person who tells you to go to hell in such a way that you actually look forward to the trip

**Live affairs** :- Something like cricket where one - day internationals are more popular than a five day test

**Marriage** :- It's an agreement in which a man loses his bachelor degree and a
woman gains her master.

**Divorce** :- Future tense of marriage.

**Lecture** :- An art of transferring information from the notes of the lecturer to the notes of the students without passing through the minds of either.

**Conference Room**:- A place where everybody talks, nobody listens and every body disagree later on



கடவுள் உலகை எப்படி ஆண்டு வருகிறார் என்பதைப் பார்க்க நான் பத்திரிகைகளைப் படிக்கிறேன். GTC

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**Experiience** :- The name, men give to their mistakes.

**Ecstasy** :- A feeling when you feel you are going to feel & feeling you never felt before.

**Etc** :- A sign to make other believe that you know more than you actually do

**Father** :- A banker provided by nature.

**Miser** :- A person who lives poor so that he can die rich

**Boss** :- Someone who is early when you are late and late when you are early

**Office** :- A place where you relax after your stren home life.

**Opportunist** :- A person who starts taking bath if he accidentally falls into a river

**Optimist** :- A Person who while falling from Eiffel Tower says in midway see I am not injured yet.

**Politician** :- One who shakes your hand before elections and your confidence after.

**Pessimist** :- A person who says that O is the last letter in ZERO, instead of the first letter in word OPPORTUNITY.

**Criminal** :- A guy no different from the rest..............Except that he got caught.

**A tom - Bomb**:- An invention to end all inventions.

**Tears** :- The hydraulic force by which masculine will power is defeated by feminine water power.

**Smile** :- A curve that can set a lot of things straight

**Philosopher** :- A fool who torments himself during life, to be spoken of when dead.

**Yawn** :- The only time some married men ever get to open their mouth.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இஸ்லாமிய குற்றவியல் சட்டம் தனி மனித, சமூகத்திற்கு ஒரு பாதுகாப்பு அரண்



முஹம்மது ஹனீபா ஆஸியா
விடுகை வருடம், இஸ்லாம் நெறி

மனிதன் தோற்றம் பெற்ற காலத்திலிருந்தே குற்றங்களும் தோற்றம் பெற்று விட்டன. அன்று முதலே அக்குற்றங்களுக்கான தண்டனைகளும் தோற்றம் பெற்று விட்டன. ஆதி மனிதன் நபி ஆதம் (அலை) அவர்கள் இறைவனின் கட்டளையை மீறியதால் குற்றமிழைத்தவராகக் கருதப்பட்டார். அதற்கான தண்டனையாக அவர் தம் துணைவியாருடன் சுவன வாழ்விலிருந்து அப்புறப்படுத்தப்பட்டு இப்புவி வாழ்க்கைக்கு இருவேறு திசைகளுக்கு தூக்கியெறியப்பட்டார். அதாவது இறைவனின் கட்டளைக்கு அடிபணியத் தவறியமையால் அன்றே தண்டனைகளை அனுபவிக்க வேண்டி ஏற்படுகின்றது. திருமறையிலே அல்லாஹ் சமுதாய விரோதக் குற்றச் செயல்கள் எவையென்பதையும், அவற்றிற்கான தண்டனைகளையும் வகைப்படுத்தி வரையறை செய்து தந்துள்ளான். இச்சட்ட வரையறைகளை எவராலும் மாற்றத்துக் குட்படுத்த முடியாதென்பது நிதர்சனமாகும்.

## குற்றச் செயல் என்றால் என்ன?

ஒரு தனிமனிதனோ அல்லது குழுவினரோ பிறருக்குப் பாதிப்பு ஏற்படுத்தக் கூடிய காரியங்களைச் செய்தல் அல்லது செய்யத்தூண்டுதல் குற்றச்செயல் எனக் கொள்ளப்படுகினறது. அதாவது ஒழுக்க விழுமியங்கள் நிறைந்த ஒரு சமூக வாழ்விற்கு ஊறுகளோ, இழுக்குகளோ ஏற்படுத்தக் கூடியனவாக அமைகின்றவற்றைக் கண்டிக்கின்றோம். தடுக்கப்பட வேண்டுமென ஒத்துக் கொள்கின்றோம். எனவே இவ்வாறானவைகளே குற்றச் செயல்களாகக் கருதப்படுகின்றன.

## குற்றச் செயல்களின் வகைகள்::

இவ்வாறாகச் சமூகத்திற்குப் பாதிப்பையேற்படுத்தி சீரழிவை உண்டு பண்ணக்கூடிய சமூக விரோதக் குற்றச் செயல்களான பாரிய குற்றங்களாக றித்தத்,இஸ்லாத்தை விட்டு மதம்மாறுதல், கொலை செய்தல், விபச்சாரம், களவு, அவதூறு கூறல், மதுவருந்துதல் என்பவற்றைச் சுட்டிக்காட்டி அவற்றிற்கான தண்டனை முறைகள், நிபந்தனைகள் போன்றவற்றையும் விளக்கமாகக் காட்டித் தந்துள்ளது.

### 01. றித்தத்::

மதமாற்றம் எனும் இச்செயல் தங்கள் மார்க்கத்தை இழிவுபடுத்துவதாகவும், கேலி செய்வதாகவும், ஏனைய முஸ்லிம்களை வழிகெடுப்பதாகவும் அமைவதால் இதற்கான தண்டனையாக முதலில் எச்சரிக்கையும், அனுசரித்து மீண்டுவராத விடத்து மரண தண்டனையும் தீர்வாக மேற்கொள்ளப்படுகின்றது. இது குறித்து நபி (ஸல்) அவர்கள் கூறுகையில் "எவன் மதம் மாறினானோ அவனைக் கொலை செய்து விடுங்கள்" எனக் கூறியுள்ளார்கள்.



உண்மை உங்களுக்குத் தெரிந்திருக்கும் போது மற்ற மனிதருக்கு அஞ்சி அதைக் கூறாமல் இருந்து விடாதீர்கள். GTC

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**02. கொலை ::**

ஒருவர் இன்னொருவரைக் கொலை செயதால், அதற்குத் தண்டனையாக கொலை செய்தவரை அதே முறையில் கொலை செய்தல் அல்லது கொலை செய்யப்பட்டவரின் குடும்பத்தினர் நட்டஈட்டைப் பெற்றுக் கொள்ளல் அல்லது குடும்பத்தினர் விரும்பினால் கொலையாளியை மன்னித்தல் போன்ற தீர்ப்புகளை வழங்கலாம். இது பற்றி அல்குர்ஆன் "எவனொருவன் ஒரு ஆத்மாவைக் கொலைக்குப் பிரதியாக வோ அல்லது பூமியில் குழப்பத்தைத் தடை செய்வதற்காகவோ அன்றி கொலை செய்கின்றானோ அவன் மனிதர்கள் எல்லோரையும் கொலை செய்தவனாவான்" எனக் கூறுகின்றது.

**03. விபச்சாரம் ::**

சட்டப்படி நிறைவேறிய திருமணத்தைக் கொண்டன்றி ஓர் ஆண் இன்னொரு பெண்ணுடனோ, ஒரு பெண் இன்னோர் ஆணுடனோ தகாத உறவு கொள்வ தையே இஸ்லாம் விபச்சாரம் எனக் குறிப்பிடுகின்றது. இது பற்றி அல்குர்ஆனிலே ஸூறதுந் நூறில் பின்வருமாறு அல்லாஹ்" கூறியுள்ளான். "விபச்சாரம் செய்த பெண், விபச்சாரம் செய்த ஆண் இவர்களில் ஒவ்வொரு வரையும் 100 கசையடிகள் அடியுங்கள், மெய்யாகவே நீங்கள் அல்லாஹ்" வையும், மறுமை நாளையும் விசுவாசம் கொண்டவர்களாகயிருந்தால் அல்லாஹ்" விதித்த இக்கட்டளையை நிறைவேற்று வதில் அவர்களுடைய விசயத்தில் உங்களுக்கு இரக்கம் ஏற்படக் கூடாது. அவ்விருவருக்கும் தண்டனையாக வேதனை கொடுக்கும் சமயத்தில் விசுவாசிகளில் ஒரு குழுவினர் அதற்கு சாட்சியாக அங்கிருக்கவும்" இது தொடர்பில் நபி (ஸல்) அவர்கள் கூறியதாக உபாதா பின் ஸாமித் (றழி) அவர்கள் குறிப்பிடும் போது "மணம் முடித்தவர்கள் விபச்சாரத்திலீடுபட்டால் 100 கசையடிகளுடன் கல்லெறிந்து கொல்லப்பட வேண்டும்" எனக் குறிப்பிட்டார்கள். அத்தோடு பின்வந்த இமாம்கள், பெரியார்கள் மத்தியில் இது தொடர்பில் "விபச்சாரிகள் மணமான வர்களாயின் 100 கசையடிகளும், கல்லெறிந்து கொல்லுதலும், மணமா காதவர்களாயின் 100 கசையடிகளும், ஒரு வருடத்திற்கு நாடு கடத்துவதும் தண்டனையாகும்" என்றொரு கருத்தும் நிலவி வந்திருக்கின்றமை குறிப்பிடப்பட வேண்டியதாகும்.

அது மாத்திரமன்றி இவ்விடயத்தில் அடிமைப் பெண்கள், அல்லது ஆண்கள் தொடர்புற்றால் அவர்களுக்கான அத் தண்டனை அரை வாசியாகக் குறைக்கப்படும் எனவும், நபிகளார்(ஸல்) அவர்களின் மனை வியரில் எவரும் இக்குற்றச் செயலிலீடுபட்டால் அவர்களுக்கான தண்டனை இரட்டிப் பாக்கப்பட வேண்டுமெனவும் "அல்குர்ஆன்" கூறியிருக்கின்றது.

**04. திருட்டு ::**

திருட்டுக்கான தண்டனை பற்றி அல்குர்ஆன் பின்வருமாறு குறிப்பிடு கின்றது "ஆணோ, பெண்ணோ எவர் திருடினாலும் அத்தீய செயலுக்குத் தண்டனையாக அவர்களின் கரங்களைத் துண்டித்து விடுங்கள். அது அல்லாஹ்" வினால் ஏற்படுத்தப்பட்ட எடுத்துக் காட்டான தண்டனையாகும்"

**05. அவதூறு கூறல் ::**

ஒருவர் மற்றொருவர் மீது வேண்டுமென்றோ, ஆதாரமின்றியோ அவதூறு கூறினால் அவர் ஆணாயினும் சரி அல்லது பெண்ணா யினும் சரி





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களுக்கு 80 கசையடிகள் வழங்கப்படும். கற்புடைய பெண்கள் மீது அவதூறு கூறுவோருக்கான தண்டனை பற்றி அல்குர்ஆனில் ஸூறதுந் நூர் பின்வருமாறு கூறுகின்றது.

"எவர் கற்புடைய பெண்கள் மீது அவதூறு கூறி அதற்கு வேண்டிய நான்கு சாட்சிகளைக் கொண்டு வரவில்லையோ அவர்களை நீங்கள் 80 கசையடிகள் அடியுங்கள். பின்னர் அத்தகையவர்கள் கூறும் சாட்சியத்தை எக்காலத்திலும் ஒப்புக் கொள்ளாதீர்கள். ஏனென்றால் அவர்கள் நிச்சயமாக வரம்பு மீறிய தீயவர்கள் "

கற்புடைய பெண்டிர் விடயத்தில் மாத்திரமன்றி ஆடவர் விடயத்திலும் இஸ்லாம் இதனையே குறித்து நிற்கின்றது.

**06. மது அருந்துதல் ::**

மதுபானம் அல்லாஹ்வால் முற்றாகத் தடைசெய்யப்பட்ட ஒன்றாகும். இது பற்றி அல்குர்ஆனிலே அல்லாஹ் கூறும் போது "மதுபானம், சூதாட்டம், சிலைவணக்கம், குறிபார்த்தல் போன்றவை சைத்தானின் வேலைகளாகும்" என்று கூறியுள்ளான். அல்லாஹ்வால் விலக்கப்பட்ட ஒன்றைச் செய்வது குற்றமாகையால் நபி (ஸல்) அவர்கள் இக்குற்றச் செயலுக்கான தண்டனையாக 40 கசையடிகள் வழங்கவேண்டுமெனத் தீர்த்துத் தண்டித்ததாக அனஸ் (றழி) அவர்கள் மூலம் ஒரு ஹதீஸ் அறிவிக்கப்படுகின்றது.

**தண்டனை வழங்கலின் நிபந்தனைகள் ::**

இஸ்லாம் சமூகவிரோதச் செயல்களாக கருதுகின்ற இக் குற்றங்களுக்கான தண்டனை வழங்கலின் போது பல நிபந்தனைகளைக் கவனத்திற் கொள்கின்றது. உதாரணமாக கொலைக் குற்றத்திற்கான தண்டனை வழங்கலின் போது கொலை செய்யப்பட்ட முறை, சூழ்நிலை, பின்னணி என்பவற்றைத் தீர ஆராய்கின்றது. கொலையுண்டவரின் உறவினர்கள் தாங்கள் விரும்பினால் கொலையாளியிடமிருந்து தண்டப்பணத்தைப் பெறுவதற்கோ அல்லது கொலையாளியை முழுமையாக மன்னிப்பதற்கோ முடியும் என நிபந்தனையளிக்கின்றது. அதே போல் விபச்சாரம் குற்றத்திற்கான தண்டனை வழங்கலின் போது குற்றவாளிகள் திருமணமானவர்களா, இல்லையா, அடிமைகளா என அலசி ஆராய்ந்து, அவர்கள் குற்றச் செயலில் ஈடுபட்டதற்கான நேரடி சாட்சியாளர்கள் 4 பேர் உள்ளனரா என்பதையும் ஆராய்ந்து பின்பே தீர்வாக தண்டனை வழங்குகின்றது.

அதே மாதிரி திருட்டுக் குற்றத்திற்கான தண்டனை வழங்கலின் போது திருடியவரின் மனோநிலை, வயது, வாழ்க்கைத்தரம் (பொருளாதார நிலை) அத்தோடு சமூக நிலவரம் என்பவற்றையும், திருட்டுப் போன பொருளின் பெறுமதி உரிமை, தன்மை, இடம், என்பவற்றையும் கவனத்திற் கொண்டு தீர்ப்புக் கூறுகின்றது. உதாரணமாக பாதுகாப்பற்ற கவனிப்பாரற்ற இடத்தில் வைக்கப்பட்ட பொருட்களிலிருந்தோ தனக்கு எவ் வகையிலாவது உரிமையான பொருளிலிருந்தோ ஒருவர் எடுத்திருப்பின் அது கரச்சேதம் வழங்கப்படக் கூடியதாகாது. அது மாத்திரமன்றி வறுமையின் காரணமாக ஏற்பட்ட பசிக் கொடுமையை அடிப்படையாக வைத்து பட்டினி நிலையிலுள்ள ஒருவர் திருடியிருப்பின் அதற்கும் கரச் சேதம் வழங்காது குறைந்தளவு தண்டனை வழங்கப்படல் அல்லது தண்டனையை தவிர்த்தல் வேண்டுமென இஸ்லாம்


யார் துன்பத்தை அதிகமாக அனுபவிக்க முடியுமோ அவரால்தான் சிறப்பான பணிகளை மூழக்க முடியும். GTC
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயம்புகின்றது.

மேலும் றித்தத்திற்கான தண்டனை வழங்கலின் போது றித்தத்திற்குட் பட்டவரை அணுகி, அதிலிருந்து மீண்டு இஸ்லாத்திற்கு வரும் படி போதனை செய்து, எச்சரிக்கை விடுத்து அழைக்குமாறு பணிக்கின்றது. உடன்பட்ட பட்சத்திலேயே மரண தண்டனை விதிக்கின்றது. இவ்வாறாக ஒவ்வொரு குற்றச் செயல் புரிவோருக்கும் தண்டனை வழங்கு முன்னர் பல்வேறு நிபந்தனை களைக் கருத்திற் கொள்ளுமாறு இஸ்லாம் கட்டளையிடுகின்றது.

**தண்டனைகள் நியாயமானவை ::**

அக் காலத்திலும், தற்காலத்திலும் இஸ்லாமிய தண்டனை முறைகள் பற்றி பல்வேறு தப்பபிப்பிராயங்கள் நிலவி வருவதைக் காண முடிகின்றது. அதாவது இஸ்லாமிய தண்டனை முறைகள் பயங்கரமானவை, கொடூ ரமானவை, கண்மூடித்தன மானவை, காட்டு மிராண்டித் தனமானவை போன்ற தப்பபிப் பிராயங்கள் சமூகத்திலும், சூழலிலும் நிலவுகின்றன.

இஸ்லாமிய தண்டனை முறைகள் வெளிப்பார்வைக்குக் கொடூரமான வையாகத் தோன்றிலும் அதன் அடிப்படை நன்னோக்காக அமைவ தைக் காணலாம். அதாவது இஸ்லாம் வழங்கும் தண்டனைகள் மொத்தமாக தனி மனித சமூக சுதந்திரத்தையும், உரிமைகளையும் பாதுகாத்து உறுதிப் படுத்தி சமூக சீர்திருத் தத்தையுண்டு பண்ணும் நோக்கிலேயே காணப் படுகின்றன.

குற்றச்செயல்கள் நிகழ அவசியமற்ற ஒரு பூரண வாழ்க்கைத் திட்டத்தையும், வழிகாட்டல் முறைகளையும் வழங்கி விட்டு, குற்றங்கள் நிகழ முடியாத ஒரு சூழ்நிலையும் உருவாக்கி விட்டு, குற்றங்கள் நிகழ்ந்ததற்கான காரணங்கள், பின்னணிகள், சாட்சியங்கள் என்ப வற்றையும் ஆராய்ந்து, எச்சரித்து அதன் பின்பே தண்டனை என்ற முடிவுக்கு வருகின்றது.

அதிலும் குற்றங்களின் தரத்திற்கும், குற்றவாளியின் நிலைப்பாட்டிற்கும் ஏற்பவே கசையடி, நாடுகடத்தல், சிறைத்தண்டனை, கரச்சேதம், சிரச் சேதம் என தண்டனை வேறுபடுத்தப் பட்டிருக்கின்றன. அத்தோடு தண்டனை வழங்கலின் போது சாதி, குல, நிறப் பாகுபாடுகளின்றி அனைவரும் சமத்துவமாக நோக்கப்படல் வேண்டும். அத்தோடு தண்டனைகள் விதிக்கும் முன்னர் குற்றச் செயலிலே ஈடுபடுவதற்கு மனிதனைத் தூண்டும் காரணிகளை அகற்றுதல், குற்றத்தில் சம்பந்தப்பட்ட பின்னும் சாட்சியங்களின்மையால் நிரூபிக்கப்படாது சிறிதேனும் சந்தேகம் எழுந்தாலும் தண்டனை கொடுக்கா திருத்தல். ஆகிய இரு காரணங்களுமே தண்டனைகள் நியாயமானவை என்பதைத் தெளிவுபடுத்தப் போதுமான ஆதாரங்களாக அமைகின்றன.

**இஸ்லாமிய தண்டனைகளின் விளைவுகள் ::**

குற்றவாளிக்குத் தண்டனையாக அமைவதோடு பிறருக்குப் படிப் பினையாகவும் அமைகிறது. தண்ட னைகள் பகிரங்கமாக நிறைவேற்ற ப்படுவதால் குற்றம் புரிவோரின் எண்ணிக்கைகள் குறைவடைவதோடு, சமூக சீர்திருத்தமும் துரிதப்படுத்தப் படுகின்றது. உதாரணமாக மதம் மாறியவனுக்கு மரணதண்டனை வழங்குவது.

1. தூய இஸ்லாமிய சூழல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உருவாவதற்கும்,

2. இஸ்லாத்தைப் பற்றித் தப்பபிப் பிராயங்கள், பிழையான விமர்ச னங்கள் அவன்(முர்தத்) வாழும் சமூகத்திற்கு சேராமலிருப் பதற்கும்,

3. இஸ்லாமியக் கட்டுக்கோப்பிற்கு ஊறுவிளையாதிருப்பதற்கும்,

4. இஸ்லாத்தில் அவன் வாழ்ந்த காலத்தில் அல்லாஹு"வைப் பற்றி அறியாதிருந்ததற்கும்,

5. ஏனையவர்கள் வழிகெட்டுப் போகாதிருப்பதற்கும்,

6. அனைவரும் படிப்பினை பெற்றுக் கொள்வதற்கும், போதியதொரு தீர்வாக அமைகின்றது.


குற்றச் செயல்களிலிருந்து தவிர்ந்து வாழ்வதற்காக இஸ்லாம் ஏற்படுத் தியுள்ள வழிவகைகள் :-

வாழ்வதற்காக மனிதனைப் படைத்த அல்லாஹ் அவன் நேரிய, சீரிய முறையில் வாழ்வதற்கான வழிகாட்டல் களையும், வாழ்க்கைத் திட்டத்தையும் வழங்கியுள்ளான். அதாவது குற்றங்கள் ஏற்பட்ட பின் தண்டனைகளைத் தேடி ஆராய்வதை விட, குற்றங்கள் நிகழ முடியாத ஒரு சூழலையும் சமூக அமைப்பையும் உருவாக்கியுள்ளது. குற்றங்களைத் தூண்டக் கூடிய சூழ்நிலைகளை ஒழிக்க வேண்டுமென கட்டளையிடுகின்றது. சமூகத்தில் பொருளாதார ஏற்றத்தாழ்வைக் குறைப்ப தற்காக ஸகாத் என்ற கட்டாயக் கடமையையும், விதித்துள்ளது. பாலியல் குற்றங்களைக் குறைப்பதற்காக உரிய வயதில் திருமணம் செய்து கொள்வதையும், திருமணம் செய்ய வசதியற்றிருப் போருக்கு பைத்துல்மால் நிதியிலிருந்து உதவிய ளிப்பதையும் இஸ்லாம் விரும்புகின்றது. அத்தோடு பலதார மணத்தையும் அறிமுகப்படுத்தியுள்ளது. பாலியல் உணர்ச்சிகளைத் தூண்டக் கூடிய காரணிகளை இஸ்லாம் தடைசெய்துள்ளது. அத்தோடு ஆண், பெண் அவசியமின்றிக் கலந்துறவாடுவது, ஆபாசமான இச்சைகளைத் தூண்டக் கூடிய சினிமாப்படங்களைப் பார்பபது, பாடல்களை இசைப்பது, அவற்றைத் தொலைக்காட்சியில் காட்டுவது போன்ற சமூக விரோதச் செயல்களுக்கு இஸ்லாம் ஆதரவளிக்க வில்லை.

மாறாக இத்தகைய குற்றங்கள் நிகழாதிருக்கக் கூடிய முன்தடுப்பு முறைகளை அல்லாஹ் அல்குர் ஆனிலே அருளியுள்ளான். நபி(ஸல்) அவர்கள் தமது சொல், செயல்களால் முன்மாதிரியாகக் காட்டியுள்ளார்கள். இந்த வகையில் இஸ்லாமிய குற்றவியல் சட்டத் தண்டனைகள் தனிமனிதனுக்கு சமூகத்திற்கு ஒரு பாதுகாப்பு அரணாகத் திகழ்வதை யாரும் மறுப்பதற்கில்லை.

## அதே கண்கள்..?

அண்ணனும் நோக்கினான்!
அவளும் நோக்கினாள்! -
அடித்து
நொறுக்க அவள் அப்பனும்
நோக்கினான்!





கடமையைச் செய்யாமல் உரிமையைக் கேட்பது கலகம், உரிமையின்றிக் கடமையைச் செய்வது அடிமைத்தனம். GTC

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பராலிம்பிக் போட்டிகள் எவ்வாறு அறிமுகமாகின?

திருமதி. கோமளச் செல்வி
விடுகை வருடம், உடற்கல்வி நெறி

பராலிம்பிக் போட்டியானது எவ்வாறு அறிமுகமாகியது? இதன் பின்னணி என்ன என்பதை சற்று ஆராய்வோம்.

பராலிம்பிக் போட்டியானது உடல் அவயவங்களை இழந்த அல்லது அங்கவீனமானவர்களுக்கென்றே நடத்தப்படுகின்ற போட்டிகளாகும். லுட்விக் குட்மன் என்பவரே இந்த போட்டிகளின் ஆரம்பகர்த்தாவாக இருந்தவராவார். ஜேர்மனியரான இவர் ஒரு நரம்பியல் மருத்துவராவார். நாஸிப் படையினரிடமிருந்து தப்பிப்பதற்காக 1939 ஆம் ஆண்டில் இவர் இங்கிலாந்திற்குச் தப்பிச் சென்றிருந்தார். இதனையடுத்து இரண்டாம் உலக யுத்தத்தின் பின்னர் 1948 ஆம் ஆண்டில் இங்கிலாந்தின் ஸ்டோக் மென்டவில் எனும் இடத்தில் மருத்துவமனையொன்றில் கடமையாற்றிக் கொண்டிருந்த இவரது மனதில் ஒரு புதிய எண்ணம் உதித்தது. அதாவது உடல் அவயவங்களை இழந்தவர்கள் அல்லது அங்க வீனமானவர்களை மீட்டெழச் செய்ய நல்லதோர் சிகிச்சை முறையாக விளையாட்டானது அமையும் என்று அவர் திடமாக நம்பினார்.

1948 ஆம் ஆண்டில் லண்டன் ஒலிம்பிக் போட்டிகள் நடைபெற்றன. ஜுலை 29 ஆம் திகதியன்று அங்கவீனமான வர்களுக்கான ஒலிம்பிக் போட்டியில் ஈட்டி எறிதல் போட்டியே முதலாவதாக நடைபெற்ற போட்டியாக அமைந்தது. பிரிட்டன் இராணுவத்தில் அங்கவீன நிலைக்கு ஆளாகிய 16 பேர் இந்தப் போட்டியில் கலந்து கொண்டிருந்தனர்.

நாளடைவில் வைத்தியர் குட்மனுக்கு அங்கவீனர்களுக்காக பிரிட்டனில் தனியான விளையாட்டுச் சங்கமொன்றை அமைத்தமைக்காக அவரைக் கௌரவிக்கும் முகமாக பிரிட்டன் அரசாங்கத்தினால் பலவித பட்டமளிப்புகளும் விருதுகளும் அவருக்கு வழங்கப்பட்டன.

இந்த போட்டிகளுக்கு பராலிம்பிக் என்று பெயரிடப்பட்டது. இதன் அர்த்தம் எவ்வாறு அமைகின்ற தென்றால் லத்தீன் மொழியில் 'பரா' என்று குறிப்பிடப்படுவதானது ஏதேனும் ஒன்றுடன் ஒன்று நடைபெறுவதை குறிப்பிடுவதாகும். ஆங்கில மொழியில் 'பரா' என்பது 'பெரல்' என்ற வார்த்தையை அடியொட்டி அமைக்கப்பட்டதாகும். இதற்கமைய 'மாற்று' என்று இதனை பொருள் கொள்ளவும் முடியும். அதனால் தான் பராலிம்பிக் போட்டிகள் மாற்றுத்திறன் போட்டி என்று தமிழ்படுத்தப்பட்டுள்ளது. ஒலிம்பிக் போட்டிகளைப் போலவே சமகாலத்தில் பராலிம்பிக் போட்டிகளும் நான்கு வருடங்களுக்கு ஒரு தடவை நடைபெற்று வருகின்றது.

இன்றைய காலப்பருவத்துடன் ஒப்பிட்டுப் பார்க்கையில் இன்னுமொரு வகையிலும் இந்த பராலிம்பிக் என்ற பதம் அர்த்த முடையதாக அமைந்துள்ளது எனலாம். ஏனென்றால் அங்கவீனமானவர்கள் அநேகமானோர் தம்மை அங்கவீனர்கள் என்று அடையாளப்படுத்துவதை விரும்புவதில்லை.

இதன்படி அங்கவீனமானவர்களுக்கான விளையாட்டு போட்டி என்று குறிப்பிடுவதை






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட பராலிம்பிக் என்று குறிப்பிடுவதையே அவர்கள் விரும்புகின்றனர். மாற்றுத்திறன் மிக்கவர்களுக்கான போட்டி என்று அவ்வாறு அர்த்தப்படுத்துவது கௌரவம் மிக்க ஒரு பதமாகவே கொள்ளப்படுகின்றது. விதியின் செயலால் இவர்கள் அங்கவீனமாகியோ ஊனமுற்றோ இருந்தாலும் அவர்களும் நமது சமூகத்தின் பங்களிகளாவர். நமக்கு கிடைக்கின்ற அனைத்து நன்மைகளும் சலுகைகளும் வாய்ப்புக்களும் அவர்களுக்கும் கிடைக்கப்பெறல் வேண்டும். இவர்கள் மீது பரிதாபப்படுவதை விட இவர்களும் நமக்குச் சமமானவர்களே என்று நோக்குவதே பொருத்தமானதாகும்.

**பராலிம்பிக் போட்டிகளின் முக்கிய திருப்பு முனைகள்**

உலகிலேயே முதன் முதலாவது பராலிம்பிக் போட்டிகள் 1948 ஆம் ஆண்டில் இங்கிலாந்தின் ஸ்டோக் மென்டேவில் எனும் இடத்திலுள்ள மருத்துவமனை யொன்றில் நடைபெற்றது. இரண்டாவது உலக யுத்தத்தின் போது உடல் பாதிப்புக்களுக்கு ஆளானவர்களே இந்த முதலாவது போட்டியில் கலந்து கொண்டிருந்தனர்.

சர்வதேச மட்டத்தில் போட்டியாளர்கள் 1952 ஆம் ஆண்டில் பராலிம்பிக் போட்டிகளில் இணைந்து கொண்டனர். எனினும் ஒலிம்பிக் போட்டிகளுக்கு சரிசமமாக மாற்றுத்திறன் மிக்கவர்களும் போட்டியிடும் வகையிலான போட்டிகள் 1960 ஆம் ஆண்டிலேயே நடைபெற்றது. ரோம் நகரில் நடைபெற்ற போட்டியின் போதே இந்த மாற்றம் நிகழ்ந்தது. இதன் போது 23 நாடுகளை பிரதிநிதித்துவப் படுத்தி சக்கர இருக்கைகளில் வந்த பல போட்டியாளர்கள் பராலிம்பிக் போட்டிகளில் பங்குபற்றினர்.

பராலிம்பிக் போட்டியில் 20 வகையான போட்டிகள் நடைபெறுவதுண்டு. இதற்கென அங்கவீனங்களுக்கு உட்பட்டவர்கள் ஆறு வகையாக வகைப்படுத்தப்பட்டு போட்டிகள் நடத்தப்படும். மேற்படி போட்டிகளுக்காக அவர்களின் உடல் நிலை மருத்துவப் பரிசோதனைக்கு உட்படுத்தப்படும்.

பராலிம்பிக் போட்டிகளில் ஈட்டி எறிதல் போட்டி முக்கிய இடத்தை வகிக்கின்றது. எனினும் இதற்கென விசேடமான விதி முறைகளும் உள்ளன.

பந்து வீச்சுப் போட்டியும் பராலிம்பிக் போட்டியில் இடம்பெறும் மற்றுமொரு போட்டியாகும். இதில் கால்பந்தாட்டப் பந்தின் அளவிலான பந்தில் ஒரு மணியும் கட்டப்பட்டிருக்கும். இந்தப் பந்தினை எதிர்த்தரப்பின் கோலை (Goal) நோக்கி தரைவழியே தள்ளிவிட வேண்டும்.

முழுமையாக பார்வையிழந்த அல்லது பார்வைக் குறைபாடுடைய எதிரணிப் போட்டியாளர்கள் இந்தப் பந்தை கோலினுள் சென்று விடாதவாறு தடுத்து ஆட முயற்சிப்பார்கள் பந்தில் பொருத்தப் பட்டிருக்கும் மணியின் ஓசையைக் கொண்டு இவர்கள் பந்து செல்லும் திசையை ஊகிக்கக் கூடியதாக இருக்கும்.

சக்கர இருக்கையில் இருந்தவாறு நடைபெறும் போட்டிகளும் உள்ளன. வாள் சண்டை, றகர், டென்னிஸ் ஆகிய போட்டிகளை இங்கு குறிப்பிடலாம்.

வொலிபோல்(Volley ball) போட்டியானது தரையில் அமர்ந்தவாறு விளையாடும் விதமாக நடத்தப்படும் பொதுவாக வொலிபோல் விளையாடும் திடல் மாற்றுத்திறன் மிக்கோருக்காக சிறியதாகவே அமைந்திருக்கும்.

ஏனைய போட்டிகளைப் போலவே பராலிம்பிக் போட்டிகளிலும் தடை செய்யப்பட்ட ஊக்கமருந்து பாவித்து ள்ளனரா? என்பது சோதிக்கப்படுகின்றது. 2004ம் ஆண்டில் நடைபெற்ற பராலிம்பிக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போட்டியின் போது ஜீடோ போட்டியில் தங்கம் வென்ற போட்டியாளர் தடை செய்யப்பட்ட ஊக்கமருந்தை பாவித்த மைக்காக வழங்கப்பட்ட தங்கப்பதக்கம் மீளப் பெறப்பட்டது.

இம்முறை பீஜிங் பராலிம்பிக் போட்டியில் 150 நாடுகளின் சார்பாக 4000 ற்கும் மேற்பட்ட போட்டியாளர்கள் இம்முறை பராலிம்பிக் போட்டிகளில் பங்குபற்றினர். எனினும் இவர்களில் சக்கர இருக்கை டென்னிஸ் போட்டியில் கலந்து கொண்ட உபாலி ராஜகருணா என்பவர் மட்டுமே இரண்டாவது சுற்று வரையாவது முன்னேறி யிருந்தார்.

**பராலிம்பிக்கில் இடம்பெறும் போட்டிகள் வருமாறு**

1. ஈட்டி எறிதல்
2. மெய்வல்லுனர் போட்டிகள்
3. சைக்கிள் ஓட்டம்
4. குதிரை ஓட்டம்
5. அணிக்கு ஐந்து பேரைக் கொண்ட கால்பந்துப் போட்டி
6. அணிக்கு ஏழுபேரைக் கொண்ட கால்பந்தாட்டப் போட்டி
7. கோள் பந்து
8. ஜூடோ
9. படகு ஓட்டம்
10. துப்பாக்கி சுடுதல்
11. நீச்சல்
12. மேசைப் பந்து
13. வொலிபோல்
14. வாள் சண்டை
15. றகர்
16. டென்னிஸ் ஆகிய முதலியவை பராலிம்பிக்கில் நடைபெறுகின்ற சிலவகைப் போட்டிகளாகும்.

**பராலிம்பிக் போட்டிகள் நடைபெற்ற வருடம் / நகரம்**

| | | |
|---|---|---|
| 1960- | ரோம் | (இத்தாலி) |
| 1964- | டோக்கியோ | (ஜப்பான்) |
| 1968- | டெல் அவிவ் | (இஸ்ரேல்) |
| 1972- | ஹைட்டில்பேரக் | (மே. இ.தீவுகள்) |
| 1976- | டொரொன்டோ | (கெனடா) |
| 1980- | என்ஹம் | (நெதர்லாந்து) |
| 1984- | ஸ்டோக்மெண்டவில் | (இங்கிலாந்து) |
| 1988- | சோல் | (தெ.கொரியா) |
| 1992- | பர்சிலோனா | (ஸ்பெயின்) |
| 1996- | எட்லான்டா | (ஐக்கிய அமெரிக்கா) |
| 2000- | சிட்னி | (அவுஸ்திரேலியா) |
| 2004- | எதென்ஸ் | (கிறீஸ்) |
| 2008- | பீஜிங் | (சீனா) |

## காலில்லா பாம்பு...!

''ஏண்டா பாலு! 'பாம்பு' என்று எழுதச் சொன்னா 'பாம்பு'-ன்னு எழுதியிருக்கிறியே ! கால் எங்கே?'' என்றார். ஆசிரியர். ''சார் ! நீங்கதானே சொன்னீங்க பாம்புக்கு கால் இல்லேன்னு'' என்றான் கோபு.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சினிமாத்துறை தகவல்கள்

ஏ. சிவஜோதி
விடுகை வருடம், ஆரம்ப நெறி

உலகில் 1872-ஆரம்பத்தில் குதிரைகளின் கால்கள் அசைவதைப் படமாக்கினார்கள்.

1895-பிரான்ஸ் நாட்டில் வாழ்ந்த லூமிரே சகோதரர்கள் ஒரு ரயில் ஓடுவதையும் அது ரயில் நிலையத்தில் போய் நிற்கும் காட்சியையும் படமாக்கியதன் மூலம் சினிமா உதயமானது.

1995- உலக சினிமா நூற்றாண்டு விழா நடைபெற்றன.

OSCAR - சினிமாத்துறையில் வழங்கப்படும் உயர் மதிப்பு மிக்க விருதாகும்.

ராஸ் பெரி -உலகளாவிய ரீதியில் சினிமாத்துறையில் வெளியாகும் மோசமான திரைப்படங்களுக்கு வழங்கப்படும் விருதாகும்.

சரசவிய - இலங்கை அரசினால் தலைசிறந்த சினிமாக் கலைஞர்களுக்கு வழங்கப்படும் விருதாகும்.

முதன் முதலாக பாடல்களே இல்லாமல் வெளிவந்த திரைப்படம் - அந்தநாள் (இந்தியா)

அதிக பாடல்களை கொண்டு வெளிவந்த திரைப்படம் - இந்திரசபா (71 பாடல்கள் - இந்தியா)

கார்டூன் (கேலிச்சித்திரம்) வரிசையில் முதலில் வெளிவந்த திரைப்படம் -Fanta Samagorie. (பிரான்ஸ்)

தமிழில் வெளிவந்த (முதன் முதலில்) முப்பரிமாணத் திரைப்படம் (3D) - மைடியர் குட்டிச்சாத்தான்.

முதல் பேசும் சினிமாப்படம் - Donjuan (13 - 3 - 1926 இல் நியூயோர்க்கில் திரையிடப்பட்டது). தமிழில் வெளிவந்த முதல் சினிமா கோப்படம் - ராஜராஜ சோழன்.

தமிழில் வெளிவந்த முதல் பேசும் படம். (காளிதாஸ்) தமிழில் வெளி வந்த முதல் வண்ணத்திரைப்படம் அலிபாபாவும் நாற்பது திருடர்களும்.

இலங்கையில் -* முதலாவது பேசும் படம்- கடவுணு பொறந்துவ

* முதலாவது மௌனப்படம் - ராஜகீய விக்கிரமய
* முதலாவது தமிழ்ப்படம் -தோட்டக்காரி ( 35Min)
* முதலாவது ஆங்கிலத்திரைப்படம் - Btidge on the river quai
* முதலாவது சினிமாஸ்ரூடியோ - சுந்தரசவுண்ட் (சுந்தரம் மதுர நாயகம்)

தென்னிந்திய தமிழ் நடிகரான சிவாஜி கணேசனுக்கு பிரான்ஸ் நாட்டின் அதிஉயர் கலைத்துறை விருதான "செவாலியோ" விருது 1995 இல் வழங்கப்பட்டு கௌரவிக்கப் பட்டது.

உலகின் உயர்ந்த இசை வடிவான சிம்பனி இசை வடிவத்தை தென்னிந்திய





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இசையமைப்பாளரான இளையராஜா 1993 இல் வடிவமைத்தார்.

1959 இல் Banhur, 1998 இல் Titanic ஆகிய படங்கள் பதினொரு துறைகளுக்கான பதினொரு விருதுகளை ஒஸ்கார் விருதுக்காகப் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

* ஒஸ்கார் விருதுகள் வழங்கப்படும் நகரம் - லொஸ் ஏஞ்சல்ஸ்
* உலக சினிமா முன்னோடிகள் - மைக்கேலேஞ்சலோ, அன்ட்டோநியோனி
* திரைப்பட உலகின் முதலாவது குழந்தை நட்சத்திரம் - ஜக்கி ஜான்
* பதினொறு மொழிகளில் சினிமாப்படம் தயாரிக்கும் நாடு - இந்தியா
* Titanic திரைப்படம், இயக்குனர் ஜேம்ஸ் கெமரூனினால் உருவாக்கப் பட்டது.

**TITANIC**

இத்திரைப்படமானது 1912 ஏப்ரல் 10இல் இங்கிலாந்திலிருந்து அமெரிக்காவுக்கு புறப்பட்ட உல்லாச கப்பலான Titanic Apr. 15 பனிப்பாறையுடன் மோதி 1500 பேர் வரை பலியாகிய சம்பவத்தையும் காதல் கதையையும் இணைத்து படமாக்கினார்.

*. Jurrasic park திரைப்படம் - 1992 இல் ஸ்ரீபன் பேர்க் இப்படத்தை உருவாக்கினார்.

இத்திரைப்படமானது கோடிக் கணக்கான வருடங்களுக்கு முன்னர் வாழ்ந்த டைனோசரி எனும் இராட்சத பல்லிகளை மையமாகக் கம்பியூட்டர் இராபிக்ஸ் தொழிநுட் பத்தை புகுத்தி வெளிவந்த திரைப்படமாக விளங்குகின்றது.








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# இன்றைய சிறுவர்களே நாளைய தலைவர்கள்.

ஜெ. பஸ்மியா
விடுகை வருடம், இரண்டாம் மொழி தமிழ்

'எந்தக் குழந்தையும் நல்ல குழந்தைதான் மண்ணிற் பிறக்கையிலே அவன் நல்லவனாவதும் தீயவனாவதும் அன்னை வளர்ப்பினிலே.....' என்கிறது ஒரு திரைப்பட பாடல். பரந்த இவ்வுலகில் இறப்பும் பிறப்பும் வழக்கம். வாழ்க்கை என்பது சுழல் சக்கரம் போன்று உருண்டோடிக் கொண்டிருக்கிறது. இந்த நிலையில் ஒரு குழந்தை பிறக்கின்றது. அவன் பிறக்கும் போதே நல்லவனாகவே மாசுமறுவற்ற மனம் படைத்தவனாகவே பிறக்கின்றான். அவன் வளரும் போது பலவித வடிவங்களில் வளர்ச்சி பெற்று நல்லவனாகிறான், அறிஞனாகிறான், உத்தமனாகிறான், தலைவனாகின்றான்.

எனவே, அவனது குழந்தைப்பருவத்திலிருந்து அவனது வளர்ப்பே அவனது உயர்ச்சிக்கு அடித்தளமாய் அமைகிறது. அப்போது வளர்ச்சி பெறும் ஒருவன் சிறுவனாகி, இளைஞனாகி, தலைவனாக மலர்கின்றான். இக்கருத்தின் அடிப்படையில் நோக்கும்போது இன்றைய சிறுவர்கள் நாளைய தலைவர்கள் என்ற கூற்று ஏற்கக் கூடியதே. ஆனால் அனைவரும் நாளைய தலைவர்கள் என்று கூறிவிட முடியாது. வளரும் பயிரை முளையிலே தெரியும் என்பார்கள். அது போல நாளைய தலைவர்களை பள்ளிப்பருவத்திலே இனங்கண்டு கொள்ள முடியும். வளரும் பயிர் தனது வளர்ச்சிப் பருவத்தில் பூச்சி, புழுக்கள் போன்றவற்றால் தாக்கமுற்று கருகிப் போவது போல் நல்லொழுக்கமற்ற புகைத்தல் பழக்கம் கொண்ட நண்பர்களுடன் சேர்ந்து நாளைய தலைவர்களுக்குப் பதிலாக நாட்டுப் பற்றற்றவர்களாகவும் மாறலாம். சிறுவர்கள் வளரும் பருவத்தில் அவ்வாறான தாக்கத்தினை அடையாது, நல்லவர்களாகவும், ஒழுக்கமுள்ள வர்களாகவும் வளர்க்கப்பட வேண்டும். இதற்கு அடிப்படையாக அமைவன தாயன்பும், ஒழுக்கமும் கல்வியுமாகும். நல்ல கல்வியறிவைப் பெறும் சிறுவன் நல்ல ஒழுக்கம் உள்ளவனாகத் திகழ்வான். இப்போது கல்வியும் ஒழுக்கமும் அமையப் பெறும் சிறுவர்கள் நாளைய தலைவர்களாகத் தலை நிமிர்ந்து வாழ முடியும் என்பதில் ஐயமில்லை.

தாய் அன்பு காட்ட வேண்டும். அவ்வாறு அன்பு காட்டும் போது அச்சிறுவர்களின் மனம் குளிர்ச்சியடைகிறது. இதனால் தாய் சொல்படி நடப்பதனால் பாடசாலை, சமய கூடம் என்பவற்றுக்குச் செல்கின்றவர்கள் இதனால் அங்கு புகட்டப்படும் அறிவு, சொல்லிக் கொடுக்கப்படும் நல்ல ஒழுக்கங்கள் என்பவற்றைக் கருத்திற் கொண்டு படிக்கிறார்கன். இதன் விளைவாக எதிர்கால தலைவர்களாக மாற வாய்ப்பும் கிடைக்கின்றது.

இளமையிலே இலட்சிய நோக்குடன் - குறிக்கோளுடன் சிறுவர்கள் வளர்வார்களேயானால் அவர்கள் எதிர்காலத்தில் நல்ல தலைவர்களாக உருவாக முடியும். நல்ல இலட்சியங்கள் நல்ல வழியைக் காட்டும். அவர்களது இலட்சிய வேட்கையும் விடா முயற்சியும் அவர்களது குறிக்கோளை எய்துவதற்கு துணை செய்யும்.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுவர்களைப் பொறுத்தவரையில் பாடசாலைகளில் கல்வி கற்கும் காலத்திலேயே தலைமைத்துவப் பண்புகளைக் கற்றுக் கொள்கிறார்கள். மாணவ மன்றங்கள், கூட்டங்கள், விளையாட்டு மைதானங்களில் விளையாடும் போது, குழு வேலை செய்யும் போது சிறுவர்கள் தலைமைத்துவப் பண்புகளைக் கற்றுக் கொள்கிறார்கள்.

உலக வரலாற்றிலே ஒளி படைத்த தலைவர்களாக மின்னிக் கொண்டிருக்கும் தலைவர்கள் பலரை நாமறிவோம். அவர்களது வாழ்க்கை வரலாற்றை ஆராய்ந்து பார்ப்போமேயானால் அவர்கள் இளமை முதலே கொண்ட குறிக்கோளை எய்துவதற்காக அல்லும் பகலும் அயராது முயன்றுள்ளமையைக் காணலாம். அவர்கள் இளமைப் பருவத்தே கொண்ட இலட்சிய வேட்கையே இறுதியில் உலகம் போற்றும் தலைவர்களாக இவர்களை உருவாக்கியது என்பதை உணர்ந்திட முடியும். மகாத்மா காந்தியடிகள், ஆபிரகாம்லிங்கன், நெப்பொலியன் போன்றோர்கள் இதற்கு சிறந்த எடுத்துக் காட்டாகும்.

மனிதராகப் பிறந்தவர் எவருக்கும் வாழ்க்கையில் ஒரு குறிக்கோள் இருத்தல் வேண்டும். குறிக்கோள் இல்லாதவர் மாண்டவர்க்குச் சமனாவார். எப்படியும் வாழலாம் என்றில்லாமல் இப்படித்தான் வாழவேண்டும் என்ற இலட்சிய முடையவர்களே வாழ்வில் வெற்றிகாண முடியும். இத்தகைய குறிக்கோள் கொண்ட சிறுவர்கள் வாழ்வில் நல்ல நிலையை அடைவர்.

கெட்டவன் என்று பெயர் பெறுவது மிகவும் எளிது. சில நிமிடங்களில் அப்பட்டத்தைப் பெற்றிடலாம். ஆனால் நல்லவன் என்று பெயர் பெறுவது மிகவும் கடினம். எனவே சிறுவர்கள் வாழ்வில் நல்லவன் என்ற பெயரினைப் பெற முயல வேண்டும். நல்லவன் என்று மக்கள் போற்ற வேண்டும் என்ற குறிக்கோளுடன் வாழும் சிறுவர்கள் நாளைய தலைவர்களாவது உறுதி.

எனவே, இன்றைய சிறுவர்கள் நாளைய தலைவர்களாக மிளிர வேண்டுமாயின் அவர்கள் நல்ல கல்வியறிவும், நல்ல ஒழுக்கமும், பிறர் நலம் பேணும் பண்பும் உள்ளவர்களாக நல்ல குறிக்கோள் படைத்தவர்களாகத் திகழ வேண்டியது மிக மிக அவசியமாகும். நாளைய தலைவர்கள் ஆகும் தகுதி அவர்களது வாழ்க்கை நெறியிலே பெரிதும் தங்கியுள்ளது என்பதை மறக்காமல் ஞாபகத்தில் வைத்து வாழ வேண்டும்.

**கணக்கும்..**

**பிணக்கும்..?**


**எட்டாம் வகுப்பு ஆசிரியர் சுரேஷ்டம், "சுரேஷ்! உங்கப்பாவிடம் நான் 1000 ரூபாய் தருகிறேன். மாதவட்டி 100க்கு 2 ரூபாய். அப்போது 3 மாதம் கழித்து அசலும் வட்டியும் என்ன கிடைக்கும்; என்றார். சுரேஷ் யோசித்து, "ஒன்றும் கிடைக்காது; என்றான். "உனக்கு கணக்கு சரியா புரியலை என்று நினைக்கிறேன்; என்றார் ஆசிரியர். சுரேஷ் இடைமறித்து, "இல்லை டீச்சர்! உங்களுக்குத் தான் எங்கப்பாவைத் தெரியாது! என்றான்.**





GTC
என்ன பேசுவது என்று தயக்கம் தோன்றும்போது உண்மையைப் பேசுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பணச் செலவின்றி நீரினால் குணப்படுத்தக் கூடிய நோய்கள்

விஜயலெட்சுமி புஸ்பராஜ்
விடுகை வருடம், உடற்.க்கல்வி நெறி

| நோய் | | சிகிச்சை நீ நீரைப் பயன்படுத்தி |
|---|---|---|
| வயிற்றுப்போக்கு | - | திரவப்பானங்களை அதிகம் அருந்தவும். |
| காய்ச்சலோடு கூடிய நோய் | - | திரவப்பானங்களையே அதிகம் அருந்தவும். |
| கடுமையான காய்ச்சல் | - | குளிர் நீரினால் உடம்பை கழுவவும். |
| இலேசான சிறுநீர்த்தடை (பெண்களுக்கான தொற்று) | - | நிறைய நீர் அருந்தவும். |
| இருமல், ஆஸ்மா | - | கொதி நீராவி பிடிக்கவும் (சளி இலகுவதற்கு) |
| புண், சிரங்கு, தொழுநோய் | - | நீரைப் பயன்படுத்தி சவர்க்காரத்தால் தேய்த்து கழுவவும். |
| தொற்றுக்குள்ளாகும் காயங்கள் | - | வெந்நீரில் துணியை நனைத்து ஒத்தடம் கொடுக்கவும். |
| தசை, மூட்டு பிடிப்புக்கள் | - | வெந்நீர் ஒத்தடம் கொடுக்கவும். |
| தோல் அரிப்பு, எரிச்சல் | - | குளிர் நீர் ஒத்தடம் கொடுக்கவும். |
| சிறிய தீக்காயம் | - | குளிர்நீரில் தீக்காயம் பட்ட இடத்தை அமிழ்த்தவும். |
| தொண்டை புண், அடிநாவளர்ச்சி | - | உப்பு கலந்த நீரில் வாயை கொப்பளிக்கவும். |
| அமிலம் தூசி போன்ற எரிச்சலை ஏற்படுத்தும் பொருட்கள் கண்ணில் விழுதல் | - | ஒரே முறையில் குளிர் நீரால் கண்ணை கழுவவும் |
| மூக்கடைப்பு | - | உப்பு நீரை மூக்கால் உறிஞ்சுவும் |
| மலச்சிக்கல், மல இறுக்கம் | - | நிறைய நீர் அருந்தவும் |
| குத வாய்கட்டி (மூல நோய்) | - | சிறிதளவு கொண்டிஸ் கலந்த சூடான நீரை பாத்திரத்திலிட்டு குதம் நனையும் வரை உட்கார்ந்து இருக்கவும். |







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# THE PERSONALITY YOU HAVE AND WANT TO BE

R. Thajina
2nd Year, Primary Course

**What is Personality?**

Personality is a mosaic of characteristics whose continual interplay conditions the various ways in which we behave. Therefore our personality encompasses all our qualities and all our faults, and it is because of personality that each human being on the face of the earth is unique.

**How is personality acquired?**

This is a question that philosophers and men of Science have been pondering for centuries. Modern thinking generally maintains that personality is the result of certain hereditary actors upon which are grafted the external influence. We experience, especially during our formative years.

But whatever hereditary, cultural or educational baggage you may be carrying around, you should know that you can change your personality, improve it, reinforce it, or round off any rough ages you may have.

Six characteristics of a leader

**1. Simplicity**

People with charisma are usually simple and Modest. It's the people who fail continually who are arrogant. In group, charismatic persons never try to attract attention by boasting about their talents or qualities, or by making a display of their virtues.

**2. The ability to listen to others**

A few years ago a popular magazine organized a contest. Readers had to connect bits of philosophical or spiritual wisdom, in 25 words or less. One reader submitted the following gem :- " People who talk about themselves are bores, People who talk about others are gossips, but those who talk about you are brilliant conversationalists!" It's so true. If you want to acquire a magnetic personality, you have to learn to encourage other People to express themselves, and to talk about themselves to you. Ask questions about their work, their hobbies, their families and so on. Give them the opportunity to reveal themselves to you.

**3. Self confidence and assertiveness**

Shyness which we all know is not necessarily a negative quality if it isn't exaggerated, in which case it's more like a healthy sense of propexty and reserve.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

However, if your shyness prevents you from communicating with others, from assuming your rightful position in society, From meeting people with whome you believe you have something in common from doing well and oral exams or showing your best side during job interviews then you should do something about it .People with charisma are not overly shy. and if they were at one time, they have succeded in over coming it.

4. The ability to act decisively. This mean not procrastinating – not putting off until tomorrow what can you do today.

Charismatic people are neither negligent no lazy. If Procrastinating is one of your fault you absolutely must get rid of it.

5. Respect for Your Commitments. Does this seem abveous? well you may be surprised to learn how many People don't honour their Commitments.

Are you talking about minor or major Commitments? you ask. And that's exactly where you're going wrong because there are no minor commitments!

A commitment is always major, whether it's promise to play tennis with some one or two lend a substantial amount of money to a friend in need. You are judged just as severly on your punctuality at a dinner party as you are repaying your debts. People with charisma are people you can count on. They are like rocks steady Fixed points in a unstable changing universe.

## சபாஷ் !

ஒரு கஞ்சனை ஊரே தூற்றியது. அவன் சாகும்போது மகனிடம் ''என்னை நல்லவன் என ஊரைச் சொல்லவை'' எனக் கூறி செத்துவிட்டான். மகன் பார்த்தான், அப்பனை விட கொடுமைகள், கஞ்சம் செய்தான், ஊரார் ''பரவாயில்லை இவன் அப்பன். அவனே உத்தமன்; என்றனர். பைசா செலவின்றி அப்பன் சொல்லை நிறைவேற்றிவிட்டான்.

''அவசர இரைச்சலின் இடையே
அமைதியாகச் சொல்
மௌனத்தின் நிம்மதியை
நினைவில் கொள்...;;





புகழின் உச்சிக்குச் செல்லும் வழி கரடுமுரடானது.

GTC

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நீரிழிவும் உணவுக் கட்டுப்பாடும்

எஸ். திரேசம்மா
விடுகை வருடம், உடற்கல்வி நெறி

நமது உடலில் இரத்தத்தில் சீனியின் அளவு இயல்பாக இருப்பதை விட அதிகமாவதைத் தான் நீரிழிவு சக்கரை நோய் என்கிறோம். நீரிழிவு நோய் ஒருவருக்கு வந்தால் கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்க முடியுமேயன்றி, முழுமையாகக் குணப்படுத்துவது இயலாத ஒன்று. நோய்க்கட்டுப்பாட்டிக்கு மருத்துவம் மட்டுமன்றி வாழ்நாள் முழுவதும் உணவு முறையிலும் சில மாறுதல்கள் செய்யப்பட வேண்டியது அவசிய மாகிறது.

**நீரிழிவு நோயாளிகள் கடைப்பிடிக்க வேண்டிய பயனுள்ள குறிப்புகள்**

உடல் ஆரோக்கியத்திற்கு சரி விகித சீரான உணவு தேவை. நீரிழிவு நோயாளிகள் அவரவர் தாம் செய்யும் வேலைக்கேற்பவும், உடல்வாகிற்கு தகுந்தாற்போலவும் உணவு முறையை அமைத்துக் கொள்ள வேண்டும். டாக்டரின் பரிந்துரையின் படி தான் இவ்வாறு மாற்றிக்கொள்ள வேண்டும். தேவைக்கு அதிகமாக உணவை உண்டால் நோயாளிகளின் உடலில் அதை சேமித்து வைக்கும் சக்தியில்லாமையால் அவை இரத்தத்தில் அதிகமாகி பலவித இன்னல்களைத் தருகிறது.

உணவைச் சாப்பிடும் இடை வெளியானது பகலில் நான்கு மணி நேரத்திற்கு மேல் இருக்க கூடாது. குறிப்பிட்ட அளவை சரியாக - தினமும் குறிப்பிட்ட நேரங்களில் உண்ணுவது நல்லது. ஒவ்வொரு நேர உணவிலும் 65 வீதம் மாச்சத்து, 20 வீதம் புரதச் சத்து கொழுப்புச்சத்து, பத்திலிருந்து பதினைந்து விழுக்காடு சேரும் படி உணவு அட்டவணையை தயாரிக்க வேண்டும். அதிக உடல் எடையுள்ளவர்கள் கொழுப்பை முழுவதுமாக தவிர்த்தல் வேண்டும். உணவிற்கும் மருத்துவத்திற்கும் கொடுக்கும் அதே அளவு முக்கியத்துவம் உடற்பயிற்சி களுக்கு தரப்பட வேண்டும். ஒரு நாளுக்கு இரண்டு முறை இருபதிலிருந்து முப்பது நிமிடங்கள் துரித நடை நடப்பது நல்லது.

வாழ்நாள் முழுவதும் ஒரு டாக்டரின் கண்காணிப்பில் இருக்க வேண்டியது அவசியம். அவரவர் விருப்பத்திற்கு ஏற்ப மருந்து மாத்திரைகளை நிறுத்தவோ, அதிகரிக்கவோ கூடாது. உணவுக் கட்டுப்பாடு மிக மிக அவசியம், இனிப்புக்களையும் எண்ணெயில் பொரித்த பண்டங்களையும் முற்றிலும் தவிரக்க வேண்டும். ஒரு நாள் முழுவதிலும் இரண்டு டீஸ்பூன் எண்ணெய்க்கு அதிகமாக சேர்க்க கூடாது. நெய், எண்ணெய், வனஸ்பதி போன்ற உறையும் தன்மையுடைய கொழுப்பை நேரடியாகவோ, சமையலிலோ, முழுமையாகத் தவிர்க்க வேண்டும்.

அலிவ் எண்ணெய், சூரிய காந்தி எண்ணெய், நல்லெண்ணெய் சபோலா எண்ணெய் போன்ற உறையும் தன்மையில்லாத திரவக் கொழுப்புகள் குறிப்பிட்ட அளவு சேர்க்கலாம். முழு நேர விரதத்தை தவிர்க்க வேண்டும். மத்தியில் பசியெடுத்தால் பொறி, பாப்கார்ன், ஏதாவது பயறு, சுண்டல், முளைகட்டிய பயறு காய்கறிகள் உபயோகப்படுத்தி செய்யப்படும் சால்ட், மோர், இனிப்பு சேர்க்காத எலுமிச்சை சாறு, பிஸ்கட் அல்லது ரஸ்க் சாப்பிடலாம். கோப்பி, தேநீர் போன்ற பானங்களில் சீனிக்குப் பதில் இனிப்புக்காக கிடைக்கும் செயற்கையான வல் அல்லது சுகர்ப்ரீ போன்றவற்றை சேர்த்துக் கொள்ளவும். கொழுப்பு நீக்கிய பால், தயிர் இவற்றை மிதமாகச் சேர்த்துக் கொள்ளவும். நீர்க்க கரைத்த மோரை





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பசிக்கும் போது அவ்வப்போது குடிக்கலாம். சுவை உணவு உண்பவர் அதை மிகவும் குறைப்பது நல்லது. வாரம் ஒரு முறை மட்டும் மேல் கொழுப்பு நீக்கப்பட்ட இறைச்சியை சாப்பிடலாம்.

**நீரிழிவைக் கட்டுப்படுத்தும் உணவு முறைகள்**

நீரிழிவைக் கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்க முடியுமே தவிர முழுவதுமாக குணப்படுத்த முடியாது. இதைக்கட்டுப்பாட்டிற்குள் வைத்திருந்தால் சிறுநீரகம், கண், இரத்தகுழாய் போன்ற உறுப்புக்களின் பாதிப்பைத் தவிர்க்க முடியும். இதற்கு உணவுக்கட்டுப்பாடு, உடற்பயிற்சி, மருந்துகள் ஆகியவை உதவுகின்றன. நீரிழிவு நோய் உள்ளவர்கள் அரிசி உணவைத் தவிர்த்து கோதுமை, கேழ்வரகு போன்ற உணவு வகைகளை மட்டுமே உண்ண வேண்டிய தேவையில்லை. எந்த வகையான தானியம் உட்கொள்கிறோம் என்பதை விட எந்த அளவிற்கு உட்கொள்கிறோம் என்பதே முக்கியமாகும். குறிப்பிட்ட உணவு வகைகளை குறிப்பிட்ட அளவில் குறிப்பிட்ட நேரத்தில் உட்கொள்ள வேண்டும். உணவு உண்ணாமலிருப்பது, அளவுக்கு மேல் உண்பது இரண்டுமே கூடாது.

**தவிர்க்க வேண்டிய உணவுகள்**


இனிப்புகள், தேன், வெல்லம், இனிப்பு கலந்த பலகாரங்கள் கேக், பிஸ்கட். ஐஸ்கிரீம், வெண்ணெய், நெய், பொரித்த உணவு வகைகள், மதுபானங்கள், குளிர்பானங்கள், ஹார்லிக்ஸ், போர்ன்விட்டா, உலர்ந்த பழவகைகள், கொட்டைப் பருப்பு, எண்ணெயில் தயாரித்த ஊறுகாய், மா, பலா, வாழை, பேரீச்சை, சப்போட்டா, அசைவ உணவுகளில் கொழுப்பு சத்து அதிகம் உள்ளதைத் தினமும் சாப்பிட்டால் எடை குறையாது. இரத்தத்தில் கொலஸ்டிரால் அளவும் குறையாது. எனவே தான் வாரம் ஒரு முறைக்கு மேல் அசைவ உணவைத் தவிர்க்க வேண்டும்.

**தாராளமாக சாப்பிடக் கூடியவை**

கீரை வகைகள் வெள்ளரிக்காய், வெண்டை, பாகற்காய், கத்தரிக்காய், புடலங்காய், குடை மிளகாய், பப்பாளிக்காய், வாழைப்பூ, வாழைத்தண்டு, தக்காளி, சவ்சவ் அவரை, முட்டைகோஸ், வெங்காயம், பூண்டு, இஞ்சி, கொத்தமல்லி இலை, கறிவேப்பிலை, புதினா, காய்கறி, எலுமிச்சை.

இவ்வாறாக உணவு பழக்கங்களை கடைப்பிடித்து நீரிழிவு நோயை கட்டுப்பாட்டிற்றுள் வைத்து எமது உடலை ஆரோக்கியமாக பேணி வாழ்வை சுகமாக அமைத்துக் கொள்வோம்.

'நீ
இந்தப் பிரபஞ்சத்தின்
குழந்தை
மரங்களுக்கும்
நட்சத்திரங்களுக்கும்
உள்ளது போலவே
உனக்கும்
இங்கே இருக்க
உரிமை உள்ளது.
புரிந்தாலும்
இல்லாவிட்டாலும்
பிரபஞ்சம்
தன் விதிப்படி இயங்கிக்
கொண்டே
இருக்கும்"





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பிள்ளைகளின் கல்வி வளர்ச்சியில் ஆசிரியரின் பங்களிப்பு.

டீ. கவிதா சுபாஷினி
விடுகை வருடம், ஆரம்ப நெறி

'இன்றைய குழந்தைகளே எதிர்காலத்தின் தூண்கள்'' என்பர் சான்றோர். ஒரு குழந்தையிடம் காணப்படும் ஆற்றல்களை வெளிக்கொணரும் கருவியே ஆசிரியர் ஆவார். மனிதனின் குழந்தைப் பருவம் மதிப்பிற் குரியதாகும். குழந்தையானது வீட்டில் உள்ளோரது தூண்டுதலினாலும் சுற்றாடலில் உள்ள பழக்க வழக்கங்களினாலும் பல விடயங்களை கற்றுக் கொள்கின்றது. இது குழந்தையின் அறிவு விருத்திக்கும் இயற்கை ஆற்றல் விருத்திக்கும் போதுமானதென்று கூறமுடியாது. வளரும் குழந்தையை நல்லிணக்கம் பெறச் செய்வதற்கு, அதன் இயல்புகளை அறிதல் வேண்டும். ஒரு குழந்தை பிறந்ததிலிருந்தே தன் வளர்ச்சிக்கும் தற்பாதுகாப்பிற்கும் அதன் இயற்கைத் தன்மையை உபகரணமாகக் கொண்டுள்ளது. அது தனது கை, கால்களை எண்ணி அசைப்பதில்லை. இயற்கையாகவே அசைக்கும் தன்மையை பெற்றுள்ளது. குழந்தை களுக்கென தனி மனப்பான்மை உண்டு. குழந்தையின் குணாதிசயங்கள் வளர்ந் தோர்களை விட வித்தியாசமானவை. இவ்வாறான தன்மைகளை ஓர் ஆசிரியர் அறிந்திருப்பது இன்றியமையாததாகும்.

பாடசாலையில் காலடி வைக்கும் பிள்ளைகள் வீட்டுச் சூழலில் இருந்து ஒரு புதிய உலகிற்கு பிரவேசிப்பவர்களாகவே இருப்பார்கள். எனவே, பிள்ளைகளின் போக்கிலே அவர்களை விட்டு அவர்களின் ஊக்கங்களிற்கு பங்களிப்புச் செய்தல் முக்கியமான தாகின்றது. பிள்ளைகள் பெரும்பாலும் விளையாடவே விரும்புவர். விளையாட்டுப் பிள்ளைகளின் மனதை தூய்மையுறச் செய்வதுடன் நல்ல வழியிலேயே அவர்களை நடத்தவும் உதவுகின்றது.

தனி மனிதனை கொண்டதே ஒரு சமூகமாகும் மனிதன் சமூகமாக வாழ்வதாலேயே தன்னைப் பாதுகாத்துக் கொண்டான். சமூகத்துடன் ஒட்டி வாழ வேண்டுமாயின், அது இளமையிலிருந்து பயிற்சியாக அமைய வேண்டும். 25 வயதுவரை ஒருவன் தனித்து வாழ்ந்துவிட்டு சமூகத்துடன் இணைவது என்பது முடியாத காரியமாகும் பிள்ளைகளும் இவ்வாறே தான் இளமையிலிருந்தே பயிற்றுவிக்கப்பட வேண்டும். பல இயல்புகளை கொண்ட பிள்ளைகள் ஒன்று கூடும் இடமாக பாடசாலை காணப்படுகின்றது. இதிலிருந்தே பிள்ளைகள் பல்வேறு பயிற்சிகளை பெறுகிறார்கள் முன்னர் பாடத்தை பயிற்றுவிப்பதே கல்வியாக கொள்ளப்பட்டது. இப்போது மாணவரை தனது வாழ்க்கைக்கு ஏற்ப பயிற்றுவிப்பதே கல்வியின் நோக்கமாக கருதப்படுகின்றது. இவ்வாறு மாணவரை பயிற்றுவிக்கும் ஒரு ஸ்தாபனமே பாடசாலை ஆகும். இங்கு ஆசிரியரின் மட்டுப்படுத்தப்பட்ட சுதந்திரத்தினால், குழந்தைகள் ஒழுங்குமுறைகளை பயில முடிகிறது. உண்மை நட்பு, ஒற்றுமை, சுயாதீனம் போன்ற நற்பண்புகளை ஏற்படுத்தக் கூடியவர்கள் ஆசிரியர்களேயாவர். இங்கு நல்லனவற்றை பிள்ளைகளின் மனதில் பதிய வைத்தலும், புகுத்தலும் ஆசிரியரின் முதற் கடமையாகும்.

எத்தகைய தொழிலைச் செய்யப் புகும்போதும், அதனைப்பற்றிய அறிவு ஓரளவாவது இருப்பது அவசியமாகும். வாகன சாரதி வாகனத்தை செலுத்த தெரிந்திருந்தால் மட்டும் போதாது. வாகனத்தைப் பற்றியும் தெரிந்திருத்தல் வேண்டும். அப்போதுதான் அவனால் வாகனத்தை சரியாகவும் திறமையா





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவும் செலுத்த முடியும். இது போலதான் ஒரு ஆசிரியருக்கு கல்வி அறிவு மட்டும் இருந்தால் போதாது. தொழில் அறிவும் இருத்தல் வேண்டும். ஓர் ஆசிரியரானவர் மாணவர் பற்றி கட்டாயமாக அறிந்திருத்தல் வேண்டும் இது அவரது பிரதான கடமைகளில் ஒன்றாகும்.

மாணவர்கள் தனித்தனி போக்குடையவராகவும் தனித்தன்மை வாய்ந்த வர்களாகவும் இருப்பர். உடல், உள, வளர்ச்சி, விருத்தி என்பன ஏக காலத்தில் நடைபெறுவதில்லை. உடல் வளர்ச்சிக்கும் உள வளர்ச்சிக்கும் உள்ள தொடர்பை அறிந்திருப்பது முக்கியமானதாகும்.

குழந்தைகளை பயிற்றுவிக்கும் ஆசிரியர்கள் அவர்களின் இயல்பை அறிந்திருப்பது அவசியமாகும். ஒரு சில ஆசிரியர்கள் குழந்தைகளை பயிற்றுவிக்கும் போது அடக்கு முறைகளையே கையாளுகின்றார்கள். இவ்வாறான சந்தர்ப்பங்களில், பிள்ளைகளுக்கு கற்றலில் ஆர்வம் குறைகிறது. கல்வியிலே வெறுப்பு ஏற்படும் குழந்தைகள் விடயத்தில் அன்பும் அரவணைப்பும் காட்டக் கூடியவர்களாக இருத்தல் வேண்டும் ஆசிரியர் தான் பெரியவரென காட்டிக்கொள்ளாது குழந்தைகளின் தரத்திற்கு இறங்கி வருதல் வேண்டும். அப்போது தான் பிள்ளைகளுக்கு கற்பதிலே ஆர்வமும், மகிழ்ச்சியும் ஏற்பட வாய்ப்பாக இருக்கும். பிள்ளைகளின் கல்வியானது, விருத்தி பெற வேண்டுமாயின் அவர்களின் இயல்பிலேயே கற்பிப்பது ஓர் ஆசிரியரின் முக்கிய கடமையாகும்

பிள்ளைகளின் உடல் வளர்ச்சிக்கும், தேர்வுக்கும், மனவளர்ச்சிக்கும், விருத்திக்கும் பெரிதும் துணைப்புரியக் கூடியது விளையாட்டே ஆகும். இது பிள்ளையின் இயல்புகளிலே தலைச்சிறந்து விளங்குகிறது. இச்சிறந்த இயல்பின் மூலம் கல்வியை புகுத்தப்படும் இடமாக பாடசாலை அமைதல் வேண்டும். பிள்ளைகளின் பேச்சுத்திறமை, வெற்றி, ஒற்றுமை, விட்டுக்கொடுக்கும் மனப்பாங்கு, உதவி செய்தல் போன்றன விளையாட்டிலேயே பொதிந்து கிடக்கின்றன. விளையாட்டு முறையை மேற்கொள்ளும் போது பிள்ளைகளின் உடல், உளம், வயது என்பவற்றை அனுசரித்தே விளையாட்டில் ஈடுபடுத்தல் வேண்டும்.

ஒரு வகுப்பில் பலதரப்பட்ட பிள்ளைகள் இருப்பார்கள். அவர்கள் எல்லோரையும் ஒன்று சேர்த்துக் கொள்ளக்கூடிய வகையில் கற்பித்தலானது அமைதல் வேண்டும் கல்வியை பொறுத்த மட்டில் கவர்ச்சிகரமான கற்பித்தலாக அமைவது முக்கியமானதாகும். கல்வியை விளையாட்டுகளின் மூலமாக புகுத்தலாம். ஒவ்வொரு வயது பிரிவினரும் தங்களின் வயதிற்கேற்ற கவர்ச்சியையே விரும்புவர். பொருத்தமான முறையை ஆசிரியர் தெரிவு செய்வது முக்கியமான தாகின்றது. ஒரு பிள்ளையை பயிற்றுவிப்பது அவனது பிற்கால, நல்ல வாழ்க்கை முறைக்கு வழிகாட்டவே ஆகும். ஒரு பிள்ளை தான் பெற்ற அறிவால் ஒரு சமுதாயத்தை உருவாக்கவும், நல்வழிப்படுத்தவும் ஏதுவாய் அமைய வேண்டும். பாடசாலையை பொருத்தமட்டில் ஆசிரியரானவர் பிள்ளைகளின் ஒழுக்கத்தை கவனிப்பது மிக மிக முக்கியமாகும் ஆசிரியர் ஒரு சமுதாயத்தின் தலைவனாகவே அமைகின்றார். எனவே, சமுதாயத்திற் கேற்ப ஒழுக்கக் கல்வியை பிள்ளைகளுக்கு புகட்டுவதிலே ஆசிரியர் பெரும் பங்கை வகித்தல் வேண்டும்.

ஆசிரியரின் நோக்கம் நிறைவேற வேண்டுமாயின் பெற்றோருடன் இணைந்து செயல்பட வேண்டிய நிலை ஏற்படும். பெற்றோருடன் தொடர்பு கொண்டு செயற்படுவதால், பிள்ளையின் நிலையையும் குடும்ப நிலையையும் அறிந்து பிள்ளைகளுடன் தொடர்பு கொண்டு பிள்ளைக் கேற்றவாறு கல்வியை புகட்ட முடியும் எனவே, ஆசிரியர் பெற்றோருடன் அடிக்கடி தொடர்பை ஏற்படுத்திக் கொள்வது சிறந்த பழக்கமாகும். அத்தோடு, ஆசிரியரிடத்தே, நல்ல


ஒருவனுடைய வாயை அடைத்துவிட்டதினால் அவனை வென்று விட்டதாக ஆகிவிடாது. GTC

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிர்வாகத்திறமை காணப்படல் வேண்டும். ஆசிரியரின் நடத்தைகளும், முன்மாதிரியும் முக்கியமானதாகும் தீய குணமுடையவர்களும் சமுதாயத்தில் இருப்பது வழக்கமே. இத்தகைய குணமுடையவர்கள் மத்தியில் இருந்தும் ஓர் ஆசிரியர் தனது கடமையை செய்ய வேண்டி ஏற்படுகிறது. ஆசிரியர் என்ற கடமையை ஏற்றுவிட்டால் பொறுமை யைக் கையாண்டு சமுகத்தின் விருப்பு வெறுப்புக்களை ஏற்று செயல்பட வேண்டி ஏற்படுகிறது.

ஒரு கட்டடத்தின் உறுதி அதன் அத்திவாரத்திலேயே தங்கியுள்ளது. மனிதனின் செயல்பாடுகளும் அவனது இளம் பிராயத்திலேயே அமைந் துள்ளது. இது போலவே ஒரு பிள்ளையின் கல்வியுமாகும். ஒரு பிள்ளையை சமுதாயத்திலே நல்லவனாக மாற்றுவதும், தீயவனாக மாற்றுவதும் ஆசிரியரின் கையிலேயே தங்கியுள்ளது. இதற்கேற்ப ஓர் ஆசிரியரானவர் ஒரு பிள்ளையை ஏற்றாற்போல கவனித்து கல்வியின் பால் வழிநடத்தினால் இணக்கமான ஒரு சமுதாயத்தை கட்டியெழுப்பலாம் என்பதில் எதுவித சந்தேகமும் இல்லை.

இன்றைய குழந்தைகளே எதிர்காலத்தில் பெற்றோர்கள், அரசியல்வாதிகள், ஞானிகள், வைத்தியர்கள், சட்டத்தரணிகள், அறிவின் தீபங்கள், சமுதாயத்திலே அங்கத்தவர்கள் என்பதை ஒவ்வொரு ஆசிரியரும் மனதிலே நிறுத்தி செயல்பட வேண்டும். வளரும் குழந்தைகள் பற்றிய எதிர்கால கனவுகள் ஓர் ஆசிரியரின் மனதிலே திரையோடுமாயின் அக்குழந்தைகள் பாக்கியசாலிகளே! அவர்களே நாளைய சமுதாயத்தின் தலைவர்களுமாவர். எனவே பிள்ளைகளின் கல்வி வளர்ச்சியில் ஓர் ஆசிரியரின் பங்களிப்பு எத்தகையது என்பதை நாம் இதிலிருந்து புரிந்துக் கொள்ளலாம் ஆசிரியர்களாகிய நாமும் இதை உணர்ந்து செயல்படுவோமாயின், சிறந்ததொரு மாணவ சமுதாயத்தினை உருவாக்கிக் கொள்ளலாம் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.

# தூக்கத்தில் நடப்பவர்கள்

நான் பிறந்த நகரத்தில் ஒரு பெண்ணும் அவள் மகளும் வாழ்ந்தனர். அவர்களது தூக்கத்தில் நடப்பவர்கள் அவர்கள்.

ஓர் இரவு, அமைதி இந்த உலகை மூடியபோது, பனித்திரையிட்ட தோட்டத்தில் அந்தப் பெண்ணும் அவள் மகளும் தங்கள் தூக்கத்திலிருந்தபடியே நடந்து கொண்டிருக்கும் போது சிரித்தனர்.

தாய் பேசும் போது சொன்னாள் ‘கடைசியில், கடைசியில், என் எதிரியே! உன்னால் என் இளமை அழிந்தது. என் சிதைவுகளில் உன் வாழ்க்கையை அமைத்துக் கொண்டாய்! உன்னைக் கொல்ல முடியுமா என்னால்!’

மகள் பேசும்போது சொன்னாள்; ‘வெறுக்கத்தக்க பெண்மணியே, சுயநலமி, கிழவி! என் சுதந்திரத்தன்மைக்கும் எனக்கும் நடுவில் நின்றவளே! உன் மங்கிப்போன வாழ்வின் எதிரொலியாய் என் வாழ்வைத் தந்தாய்! நீ இறந்து விட்டாய்!...........’

அந்த நேரம், ஒரு காகம் கரைந்தது, இரு பெண்களும் விழித்துக் கொண்டனர்.

தாய் மென்மையாகக் சொன்னாள்; ‘அது நீயா, அன்பே!’

மகள் மென்மையாகச் சொன்னாள்! ‘ ஆம்! அன்பே!’







GTC பாடிக்கொண்டே மகிழ்ச்சியுடன் வேலை செய்பவனை எனக்குக் கொடுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# Health is Wealth

**Miss. P. Kanchant**
2nd year English Course

Health is wealth. Health is very important to human activity. It is not only food but also in good habits and behavior. We must learn what and how to eat, exercise and sleep, and be responsible for cleanliness. Healthy life includes eating nutritious food and unders tanding the relationship between physical and emotional health. Parents have full responsibility to bring up their children as healthy persons. They should help them to build self – confidence and sense of self. Everyone has responsibility to safeguard our health. We have to be careful about taking clean food and drink. It would be best to avoid eating unclean food. washing of vegetable and fruits before cooking or eating is very important. Unclean water causes and spreads many diseases. Personal cleanliness is most important to healty life.

Regular cleaning of the body through regular bathing, trimming of the nail and regular brushing of teeth in the morning and before going to bed must be made a habit. These steps not only prevent disease but also make us pleasant. When the people are in good health the society will be good.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# முஸ்லிம் பெண்களின் உடை

ஜே. சித்தி சைலா
விடுகை வருடம், இஸ்லாம் நெறி

**கேள்வி :-**

சில ஆசிரியைகள் அரைகுறை ஆடை அணிந்து செல்வதைப் பார்க்கின்றோம். இவ்வாறு அணிவதனை இஸ்லாம் தடுக்க வில்லையா? இஸ்லாம் பெண்களுக்கு அனுமதித்துள்ள ஆடையின் வரையறை யாது?

**பதில் :-**

இஸ்லாம் மிகத் தெளிவாக விளக்கியுள்ள இத்தகைய அம்சங்கள் பற்றி பெண்கள் அறிந்து கொள்வதில்லை. ஏனெனில் றஸூல்(ஸல்) அவர்கள் கூறினார்கள் " தடுக்கப்பட்டவைகளும் ஆகுமாக்கப் பட்டவைகளும் தெளிவாக விளக்கப் பட்டுள்ளன." ஆனால் மக்களில் அதிகமானோரால் புரிந்து கொள்ள முடியாத மயக்கமானதும் சந்தேகத்துக் குரியதுமான அம்சங்கள் அவை இரண்டுக்கும் இடையில் காணப் படுகிறது. (புஹாரி, முஸ்லிம்)

சில அறிஞர்கள் இதனை நகைச்சுவையாக தெளிவுப்படுத்துகிறார்கள். பூனைக்கு கூட தடுக்கப்பட்டவைகள் எவை என்றும் ஆகுமாக்கப்பட்டவை எவை என்றும் நன்கு தெரியும். நாம் ஒரு இறைச்சித் துண்டை அதற்கு கொடுத்தால் அது மிகவும் அமைதியாக அமர்ந்து அதனைச் சுவைத்து சாப்பிடுவதையும் எங்கேனும் இருந்து ஒரு இறைச்சித் துண்டை திருடிக் கொண்டு வந்தால் பயத்துடன் ஒழிந்து மறைந்து சாப்பிடுவதையும் அவதானிக்கின்றோம்.

இதிலிருந்து மிருகங்கள் கூடத் தமது இயல்புக்கு ஏற்ப தடுக்கப்பட்டவற்றையும் ஆகுமாக்கப்பட்டவற்றையும் அறிந்து நடப்பதைக் காண்கின்றோம். அப்படியாயின் மனிதன் இவ்விடயத்தில் எவ்வளவு ஜாக்கிரதையாக நடந்த கொள்ள வேண்டும். எத்தனையோ விடயங்கள் எமக்கு தெளிவற்றனவாக இருந்த போதிலும் கூட இன்று தெளிவாக விளக்கப்பட்டுக் கொண்டே இருக்கின்றன.

பிறர் (அஜ்னபிகள்) முன்னி லையில் முஸ்லிம் பெண்கள் இஸ்லாம் வரையறுக்கப்பட்டுள்ள ஆடை யில்லாமல் நடமாடுவது ஹராம் (தடுக்கப்பட்டது) என்பதில் சிறிதும் சந்தேகம் கொள்ளவோ இரு கருத்துக் கொள்ளவோ முடியாது. மேலே கூறப்பட்டுள்ள வினாவில் போன்று ஆசிரியைகளோ அல்லது பிற பெண்களோ அவ்வாறு நடந்து கொள்வது அத்தகைய ஆடைகளை அணியலாம் என்பதற்கு ஆதாரமல்ல. பெண்கள் மாத்திரம் இருக்கின்ற பாடசாலைகளின் ஆசிரியர்களைப் பொறுத்த வரையில் பாதையில் அவர்கள் மாத்திரமே செல்வதாக இருந்தால் தமது ஆடை அணிகளில் சிறிதளவு குறைகள் இருப்பின் தவறல்ல. எனினும் ஆண்களும் பெண்களும் சரிசமமாக நடமாடக் கூடிய பாதையாக இருப்பின் ஒரு போதும் இவ்வாறு ஆடைகளை அணியக்கூடாது. பெண்கள் மட்டும் இருக்கின்ற இடங்களில் பூரண சுதந்திரதோடு இருக்க முடியும் என்பது இதன் பொருளல்ல. அதற்கும் குறிப்பிட்ட வரையறைகளை இஸ்லாம் வகுத்துள்ளது. நாம் இன்று காண்கின்ற பாரம்பரிய ஒழுக்க நெறி முறைகளுக்கும் பகுத்தறிவுக்கும் மதச் சிந்தனைக்கும் முரணாக யூதர்களால் தயாரிக்கப்படுகின்ற மார்புகள் வெளிப்படும் அளவுக்கு அமைந்துள்ள ஆடைகளை





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அணிந்து கொண்டு நடமாடுவதை இஸ்லாம் கண்டிக்கின்றது. தீய உணர்ச்சிகளைத் தூண்டி விடுவதன் மூலம் ஒழுக்கப்பண்பாட்டு நெறிமுறைகளையும் உயர் மாண்புகளையும் நிர்மூலமாக்கி மனித சமூகத்தை தனது ஆதிக்கத்தின் கீழ் கொண்டு வருவதற்கு திட்டமிட்டுச் செய்யப்படும் யூதர்கள் இத்தகைய விடயங்களில் கூடிய கவனம் செலுத்துகின்றனர். காலத்துக்கு காலம் புதுப்புதுப் பிரச்சினைகளை உருவாக்குவதன் மூலம் பெண்களின் சிந்தனையோடு அவர்கள் விளையாடுகின்றனர். இவையெல்லாம் சியோனிஸ சிந்தனைகளின் கண்டு பிடிப்புக் களாகும். முழங்கால்களுக்கு மேலால் எந்தளவுக்கு ஆடைகளைக் குறைக் கலாம், தோள்களும் மார்புகளும் தெரியுமளவுக்கு ஆடைகளைச் சுருக்கலாம் போன்ற சிந்தனைகள் வெளியில் நடமாடுகின்ற ஓர் இஸ்லாமிய பெண்மணியின் இதயத்தில் என்றுமே எழக்கூடாத கேள்வியாகும்.

இஸ்லாமிய மங்கைகளைப் பொறுத்த வரையில் நாணயத்தோடும், கண்ணியத் தோடும், அல்லாஹ்வின் கட்டளைப்படி வாழ வேண்டும். இதனை அல்குர்ஆன் பின்வருமாறு விளக்குகின்றது." நபியே! மு∴மினான பெண்களுக்குத் தமது பார்வைகளைத் தாழ்த்திக் கொள்ளுமாறும் தமது மர்மஸ்த்தானங்களைப் பேணிக் கொள்ளுமாறும் இயல்பாக வெளிப் படுகின்ற பகுதிகளைத் தவிர ஏனையவற்றை வெளிக்காட்டாமலும் தமது மேலாடைகளை மார்புகளின் மீது போட்டுக் கொள்ளுமாறும் தமது அழகை தமது கணவன்மார்களுக்கும் அவர்களின் தந்தைக்கும் தமது தந்தைக்கும் தவிர வேறு எவருக்கும் காட்டக் கூடாதென்றும் கூறுவீராக! "

இயல்பாக வெளிப்படக் கூடிய பகுதிகளைத் தவிர ஏனைய பகுதிகளை பிறருக்கு வெளிப்படுத்துவது முஸ்லிம் பெண்க ளுக்குத் தடுக்கப்பட்டதாகும். இயல்பாக வெளிப்படும்பகுதிகள் என்றால் என்ன? என்பதை விளக்கும் கருத்துக்களில் இப்னு அப்பாஸ்(றலி) அவர்களின் விளக்கமே எமது இன்றைய சூழ் நிலைக்கு மிகவும் பொருத்தமானதாகவும் இலேசான தாகவும் அமைகின்றது. அவர்களின் கருத்துப்படி " மாழஹர மின்ஹா " (இயல்பாக வெளிப் படக் கூடிய பகுதிகள்) என்பது முகத்தையும் மணிக்கட்டுகளையும் குறிக்கின்றது.

நாம் இன்று பல நாடுகளிலும் தலை நகர்களிலும் காண்கின்ற அமைப்பில் பெண்கள் ஆடையணிவதைப் பகுத்தறிவோ, மதங்களோ அல்லது ஒழுக்கவியல் கோட்பாடுகளோ ஒரு போதும் ஏற்றுக் கொள்ளாது. இஸ்லாமியக் கண்ணோட் டத்தில் பெண்களின் உடை எவ்வாறு அமைய வேண்டும். என்பதை "அல்ஹலால் வல்ஹராம் பில் இஸ்லாம்" என்ற நூலில் இருந்து சில பகுதியை இங்கு குறிப்பிடு கின்றேன்.

ஒரு பெண் இஸ்லாமிய ஷரீஆவின் ஒழுக்க வரம்புகளைப் பேணி நடப்பதாயின் அவளது ஆடைகள் கீழ்வரும் பண்புகளைப் பெற்றிருப்பது இன்றியமையாததாகும்.

01. குர்ஆன் விதிவலக்களித்த பகுதிகள் தவிர மற்றைய எல்லாப் பகுதிகளும் மூடப்பட வேண்டும். (முகம், மணிக்கட்டுகள் தவிர)

02. மேனியழகு புலப்படக் கூடிய அளவுக்கு மெல்லியதாக ஆடைகள் அமையக் கூடாது நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் :- "நரகத்தில் சில பெண்கள் இருப்பார்கள் அவர்கள் உலகத்தில் ஆடை அணிந்தும் நிர்வாணிக ளாகவும் பிறரை உணர்ச்சி கொள்ளச் செய்யும் விதத்தில் நடந்து கொண்டவர்களாகவும் இருப்பார்கள். இவர்கள் சுவனத்தில் நுழையமாட்டார்கள் அதன் வாசனை யைக் கூட நுகர மாட்டார்கள்" (முஸ்லிம்)



எது இலக்கோ அதில் முழுக்கவனத்துடனிருந்தால் இலக்கை அடைவது எளிதாகி விடுகிறது. GTC

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"காஸியாத் ஆரியாத்" என்ற அறுபுப்பதம் உடலின் நிறம், அமைப்பு, கவர்ச்சி என்பவற்றை வெளிப்படுத்தும் அளவுக்கு ஆடையணியும் பெண்களைக் குறிக்கும் ஒரு முறை பனூத் தமீம் கோத்திரப் பெண்களில் சிலர் மிக மெல்லிய ஆடை அணிந்து ஆயிஷா நாயகியிடம் வந்த போது அவர்கள் இப்படிக் கூறினார்கள். "நீங்கள் மு.்.மினான பெண்களாக இருந்தால் நீங்கள் அணிந்திருக்கும் ஆடைகள் இஸ்லாமிய பெண்களின் ஆடைகள் அல்ல என்பதைப் புரிந்து கொள்ளுங்கள். " இன்னொரு முறை மெல்லிய மேலாடை அணிந்த ஒரு மணப்பெண் ஆயிஷா(ரழி) அவர்களிடம் வந்த போது " ஸூரத்துன் நூரை ஏற்றுக்கொள்ளாத ஒரு பெண் தான் இத்தகைய ஆடைகளை அணிவாள் " எனக் கூறினார்கள். ஆனால் கண்ணாடி போன்று காணப்படும் இக்கால ஆடைகளை ஆயிஷா (ரலியல்லாஹு அன்ஹா) அவர்கள் கண்டால் என்ன கூறுவார்களோ தெரியவில்லை.

**03.** அங்க அழகினையும், உடம் பின் வளைவு, சுழிவுகளையும் தெளிவாக எடுத்துக் காட்டக்கூடிய கனத்த உடைகளாகவும் அமைதல்கூடாது. மேற்கத்திய நாகரீகம் அறிமுகப்படுத்துகின்ற நவீன ஆடைகள் மெல்லியனவாக இல்லாவிட்டாலும் அங்க அமைப்புக்களைத் தெளிவாகக் காட்டக் கூடிய விதத்தில் இறுக்கமானவைகளாக அமைந்திருக்கின்றன. பார்ப்போரின் உணர்ச்சிகளைத் தூண்டி விடக் கூடியனவாக அமைந்திருக்கும். இத்தகைய ஆடைகளும் இஸ்லாத்தில் முற்றாகத் தடுக்கப்பட்ட வைகளாகும். இத்தகைய ஆடைகளை அணிகின்ற பெண்களையும் மேற்கூறப்பட்ட ஹதீஸ் நரவாசிகளாக வர்ணித்து மிக மெல்லிய ஆடைகளை விட இத்தகைய ஆடைகள் உடலின் உற்பகுதிகளைக் காட்டக் கூடியனவாக இல்லா விட்டாலும் ஒழுக்கக் கேடுகளுக்கும், பிரச்சினைகளுக்கும் மிக முக்கிய காரணிகளாக அமைந்து விட முடியும்

**04.** ஆண்கள் அணிகின்ற வகை யான ஆடைகளாக அமையக் கூடாது. ஆண்களுக்கும் பெண்களுக்கும் வித்தியா சமான அமைப்புக்களில் பிரத்தியேகமான ஆடைகள் உண்டு. ஆண்கள் அணிகின்ற ஆடைகளைப் பெண்களோ அல்லது பெண்கள் அணிகின்ற ஆடைகளை ஆண்களோ அணிவது இஸ்லாமிய ஷரிஅத்துக்கு முரணானதாகும். ஏனெனில் பெண்களைப் போல் வேஷம் போடுகின்ற ஆண்களையும் ஆண்களைப்போன்று வேஷம் போடும் பெண்களையும் நபி (ஸலலல்லாஹு அலைஹிவஸல்லம்) அவர்கள் சபித்திருக்கின்றார்கள். ஆண்கள் பெண்களைப் போன்று அணியவோ அல்லது பெண்கள் ஆண்களைப் போல் அணியவோ இஸ்லாம் அனுமதிக்காது ஏனெனில் அல்லாஹ் அங்க உறுப்புக்களில் வேறுபாடுக ளோடு ஆண் இனத்தையும் பெண் இனத்தையும் வாழ்க்கையில் வித்தியாசமான பொறுப்புக்களையும் கடமைகளையும் வழங்குவதற்காகப் படைத்திருக்கின்றான். மனிதர்களை அல்லாஹ் படைத்ததிருக்கின்ற இயல்பான இயற்கைப் பண்புகளை விட்டுப் பிறழச் செய்வது பொருத்த மானது அல்ல. ஏனெனில் ஒரு பெண் ஆண் வேடமிடும் போது பெண் என்ற வெளித்தோற்றங்களில் இருந்து ஆணின் தோற்றத்துக்கு வெளிப் படையாக மாறுகின்றாள். அவ்வாறே ஓர் ஆண் பெண் வேடமிடும் போது ஆண் என்கிற தனித்துவப் பண்பிலிருந்து பெண்ணின் தோற்றத்துக்கு மாறுகின்றான். இருவரும் அடிப்படை இனப் பண்புகளை மாற்றிக் கொள்கின்றனர். ஒவ்வோர் ஆணும் பெண்ணும் தான் அடிப்படையாகப் பெற்றிருக்கும் இயல்புகளையும் இயக்கங் களையும் கருத்தில் கொண்டு தத்தமக்கு இடப்பட்டுள்ள வரையறைகளை மீறாமல் வாழ வேண்டும் என்றுதான் இஸ்லாம் எதிர்பார்க்கின்றது.

பெண்கள் தமக்கே உரிய ஆடைகளை






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அணியாமல் பிற ஆடைகளை அணிவதை இஸ்லாம் ஷரீஆவுக்கு முரணான செயலாகவே மதிக்கின்றது. ஆனால் தற்காலத்தில் நவீன நாகரீகம் கால மாற்றங்களுக்கேற்ப வழங்கி வரும் புதுப்புது ஆடையலங்கார முறைகளைப் பின்பற்றி ஆண்களின் கீழான உணர்ச்சிகளைத்தூண்டி விடவும் அவர்களை பலவீனர்களாக சிந்தனை அற்றவர்களாக, பாவிகளாக, ஆக்கி விட பெண்ணினம் ஒரு போதும் முயலக் கூடாது.

ஒரு காலத்தில் ஆண்கள் பெண்கள் மீது அதிகாரம் செலுத்தி ஒழுக்க வரம்புகளை மீறாமல் அவர்களைப் பாதுகாக்கும் உரிமை பெற்றவர்களாக இருந்தார்கள். இன்று அந்நிலைகளை மாறி பெண்கள் ஆண்கள் மீது அதிகாரம் செலுத்தவும் அவர்களுக்கு கட்டுப்படாமல் வாழவும் ஆரம்பித்து விட்டார்கள். இது நவீன நாகரீகத்தில் மிகப்பெரிய அச்சுறுத்தலாகும். ஒரு கணவன் மனைவியைப் பார்த்து "எல்லை மீறாமல் நடந்து கொள்" என்று சொல்ல முடியாத நிலை இன்று உருவாகியுள்ளது. இதைவிட தனது சொந்த மகனைப் பார்த்து இப்படிக் கூறவோ அல்லது ஒழுக்கத்துடன் நடந்து கொள்ளுமாறு எச்சரிக்கவோ முடியாத நிலையும் இன்று ஏற்பட்டிருக்கின்றது. அந்தளவுக்கு இன்று ஆண்கள் தமது ஈமானிலும் நம்பிக்கையிலும் மத ஆசாரங்களிலும் பலவீனமானவர்களாக மாறிவிட்டார்கள். எனவே எல்லா ஆண்களும் தமது ஆண்மையையும் தனித்துவத்தையும் அவசியம் பாதுகாத்துக் கொள்ள வேண்டும்.



## ஹலோ டாக்டர்

**நோயாளி :**
''ஹலோ டாக்கடர் ! உங்க பேஷன்ட் பஞ்சாட்சரம் பேசறேன்! தினமும் 2 கி.மீ. நடக்கச் சொன்னீங்களே! ஞாபகமிருக்கா?''

**டாக்டர் :**
''ஓ! எஸ்! அதுக்கென்ன இப்போ?''

**நோயாளி :**
''நீங்க சொன்ன மாதிரி தினமும் 2 கி.மீ. நடந்து இப்ப செங்கல்பட்டு வந்துட்டேன்! மேறகொண்டு என்ன செய்ய?''

**டாக்டர்:**
''உடனே பஸ் பிடிச்சு வீட்டுக்குப் போங்க!''

**நோயாளி :**
''ஓகே டாக்டர்! அப்புறம் நீங்க உணவு பட்டியல் தந்தீங்களே! காலையில் இட்லி, மதியம் 1 கப் சாதம், முந்தியா பிந்தியா அத சொல்லுங்க முதல்ல!''

**டாக்டர் :**
''அட பாவி! சாப்பாடே அதுதான்! நீயெல்லாம் கனவுலேயே நடைப்பயணம் போறபயல்!



உன் அன்பை மனைவியிடம் காட்டு. உன் ரகசியத்தைத் தாயிடம் சொல். GTC

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# GOVERNMENT TEACHERS' COLLEGE - ADDALAICHENAI

## WELFARE COMMITTEE

## ACADEMIC YEAR 2009/2010



**Row 1 (L/R) :** Moulavi.M Nawfar, Mr.MCM Arooz, Mr.S Sritharan (Lectr.) Mr.SLM Saleem (Lectr.), Mr. MIA Lathief (Deputy Principal), Alhaj. Moulavi. MSA Hafeel "Sharqiyy" Principal (SLEAS), Alhaj. Moulavi. ACM Zubair "Sharqiyy" (Deputy Principal), Mr.AM Faizal (Lectr.), Mr.AM Nageem, Mr.S Ananthar, Mr.NM Fasil
**(Seated)**

**Row 2 (L/R) :** Ms. SACU Saheema, Mr.R Ramakrishnan, Mr. MAMM Asmir, Mr.Haneefa, Mr.M Rajomohan, Mr.S Suresh Kumar, Mr.M Annadurai, Mr.A Muralikrishna, Moulavi. MBM Safhan, Mr.AHM Safeek, Mrs.M Maheshwary, Mr.MJM Nzam.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# GOVERNMENT TEACHERS' COLLEGE - ADDALAICHENAI

## CULTURAL COMMITTEE

ACADEMIC YEAR 2009/2010



**Row 1 (L/R) :** (Seated) Mr.K Malrwannan, Mr.MSA Nayeem (Lectr.), Alhaj.MMM Maharoof (Lectr.), Mr. MIA Lathief (Deputy Principal), Alhaj. Moulavi. MSA Hafeel "Sharqiyy" Principal (SLEAS), Alhaj.Moulavi.ACM Zubair "Sharqiyy" (Deputy Principal), Mr.AM Jazeel (Lectr.) Moulavi.HKM Niyas, Mr.R Vicknesh.

**Row 2 (L/R) :** Mrs.J Arulwannan, Ms.AH Sithy Waliha, Mr.K Sathiyabalan, Mr.SR Banayagam, Mr.TM Riyasath, Mr.A Sarawana Kumar Mr.S Sebastipathikraj, Ms.A Ravindirani.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# GOVERNMENT TEACHERS' COLLEGE - ADDALAICHENAI

## SPORTS COMMITTEE

## ACADEMIC YEAR 2009/2010



**Row 1 (L/R) :** (Seated) Mr.M Devadasan, Mr.N Krishnakumar, Mr.S Dickneshwaran, Mr.A Sulaima Lebbe (Lectr.), Mr. MIA Lathief (Deputy Principal), Alhaj. Moulavi. MSA Hafeel "Sharqiyy" Principal (SLEAS), Alhaj. Moulavi. ACM Zubair "Sharqiyy" (Deputy Principal), Mr. SMA Jiffry (Lectr.), Mr.MA Subaideen (Lectr.) Mr.M Thirushelvam, Moulavi. AL Faleel.

**Row 2 (L/R) :** Mrs.S Komathy, Mrs.K Thanaletchumy, Mr.M Rajmohan, Mr.P Shivakumar, Mr.SAM Rizawn, Mr.K Ravichandran, Mr.S Panneerselvam, Mrs. IR Kamila.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சட்டமும் பெண்களுக்கெதிரான பாலியல் வன்முறைகளும்

பீ. கணேஷ்பதி
விடுகை வருடம், ஆரம்ப நெறி

பெண்களுக்கு இழைக்கப்படும் துன்புறுத்தல் களையும் வன்முறை களையும் சமுதாயம் பெரிய விடயம் எனக்கருதுவதில்லை. பெண்களாயிருப்பதால் அவர்களுக்கு ஏற்படும் கஷ்டங்களே அவை என தட்டிக்கழிக்கப்பட்டு விடுவதுண்டு. பெண்களுக்கு இழைக்கப்படும் வன்முறைகள் பற்றி சட்ட நடவடிக்கை எடுக்கவேண்டிய அதிகாரிகளே அவ்வன் முறைகள் அற்பமானவை எனக் கருதி துன்புறுத்திய கணவனிடமே மீளச் சென்று வாழும்படி புத்திமதியுரைக்கின்றனர்.

பெண்களுக்கு எதிராக இழைக்கப்படும் வன்முறைகளைக் குற்றமாக கருதும் சட்டங்கள் இப்பொழுது 100ஆண்டுகளுக்கு பிறகாவது சட்டப் புத்தகங்களில் இடம் பெற்றுள்ளன.

இச்சட்டங்கள் பற்றி திருத்தங்கள் பரிசீலிக்கப்பட்ட பொழுது பெண்களுக்கெதிரான வன்முறைகள் தொடர்பாக விசேட சட்டமொன்றை உண்டாக்குவது அதிக பொருத்தமுள்ளதாக இருக்குமா? என ஆலோசிக்கப்பட்டது. இறுதியில் இக்குற்றங்கள் கொடுமையானவை எனக்கருதப்பட வேண்டுமானால் குற்றவியல் சட்டங்களுக்கு வேண்டிய திருத்தங்களை செய்வதே தகுந்தது என முடிவாகியது.

இச்சட்டத்திட்டங்கள் சந்தேகத்துக்கிடமின்றி போற்றப்பட வேண்டியவை. எனினும் சில குறைபாடுகளையும் கொண்டிருக்கின்றன. பாலியல் வன்முறைக்குள்ளான பெண்ணின் கர்ப்பத்தை அல்லது கடுமையான ஊனமுற்றதாக பிள்ளை பிறக்கும் ஆபத்து ஏற்படலாமென கருதுமிடத்து அதை மருத்துவப் பூர்வமாக அழிப்பதற்கு அனுமதியளிப்பதாக கொண்டுவரப்பட்ட சட்டத்திருத்தம் கடும் எதிர்ப்புக் காரணமாகக் கை விடப்பட்டிருக்கிறது. இதன் விளைவாக குறிப்பிடக்கூடிய முரணான புதியதொரு சங்கடமான நிலை எழுந்து ள்ளது. அதாவது பெண்ணின் உடல் மீது பாலியல் வன்முறை புரிவதை சட்டத்துக்கு எதிரான குற்றமெனக் கூறும் சட்டம் அவ்வாறான பலவந்த உடலுறவின் விளைவாக ஏற்பட்ட கர்ப்பத்தை அழிக்கக் கூடாதென கட்டளையிடுகின்றது. பெண்களுக்கெதிரான வன்முறைகள் தொடர்பாகத் தனது முன்னுரைகளில் குறிப்பிட்டுச் செல்லுமளவுக்கு மாற்றங்களை ஏற்படுத்தியுள்ள சட்டமானது, இவ்வாறு வெளிப்படையாக இரட்டை வரையறைகளை கொண்டிருப்பது முரண் நகைச்சுவையை ஏற்படுத்துவதாக அமைந்திருக்கிறது!

எனவே, இவ்வாறு அருவருப்பான கர்ப்பங்களை வயிற்றில் சுமக்க வேண்டிய நிர்ப்பந்தமான நிலையிலுள்ள பெண்கள் கருச்சிதைவு செய்து கொள்வதற்காகச் சட்டபூர்வமற்ற வழிமுறைகளையே நாட வேண்டி யுள்ளது. ஏனெனில் எமது மருத்துவர்களோ சட்டத்துக்கு அஞ்சி சட்ட விரோதமாக இதனைச் செய்ய முன்வரமாட்டார்கள்.

மண வாழ்க்கையில் மனைவி பாலியல் பலாத்காரம் செய்யப்படுவது தண்டனைக்குரிய குற்றம் எனச் சட்டத்தில் வரையறை செய்யப் பட்டுள்ளது. ஆனாலும் சட்ட பூர்வமாகப் பிரிந்திருக்கும் மனைவிமார் மட்டுமே இச்சட்டத்தினூடாக நீதி கோரலாம். இலங்கையில் கணவன் - மனைவி சட்டபூர்வமாகப் பிரிந்திருப்பதற்கு மேல், மத்திய தரத்தைச் சார்ந்த சிறு தொகையான பெண்களினாலே தான் சட்ட உதவி



GTC சோம்பல் எப்போதும் இகழப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடப்படுகிறதென்பது அனுபவபூர்வமாக நாம் அறிந்த ஒன்று. பெரும்பாலான சந்தர்ப்பங்களில் மனைவிமார் விவாகரத்துக்கே விண்ணப்பிப்பர். அல்லது கணவர்மார்களால் வீட்டிலிருந்து வெளியேற்றப்பட்டு பிரிந்து வாழ்வர். இவ்வாறான சட்டங்களை உருவாக்கியவர்கள் ஒரு அடையாள மாகவே இவற்றை செய்துள்ளனர்.

தமது இளம் பெண் பிள்ளைகளை வீட்டில் விட்டு விட்டு வெளி நாடுகளுக்கு வேலைத் தேடிச் சென்றுள்ள தாய்மார்களின் குடும்பங்களிலே அச்சிறுமிகள் பாலியல் பலாத்காரம் நிர்ப்பந்தத்துக்குள்ளாகி அவர்களின் உறுப்புக்களில் காயமேற்பட்ட சம்பவங்கள் அதிகமாக இடம் பெற்றிருப்பதை மதிப்பீடுகள் தெளிவுபடுத்துகின்றன.

பெண்களுக்கு இழைக்கப்படும் பாலியல் பலாத்காரச் சம்பவங்களில் குற்றவாளிகளுக்குத் தண்டனைகள் அளிக்கப்படுவதில் கூட ஒரு வழிகாட்டி நடைமுறையிருக்க வேண்டும் அல்லாவிட்டால் சட்டத்தில் இணைவிசைவு இருக்காது. ஒரு நீதிபதி 17 வருடத்தண்டனை அளிப்பார். மற்றவர் ஒத்திவைக்கப்பட்ட தண்டனையென தீர்ப்புக் கூறுவார். சட்டங்கள் வார்த்தைகளால் விளாசி விஸ்தரிக்கப்படுமே தவிர செயலில் இல்லை.

இவ்வழக்கம் இன்று முற்றாக மாறிவிட்டதென்று சொல்வதற்கில்லை. சட்டப்புத்தகத்தில் இடம்பெறுமாறு அடையாளமாக சட்டங்களை இயற்றிவிட்டால் மட்டும் போதாது. அவற்றை நடைமுறைப்படுத்த வேண்டும். கற்பழிப்பு வழக்குகளில் சட்டத்தரணிகளுக்கும், மருத்துவர்களுக்கும் இடையே நெருங்கிய ஒத்துழைப்பு இருக்க வேண்டும் அப்போது தான் தெளிவான மருத்துவ ஆதாரங்களை இலகுவாக பெற்றுக் கொள்ள முடியும் சாட்சியம் அளிக்க முன்வரும் மருத்துவ அறிஞரை கூண்டில் ஏற்றி குற்றவாளி போல் குடைந்து அவரின் மருத்துவ ஆதாரங்கள் முதலியவை பற்றிக் கிண்டிக்கிளறி நீண்டநேரம் குறுக்கு விசாரணை செய்யப்படுவது ஒன்றும் அசாதாரண நிகழ்ச்சி அல்ல. இதன் விளைவாக பல மருத்துவர்கள் சாட்சியம் அளிக்க முன்வருவதில்லை அதனால் வழக்கு விசாரணைகள் தாமதம் அடைகின்றன.

சட்டங்களை நிறைவேற்று வோருக்கு அரசாங்கம் தேவையான உதவிகளை அளிக்கவேண்டும். பொலிஸ் நிலையங்களில் பெண்கள், சிறார்களுக்கென நிறுவப்பெற்ற நிலையங்களில் மேசைகளைத் தவிர எதுவுமே இல்லை.

தகவல் :- இணையம்

## பயமோ பயம்

தெருவில் வியாபாரி "வாயப்பயம்" "வாயப்பயம்" என கூவிச் சென்றான். தமிழ் ஆசிரியர் இது கேட்டு கோபமாக அவனைக் கூப்பிட்டு, "ஏனய்யா, இதுபோல தமிழை கொலை செய்றே?" என்றார். "ஏனய்யா, இதுபோல தமிழைகொலை செய்றே?" என்றார். "அது எங்க பயக்க வயக்கமுங்க!" என்றான். "அடப்பாவி! நீ எந்த ஊரு?" என்றார். "கியக்க" என்றான். "இங்க ஏன் வந்தே?" என்றார். "பொயக்க" என்றான். தமிழாசிரியர் மயங்கி விழுந்தார்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சமுதாயத்தில் ஆசிரியர் வகிக்கும் பங்கு

எம். எப். கே. பஹ்மியா
விடுகை வருடம், அரபு நெறி

ஒரு சமுதாயத்தின் எழுச்சியிலும், வீழ்ச்சியிலும் கல்வி முக்கிய இடத்தினை பெறுகின்றது. கற்றோர் அதிகமாக காணப்படும் சமூகம் தலைச் சிறந்த சமூகமாகவும், கற்றோர் குறைந்தளவு காணப்படும் சமூகம். கரடுமுரடானதாகவும் காணப்படும். இந்த வகையில் சமூகத்தில் உன்னத நிலையில் திகழக்கூடிய ஆசிரியர்கள் மதிக்கப்பட வேண்டியவர்கள். அத்தகைய மதிப்புக்குரிய வர்களிடம் சிறந்த அணிகலன்கள் இருப்பது அவசியமாகும்.

நாளைய புதிய உலகத்தினையும், உயர்தலைவர்களையும் உருவாக்கி செப்பனிடும் பணி ஆசிரியர்களின் கரங்களிலே தங்கியுள்ளது. ஒரு மாணவனை நல்லவனாக அல்லது தாழ்ந்தவனாக ஒரு ஆசிரியரால் மாற்றிட முடியும் ஆசிரியர்களின் போதனைகள் அறிவுரைகள், முன்மாதிரிகள் அனைத்தையும் வெள்ளைமணம் கொண்ட பிள்ளைகள் பின்பற்றுகின்றனர். ஆகவே ஆசிரியர்கள் இன்னொரு சமூதாயத்திற்கு அச்சாணியாக திகழ்வதால் ஆசிரியர்களின் செயற்பாடு மாணவச் சமூதாயத்திற்கு முன்னேற்றமான ஒரு செயற்பாடாக அமைவது அவசியமாகும்.

ஆசிரியர் சிறந்த பண்பாளர்களாக இருக்க வேண்டும். சிறந்த பண்புகளின்றி பண்பாடுள்ள சமூகத்தைப் படைத்து விட முடியாது. சிறந்த பண்பின்றி இருப்பதை வள்ளுவர்,

**பண்புடையார்ப் பட்டுண்டு உலகம் அது
இன்றேல் மண்ணுக்கு மாய்வது மண்**

என்று குறிப்பிட்டுள்ளார். இவ்வாறு பண்பாட்டின் அவசியம் வழியுறுத்தப் பட்டுள்ளது. வஞ்சகம், நயவஞ்சகம், கள்ளம், கபடம், புறம், பொய், தீயநடத்தை போன்ற குணநலன்களின் இருப்பிடமாக ஆசிரியர்கள் இருக்கக் கூடாது.

சிறந்த பண்பாடுகளும், பழக்கங்களுமின்றி உயர்ந்த கல்வித் தரத்தைப் பெற்றிருந்தாலும் அது சமூகத்துக்குப் பயன் அளிக்காது. அத்தகையவர்கள் பால் போன்றிருக்கும் கள்ளுக்கு ஒப்பாவார்கள். இத்தகைய வர்களால் சமூகம் ஒரு பயனையும் பெறாது. இத்தகையவர்களால் உயர்ந்ததொரு மாணவ சமூகத்தை உருவாக்கவும் முடியாது. அறிவால் மட்டும் அறிவை போதிக்கும் போது அது ஜோதியாகாது. சிறந்த ஒழுக்கத்துடன் சேர்ந்த கல்வியே உன்னத ஜோதியாகும். ஆசிரியர்கள் இவற்றின் பிறப்பிடமாக வேண்டும்.

பாடசாலைகள் அறிவை மட்டும் போதிக்கும் இடம் அல்ல. அறிவும் ஒழுக்கமும் உள்ள ஒரு சமூகத்தை உருவாக்கும் உயர் இல்லம். இத்தகைய உயர் இல்லம் உரிய வகையில் செயற்படவில்லையாயின் அது முழு மாணவ சமூகத்துக்கும் துரோகம் இழைப்பது போன்றதாகி விடும். இத்தகைய ஆசிரியப்பணியின் மகத்துவம் இந்த மண்ணகம் எங்கும் பரவி பாரிய பயனை நல்க வேண்டும் என்றால், தூய நோக்குடனும்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயரிய இலட்சியத்துடனும் உன்னத பண்பாடுகளுடனும் செயற்பட வேண்டும். அத்தகையவர்களிடம் இத்தகைய பண்புகள் காணப்படின் இன்னும் பல உயரிய பலன்களைப் பெற்றுத்தரும்.

* கற்ற சிறந்த கல்விக்கேற்ப செயற்படுதல்.
* தூய நோக்குடன் முகஸ்துதிக் கின்றி பணிபுரிதல்.
* சிறந்த உபதேசங்களை ஒளிவு மறைவின்றி உணர்த்துதல்.
* மாணவரை தம் பிள்ளைப் போல் கருதுதல்.
* தீயப் பண்புகளை அகற்ற எளிய முறைகளில் இருந்து ஆரம்பித்தல்.
* ஐயமற தெளிவுபடுத்தல்.
* சிறந்த பண்புகளின் அணிகலன் களாக இருந்து ஆரம்பித்தல்.

இத்தகைய உயர்ந்த முறை களைப் பேணி செயற்படும் போது நாளைய சமூகம் நற்பண்பாளர்களின் சமூகமாக நல்லறிஞர்களின் களமாக உருப்பெறும். அத்தகைய உயரிய சமூகத்தை உருவாக்க உறுதி பூண்டு செயற்பட வேண்டும்.

வாழ்க ஆசிரியர்! வளர்க ஆசிரியரின் இலட்சியம்!!

எவ்வளவுதான் நாம் ஊற்றினாலும்,
எப்போதுமே அது நிறைந்து
வழிவதில்லை.
கரண்டியால் அள்ளி
வெளியேற்றினாலும்
காலம் முழுவதும்
வற்றுவதேயில்லை.
மேலும், அதற்கான காரணமும்
அறியவில்லை.
இதுவே மறைந்து விளங்கும்
ஒளிநெறி.

# கண்



ஒரு நாள் கண் சொன்னது நான் இந்தப் பள்ளத்தாக்குகளுக்கு அப்பால் நீலப் பனித்திரை மூடிய மலையினைக் காண்கிறேன். அது அழகாய் இருக்கிறதன்றோ!'

காது கேட்டது, சிறிய நேரம் கூர்ந்து கவனித்த பின் சொன்னது ஆனால் எங்கே இருக்கிறது மலை? யாதொரு மலையும் இல்லையே! ஏதும் கேட்கவில்லையே? '

பிறகு கை பேசியது, நான் அதை உணரவோ தெடவோ முயற்சித்தும் என் முயற்சி வீணாகி விட்டதே! என்னால் எந்த மலையையும் காணமுடியவில்லையே!'

இப்போது மூக்கு சொன்னது, இங்கே எந்த மலையும் இல்லை. நான் அதை நுகரவோ மோப்பம் பிடிக்கவோ முடியவில்லையே!'

பிறகு கண் மறுபக்கம் திரும்பிக் கொண்டது. மற்ற புலன்கள் யாவும் தங்களுக்குள் கூடி கண்ணினுடைய தவறான நம்பிக்கை குறித்துப் பேசிக் கொண்டன.

இந்தக் கண்ணுக்கு ஏதோ ஆகிவிட்டது! ஏதோ ஒன்று இருக்கிறது!'



உனக்கு அவசியம் இல்லாத பொருளை வாங்கினால் விரைவில் அவசியமான பொருளை விற்க நேரிடும். GTC

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிந்தனைக்கு

பி. எம். பஸ்மியா
விடுகை வருடம், இஸ்லாம் நெறி

அறிவு என்பது விசுவாசியின் காணாமற்போன பொருள், அது எங்கு கிடைப்பினும் அவன் அதை எடுத்துக் கொள்வான்.

தன் கரத்தாலும் நாவாலும் பிறருக்குத் தீங்கிழைக்காதவனே உண்மையான முஸ்லிம்.

சிரித்துக் கொண்டே பாவஞ் செய்தவர், அழுது கொண்டே நரகம் அடைவர். அழுது கொண்டு (உள்ளச்சத்தோடு) வணக்கம் செய்தவர், சிரித்துக் கொண்டே சுவர்க்கம் அடைவர்.

அறிவுடைமையென்பது, இறைவனின் விருப்பத்திற்கிணங்க நடந்து கொள்வதும் அவனது பொறுப்பை விட்டு விலகிக் கொள்வதுமாகும்.

உடலசைவது உயிருக்கு அறிகுறியாக இருப்பது போன்று, வணக்கத்திற்கு ஆயத்தமாகுவது ஞானத்திற்கு அறிகுறியாகும்.

* தாயின் பாதத்தடியில் சேயின் சுவர்க்கம் இருக்கிறது.
* அல்லாஹ்வின் மகிழ்ச்சி தந்தையின் மகிழ்ச்சியில் இருக்கிறது.
* அல்லாஹ்வின் வெறுப்பு தந்தையின் வெறுப்பில் இருக்கிறது.
* தாய் தந்தையரைத் திட்டுவது அல்லது குறைகூறுவது மிகப்பெரும் பாவமாகும்.
* மூத்த சகோதரன் அந்தஸ்து தந்தையின் அந்தஸ்தைப் போன்றது.
* அன்னையின் மடியிலிருந்து மண்ணறை வரை கல்வியைத்தேடிக் கொண்டேயிருங்கள்.
* எவரிடமிருந்து கல்வி கற்கின்றீர்களோ அவருக்கு மதிப்பளியுங்கள்.
* குப்புறப்படுப்பதை அல்லாஹ் விரும்புவதில்லை.
* எவரேனும் ஒரு குருவியை விளையாட்டுக்காகப் பயனின்றிக் கொன்றால் இறுதித் தீர்ப்பு நாளில் அந்தக் குருவி அவனுக்கு எதிராக அல்லாஹ்விடம் முறையிடும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "WISE MEN TELL US"

N.Kulendira Kumar
2nd Year Maths Unit

01. He who sows Courtesy reaps friendship and he who plants kindness gathers love *(Saint Basil)*

02. Unless you try to do something beyond what you have mastered you will never grow *(Ronald E. Osbern)*

03. I bring you the gift of these four words; I believe in you *(Blaise pascal)*

04. It is a funny thing about life; if you refuse to accept anything but the best, you very often get it *(In Somerset Maugham)*

05. The best things in life aren't things *(Art Buchwald )*

06. If I had no sense of humour, I would long ago have committed suicide *(Mohatma Gandi)*

07. Slow down and enjoy life. It's not only the scenery you miss by going too fast, you also miss the sense of where you are going and why. *(Eddie cantor)*

08. Each one has to find peace from within. And peace to be real – must be unaffected by our side circumstances. *(Mahatama Ganthi)*

09. Dreams get you started; discipline keeps you going. *(Jim Rohn)*

10. Try not to become a man of success but rather try to become a man of value. *(Albort Einstein)*

11. The fragrance always stays in the hand that gives the rose *(Anonymous)*

12. The time to repair the roof is when the sun is shining *(John. F. Kennedy)*

13. I may be a despicable person but when Truth speaks through me I am invincible. *(Mahatma Gandhi)*

14. It is impossible to defeat an ignorant man in argument. *(Williom cibbs) mc adoo.*

15. Life is like a game of tennis; the player who serves well seldom loses. *(Anonymous)*





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிள்ளையின் தாய் மொழி விருத்தி சமூகத்தின் கைகளில்



சியாதா அஸ்மின்
விடுகை வருடம், ஆரம்ப நெறி

எந்தத் துறையில் எத்தகைய கல்வியினைக் கற்பதற்கும் ஊடகமாக அமைவது தாய் மொழியேயாகும். அந்த வகையில் கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே முன் தோன்றிய மூத்த மொழி தமிழ் மொழியாகும். தொன்மையும் பெருமையும் வாய்ந்த இத்தமிழ் மொழியினைத் தாய் மொழியாக கொண்டவர் என பெருமை பேசும் தமிழர் நாம் ஆயினும் எம் தாய்க்கு நிகராகப் போற்றப்படுகின்ற இத்தமிழ் மொழியினை எந்தளவிற்குப் பேணுகின்றோம். எவ்வாறு ஊட்டி வளர்க்கின்றோமென்று இவ் வேளையிற் சிந்தித்தல் சாலப் பொருத்தமானது.

மொழியாற்றலும் மொழியறிவும் மந்தமான நிலையில் காணப்படுகின்ற ஒரு மாணவன் கணிதம், விஞ்ஞானம், அழகியல் போன்ற எந்தத்துறையில் திறமையுடையவனாக காணப்படுகின்ற போதிலும் தமிழ் இலக்கண முறைகளின் படி வசனங்களை ஆக்கிக் கொள்ளவும், புத்தகங்களில் இருந்து வாசித்துக் கொள்ளவும் முடியாமல் இருப்பானாகின் அவனது அடைவு மட்டங்கள் திருப்திற்றவையாக காணப்படும். காரணம், எத்துறைப் பாடமாக இருந்தாலும் தமிழ் மொழியைத் தாய்மொழியாகக் கொண்ட எமக்கு மேற்கூறிய பாடங்கள் எல்லாம் தமிழ் மொழி மூலமே கற்பிக்கப் படுகின்றன. எனவே, மொழியாற்றல் நிறைந்த பிள்ளைகளினாலேயே சிறந்த அறிவினை பெற்றுத் திருப்திகரமான அடைவு மட்டங்களைப் பெற்றுத் தரக்கூடிய முக்கிய காரணிகளுள் அதிக செல்வாக்குச் செலுத்துகின்ற இம்மொழியறிவினை நாம் எம் மழலைச் செல்வங்களுக்கும் மாணவ சிறார்களுக்கும் புகுத்தி விருத்தி செய்வதன் மூலம் தமிழ் மொழிப் பிரயோகத்தில் விருத்தியினை ஏற்படுத்த முடியும். அந்த மொழி விருத்தியில் அடித்தளம் இடுபவர் களாக ஒரு குழந்தையின் பெற்றோரே திகழ்கின்றனர். கேட்கக் கேட்கத் தெவிட்டாத செவிக்கும், மனதிற்கும் இன்பம் அளிக்கக் கூடிய குழலோசை, யாழோசை எல்லா வற்றையும் கடந்து இனிமை தருகின்ற மழலை மொழி பேசுகின்ற பொழுதிலே எம குழந்தைகளின் மொழி விருத்திற்கு அத்திவாரம் இடப்படுகின்றது. அங்கு பெற்றோரே விஷேடமாக அன்னையே ஆயகலைகள் அறுபத்தி நான் கினையும் உவந்தளிப்பதில் முதலாம் படியில் திகழ்கிறாள். எவ்வாறெனில் கொஞ்சி விளையாடும் பிஞ்சுள்ளம் படைத்த கள்ளம் கபடமற்ற மழலைகளுக்கு அன்புடனும் அறிவு டனும் சேர்ந்து அழுத்தம் திருத்தமாக பேசவும் கற்றுக்கொடுக்கின்றாள். அங்கு தான் பிள்ளையானது தமிழ் மொழி என்னும் விருட்சத்திற்கு ஆணி வேரினைப் பெறுகின்றது.

அடுத்தபடியாகக் கூறுவோமானால் கல்வியறிவினை பெற்றுக் கொள்வதற்காக குழந்தைப் பாருவத்தினைக் கடந்து பிள்ளைப் பருவத்தையடைந்து பாடசாலையில் காலடியெடுத்து வைக்கிறது ஒரு பிள்ளை. அப்பிள்ளையினை அன்புக்கரம் நீட்டி வரவேற்கின்றார் ஆரம்பப்பிரிவு ஆசான். அவரது அன்பினாலும் அரவணைப்பினாலும்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுண்டு நாளாந்தம் அதிகாலையில் பள்ளி யெழுச்சி பாடிக் கொண்டு கூண்டை விட்டு இரைதேடிச் செல்லும் பறவைகளைப் போல ஆனந்தமாக, ஆரவாரமாக ஒடிவரச் செய்கின்றார். அவ்விதமான பிள்ளைகளுடைய ஒளிமயமான எதிர்காலத்திற்கு வித்திடுபவராக இங்கு பாலர் போதனை வழங்கும் ஆசானாக திகழ்கின்றார்கள். அதாவது, அன்னையால் அத்திவாரமிடப்பட்ட ஆயகலைகளுக்கும் உருக்கொடுக்கின்ற ஆளுமையானது இப்பருவத்தில் ஆசானால் வளர்த்துச் செல்லப்படுகின்றது. இங்குதான் பாடசாலை வழங்குகின்ற மொழியினை திருத்தமாகவும் தெளிவாகவும் எழுதவும் வல்லின, மெல்லின, இடையின வேறுபாடுகளுடன் வாசிப்பதற்கும் பிள்ளை பயிற்றுவிக்கப்படுகின்றது. இக்காலப்பகுதியில் பல்வேறு விதமான பாடங்களைப் பிள்ளையானது கற்க ஆரம்பிக்கின்ற பொழுதிலும் அந்த அனைத்து பாடங்களும் தமிழ்மொழி மூலமாகவே கற்கவும், கற்பிக்கவும்படுகின்றது. தாயின் மடியில் மழலை பேசியும், முன்கல்வி பாடசாலையில் குழந்தை யானது அழுத்தந் திருத்தமாகவும் பேசவும் கற்றுக் கொண்டிருக்குமாயின், இப்பால பருவத்தில் எழுத்துப் பிழைகளின்றி எழுதவும் அழகாக உச்சரிக்கவும் பழகிக் கொள்கின்றது. இதனையே,

**"சித்திரமும் கைப்பழக்கம் செந்தமிழும்
நாப்பழக்கம் வைத்ததொரு கல்வி
மனப்பழக்கம்"**

என்பது கோடிட்டுக் காட்டப்படுகிறது. அவ்வாறே இளமையிற் கல்வி சிலையில் எழுத்து என்பதனைப் போல இப்பருவத்தில் அவர்களுக்கு மொழியானது செம்மையுற வழங்கப்படுமாக இருந்தால், அது அவர் மனதில் பசுமரத்தாணிபோல, பதிந்து விடும் எனவே, அன்னைக்குப் பின் தொடர்ந்து வருகின்ற கல்வியை வாழ்வில் ஒரு பிள்ளைக்கு வழங்குகின்றவர் சந்திக்கின்ற ஆரம்பக்கல்வி புகட்டும் ஆசானே அப்பிள்ளையின் மொழி விருத்தியின் முக்கிய பாத்திரமாக காணப்படுகின்றார். அன்னைக்கும் ஆசானுக்கும் அடுத்தபடியாக மொழி விருத்தியில் பங்கெடுப்பது ஒரு பிள்ளை வாழுகின்ற சுற்றமேயாகும்.

சுற்றமென்னும் போது தந்தையுள்ளிட்ட உற்றார், உறவினர்களேயே இங்கு குறிப்பிடப்படுகின்றது. கல்வி புகட்டுவதால் மட்டுமல்ல பேசுவதிலும் அழகழகான சொற்களை அழுத்தம் திருத்தமாக ஒரு பிள்ளையுடன் அது வாழும் சுற்றமும் பேச வேண்டும். அப்போது தான் அப்பிள்ளையின் மொழி விருத்தியின் சுற்றம் சிறந்த பங்களிப்பினை நல்க முடியுமென்பது மறக்க முடியாத உண்மையாகும். இதனை விடுத்து,

**"இனிய உளவாக இன்னாது கூறல்
கனி இருப்பக் காய் கவர்ந்தற்று"**

மூடர்போல அச்சுற்றம் எந்தவொரு மொழியிலும் காணப்படாத இனிமையான சொற்களை தன்னகத்தே கொண்ட மொழியாகிய நம் தாய் தமிழில் காணப்படும் சொற்களையும், வாக்கியங்களையும் பிழையாகவோ, ஒழுங்கின்றியோ, அரைகுறையாகவோ பேசுமாயின், அக் குழந்தையின் மொழி விருத்தியில் மட்டுமல்ல, பெருமை மிக்க நம் தமிழ் மொழியையும் கொச்சைப்படுத்திய பாவியாக சுற்றம் மாறிவிடுகின்றது. எவ்வாறெனில்,

**"பாலும் தெளிதேனும் பாகும் பருப்பும்
இவை நாலும் கலந்துனக்கு நான் தருவேன்
கோலம் செய் துங்கக் கரிமுகத்துத்
தூமணியே - நீ எனக்கு சங்கத் தமிழ்
மூன்றும் தா"**

என்று இறைவனிடம் மூன்று வகை தமிழைப் பெற நான்கு வகைப்பொருள் தருகின்றேன். என்று கேட்டு, ஔவையாரினால் பெற்றுக் கொள்ளப்பட்ட சிறப்பும் பெருமைகளும் நிறைந்த தமிழ் இங்கு சீர் குலை கின்றது. எனவே, இத்தகைய பல்வேறு



சிரிக்கத் தெரியாதவன் வாழ்க்கையை அனுபவிக்கத் தெரியாதவன். GTC

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திறமைகளினின்று நம்மையும் நம் சமூகத்தையும் நம் தமிழ் மொழியையும் காப்பது தமிழ் பேசுபவராகிய எம் ஒவ்வொருவரினதும் தலையாய கடமையாகும். இவற்றோடு மட்டும் நின்று விட்டால் போதாது. அம்மொழி வளர்ந்து விருத்தியடைய வேண்டு மாயின் ஒவ்வொரு பிள்ளைகளிடமும் வாசிக்கும் பழக்கத்தினை ஏற்படுத்த வேண்டும்.

**"வாசிப்பதனால் மனிதன் பூரணம் அடைகின்றான் "**

என்ற கூற்றினை அனுபவாயிலாக உண்மையாக்க வேண்டுமாயின், தந்தை, தாய், உள்ளிட்ட சுற்றமானது ஒரு பிள்ளையின் அறிவு வளர்ச்சிக்குத் தேவையான நல்ல பல நூல்களையும் வாசிப்பதற்கு ஏற்ற வழிவகைகளையும் வாரி வழங்க வேண்டும். இந்த வகையில் ஒவ்வொரு பிள்ளையும் தாய்மொழியில் விருத்தி பெற்றிருந்தாலேயன்றி வாசிக்க வோ, பல கலைகளை அறிந்து தெளியவோ முடியாது என்பது தெட்டத் தெளிவான உண்மையாகும்.

**" நீரளவேயாகுமாம் நீராம்பல் - தான் கற்ற நூலளவேயாகுமாம் நுண்ணறிவு**

என்ற ஔவை கூறியதற்கு ஒப்ப பல்வகையான நூல்களையும் வாசித்து தெளிந்த பிள்ளையே கண்டதும் கற்று பாண்டிதனாவதற்குரிய தன்மை யினைப் பெறும். இவ்வாறு பலதும் கற்றுப் பாண்டித்தியம் பெற வேண்டுமானால் ஒவ்வொரு பிள்ளையும் தாய் மொழியில் தெளிந்த அறிவு பெற்றிருத்தல் அவசியமாகும்.

இந்த வகையில் ஒவ்வொரு பிள்ளை யினதும் மொழியறிவில் விருத்தியினை ஏற்படுத்தும் காரணிகளுள் ஒன்றாகக் காணப்படுவது நூலகமாகும். இக்காரணி யினை வழங்கக்கூடிய வாய்ப்பு குறிப்பிட்ட சமூதாய குழுக்களிடமே காணப்படுகின்றது.

எனவே ஒவ்வொரு சமூதாயத்திலும் நூலகங்கள் அமைக்கப்பட்டு பல்வகையான நூல்களையும் தாங்கிய களஞ்சியங்கள் அமைக்கப்பட வேண்டும்.

**இன்றைய சமூதாயத்தில் எம் தாய் மொழியாம் தமிழ் மொழியானது "செந்தமிழ் நாடெனும் போதினிலே இன்பத்தேன் வந்து பாயுது காதினிலே"**

என்று முழங்கிய பாரதியின் வயிற்றில் பால்வார்த்த தமிழாகக் காணப்படவில்லை. மாறாக செந்தமிழித்தேன் மொழியாளுக்குக் காதிற்குக் குண்டலமும் கழுத்திற்குச் சிந்தாமணியும், இடையிலாட மேகலையும், கைகளில் குலுக்க வளையலும் தந்து தேமதுரத் தமிழோசையானது உலகெல்லாம் பரவச் செய்யும் வகையில் ஆர்ப்பரிக்கின்ற சிலம்பினையும் அவன் கால்களுக்குத் தந்து புகழ் பூத்த பெரு விருட்சமாகத் திகழ்கின்ற தமிழ் மொழி வள்ளுவம் தந்து வான் புகழீட்டிய தமிழ் மொழி இன்று எம்மத்தியில் சீர் குலைந்து சின்னாபின்னமாகி அழகிழந்து ஒளிமங்கிக் காணப்படுகின்றது. எனவே திருமூல நாயனார் கூறியது போல,

**''என்னை இறைவன் நன்றாகப் படைத்தனன் தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே "**

என்பதற்கேற்ப இப்பாரில் தமிழ் மணங்கமழச் செய்வதற்கு நாம் ஒவ்வொருவரும் எம்முடைய பொறுப்புக்களை உணர்ந்து தாய் மொழியாம் தமிழ் மொழியின் விருத்தியில் அயராது உழைத்து எம் குழந்தைகள் மத்தியில் அதனை வளர்த்து நல்லதொரு மொழி விருத்தியினை ஏற்படுத்த வேண்டும்.







நகைச்சுவை உள்ளவர்கள் அன்பு உள்ளவர்களாக இருப்பர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நமது நாட்டில் பண்டைய காலம் தொட்டு வந்த விளையாட்டுக்கள் சில



ஏ. எச். எம். றிஸ்வின்
விடுகை வருடம், இஸ்லாம் நெறி

விளையாட்டுக்கள் பாரம்பரியமாகவே பின்பற்றப்பட்டு வருகின்றது. அதிலும் பண்டைய காலத்தில் கிராமங்கள் மத்தியில் பொழுது போக்காக சில விளையாட்டுக்கள் விளையாடப்பட்டன. அவை இன்றும் பாடசாலையிலும், வீட்டிலும் சிறு பிள்ளைகள் மத்தியிலும் விளையாடப்படுகின்றது. அந்த வகையில் நமது நாட்டில் பண்டைய காலம் தொட்டு வந்த விளையாட்டுக்களில் வீடுகளில் இருந்தவாரே விளையாடும் விளையாட்டுக்களும் விஷேட நாட்களில் உடலையும் பலத்தையும் கொண்டு நடைபெறும் விளையாட்டுக்களும் இடம் பெற்றன. அந்த காலத்தில் இன்று போல் விளையாட்டு கழகங்களோ வேறு கழகங்களோ இருக்கவில்லை.

முன்னைய காலத்தில் நடைபெற்ற விளையாட்டுக்களை....................

*. வீடுகளில் இருந்தவாரே நடத்தப்படும் விளையாட்டுக்கள்
*. வெட்ட வெளியில் நடத்தப்படும் விளையாட்டுக்கள்
*. இரத்தம் சிந்தி நடக்கும் விளையாட்டுக்கள்
*. சமய அடிப்படையை கொண்டு நடைபெறும் விளையாட்டுக்கள் என பிரித்து நோக்கலாம்.

பண்டைய கால விளையாட்டுக்களில் வீடுகளில் இருந்தவாரே நடாத்தப்படும் விளையாட்டுக்களில் ஒன்றான முத்து சிப்பியை கொண்டு விளையாடும் விளையாட்டை குறிப்பிடலாம். இது இருவராகவோ அதற்கு மேற்கொண்டோ குழுவாகவோ நடைபெறும். ஒரு வீட்டில் அல்லது பல வீடுகளில் உள்ளோர் கூடி விளையாடுவார்கள். கிராமிய மக்களிடம் இன்றும் இவ்விளையாட்டை காணக் கூடியதாக இருக்கின்றது. மிகவும் சுவாரசிய மானதும் ஆண்களும் பெண்களும் வெவ் வேறாகவும் சில சமயம் ஒன்றாகவும் கலந்து கொள்வார்கள். இன்று இவ்விளையாட்டு பணத்தை அடிப்படையாகக் கொண்டும் நடை பெறுவதை காணலாம்.

இரு குழுக்களுக்கும் நடை பெறும் போட்டியில் இறுதியிலே வெற்றி பெறும் குழு சந்தோஷத்தை பரிமாறிக்கொள்ளும். இவ்விளையாட்டு இரவு நேரத்தில் பூரண சந்திரன் உள்ள நாட்களிலே நடைபெறும்.

கிராமிய மட்டத்தில் காணப்பட்ட மற்றுமொரு விளையாட்டு இக்காலத்து சதுரங்கம் விளையாட்டைப் போன்று காணப்படும். “நெஞ்சிளதீம” எனும் பெயரால் அமைக்கப் பட்ட விளையாட்டாகும். பெரும்பாலும் ஆண்கள் மட்டுமே இதனை விளையாடுவர். இரண்டு பேர் சேர்ந்து விளையாடும் விளையாட்டாகும்.

தற்போதைய கிரிக்கெட் விளையாட்டை போன்றதொரு விளையாட்டு **“மட்டகெலிய”** எனும் பெயரில் நடைப்பெற்றுள்ளது. 20ஆண்களுக்கு மேற்படாமல் இருபிரிவாக சேர்ந்து இவ்விளையாட்டை விளையாடி







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யுள்ளார்கள். ஐம்போல, நாரங்காய் என்பவற்றை பந்தாகவும், $1^1/_2$ அடி நீளமான குச்சி ஒன்றும் தேங்காய் மட்டையையும் உபயோகித்து இவ்விளையாட்டு விளையாடப்பட்டுள்ளது.

**"லுனு எதீம"** உப்பு இழுத்தல் எனும் பெயரில் ஒரு விளையாட்டும் இருந்துள்ளது. இது இன்றைய கபடி விளையாட்டை ஒத்ததாக அமைந்திருந்ததை அறியக் கூடியதாக உள்ளது. பண்டைய காலத்தில் இரத்தம் சிந்தும் வாள்வீச்சு விளையாட்டும் காணப்பட்டது. இவ்விருவராக சேர்ந்து இவ் விளையாட்டை விளையாடி யுள்ளார்கள் பண்டையகால போர் தந்திரங்கள் இதில் கையாளப்பட்டு இவ் விளையாட்டு ஊக்குவிக்கப்பட்டு வந்தது. இதில் பழிவாங்கலோ, தனிப்பட்ட குரோதங்களோ இடம் பெறாமை குறிப்பிடத்தக்க அம்சமாகும். விளையாடும் வீரர்கள் வாள்வீச்சின் போது காயம்பட்டு இரத்தம் சிந்தும் சந்தர்ப்பங்களும் இருந்துள்ளது. உயிர் சேதம் ஏற்படாதவாறு நடைபெற்ற இவ்விளையாட்டில் யார் முதலில் களைப்படைகிறாரோ அவர் தோல்வியுற்றவராக கருதப்படுவார். தற்போது இவ்விளையாட்டை சில நாடுகள் பாதுகாப்பு உடை அணிந்து விளையாடி வருவதை காணலாம்.

ஆரம்ப காலம் தொட்டு வந்த விளையாட்டாக தலையணையால் அடித்து விளையாடும் விளையாட்டும் காணப்பட்டது. இது இன்று புத்தாண்டு விழாக்களில் கட்டாயமாக நடைபெறும் ஒரு விளையாட்டாகும். இவ்விளையாட்டில் வீரர்கள் இவ்விருவராக பங்குகொள்வர். இவ்விளையாட்டில் விளையாட்டு வீரர்களின் நிதானமும் சகிப்புத்தன்மையும் முக்கியமானதாகும். இவ்விளையாட்டில் கடுகு மரத்தினால் செய்யப்பட்ட கருவின் மேலே இருவர் தலையணையால் சண்டையிடும் பொழுது கருவிலிருந்து கீழே விழுந்தவர் தோல்வியுற்றவராக கருதப்படுவார்.

வழுக்கு மரம் ஏறுதலும் பண்டைய காலம் தொட்டு வந்த விளையாட்டாகும் இதனையும் தற்போதைய சிங்கள, தமிழ் புத்தாண்டு விழாக்களில் காணலாம். "வெதி நெடும" வேடர்களின் நடனம் என்று சொல்லப்படும் ஒரு விளையாட்டும் இருந்து வந்துள்ளது. இவ்விளையாட்டானது வேடர்களின் பாரம்பரிய கவிதைகளை பாடிக் கொண்டு அந்த பாடலில் இராகத்திற்கேற்றவாறு தனது உடல் அவயவங்கள் அனைத்தையும் அசைத்தவாறு நடனமாடுவர். இது பார்ப்பவர்களை கவரும் ஒரு சிறந்த விளையாட்டாக காணப்பட்டது.

பண்டைய காலம் தொட்டு வந்த விளையாட்டாக ரபான் கொட்டுதல் விளையாட்டுக் காணப்பட்டது. இது அன்று தொட்டு இன்று வரை நடைபெறும் விளையாட்டாகும் பெரும்பாலும் பெண்களே கலந்து கொள்ளும் இவ்விளையாட்டில் சில சமயங்களில் ஆண்களும் கலந்து கொள்வர். இதனை தற்போது சிங்கள மக்களின் விஷேட தினங்களில் நடைபெறுவதைக் காணலாம். தற்போது இதனை கிராமிய புறங்களில் மட்டுமே காணக்கூடியதாக உள்ளது. இவ்விளையாட்டு கவிதையும் அதற்கேற்ற தாளமும் மக்கள் மனதை கவரும் விளையாட்டாகும். இது தேசிய விளையாட்டுக்களிலும் முக்கிய இடத்தை வகிப்பதை காணலாம்.

"இனிவெடபெரலம்" வேலியை உடைத்துக் கொண்டு வருதல் என்ற பெயரால் அழைக்கப்படும் கிராமிய விளையாட்டும் காணப்பட்டது. இவ்விளையாட்டில் பெண்கள் மாத்திரமே பங்குகொள்வர். மைதானத்தில் கூடும் பெண்களில் ஒரு குழு வரிசையாக ஒவ்வொருவரின் கைகளை கெட்டியாக பிடித்துக் கெண்டு நிற்பர். இது வேலியாகும். வேலிக்கு வெளியே மற்றுமொரு குழு மாடுகள் என கணிக்கப்படும். வெளியில் உள்ள மாடுகள் குழு, வேலி குழு வைப்பார்த்து கேள்விகள் கேட்க வேலிகளாக இருப்பவர்கள் பதில்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறுவார்கள். இறுதியாக மாடுகள் குழு வேலியை உடைத்துக் கொண்டு உட்செல்ல முயற்சிப்பார்கள். குறிப்பிட்ட நேரத்தில் வேலியை உடைத்துக் கொண்டு மாடுகள் குழு உட்சென்றால் மாடுகள் குழுவின் பக்கம் வெற்றியும் வேலிகள் குழு குறிப்பிட்ட நேரத்தில் மாடுகள் குழுவை தடுத்து விட்டால் வேலிகள் குழு பக்கம் வெற்றியும் தீர்மானிக்கப்படும். இன்று சிறுவர்கள் மத்தியில் இவ்விளையாட்டை பெரும்பாலும் காணலாம்.

ஊஞ்சல் ஆடுதல் விளையாட்டும் அன்று தொட்டு இன்று வரை இருந்தும் வரும் ஒரு விளையாட்டாகும். இன்று இவ்விளை யாட்டை பரவலாக காணலாம்.

சமய வழிபாட்டுடன் கூடிய அன்று தொட்டு இன்று வரை நடைபெறும் விளையா ட்டுக்களில் **"கொம்பு இழுத்தல்"** என்று சொல்லப்படும் விளையாட்டும் ஒன்றாகும். இவ்விளையாட்டானது அரச காலம் தொட்டு நடைப்பெற்று வரும் ஒரு விளையாட்டாகும். மழையில்லாத காலங்களில் மழை வேண்டியும், பகைவர்களிடமிருந்து பாதுகாப்பு வேண்டியும், நோய்களில் இருந்து மக்களை காப்பாற்ற வேண்டியும் பல முக்கியமான தேவைகளை முன்வைத்து இது நடைப்பெற்றுள்ளது. இதனை விளையாட்டு என்பதை விட சமய சடங்கு என்றே கூற முடியும் . இதற்கு இலகுவில் உடையாத பலமான மரங்களில் இருந்தும் ஒரே மாதிரியான இரு மர தொரட்டிகளை வெவ்வேறு மரங்களில் இருந்து எடுத்து பயன்படுத்துவர். இதனை மைதானத் திற்கு கொண்டு வரும் போது பக்தியுடனும் வழிபாட்டுடனும் கொண்டு வருவர். இரு குழுக்களும் இரு மர தொரட்டிகளையும் ஒன்றோடொன்று பிணித்து இரு பக்கம் இருந்தும் இழுப்பார்கள். இப் போட்டி நடைபெறும் இடத்திற்கு **"அங்பிடிய"** என்ற பெயர் வழங்கப்படுகிறது.

இத்தோடு புத்தாண்டு விழாக்களில் கயிறு இழுத்தல், முட்டி உடைத்தல், யானைக்கு கண் வைத்தல், சங்கீத கதிரை போன்ற விளையாட்டுக் களையும் காணலாம்.

இவைகளை நோக்கும் பொழுது அனைத்து இன மக்களும் சாதி, மத, மொழி பேதமின்றி ஒரு தாய் மக்களைப் போல் ஒன்று கூடி இவ்விளையாட்டுக்களில் பங்குபற்றி பார்த்து இரசிப்பதிலும், நாட்டின் ஒற்றுமையை புலப்படுத்தும் விதமாக அமைந்துள்ளது என்பதை மறுக்க முடியாது. பண்டைய கால விளையாட்டுக்கள் சில அருகி வந்த போதிலும் நாட்டில் சில பகுதிகளில் இவ்விளையாட்டுக்களில் சில இன்றும் நடைபெற்று வருவதை காணக் கூடியதாக உள்ளது.


எனவே பண்டைய காலம் தொட்டு வந்த விளையாட்டுக்களின் மூலம் மக்களின் படிப்பினை, தன்னம்பிக்கை, ஒன்றிவாழும் தன்மை, வீரம், விவேகம் அனைத்தும் ஒருங்கே காணப்பட்டதனை அறியலாம். ஆகவே விளையாட்டு மனிதனை சிறந்த வனாகவும் சமூகத்திற்கு முன் மாதிரியாகவும் ஆக்குகிறது. நோயற்ற வாழ்வுக்கு விளையாட்டு உறுதுணை புரிகிறது. எனவே நமது நாட்டில் தற்போது காணப்படும் சில விளையாட்டுக்களை அழியவிடாமல் தளைத்தோங்கச் செய்வது நம் ஒவ்வொருவரதும் கடமையாகும்.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# போதைப் பொருள் பாவனையை முடிவுக்கு கொண்டு வருவோம்

எம். தாவூட் முஹம்மது முர்ஸித்
விடுகை வருடம், அரபு நெறி

ஒரு வளமான சமுதாயத்தை உறுதிப்படுத்த போதைப் பொருள் பாவனையை இல்லாதொழிப்பதன் முக்கியத்துவம்.

இவ்வுலகில் நாம் பல விந்தைகளைக் கண்டு வருகின்றோம். அத்தகைய விந்தைகளில் ஒன்று தான் சட்டத்தின் அனுமதியுடன் போதை உட்கொள்ள முடியும் என்பதாகும். உலகில் வாழும் அனைத்து மக்களும் ஒழுக்கப் பண்புடையோராக வாழ வேண்டும் என்பது மனித சமுதாயத் தினதும் இறைவனினதும் எதிர் பார்ப்பாகும். இதனாலே உலகுக்கு அனுப்பப்பட்ட அனைத்து மதங்களும் ஒழுக்கத்தையும், பண்பாட்டையும் வலியுறுத்துகிறது. ஒரு புறம் மதங்கள் மக்களை நல்வழிப்படுத்துகின்ற அதே வேலை மறுபுறம் பெரும் பகுதியினர் போதைவஸ்துகளுக்கு அடிமையாகிக் கொண்டிருக்கிறனர். போதை வஸ்த்துக்கள் என்கின்ற போது அவை

*. திண்மம் :- உதாரணமாக சில Tablets (மாத்திரைகள்)
*. திரவம் :- உதாரணமாக மதுபான வகைகள், இன்சுலின்கள்
*. வாயு :- உதாரணமாக Bristol

என்ற நிலைமைகளில் காணப் படுகின்றன. இவை மனிதன் உட்கொள்கின்ற விதங்களைப் பொருத்தளவில் உட்சுவாசம் மூலமாகவும், உட்கொள்வதன் மூலமாகவும் ஊசி ஏற்றுவதன் மூலமாகவும் மனித உடம்பை அடைந்து பல்வேறுபட்ட விளைவுகளை ஏற்படுத்துகின்றன. என்றாலும் பொதுவாக இலங்கையில் போதைப் பொருள் என்பதனூடாக மதுவும், புகை பொருட்களுமே எமது எண்ணத்தில் உதிக்கின்றன. எனவே இவைகளை பற்றி அலசுவது பொருத்தமாக இருக்குமென நினைக்கிறேன்.

மதுப்பழக்கமானது பண்டைய காலந்தொட்டு காணப்பட்ட ஒரு வழக்கமாக இருக்கின்றது. உலகின் வரலாற்று நாயகர்கள் பலரும் மதுவின் அடிமையாக வாழ்ந்தனர். ஒரு அரசனின் சிறப்பு அவன் அளிக்கும் மது வகைகளின் அளவின் தரத்திலு மிருப்பதாக கருதப்பட்டது. என்றாலும் பிற்கால தேவ புராணங்கள் யாருக்கும் வழங்கவும், யாரிடம் இருந்து பெறவும், பருகவும் மது தகுதியற்றது என்று கூறுவதோடு மனுநீதியிலும் மது அருந்துவது தடைசெய்யப்பட்டுள்ளது. அவ்வாறே கௌதமபுத்தரும் மதுவைத் தடை செய்தார். பௌத்த முனிவர்களும் மது அருந்துவது அறவே கூடாது என்றும் அவர்களின் 5 கொள்கைகளில் ஒன்றாகவும் இது காணப்படுகிறது. பௌத்த பேரரசர் சந்திரகுப்த மௌரியின் ஆட்சியின் போது மதுப்பழக்கம் வெகுவாகக் குறைந்து விட்டது. அவ்வாறே அசோகரின் ஆட்சியிலும் மதுப்பழக்கம் அறவே இல்லை என்று கூறுமளவிற்கு மறைந்து காணப்பட்டது. சமணமத கோட்பாடுகளால் உந்தப்பட்ட திருவள்ளுவர் போன்ற தமிழ்ப் புலவர்கள் மதுவை நஞ்சென்றும் மதுவருந்துவதை இழிசெயல் என்றும் உரைத்தனர். "துஞ்சினர் செத்தாரில் வேறல்லர் எஞ்ஞான்றும் நஞ்சுண்பார் கள்ளுண்பர்" என்பது குறள்

அவ்வாறே இஸ்லாம் மதமும் மதுபானத்தை மிக வெறுப்பதோடு அதனை அருந்தவும் தடைசெய்துள்ளது. கீழ்வருவோரை நபி (ஸல்)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள் வெறுத்துள்ளார்கள் (சபித்துள்ளார்கள்)

1. மதுவைச் செய்பவன்
2. அதை செய்யச் சொல்பவர்
3. அதனை அருந்துபவர்
4. அதனை அருந்த அளிப்பவர்
5. அதனை எடுத்துச் செல்பவர்
6. எடுத்துச் செல்லப்படுபவர் (எவரிடம் எடுத்துச் செல்லப்படுகிறதோ அவர்)
7. அதனை விற்பவர்
8. அதனை வாங்குபவர்
9. அதனை அன்பளிப்புச் செய்பவர்
10. அதன் கிரயத்தை உண்பவர்

இவ்வாறு பல மதங்கள் அதனை தடைசெய்திருப்பதன் மூலம் விளங்குவது அதில் எவ்வித நன்மையும் இல்லை அதனை பாவிப்பது மனிதனுக்கு தீங்கையே விளைவிக்கிறது என்பது தெளிவு.

## மது என்றால் என்ன?

மது என்பது இதைல் அல்கஹோல் (Ethyl Alcohol)என்று அழைக்கப்படும் ஒரு திரவமாகும் இது நாக்கில் பட்டவுடன் எரிச்சல் ஏற்படுத்தும் இதை நாடியவனை அடிமைப்படுத்தவும் போதைத்திரவும், உணர்ச்சிகளைத் தளர்த்தவும் வல்லது. சக்கரையை அடக்கியுள்ள பொருட்கள் அனைத்தி லிருந்தும் நுரைக்கச் செய்த பின் அதிலிருந்து காய்ச்சிவடித்து தேவையான விகிதாசாரத்தில் தயாரிக்கப்படுகிறது. பார்லி மற்றும் தானியங்களிலிருந்து பியர்(4+08வீதம் Alcohol) திராட்சைச்ர சத்திலிருந்து வையின் (50+025வீதம் Alcohol)பார்லி, கோதுமை தானியங் களிலிருந்து ஜின், ரம், விஸ்கி(50 வீதம் Alcohol) கரும்புச்சாற்றிலிருந்து சாராயம் பல வகை மதுவகைகள் தயாரிக்கப் படுகின்றன.

இவைகள் மாத்திரமின்றி இன்று பாவிக்கப்படும் சில உயர்ரக போன்ற பொருள்களும் காணப்படுகின்றன அவைகளில் சில.

**அபின்(Opium)**:- இது Poppy எனும் ஒருவகை தாவரச்சாற்றிலிருந்து தயாரிக்கப் படுகின்றன. மோர்பைன் (Morphine) ஹெரோயின் போன்ற போதைப் பொருட்கள் அபினிலிருந்து தயாரிக்கப்படுகின்றன. 1874ல் ஆங்கிலேயரே முதன்முதலில் ஹெரோயினை உற்பத்தி செய்தனர். மேற்குறிப்பிட்ட தாவரம் உலகில் மிகப் பெரியளவில் ஹெரோயி னை உற்பத்திசெய்யும் நாடான பர்மாவில் 163000ஹெக்டேயரில் பயிரிடப் படுகின்றன.

**கொக்கெய்ன்** :- போதைவஸ்த்துகளில் அதிக ஆபத்தைக் கொண்டது. எதன் அமெரிக்காவின் மெக்ஸிகோ, கொலம்பியா, பேரு ஆகிய நாடுகள் இதன் ஏற்றுமதியில் பெயர்போன நாடுகள். மாடியாக்கள் இதனை அமெரிக்கா, ஆசியா, ஐரோப்பா நாடுகளுக்கு கடத்துவதில் பெருமளவு ஈடுபட்டுள்ளனர் மேற்குறிப்பிட்ட நாடுகளில் இப்போதை பொருள் வருடாந்தம் 760 டொன் உற்பத்தி செய்யப்படுகின்றன.

**மர்ஜுவானா** :- சணல் (ஹஷீஸ்) தாவரத்ததிலிலுந்து இது தயாரிக்கப்படுகின்றது. மெக்ஸிகோவில் வருடாந்தம் 3400 டொன்களும், கொலம்பியாவில் 2600 டொன்களும் உற்பத்தி செய்யப்படுகிறது.

**எக்ஸ்டஸி** :- இது 1990ல் தயாரிக் கப்பட்ட ஒரு புதிய வகை போதைப் பொருளாகும். (Methylenedixymed Thamphetamine) எனும் இரசாயனப் பெயரிலும் (Mdma) என்ற சுருக்க குறியீட்டுப் பெயரிலும் அழைக்கப் படுகிறது. பிரித்தானியா, அமெரிக்கா, பிரான்ஸ் உட்பட பல நாடுகள் இதனை தடைசெய்த போதும் அநேக நாடுகளில் இது வேகமாகப் பரவி வருகிறது. இதனை உட்கொள்பவர் அனைத்தையும் காதலோடு பார்க்கும் ஒரு மன நிலையைப் பெறுகிறார்.

தனக்கு அடிப்பவர்களைக் கூட நேசிப்பார் எந்தப் பகைவனோடும் கோபம் ஏற்படாது. எனினும்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இது உடலில் ஏற்படுத்தும் மாற்றம் மிகப்பயங்கரமானது. நரம்புத் தொகுதியை சிதைத்து மூளையின் செயற்பாட்டை ஸ்தம்பிக்கச் செய்கிறது. சிறு வில்லையாகவும் குறைந்த விலையில் விற்கப்படுவதனாலும் ஏனைய போதைப் பொருட்களை விட இது அதிக பாவனையாளர்களைக் கொண்டிருக் கிறது. கிழக்கு ஐரோப்பிய நாடுகளிலே இதன் உற்பத்தி அதிகமாக நடை பெறுகிறது.

இவ்வாறு பல்வேறுபட்ட போதைப் பொருட்களின் பாவனை சமகால உலகில் அதிவேகமாகப் பரவி வருகின்றமை மனித சமூகம் எதிர் கொள்ளும் பெரும் சாபக்கேடாக மாறியிருக்கிறது.

இவைகள் சுகாதார நல்வாழ்விலும், பொருளாதாரத்திலும், குடும்ப நலன்புரி விடயங்களிலும் வறுமைநிலை, சமூக அபிவிருத்தி ஆகியவற்றிலும் குறிப்பாக உளவியல், உடலியல் ஆகியவற்றிலும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளதுடன் கொலை, கொள்ளை, களவு, பாலியல், சுரண்டல் போன்ற வன்முறைகளின் பெருக் கத்திற்கும் வழிகொடுப்பதோடு எயிட்ஸ் போன்ற ஆட்கொல்லி நோய்களும் இதன் தாக்கத்தை செலுத்துகிறது.

உலகளாவிய ரீதியில் வருடாந்தம் போதைப் பொருளுக்காக மாத்திரம் 300 பில்லியன் அமெரிக்க டொலர்கள் செலவிடப்படுகின்றன. இதில் அரைப்பங்கு அமெரிக்கா மாத்திரம் செலவிடுகிறது. போதைப் பொருட்களை தடுப்பதற்காக உலக நாடுகள் 1.6 மில்லியன் டொலர்களை ஒதுக்குகின்றன. பெரும்பாலான உலக நாடுகள் தனிமனித சுதந்திரம் என்ற வகையில் போதைப் பொருள் பாவனையை குற்றச் செயலாகக் கருதுவதில்லை. விளைவாக வருடாந்தம் பல பில்லியன் டொலர்களை இந்நாடுகள் வீணடிக்கின்றன. 1988ல் வெளியிடப்பட்ட போதைப்பொருள் தொடர்பான உற்பத்தி, கடத்தல், விற்பனை என்பவற்றுக்கெதிராக நடவடிக்கை எடுப்பதற்கும் தண்டனைகளை விதிப்பதற்கும் போதைப்பொருள் உற்பத்தியில் பயன்படுகின்ற இரசாயனப் பொருட்களை மேற்பார்வை செய்வதற்கும் தம்மாலான அனைத்து முயற்சி களையும் மேற்கொள்வதெனவும், இத்துறையில் சர்வதேச சமூகத்தோடு ஒத்துழைப்பதெனவும் அதில் கைச்சாத்திட்ட நாடுகள் இணங்கின.

எனினும் போதைப் பொருள் உற்பத்தியிலும் ஏற்றுமதியிலும் பெருமளவு ஈடுபட்டுள்ள நாடுகளும் கூட இதில் கைச்சாத்திட்டமையே வினோதமானது. எனவே இவ்வாறான போதைப் பொருள் பாவனை அண்மைக் காலமாக இலங்கையிலும் கணிசமான அளவு பாவனையில் உள்ளதுடன் பல துர்விளைவுகளுக்கும் காரணமாயி ருக்கின்றன. இதன் விளைவுகள் ஏராளமாக இருந்தாலும் குறிப்பாக ஓரிரு விடயங்களில் அதிக தாக்கத்தை செலுத்துகின்றன.

அந்த வகையில் எமது உடலுக்கு ஏற்படும் பாதக விளைவுகளை நோக்குமிடத்து அதிகமாக காணப்பட்டாலும் ஓரிரு தாக்கங்களை குறிப்பிடுகிறேன் அடிக்கடி மேற் கொள்வதனால் பெருமளவு போதைப் பொருள் பாவனையை கட்டுப்படுத்தலாம். மேலும் போதை பாவனையால் நோயுற்று வைத்தியசாலைகளுக்கும் குற்றச் செயலில் ஈடுபட்டு சிறைக்கு வருவோர்களுக்கும் தொழில் நிலையங்களிலும் இதன் தீய விளைவுகளைப் பற்றி முடிந்த அளவு எடுத்துக் கூறி இனிமேல் அவர்கள் போதைப் பொருட்களை பாவிக்க மாட்டார்கள் என்ற அளவுக்கு அவர்களுக்கு அறிவுரைகளை வழங்க வேண்டும். மேலும் இன்றைய ஊடகங்கள் போதைப் பொருள் பாவனையை துரிதப்படுத்துவதில் பெரும் பங்காற்றுகிறது. இவ்வாறான செயற்பாடுகளை அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் உதாரணமாக, இந்தியத் திரைப்படங்களில் புகைப்பது போன்ற காட்சிகளை எடுப்பது தடைசெய்யப்பட்டுள்ளது. அவ்வாறு எமது நாட்டிலும் தயாரிக்கப்படுகின்ற





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடகங்களிலும், திரைப்படங்களிலும், விளம்பரங்களிலும் போதைப்பொருள் பாவிக்கும் காட்சிகளை எடுப்பதற்கு தடையிடலாம். அத்தோடு போதைப் பொருட்களை இறக்குமதி செய் வதனையும் தடைசெய்வதோடு புதிய வகையான போதைப்பொருள் உற்பத்திகள் கண்டுபிடிப்புகளையும் தடை செய்ய வேண்டும்

எனவே, இவ்வாறாக போதைப் பொருள் பாவனை தடுப்பதன் முக்கியத்துவங்களை பலவாறாக அது ஏற்படுத்தும் தீய விளைவுகளை மையமாக வைத்து விளக்குவதனூடாக ஒரு வளமான போதைப் பொருள்பவனையற்ற அபிவிருத்தியடைந்த அறிவியல் ரீதியாக முன்னேறும் ஒரு சிறந்த சமுதாயத்தை நிச்சயமாக உருவாக்கலாம். இந்த குறிக்கோளை அடைவதற்காக நாமனைவரும் ஒன்றுபட்டு செயலாற்றுவோம்.

நாம் யாருக்கும் தீங்கு செய்யவும் கூடாது எவராலும் நமக்கு தீங்கு ஏற்படவும் கூடாது.

மனோ இச்சைக்கு கட்டுப்பட்டவன் அடிமை, மனோ இச்சையை கட்டுப்படுத்தியவன் அரசன், குடிகாரர்கள் தேவ சாம்ராஜ்யத்தை ஒரு போதும் சேர்வதில்லை என்பது தெய்வீக வாக்கு.

நன்றி.

**உசாத்துணைகள் :-**

**மது அருந்தக் கூடாது ஏன்**
தொகுப்பாசிரியர் :-புலியூர்க் கேசிகன்
பாலாஜி பப்ளிகேஷன் - சென்னை

**புகையும் புகைத்தலும் ஒரு தீர்ப்பு**
எழுத்தாளர் :-prof - Muhammed Jameel zeeno
மொழிபெயர்ப்பாளர் :-Seinudeens Fareed
முதலாம் பதிப்பு

**நலம் நலமறிய ஆவல்**
Dr.டீ ஹாமீது அப்துல் ஹை
ஷப்பான் பதிப்பகம் - மதுரை

## மூளையின் மதிப்பு...?

இந்திய நண்பர் ஒருவர் ஜப்பான் நாடு சென்ற சமயம் விமான நிலையத்தின் வாசலில் ஓர் போர்டைக் கண்டார். அதில் ரஷ்யா 15% ஜப்பான் 5% அமெரிக்கா 25% இந்தியா 90% எனப் பல நாடுகளின் மூளை மதிப்பு என எழுதியிருந்தது. நண்பருக்கு குஷி. பக்கத்திலிருந்தவர்களிடம், ''ஐ ஆம் இண்டியன். ஸீ திஸ் போர்டு. வி ஆர் கிரேட்டஸ்ட் இன் த வேர்ல்டு'' (நான் இந்தியன். இந்த தகவல் பலகையைப் பாருங்கள். நாங்கள் தான் உலகிலேயே சிறந்தவர்கள்) எனக் கூற அவரிடம் ஒருவர், ''மை ஃப்ரண்ட், ப்ளீஸ் கேர்ஃபுலி ஸீ திஸ் போர்டு. திஸ் ஈஸ் அன்யூஸ்டு மென்ட்டல் பவர் பெர்ஸன்டேஜ் போர்டு'' (நண்பா, பலகையை சற்று உற்று கவனிக்கவும். அங்கு உபயோகிக்காத மூளைத்திறன் விகிதம் கொடுக்கப்பட்டுள்ளன) என்றதும் நழுவினார் நண்பர்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனவெழுச்சி வளர்ச்சி தொடர்பாக ஆசிரியரின் பங்களிப்பு



எஸ். சுகேஸ்வரன்
விடுகை வருடம், வர்த்தக நெறி

சகல ஆசிரியர்களும் தமது வகுப்பறையில் உள்ள மாணவ, மாணவிகளின் தனியாள் வேறு பாடுகளை அறிந்து கொள்ள வேண்டும் அதற்காக விருப்புக்கள், திறமைகள், தேவைகள், பலவீனங்கள் என்பவற்றுடன் சிக்கல் நிலமைகளைப் பற்றியும் அவதானத்துடன் இருத்தல் அவசியம். இவ்வாறு இவைகாணும் தனியாள் வேறுபாடுகளுக்கு ஏற்ப பாட விடயங்களை தெரிவு செய்தல், அனுபவங்களை ஒழுங்கமைத்தல், பல்வேறு பொறுப்புக்களை ஒப்படைத்தல், தூண்டல்களை வழங்குதல், பின்னூட்டல்களை வழங்குதல், முன்னூட்டல்களையும் பெற்றுக் கொடுத்தல் ஆகியன ஆசிரியரின் பங்களிப்பில் முக்கியத்துவம் பெறுகின்றன.


சிறந்த ஆசிரிய மாணவ தொடர்பைப் போன்று மாணவ, மாணவ தொடர்பின் ஊடாகவும் மனவெழுச்சிகளின் ஊடாகத் தோன்றும் சிக்கல் நிலமைகளை தவிர்த்துக் கொள்ள முடியும். வீட்டில் பாதுகாப்பற்ற சூழலினால் பயமடைந்த ஆரம்பப் பாடசாலைப் பருவத்திலுள்ள மாணவனுக்கு இரண்டாவது தாயாகவோ, தந்தையாகவோ இருத்தல் தனிமையை விரும்பும் மாணவனுக்கு அல்லது மாணவிக்கு குழுக்களில் அங்கத்துவம் வழங்கி ஊக்குவித்தல் போன்ற செயல்களை கூறலாம். சில மாணவ மாணவிகளின் மன எழுச்சி சிக்கல்களுக்கான அடிப்படை ஆசிரியரின் செயலாக இருக்க இருக்க முடியும். ஆதலால் ஆசிரியர்கள் வகுப்பறையில் தமது மனஎழுச்சி நடத்தைகளை வெளிப்படுத்தாது பிள்ளையின் தன்னம்பிக்கை, சுதந்திரம், வெற்றி ஆகியவற்றை விருத்தி செய்யும் இடமாக வகுப்பறையை அமைத்துக் கொள்ள வேண்டும்.

பிள்ளைகளிடம் விரும்பத்தகாத மன எழுச்சிகள் தோன்றுவதற்கு பாடசாலை மட்டத்தில் நடாத்தப்படும் பரீட்சைகளும், பாடசாலையில் காணப்படும் போட்டி நிலமைகளும் காரணமாகின்றன. ஆதலால், அத்தகைய சந்தர்ப்பங்களில் தோன்றக்கூடிய பயம், கோபம், துக்கம் போன்ற மன எழுச்சிகளைக் குறைக்கக் கூடிய விதமாக ஊக்குவித்தல், அவற்றை வகுப்பறையில் சாதாரண அனுபவங்களாக மாற்றியமைத்தல் ஆகியன தொடர்பாக ஆசிரியருக்குரிய பொறுப்பு மகத்தானது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# உடல் உறுப்புக்களுக்கான உணவு முறைகள்

ஏ. மகாலக்ஷ்மி
விடுகை வருடம், உடற்கல்வி நெறி

**தலை முதல் கால் வரை ஏற்ற உணவுகள்**

இடுப்பு பெருக்காமல் உடல் ஒல்லியாகவே - ஒரே மாதிரி திகழ எளிமையான முறையில் உணவுகளை தேர்வு செய்து சாப்பிடுதல் வேண்டும். குறிப்பிட்ட உணவுகளைத் தொடர்ந்து சாப்பிட்டு வந்தால் தலைவலி, கண்வலி, முதலியவை குணமாகும். மூளை வளர்ச்சியும் அதிகரிக்கும். எல்லாப் பிரச்சினைகளும் கட்டுப்பாட்டுக்குள் இருக்கும். எல்லா உணவுகளையும் தினமும் அளவான முறையில் சாப்பிட்ட திருப்தியும் கிடைக்கும் இதற்கான வழி.

**தலைமுடி:**

தலைமுடி பளப்பளப்பாக மாற 'பி' பிரிவு விட்டமினைச் சேர்ந்த பயோட்டின் என்ற விட்டமின் தேவை. பயோட்டின் நோய் எதிர்ப்பு சக்தியையும் அதிகரிக்கிறது. எனவே, முழு தானிய கோதுமை, ரொட்டி, சோயா, சம்பா கோதுமை, ரவை என்பன மிகவும் அவசியம்.

**மூளை:**

இனிப்பு உணவுகள் அனைத்தும் மூளைக்கு நல்ல எரிபொருளாக இருந்து ஞாபக சக்தியை அதிகரிக்கின்றன. புத்திக்கூர்மை அதிகரிக்க அதிரசம், கந்தர்ப்பம் முதலியன நல்லது. முடிந்தால் ஏதாவது பழச்சாறு அருந்தலாம்.

**கண்கள்:**

சக்கரை வள்ளிக் கிழங்கில் உள்ள விட்டமின் 'ஏ' இருட்டான இடங்களிலும் இரவிலும் நன்கு கண்பார்வை தெரிய உதவுகிறது. சக்கரை வள்ளிக்கிழங்கு கிடைக்காத போது கரட் சாப்பிடலாம்.

**நுரையீரல்கள்:**

மூச்சுக்குழல் தொடர்பான அனைத்து நோய்களையும் வாரத்தில் நான்கு நாட்கள் இரண்டு தக்காளிகள் சாப்பிட்டு வருவதன் மூலம் தடுத்து குணப்படுத்தலாம் என்று பிரிட்டிஷ் ஆய்வு ஒன்று தெரிவிக்கிறது. தக்காளி சாப்பிடும்போது ஜலதோஷம் தொடர்ந்தால் தக்காளியை சமைத்தே சாப்பிடவும்.

**தோல், கை நகங்கள்:**

கை நகங்களும், தோலும் ஆரோக்கியமாக திகழ கொண்டைக் கடலை சுண்டல் ஒரு கப் மற்றும் 100 கிராம் தேங்காயும் சாப்பிடவும். இவற்றின் மூலம் கிடைக்கும் துத்தநாக உப்பு, கை நகங்களையும் தோலையும் ஆரோக்கியமாகப் பராமரிக்கும்.

**தோல்:**

பூசணிக்காயில் உள்ள விட்டமின் 'ஏ'



இல்லை என்று சொல்ல அரைமணி நேரம் எடுத்துக் கொள்ளுங்கள். GTC

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோல் புற்றுநோய் வராமல் 70 வீதம் பாதுகாப்பளிக்கிறது. வாரத்தில் 3 நாட்கள் சாப்பிட்டு வந்தால் தோல் தொடர்பான தொல்லைகள் குறையும், சிறுநீரகக் கற்களும் பூசணிக்காயால் உருவாகாது.

**இதயம்:**

சோயாபீன்ஸ், பீன்ஸ் முதலிய வற்றில் உள்ள மக்னீசியம் உப்பு நரம்புகளுக்குப் புத்துணர்வும், இதயத் தசைப் பகுதி உட்பட எல்லாத் தசைகளும் சுறுசுறுப்பாகவும் இயங்க உதவுகிறது. மாரடைப்பு, இரத்த கொதிப்பு தவிர்க்கப்படுகிறது.

**மனம்:**

கடுகு நன்கு சேர்த்து தாளிக்கவும். கடுகு தாம்பத்திய உறவில் ஆர்வத்தை ஏற்படுத்துகிறது. அத்துடன் குறிக் கோளில் தீவிரமான ஆசை களையும்மனதில் உண்டாக்கு கின்றது.

**வயிறு:**

வயிறு சம்பந்தமான கோளாறு களையும், வயிற்றுப் புற்று நோயையும் வெள்ளைப் பூண்டு தடுத்து விடுகிறது. தொந்தி விழாமல் வாழ தினமும் 5 பூண்டுப் பற்களை நல்லெண்ணெயில் வதக்கி காலையில் சாப்பிடலாம்.

**எலும்புகள்:**


வயதாக வயதாக எலும்புகள் மெலிகின்றன. கரட்டில் உள்ள மக்னீசியமும் பொட்டாசியமும் எழும்பைத் தாங்கிப் பிடித்து காப்பாற்றுகின்றன. கம்பும், பச்சைப் பருப்பு பாயாசமும் எழும்புகளின் பலத்தை அதிகரிக்க வல்லவை. இவற்றை தினமும் சாப்பிடுவது எலும்பிற்கு நல்லது.

**கால்கள்:**

நரம்பு மண்டலங்கள் சீராக இயங்கவும், கால் தசைகள் சுளுக்கு பிடிப்பின்றி வேகமாக நடக்கவும் பொட்டாசியம் உப்பு அதிகமுள்ள வாழைப்பழங்கள் உதவும்.

**கால் விரல் நகங்கள்:**

தலை முடிக்கு உதவும் பயோ ட்டின் உப்பு உள்ள முந்திரிப் பருப்பு கால்விரல் நகங்களைப் பலப்படுத்தும். தினமும் பச்சைப் பருப்பு சேர்ந்த ஏதாவது கீரை சேர்ந்து வருவது நல்லது. தலை முடி, நகங்கள், மனம், மூளை ஆகிய வற்றிற்கான உணவுகளைத் தவறாமல் உணவில் தினமும் சேர்த்து வந்தால் தோற்றம் அழகாகி செயல்படுவதிலும் பொறுப்பும் அக்கறையும் அதிகரிக்கும்.






 படிக்கும் வசதிகளைப் பெறமுடியாத குழந்தை பிறக்காமலிருப்பதே மேலானது. 

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிழமைகளுக்கு பெயர் வந்த விதம் ?

திருமதி. ராமமூர்த்தி
விடுகை வருடம், உடற்கல்வி நெறி

ஆரம்ப காலத்தில் ஒரு வாரத்திற்கு எத்தனை நாட்கள் தெரியுமா ? பத்து நாட்கள் ஆமாம், ஆச்சரியமாக இருக்கிறதா? பிறகு எட்டு நாட்கள் கொண்டது ஒரு வாரம் என்று இருந்தது. அதன் பின் ஏழு நாட்கள் கொண்டதே ஒரு வாரம் என்று திருத்தி அமைத்தவர்கள் எகிப்து நாட்டினர் தான்.

முதல் நாள் ஞாயிற்றுக்கிழமை, அடுத்து திங்கட்கிழமை வாரத்திற்குப் பத்து மற்றும் எட்டு நாட்கள் என்று மட்டுமே குறிப்பிட்டு வந்தார்கள்.

இப்படிப் பழக்கப்படுத்தியவர்கள் யூத மதத்தினர். இப்படி கிழமைகளை எண்களின் அடிப்படையில் அழைப்பதை மாற்றி அமைத்து ஐந்து கோள்களின் பெயர்களை மற்ற தினங்களுக்கு வைத்து அழைத்தார்கள் எகிப்தியர்கள். ஸண்டே என்பது 'டெஸ்டொமிகா' என்ற லத்தீன் சொல்லிருந்து திரிந்து பிறந்ததாகும். இயேசு நாதர் திருமீட்டெழுச்சி செய்த நாளாக ஞாயிற்றுக் கிழமை கருதப்படுவதால் இந்த நாள் இயேசுவை வணங்கும் சிறப்பு நாளாகக் கொள்ளப்பட்டது.

இப் பழக்கம் ஏற்பட்டு முந்நூறு ஆண்டுகளுக்குப் பிறகு உலகின் பெரும்பாலான நாடுகள் ஞாயிற்றுக் கிழமையை, அரசு விடுமுறை நாளாக அங்கீகாரம் செய்தன. சூரியக் கடவுளின் தினத்தை 'ஸண்டே' யாக மாற்றியது போலவே, நிலவு தேவதை [Moon's Day] நாளை, மண்டே [Monday]யாக மாற்றியவர் ஆங்கிலேயர்கள். திங்கட்கிழமை பணி துவங்கும் முதல் நாள் என்று வழக்கத்திற்குக் கொண்டு வந்தவர்கள் ஐரோப்பியர்களாவர்.

போர்க்கடவுளாக Try என்ற தெய்வத்தை அக்கால மக்கள் வணங்கினார்கள். அதனால் மூன்றாவது நாளை 'டைனவஸ் டெய்க்' என்று அழைத்தனர். இதிலிருந்து [Tuesday] என்ற சொல் பிறந்தது.

டைர் தெய்வத்தின் தந்தை தான் புறக்கடவுள் வோடன் [Wodan] இந்தக் கடவுளின் பெயரிலிருந்து தான் புதன் கிழமை [Wednesday] பிறந்தது. கடவுள்களின் மிகவும் வலிமை வாய்ந்தவர் இடி [ Thunder] யின் தெய்வமான தோர் [Thor] என்பவரே இவரது பெயரிலிருந்து தான் வியாழன் [Thursday] பிறந்தது.

வோடன் கடவுளின் மனைவியும் தோர் கடவுளின் தாயாருமான பிரேயா [Freya] என்ற பெண் தெய்வத்தின் பெயரிலிருந்து தான் வெள்ளிக்கிழமை [Friday] பிறந்தது. விவசாயம் நல்லபடியாக நடக்க ரோமானியர்கள் சாட்டர்ன் [Saturn] என்ற கடவுளை வணங்கினார்கள். இதனால் ஏழாவது தினத்திற்கு சனிக்கிழமை [Saturday] என்ற பெயர் ஏற்பட்டது.


ரோமானியக் கடவுளின் பெயரை மாற்றாமல் இன்றும் பயன்படுத்துகின்றனர். நடு இரவி லிருந்து அடுத்த நாள் நடு இரவு வரை ஒருநாள் என்று கணக்கிடும் பழக்கம், கிறிஸ்து பிறப்பதற்கு சில ஆண்டுகள் முன்புதான் நடை முறைக்கு வந்தது. உலகெங்கிலும் இந்த ஒரே முறை மட்டும் பரவியிரா விட்டால் எவ்வளவு குழப்பம் ஏற்பட்டிருக்கும் என்பதை எண்ணிப் பார்க்கவே தயக்கமாக இருக்கிறது.



மிகப் குறைவாகச் சிந்தித்து வருபவன்தான் மிக அதிகமாகப் பேசுகிறான். GTC

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# MOBILE PHONES A THREAT TO TENDER HEARTS




S. Wimaleshwaran
2nd Year, English Course


You can limit your children's use of mobile phones by carrying out some of the following simple measures.

Talk to your child about the disadvantages of mobile phones if he has one, in order to allow him to take the decision of giving it up on his own or at least use it only when necessary.

If your child has a mobile phone, make him use it only when he's away from you. He doesn't use it when he's with the family.

A child must not have his own mobile phone before the age of being able to check on him. It is not acceptable as he should not be away from home that much at this age.

Games on mobile phones attract children when we make them spend a lot of time carrying those devices. To prevent this, buy your child any other suitable devices for this purpose. "Switch all mobiles off before going to bed or at least keep them away from bedrooms to spare family any potential harm.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சன்மார்க்கக் கல்வியின் அவசியமும் முக்கியத்துவமும்

ஈ.யூ. சப்றுனா
விடுகை வருடம், இஸ்லாம் நெறி

புனித இஸ்லாத்தை வெறுமனே ஒரு கொள்கையாக இருக்கவேண்டுமென்பதற்காக அல்லாஹ்வால் இறக்கி அருளப்பட்ட ஒரு மார்க்கமன்று. மாற்றமாக மனித நடவடிக்கைகள் அனைத்தையும் ஆளுவதாக, அவற்றுக்கு வழிகாட்டுவதாக அது அமைய வேண்டும் என்பதற்காகவே அருளப்பட்டது. இஸ்லாம் இறக்கி அருளப்பட்ட நோக்கம் நிறைவேற்றப்பட வேண்டுமாயின் அதனைப் படிப்பது அதனை ஆழமாக விளங்குவது அவசியமாகும்.

நபி (ஸல்) அவர்கள் பல ஹதீஸ்களினூடாக அறிவைத் தேடுவதன் அவசியத்தை குறிப்பிட்டுள் ளார்கள். "எனது ஆன்மா யாரின் கையில் இருக்கின்றதோ அவன் மீது சத்தியமாக, மறுமையில் அறிஞர்களுக்கு வழங்கப்படுகின்ற அந்தஸ்த்தை காணுகின்ற போது ஷுஹதாக்கள் கூட தாங்களும் அறிஞர்களாக எழுப்பப் பட்டிருக்கக் கூடாதா என கவலை கொள்வார்கள்" என கூறினார்கள். இந்த ஹதீஸில் அறிஞர்களின் அந்தஸ்த்தை நபி (ஸல்) அவர்கள் மிக உயர்த்திப் பேசியிருக்கின்றார்கள். இஸ்லாத்தின் பாதையில் உயிர் நீத்தவர்கள் கூட பார்த்துப் பொறாமைப்படும் அளவுக்கு மிக உன்னதமான அந்தஸ்த்தை அவர்களுக்கு இறைவன் வழங்குவான் என்பதை உணர்த்தியிருக்கின்றார்கள்.

அறிவினதும் அறிஞர்களினதும் முக்கியத்துவத்தை எடுத்துக் காட்டும் வகையில் நபி (ஸல்) அவர்கள் கூறிய பின்வரும் ஹதீஸ் விசேடமானதாகும். அடியார்களிடமிருந்து அறிவை அகற்றுவதனூடாக அல்லாஹ் அறிவை கைப்பற்றிக் கொள்ளமாட்டான். எனினும் அறிஞர்களைக் கைப்பற்றுவதனூடாக அவன் அறிவைக் கைப்பற்றுவான். ஓர் அறிஞனையாவது விட்டு வைக்காது விட்டால் மக்கள் மடையர்களைத் தலைவர்களாக்கிக் கொள்வர். அவர்களிடம் பிரச்சினைகள் குறித்து வினவப்படும் அவர்கள் அறிவின்றி தீர்ப்பளிப்பர். அதனால் அவர்களும் வழிகெடுவர், அடுத்தவர்களையும் வழிகெடுப்பர் (புஹாரி) சமூகத்தில் மார்க்கக் கல்வியில் துறைபோகக் கற்றவர்கள். ஆழமான இஸ்லாமிய அறிவுள்ள வர்கள் இருப்பது மிகமிக அவசியம். அவர்களால் தான் சிறந்த இஸ்லாமிய வழிகாட்டலை சமூகத்திற்கு வழங்க முடியும். இத்தகைய ஆழமான அறிவு படைத்தவர்கள் சமூகத்தில் இல்லாத போது அறிவிலிகள் அந்த இடத்தை நிரப்ப முனைவர். அறிவில்லாத நிலையில் அமானிதமாகக் கருதப்பட வேண்டிய தீர்ப்பு வழங்கும் பணியை நிறைவேற்ற முனைவர். இதனால் சமூகம் இஸ்லாத்தை விட்டுத் தூரமாகும். இஸ்லாத்தைத் தவறாக விளங்கிக் கொள்ளும். எனவே அடுத்தவர்களையும் இஸ்லாத்தை விட்டு அப்புறப்படுத்தி தானும் வழி கெட அறிவீனம் காரணமாக அமையும். இந்த நிலையிலிருந்து சமூகம் பாதுகாக்கப்பட வேண்டுமாயின் இஸ்லாமிய அறிவு எந்தளவு தூரம் அவசியமானது என்பது தெளிவாகின்றது.

நாம் வாழும் இவ்விருபத்தோராம் நூற்றாண்டு இஸ்லாத்திற் கெதிராக பல்வேறு நாசகார சிந்தனைகள் நிறைந்த ஒரு நூற்றாண்டாக காணப்படுகின்றது. கம்யூனிஸம், முதலாளித்துவம், பரிணாமத்துவம், அத்வைதக் கொள்கை, பாலியல் தத்துவம் போன்ற ஈமானை வேரறுத்து ஒரு முஸ்லிமை இஸ்லாத்தின் வறையரையை



பணக்காரர்களை நீங்கள் ஏழைகளாக மாற்றுவதன் மூலம் நீங்கள் ஏழைகளுக்கு உதவ முடியாது. GTC

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட்டு வெளியே கொண்டு போய் விடக்கூடிய சிந்தனைகள் நாம் வாழும் சூழலில் பரவிக் காணப்படுகின்றன. இத்தகைய சிந்தனைகளின் தாக்கத்திலிருந்து முதலில் நாம் எங்களை காப்பாற்றிக் கொள்வது அவசியமாகும். இதற்கு எமக்கு இஸ்லாமிய அறிவு தேவைப் படுகின்றது.

நாம் தீய சிந்தனையிலிருந்து எம்மை மாத்திரம் காத்துக் கொண்டால் போதாது. நமது சமூகத்திலுள்ளவர்களும் எமது குழந்தைகளும் இத்தகைய சிந்தனைப் பாதிப்புக்களிலிருந்து காப்பாற்றப்படுவது அவசியமாகும். இப்பணியை நிறை வேற்றவும் இஸ்லாமிய அறிவு அவசியம் என்பதை எவரும் மறுக்க முடியாது. எனவே நாம் வாழும் நவீன சூழலில் மார்க்க அறிவு இன்றியமையாதது என்பதை யாராலும் மறுக்க முடியாது.

தீய சிந்தனைகளின் பாதிப்பிலிருந்து எம்மைக் காத்துக் கொள்ள இஸ்லாமிய அறிவு அவசியப்படுவது போலவே இப் பிரபஞ்சத்தில் தன் பிரதிநிதிகளாக எங்களைப் படைத்த இறைவன் எம்மீது சுமத்தியுள்ள பொறுப்புக்களையும், கடமைகளையும், அழகுற நிறைவேற்றுவதற்கும் அறிவு அவசியமாகும். எனவே முஸ்லிமான ஒவ்வொருவரின் மீதும் அறிவைத் தேடுவதும் கடமையாகும் என நபி (ஸல்) அவர்கள் நவின்றுள்ளார்கள்.

(இப்னு மாஜா)

நவீன விஞ்ஞானத்தினதும், தொழில் நுட்பத்துறையினதும் வியக்கத்தகு முன்னேற்றங்கள் பல்வேறு நவீன பிரச்சினைகளை உருவாக்கி விட்டிருக் கின்றன. இப்பிரச்சினைகள் ஒவ்வொரு முஸ்லிமின் வாழ்க்கையோடும் தொடர்புபட்டவையாகவே காணப் படுகின்றன. இப்பிரச்சினைகள் சம்பந்தமாக இஸ்லாமியத் தீர்வு முன்வைக்கப்படுகின்ற போதே மக்கள் எந்த சூழலில் வாழ்ந்தாலும் இஸ்லாத்தைப் பின்பற்றி வாழ்வது சாத்தியமானதாகக் காணப்படும். தொடர்ந்து மறுமை நாள்வரை மனித சமூகத்திலே பல்வேறு நவீன பிரச்சினைகள் உருவாகிக் கொண்டேயிருக்கும். இவ்வாறு நவீன பிரச்சினைகள் உருவாகும் போது இஸ்லாத்தின் நிழலில் அப்பிரச்சினை களுக்குரிய தீர்வுகளை இனங்கண்டு முஸ்லிம் சமூகத்தை மிகச் சரியான முறையில் இஸ்லாமிய அடிப்படையில் வழி நடத்தவும் இஸ்லாமிய அறிவு இன்றியமையாதது என்பதும் நாம் மறுக்க முடியாததாகும்.

இஸ்லாமிய அறிவு இந்தளவு அவசியமானதாக காணப்படுவதனால் தான் அதைப் பெறுவதை எமது முன்னோர்கள் ஒரு வணக்கமாகக் கருதினர். இமாம் ஷாபிஈ (றஹ்) அவர்கள் “நப்ல்” தொழுகையை விட அறிவைத்தேடுவது சிறந்தது என்றார்கள். இமாம் மாலிகிடம் படித்துக் கொண்டிருந்த அவரது மாணவர் வஹ்ப், புத்தகத்தை மூடி விட்டு ‘‘நப்ல்’’ தொழுகைக்குச் செல்ல ஆயத்தமானார்கள். அப்போது இமாம் மாலிக்(றஹ்) அவர்கள் அவரை நோக்கி “நீங்கள் எதனை செய்வதற்காக செல்கின்றீர்களோ அதை விட நீங்கள் இதுவரை செய்து கொண்டிருந்தது சிறந்தது” என்றார்கள். ஒருவர் நப்ல் தொழுவதனால் அவருக்கு மட்டுமே நன்மை கிட்டும் ஆனால் ஒருவர் அறிவைப் பெறுவதனால் அவர் மட்டுமல்ல சமூகமே பயன் பெறும். எனவே தான் இமாம் மாலிக், இமாம் ஷாபிஈ இருவருமே அறிவைத் தேடுவதை நப்ல் தொழுகைகள் தொழுவதைவிட மதித்திருக்கிறார்கள். இந்த சிந்தனை இவ்விரு இமாம்களுக்கு மாத்திரம் உரியதல்ல. ஓர் இரவிலிருந்து காலை வரை விழித்திருந்து வணக்க வழிபாடுகளில் ஈடுபடுவதை விட கொஞ்ச நேரம் மார்க்கத்திலே தெளிவு பெறுவது எனக்கு மிகவும் விருப்பமானது என்ற அபூஹுரைரா (ரழி) அவர்களது கருத்து உதாரணமாக இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

எனவே சிறப்பு மிக்க அறிவைப் பெற்று ஈருலகிலும் வெற்றி பெறுவோம். அதற்கு அல்லாஹ் எமக்கு துணை புரிவானாக.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமூகமயமாக்கலில் பாடசாலையின் பங்களிப்பு



வி. சத்தியசீலன்
விடுகை வருடம், கணித நெறி

சமூகமயமாக்கலில் பாடசாலையின் பங்களிப்பை நோக்கும் போது நல்லதொரு சமூகத்தை உருவாக்கு வதில் பெரும்பங்கு வகிப்பது பாடசாலையே ஆகும். "தாரமும் குருவும் தலைவிதிப்படி" என்பதற்கு அமையவே ஒரு சமூகத்துக்கு குரு கிடைக்கின்றார். நல்ல குரு அமைந்தால் நிச்சயம் அந்த சமூகம் மாறுகின்ற உலகிற்கேற்ப மாற்றமடைந்துக் கொண்டேச் செல்லும் எனலாம். எனவே சமூக மயமாக்கலினை பாடசாலை எவ்வாறு உருவாகின்றது என்பதை நோக்குவோம்.

பாடசாலையானது பெற்றோர்கள், அபிவிருத்தி சங்க உறுப்பினர்கள், பழைய மாணவர்கள், பொலிஸ் நிலையங்கள், கல்வி அதிகாரிகள், அரச சார்பற்ற நிறுவனங்கள், தொழில் சங்கவாதிகள், வர்த்தக ஸ்தாபனங்கள் போன்ற பல்வேறு சாராரிடமும் தொடர்பை வைத்துள்ளமையால் பாடசாலையானது சமூகமயமாக்கலில் முக்கிய பங்கு வகிக்கிறது எனலாம்.

அதாவது பாடசாலையில் நடைபெறும் நிகழ்வுகளின் போது பெற்றோர் ஆசிரியர் சங்கத்தின் உதவியை நாடுவதும், பழையமாணவ சங்கத்துடன் உரையாடி அவர்களின் உதவியை நாடுவதும், கல்வி அதிகாரிகள், வர்த்தகர்களின் ஆதரவைப் பெற்றுக் கொள்ளவும் பாடசாலை தொடர்பைக் கொண்டு அவர்களுடன் கலந்துரை யாடப்படுகின்றது. ஆகவே, சமூகமய மாக்கலில் பாடசாலையின் பங்கு காணப்படுகின்றது எனலாம்.

பாடசாலைக்குத் தேவையான கற்றல் கற்பித்தல் வளங்களை வழங்கி தமது செல்வாக்கினை பரப்பிக் கொள்வத ற்காக தொழிற்சங்க வாதிகள் பாடசாலைகளோடு தொடர்பை கொண்டுள்ளார்கள்.

மேலும் கலைவிழா போட்டிகள், தமிழறிவு போட்டிகள், கருத்தரங்குகள், சமூக அபிவிருத்தி நிகழ்வுகள் போன்றவை காரணமாக ஒரு குறிப்பிட்ட பாடசாலையானது வேறொரு பாடசாலையினூடாக தொடர்பை மேற்கொள்கின்றது. இதனூடாக சமூகமயமாக்கலில் பாடசாலை பங்களிப்பு செய்கின்றது எனலாம்.



அளவில்லாத வேதனைகளைத் தாங்கிக் கொண்டு சாதனை படைக்கிறவன்தான் மேதை. GTC

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலையானது சுகாதார நிறுவனங்களோடு தொடர்பு கொண்டு மாணவர்களின் சுகநலனைப் பாதுகாக்கின்றது. அதாவது சுகாதார நிறுவனக் குழுக்களினை அழைத்து மாணவர்களுக்கு தேவையான போசாக்கையும், சிறந்த வழிகாட்டலையும், சுகாதார பழக்க வழக்கங்களையும், பல் சுத்தம், உடல் பராமரிப்பு போன்றவற்றை மேற்கொள்வதன் ஊடாக பாடசாலையானது சமூகமயமாக்கலில் பங்களிப்புச் செய்கின்றது எனலாம்.

மேலும் பாடசாலைக்கு கற்றலை மேற்கொள்ள வரும் மாணவர்களின் குடும்ப சூழ்நிலையினை பாடசாலை நிறுவனம் நன்கு அறிந்திருக்கும். எனவே, இதற்கமைய மாணவனை இனங்கண்டு அதற்கேற்ற முறையில் கற்பித்தலை மேற்கொண்டு, சமூகத்தின் பார்வை பாடசாலை மீது பதியும் படி சமூகத்துக்கு நற்குணமுடைய பிரஜையை அனுப்ப பாடசாலைகள் முயற்சிக்கின்றன.

எனவே மேற்குறிப்பிட்ட எல்லா கருத்துக்களையும் நோக்கும் போது சமூகமயமாக்கலினால் பாடசாலை பெரிதும் பங்களிப்புச் செய்கின்றது எனலாம்.

## அறிவுள்ள நாய்

ஒரு நாள், பூனைகளின் கூட்டம் ஒன்றைக் கடந்து சென்றது ஓர் அறிவுள்ள நாய்.

அது அருகில் செல்லும் போது, அந்தப் பூனைகளின் கூட்டம் ஒரு கட்டுக்கோப்பாகவும் தன்னைப் பற்றி கவனிக்காமல் இருந்ததைப் பார்த்து நின்றது.

பூனைகளின் கூட்டத்தின் நடுவிலிருந்து இரு பெரிய பயங்கரமான பூனை எழுந்து கூட்டத்தைப் பார்த்துச் சொன்னது:

சகோதரர்களே! பிரார்த்தனை செய்யுங்கள்!

மீண்டும் மீண்டும் பிரார்த்தனை செய்யும் போது,

சந்தேகமின்றி, உங்கள் பிரார்த்தனை!'

எலி மழை பொழியச் செய்யும்!'

இதைக் கேட்ட நான் மனதில் சிரித்தபடி அவைகளிடமிருந்து திரும்பிச் சொன்னது,

ஷஓ குருட்டு முட்டாள் பூனைகளே! எனக்கு முன்னே என் மூதாதையர் எழுதி வைத்தது எனக்குத் தெரியாதா, பிரார்த்தனையால் மழை பொழியும் என்றால், நம்பிக்கையும் பணிவார்ந்த வேண்டுதலும் எலிகளாக இருக்காது......... எலும்புகளாக இருக்கும்!'





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பொன் மொழிகள்

க. சாந்தகுமார்
விடுகை வருடம், ஆரம்ப நெறி

1. நாட்டுப்பற்றை விட மிக அதிக நெருக்கமான அன்பு வேறில்லை
**பிளேட்டோ**

2. எளிமையைப் பின் தொடர்ந்து சந்தோஷம் வருகிறது
**கார்லைல்**

3. உன் வீரத்தை நீயே புகழ்ந்து பேசாதே
**அவ்வையார்**

4. முன்னேற்றம் என்பது இன்றைய செயலாக்கம் நாளைய உறுதி நிலை
**உமர்சன்**

5. மனிதனை அணி செய்யும் குணங்களில் முக்கியமானது தைரியம்
**டேனியல்**

6. கோழைக்கு வாழ்வில் இன்பமே கிடையாது
**ஹெர்பர்ட்**

7. முடியும் என்று நம்புவோருக்கு எதுவும் முடியும்
**வர்ஜில்**

8. உங்கள் கவலைகளை உங்கள் முழங்காலுக்கு மேல் போக விடாதீர்கள்
**சிசரோ**

9. தேச பக்தி இல்லாதவனுக்கு வேறு எதிலும் பக்தி இருக்க முடியாது
**பைரன்**

10. அன்பும், ஆற்றலும் இணைந்து பணியாற்றும் போது தலை சிறந்த படைப்பை எதிர்பார்க்கலாம்
**ஜான் ரஸ்கின்**



நிதானமாயிருங்கள்! ஆனால் சோம்பலாயிராதீர்கள். GTC

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11. அருஞ் செயல்களை நிறைவேற்றுவது வலிமையால் அல்ல விடாமுயற்சியால் தான். **ஜேம்ஸ் ஆலன்**

12. உங்களது நெருங்கிய நண்பராக இருந்தாலும் உங்களது வறுமை நிலையை எப்படிப்பட்ட நேரத்திலும் வெளிப்படுத்தாதீர்கள் **அவ்வையார்**

13. எப்படிக் காலம் கருதிக் காத்திருக்க வேண்டும் என்பதை அறிதலே வெற்றியின் ரகசியம் **டி. மெய்ஸ்டிரி**

15. மரியாதையாகப் பேசுவதும், நடப்பதும் செலவில்லாத செல்வங்கள் **செர்வாண்டிஸ்**

16. உங்கள் எதிரிகளைக் கவனியுங்கள், அவர்களே உங்கள் குறைகளை முதலில் கண்டு பிடிப்பவர்கள். **பேணிலன்**

17. உண்மையாயிருக்கத் தைரியம் கொள்ளுங்கள். பிறகு எதற்கும் பொய் சொல்ல வேண்டியிராது. **ஹெர்பெர்ட்**

18. தாழாதே, யாரையும் தாழ்த்தாதே **எமிலிஜோன்**

19. உழைப்பு உடலைப் பலப்படுத்தும் கஷ்டங்கள் மனதைப் பலப்படுத்தும் **மிளிமிங்**

20. அதிகமாகப் பேசுபவன் குறைவாகவே சிந்திக்கிறான் **டிரைடன்**

## காலம் ஒரு நாள் மாறும்!

கொள்கைகள், உண்மைகள் என்பதற்காக சொன்ன உடனே யாரும் ஏற்றுக் கொண்டதில்லை. உலகம் ஏற்றுக் கொள்ளவில்லை என்பதற்காக எதையும் நாம் விட்டுவிடக்கூடாது. நாம் செய்வதில் நியாயம் இருக்கும் போது உலகம் ஒரு நாள் அதற்கு தலைவணங்கப்போவது உண்மை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாடுகளும் சிறப்பு மிக்க பெயர்களும்



எம். எஸ். பி. ஹினாயா
தொடுகை வருடம், உடற்கல்வி நெறி

| நாடுகள் | | பெயர்கள் |
|---|---|---|
| 01. லாசா | - | தடுக்கப்பட்ட நகரம் |
| 02. உரோமாபுரி | - | ஏழு மலைகள் கூடிய இடம் |
| 03. ஆபிரிக்கா | - | இருண்ட கண்டம் |
| 04. தீபெத் | - | உலகத்தின் கூரை |
| 05. பலஸ்தீன் | - | பரிசுத்த பூமி |
| 06. எகிப்து | - | நைல் நதியின் கொடை |
| 07. இலங்கை | - | இந்த சமுத்திரத்தின் முத்து |
| 08. துருக்கி | - | ஐரோப்பாவின் நோயாளி |
| 09. ஜப்பான் | - | சூரிய உதய நாடு |
| 10. கனடா | - | லில்லிப் பூக்கள் நிறைந்த நாடு |
| 11. நியுயோர்க் | - | மிக உயர்ந்த கட்டடங்கள் உள்ள நாடு |
| 12. சிக்காக்கோ | - | பூங்காவின் பட்டணம் |
| 13. கியுபா | - | உலகத்தின் சக்கரைக் கின்னம் |

## நாடுகளும் முதல் அனுப்பிய கோள்களும்

| | | |
|---|---|---|
| 01. சோவியத் ரஷ்யா | - | ஸ்புட்னிக் - 1 |
| 02. அமெரிக்கா | - | எக்ஸ்புளோரர் - 1 |
| 03. கனடா | - | அலுட்டி - 1 |
| 04. இத்தாலி | - | ஸான் மார்க்கோ - 1 |
| 05. பிரான்ஸ் | - | ஏ - 1 (அஸ்டேரிக்) |
| 06. அவுஸ்ரேலியா | - | ரெஸாட் - 1 |
| 07. மேற்கு ஜேர்மணி | - | அஜுர் - 1 |
| 08. ஜப்பான் | - | ஓசுமி |
| 09. சீனா | - | சிசோம் |
| 10. நெதர்லான்ட் | - | நாஸ் |
| 11. ஸ்பெயின் | - | இன்டாஸாட் |
| 12. இந்தியா | - | ஆரியபட்டா |





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆரோக்கிய வாழ்விற்கு மானிடத் தேவைகள்.....!

கே. சுபாசினி வேர்ஜினியா
தொடுகை வருடம், உடற்கல்வி நெறி

**"அன்பு என்பது ஒரு மனிதனுடைய முக்கிய தேவைகளுள் ஒன்றாகும்"**

நாம் அனைவரும் உயிர் வாழ்வற்கு அடிப்படை தேவைகளான வளி, நீர், உணவு என்பன அவசியமானவை என்பது அனைவரும் அறிந்த உண்மையே. இம் மூன்றை கொண்டு மட்டும் நாம் இப்பூலோகத்தில் வாழ முடியுமா? நிச்சயம் முடியாது. நாம் ஆரோக்கியமாக வாழ வேண்டு மென்றால் இவற்றோடு சேர்த்து அன்பு, கணிப்பு, பாதுகாப்பு, திருப்தி, ஆலோசனையும் வழிகாட்டலும், பாராட்டுக்கள் போன்ற உள, சமூகத் தேவைகளும் முக்கிய இடத்தை வகிக்கின்றது என்பதை நாம் மறுக்க முடியாது.

நாம் ஒவ்வொருவரும் ஆரம்ப த்தில் அன்பு எனும் உணர்வினை தாயின் அரவணைப் பிலேயே உணர்கின்றோம். எமது பெற்றோர்களே எமது பாதுகாவலர் என்பதையும் நாம் உணர்வுபூர்வமாக உணர்கின்றோம். இவ்வாறு குழந்தைப் பருவத்தில் பெற்றோரிடம் கிடைக்கும் அன்பானது வளர்ந்து ஓர் தொழிலுக்கு சென்றாலும் ஏன், நாம் பெற்றோர்களாகும் வரையும் எமக்கு உள உறுதிப்பாட்டினை அளிக்கின்றது என்பது கண்கூடு.

**"நல்ல நண்பனை கண்டவன் சொர்க்கத்தை அடைந்தான்"** என்பதற்கிணங்க பெற்றோருக்கு அடுத்தபடி எமக்கு தேவையான அன்பு பாதுகாப்பு ஆலோசனையும் வழி காட்டலும், பாராட்டுக்கள், பரிசில்கள் போன்ற மானிடத் தேவைகளை பெற்றுக் கொள்வதில் முக்கிய இடத்தைப் பெறுவோர் நல்ல நண்பர்களே என்றால் மிகையாகாது. இதற்கு அடுத்ததாக பாடசாலை முக்கிய இடத்தைப் பெறுகின்றது. ஏனென்றால் மாணவர்கள் வீட்டில் இருக்கும் நேரத்தை விட பாடசா லையில் இருக்கும் நேரமே அதிகம்! எனவே பாடசாலை சமூகத்த வர்களான அதிபர், ஆசிரியர்கள், சிற்றூழியர்கள் போன்றோர் எமது பாதுகாப்பிற்கு உத்தரவாதம் அளிப்பவர்களாக இருக்கின்றார்கள்.

எங்களது அன்பு, பாதுகாப்பு தொடர்பாக பெற்றோர்கள், நண்பர்கள், பாடசாலை சமூகம் போன்றோர் மட்டுமல்ல சமூகத்தில் உள்ளவர்களும் முக்கிய பங்கு வகிக்கின்றனர் என்பதை நாம் மறந்து விடக்கூடாது. நாம் பொது இடங்களில் பாதுகாப்போடு நடமாட எமக்கு உதவுபவர் சமூகத்தைச் சார்ந்தவர்களே என்பதையும் நாம் மறந்து விடலாகாது.

ஆகவே, பெற்றோரின் அன்பினையும் பாதுகாப்பினையும் பெறுவதற்கு நாம் அவர்களின் அறிவுரைகளையும், ஆலோசனைகளையும் பின்பற்றுதல் வேண்டும் அன்பு செலுத்துதலும், பெறுதலும் சிறுவர் முதல் முதியோர் வரை அனைவருக்கும் பொதுவானதாகும் எனவே, அடிப்படைத் தேவைகளுடன் எமக்குத் தேவையான ஏனைய துணை தேவைகளையும் பெற்று பரிபூரண ஆரோக்கிய வாழ்வினை வாழ்வோம்!


**"அன்பு ஒருவனை பூரணப்படுத்தும்"**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன் மாதிரிகளும் சமூகக் கற்றலும் (Models and Social Learning)



பிரான்ஸ்கா டொறின் டானியல்
விடுகை வருடம், ஆரம்ப நெறி

பழக்கங்கள் ஒரு நல்ல முன்மாதிரியைப் பார்த்துக் கற்றுக்கொள்ள முடியும் என்பது சமுதாயக் கல்வி முறையின் அடிப்படைக் கொள்கைளாகும். படித்தும், அனுப வத்தில் இருந்தும் கற்றுக் கொள்வதை விட அடுத்தவரைப் பார்த்துக் கற்றுக் கொள்வது எளிதாக இருக்கிறது.

குழந்தைப் பருவம் முதல் ஏதேனும் குழுவொன்றுக்குள் இணைந்துக் கொள்ளப் படவேண்டும் நாம் என்று நினைக்கிறோம். சின்னக் குழந்தை கூட தன்னுடைய பெற்றோர் செய்யும் சில செய்கைகளை அப்படியே செய்து காட்டுகிறது. பின்னாளில் பள்ளிக்குச் செல்லும் போது பலராலும் பாராட்டப்படும் ஒருவனைப் பார்த்து தானும் அதுபோலவே உடை அணிவதும், பழகுவதும் தன் இரசனைகளை மாற்றிக் கொள்வது எனச் சிறுவர்கள் ஈடுபடுகிறார்கள். இதில் சில சமயம் சிறுவர்கள் தவறான வழிக்குச் செல்வதும் கூட்டத்தில் அதிக முரட்டுத்தனம் உடைய ஒருவனின் கட்டுப்பாட்டுக்குள் வருவதும் நடக்கிறது.

மாணவர்கள் நல்ல முன் மாதிரியைப் பார்த்து கற்றுக் கொள்கிறார்கள். கணிதம் போன்றவற்றைக் கற்கும் போது சில கடினமான கணக்குகளை ஆசிரியர் முதலில் செய்வதைக் கவனித்து அதைப் போலவே சிந்திக்கவும் கற்கிறார்கள். அதே போல பயம் நிறைந்த இடத்தில் எப்படி சமாளிப்பது என்பதையும் ஒரு மூர்க்கமான மாணவனை எப்படி எதிர்கொள்வது என்பதையும் அவ்வாறே கற்றுக் கொள்கிறார்கள். தன்னைப் போல ஒரு மாணவன் செய்யும் போது தன்னாலும் செய்ய முடியும் என்று நம்பிக்கை வருவதே காரணம். இதனால் நேர்மறையான வற்புறுத்தல்(Positive Peer Pressure) சில நல்ல பழக்க ங்களைத் தர முடியும். நன்னெறி பழக்கங்களும் அது தொடர்பான சிந்தனைகளும் முன்மாதிரியால் எளிதாக வருகின்றன.

**நல்ல முன்மாதிரி அமையத் தேவையான சில நிபந்தனைகள்.**

**01. கவனம்**

ஒருவர் நல்ல பழக்கவழக்கங்களை கற்றுக்கொள்ள நல்ல கவனம் தேவை. ஒரு முகமாக சற்றுச் சிதறாமல் நல்ல தேர்ந்த கவனம் தேவை " துரோணர் ஒரு முறை தன் மாணவர்களை ஒரு மரத்தில் இருக்கும் ஒரு பறவையின் கண்ணைக் குறிபார்த்து அம்புவிடச் சொன்னார். அப்போது அர்ச்சுனனைத் தவிர மற்றவர் அனைவரின் கண்களுக்கும் மரமும் அதன் இலைகளும், பறவையின் உடல் போன்ற அனைத்தும் தெரிகிறது என்று சொல்ல அர்ச்சுனன் ஒருவன் மட்டும் அதன் கழுத்தைத் தவிர வேறெதுவும் தெரியவில்லை என்று சொன்னான்" அர்ச்சுனனுக்கு இருந்ததைப் போன்ற கவனம் தேவை.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**02. தக்க வைத்துக் கொள்ளும் திறன்**

கற்றுக் கொள்ள விரும்புபவர் பார்த்தாலும் கவனித்தாலும் மட்டும் போதாது. அதை நினைவில் கொள்ளவும் வேண்டுகிற சமயத்தில் அதை செயல்படுத்தவும் அறிய வேண்டும். நினைவுத்திறனை வளர்க்கக் கற்றுக் கொள்வதை உடனே ஒரு காகிதத்தில் எழுதிப் பார்ப்பதும், மற்றவரிடம் அதை சொல்வதும் போன்றவற்றை உடனே செய்தால் அது நினைவில் பல நாட்கள் இருக்கும். உதாரணமாக ஒருவர் கணணி கற்றுக் கொள்கிறார் என்று வைத்துக் கொள்வோம். அவர் வகுப்பு முடிந்து வீட்டிற்கு வந்ததும் ஒரு முறை அதை செய்து பார்க்க வேண்டும். இல்லையெனில் சில நாட்கள் கழித்து எதைக் கற்றுக் கொண்டோம் என்றே மறந்து விடும். அதேபோல் உடற் பயிற்சியில் சில புதிய பயிற்சிகள் கற்றுக் கொண்டிருந்தால் அதையும் பழக வேண்டும். திரும்பத் திரும்ப பயிற்சி செய்வது அதிக நாட்கள் கற்றதை நினைவில் இருத்த உதவும்.

**03. இயக்கங்களைத் திரும்பச் செய்வது (Motor reproduction)**

ஒருவருடைய செய்கைகளைத் திரும்பச் செய்வது. இது சிலருக்கு மிகக் கடினமாக இருக்கும். யோகாசனம் போன்றவற்றைக் கற்றுக் கொள்ள இது மிக முக்கியம். சிறு குழந்தைகள் இப்படிச் செய்வதன் மூலமே நடக்க, ஓடக் கற்றுக் கொள்கிறன. பூங்காக்களில் எவ்வளவு சீக்கிரம் கற்றுக் கொள்கிறார்கள் என்பதற்கு ஒரு காரணம் அவர்களின் கவனிப்புத்திறன் அதிகம் மனம் கவலை எதுவுமின்றி இருப்பதும் மேலும் தயக்கமின்றி செயல் படுத்துவதும் ஆகும்.

**04. ஆர்வமும் சுய ஊக்கமும் (Interest and motivation)**

கற்றுக் கொள்ள விரும்பு வர்களும் கற்றுக் கொள்ள வேண்டி ஆர்வம் காட்ட வேண்டும். விருப்பமில்லா ஒன்றில் அது கலையாக இருப்பினும் அல்லது படிப்பாக இருப்பினும் ஈடுபட்டால் அது கசந்து விடும். மனதிற்குப் பிடிக்காத இடத்தில் பணிசெய்யும் போது நம்மால் 100 வீதம் அதில் ஈடுபட முடியாது. இதில் பிறகு தகைப்பும், அதன் தொடர்புடைய தலைவலி போன்ற பிரச்சினைகள் வரவும் காரணமாகிறது. பெற்றோரின் விருப்பத்திற்காக பொறியியல் படிக்கச் சேரும் மாணவன் படும் அவஸ்தையும், உடற்பயிற்சி செய்ய விருப்பமில்லா ஒருவன் மருத்துவரின் ஆலோசனை/வற்புறுத்தலின் பேரில் செய்ய ஆரம்பித்தால் அது பாதியிலேயே நின்றுவிடும் நிலையையும் நாம் காணலாம். இதனால் நோயாளிகளின் விருப்பத்தையும் ஆர்வத்தையும் மருத்துவர் தெரிந்து கொள்ள வேண்டியது அவசியம்.

**ஒரு பழக்கத்தின் மேல் முன்மாதிரிகளின் தாக்கம் எத்தகையது?**

சமூகத்தில் பலராலும் பாரா ட்டப்படும் ஒருவர் சொல்வதை, செய்வதை பலரும் கவனித்து கற்றுக் கொள்கிறார்கள். இதனாலேயே பொருட்களை விற்பவர்கள் கூட பலருக்கும் தெரிந்த ஒரு நடிகர், மருத்துவர் அல்லது பாடகரை விளம்பரங்களில் ஈடுபடுத்து கிறார்கள். இது போலவே ஒரு சமூகத்தின் மேல் தாக்கம் அதிகம் உள்ள ஒரு நடிகர் செய்யும் செயல்களை பல இளைஞர்கள் தொடர்வதைக் காணலாம். முன்மாதிரியாக இருப்பவர்கள் புதுப்பழக்கங்களைக கொண்டு வர முடியும். முன்மாதிரியாக இருப்பவர்களால் முன்னால் கற்றுக் கொண்ட ஒரு பழக்கத்தின் மேல் கூட தங்கள் சக்தியை உபயோகிக்க முடியும். உதாரணமாக காலாகால மாகக் கோவில் சென்று வழிபாட்டுக் கொண்டிருந்த ஒருவனுக்கு மிகவும் பிடித்த தலைவர் அதை மூடநம்பிக்கை என்று சொன்னால் அதன் அடிப்படைக் கருத்து புரியாத போதும் அதைச் செய்ய முயல்கிறான். இதே போல





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருமுறை பல் விளக்குவது உடலுக்கு நல்லது என்று ஒரு மருத்துவர் சொல்வதை ஒரு நடிகர் பின்பற்றும் போது அல்லது உடற்பயிற்சி செய்வதை ஒரு நடிகன் பின்பற்றும் போது அல்லது உடற்பயிற்சி செய்வதை ஒரு விளையாட்டு வீரன் செய்யும் போது அதைத் தொடர விரும்பும் இளைஞர்கள் அதிகம்.

அதே போல் முன்னர் தடுக்கப் பட்ட சில பழக்கங்களைக் கூட முன்மாதிரிகள் ஊக்கப்படுத்த முடியும். உதாரணமாகத் தண்ணீர் பருகுவது குறைந்து குளிர் பானங்கள் பருகும் பழக்கம் அதிகரித்த போது அதனால் உடலுக்குக் கேடு வருவதைச் சொல்லி அதைத் தடுக்க தண்ணீர் பருகுகிறேன் என்று சொல்லும் விளையாட்டு வீரரைத் தொடர்ந்து பல சிறுவர்கள் இப்போது தண்ணீர் பருக ஆரம்பித்துள்ளனர். நிறைய உடல் இளைக்க வைக்கும் திட்டங்கள்,தோல் சுருங்குவதைக் குறைக்கும் வழிமுறைகள் அதிக நீர் குடிப்பதன் அருமையைச் சொல்ல அதுவும் மனதில் பதிகிறது.

**முன்மாதிரிகள் நல்ல பழக்கங்களின் எண்ணிக்கையை அதிகரிக்க வல்லவை. தன்னம்பிக்கை**

மனிதர்கள் ஒரு புதிய பழக்கத்தை செய்யும் முன் அதைச் சரிவர செய்ய முடியுமென்ற நம்பிக்கை வர வேண்டும். நீரிழிவு நோய் உள்ள வர்கள் தங்கள் சர்க்கரை அளவைத் தினமும் அளக்க அதன் செய்முறை யின் மீது நம்பிக்கை வர வேண்டும்.

தன்னம்பிக்கை ஒரு புதிய பழக்கத்தைக் கற்றுக் கொள்வதில் எப்படி மாற்றம் உண்டாக்குகிறது ?

**செயல்கள் செய்யும்போது வரும் மகிழ்ச்சி**

ஒரு காரியம் செய்யும் போது அதைத் தன்னால் நன்றாகச் செய்ய முடியும் என்ற நம்பிக்கை இருக்கும் போது தடங்கல்கள் இல்லாமல் செய்யவும்,சந்தோஷமாகவும் செய்ய முடியும்.

**விளைவுகளும் விடா முயற்சிகளும்**

மனிதன் தன்னால் ஒரு காரியத்தை செய்ய முடியும், கற்றுக்கொள்ள முடியும் என்று நினைக்கும் போது தான் அதைக் கற்றுக் கொள்ளும் ஆர்வமும் மேலிடுகிறது. அதே போல மாணவர்கள் தன்னம்பிக்கை அதிகம் இருக்கும் போது இன்னும் நன்றாகக் கற்பதும் அதைக் கடைப்பிடிக்கவும் செய்கிறார்கள். ஆர்வம் அறிந்து கற்றுக் கொடுத்தலும் அவசியம்.

இதே போல சமூகக் கல்வியில் சுய அடக்கமும் கட்டுப்பாடும் மிக அவசியம். தன் முழு ஆர்வமும், அக்கறையும் சேர வேண்டும். இல்லையெனில் மாற்றங்களை உருவாக்க இயலாது.

**GOOD THOUGHT**


When one door of
Happiness closes,
Another opens, but
often
We look so
Long at the closed door
That we do not
See the one which
Has openedfor us.



எதை மாற்ற முடியாதோ அதை விரும்பக் கற்றுக் கொள்ளுங்கள். GTC

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# HOW TO ACHIEVE GOALS



K.Yoganathan
2nd Year, English

In the world human beings are interwoven with their society. If the men / or women to win their goals they have to practise the real nature. If they want to achieve their goals with step -by-step process from setting your goals correctly to following through to completion, the man will need to follow the following ideas to achieve his goal confidently.

1. Believe that your dreams are possible
2. Discover what you really want in life
3. Prioritize your goals
4. Set goals correctly to maximize your ability to accomplish them
5. Subdivide large goals and create timelines for achieving them
6. Create extra money to found your dreams
7. Make time to work on your goals
8. Find the correct and trustworthy information you need
9. Overcome the negative thoughts that are holding you back
10. Stop working and start living your dream.

The above ideals clearly mention the ways to win ones goals in his or her life.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகத்தை விழுங்கும் இலத்திரனியல்



எஸ். குமார்
விடுகை வருடம், விஞ்ஞான நெறி

விஞ்ஞான வளர்ச்சி காரணமாக ஏற்படும் புதிய மாற்றங்கள் இன்று உலகை ஆக்கிரமிக்கின்றன. இவ்வாறான ஒரு நிலைமை காரணமாக மனித தேவைகள் அதிகரித்துக் கொண்டு செல்லுகின்றன. வேறு எந்த துறையிலும் பார்க்க தகவல் தொழிநுட்ப துறையிலே அதிக வளர்ச்சி ஏற்படுகின்றது. எனவே, இவ்வாறான வளர்ச்சி காரணமாக வெளிவருகின்ற சாதனங்கள் ஒவ்வொரு நாளும் பெறுமதி அற்றுபோகின்றது. எனவே இவ்வாறான சாதனங்கள் கழிவாக அகற்றப் படுகின்றது. மனிதனுக்கு தீங்கு விளைவிக்க கூடிய அளவில் சூழலுக்கு விடுவிக்கப்படும் சக்தி அல்லது சடப்பொருள் கழிவு என வரையறுக்கப்படும். இவ்வாறு விடு விக்கப்படும் இலத்திரனியல் சாதனங்கள் (சடப்பொருட்கள்) அல்லது சக்தியே இலத்திரனியல் கழிவு எனப்படுகின்றது.

இலத்திரனியல் கழிவு எனப்படும் போது அது பழைய தொலைக்காட்சி, கையடக்கத் தொலைபேசி, கணனி, வானொலி என அகன்று செல்லும், ஒன்றினைக்கப்பட்ட சுற்றுக்களின் (I.C) மூலம் உருவாக்கப்பட்ட சகல சாதனங்களையும் குறிக்கும். பொதுவாக இந்த சாதனங்களில் பலவும் இலத்திரனியல் கூறுகள் ஒன்றுடன் ஒன்று தொடர்புபட்டு காணப்படுகின்றது. இவ் இலத் திரனியல் கூறுகளில் பல இரசாயன மூலகங்கள் சேர்க்கை அடைந்து காணப்படுகின்றன. இவை சுயாதீ னமாக விடுவிக்கப்படுவதனால் சூழலுக்கும் மனிதனுக்கும் பல தீங்குகளை விளைவிக்குகின்றது.

2006 இல் ஐவரிகோஸ்ட் எனும் நாட்டில் பத்து பேரை கொன்று, இன்னும் எழுபதாயிரத்துக்கும் அதிகமானோரை சிகிச்சை பெற வைக்கும் நிலைமையை இவ் இலத்திரன் கழிவுகள் ஏற்படுத்தியது. அத்துடன் தற்போது சோமாலியா கடற்பரப்பில் கொட்டப்படுகின்ற அணுக்கழிவுகளும் இலத்திரனியல் கழிவுகளும் காரணமாக மீன் வளம் குறைவடைந்து காணப்படு கின்றமையால் சோமாலிய கடற் கொள்ளையர்கள் உருவாகி யுள்ளனர்.

உலகம் எதிர்நோக்கும் கழிவு தொடர்பான பிரச்சினை ஐ.நா சபையின் மூலம் மிக ஆழமாக ஆராயப்படுகின்றது. ஐ.நா வின் அறிக்கையின் படி உலகளாவிய ரீதியில் வருடாந்தம் சுமார் 20 தொடக்கம் 50 மெற்றிக் தொன் இலத்திரனியல் கழிவுகள் சூழலுக்கு வெளியேற்றப்படுகின்றது. இதே வேளை வருடாந்தம் உலகளவில் மில்லியன் கணக்கான கணினிகள் விற்பனையாகின்றன. அமெரிக்காவில் வருடாந்தம் சுமார் 12 தொடக்கம் 20 மில்லியன் கணினிகள் பழுதடைந்த நிலையில் வீசப் படுகின்றன.

ஐரோப்பிய ஒன்றியத்தின் கணக்கெடுப்பு ஒன்றின் படி சூழலுக்கு வெளிடப்படும் இலத்திரனியல் கழிவுகள் வருடாந்தம் 3 தொடக்கம் 5 சதவிகிதம் அதிகரிப்பதாக கண்டறியப்படுகின்றது. காலப்போக்கில்


வாழ்வில் நிகழும் ஒவ்வொரு சம்பவங்களின், அநுபவங்களின் காரண காரியத் தொடர்பை ஆராய வேண்டும். GTC

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணினியே குப்பையாக உலகை நிரப்பி விடப்போகின்றது.

ஆரம்ப காலங்களில் இலத்திரனியல் கழிவுகள் பெரும் பாலும் சீனா மற்றும் இந்தியா ஆகிய ஆசிய நாடுகளிலேயே அதிகளவில் காணப்பட்டது. இன்று அதிகளவில் ஆபிரிக்க நாடுகளிலே இவை குவிக்கப்படுகின்றன.

ஆபத்தான கழிவுகளை முகாமை செய்வதன் பொருட்டு உருவாக்கப்பட்ட பாசல் சமவாயம் (Basel Convention) ஓரளவு ஆபத்தான கழிவுகளை முகாமிப்பது தொடர்பில் நடவடிக்கை எடுத்தாலும் பூரண வெற்றியளிக்கவில்லை.

கழிவுகள் தொடர்பான விழிப் புணர்வு அதாவது குறித்த இலத்திரனியல் கழிவுகள் எங்கிருந்து எவ்வாறு உருவாகின்றன? எப்படி அளிக்கப்படுகின்றன போன்ற விடயங்களை அறிந்து கொள்வதன் மூலம் கழிவுகளை சிறப்பான முறையில் கட்டுப்படுத்த வாய்ப்பு ஏற்படும்.

சூழலில் சுயாதீனமாக விடுவிக்கப்படும் இரசாயன மூலகங்களையும் பார உலோகங் களையும் சூழலில் தேக்கி விட வாய்ப்பு ஏற்படுகின்றது. பின்நாளில் உருவாகும் சந்ததி களுக்கே உலைவைத்து விடும் மண், நீர் போன்றவற்றின் சமனிலை பாதிக்கப்படும். தாவரங்கள் வளர்வதை கூட தடுத்துவிடும். இலத்திரன் கழிவுகள் எரிக்கப்பட்டு அகற்றப்படும்போது சூழலுக்கு விடுவிக்கும் நச்சு வாயுக்களும் கேடு விளைவிக்கும் இரசாயனங்களும் மனிதனுக்கும் சூழலுக்கும் பெரிய அச்சுறுத்தலாக அமையும்.

எமது நாட்டிலும் கணினி பாவனை அதிகரித்து வருவதனால் கணினிகள் பழுதடைவதும் பாவித்த கணினிகளின் பாவனை அதிகரிப் பதனாலும் பழுதடைந்த கணினிகளை குவிக்கும் குப்பை மேடாக இலங்கை உருவாகி வருகின்றது.

இலத்திரனியல் கழிவுகளால் ஏற்பட போகும் பாதிப்பை தடுப்பதற்கு மக்களிடையே இக்கழிவுகளின் அபாயகரமான விளைவுகளை பற்றி விழிப்புணர்வை ஏற்படுத்தி இலத்திரனியல் சாதனங்களை மீள் பாவனை செய்தல், மீள்சுழற்சி போன்ற நடவடிக்கைகளில் ஆர்வத்தை ஏற்படுத்த வேண்டும். இதன் மூலம் இப்பிரச்சினையிலிருந்து உலகினை விடுவிக்கலாம்.

உசாத்துணை :- PC TIMES,
வீரகேசரி.

**ஜாக்கிரதே! அசைபோடாதே**
**சூன்யத்தின் தத்துவங்களை:**
**நொறுங்கிவிடும் உன் பற்கள்.**
**விழுங்கு அதை முழுமையாய்...**

**மழையினூடே பரிதியை உணர்வது**
**ஆழத் தீயினடியிலிருந்து**
**தூய நீரை வெளிக்கொணர்வதே.**

**கடலைக் கடக்கத் தொடங்கிய**
**வண்ணத்துப் பூச்சிகள்,**
**கரைந்து விட்டன:**
**என் சுயம் என்னிடமே தங்கி**
**இருக்கிறது.**

**மலையுச்சிக்குச் செல்லும்**
**பாதையை**
**அறிய விரும்பினால் நீ கேட்க**
**வேண்டும்**
**அங்குப் போய்த் திரும்பி வந்த**
**மனிதனையே.**

**'இருப்புநிலை' பற்றிய அர்த்தங்கள்**
**உன்னுள் வற்றிப் போக வேண்டும்;**
**'இருப்பு நிலையற்றதை'**
**உண்மை என எடுத்துக்**
**கொள்ளாதே.**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலை இடை விலகல்

சு. நாவேணி
விடுகை வருடம், கணித நெறி

18 வயதிற்கு உட்பட்ட சிறுவர்கள் அனைவரும் பாடசாலைக் கல்வியை அவசியம் பெற வேண்டும் கல்வியறிவினூடாக கிடைக்கும் நன்மைகள் அவர்களுடைய வாழ்க்கையை மேலும் வளர்த்துச் செல்லும் உலகில் பாடசாலை செல்லும் வயதுடைய சுமார் 130 மில்லியன் பிள்ளைகள் பாடசாலை செல்வதில்லை. இதன் விளைவாக எதிர்கால உலகில் ஆறில் ஒரு பங்கினர் எழுத்தறிவற்றவர்களாக இருப்பார்கள் என மதிப்பிடப்பட்டுள்ளது. இப்புள்ளி விபரங்கள் நாம் எதிர் நோக்கியுள்ள சவாலின் தாற்பரியத்தை புலப்படுத்துகின்றன.



சமூக மேம்பாட்டிற்கும் பொருளாதார வளர்ச்சிக்கும் கல்வி இன்றியமையாதது என்பதை எவரும் மறுக்கமாட்டார்கள். கல்வி அடிப்படை உரிமை என சிறுவர் உரிமைச் சமவாயம் உறுப்புரிமை 28 விதந்துரைக்கின்றது.

கல்வியானது முறை சார்ந்த கல்வி [Formal Education}, முறை சாரா கல்வி [Non-Formal Education] என்ற வகையாக போதிக்கப் படுகின்றது. முறை சார்ந்த பாடசாலைக் கல்வியை இடை நிறுத்துகின்ற சிறுவர்களே பாடசாலையிலிருந்து இடை விலகிய சிறுவர்களாக [School Drop Outts ] கணிக்கப்படுகின்றனர்.

இலங்கையில் அமுலிலுள்ள கட்டாயக் கல்வி [Compulsory Education] என்பது ஐந்து வயதிற்கு குறையாமலும், பதினான்கு வயதிற்கு மேற்படாமலும் உள்ள சிறுவர்கள் கட்டாயக் கல்வியைப் பாடசாலைகள் மூலம் பெற்றுக் கொள்ள வேண்டும் என்பதாகும். இவ்வயதுப் பிரிவினுள் பாடசாலையிலிருந்து விலகிய சிறுவர்கள் பாடசாலை இடை விலகியவர்களாக அடையாளப்படுத்தப் படுகின்றனர்.

பாடசாலை இடைவிலகலுக்கான காரணங்களாக குடும்பப் பொருளாதார நெருக்கடி, பொருளாதார நடவடிக் கையில் ஈடுபடல், ஆர்வமின்மை, உடல் நலக் குறைவு, போன்றவற்றை இனங்காணக்கூடியதாக உள்ளது. பாடசாலை இடைவிலகலின் பின்னரான செயற்பாடாக சிறுவர் ஊழியம் [Child Labour] விளங்குகின்றது. சுகயீனம் காரணமாக பாடசாலை இடைவிலகியோர் தொடர்ந்து பாடசாலைக்கோ, தொழிலுக்கோ செல்லாது பாடசாலை யிலிருந்து விலகி வீட்டில் தங்கி விடுகின்றனர். சிறுவர்கள் தொழிலுக்கு செல்லுதல், வீட்டுவேலை, இளை யோரை பராமரித்தல், நோயுற்ற முதியவரைப் பராமரித்தல் போன்ற காரணிகளினால் பாடசாலைக் கல்வியைத் தொடரமுடிவதில்லை.

உரிய வயதில் உரிய தரத்தில் உரிய திறனில் பாடசாலைக் கல்வியை தொடர முடியாத சிறுவர்கள் சக மாணவர்களால் ஓரங்கட்டப்பட்டு இறுதியில் தாழ்வுச் சிக்கல்களால் பாடசாலையிலிருந்து இடை விலகி விடுகின்றனர்.

பாடசாலையில் இருந்து இடைவிலகும் சிறுவர்கள் குற்ற நடத்தைகளுக்கு துணை போதல், குழுநடத்தை, வன்போக்கு இளவயது திருமணங்கள் போன்ற சமூக எதிர்நடத்தைகளில் ஈடுபடுகின்றனர். இவற்றைத் தவிர்க்க பாடசாலை,



எதையும் எதிர்பார்க்காதவருக்கு ஏமாற்றம் என்பதே கிடையாது. GTC

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமூகம் ஆகியவற்றுக்கிடையில் ஒன்றிணைப்புத் தன்மை தோற்று விக்கப்பட வேண்டும்.

பாடசாலை இடைவிலகல் இன்று சிறுவர் கல்விக்கு பெரும் சவாலாக அமைந்துள்ளது. சமூக மேம்பாட்டி ற்கும், பொருளாதார வளர்ச்சிக்கும் கல்வி இன்றியமையாதது என்பதை எவரும் மறுக்கமாட்டார்கள்.

**பாடசாலை இடை விலகலுக்கான காரணங்கள் பின்வருமாறு**

01. குடும்ப பொருளாதார நிலைமை[வறுமை]
02. சிறுவர்கள் வேலைக்கு அமர்த் தப்படுதல்
03. ஆர்வமின்மை
04. உடல், உளநலக் குறைவு
05. மதுபாவனை
06. வீட்டு வேலை, முதியவர்களைப் பராமரித்தல்
07. குடும்ப கட்டமைப்பு மாற்றம்
08. யுத்தமும் இடப்பெயர்வும்
09. போதிய வழிகாட்டல் இன்மை

**பாடசாலை இடைவிலகலை தவிர்ப்பதற்கான ஆலோசனைகள்**

01. பெறறோருக்கும், சிறுவர்களுக்கும் இடையில் கல்வியின் மகத்துவம் பற்றி விழிப்புணர்வை ஏற்படுத்தல்.
02. தொடர்ச்சியாக வழிகாட்டல்.
03. மாணவர்கள் கல்வியில் எதிர் நோக்கும் பிரச்சினைகளை சுமூகமாக தீர்த்தல்.
04. மாணவர்களிடையே பாகுபாடற்ற மனப்பாங்கை வளர்த்தல்.
05. சிறந்த உளவளத்துணை மாணவருக்கு வழங்கப்பட வேண்டும்.

## உலகப் புகழ்பெற்ற மொழிகளும் அவற்றிலுள்ள மொத்த எழுத்துக்களும்

கே. சீத்தாலெட்சுமி
விடுகை வருடம், சித்திர நெறி

| | | |
|---|---|---|
| 01. | தமிழ் | 247 |
| 02. | ஆங்கிலம் | 26 |
| 03. | அரபு | 28 |
| 04. | ஜேர்மன் | 26 |
| 05. | துருக்கி | 26 |
| 06. | லத்தீன் | 22 |
| 07. | சீனா | 214 |
| 08. | பாரசீகம் | 31 |
| 09. | ஸ்பானிஷ் | 27 |
| 10. | பிரான்ஸ் | 26 |
| 11. | கிரேக்கம் | 24 |
| 12. | இத்தாலி | 20 |



 குறைய வேண்டியது பாவம். நிறைய வேண்டியது புண்ணியம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தலைமைத்துவ ஆற்றல்



இரா. அமுதா
விடுகை வருடம், கணித நெறி

ஒரு குறிப்பிட்ட சூழ்நிலையில் ஒரு நோக்கத்தை அடைய ஒருவர் தம் திறமையை செயலாற்ற வைத்து அனைவரையும் இலக்கு நோக்கி அழைத்துச் செல்லல் தலைமைத்து வமாகும்.

**"நினைத்த முடிவுகள் கிடைக்காத போது கிடைத்த முடிவுகளுக்காக உழைப்பவன் தலைவன் "**

தலைவன் தன்னைப்பற்றியும் தனக்குத் தெரியாதப்பகுதிகளைப் பற்றியும் விழிப்புணர்வுடன் இருத்தல் வேண்டும். தன் பலத்தையும், பலவீனங்களையும், சந்தர்ப்பங் களையும், அச்சுறுத்தல்களையும் அறிந்து கொள்வதுடன் தன் பலம், பலவீனங்களை பிறர் மீது திணிக்காது இருத்தல் வேண்டும். மனித நடத்தையினை சரியாக விளங்கிக் கொள்ளக்கூடிய ஆற்றலைக் கொண்டிருத்தல் வேண்டும். நியாயமான முறையில் செய்தித் தொடர்பினை மேற்கொள்பவராக இருந்தாலும், நல்ல அம்சங்களை மிகைப்படுத்திக் கூறுபவராகவும், பாதகமான அம்சங்களை குறைத்துக் கூறுபவராகவும் காணப்படலாகாது. இலக்கினை அடையும் பொருட்டு உழைப்பவராகவும் விசுவாச முடையவராகவும் இருத்தல் வேண்டும். பிறர் தன்னை உதாரணம் காட்டி நடக்கக்கூடியவாறு நடந்து கொள்ளலும் ஆபத்துக்களை ஏற்கத் தயாராக இருத்தலும் விமர்சனங்களை ஏற்கத் தயாராகவுள்ளவருமாகவும், நேரத்தினை சரியாக முகாமை செய்யக்கூடியவராகவும், தீர்மானம் மேற்கொள்வதில் ஆற்றலை கொண்டிருப்பவராகவும் இருத்தல் வேண்டும். மேற்குறிப்பிட்ட பண்புகளை ஒருவன் தன்னகத்தே ஏற்படுத்திக் கொள்வானால் அவன் மிக சிறந்த தலைவனாவான்.

ஒவ்வொரு தலைவனும் ஆளுமையை விருத்தி செய்வதுடன் இலக்கை அடைவதற்கு பின்வரும் செயற்பாடுகளை ஏற்படுத்திக் கொள்வதன் மூலம் இலக்கை நோக்கி நகருதல் இலகுவாகும்.

| | | |
|---|---|---|
| **Vision** | - | தொலைநோக்கு |
| **Mission** | - | குறிக்கோள் |
| **Objective** | - | நோக்கம் |
| **Goals** | - | இலக்கு |

இவை நான்கும் ஒன்றோடொன்று தொடர்புடையவையாகும். இலக்கை அடைவதற்கு இவற்றைப் படிமுறைப் படி செயல்படுத்த வேண்டும்.

ஒரு தலைவன் தீர்மானிக்கும் தொலை நோக்கில் பின்வரும் அம்சங்கள் அடங்களாக இருத்தல்.

ஒவ்வொரு தலைவனும் தலைவனாக திகழ " **Leader** " என்னும் சொல்லினுள்ளேயே அடங்கலான பண்புகளைத் தெரிந் திருத்தல் வேண்டும்.


தன்னைத் தெரிந்து கொள்ளாதவன் தலைவனாக முடியாது. ஒவ்வொரு தலைவனும் தன்னைப் பற்றி அறிந்துக் கொள்வதை வளர்க்கும் போதே அவன்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறந்த தலைவனாகின்றான். தன்னையும் தெரிந்து மற்றவர்களையும் அறிந்து கொள்ளல் வேண்டும். (உதாரணமாக) மகாத்மா காந்தி அவர் தன்னையும் பிறரையும் தெரிந்ததாலேயே சிறந்த தலைவரானார். இன்றைய தலைவர்களே நாளைய சமூகத் தலைவர்களாகப் போகின்றவர்கள். எனவே, நாம் தலைமைத்துவ கோட்பாடுகளுக் கமைய தலைவர்களாக திகழ முடியும்.



**"மற்றவர்களைப் புரிந்து கொள்பவன் அறிஞன் ஆகின்றான்
தன்னைப் புரிந்து கொள்பவன் ஞானி ஆகின்றான் மற்றவரையும் தன்னையும் புரிந்து கொள்பவனே
தலைவனாகின்றான்"**

## காலம் பதில் கூறும்...!

ஒரு நாட்டு மன்னனுக்கு மந்திரியின் மேல் கோபம். மரண தண்டனை விதித்தான். மந்திரி, ''அரசே!எனக்கு ஒரு வருடம் தந்தால் பட்டத்து யானையைப் பறக்க வைப்பேன்" என சவால் விடுத்தான். மன்னனுக்கு கோபம் அதிகரித்தது, ''ஒரு வருடத்திற்குள் அப்படி செய்யாவிடில் என்ன செய்வேனோ எனக்குத் தெரியாது" என்றான்.

இரவு மந்திரியின் மனைவி, ''ஏங்க யானையைப் பறக்க வைக்க எப்படி முடியும்" என்றாள் கவலையுடன்.மந்திரி சிரித்துக்கொண்டே, ''இன்னும் 364 நாட்கள் இருக்குது. கவலைப்படாதே! ராஜாவின் கோபம் தணிந்தாலும் தணியும். அல்லது ராஜாவே மேல போகலாம் அல்லது நானே இறக்கலாம். இதெல்லாம்விட் பட்டத்து யானை உயிருடன் இருந்தால் தானே? ஒருவேளை அது பறந்து கூட போகலாம். யார் கண்டது. நிம்மதியா தூங்கு" என்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# One Word for Many



சி. மொறின்
விடுகை வருடம், உற்கல்வி நெறி

| | | | |
|---|---|---|---|
| 1. | A Place where birds are kept | - | Aviary |
| 2. | A Place where bees are kept | - | Apiary |
| 3. | A Place where fishes are kept | - | Aquarium |
| 4. | A Place where rabbits are kept | - | Hutch |
| 5. | A Place where pigs are kept | - | Sty |
| 6. | A Place for bree - ding insects | - | Insectariums |
| 7. | The house of an Eskimo | - | Igloo |
| 8. | The house of a Swiss peasant | - | Chalet |
| 9. | The house of an Arab | - | Do war |
| 10. | The house of an American Indian | - | Wigwam |
| 11. | The house of an gipsy(also gypsy) | - | Caravan |
| 12. | A Zulu Village | - | Kraal |
| 13. | The house of a Knights | - | Kabitka |
| 14. | A Shelter for a dog | - | Kennel |
| 15. | A Shelter for a horse | - | Stable |
| 16. | A Shelter for a Cow | - | Pen |
| 17. | A box for pigeons to live | - | Dovecot |
| 18. | The dwelling – place of an animal underground | - | Burrow |
| 19. | The home of a lion | - | Den |
| 20. | A Squirrel's home | - | Drey |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# GOVERNMENT TEACHERS' COLLEGE - ADDALAICHENAI

## COURSE - ARABIC LANGUAGE

## ACADEMIC YEAR 2009/2010



**Row 1 (L/R) :** (Seated) Moulavi MZM. Fazim, Moulavi HKM. Niyas, Al Haj Moulavi VTM Haneefa "Sharqiyy", Mr:MIM. Lathief (Deputy Principal), AlHaj Moulavi MSA. Hafeel "Sharqiyy" Principal, Alhaj. Moulavi. ACM Zubair "Sharqiyy" (Deputy Principal), Moulavi. MBM Safhan, Moulavi.MDM Murshid Moulavi. AKT Muneer.

**Row 2 (L/R) :** Moulaviya. MYJ Munawwara, Moulavia. MS Badurunisa, Moulaviya. MMF Nihara, Moulaviya. MFK Fahmiya, Moulaviya MMF Mirsha, Moulaviya. MMS Roshana,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# GOVERNMENT TEACHERS' COLLEGE - ADDALAICHENAI

## COURSE - PHYSICAL EDUCATION

## ACADEMIC YEAR 2010/2011



**Row 1 (L/R) :** (Seated) Mr.MKM Haniffa, Mr. M Sudhaharan, Mr. B Kethees, Mr MIA Lathief (Deputy Principal), Alhaj. Moulavi. MSA Hafeel "Sharqiyy" - Prinicipal (SELAS), Alhaj. Moulavi. ACM Zubair "Sharqiyy" (Deputy Prinicpal), Mr. SLM Saleem (Lectr), Mr. A Jokin Fernando, Mr. MJS Siyadeen, Mr. M Sridaran,

**Row 2 (L/R) :** Mrs.HNI Fareesa, Mrs. MK Shalima, Mrs. R Rsdhika, Mrs.MSP Hinaya, Mrs. ML Sabiraihihunnisa, Mrs.K Punitha, Mrs. S Sumathy, Mrs. K Vijayamala, Mrs. K Sasikala, Mrs. SHF Jesmiy, Ms. S Jothi.

**Row 3 (L/R) :** Mrs. MIS Jasmina, Mrs. KS Verginiya, Ms. ARS Rameesa, Ms. S Pushpamalar, Ms. MYS Sameera, Mrs.M Jeyanthikumari.

Absent : Mr. SM Ferose

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# GOVERNMENT TEACHERS' COLLEGE - ADDALAICHENAI

## COURSE - COMMERCE

## ACADEMIC YEAR 2009/2010



**Row 1 (L/R) :** (Seated) Mrs.T Shagila, Mr. M Rajmohan, Mr. SMA Jiffry (Lectr.), Mr. MIA Lathief (Deputy Principal), Alhaj. Moulavi. MSA Hafeel "Sharqiyy" Principal (SLEAS), Alhaj. Moulavi. ACM Zubair "Sharqiyy" (Deputy Principal), Mr.H Isadeen, Ms.K Mahaletchumy, Mrs.S Vickneswary.


**Row 2 (L/R) :** Messrs.SR Banayagam, S Dhanarajan, S Sugeshwaran, S Mahesh Kanth, P Lashanthan, JS Tiron, R Kamalanathan, MNM Azari, R Mohan Raj, MM Ishan.

**Row 3 (L/R) :** Messrs. S Vimalendran, K Yoganathan, R Pathma Sri, K Mohaneswarraje, S Deeman, K Vicknavinayagan, M Rajanikanth, R Ravi, S Vasanthakanthan.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறந்த மனிதர்களை உருவாக்குவதில் கல்வியின் பங்கு



பே. லசந்தன்
விடுகை வருடம், வர்த்தக நெறி

"அன்ன சத்திரம் ஆயிரம் வைத்தல்
ஆலயம் பதினாயிரம் நாட்டல்
அன்ன யாவினும் புண்ணியம் கோடி
ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்"

என்று சொன்னான் பாரதி. எழுத்தறிவித்தல் தான் தர்மங்களில் எல்லாம் மிக உயர்ந்த தர்மம். வெறும் பள்ளிப்பாடத்தை கற்று கொடுப்பது மட்டும் கல்வி ஆகாது. நல்ல மனிதர்களை உருவாக்க வேண்டும் மனித நேயம் பேணுதல், அறிவுடன் அன்பு கொள்ளுதல், பண்பு காத்தல் போன்றவை களையும் கற்றுக்கொடுக்க வேண்டும். இதைக் கல்வி நிலை யங்கள் மட்டும் கற்றுக் கொடுக்க முடியாது. இதில் பெற்றோர் களுக்கும் பெரும் பங்கு இருக்கிறது. மாணவர்கள் கல்வி நிலையத்தில் செலவிடும் நேரத்தை விட வீட்டில் செலவிடும் நேரம் தான் மிக அதிகம்.

என்னதான் கல்விக்கூடத்தில் கற்றுக்கொடுத் தாலும் வீட்டில் பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளுக்கு நல்ல குணநலன்களை சொல்லி கொடுத்து பள்ளியில் கற்றுக் கொடுக்கும் கல்வியை, பண்பாட்டை மேலும் உயர்த்த வேண்டும்.

எல்லாக் குழந்தைகளும் பிறக்கும் போது சமமாகவே பிறக்கிறார்கள். என்றாலும் வளர்ப்பு முறையிலும் வளரும் சூழலிலும் அவர்கள் வேறுபட்டவர்களாகிறார்கள். ஆகவே, குழந்தைகள் முன்னேற்றத் திற்கும் அவர்கள் பண்பாட்டிற்கும் பெற்றோர்களின் பங்கு மிக அவசியம்.

எல்லா உயிரினங்களும் பிறக்கும் போதே வாழ்வதற்கு தேவையான தகுதியுடன் பிறக்கின்றன. ஆனால் மனிதன் மட்டும் அவ்வாறு பிறப்பதில்லை. பிறந்த பின்பு தான் ஒவ்வொன்றாக கற்று உயர்ந்த நிலையை அடைய வேண்டியுள்ளது. ஒவ்வொருவரும் வாழ்க்கை முழுவதும் கற்றுக் கொண்டே இருக்க வேண்டும். அப்பொழுது தான் வாழ்க்கை சிறப்புடையதாக அமையும்.

ஒருவர் சிறப்புடன் வாழ்ந்தாரா, இல்லையா என்பதை அளவீடு செய்வதற்கு ஒரு கருவி இருக்கிறது. அக்கருவி தான் அவருடைய குழந்தைகள். குழந்தைகளை சிறப்பாக வளர்த்து அறிஞர்களாக சான்றோர் களாக ஆக்குவதன் மூலமே ஒருவருடைய வாழ்க்கை முழுமை பெறுகிறது என்றால் அது மிகையாகாது.

வாழ்க்கைக்கு மூலதனமாக அமைவது தன்னம்பிக்கை. தன்னம்பிக்கை உள்ளவர்களால் மட்டுமே சோதனைகளை எதிர்த்து சாதனைப் படைக்க முடியும் என்பதை வரலாறுகள் நிரூபித்துள்ளன. ஆகவே இளமைப்பருவம் முதலே தன்னம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிக்கை உடையவர்களாக குழந்தைகளை வளர்க்க வேண்டிய கூட்டுப் பொறுப்பு பெற்றோர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் உள்ளது. அதாவது கல்வி பயிலுவதற்கு மாணவர்களின் ஒத்துழைப்பு மட்டுமன்றி பெற்றோரதும் ஆசிரியர்களினதும் ஒத்துழைப்பும் அவசியமாகும். பெற்றோர்கள் தம் பிள்ளைகளின் கல்வித் திறமையில் ஊக்கம் அளிக்க வேண்டும். அது மட்டுமன்றி அவர்களுக்கும் பிள்ளைகளின் கல்வியில் உதவி செய்ய வேண்டும்.

ஒவ்வொரு குழந்தைக்கும் ஒவ்வொரு துறையில் ஆர்வமும் திறமையும் இயற்கையிலேயே அமையக் காண்கிறோம். முயற்சியும் அதற்கேற்ற பயிற்சியும் இருந்தால் யார் ஈடுபாடும் விருப்பமும் உடையவர் என்பதை கண்டறிந்து அதற்கேற்ப கல்வி கொடுத்தால் அத்துறையில் அவர்கள் நிபுணர்களாக வளர வாய்ப்பிருக்கிறது. அதை விடுத்து பெற்றோர்கள் தங்களின் விருப்பு வெறுப்பை குழந்தைகள் மீது திணிக்கக் கூடாது. ஒவ்வொரு மாணவருக்கும் அவருடைய திறமைக்கேற்ப இலட்சியத்தை ஏற்படுத்திக் கொடுத்து அவருடைய முழுத்திறமை யையும் அதன் மீது செலுத்தி வெற்றி பெற உதவ வேண்டும்.

" **Winning is a Habit** "வெற்றி பெறும் பழக்கத்தை இளமைப் பருவம் முதலே உருவாக்க வேண்டும். அவருடைய வெற்றியும் மனோ நிலையை பொருத்தே அமைகிறது. நமது கல்வி முறை மாணவர் களிடையே சிந்தனைத் திறமையை வளர்ப்பதாக இல்லை. பெரும்பாலும் மனப்பாடம் செய்து தேர்வில் அவற்றை எழுதி புள்ளிகளை பெறுவதற்கு வழிவகுப்பதாகவே இருக்கின்றது. பெற்றோர்களும் தங்கள் குழந்தைகள் அதிகமான புள்ளிகளைப் பெற வேண்டும் என்று எதிர்ப்பார்க்கின்றார்கள். உண்மையில் அவர்கள் சிந்திக்கும் ஆற்றல் மிக்கவர்களாக வகுப்பிற்குச் செல்லும் பொழுது புள்ளிகள் மட்டுமே கவனத்தில் எடுத்துக் கொள்ளப்படுகிறது.

மாணவர்கள் சுய சிந்தனையை ஊக்குவிக்கும் விதமாக கல்வி முறை மாற்றி அமைக்கப்பட வேண்டும். அதாவது நமது குழந்தைகள் சிந்தனை திறமிக்கவர்களாக அறிவாற்றல் மிகுந்தவர்களாக பிரச்சினைக்கு தீர்வுகளை சிந்தித்து தெளியும் ஆற்றல் மிக்கவர்களாக உருவாக்குவதற்கு தேவையான கல்வி முறையை நாம் உருவாக்க வேண்டும். வெளி நாடுகளில் எல்லாம் ஆசிரியர்கள் மாணவர்களுக்கு முதலில் வினாக்களை மட்டும் கொடுப்பார்கள், வினாக்களுக்கு பொருத்தமான பதில்களை மாணவர்கள் தான் தேடிக்கண்டுபிடிக்க வேண்டும். வகுப்பில் ஒவ்வொருவர் கூறும் பதில்களைக் கேட்டு அதன் மீது விவாதம் நடத்துவார்கள். இதனால் ஒவ்வொரு மாணவரும் சுயமாக சிந்தித்து மற்றவர்களுடைய கருத்தை கேட்டு தனது அறிவை வளர்த்துக் கொள்ள முடியும்.


ஒவ்வொருவரும் சுயமாக சிந்திக்க அங்கு வாய்ப்பு அளிக்கப் படுகிறது. அதாவது ஒருவருடைய பசியை போக்குவதற்கு அவனுக்கு மீனைக் கொடுப்பதை விட மீன் பிடிக்க கற்றுக்கொடுப்பது சிறந்தது. இதைத் தான் வெளிநாடுகளிலுள்ள கல்வி நிலையங்கள் செய்கின்றன.

இன்றைய குழந்தைகளே நாளைய குடிமக்கள். ஆகவே, ஆசிரியர்களும் பெற்றோர்களும் தங்களுடைய கடமையை உணர்ந்து பணியாற்றுதல் வேண்டும்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அதிசய உடல் பற்றிய அதிசய தகவல்கள்

நல்லையா பத்மினிதேவி
விடுகை வருடம், உடற்கல்வி நெறி

நம் உடலில் உள்ள புரதம், கெரட்டின் ஆகியவையே நகமாக வளர்ச்சியடைகின்றன.

சராசரியாக ஒவ்வொரு மனிதனும் தினமும் 30,000 வார்த்தைகளைப் பேசுகின்றான்.

புதிதாகப் பிறந்த குழந்தை ஒரு நாளைக்கு 22 மணி நேரம் தூங்குகிறது.

மனிதனின் எலும்பு கான்கிரீட்டை விட நான்கு மடங்கு உறுதியானது.

தலை முடியைக் காட்டிலும் தாடி, ரோமம் மிக வேகமாக வளரக் கூடியது. ஒவ்வொரு ஆண்டும் சாதாரணமாக ஒரு மனிதனுக்கு 140 அங்குலம் தாடி வளருகின்றது.

வாயில் எச்சில் அதிகமாக ஊறுகிறவர்களுக்கு பல் சொத்தை அவ்வளவாக ஏற்படுவதில்லை

ஆண்கள் பெண்களை விட அதிக அளவு இரத்தத்தை உடலில் கொண்டுள்ளனர்.

எமது உடலில் உள்ள கார்பனை எடுத்தால் 9,000 பென்சில்கள் தயாரிக்கலாம்.

கர்ப்பத்தின் போது ஒரு பெண்ணின் கருப்பை (Uterus) 500 மடங்கு பெரிதாகிறது.

சராசரி ஓர் மனிதன் ஓர் ஆண்டில் 1,460 கனவுகள் காண்கின்றான்.

நாம் தூங்குவதற்கு 7 நிமிடங்களாகும்.

பிறந்த குழந்தையின் இருதயம் 135 தடவைகள், 6 வயதில் 96 தடவைகள், நடுத்தர வயதில் 72 தடவைகள், 50வயதுக்கு மேல் 50 தடவைகள் துடிக்கின்றன.

80 மணி நேரத்துக்கு மேல் யாராலும் தூங்காமல் இருக்க முடியாது.

அதிக எடையும், அதிக பருமனும் ஆயுளைக் குறைக்கும்.

வெயிலில் திரிந்தால் மட்டும் உடல் கறுக்கும் என்பதில்லை இரவில் வெகு நேரம் சுற்றிக்கொண்டிருந்தாலும் மேனியின் நிறம் மாறி கறுத்துவிடும்.

உசாத்துணை :- அதிசய உடலும் ஆரோக்கியக் குறிப்புகளும். (சிவரஞ்சன்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# THOUGHTS FOR YOUR LIFE



A. Murali Krishna
2nd Year, English

01. Remember true friend is the first person to come in, when the whole world goes out, Friendship is a treasure ship anyone can launch.

02. Often neglected in your pursuit of wealth,
Power and pleasures
don't forget that your Soul is the ONLY
thing that will go with you everywhere


03. "No, price is too high" and
"No price is too high"
Mean opposites divided by a "comma"
DETAILS can be the difference between failure and success.

04. Some start life's race wrong
but finish right, Some start right but
Finish wrong and some
are afraid to run at all
which kind are you.

05. Are you a giver or a taker?
Selfish people are never really happy or healthy,
The Dead Sea is "dead"
because it only receives & never gives

06. Believe in yourself and in your dreams
Take the failures of your past and
turn them into stepping stones that will help fulfil your
future dreams.

07. Avoid associating with people who gossi
A gossip always betrays confidence;
so avoid someone who talks too much,
especially about others.




08. For every minute you are angry,
You lose 60 seconds of happiness
That you can never get back
Take time to laugh – It is the music of the soul


வேதனையைப் பொறுத்துக் கொள்பவனே வெற்றி பெறுவான்.
GTC

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'உலக மயமாக்கலும் மனித சுதந்திரமும்' ஒரு அரசியல் பொருளாதாரப் பார்வை.



ரீ.ஏ. பெற்றிக் குரே
விடுகை வருடம், சித்திர நெறி

உலக மயமாக்கல் என்பதே இன்று உலகம் முழுவதும் பேசப்பட்டு வருகின்றது. உலகம் ஒரு கிராமம் போல் சுருங்கி விட்டதென்ற வார்த்தைகள் பிரபல்யம் அடைந்து விட்டன. இதில் உண்மை உண்டு. தொழில்நுட்பங்களின் வளர்ச்சி உலகத்தைப் பற்றி அறிந்து கொள்ள உதவுகிறது. இத்துறையில் நவீனமாக்கல் ஆற்றிய சாதனைகளோ பல. இவற்றின் முக்கிய விளைவுகளில் ஒன்று தூரத்தை மனிதனால் வெற்றிக் கொள்ள முடியும். இந்தவகையில் உலகம் கிராமம் போல் சுருங்கி விட்டது எனலாம். ஆனால் இந்த உண்மையின் மறுபுறத்தில் அதைவிடப் பெரிய உண்மைகளைக் காண்கிறோம். உண்மையில் உலகம் எவ்வளவு பரந்து என்பதை அந்த ஏகாதிபத்திய அதிகாரத்தை, மனித உரிமை மீறல்களை, இனவாதத்தை நிற வாதத்தை, பால் ரீதியான பாகு பாட்டை மறுபுறத்தில் காண்கி றோம்.

எங்கும் ஜனநாயகம் என்றே பேசுகிறோம். மனித வரலாறு மனித விடுதலை எனும் இறுதி நிலைக்கு வந்து விட்டது அல்லது அதை நோக்கி துரிதமாக வந்து கொண்டிருக்கிறது. என்று உலக மயவாதிகள் சொல் கிறார்கள். கம்யூனிசத்தின் தோல்வி ஜனநாயகத்தின் வெற்றி, இனி சுயபோட்டிச் சந்தை உலகில் மனிதர்கள் சமத்துவத்தையும் சுதந்திரத்தையும் அனுபவிக்க முடியும் என்று அவர்கள் கூறுகின்றனர்.

உலக மயமாக்கல் பற்றி விமர்சன நோக்கில் பார்ப்போர் இக்கருத்துக்களை ஏற்கவில்லை. ஆகவே, உலகமய மாக்கல் பற்றி வேறுபட்ட விளக்கங்கள் வளர்கின்றன, விவாதங்கள் தொடர்கின்றன. நாம் முன்னெப்போதும் இல்லாத வகையில் மூலதனத்தின் ஆட்சிக்குள்ளாகி யிருப்பதை அனுபவரீதியில் காண்கிறோம். உலகம் கிராமம் போல சிறிதாகி விட்டதென்னும் போது மூலதனத்தின் வரலாற்றுக் சாதனை யைத்தான் குறிப்பிடுகிறோம். முதலா ளித்துவத்தின் வரலாறு மூலதனத்தின் சர்வதேச மயமாக்கலின் வரலாறு என்றால் மிகையாகாது. இந்த வரலாற்றின் இன்றைய காலகட்டம் சில விஷேட தன்மைகளை கொண்டுள்ளது. இந்த வரலாற்றின் இன்றைய கால கட்டம் சில விஷேட தன்மைகளைக் கொண்டுள்ளது. இது தகவல் புரட்சியின் யுகம் என்றும், தொடர்பு தொழில் நுட்பத்தின் யுகம் என்றும் நாம் கூறலாம். இந்த புரட்சியே உலக மயமாக்கலின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றைய கால கட்டத்தின் ஊடகம் இந்த புதிய தொழிநுட்பம் பணமூலத்தின் துரித நகர்ச்சிக்கும், உலக ரீதியான தொடர்புகளுக்கும் உதவுகிறது. ஆயினும் இந்த தொழில்நுட்பத்தினை மட்டும் வைத்து இன்றைய உலக மயமாக்கலின் முழுத்தன்மை களையும் விளக்கிவிட முடியாது.

இந்த விளக்கத்தை உலக அரசியல் பொருளாதார நோக்கில் தேடவேண்டிய அவசியம் ஏற்பட்டு ள்ளது. விஞ்ஞான தொழில் நுட்பப் புரட்சிகளின் முக்கியத்துவத்தை அத்தகைய ஒரு தேடலின் ஊடாகவே முழுமையாகக் கிரகிக்க முடியும். இந்த வகையில் 1980 -1990 களில் ஏற்பட்ட சர்வதேச அரசியல் மாற்றங்கள் முக்கியமானவை. சோவியத் முகாமின் மறைவு உலக அரசியல் சக்திகளின் சமநிலையை அடிப்படையாக மாற்றியது. சீனாவின் உள்நாட்டு மாற்றங்களும் இதற்கு உதவின. இந்த அரசியல் மாற்றங்கள் முதலாளித் துவத்திற்கு மேலும் சார்பான பொருளாதார சூழ்நிலைகள் வரை உதவின. மூலதனத்தின் இயக்கத்திற்கு அரசியல் அமைப்பு ரீதியான சவால்கள், தடைகள் பெருமளவில் அகற்றப்பட்டன. பொருளாதார பலத்தாலும் இராணுவ பலத்தாலும் அமெரிக்கா உலகின் தலைமையைப் பெற்றுகொண்டது. ஐரோப்பிய ஒன்றியமும், ஜப்பானும் அமெரிக் காவின் தலைமையைத் தொடர்ந்து ஏற்றன. இப்படி சொல்வதால் இந்தக் கூட்டுக்குள் முரண்பாடுகள் இல்லை என்பதாகும்.

மாறிய சர்வதேச அரங்கில் உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம் போன்ற நிறுவனங்களின் பங்கு மேலும் முக்கியத்துவம் பெற்றது. வளர்முக நாடுகளின் பொருளாதாரக் கொள்கைகளை வகுப்பதில் இவை முக்கிய பங்கினை வகித்து வந்துள்ளன. 1970களிலிருந்து இந் நிறுவனங்களினால் வகுக்கப்பட்ட சுயபோட்டிச் சந்தை பொருளாதார கொள்கைகளை மேலும் பரவலாகவும், பலப்படுத்தவும், புதிய சர்வதேச நிலைமை உதவியது. இப்போது கிழக்கு ஐரோப்பிய நாடுகளும் அந்த பொருளாதார கொள்கைகளை ஏற்றுக்கொண்டன. ஆகவே, மூலதன த்தின் சர்வதேச மயமாக்கலை ஒரு குறிப்பிட்ட போக்கில் வழிநடாத்தும் கொள்கைகளை அமுல்நடத்த சாதகமான அரசியல் நிலைமை உருவாகிற்று. இன்றைய உலகமய மாதலெனும் கருத்தமைவின் பொருளாதார அடிப்படை சுயபோட்டிச் சந்தை கோட்பாடாகும் ஆனால் உலகமயமாக்கல் ஒரு பொருளாதார போக்கு மட்டுமல்ல இதற்கு அரசியல் சமூகக் கலாசார சூழல் பரிமாணங்கள் உண்டு உலகமயமாக்களின் இன்றைய கட்டம் நவீனத்துவத்தின் தொடர்ச்சியே

இங்கு சுதந்திரத்திற்கு ஒரு சுருக்கமான வரைவிலக்கணத்தை முன்வைத்தால் பொதுவாக மனித சுதந்திரம் எனும் போது தனி மனித சுதந்திரமே முக்கியம் பெறுகிறது. ஒரு நபர் தமக்கு பெறுமதிமிக்கதென கருதும் ஒரு செயற்பாட்டினை இருப்பினை தேர்ந் தெடுக்கவும் அனுபவிக்கவும் இருக்கும் உரிமை ஆற்றல் தான் தனி மனித சுதந்திரம் எனலாம் இக்கருத்துக்கு ஒரு வரலாற்றுப் பின்னணியும் உண்டு. இதனை தாராள வாத மரபுடன் இணைத்தால் சுலபம் தாராள வாதம் தனிமனித சுதந்திரம் பற்றி பலம்வாய்ந்த தத்துவ மரபை உள்ளடக்கியது. இந்த மரபில் இக்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருத்துக்கு விளக்கம் தேடும் போது தனிமனித வாதத்திற்கே அது இட்டுச் செல்லலாம். ஆயினும் இக்கருத்துக்கு நவீன தாராள வாதத்தின் வரலாற்றை விட நீண்ட பின்னனி உண்டு. உதாரணமாக, அரிஸ்டோட்டிலல் சிந்தனை மரபின் தனிமனித ஆற்றல் உடமை இவ்விதமாக வரைவிலக் கணத்தை சமீப காலத்தில் சார்ந்ததெனினும் சமூக ஜனநாயக விழுமியங்களை உள்ளடக்கின தனிமனித சுதந்திரம் பற்றி மார்க்ஸின் மனித விடுதலை பற்றி சிந்தனையும் இணைக்கலாம். தனி மனிதனின் பூரண விடுதலையே வரலாற்றின் இறுதி என மார்க்ஸ் கருதினார்.

இது மனித விடுதலையின் பூரணத்துவம் பற்றி கவித்துவமான கனவு இதை மார்க்ஸின் அதி இலட்சியவாத மனோகரக் கனவு என ஒதுக்கிவிட முடியாது. இந்த இலட்சியம் மார்க்ஸின் முக்கிய ஆக்கங்களில், குறிப்பாக மூலதனத்தில் இழையோடிக் கொண்டிருப்பதை காணலாம். மனிதர் தம் அன்றாட வாழ்வின் அவசியத்திலிருந்து விடுபட்டு இருப்பினும் செயற்பாட்டி லும் சுதந்திரத்தை அனுபவிக்கும் நிலைமைகளை உருவாக்குதலே மனித விடுதலை போராட்டத்தின் நோக்கமாகும். உழைப்பு மனித வாழ்விற்கு இன்றியமையாதது. ஆனால் உழைப்பினை நிர்ணயிருக் கும் சமூகம் இன்றியமையாதது. ஆனால் உழைப்பினை நிர்ணயிக்கும் சமூக உறவு சுரண்டலற்றதாகவும், சுதந்திரத்தைப் பேணுவதாகவும் இருக்க வேண்டும் இந்த வகையில் வர்க்கப்போராட்டங்களும், மற்றைய சமூகப் போராட்டங்களும், மனித சுதந்திரத்திற்கான மனித சுதந்திரத்திற் கான போராட்டத்தின் அம்சங்களே, வர்க்கங்கள் மட்டுமன்றி இனம், நிறம், பால், சாதி போன்றவையும் இங்கு முக்கியத்துவ மடைகின்றன.

இந்தப் போராட்டங்கள் உலகின் பல பாகங்களில் பல மட்டங்களில் பலவித வடிவங்களில் தொடர்ந்தும் இடம் பெறுகின்றன. ஒரு சந்தர்ப்பத்தில் வர்க்கம், இன்னொரு சந்தர்ப்பத்தின் பால் பிறிதொரு இடத்தில் சாதி வெறோரு கட்டத்தில் சூழலுக்கான உரிமை கூட்டுரிமை இப்படியாக பல்வேறு காரணங்கள் முக்கியத்துவம் பெறுகின்றன. இன்றைய போராட்டங்கள் ஜனநாயக உரிமைகளுக்கான போராட்டங்கள் நாம் இன்னமும் ஜனநாயகப் புரட்சியின் சவால்களுக்கு முகம் கொடுக்க வேண்டிய நிலையிலேயே உள்ளோம் என்பதில் எதுவித ஐயமும் இல்லை.

நீரில் அந்நிலவு;
உடைகிறது மீண்டும்
உடைகிறது,
ஆயினும் அது
முழுமையாய்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர்களின் கல்வி உரிமையும் அல்லது கல்வி உரிமை ஏற்பாடுகளும் நடைமுறையில் அதனை அமுல்படுத்துவதிலுள்ள சவால்களும்



பி. வின்சன்
விடுகை வருடம், கணித நெறி

மனிதர்களின் மனித உரிமை எனப்படுவது பற்றி 1948ம் ஆண்டு ஐக்கிய நாடுகள் சபையில் வெளியிடப்பட்ட அனைத்துலக மனித உரிமைகள் பிரகடனத்தில் மனிதர் சகலரும் சுதந்திரமாகவே பிறக்கின்றனர், அவர்கள் நியாயத்தையும் மனச்சாட் சியையும் இயற்பண்பாகப் பெற்றவர்கள். அவர்கள் ஒருவரோடு ஒருவர் சகோதர உணர்வு பாங்கில் நடந்து கொள்ளல் வேண்டும் என்பதாக அமைந்துள்ளது. எனவே, மனிதப் பிறவியாக பிறந்த அனைவருக்கும் சமனான உரிமைகள் உள்ளதாலும் சிறுவர்களும் மனிதப்பிறவியினர் என்ற கூட்டத்துக்குள் அடங்குவதாலும் அவர்களுக்கும் உரிமையுள்ளது என்ற அடிப்படையில் அவர்களின் உரிமையைப் பாது காப்பதற்காக விசேடமான ஏற்பாடுகளின் தேவை உணரப் பட்டது. அதற்கான காரணம் வளர்ந்தோரைப் போலன்றி. சிறுவர்களால் தமது தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு முடியாத நிலை காணப்பட்டதால் அவர்களின் மீது விசேட கவனமும் பாதுகாப்பும் செலுத்தப்பட்டது.

சிறுவர்கள் என்பவர்களை எந்த வயதில் அடக்குவது என்பதை பற்றிய கருத்து ஆரம்பத்தில் காணப்பட்டாலும் 18 வயதிற்கு கீழ்ப்பட்டவர்களை அதற்குள் அடக்குவது என தீர்மானிக்கப்பட்டது. எனினும் இவ்வயதெல்லை நாட்டுக்கு நாடு வேறுபடுவதாக காணப்படுகிறது. அவர்களின் உரிமைகளில் பிரதானமாக அமைவது கல்வி உரிமையாகும்.

அதனை அவர்களுக்கு பெற்றுக் கொடுப்பதற்கும் பாதுகாப்பதற் குமான பல ஏற்பாடுகள் சர்வதேச ரீதியிலும், தேசிய ரீதியிலும் செய்யப்பட்டுள்ளன.

அவற்றினை நோக்கும் போது, 1948ம் ஆண்டின் மனித உரிமைகள் பிரகடனத்தின் 26ம் உறுப்புரிமையானது, ஒவ்வொரு வருக்கும் கல்வி கற்பதற்கான உரிமையுண்டு. குறைந்தது தொடக்க அடிப்படைக் கட்டங்களிலாவது கல்வி இலவசமானதாயிருத்தல் வேண்டும். தொழினுட்பக் கல்வியும், உயர் தொழிற்கல்வியும் பொதுவாகப் பெறப்படத்தக்கதாயிருத்தல் வேண்டும். உயர் கல்வியானது யாவரு க்கும் திறமையின் அடிப்படையில் சமனான முறையில் கிடைக்கக் கூடியதாக இருத்தலும் வேண்டும் என்கிறது. இக்கருத் தையே 1996ம் ஆண்டு அறிமுகமாகி 1976ம் ஆண்டு வர்த்தக, பொருளாதார, சமூக, கலாசார உரிமைகள் மீதான சர்வதேச பொருத்தனையும் வலியுறுத்துகிறது.

1989ம் ஆண்டு சிறுவர்களின் உரிமையை பாதுகாப்பது அவர்களின் உரிமையை வழங்குதல் தொடர்பாக ஐக்கிய நாடுகள் பொதுச் சபையால் சிறுவர் உரிமைகள்


நம்பிக்கை உள்ளவர்கள் யாரும் தோற்றுப் போனது கிடையாது. GTC
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பற்றிய சமவாயம் ஏற்படுத்தப்பட்டது. சிறுவர்களின் உரிமைகளையும் நலன் களையும் பிரதானமாகக் கொண்டு ஏற்படுத்த ப்பட்ட சமவாயத்தில் சிறுவர்களின் கல்வி உரிமைகள் பற்றியதான உறுப்புரை 26ல் கல்வி பயிலும் உரிமை பிள்ளைக்குண்டு என்பதை அரச தரப்பினர் ஒப்புக் கொள்ளல் வேண்டும் இந்த உரிமையை படிப்படியாகவும் சமவாய்ப்பு எனும் அடிப்படையிலும் அனுபவிப்பத ற்கும் வழி செய்யும் பொருட்டு அரச தரப்பினர் பின்வரும் நடவடிக் கைகளை விசேடமாக மேற் கொள்ளல் வேண்டும்.

**(அ)** எல்லோருக்கும் ஆரம்பக்கல்வி கட்டாயமாகவும் இலவசமாகவும் கிடைக்கச் செய்தல்,

**(ஆ)** பொது மற்றும் தொழிற்சார் கல்வி உட்பட வெவ்வேறு தரப்பட்ட இடைநிலை கல்வியை ஊக்குவித்து ஒவ்வொரு பிள்ளைக்கும் அது கிடைக்கச் செய்வதுடன் இலவசக் கல்வி தேவைப்படுவோருக்கு நிதியுதவியளித்தல் போன்ற பொருத்தமான நடவடிக்கை களையும் மேற்கொள்ளுதல்

**(இ)** எல்லோருக்கும் ஆற்றலின் அடிப்படையில் பொருத்தமான வழிமுறையில் உயர் கல்வி கிடைக்கச் செய்தல்

**(ஈ)** எல்லா பிள்ளைகளுக்கும் கல்வி மற்றும் தொழில்சார் தகவல்களும் வழிகாட்டல்களும் கிடைக்கச் செய்தல்

**(உ)** பிள்ளைகள் பள்ளிக் கூடங்களுக்கு கிரமமாகச் செல்வதை ஊக்குவிக்கவும், படிப்பை இடைநிறுத்திக் கொள் வோரின் தொகையை குறைக்கவும், நடவடிக்கை மேற்கொள்ளல் விஞ்ஞானம் மற்றும் தொழிநுட்ப அறிவு, நவீன போதனா முறைகள் முதலியன அனைவரு க்கும் கிடைக்கச் செய்வதற்கு வழி செய்தல் வேண்டும்.

உறுப்புரை 26ல் அரசதரப் பினர் பிள்ளைகளின் கல்வி தொடர்பாக பிள்ளையின் ஆளுமை, திறமைகள் உள மற்றும் உடல் சார்ந்த ஆற்றல்கள் முழுமையாக பரிணமித்ததாக கல்வி அமைதல் வேண்டும் பிள்ளையின் கலாசாரம், மொழி ஆதாரங்களை பாதுகாப் பதாக அமைதல், கல்வியினூடாக புரிந்துணர்வு, சமாதானம், சகிப்புத் தன்மை ஆகியவற்றைப் பாதுகாப்பதாக அமைய வேண்டும். மேற்படி சிறுவர் உரிமை சமவாயத்தை இலங்கை அரசு 1991ம் ஆண்டு ஏற்று அங்கிகரித்து அதன் படி செயற்படுத்துவதாக கையெழுத்திட்டுள்ளது.

இலங்கையில் தேசிய மட்டத்தில் பிள்ளைகளின் கல்விக்காக, இலவசக் கல்வியின் அறிமுகம் தொடர்ந்து அனைத்து அரசாங்கங்களினாலும் நடைமுறைப் படுத்தப்படுகிறது. 14 வயதிற்கு குறைந்த பிள்ளைகளை பாடசாலை க்கு அனுப்புதல் கட்டாயமான தாகும். இது 1997ம் ஆண்டின் 100/35 இலக்கம் கொண்ட அரசாங்க வர்த்தமானி பத்திரிகை யில் வெளியிடப்பட்டது. மற்றும் தாய் மொழியில் கல்வி கற்பத ற்கான உரிமையும் சிறுவர்க ளுக்கு உண்டு. ஆக இலங்கையில் சிறுவர்களின் கல்வியைப் பேணி பாதுகாப் பதற்கான ஏற்பாடுகளும் அதற்கான வாய்ப்புக்களும் வழங்கப்பட்டுள்ளப் போதும் அது போதுமானதாகவும் நடைமுறையில் அதன் செயற்பாடுகள் பற்றியும் கவனிப்பது அவசியமாகும்.

கட்டாயக் கல்வியை இலங்கை அரசு நடைமுறைப்படுத்தி செயற்பட்டு வரும் நிலையில் இலங்கையில் அதிகமான சிறுவர் தொழிலாளர்களாக வேலை செய்கின்றனர். இதற்கான காரணங்களை அறியும் போது இக்கல்வி நிலையானது கிராம மற்றும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருந்தோட்ட பகுதிகளில் ஒரு திட்டமிடலின்றி செயற்படுத்தப்பட்டு வருவதாகும். இப்பகுதி மக்கள் கல்வி நிலையில் பின்தங்கியுள்ள நிலையில் தேசிய ரீதியாக நடைமுறைப்படுத்தப்படும் கல்விக் கொள்கைகள் மூலம் அதாவது ஒரே கல்விக் கொள்கைளை நினைத்துக் கொண்டு நடைமுறைப்படுத்துதல் ஒரு சிறப்பான செயற்பாடாக அமையாது. குறிப்பாக நகர்புறப் பகுதிகளில் கல்வி நிலை உயர்வாகவும் கிராம பெருந்தோட்ட புறங்களில் கல்வி நிலை குறைவாக காணப்படுவதற்கும் தற்போது அறிமுகஞ் செய்யப்பட்டுள்ள 5E முறையானது பெறும் சவாலாக அமைகிறது. இதன் பிரதான விடயமாக அமைவது மாணவர் செயற்பாடாகும். அதன் மூலம் மாணவரின் தேடலுக்கு அதிகம் வாய்ப்பளிக்க வேண்டும். ஆயின் அதற்கான வாய்ப்புகள் அனைத்து மாணவர்களுக்கும் கிடைக்கிறதா என்பது கேள்விக்குரிய விடயம் நகர்ப்புற மாணவர்கள் இணையம், கணனி என தமது சூழலை வளர்த்து கொண்டு வரும் நிலையில் நகர்புறத்தை விட்டு வேறு பகுதிகளில் உள்ள மாணவர்களின் தேடல் புத்தகங்க ளுக்குள் மட்டும் முடிந்து போகிறது. எனவே, அனைத்து மாணவர்களிடமிருந்து ஒரே அளவான ஆளுமை மற்றும் சிந்தனைத் திறனை கல்வி மூலம் வரும் தொழிநுட்பத்தை அனைவருக்கும் வழங்குதல், செயற்திட்டம் மூலம் அனைத்து பாடசாலை மாணவர் களுக்கும் இவ்வாய்ப்பு பெற்றுத்தரப் படவில்லை என்பதும் குறிப்பிட்டாக வேண்டும். இவ்வாறான சூழலில் மாணவர்களின் தேடலுக்கு ஆசிரியர் இடமளிக்கும் போதும் தேடலில் ஈடுபடுவதை அவன் தனக்கான சுமையென கருதும் போது சிறுவர்கள் குறிப்பாக கிராமப்புற, பெருந்தோட்டப்புற மாணவர்களின் பாடங்களின் மீதும் கல்வி அவர்கள் மீதும் இயலாமை நிலையை ஏற்படுத்தி வருகிறது. குறிப்பிட்ட செயற்பாட்டை செய்யமுடியவில்லை என போய்விடுகிறது. எனவே கல்வித் திட்டங்கள், கொள்கைகளை உருவாக்கும் போது அதற்கான வாய்ப்புகளை ஏற்படுத்திவிட்டு அவற்றினை நடைமுறைப் படுத்துதல் சிறப்பானது ஆகும்.

மற்றும் குடும்பத்தின் வறுமை, பொருளாதாரம் தனது வாழ்க்கை க்கு போதுமானதாக அமைய வில்லை எனக்கருதி தனது பிள்ளை களை சிறுவர் தொழிலாளர்களாக இணைக்கின்றனர். இதன் மூலம் தனது ஆரம்ப இடைநிலை கல்வியை கூட நிறைவு செய்யாத சிறுவர்கள் தொழிலாளர்களாக வேலை செய்கின்றனர். இதனை தடுப்பதற்கான வழிகளை சரிவர நடைமுறைப்படுத்தினால் இவ்வா றான சிறுவர் துஷ்பிரயோகத்தை தடுத்து அவர்களு க்கான கல்வியுரிமையை வசதிப்படுத்து வதற்கு முடியுமாக இருக்கும். சிறுவர் துஷ்பிரயோகங்களால் வீடுகளிலும் சமூகத்திலும் சிறுவர்கள் பாலியல், போதைப் பொருள் போன்ற துஷ்பிரயோகங்க ளுக்கு உட்படுவதால் அவர்களின் பாடசாலை வருகை குறைவாக காணப்படுவதுடன் அவர்களின் கல்வி நிலையும் பாதிப்படைகிறது. இலங்கையில் பாலியல் துஷ்பிரயோகம் தொடர்பான தண்டனைகள் வலுப்படுத்தப்பட்ட நிலையில் அவை அனைத்து பிரதேச மக்களுக்கும் விழிப் புணர்வை ஏற்படுத்துவதாக அமையவில்லை. எனவே இவர்களின் கல்வி நிலை குறைவடைந்து கல்வியை முழுமையாக முடிக்க முடியாத நிலை காணப்படுகிறது.

அண்மையில் இலங்கையில் நடந்து முடிந்த யுத்தத்தின் வடுக்களை அதிகம் சுமந்திருப் பவர்கள் சிறுவர்களே. போரில் பங்கு பற்றிய இரு தரப்பினரை விட அதிகம் மரணித்தது பொது மக்களே. அதிலும் அதிகமாக சிறுவர்களே இறந்தனர். மற்றும் பலர் அங்கவீனர்களாக இருக்கின்றனர். இவர்களின் உயிருக்கு உத்தரவாதமளிக்காத நிலையில் கல்வியுரிமைப்பற்றி எதிர்பார்ப்பது தவறு. ஆயின் போரின் முடிவுடன் தொடர்ந்த முகாம் வாழ்வில் பெரியளவான சிறுவர்களின்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வியுரிமை காணாமல் போய் விட்டது. மற்றும் இன்னும் அநேகமான சிறுவர்களின் கல்விக் கான ஏற்பாடுகள் ஏதும் செய்யாத நிலையே காணப் படுகின்றது. மற்றும் சிறுவர்களை ஆயுதப் படையில் இணைத்ததன் மூலம் அவர்களின் கல்வி பெறும் வாய்ப்பு இல்லாமல் போனது. ஆக இதற்கான ஒரு நடவடிக்கையை உறுதிப்படுத்த அரசு தவறிவிட்டது எனக் கருத இடமுண்டு.

ஆக, இலவசக் கல்வி, கட்டாயக் கல்வி அனைவருக்கும் தொழிநுட்பம் மற்றும் சம கல்வி என அரச கொள்கைகளும் அரசின் அறிக்கைகளும் வெளிவந்த போதும் அவற்றின் நடைமுறைத் தன்மையும், அவற்றை நடைமுறைப் படுத்தலில் பல்வேறான இடர்பாடு களையும் தவறுதல் களையும் அரசு எதிர்நோக்குகிறது.

பௌதீக வளப்பகிர்வு அதாவது ஆய்வு கூடம், மைதானம், ஆசிரியர் விடுதி, மாணவர், விடுதி என்பன அனைவருக்கும் சமனான நிலையில் காணப்படவில்லை.

ஆசிரியர் இடப்படு த்துகையில் ஏற்படும் முறையீடுகள் அதாவது பட்டதாரி ஆசிரியர்கள் அனேகமாக நகர்புற பிரபலமான பாடசாலை களிலேயே பணிக்கு அமர்ந்திருப் பதால் நகர்புரத்திற்கு வெளியே யுள்ள பாடசாலை மாணவர்களுக்கு அவர்களின் தேவையை பெற்றுக் கொள்ள முடியாத நிலை காணப்படுகிறது. இது நகர்ப்புற மாணவர் கல்வியில் மட்டும் சாதக நிலையை ஏற்படுத்தும் அனைவருக்கும் சம கல்வி என்ற நிலை ஏற்படாது.

உசாத்துணைகள் :-
மனித உரிமைகள் கோட்பாடுகலும் வியாபாரமும்.

சிறுவர் உரிமைகள் :- இலகுவான முறையில் வழக்கறிஞர் சாறுக்கசமரசேகர்.

## பலமான உபசரிப்பு...!

சாப்பாடு குறைவாக இருக்கும் போது கணவன் ஒரு நண்பருடன் இரவு 10 மணிக்கு வர, மனைவி இருப்பதை கண் எதிரில் டைனிங் டேபிளில் வைக்க, கணவன் விடாமல் ''இன்னும் கொண்டா சோறு'' என்றார். மனைவி டேபிள் அடியில் கணவன் காலை உதைக்க மறுபடி கணவன் ''சீக்கிரம் கொண்டா'' என மனைவி மீண்டும் பலமாக உதைக்க விருந்தாளி ஓடிவிடுகிறார். காரணம் கணவன் காலை உதைப்பதற்குப் பதிலாக விருந்தாளி காலை உதைத்தால்... அவன் ஓட மாட்டானா?







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாரணியம் பற்றி அறிந்து கொள்வோம்



ஷியாமளா பத்மநாதன்

சாரணியம் என்பது கல்வி சார்ந்த ஓர் செயற்பாடாகவும் சாரணர் இயக்கம் என்பது கல்வி சார்ந்த ஓர் அமைப்பாகவும் கருதப்படுகின்றது. இன்று நடைமுறையில் இருக்கும் கல்வித் திட்டத்தில் சாரணியம் முக்கிய இடத்தினைப் பெறுகிறது. அதாவது இன்று நடைமுறையில் இருக்கும் கல்வித் திட்டத்தில் பாடசாலையில் செயற்படுத்தக் கூடிய இணைப் பாடவிதான செயற்பாடாக சாரணியம் முக்கியத்துவம் பெறுகின்றது.

**சாரணியத்தின் முக்கியத்துவம்**

சாரணியம் ஓர் அனுபவக் கற்றலாகும் கல்வித் தத்துவவியலாளர் ஜோன் டூவியின் கருத்துப்படி அனுபவங்களை அனுபவங்களால் அனுபவங்களின் மூலம் பெறப் படுகின்ற கல்வி எனக் கூறலாம் இச்சாரணியத்தில் ஈடுபடுவதன் மூலம் தலைமைத்துவப் பண்பு, ஏற்று நடக்குமியல்பு, சகிப்புத் தன்மை, நெகிழ்வுத் தன்மை விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை, கூட்டுறவு, சமையற்கலை, வாழ்க்கைக்குத் தேவையான அனுபவங்கள், ஆபத்தைத் தவிர்த்துக் கொள்ளும் உபாயங்கள் போன்றவற்றைக் கற்றுக் கொள்வதுடன் தொழில் செய்வோரின் பதவி உயர்வுகளுக்கான ஓர் விஷேட தகைமையாகவும் இதன் சான்றிதழ் கருதப்படுகின்றது.

**சாரணியத்தை உருவாக்கியவர்**

சாரணர் இயக்கத்தை உருவாக்கியவர் இங்கிலாந்தைச் சேர்ந்த (Berdan Bawal) பேர்டன் பவல் எனும் இராணுவ விடுகை வருடம், உடற்கல்வி நெறி அதிகாரியாவார். இவ்வியக்கத்திற்காக இவர் ஓயாது உழைத்ததனால் "துயில் கொள்ளாத ஓநாய்" என வர்ணிக்கப்பட்டார். இவரே சாரணர் இயக்கத்தின் தந்தையாவார்.

இவர் 1857ம் ஆண்டு பெப்பிரவரி மாதம் 22 திகதி இங்கிலாந்தில் லண்டன் நகரில் பிறந்தார். இவரது முழுப்பெயர் ரொபட் கிறிஸ்டி வின்சன்ட் ஸ்மித் பேர்டன் பவல் என்பதாகும். இவரது தந்தை ரொர்ட் கிரேஸ் பேர்டன் பாவல், தாயார் ஹென்றியேட்டா கிரேஸ் ஸ்மித் ஏழு சகோதர்களை உள்ளடக்கிய குடும்பத்தில் இவர் கடைசி பிள்ளையாக காணப்பட்டமையினால் படிப்பில் ஆர்வமற்றவராக இருந்தார். இவர் தனது பத்தொன்பதாவது வயதில் 1876 இல் இராணுவத்தில் (Sub) உதவி லெப்டினனாக இணைந்து கொண்டார். 1883ல் தனது 1887ல் குழு சாதியினருடன் பல யுத்தங்களை நடத்தினார். 1899ல் கேர்னல் பதவிக்கு உயர்த்தப்பட்டார். இதே காலப் பகுதியில் மேற்பின் நகர முற்றுகையை முறியடித்தார்.

1901ல் வெற்றி வீரனாக தாய்நாடு திரும்பினார். 1907ல் இருபது சிறுவர்களுடன் பிரவுன்ஸ் தீவில் இளைஞர் சாரணியத்தை ஆரம்பித்தார். 1908ல் "**இளைஞர் சாரணியம்**" என்ற கைந்நூல் ஒன்றை வெளியிட்டார். 1910ல் இராணுவத்திலிருந்து விலகினார். மீண்டும் 1920ல் உலக பிரதம சாரணராக பேர்டண் பவல் அறிமுகப் படுத்தப்பட்டார்.

1928ல் "**இன்வெஸ்டன்**" எனும் விருதைப் பேர்டண் பவல் பெற்றார். 1937ல் தனது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனைவியுடன் ஆப்பிரிக்காவிற்குப் பயணமானார். 1941ல் ஆப்பிரிக்காவிலுள்ள கென்னியா எனும் நாட்டில் ஜனவரி 8ம் திகதி தமதில்லத்தில் காலமானார்.

**பெண்கள் சாரணியம்**

ஆரம்பகாலம் முதல் " **சாரணர் இயக்கம்** " என பொதுவானதாகவே பெயர் வழங்கப்பட்டு வந்தது. 2009ம் ஆண்டு பெண்கள் சாரணியம் அறிமுகம் செய்யப்பட்டது. பெண்களு க்கான இயக்கம் "**பெண்கள் சார ணியம்**" என அழைக்கப்படுகிறது. (Girls Scout) "பெண் **சாரணி**" எனவும் ஆண் "**சாரணண்**" எனவும் அழைக்கப்படுகிறார்கள்.

**சாரணியச் சின்னம்**

" **Be Prepaired** " என்ற வாசகம் பொறிக்கப்பட்டிருக்கும் இதன் கருத்து எதற்கும் தயாராக இருத்தல் என்பதாகும்.

**சாரணர் வாக்குறுதி**
**ஸ்ரீசத்தியப் பிரமானம்**

என்னால் கூடுமான வரையில் என் சமயத்துக்கும் தேசத்துக்கும் என் கடமைகளைச் செய்வேன் என்றும் எக்காலத்திலும் பிறருக்கு உதவி புரிவேன் என்றும், சாரணர் விதிகளுக்கு பணிந்து நடப்பேன் என்றும் என் கௌரவத்தின் மீது வாக்குறுதியளிக்கின்றேன்.

**சாரணர் விதிகள் 10**

1. சாரணன் நம்பத் தகுந்தவன்.
2. சாரணன் பற்றுறுதி உடையவன்.
3. சாரணன் நேசமும் மரியாதையும் உடையவன்.
4. சாரணன் மற்றெந்த சாரணனுக்கும் சகோதரன்.
5. சாரணன் தைரியமுள்ளவன்.
6. சாரணன் பிராணிகளின் தோழன்.
7. சாரணன் ஒத்துழைப்பவன்.
8. சாரணன் மன மகிழ்ச்சியுடையவன்.
9. சாரணன் சிக்கனமானவன்.
10. சாரணன் சொல், செயல், சிந்தனைகளில், தூய்மை யானவன்.



## மாண்புமிகு மாணவன்...!

'பசு தன் வரலாறு கூறுதல்' பற்றி விழுந்து, விழுந்து படித்தான் மாணவன். ஆனால். பரீட்சையில் பார்த்தால் ''தென்னை மரம் தன் வரலாறு'' பற்றி கேள்வி வந்தது. பயல் ஒரு நிமிடம் விழித்தான். சட்டென்று தலைப்பு மட்டும் எழுதி விட்டு உள் விஷயம் முழுவதும் 'பசு தன் வரலாறு கூறுதல்' எழுதிவிட்டு கடைசி வரியாக இப்படியாக்கப்பட்ட பசு அந்த தென்னை மரத்தில் கட்டப்பட்டி ருந்தது என்று முடித்தான்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலையக நாட்டார் பாடல்களில் தொழிற்பாடல் ஒரு நோக்கு



நடராஜா புவனேஸ்வரன்
விடுகை வருடம், ஆரம்ப நெறி

மக்கள் வாழ்வினை விளக்குவது இலக்கியத்தின் பண்பாகும். அவ்வகையில் மலையக நாட்டார் பாடல்களில் தொழிற்பாடல்களை எடுத்து நோக்குவோமாயின் பிரித்தானிய காலனித்துவ வாதிகள் 1827 ம் ஆண்டில் தமிழகத்திலிருந்து இலங்கைக்கு தென்னாட்டு கூலித் தொழிலாளர்களை ஒப்பந்தத் தொழிலாளர்களாக அழைத்து வந்தனர். இவ்வாறு இம் மக்கள் தமது சொந்த நாட்டிலிருந்து கடல் கடந்து இலங்கைக்கு அழைத்து வரப்பட்ட மைக்கு பிரிட்டிஷ் காலனித்துவ அரசாங்கத்தின் கொடூரமான ஆட்சி, நிலப் பிரபுக்களான ஜமின்தார், மிராசுதார், பண்ணையார், ஆகியோரின் மனிதாபிமானமற்ற ஒடுக்குமுறை, சமூகத்தில் காணப்பட்ட சாதிக் கொடுமை, நிலமற்ற விவசாயிகளும் நிலமுள்ள விவசாயிகளும் வெள்ளைக் காரர்களுக்கு நிலவரி கட்ட முடியாமல் நிலங்களைப் பறிகொடுக்கும் பரிதாபமான நிலைக்கு தள்ளப்பட்டமை போன்ற காரணங்களே முக்கிய மாகின்றன.

எனவே "பஞ்சம் பிழைக்க" வறுமையில் வாடியமக்கள் கடல் கடந்து இலங்கை வந்தார்கள். இவ்வாறு வந்த மக்களின் வாழ்வில் ஒரு நூறு ஆண்டுகள் கொடூரம் நிறைந்த ஆண்டுகளாக இருந்தன. இலங்கைக் காடுகளை அழித்த இம்மக்களின் வாழ்வு கண்ணீர் நிறைந்ததாகவும், துயரம் நிறைந்த தாகவும் இருந்தது எனக் கூறப்படுகிறது.

இவ்வாறு தொழிலின் நிமித்தம் தான் அனுபவித்த துயரங்களை தமது உரிமைகளை சொல்லவும், நேரடியாக சொல்வதற்கு முடியாமலும் தவித்த மக்கள் பச்சையாக எண்ணங்களை எடுத்துரைத்தனர். எழுத, வாசிக்க தெரியாத மக்கள் வாய்மொழியாகவே பாடினார்கள். அதாவது நாட்டார் பாடல் என்பது ஒரு நிகழ்ச்சியின் மீது நாட்டு மக்களின் பிரதிபலிப்பை வெளியிடு வதாகும். எனவே, பாமர மக்களின் உணர்வுகளின் வெளிப்பாடு என்று சொல்லப்படுகின்ற இந்நாட்டார் பாடல்களில் வாழ்க்கையில் நிகழும், பிறப்பு, இறப்பு, மகிழ்ச்சி, துயரம், விளையாட்டு, வறுமை, விரக்தி எழுச்சி, எண்ணங்கள், என்பன பொருளாக அமைந்துள்ளன. இவ்வகையில் மலையக நாட்டார் பாடல்களில் தொழிற்பாடல்களை எடுத்து நோக்குவோமாயின், தாம் அனுபவித்த துன்பங்கள், தமது எண்ணங்கள், உரிமைகள் தொடர்பாக பாடினார்கள்.

**ஆ.....போறாளே.........ஏலேலோ**
**கங்காணிக்கு - ஐலசா**
**தலைகாசு - ஏலேலோ**
**தவறிப்போச்சு - ஐலசா**
**கோபத் தோடே - ஏலேலோ**
**கங்காணியும் - ஐலசா**
**குதிக்கிறானே - ஏலேலோ**
**கூச்சல் போட்டு - ஐலசா**

எனும் பாடலை நோக்கும் போது கூலித்



அன்பு செய்யும் ஆன்மாவை நோக்கி அமரர்கள் நெருங்கி வருகின்றார்கள். GTC

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழிலாளர்களை அழைத்து வருவதற்காக கங்காணிக்கு தரகுபணம் கிடைக்கும் (Pence). அந்தப்பணம் நிர்வாகத்தால் கங்காணிக்கு காலப்போக்கில் கிடைக்காமல் போனதையிட்டு கங்காணி ஆவேஷப்படும் கோலத்தை பெண்கள் நையாண்டி செய்யும் பாடலாக இப்பாடல் அமைகிறது.

**குடிக்கப் பாலும்**
**கொப்பளிக்கப் பன்னீரும்**
**அடுக்கடுக்காய்**
**தருவதாகச் சொன்னானே**
**கங்காணி.........இங்கே**
**குடிக்கக் கூழு**
**"டிங்குன்னு" தே**
**கங்காணி......!**

இப்பாடலில் எப்படியெல்லாம் உரிமைகளும் சலுகைகளும் தருவதாக சொல்லி தம் மக்களை பெரியங் கங்காணி என்பவன் மக்களை ஏமாற்றி கூட்டி வந்ததையும் இங்கு வந்து தாம் படும் அவஸ்தையையும் கூறும் பாடலாக அமைந்துள்ளது. அதாவது பெரியங்கங்காணி இந்தியக் கிராம ங்களில் சக மக்களை உருட்டிப் புரட்டி சண்டித்தனம் புரியும் சுபாவங்களைக் கொண்டவர் களையே பிரிட்டிஸ்காரர்கள் அறிந்து தங்களது ஏவலாளிகளாக அமர்த்தி கொண்டனர். இப் பெரியங்கங்காணிமார்களே தம் மக்களின் உழைப்பை சுரண்டி பிரிட்டிஸ்காரர்களிடம் தஞ்சம் புகுந்தவர்களாவர்.

**கோப்பி பழுத்திருச்சு**
**கொண்டு போக நாளாச்சு**
**சீமை தொரைகளெல்லாம்**
**சிரிக்கறாக சன்னலிலே**

**பழமிருக்கு சாக்கிலே தான்**
**பாத்துக்கடி பத்தரமா**
**பாசுமாங் கோப்பியிலே**
**பழமெடுக்க நேரமாச்சு !**

என்ற பாடலை நோக்குமிடத்து கோப்பிச் செய்கையில் துரைமார் களுக்கு கிடைத்த வருமானமும் அவர்கள் பட்ட சந்தோசமும், பறித்த கோப்பி மூட்டைகளுக்கு காவலாக மக்களை நிறுத்தியதையும், அவர்கள் ஓய்வில்லாமல் வேலை செய்ததையும் கூறும் பாடலாக இப்பாடல் அமைந்திருப்பதைக் காணலாம். அதே போன்று.

**காலையில் நெரபுடிச்சி**
**காட்டு தொங்க போய் முடிஞ்சி**
**கூட நெறையிலியே............இந்த**
**கூனப் பய தோட்டத்திலே**

**கூட நெறயவில்லை........**
**கொழுந்தெடுக்க சிந்தையில்ல.....**
**கங்காணி சொன்ன சொல்லு.........**
**கண்ணீரை கொட்டுதடி.........**

இப்பாடலை நோக்குகையில் வரட்சியான காலப்பகுதியில் தேயிலை இலைகள் கொட்டிப் போய்விடும்; கொழுந்தும் தேயிலை செடிகளில் காணப்படாது. ஆனால் விடியற் காலையில் தனக்கு ஒப்படைக்கப்பட்ட கொழுந்தெடுக்கும் பகுதி(நெறை) காட்டு தொங்கள் வரை சென்றும் "ஒரு கூடை கொழுந்தெடுக்க முடிய வில்லை. அவ்வளவு வரட்சி தேயிலையில் மட்டுமல்ல..........மக்கள் வாழ்விலும்" என்ற தத்துவத்தையும், தான் அனுபவிக்கும் உடல் கஷ்டம் மட்டுமல்லாமல் கங்காணியின் கொடுமையான வார்த்தைகளால் தான் படும் துயரத்தையும் தமக்கேயுரிய மண்வாசனை மொழியில் எதுகை, மோனையுடன் பாடியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

**தண்ணி கருத்திருச்சி**
**தவளைச் சத்தம்கேட்டிருச்சி**
**புள்ள அழுதிருச்சி**
**புண்ணியரே வேல விடு**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீரான சீமை விட்டு
சீரடியக் காடு வந்தோம்
கூடை தலை மேலே
குடிவாழ்க்கை கானகத்தில்....

இப்பாடலை நோக்குகையில் விடியற்காலையில் வேலைக்கு சென்ற மக்கள், ஆறுமணியாகியும் வேலை விடாமையை எண்ணி தமது முன்னைய குடும்ப வாழ்க்கையை சீரான சீமை (தமிழகம்) எண்ணி வருத்தப்படுவதையும் தற்போது தமது வாழ்வே இத்தேயிலை காட்டில் கழிந்து கொண்டிருக்கும் நிலையை கூறுவதாக உள்ளதை அறிந்துக் கொள்ளலாம்.

கல்லாறு தோட்டத்திலே
கண்டக்கையா பொலலாதவன்
மொட்ட புடுங்குதுன்னு
மூனாளு வெரட்டி விட்டான்.

ஓடி ஓடி கொழுந்தெடுத்தேன்
ஒரு கூட கொழுந்தெடுத்தேன்
பாவி கணக்கபுள்ள
பத்து றாத்த சொல்லுறானே

அதாவது கண்டாக்கையா என்பவரே தேயிலை தோட்டத்தில் வேலை செய்யும் தொழிலாளர்களின் வேலைநாள் சம்பளத்தை அளவீடுபவராகவும் தாம் தினம் பறிக்கும் கொழுந்தின் நிறையை அளந்து கூறுபவராகவும் காணப் படுவார். இவ்வாறான கண்டாக்கையா தமது சுய இலாபத்திற்காக மக்களது உழைப்பை சுரண்டியதை கூறும் பாடலாகவும் தமது மக்களுக்கு செய்த கொடுமைகளை வஞ்சிப்பதாகவும் இப்பாடல் அமைகிறதை காணலாம். மேலும்,

அடி அளந்து வீடு கட்ட - நம்ம
ஆண்ட மனை அங்கிருக்க
பஞ்சம் பொழைப்பதற்கு
பாற்கடலைத் தாண்டி வந்தோம்
பஞ்சம் பொழைக்கலையே.... நாம
பட்டணம் போய்ச் சேரலையே !!

இப்பாடலை நோக்குகையில் தமது வாழ்வில் பஞ்சம் காரணமாக ஒரு புதிய இடத்திற்கு வந்து............தாம் படும் வேதனைகளை எண்ணி பாடுவதாகவும் தன்னையே தம் பாடலின் மூலம் ஆறுதல் படுத்தி கொள்வதாகவும் அமைந்துள்ளதை அவதானிக்கலாம். சொந்த நிலங்களும், சொந்த வீடும் கொண்டு இன்பமாக வாழ்க்கை நடத்திய மக்களின் வாழ்வில் இயற்கையின் தோற்றத்தின் காரணமாக ஏற்பட்ட பஞ்சம் தமது தலைவிதியை மாற்றிவிட்ட கொடுமை கூறப்படுகிறது.

கூனி அடிச்ச மலை
கோப்பிக் கண்ணு நட்ட மலை
அண்ணனை தோத்த மலை
அந்தோ தெரியுதடி

அதாவது பெரிய மலைப் பகுதிகளிலும் சரிவான காட்டு பகுதிகளிலும் வேலை செய்பவர்பகள், சில சந்தர்ப்பத்தில் மரம் விழுதல் ஆபத்துக்களில் மாட்டிக்கொண்டு மடிந்தவர்கள் ஏராளம் அவ்வாறு மடிந்தவர்களில் தனது அண்ணனை இழந்த தங்கையால் பாடிய பாட்டு இதுவாயிருக்க

கோண கோண மலையேறி
கோப்பி பழம் பறிக்கையிலே
ஒரு பழம் தப்பிச்சின்னு
ஒதைச்சானாம் சின்ன தொரை

அடியும் பட்டோம்
பிடியும் பட்டோம்
அவமானச் சொல்லும் கேட்டோம்
முழி மிரட்டி கங்காணியின்
மூங்கியால் தாக்கப்பட்டோம்

கம்பளி எட்டு றாத்த
கனத்தக் கூட பத்து றாத்த
இத்தனையும் தூக்கிக் கிட்டு
ஏறனுமே மேட்டு மல







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்ணி எண்ணி குழி வெட்டி
இடுப்பொடிஞ்சி நிக்கையிலே
வெட்டு வெட்டு என்கிறானே
வேலையத்த கங்காணி

பாதையிலே வீடிருக்க
பழனிச் சம்பா சோறிருக்க
எரும தயிரிருக்க
ஏண்டி வந்தே கண்டிச் சீமை

ஊரான ஊர் இழந்தேன
ஒத்தப்பனை தோப்பழந்தேன்
பேரான கண்டியிலே
பெத்தத் தாயை நான் மறந்தேன்


மேலே கூறப்பட்ட ஒவ்வொரு பாடல்களின் உட்கருத்தை நோக்கும் போது மலையக நாட்டார் பாடல்களில் தொழிற்பாடல்களில் அம்மக்கள் அனுபவித்த வேதனைகள் எங்கள் மனக்கண் முன்னே தோன்றுவதை நோக்கலாம். மேலும் தாம் சீமையில் வாழ்ந்த வாழ்க்கையும் இங்கு வந்து பட்ட துன்பங்களையும் ஒப்பிட்டு பாடிய பாங்கு என்பன வியக்கவைக்கின்றன.

உணர்ச்சியின் உறுத்தலாளும் ஒரு நடைமுறை சம்பவம் தோற்றுவிக்கும் எண்ணங்களாலும் ஏற்படும் வெளிப்பாடே பாமர மக்களின் இலக்கியமாகும். எனவே நடைமுறை சம்பவங்களின் தாக்கத்தால் எழுகின்ற உணர்ச்சிகளும், ஆவேசங்களும், சிந்தனைகளும் பாடல் உருவத்தில் சிருஷ்டிக்கப்பட்டுள்ளன. எனவே மலைநாட்டார் பாடல்களில் தொழிற்பாடல்களை எடுத்து நோக்குவோமாயின் அவர்கள் தமிழகத்திலிருந்து கூலிகளாக கொண்டுவரப் பட்டது முதல் அவர்கள் அனுபவித்த வேதனைகள், துன்பங்கள், துயரங்கள், எதிர்ப்பார்ப்புக்கள், ஏமாற்றங்கள் என்பவற்றோடு நிலவுடைமையாளர்களின் ஆதிக்க மனப்போக்கு, முறைகேடான நிர்வாகம், அடிவருடிகளின் சுயநல இலாபந்தேடல் என்பனவே பாடுபொருள்களாகக் காணப் படுகின்றன. இப்பாடல்கள், பாமரத்த தனமாகவும் கொச்சை மொழியாகவும் காணப்பட்ட போதும் முதலாளி வர்க்கத்துக்கு எதிராக இருநூறு ஆண்டுகளாக அவர்கள் போராடி வந்ததை இப்பாடல்களினூடாக நாம் காணக்கூடியதாக வுள்ளது. இவை குறித்து மேலும் ஆராயப்பட வேண்டியது காலத்தின் தேவையாகும்.

உசாத்துணை நூல் :-
மு. சிவலிங்கம்
மலையக நாட்டார் பாடல்கள்.

## எறும்பு வம்பு...?

ஒரு புற்றிலிருந்து சில எறும்புகள் வரிசையாக வெளிவந்தன. முதல் எறும்பிடம் உன் பினன்னால் எத்தனை எறும்பு என்றதற்கு 3 என்றது. அடுத்தடுத்து வந்த இரண்டு எறும்பும் 2, 1 என்றது. நான்காவது எறும்பிடம் கேட்டதற்கு அது மீண்டும் 1 என்றது. ஆனால் அதன் பின்னால் எறும்பு ஏதும் வரவில்லை. ஏன்..?
ஏனெனில். எறும்பு சொன்னது பொய்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கற்பதற்கான நுணுக்கங்கள்...

எம்.பி.எம். சப்ஹான்
விடுகை வருடம், அரபு நெறி

முதலாவது எதற்காக கல்வி கற்பதென்பதை தீர்மானிக்க வேண்டும்.

கல்வியின் முக்கியத்துவத்தை பிரித்தறிய வேண்டும்.

படிப்பதற்காக பொறுத்தமான இடத்தை தெரிவுசெய்தல்.

உங்கள் உடல் நலத்தை பாதுகாத்தல்.

ஒரே நேர அட்டவணை அமைத்து அதன்படி செயற்படுதல்.

பாடங்களின் அடிப்படையை நினைவில் வைத்துக் கொள்ளல்.

திறமையாகவும் உற்சாகமாகவும் கல்வி கற்றல்.

ஒவ்வொரு பாடங்களிலிருந்தும் சிறுகுறிப்பெடுத்துக் கொள்ளல்.

ஒவ்வொரு பாடத்தையும் சுருக்கமாகவும் அழகாகவும் பதிவு செய்தல்.

உங்களுக்கு பாடம் கற்பிக்கப்பட்டாலும் அடுத்தவர்களுடைய விரிவுரையை நாடல்.

நீங்கள் படித்த பாடங்களில் இருந்து கேள்வி எழுப்பி அதற்கு நீங்களே பதில் அளித்தல்.

புத்தகங்களில் உள்ள உதாரணங்களுக்கு முழுக் கவனத்தை செலுத்துதல்.

வீட்டு வேலைகளை நேரத்திற்கு முடித்தல்.

தொடர்ச்சியாக படிக்காமல் படிக்கும் நேரத்தை சிறு சிறு பகுதிகளாக பிரித்துக்கொள்ளல்.

பாடங்களை முழுமையாக படித்துவிட்டு அப்போதே சந்தேகங்களை தீர்த்துக்கொள்ளல்.

முழுமையாக படித்தல்.

நீங்கள் படித்த பாடங்களை திரும்பப் படிப்பது சிறந்தது.

உங்கள் குறிப்பையும் ஆசிரியர் குறிப்பையும் ஒப்பிட்டு பார்த்தல்.

பாடத்தில் உள்ள பயத்தை நீக்கி விட்டு படித்தல்.

நீங்கள் படிக்கும் பாடம் எதிர் காலத்தில் பலனாக இருக்குமா என்று உறுதிசெய்தல்.



நம்பிக்கையும் லட்சியமும் இல்லாத சமுதாயம் நீடித்து வாழாது.

GTC

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூழலின் முக்கியத்துவம்



பீ.ரி. பரீட்டீன்
விடுகை வருடம், இஸ்லாம் நெறி

சூழல் என்பது மனிதன் உட்பட புவியில் உள்ள உயிருள்ள, உயிரற்ற அனைத்தையும் உள்ளடக்கியதே ஆகும். சூழலை நோக்குவோமானால் நன்மை, தீமை என்பவற்றைக் குறிப்பிடலாம்.

அந்த வகையில் நோக்கினால் சூழலால் மனிதனுக்குப் பல்வேறு வகையில் நன்மை கிடைக்கிறது. இயற்கைக் காடுகளை நோக்கின் பிரேசில், அமேசன் காடுகள், ஆபிரிக் காவில் கொங்கோங் காடுகள் என்பவற்றைக் குறிப்பிடலாம். இக்காடுகள் பல்வேறு நோய்களுக் குமான மருந்துத் தாவரங்களையும், பல்வேறு வகையான உயிரினங் களையும் கொண்டுள்ளன. சேனைப் பயிர்ச் செய்கையில் கூடுதலாக இலங்கை போன்ற நாடுகள் ஈடுபட்டு வருகின்றன. காட்டுத் தொழில், மரத்தூள் உற்பத்தி பின்லாந்து போன்ற நாடுகளில் கூடுதலாக இடம் பெறுகின்றன.

மேலும் காட்டு வளம் மட்டுமன்றி கடல் வளமும் முக்கியத்துவம் பெறுவது குறிப்பிடத் தக்கது. ஆழ்கடல் மீன்பிடித் தொழில், முருகைக் கல் அகழ்வு, முத்துக் குளித்தல், அலங்கார மீன் வளர்ப்பு என்பன கடல் வளத்தால் நாம் பெறும் பயன்களாகும். மேலும் மீன்பிடித் தொழிலும் முக்கியம் பெறுகிறது. அத்துடன் உப்பு எடுத்தல் தொழிலும் முக்கியமானதாகும். மேலும் ஏற்றுமதி, இறக்குமதிகளை இலகுவாக்கக் கடல் போக்குவரத்து இன்றியமையாத ஒன்றாகும்.

சூழலில் நன்மையான விடயங் களைப் போன்று, தீமையான விடயங்களும் உள்ளன. அவற்றைப் பின்வருமாறு நோக்கலாம். அதாவது மனிதனின் செயல்பாடுகள் மூலம், உயரிய தொழிநுட்பம் மூலம் கனரக வாகனம், றொக்கட் விமானங்கள் போன்றவற்றின் உற்பத்தி சூழலைப் பெரிதும் பாதிக்கின்றன. அதாவது விமானங்கள் ஓசோன் படையை ஒட்டிப் பறப்பதனால் ஓசோன் படையில் சிதைவை ஏற்படுத்தி யுள்ளதாக பல்வேறு தகவல்கள் கிடைத்துள்ளன.

மேலும் வாகனங்களின் சத்தமும் சூழலில் பாதிப்பை ஏற்படுத்துகின்றது. அதுமட்டு மன்றி குளிரூட்டி, குளிர்சாதனப் பெட்டி, ஸ்பிரே போன்ற தயாரிப்புக்கு குளோரோ புளோரோ காபன் உற்பத்தி வெளியேற்றம் காரணமாக ஓசோன் சிதைவடைந்து விடுவதாக புவி ஆராய்ச்சியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

காடுகளை அழித்து சேனைப் பயிர்ச் செய்கை மேற்கொள்ளும் போது காட்டின் வளம் குறைக்கப்படுகிறது. மீதியான பகுதியை எரிப்பதன் மூலம் சூழற் பாதிப்பு ஏற்படுகிறது. மேலும் காடுகளை





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழித்து பாதைகள் அமைக்கப்படுதல், புகையிரதப் பாதைகள் அமைக்கப்படுதல் போன்ற காரணங்களினால் மழை குறைதல். வெப்பம் உயர்வடைதல் போன்ற பாதிப்புக்கள் ஏற்படுகின்றன. வெப்ப உயர்வின் காரணமாக பிரதேசத்தில் உள்ள பனிப் படலங்கள் உருகி கடல் மட்டத்தில் சேர்ந்து கடல் நீர் மட்டம் உயர்வடைந்து கடலை அண்மித்த பகுதி கடலுக்கு இரையாதல் போன்ற நிகழ்வுகள் ஏற்படுகின்றன.

உ-ம் மாலை தீவை அண்மித்த தீவுகள் கடலில் அமிழ்ந்தமை.

கடலில் முருகைக்கல் அகழ்ந்து எடுக்கப்படுவதனால் கரையோர கடல் அரிப்பு மூலம் கரையோரம் அரிக்கப் படுகிறது. நிலப்பகுதி குறைக்கப்படுகிறது. மீன் இனங்கள் வளர்வதற்கான பிராக்டன் தாவரம் வளர்வது குறைக்கப்படுவதும். மீன்பிடித் தொழில் பாதிப்பை எதிர் நோக்கும் என்பது குறிபிடத்தக்க விடயமாகும்.

இவற்றைத் தீர்க்க வேண்டுமாயின் பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். இவ்வகையில் ஓசோன் படையை ஒட்டிப் பறக்கும் விமானங்களை சூரிய கதிர்களிலும், காபனின் தாக்கம் குறைவாக உள்ளதாக பயன்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். வாகனங்களின் சத்தத்தைக் குறைப்பதற்கு தொழிநுட்பங்களைப் பயன்படுத்தி சத்தம் குறைக்கும் கருவிகளைப் பொருத்துதல் வேண்டும். காபனை வெளியேற்றும் வாகனங் களைக் குறைத்து மின்சக்தி, காந்த சக்தி, சூரிய சக்தி போன்றவற்றைப் பயன்படுத்தி புகை வெளியேற்றும் வாகனங்களைக் குறைப்பதன் மூலம் சூழலைப் பாதுகாக்கலாம். அது மட்டுமல்லாது குளிரூட்டி, ஸ்பிரே போன்றவற்றின் உற்பத்திக்கு CFC அதிகமாகத் தேவைப்படுகின்றது. அவற்றுக்குப் பதிலாக வேற்றுப் பொருள் பயன்படுத்தப்படலாம். CFC ற்குப் பதிலாக HFC, HCFC போன்றவற்றைப் பயன்படுத்துவதால் சூழலில் ஏற்படும் தாக்கத்தை சிறிதளவு குறைக்கலாம்.

காடுகளை சேனைப் பயிர்ச் செய்கைக்காக அழிக்கும் அதேவேளை வேறொரு பகுதியில் புதிய காடுகளை உருவாக்கலாம். இதன் மூலம் காடுகள் குறைக்கப்படமாட்டாது. மேலும் வீதிகளில் அபிவிருத்திக்கு நிலத்தின் பகுதி எடுக்கப்படும் போது காடுகள் அழிக்கப்படுகின்றன. தரிசு நிலங்களில் புதிய காட்டாக்கம் ஏற்படுத்துவதன் மூலம் வெப்பம் உயர்வடைவதைக் குறைக்கலாம். கடல் பனி உருகு வதைக் குறைத்து கடல் உயர்வைத் தடுக்கலாம். நிலப் பகுதியைப் பாதுகாக்கலாம்.

கரையோரம் ஆழமாக்கப்படுதல், கரையோரம் அதிகரித்து நிலம் இழக்கப்படல் போன்றவற்றைத் தடுப்பதற்கு முருகைக் கல் அகழ்ந்த பிரதேசத்தில் பாறைத் துண்டுகள், தடுப்பு சுவர் அமைப்பதன் மூலம் கரையோரம் பாதுகாக்கப்படுகிறது.

இவற்றைப் பாதுகாப்பதன் மூலம் மனிதன் தனது தேவைகளை நிவர்த்தி செய்து கொள்ள முடியும். இயற்கை வளம் பாதுகாக்கப் படுவதனால் எதிர் காலத்தில் புதிய சந்ததிகளுக்கு தேவைக்கேற்ப குறைக்கப்படாமல் பாதுகாத்து வழங்க முடியும். இதனைப் பாதுகாப்பதால் நோய் ஏற்படுவது குறைக்கப்படும். காட்டுவளம் குறையாமல் பாதுகாக்கலாம். நிலம் குறைக்கப் படாமல் பாதுகாக்கப்படும். நீர்மட்ட உயர்வு தடுக்கப்படும். எமது தேவைக்கு பயன்படுத்திவிட்டுச் சென்றால் இனிவரும் காலங்களில் புதிய





Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

சந்ததியினருக்கு ஒன்றுமே இல்லாமல் போய்விடும். இதனால் மீதியாவது நோயும், வளமற்ற சூழலும்தான்.

சூழல் பாதுகாப்புப் பற்றி நிலையான அபிவிருத்தி, எமது பொதுவான எதிர்காலம் என்று சூழலைப் பாதுகாக்க புருன்லேண்ட் ஆணைக்குழு பாதுகாத்து வந்தது. மேலும் அரச நிறுவனங்கள், அரசற்ற நிறுவனங்கள் பெரும் பங்களிப்புச் செய்கின்றன. அதுமட்டுமன்றி சியாட்டல் என்பவர் சூழலிலுள்ள ஒவ்வொன்றையும் தனது உறவினர்களாக குறிப்பிட்டு அவருடைய வாசகத்தில் கூறியது குறிப்பிடத்தக்கது.

எனவே, சூழலின் முக்கியத் துவம் இவற்றிலிருந்து புரிந்து கொள்ளக் கூடிய வகையில் காணப்படுகிறது. அதனை பயன் படுத்தும் விதம், பாதுகாக்கும் விதம் எதிர் காலத்திற்கு தேவைக் கேற்ப உருவாக்குதல் போன்றன புரிந்து கொள்ளக்கூடிய வகையில் அமைந்துள்ளது. எனவே சூழலை பேணிப் பாதுகாப்பது ஒவ்வொரு மனிதனின் இன்றியமையாத ஒன்றாகக் காணப்படுகிறது.

"சூழலின் முக்கியம் அறிந்து பாதுகாப்போம்"




## MY DEAR TEACHER

This is the day
For teachers day
We came from village
For gaining knowledge

Your gave me the pledge
And gave me the prestige
There is no equality
In front of your ability

You kept the breath
to cool my porridge
Strength is knowledge
Profound is our life

You offer your knowledge
To blossom me in the world

*Rajendra R. Sellammah*
*2nd Year English.*





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வகுப்பில் மெல்லக் கற்கும் மாணவர்கள் உருவாவதற்கான காரணங்கள்



எம். ஏ. எம். எம். அஸ்மீர்
விடுகை வருடம், ஆரம்ப நெறி

அதிவேக கால ஓட்டத்தின் நெருக்குதலுக்குள்ளும் இன்றைய பல் சமூக கட்டமைப்புக்கு மத்தியிலும் பாடசாலை என்ற கல்வி சார் நிறுவனத்தின் வகிபங்கு மிக்க சவால் நிறைந்ததும் எதிர்பார்க்கும் அளவினும் அதிகமான எதிர்பார்ப்புக்களை உடையதாவும் விளங்குகிறது. ஆரம்ப காலங்களில் போலன்றி ஓர் ஆசிரியர் வெறுமனே கற்பித்தலோடு மட்டும் நின்றுவிடாது அதற்குமப்பால் தன் நடிபங்கை பல்வேறு கோணங்களிலும் விருத்தி செய்து கொள்ள வேண்டியது அவசியமாகிறது. இன்றைய குடும்ப அமைப்புக்கள் நாளுக்கு நாள் பல்வேறு மட்டங்களிலும் மாற்றமடைந்து வருவதாலும் சமூக,பொருளாதார, கலாசார மாற்றங்கள் அபரிமிதமாக ஏற்படுவதாலும் அம்மாற்றங்களுக் கேற்ப மாணவர்கள் தம்மை இயைபுபடுத்திக் கொள்ள முடியாமல் தடுமாறுகின்றனர். அவ்வகையில் ஒவ்வொரு மாணவனையும் தனிப்பட்ட ரீதியில் அவனது பின்னணியை இனங்காண முற்படுகின்ற பொழுது அவனில் தாக்கத்தை ஏற்படுத்துகின்ற பல்வேறு காரணிகள் அவனை மீத்திறன் உடைய மாணவனாகவோ சராசரியாகக்கற்கும் மாணவனாகவோ மெல்லக் கற்கும் மாணவனாகவோ உருவாக்கம் பெறச்செய்கின்றன. இதற்குள் மெல்லக் கற்கும் மாணவர் என்போர் தனது வயதிற்குரிய வகுப்பு நியமத்திலும் தாழ்வான வகுப்பில் காணப்படும் பிரிவினராவர். இத்தகு மெல்லக் கற்கும் மாணவர் உருவாவதற்கான காரணங்களை ஆராய்வது இக்கட்டுரையின் பிரதானமான நோக்கமாகிறது.

மெல்லக் கற்கும் மாணவர்கள் உருவாவதற்கான காரணங்களை ஆராய்கின்ற போது கீழ்வரும் காரணிகள் குறிப்பிடத்தக்கவையாக அமைகின்றன.

1. குடும்பப் பின்னனி தொடர்பான காரணிகள்.
2. சமூகச் சூழல் தொடர்பான காரணிகள்.
3. தனியாள் தொடர்பான காரணிகள்.
4. பாடசாலை தொடர்பான காரணிகள்.
5. நாட்டுப் பிரச்சனை தொடர்பான காரணிகள்.

மேற்கூறிய காரணிகளில் குடும்பப் பின்னணியே ஒரு மாணவனில் மிகப்பெரிய தாக்கத்தை ஏற்படுத்தும் காரணியாகும். இதற்கான காரண ங்களாவன.

1. பெற்றோரின் கல்வி பற்றிய அறியாமையும், கல்வித் தரக் குறையும்.
2. தவறானதும் முறையற்றதுமான உறவுகளால் மாணவர் மனவெழுச்சித் தாக்கங்களுக்கு உள்ளாதல்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. பெற்றோர் பிள்ளையின் கல்வியில் அக்கறை கொள்ளாமையும், அப்பிள்ளையின் கல்வி விருத்திக்கு எதிரான மனப்பாங்கும்.
4. பெற்றோர் பிள்ளையை விட்டு தூர இடங்களுக்கு வேலைக்குச் செல்லுதலும் பிள்ளை நீண்ட காலமாய் தனிமைப்படுதலும்.
5. பெற்றோரின் வருவாய் பிள்ளையின் கல்விச் செயற்பாட்டிற்கு போதாமலிருத்தல்.
6. சிறுவயதிலேயே பெற்றோரை இழத்தலும் பாதுகாவலரின் துர்நடத்தையும்.

மேற்கூறப்பட்ட காரணிகள் ஒரு மாணவன் கல்வியில் பின்னடைவதற்கு தூண்டு கோலாய் விளங்குகின்றது. இதன் மூலம் பெற்றோரின் வழிகாட்டலின்மையும் மாணவனின் கற்றல் நடவடிக்கைக்கான சூழலின் மையும் ஒரு மாணவனை பெரிதும் பாதிக்குமென்பதை தாம் தெளிவாக காணக்கூடியதாக இருக்கும்.

அது போலவே நாம் இரண்டாவது காரணியான சமூகச் சூழல் தொடர்பான காரணிகளை ஆராய்கின்ற போது அவற்றுள் முக்கியமானவையாக கீழ்வருவன அமைகின்றன.

1. சமூகக் கட்டமைப்பு.
2. போட்டியும் பொறாமையும் நிறைந்த சமூகத்தின் நேரடியான தாக்கம்.
3. பிரதேசத்தின் கல்விசார் பின்னடைவு.
4. சமூகச் சக்திகளின் பிழையான வழிகாட்டல்.
5. சமூகத்தில் மாணவனின் பொற்றோர் வகிக்கும் பங்கு.

இன,மத ரீதியாகவும் ஜாதி ரீதியாகவும் பிளவுபட்டிருக்கும் சில முரண்பட்ட பிரதேசங்களில் வாழும் பிள்ளைகள் அவற்றின் மறைமுகமான தாக்க ங்களாலும் பின்னடைவை எதிர் கொள்கின்றனர்.

இது தொடர்பாக மேலும் ஆராய்கின்ற பொழுது தனியாள் தொடர்பான காரணியும் முக்கிய பங்கு வகிப்பதை நாம் அவதா்னிக்கலாம்.இது மாண வனின் உள, உடல் ரீதியான பாதிப்பையும் தாக்கங்களையும் முன்னிறுத்திக் குறிப்பிடுவதாகும். அதாவது,

1. போதுமான நுண்மதி ஈவு இல்லாமை.
2. உடல், உள ரீதியான குறை பாடுகள்.
3. போஷாக்குக் குறைபாடு.
4. மனவெழுச்சிக் குறைபாடு.
5. கற்றலை மனமுதிர்ச்சிக்கு முன்பே ஆரம்பித்தல்.

சோர்வு, நம்பிக்கையின்மை, தளரந்திருத்தல், உற்சாகமின்மை முதலிய மனக்கோல உள ஒழுங்குக் குலைவும் மாணவனை பாதிப்பதில் காரணியாக அமைகின்றது.

அடுத்ததாக ஒரு மாணவனின் பல்வேறு கோணங்களிலும் செல் வாக்கு செலுத்தி வரும் பாடசாலை யை நாம் அவதானிக்கலாம் இதற்குள் மாணவனின் அவதானிப்புகளுக் கேற்றவாறான பாடசாலைச் சமூகம், வகுப்பறைச் சூழல், கற்பிக்கும் ஆசிரியர் ஆகியோர் மிக முக்கியமான பங்களிப்பை செய்கின்றனர். அதற்கு மேலும் தாக்கத்தை செலுத்துகின்ற பாடசாலைக்குரிய காரணங்கள் வருமாறு

1. ஆசிரியர்,மாணவர் தொடர்புகளில் முரண்பாடுகள்
2. பொருத்தமற்ற பாடசாலை பாடவிதானம்.





GTC நல்ல எண்ணங்களை நினைப்பதும், பிறருக்குக் கொடுப்பதும் வெற்றிக்கு வழி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. பிழையான கற்பித்தல் முறை. (தனியாள் வேறுபாடுபடுகளைக் கருத்திற் கொள்ளாமல் ஆசிரியர் கற்பித்தல்)
4. அளவுக்கதிகமான கற்பித்தல் சுமை.
5. கற்றலில் ஆர்வமற்ற சக பாடிகளின் குழு அங்கத்துவம்.
6. தடையற்ற வகுப்பேற்றம்.
7. அடிக்கடி பாடசாலையை மாற்றுதல்.

மேற்கூறிய அனைத்து விடயங் களையும் நாம் ஒருங்கு சேர்த்து நோக்குகிற போது குறிப்பிட்டதொரு வகுப்பறையில் பல்வேறு இடர் பாடுகளைக் கொண்ட மாணவர்கள் இருப்பதை நாம் உணரலாம். இவற்றுள் மெல்லக் கற்கும் மாணவர்களே அதிகளவில் காணப்படுவதும் குறிப்பிடத்தக்கது. இவர்கள் குடும்பப் பின்னணி, சமூகச்சூழல், தனியாள் பிரச்சனைகள் பாடசாலை தொடர்பான பிரச்சனைகள், நாட்டுப்பிரச்சனை தொடர்பான இடர்பாடுகள் முதலிய காரணிகளினாலேயே பெரிதும் பாதிக்கப்படுகின்றனர். ஆகவே இடர்பாடுகளைக்கொண்ட மாணவர் களை அவதானிப்பதன் மூலம் அவர்களுக்கான கற்பித்தல் நுணுக்கங்களையும் நாம் மேற்கொள்ள முடியும்.



## மூன்று எறும்புகள்

வெயிலில் படுத்திருக்கும் ஒரு மனிதன் மூக்கு நுனியில் மூன்று எறும்புகள் சந்தித்தன.

அதனதன் மரபுக்கேற்ப ஒன்றுக்கொன்று அந்த எறும்புகள் வணக்கம் தெரிவித்துக் கொண்டன.

அங்கேயே நின்று பேசிக் கொண்டிருந்தன.

முதல் எறும்பு சொன்னது:

"இந்த மலைகளும் சமவெளிகளும் எனக்குத் தெரிந்த வரை மிக மிகத் தரிசாக இருக்கின்றன. நாள் முழுவதும் நான் தேடியும் எந்த வகையான தானியமும் கிடைக்கவில்லை.

இரண்டாவது எறும்பு சொன்னது:

" நானும் எல்லா மூலை முடுக்கிலும் ஓரத்திலும் பார்த்து விட்டேன். எனக்கும் ஒன்றும் கிடைக்கவில்லை! என் மரபு எறும்புகள் சொல்வது போல எதுவும் வளராத மென்மையான நகர்கின்ற நிலம் இது என்று நான் நம்புகிறேன்!

பிறகு மூன்றாவது எறும்பு தன் தலையைத் தூக்கிச் சொன்னது:

" நண்பர்களே! மிகப் பெருந் தலைவனான எறும்பின் மூக்கின் மேல் நாம் நின்று கொண்டிருக்கிறோம். மிக வலுவான, முடிவுற்ற எறும்பு! அதன் உடல் நாம் காண முடியா ஒன்று, அதன் நிழல் நாம் தேட முடியா ஒன்று, அதன் குரல் உரத்து இருப்பினும் நாம் கேட்க முடியா ஒன்று, அவன் எங்குமிருப்பவன்!"

இவ்வாறாக அந்த மூன்றாம் எறும்பு பேசியதும், மற்ற இரு எறும்புகள் ஒன்றையொன்று பார்த்துச் சிரித்துக் கொண்டன.

அந்த நேரத்தில், மனிதன் நகர்ந்து புரண்டு படுத்தபடி, தூக்கத்தில் தன் கைகளைத் தூக்கி மூக்கைச் சொறிந்து கொள்ள, மூன்று எறும்புகளும் நசுங்கிப் போயின.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பேனாவின் மகத்துவம் பேணப்படல் அவசியம்

எஸ். பன்னீர்ச்செல்வம்
விடுகை வருடம், உடற்கல்வி நெறி

நாகரிகம் வளர்ச்சியடைந்த காலம் தொட்டு உலகெங்கும் வாழுகின்ற மக்கள் எழுதுவதற்கு அல்லது வரைவதற்குஅதிகமாகப் பேனாவையே (Pen) பயன்படுத்து கின்றனர் என்பதை நாமறிவோம். இன்றைய கம்பியூட்டர் யுகத்தில் பேனா மேற்கொண்ட பணியை கணணி தனதாக்கிக் கொண்டமை மறுப்ப தற்கில்லை.

பேனாக்களில் நீலம், கறுப்பு, சிவப்பு வர்ணங்கள் பயன்பாட்டில் உள்ளன. பச்சை நிற மைகளைக் கொண்ட பேனாவை உள்ளகக் கணக்காய்வாளர் (Internal Audit) தமது பாவனைக்கென்று பிரத்தியேகமாக வைத்துக்கொண்டுள்ளனர். இவ்வுலகில் பேனா எத்தனையோ வடிவங்களில் உலாவித்திரிகின்றன. புராதன காலத்து மக்கள் கல்வெட்டுக்களில் எழுதி னார்கள். சங்ககாலத்தில் எழுதாணி கொண்டு ஓலைகளில் அதாவது ஏடுகளில் எழுதினார்கள். இதிகாசங்கள் மற்றும் தமிழின் ஒப்பற்ற நீதி நூலான திருக்குறளும் தொல்காப்பியமும் இவ்வாறே எழுதப்பட்டன. அக்கால கட்டத்தில் பேனாவைக் கண்டு பிடிக்கவில்லை என்றால் இவ்வொப் பற்ற நூல்களை எழுதும் வாய்ப்பை துரதிஷ்டவசமாக பேனா இழந்திருக்கும் எனலாம். எழுத்தாணியைத் தொடர்ந்து எழுதுகோல் (Pencil) கண்டுபிடிக்கப் பட்டது.

அதனைத் தொடர்ந்து ஊற்றுப் பேனாவை (Fountain pen) 1884ம் ஆண்டு அமெரிக்காவை சேர்ந்த லுயிஸ் இவாரட்டர் என்பவர் கண்டுபிடித்தார். இதனை அடுத்து உலர்ந்த மை பேனாவை (Ball point pen) அமெரிக்காவைச் சேர்ந்த ஜோன் ஜெ.லெனட் என்பவர் 1888இல் அறிமுகப்படுத்தினார். இதனை குமிழ்முனைப் பேனாவென்றும் அழைப்பதுண்டு.

இலங்கையில் 20ம் நூற்றாண்டு தொடர்க்கத்தில் கூட பேனா முனைகளைக் கொண்டு மையை (Ink) தொட்டு எழுதும் வழக்கம் இருந்தது. ஆனால் இன்றைய நவீன யுகத்தில் விதம்விதமான பேனாக்கள் விற்பனைக்கு விடப்பட்டுள்ளன. ஓவியர்களுக்கு சித்திரம் வரைவதற்கு ஏற்றதாயும் பேனாக்கள் உருவாகி யுள்ளன. இதனைவிட கையெழுத்துப் பேனா, மிக நுண்ணிய முனைகொண்ட பேனா என்பனவும் பாவனையில் உள்ளதை காணமுடிகிறது.

சிலரது எழுத்துக்கள் லட்சணமாக இல்லாமல் இருந்தால் பேனை சரியில்லை என்று குற்றம்








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுமத்துவதுமுண்டு. அக்காலகட்டத்தில் பாக்கர் (Parker) சுவான் (Swan) பைலட் (Polot) போன்ற வர்த்தக சின்னங்களுடன் ஊற்றுப் பேனாக்கள் வெளிவந்தன. இவற்றுள் பார்கர் ஐம்பத்தொன்று என்ற ரக பேனாவுக்கு ரொம்ப மவுசு காணப்பட்டது.

உயர் நீதிமன்றில் கொலைக் குற்றம் சாட்டப்பட்டவரை விசாரணைக்கு பின் குற்றவாளி என்று நீதிபதி தீர்மானித்தால் உடனேயே மரண தண்டனை தீர்ப்பு வழங்கப் படுகின்றதை நாம் காண்கின்றோம். தண்டனை வழங்கப்படும் வேளை மரண தண்டனையை எழுதிய பின் மின் விளக்குகள் அணைக்கப்பட்டு பேனாமுனையும் மேசை மீது குத்தி உடைக்கப்பட்டு விடுகின்றது. இது தொன்று தொட்டு வழங்கப்படுகின்ற சமபிரதாயம் என்றும் கூறப்படும்.

இக்காலத்தில் அரசாங்க காரியாலயங்களில் அதிமுக்கியமான தஸ்தாவேஜி (Documents) களைத் தவிர அனைத்து கருமங்களும் குமிழ்முனைப் பேனாவை பயன்படுத்து கின்றதையும் காணக்கூடிய தாகவுள்ளது. பேனாவின் மகத்துவம் பேணப்பட வேண்டிய தொன்றாகும்.



# OFFICIAL OLYMPIC ANTHEM

**Shiyamala Pathmanathan**
2nd Year Phy. Edu. Course

The Olympic Anthem (given below in English) Was written by Costis Palamas, one of Greece's most famous poets, in 1893 the language of Greek. And it was set to music by Spiros samaras in 1986. They Hymn was adopted as the official Olympic Hymin, by the International Olympic Committee in, 1957. Translated by Sotiris Sotiropoulos from Canada.

Ancient immortal sprit, pure father of beautiful, the great and the true,
Descend, appear, and emblaze this place
With the glory of your own earth and sky

In the race, the grappling, and the toss
Kindle the impuise in all noble contests,
Crown with the perennial wreath.
An fashion the steely and worthy body.


Plains, mountains, and seas glow in your presence
Lie some great clear porphyrous shrine,
And every nation hurries here to your temple
In supplication, ancient immortal spirit.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பங்குச் சந்தை Or கொழும்பு பங்கு பரிவர்த்தனை




கே. மோகனேஸ்வர்ராஜ்
விடுகை வருடம், வர்த்தக நெறி

கொழும்பு பங்கு பரிவர்த்தனை (Clombo stock Enange) (CSE) அல்லது கொழும்பு பங்குச் சந்தை எனப்படுவது இலங்கையில் பங்கு பரிவரத்தனைக்கென அமைந்துள்ள ஒரே ஒரு சந்தையாகும். இது கொழும்பில் இலங்கை வங்கி தலைமைப் பணியகத்திற்கருகில் உள்ள உலகவர்த்தகமையத்தின் 4வது மாடியில் அமைந்துள்ளது. இதன் கிளைகள் கண்டி, மாத்தளை, குருணாகல் ஆகிய மாவட்டங்களிலும் உள்ளது.

பட்டியலிடப்பட்ட மற்றும் பட்டியலிடப்படாத கம்பனிகளின் பங்குகள், முன்னுரிமைப்பங்கு, தனிச்சங்கள், திறைசேரி முறி, திறைசேரி உண்டியல் அரசபிணைகள், நிதியங்கள் என்பவற்றின் ஆரம்ப வளங்கள், கொள்வனவு, விற்பனை பிரதானமாக இடம் பெறுகின்றது.

கொழும்பு பங்குச் சந்தையில் 5 வகையான தரப்பினர் பங்கு வகிக்கின்றனர்.

I. கொழும்பு பங்கு பரிவர்த்தனை நிலையம் - கொழும்பு பங்குச் சந்தையினை நிர்வகிக்கும் வரையறுக்கப்பட்ட நிறுவனமாகும். இதில் 15 பங்குத்தரகர் நிறுவனங்களின் பிரதிநிதிகள் அங்கம் வகிக்கின்றனர்.

II. பட்டியலிடப்பட்ட கம்பனிகள் - கொழும்பு பங்குச் சந்தையின் பலகையில் இடம்பெறும் அங்கீகாரம் பெறும் கம்பனிகள்.

III. முதலீட்டாளர்கள்.

IV. இலங்கை பிணைகள் பரிமாற்று ஆணைக்குழு - பங்கு சந்தையின் நடவடிக்கையினை மேற்பார்வை செய்யும் நிதியமைச்சின் குழுவினர். நம்பகத்தன்மை, மோசடிகளை தவிர்த்தல் சட்டவலிமை அளிப்பது இவர்களின் கடமையாகும்.

## வரலாறு

இலங்கையில் பங்குச் சந்தை 1896ம் ஆண்டிலிருந்து செயற்பட்டு வருகின்றது. ஆங்கிலேய தோட்ட கம்பனிகளின் நிதியீட்ட தேவைக்காக தோற்றுவிக்கப்பட்ட பங்குச் சந்தை ஓர் மூடிய அமைப்பாக காணப்பட்டது. 1984ம் ஆண்டில் பங்குச் சந்தை பொதுமக்களுக்காக திறந்து விடப்பட்டதுடன் திறந்த வர்த்தக முறை அறிமுகப் படுத்தப்பட்டது. 1990ம் ஆண்டு வரையறுக்கப்பட்ட கொழும்பு பங்கு பரிவர்த்தனை நிலையம் என பெயர் மாற்றம் பெற்றது. இதில் உரிமை பெற்ற 15 பங்குத்தரகு நிறுவனங்கள் அங்கம் வகிக்கின்றன. இது தவிர பங்குச் சந்தை நடப்புக்களை முனைப்படுத்த இலங்கை பிணைகள் பரிமாற்று ஆணைக்குழு அமைக்கப் பட்டும் உள்ளது. 1991 நடவடிக்கைகளை விரைவுப்படுத்த முறையான மத்திய வைப்பு முறை அறிமுகப் படுத்தப்பட்டது. 1995ம் ஆண்டில் உலக வர்த்தக நிலையதிற்கு இடத்தினை மாற்றிக் கொண்டது. 1999ல் மிலங்க சுட்டி கண்டியில்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிளை அமைக்கப் பட்டது. 2004ல் குறிகாட்டி அறிமுகப் படுத்தப்பட்டது.

**பட்டியலிடல் தகைமைகள்**

கொழும்பு பங்குச் சந்தையில் பட்டியலிடப்படும் தகைமையினை பெறுவதற்கு பொது கம்பனிகள் பலவித, சட்ட, மூலதன வரையறை தேவைப்பாடுகளை கொண்டிருத்தல் வேண்டும். அவைகளில் முக்கியவை சில.

1. ஆகக் குறைந்தது 75 மில்லியன் ரூபாய் மூலதனத்தைக் கொண்டிருக்க வேண்டும்.

2. ஆகக் குறைந்தது 25% சாதாரண பங்குகள் பொதுமக்களுக் குரிய தாக இருக்க வேண்டும். இதில் இயக்குணர்களின் குடும்ப அங்கத்தினர், பதிலாளிகள் அல்லது உபகம்பனி, கூட்டுக் கம்பனி இவற்றால் உடமையாக் கப்பட்ட பங்குகள் கருத்தில் கொள்ளப்படாது.

3. ஆகக் குறைந்த 300பேர் பங்காளராக இருத்தல் வேண்டும்.

4. இவை தவிர இலங்கையின் கம்பனி சட்ட ஏற்பாடுகளை ஒழுகி அமைந்திருத்தல் வேண்டும்.

**பங்கு குறிகாட்டிகள்**

கொழும்பு பங்கு பரிவர்த்தனையின் போக்கினை, நிலையினை அறிவதற்கு பல பங்கு சுட்டிகள் பயன்படுத்தப் படுகின்றது. இவற்றில் முக்கிய சில

1. எல்லா பங்குகளுக்குமான விலைசுட்டி (Aspl- All Share Price Index)

கொழும்பு பங்கு சந்தையில் பயன்படுத்தப்படும் மிக பிரபல்யமான சுட்டியாகும். இது நாளாந்தம் கணிப்பிடப்பட்டு நாள் முடிவில் அறிவிக்கப்படும் அன்றைய தினத்தில் கைமாறப்பட்ட அனைத்துப் பங்குகளின் விளைகளும் உள்ளடக் கப்பட்டு 1985ம் ஆண்டை அடியாண் டாகக் கொண்டு ஒப்பிடப்பட்டு கணிக்கப்படும்.

2. **மிலங்க விலைச் சுட்டி**

கொழும்பு பங்கு சந்தையில் பயன்படுத்தப்படும் மற்றுமோர் பிரபல்யமான சுட்டி இதுவாகும். மில (விலை) அங்க(எண்) எனும் சிங்களம் சொற்களை புணர்த்தி இப்பெயர் சுட்டிக்கு வைக்கப்பட்டுள்ளது. 1999ம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்ட இச் சுட்டி சந்தையிலே அதிக விசாலமான மூலதனத்தினைக் கொண்ட கம்பனி களின் விலை மட்டங்களை அறிய பயன்படுத்தப்படுகின்றது. இதன் அடிப்பருவ சுட்டி 1000 ஆகும்.

3. **தற்போதய நிலைமை**

**நிதியியல்**

2005 நடுவாண்டின் தரவுகளின் படி கொழும்பு பரிவர்த்தனை 494 பில்லியன் அளவான மூலதன சந்தையினைக் கொண்டுள்ளது.

வியாபார நேரம் :- பொது விடுமுறை நாட்கள் தவிர திங்கள் முதல் வெள்ளி வரை முற்பகல் 9.30 தொடங்கி பிற்பகல் 2.30 வரை

நுட்பங்கள் :- 1. கொழும்பு பங்கு பரிவர்த்தனை நடவடிக்கைகளை முறைப்படுத்துவதற்கு 3 முறைமைகள் கையாள்கின்றது.

1. மத்திய வைப்பு முறை(The Central Depository Systerm)
2. Automated Trading System
3. Dept Securities Trading System.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மத்திய வைப்பு 1991 இலும் Automated Trading System 1997 இலும் நிறுவப்பட்டது. கணனி மையப் படுத்தப்பட்ட தன்னியக்க முறையில் பங்குச் சந்தை நடவடிக்கைகள் இடம் பெற்று வருகின்றது.

அங்கத்துவம்

World Federation of Exchanges (FIBV) 1998 அக்டோபரில் இலங்கை அங்கத் துவத்தினை பெற்று 52 வது உறுப்பினராக இணைந்து கொண்டது. இது தவிர இவ் அமைப்பில் இணைந்து கொண்ட தெற்காசி யாவைச் சேர்ந்த முதலாவது பங்குச் சந்தை கொழும்பு பங்கு பரிவர்த்தனை ஆகும்.


**Asin Federation of Exchages(SAFE)**

தெற்காசிய நாடுகளின் பங்குபரி வர்த்தனையில் கொழும்பு பங்கு பரிவர்த்தனை முக்கிய அங்கம் வகிக்கின்றது.

1990 முன்னரான காலப்பகுதியில் வெளிநாட்டவர்களுக்கு பங்கு கொள்வனவின் போது 100% வரி செலுத்த பணிக்கப்பட்டிருந்தனர். தற்போது இது நடைமுறையில் இல்லை.

மேலும், வெளிநாட்டவர்கள் காப்புறுதி கம்பனிகளின் பங்குகளை கொள்வனவு செய்யமுடியாது.

கொழும்பு பங்கு சந்தை வியாபாரத் தளத்தில் பங்கு தரகர் பிரதிநிதிகள் தவிர வேறு யாருக்கும் அனுமதி இல்லை. பங்கு கைமாற்றலில் ஈடுபட விரும்பும் பொதுமக்கள் இவர் களிடையே தமது நடவடிக்கைகள் மேற்கொள்ளல் வேண்டும்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# BETTER PRONUNCIATION



K. Thana Letchumy
2nd Year English

**How to help Students**

I. Difference between letter and sounds
II. What model dowenfollow?
III. Difficulties of Students with regard to sounds
IV. Syllabification

* Monosyllabic words
* Disyllabic words
* Trisyllabic words
* Teltrasyllabic words
* Pentasyllabic words
* Word Accent
* Basic Rules for word Accent
* Patterns of Intonation
* Some teachiques found useful for raising learners awareness of intonation.

While there are 26 letters in the English alphabet there are 44 sounds, and these 44 sounds are classified into three groups vowels (12) diphthongs (8) and consonants (24). Note the a diphthong is a combination of two vowels.

1. Differences between letter and sounds

Unlike Tamil where there is a perfect match or correspondence between letter and sound, in English there is no perfect match or correspon dence between letter and sounds. For Example, the letter, 'a' has for different sounds as in case of 'cat', 'water', 'park', and cake. Here is another example; the letter "u" has two different sound as in the case of" put, & but" Yet another example 'ough' are pronounced in many different ways as in the case of 'Cough', though, through and 'Plough' All these examples tell us clearly that in the case of English there are differences between letters and sound and our students should be made aware of this fact.

2. What model do we follow?

What is the model or variety of English that we should follow in our classrooms? what brand of English should we teach our students? The answer is No. please remember that language is for communication and therefore it is not important and necessary that we should speak like the British. But that does not mean or imply that we can speak English in our own idiosyncratic (individual) way! We should use a variety or model of English that is indelible to our students.

3. Difficulties of students with regard to sounds Make your students read out passages and you, as teacher, will be able to identify their problems with the sounds. Many students have difficulties with the sounds 'S' and 'sh' seashell' silk shirt' seashore; sunshine. 'S' and 'ch' Small church; silver chain; single child



பெரியபெரிய சாதனைகளெல்லாம் நடைபெறுவது ஆழ்ந்த மௌனத்தில் தான். GTC

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'S' and 'z': sea breeze; six zeroes; safe zone.

'a' : apple: bat ; rat ; ant ; mad.
't' and 'p' : ten dollars; temple; tea; true disciple, door 'b' and 'p': ball pen; best pal beautiful poem big pot.
'k' and g : Clever girl kind grandma, cooking gas 'f' and p : Fine print; fast printer fool proof; fat pig

4. Syllabification

Before taking up word stress or accent we should talk about syllabification. But what is syllabification? Dividing words into syllables is syllabification.
For example –
Two syllables – Pencil – Pne-cil
Three syllables – Magazine – Ma-ga-zine
Four syllables - dictionary – dic – tio – na – ry
Five syllables – educational e- du – ca – tion – al

*. Monosyllabic words Big, Cook, pen, teach light

*. Disyllabic words :
Pencil, teacher English kandy photo

*. Trisyllabic words :
Magazine, airplane computer microphone, department.

* Tetrasyllabic words :
Education,Political, democracy, celebration, economics.

*. Pentasyllabic word:
Economical electricity; introductory" Politically appreciation.

V) Word Accent.

In a word with more than one syllable, one particular syllable receives prominence and this is known as accent or stress. For esample, 'di' vide, 'English, de' mocracy, edu'cation 'following, re'markoble.

In the word 'divide' the second syllable receives prominence and therefore we can say that the second syllable is stressed or accented.

VI) Basic Rules for word Accent

1. All words ending with – tion, - Cion and ssion have stress or accent on the penultimate syllable.
Congrat'lation, intro ' duction com'passion

2. All words ending with – ic have the stress on the penultimate syllable.
elec'tronic, demo'cratic eco'nomic, fan'tastic and other syllables. Po'litical geo'graphical po'litically elec' tricity, ac'tivity nation'nality 'educate, e'radicat ' calculate ' activate

Most disyllabic verbs have the stress on the last syllable. Pro'ject, en'joy em'ploy

VII) Patterns of Intonation

Intonation is the shift and change in tone and we basically talk of falling and rising intonation.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புகை எமக்குப் பகை [ நுகர்வதனால் நுகரும் உயிர்]



எம். ஜே. எம். நிஸாம்
விடுகை வருடம், இரண்டாம் மொழி சிங்களம்

இன்றைய 21ம் நூற்றாண்டில் எத்தனையோ புதுமைகளைப்போர்த்திக் கொண்டிருக்கும் உலகமானது புகைத்தலையும் ஒரு modaling ஆகவே கருதுகின்றது. விஞ்ஞானத்தின் விளிம்பிற்கே சென்றுள்ள உலகம், புகைத்தலையும் ஒரு அடிப்படைத் தேவையாகவே கருதி அதற்கு அடிமையாகியுள்ளது.

இளையோர் முதல் முதியோர் வரை ஆண், பெண் இருபாலாரும் புகைப்பதில் ஆர்வம் காட்டுவதால் இன்று புகைக்காதோரை விட புகைப்பவர்களே அதிகமாக இருக்கிறார்கள். "புகைத்தல் உடல் நலத்துக்கு கேடு என்பதை அறிந்தும், அதைவிடுபவர்களை விட நுகர்ப வர்களே அதிகம். புகை பிடிப்பது அழகான, ஆடம்பரமான, கௌரவ மான செயலென இன்றைய இளம் சமுதாயத்தினர் கருதுகின்றனர். புகைப்பதனால் மரணத்தின் ஒவ்வொரு படியும் முன்னே வருகின்றது என்பதை உணர மறுக்கின்றார்கள்.

ஆரம்ப காலத்தில் குளிர்ப் பிரேதசத்தில் வாழந்த மக்கள் தங்கள் உடலை குளிரிளிருந்து பாதுகாத்துக் கொள்வதற்காக புகைபிடிக்கும் பழக்கத்தை கைக்கொண்டனர். ஆனால் அது காலப்போக்கில் குளிர் வலயம், , உலர் வலயம் என்றெல்லாம் உலக நாடுகளனைத்திலும் மிக வேகமாகப் பரவலாயிற்று. இன்று மக்களனை வரும் சர்வ சாதாரணமாகப் புகைக்கு அடிமையாகிவிட்டார்கள்.

வாழ்வில் துன்பங்கள் ஏற்படும் போது அதிலிருந்து விடுபட மனிதன் துடிக்கின்றான். விடுபட முடியாமல் தவிக்கின்றான். அதுவே அவனுக்கு பெரும் துயரமாகி அதிலிருந்து விடுபட வழி தேடுகின்றான். இறுதியில் உடனடியாக உற்சாகத்தையும் காலம் செல்லச் செல்ல பலவீனத்தையும் தரும் புகைத்தலை பழக்கமாக்கிக் கொள்கின்றான். புகை பிடிக்காவிட்டால் மூளை வேலை செய்யாது என்ற பிரமையை தோற்றுவிக்குமளவுக்கு இன்று இதன் பிடியில் இருந்து தப்ப முடியாது மனிதன் திண்டாடுகிறான்.

புகையிலையைச் சுருட்டிப் புகைக்கும் பழக்கத்தை ஸ்பெயின் நாட்டவர்களே முதலில் கைக்கொண்டிருந்தனர். இது பின்னர் ஐரோப்பிய நாடுகளிலும் பரவிற்று 16ம் நூற்றாண்டிலேயே புகை பிடிக்கும் பழக்கம் ஐரோப்பாவில் பரவியது. புகை பிடிக்கும் கொடிய பழக்கம் உருவாகி சுமார் நூறு ஆண்டுகளுக்குப் பின் லண்டனைச் சேர்ந்த டாக்டர் "இவார்ட்" என்பவர் புகையிலைக்கு குமட்டலுடன் கூடிய வாந்தி எடுக்கவைக்கும் குணம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிகமாக உண்டு, அது குடலின் முதல் எதிரி எனும் உண்மையை முதன் முதலில் வெளியிட்டார்.

சிகெரட்டைப் புகைக்கும் போது உடலுக்கு தீமை பயக்கும் நிகோடின், தார், கார்பன், மொனாக்சைட் போன்ற இரசாயன பொருட்கள் நமது உடலினுள் செல்கின்றன. மேலும் சிகெரட் பிடிப்பதனால் நாக்கு, வாய், உதடு ஆகிய இடங்களில் புற்று நோய்களும், வயிற்றுப்புண்களும் ஏற்பட அதிக வாய்ப்பிருக்கின்றது. புகை பிடிப்பவர்களின் உதடும் பற்களும் நிகோடின் கறைபடிந்து நிறம் மாறிக்காணப்படும். கண்கள் மஞ்சளாக மாறி உடலின் அழகையே கெடுத்து விடும்.

மேலும் புகைப்பதனால் நாக்கிலுள்ள சுவை நரம்புகள் அதன் தன்மையை இழந்து ருசி குறைந்து போக ஏதுவாயுள்ளது. மேலும் நுரையீரற் புற்று நோயாளர்களில் அதிகமானோர் புகைபிடித்தவர்களே என விஞ்ஞா னிகள் ஆராய்ச்சி மூலம் தெரிவித் துள்ளனர். பில்டர் முனையிலுள்ள சிகெரட்டைப் புகைப்பவர்களுக்கு விரைவாக நுரையீரற் புற்று நோயும் பில்டர் கொண்ட சிகெரட்டைப் புகைப்ப வர்களுக்கு சிறிது காலம் தாழ்த்தி புற்று நோயும் ஏற்படுகின்றது. இதனையே சிலர் தவறாக புரிந்து கொண்டுள்ளனர்.

எமது உடலில் நுரையீரலின் சேவை மகத்தானது. நுரையீரல் பழுதடையு மாயின் இதயமும் உடல் இயக்கமும் பாதிப்புறும். நுரையீரலில் உள்ள நுண்ணிய காற்றுக் குழாய்களின் மீது உரோமம் போன்று ஒரு பகுதி இருக்கின்றது. இதற்கு சீலியா எனப் பெயர். இவை ஒரு நிமிடத்திற்கு தொள்ளாயிரம் முறை முன்னும் பின்னும் அசைந்து சுவாசத்தின் மூலம் வரும் நச்சுப் பதார்த்தங்களை நுரையீரலினுள் நுழையாத படி தடுக்கின்றன. சிகரெட் புகை உடலினுளளே செல்லச் செல்ல சீலியாக்கள் அழிந்து நுரையீரலில் 'ம்யூகஸ்' எனப்படும் சளி சேர்கின்றது. இக் கட்டத்திலே புகைப்பிடித்தவர்கள் இருமத் தொடங்குகின்றனர். இதனை ஸ்மோக்கர் ஸ் ஹோப் என்பவர் புகைப்பிடித்தவர்களின் உடலிலேற்படும் மாற்றத்தை இருமலே முதன் முதல் உணர்த்துகின்றது. தொடர்ந்து புகைத்தவரின், புகைப்பிடித்தவரின் திசுக்கள் அதிக வேகத்துடன் மூர்க்கமாக சுவாசக் குழாய்களை அழிக்கின்றன. இவ்வேளையில் மூச்சு விடும் போது எரிவு அல்லது வலி தோன்றும். சிலருக்கு நெஞ்சு அடைப்பது போல் அல்லது மூச்சு இரைப்பது போன்ற உணர்வும் ஏற்படும். நுரையீரற் புற்று நோய் ஏற்பட இதுவே காரணமாக அமைகின்றது. புற்று நோய் முற்றியதும் அதன் திசுச்கள் உடலின் பல பாகங்களிலும் பரவி அங்கும் புற்று நோயை தோற்றுவிக்கின்றது.

உலக சுகாதார நிறுவனம் விடுத்துள்ள அறிக்கையின் படி ஒரு சிகரெட் 1மனிதனின் ஆயுளை 5 1/2 நிமிடங்களால் குறையச் செய்கின்றது.

சிகரெட் பிடிக்கும் கொடிய பழக்கத்திலிருந்து மனிதனைப் பாதுகாக்க ஆங்காங்கே புகைத்தலுக்கு எதிராக பெரிய இயக்கங்கள் உருவாகி தீவிர பிரசார நடவடிக்கையில் இறங்கியுள்ளன. நம் நாட்டு சிகரட்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெட்டிகளிலும் "புகைபிடித்தல் உடல் நலத்தக்கு கேடாகலாம்" எனும் வாசகம் பொறிக்கப்பட்டுள்ளது. ஆனால் இதனை புகை பிடிக்கும் எவரும் கருத்திற் கொள்வதில்லை. இது ஒரு பயனற்ற எச்சரிக்கையாகவே உள்ளது. ஒரு தவறை செய்வதற்கான வசதி வாய்ப்புகளை செய்து கொடுத்துவிட்டு அதனைச் செய்யாதே என்றால் அது ஒரு அசர்த்தியமான விடயமாகும். எனவே தீமை செய்வதற்கான வசதி வாய்ப்புகளை அகற்றி புகைப்பிடிக்கும் கொடிய பழக்கத்திலிருந்து மனிதனைப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்க வேண்டியது அத்தியவசியமாகும்.




# BRILLIANT LADY

Shafeeka Jaleel
2nd Year English Course

Once upon a time. There was an intelligent old ladies in the village. In that place there was a little boy. He was very play but clever boy. He has got to know about that lady, and he thought to over came her intelligent one day.

One day the little boy cought a bird & brought it. Next day to the intelligent lady's house. He met the intelligent in her house. After that he hid the bird in the back side of him. Then he asked "I have a bird can you guess, is it living not living?"

By the way can you guess what dose the lady say to the boy

Maybe IF she said " the bird is living " suddenly he will kill the bird & say " It was dead " some time If the said "The bird died after that he will relish the bird & say " It is living "

This is the intelligent lady's answer " Bird life is in your hand "



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதி என்றொரு இமயம்



விஜேந்திரன்
விடுகை வருடம், ஆரம்ப நெறி

"நமக்குத் தொழில் கவிதை நாட்டிற் குழைத்தல் இமைப் பொழுதும் சோரா திருத்தல்"

என்றவொரு டாம்பீகக் காம்பீரத்தோடு உதித்தவன் பாரதி. பாரத தேசம் அடிமை இருளில் அடங்கிக் கிடந்த காலத்தில் இவன் பாடல் என்னும் விளக்கு கொண்டு வீதிகளில் திரிந்தவன். இவனது எழுகை தமிழ் நாட்டிற்கு மட்டுமன்றி தமிழினம் தாண்டி மானுடத்தையும் விஞ்சி நின்றது. இவனது வறுமையும் எளிமையுமான தன் சொந்த வாழ்விலேயே போலித் தனங்களையும் வேஷங்களையும் உதறியெறிந்து உண்மையினதும் நேர்மையினதும் சின்னமாக வாழ்ந்தவன். எத்தனையோ எதிர்ப்புக் களையும் பொருட்படுத்தாது சொல்லும் செயலும் ஒன்றாக வாழ்ந்து காட்டியவன். உள்ளத்தில் ஒன்றும் உதட்டில் ஒன்றுமாக நடித்துத் திரிந்தவர்களையும், போலிகளையும், வேடிக்கை மாந்தர்களையும் அறவே வெறுத்தவன். அத்தகைய பாரதி, அரசியல் வாழ்வில் மக்களை ஏய்த்துத் திரிந்த வெளிவேடக்காரர்களையும், அவர்களது சந்தர்ப்பவாதப் போக்குகளையும் பச்சோந்திக் குணத்தையும் நையாண்டி செய்து மக்கள் முன் அம்பலப்படுத்தியவன்.

சுதந்திர இந்தியாவிலே இருளில் அடைபட்டுக்கிடந்த மக்களிடம் மேலும் மேலும் மூட நம்பிக்கை என்னும் அறியாமை இருள் பரவிக்கிடப்பதைக் கண்டு பாரதி பொங்கி எழுகிறான். அச்சமும் பேடிமையும் அடிமைச் சிறுமதியும் உச்சத்தில் கொண்டிருந்த அக்கால சமுதாயத்திற்கு சாவு மணி அடித்து சரித்திரம் எழுதுகிறான் புதுமைக் கவிஞன். அக்கால சமுதாயத்திலே எட்டயபுர மண்ணி லிருந்து ஓர் எடுத்துக் காட்டைப் பார்ப்போம். அந்த ஊர் மக்கள் எண்வரிசை கூறும்போது எட்டு என்ற எண் வருகின்ற போது அவ் வெண்ணை அவர்கள் உச்சரிக்க மாட்டார்களாம். ஏனெனில் அது மகாராசாவின் பெயரைக் குறிக்குமாம். ஏழுக்கு பிறகு எட்டு என்று சொல்லாமல் மகராசா என்று சொல்வார்களாம். இப்படி அஞ்சி அஞ்சி வாழும் ஒரு பின்னணியி லிருந்து 'அச்சம் தவிர்' என்ற ஆண்மைமிக்க மந்திரத்தோடு விஷ்வரூபம் எடுத்தவன் நம்மவன் பாரதி!

பாரதி சாடிய மற்றுமொரு சாக்கடை சாதீய சமுகம். சாதிக்கொடுமைகளும், சமூக ஏற்றத்தாழ்வுகளும் இவனது கவிதைகளில் அதிகமாய் பதிந்திருப் பதைப் பார்க்கலாம். பாரதி ஒரு பிராமணக் குடும்பத்தில் பிறந்தவ னாயிருந்த போதிலும், அவ்வுயர் வினைத் துடைத்து விட்டு எல்லாச் சாதியினருடனும் ஒன்றாகப் பழகி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாழ்த்தப்பட்டவர்களுடன் உணவுண்ட பாரதியை கடையத்தில் வாழ்ந்த அவரது மைத்துனர் உட்பட பிராமணர்கள் அனைவரும் அக்கிர காரத்தினுள் நுழைய விட மறுத்தனர். அது மட்டுமன்றி தாழ்த்தப்பட்ட குலத்தைச் சேர்ந்த ரா. கனகலிங்கம் என்பவருக்கு அவரது நண்பர்கள் புடைசூழ ஓமம் வளர்த்து பிரம்மா வுபதேசம் செய்து பாரதியார் பூணூல் அணிவித்தார். அத்துடன் அமையாது யார் கேட்டாலும் பாரதியின் தான் பூணூல் அணிவித்தார் என்று கூறும் படியும் கனகலிங்கத்திடம் கூறினார்.

**ஜாதி மதங்களைப் பாரோம் - உயர்**
**ஜன்மம் இத்தேசத்தில் எய்தின**
**ராயின் வேதிய குலத்தினராயினும்**
**ஒன்றே - அன்றி**
**வேறு குலத்தினராயினும் ஒன்றே**

மக்கள் வாழ்வை சின்னாபின்னமாக்கிக் கொண்டிருந்த சாதியத்தை வேரோடு வெறுத்ததோடு அதற்கெதிராக போராடியதையும் நாம் காணலாம். அன்றைய சூழ்நிலையில் யாரும் எண்ணியும் பார்க்க முடியாத அளவிற்குத் தாம் எழுதிய "ஆறிலொரு பங்கு" என்னும் கதையினை நூலாக வெளியிட்ட போது. "இந்நூலைப் பாரத நாட்டில் உழவுத் தொழில் புரிந்து, நமக்கெல்லாம் உணவு கொடுத்து இரட்சிப்பவர்களாகிய பள்ளர், பறையர் முதலிய பரிசுத்தத் தன்மை வாய்ந்த வைசிய சகோதரர்களுக்கு அர்ப்பணம் செய்கிறேன்" எனக் கூறியிருப்பது அவரது உண்மை வாழ்க்கையை உணர்த்துவதாக உள்ளது.

பாரதி கைக்கொண்ட மற்றுமொரு பாடுபொருள் மானுடமாகும். ஓர் இலக்கியவாதி வெறுமனே இலக்கியங் களைப் படிப்பது மட்டுமன்றி மனிதாபிமானமிக்க வகையில் இருக்க வேண்டும் என்பதற்கு பாரதியைத் தவிர வேறு சான்று கூறுவதற்கில்லை என்னும் அளவிற்கு அவனுடைய மானுடப் பிரவாகம் வெள்ளமெனப் பாய்ந்தோடியது. உண்மையில் மனிதாபிமானம் என்பது வெறுமனே உயர்கள் மீது இரக்கம் காட்டுவதோ அவற்றுக்காக கண்ணீர் விடுவதோ அன்று. மக்களது பிரச்சினைகளையும், துன்பங்களையும் தீர்ப்பதற்கான ஆற்றலும் சக்தியும் அம்மக்களிடம் உண்டு என்ற அசையாத நம்பிக் கையை ஏற்படுத்தும் வகையில் அவற்றுக்கு வழிவகைகளைக் காட்ட வேண்டும். மனிதனிடம் மறைந்தி ருக்கும் ஒப்பற்ற ஆற்றல், சிந்தனைத் திறம், உயர் பண்புகள் முதலியவற்றை சுட்டிக் காட்டுவதும் அவற்றை ஏற்பதும் வளர்ந்தோங்கச் செய்வதும் மனிதாபிமானமாகும்.

பாரதியின் ஆத்ம விசாரம் அற்புதமானது. எதனையும் பாடு பொருளாகக் கொள்ள முடியும் என்ற தன்னம்பிக்கை பாரதிக்கு உண்டு. பிறர் பயனற்றது எனக் கருதுபவையும் தமக்கு இலக்கியம் செய்யப் பயன்படுவது எனக் கருதியவர் அவர். ஆன்மிகத் தேடல், தேச விடுதலை, சாதியவிடுதலை, மூட நம்பிக்கை, பெண்விடுதலை என அவனுடைய பார்வை விழாத பகுதிகளே இல்லையெனலாம். ஆக, அவன் காலத்திற்கேற்ற வகையில் தனது கவிதா பயணத்தை விஸ்தரித்து வெற்றி நடை போடுபவன். அவன் வாழ்வியல் தத்துவங்கள் இன்று மட்டுமல்ல என்றும் தன் சமூகக் கடமையை ஆற்றும் என்பது வரலாறெழுதிய பாடமாகும்.



 உங்கள் கௌரவம் – நாக்கின் நுனியில் தான் இருக்கிறது. GTC

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சமாதானம்

எஸ். எச். எம். சாகீர்
விடுகை வருடம், இரண்டாம் மொழி தமிழ்

கோடி பணம் கொடுத்தும்
கிடைக்காத புன்னகை - முகங்களிலே
கோடி பொன் கொடுத்தும்
கிடைக்காத நிம்மதி - மனங்களிலே

கோடி கோடி கொடுத்தும்
வாங்க முடியாத அமைதி - நெஞ்சினிலே
அணைக்கடங்காத வெள்ளமாய் -
வழிந்த கண்ணீர் இல்லை - கண்களிலே
கேட்க முடியாத கொடூரமாய்
வெடிச்சத்தமில்லை இன்று - காதினிலே

உயிர்களைக் குடித்த
குண்டுகள் இல்லை இன்று - முற்றத்திலே
உறவுகளைக் கொன்ற
பிரிவுகள் இல்லை இன்று - வாழ்வினிலே
வழிமேல் விழிவைத்து எதிர் பார்த்து
ஓய்ந்து போன ஏக்கங்கள் -
இல்லை இன்று - வீரத்தாய்களின் ஏழ்மைமிகு நெஞ்சங்களிலே.

ஒளியை மறைந்த இருள் -
இல்லை இன்று - நிலவினிலே
சந்தோஷத்தை மறைத்த
சோகங்கள் இல்லை இன்று - உள்ளங்களிலே



அண்டம் அழிந்தாலும்
அவனி எரிந்தாலும்
நிறுத்த இயலாது என்று நினைத்த யுத்தம் இல்லை
இன்று - நம் தாய் நாட்டினிலே





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# FAILURE IS AN INNER BOOST



V. Subaschandramohan
2nd Year English Course

A learned person who say "failure is merely a temporary delay not a permanent defeat". Another man of erudition who says "Failure is the victory's beginning", There is another opinion on failure, "it is a signal for an end " a symbol for an end" The chances of the progress depend on two aspects. Whether do we have to begin the deed taking the failure as a lesson or whether to leave the deed because of the failure.

We should not leave until quench the desire for success. Most of the people think that they have lost everything when they confront smaller failures. Until a man dies there is no question about lost everything.

A failure means that he had worked hard to achieve an object but not with success. A question will arise that what we have to do when we face a failure? We have to surmound the failures by identifying the ways and the weaknesses of achieving the failure. If we recognize the weaknesses of the failure that would urge us to achieve success.

Why we face failures? Is it due to execute an activity without planning or organizing or is it due to neglect the activity after organizing well about it? If the result is failure of an activity, it is the cornerstone for the success.

We came across many personalities that they have altered the failures to the success following determine afforts in their life.

You have to achieve your objectives taking the failures as the warning when you face failures as obstacles for your objectives. It is merely a delay not a declared judgment. So take, "failures are the pillars of success" and go on until you achieve the success.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# GOVERNMENT TEACHERS' COLLEGE - ADDALAICHENAI

## COURSE - MATHEMATICS

## ACADEMIC YEAR 2009/2010



**Row 1 (L/R) :** Mr.V Sathiya Seelan, Mr.R Ramakrishnan, Mr.MIMA Hussain (Lectr.) Mr. MIA Lathief (Deputy Principal), Alhaj. Moulavi. MSA Hafeel "Sharqiyy" Principal (SLEAS), Alhaj. Moulavi. ACM Zubair "Sharqiyy" (Deputy Principal), Mr. N Kulendirakumar, Mr.A Edward, Mr.V Rathnasingam.
**(Seated)**

**Row 2 (L/R) :** Mr.K Sivakumar, Mrs.MSF Kareema, Mrs.PN Kumari, Mrs.FA Pawlina, Mrs.AW Christopher, Ms.S Komathy, Mrs.N Sasikala, Ms.R Ranjani, Ms.R Amutha, Mrs.S Naveni, Mr.K Ramesh.

**Row 3 (L/R) :** Messrs.K Kalidas, I Mohanraj, P Vinson, SM Manas, S Somasundaram, S Benedict, S Seduraman, P Kesavan, KR Kumar.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# GOVERNMENT TEACHERS' COLLEGE - ADDALAICHENAI

## COURSE - SCIENCE

## ACADEMIC YEAR 2009/2010



**Row 1 (L/R) :** (Seated) Mr.P Pragalathan, Mr.V Selvakumar, Mr.S Rajasekaran, Mr. MIA Lathief (Deputy Principal), Alhaj. Moulavi. MSA Hafeel "Sharqiyy" Principal (SLEAS), Alhaj. Moulavi. ACM Zubair "Sharqiyy" (Deputy Principal), Mr.MIMA Hussain (Lectr.), Mr.S Ananthar, Mr.R Thilagaraj.

**Row 2 (L/R) :** Ms.T Udayatheeba, Mrs.JS Jesmin, Mrs.M Maheshwary, Ms.AH Harshila, Mrs.MSA Banu, Ms.AAP Nusrath, Mrs.S Alogurani, Mrs.I Sridevi, Mrs. Sarweshwary.

**Row 3 (L/R) :** Mr. Anthony Pragash, Mr.K Kannadasan, Mr.ACM Hafeel, Mr.J Isaac, Mr.M Mahendran, Mr.P Manoharan, Mr.S Lawrence, Mr.A Nelson.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# GOVERNMENT TEACHERS' COLLEGE - ADDALAICHENAI

## COURSE - ART

## ACADEMIC YEAR 2009/2010



**Row 1 (L/R) :** **(Seated)** Mrs. K Rajendran, Mr. IM Mubthaj, Mr.T.A Patrick Cooray, Mr. MIA Lathief (Deputy Principal), Alhaj. Moulavi. MSA Hafeel "Sharqiyy" Principal (SLEAS), Alhaj. Moulavi. ACM Zubair "Sharqiyy" (Deputy Principal), Mr.S Sritharan (Lectr.), Mr.M Annadurai, Ms. D Rosemary, Ms. A Thilagawathy.


**Row 2 (L/R) :** Mss. S Jegatheeswary, R Sarojani, P Vasugi, V Pramila, K Sumathy, S Kalaivani, N Selvarani, SV Malliga Luxmi, A Ravindani, V Umadevi, K Seethaletchumy,

**Row 3 (L/R) :** Messrs. P Bala Kumar, K Jeyakanthen, B Sathiyanathan, A Senthilkumar, P RanjithKumar, A Paulanthhan, S Shanmuganathan,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 21ம் நூற்றாண்டில் பாடசாலைக் கல்வியில் உடற்கல்விதுறையின் முக்கியத்துவம்



ஏ. குமார்
விடுகை வருடம், ஆரம்ப நெறி

உடற்கல்வி எனக் கருதப்படுவது பாடசாலையின் மெய்வல்லுனர் விளையாட்டுக் குழுக்களை மாத்திரமல்ல, பாடசாலையிலுள்ள அனைத்து பிள்ளைகளுக்கும் உடற்திறன்களைக் கற்பதற்குச் சந்தர்ப்பத்தைப் பெற்று கொடுத்தலாகும். பாடசாலைக் கல்வியின் மூலம் எதிர்ப்பார்க்கப்படும் இலட்சியங் களையும், குறிக்கோள் களையும் அடைய உடற்கல்வி முக்கிய பங்கு வகிக்கிறது. இலங்கையில் உடற்கல்வி ஓர் உயர்ந்த நிலையில் இல்லாமைக்கான காரணத்தைச் சற்றுச் சிந்தித்துப் பாருங்கள். எமது வளங்கள் மிக வரையறுக்கப்பட்டவை. உடற்கல்வியின் முக்கியத்துவத்தை, சிறப்பை அறிந்தவர்கள் மிகச் சிலரே தொழில்களைப் பெற்றுக் கொள்வதன் பொருட்டு செயலாற்றுகின்றனர். அறிவை மேம்படுத்தும் போட்டியினால் பாடசாலை மாணவர்களுக்கு உடற்செயற்பாடுகளில் ஈடுபட போதிய நேரம் இல்லை. மேலும் உடற்செயற்பாடுகள் கடினமானவையாதலால் செயற்படுத்துவதும் கடினமாக உள்ளது. பெரும்பாலான கல்வியியலாளர்களும் ஆசிரியர்களும் கல்வி தொடர்பான பட்டம், பட்ட மேற்படிப்பு மட்டங்களில் இப்பாடத்திலுள்ள முக்கியத்துவத்தைக் குறிப்பிட்டு எழுதியுள்ளார்கள். இருந்த போதும் நிர்வாக பதவி தன்வசம் ஆனபின் அதைச் செயற்படுத்தாது விடுவது மாத்திரமல்ல, அதற்கு தடையும் போடுகிறார்கள். இப்பாடம் தொடர்பாக பெற்றோர், கல்வியிய லாளர்கள், நிர்வாகிகள் அரசியல் வாதிகள் ஆகியோரிடம் நல்ல அபிப்பிராயம் இல்லை. இதனாலேயே பாடசாலை பாடவிதானத்தில் உடற்கல்விப் பாடம் ஒரு வாரத்திற்கு இரு பாடவேளையே இடம் பெற்றுள்ளது.

எனினும் அபிவிருத்தியடைந்த நாடுகள் இப்பாடம் தொடர்பாகக் காட்டும் அக்கறையை நோக்குங்கள். அவர்கள் உடற்கல்வியின் உதவியினால் பொருளாதார சமூக நலன்களை அடைகிறார்கள். மனித உழைப்பை அதி உயர்மட்டத்தில் நடைமுறைப்படுத்திச் செல்வதற்கும், உற்பத்தியைப் பெருக்குவதற்கும், உள ஆரோக்கியமான பயனுள்ள பிரசைகளை உருவாக்குவதற்கும், துணிச்சலான போட்டியிடும் தன்மையை உண்டாக்குவதற்கும், சிறந்த முகாமையாளர்களை உருவாக்கவும் உடற்கல்வியைப் பயன்படுத்துகிறார்கள். அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளில் விளையாட்டு, உடற்கல்வி செயற் பாடுகளுக்கு காட்டும் முக்கியத்துவம் மிகக் குறைவு. இந் நாடுகளில் கற்றவர்கள் கூட அதன் அவசியத்தை உதட்டளவில் வெளிப்படுத்தினாலும் கூட அதனை செயற்படுத்த, அபிவிருத்தி செய்ய உதவி அளிப்பதாக இல்லை. இதற்கான காரணம் எவ்வாறாயிருப்பினும் பிள்ளைகளின் உடல், உள அபிவிருத்திக்கு விளையாட்டும் உடற்கல்வி செயற்பாடுகளும் அவசியம் எனும் தத்துவத்தை எமது மக்கள் மத்தியில் ஏற்படுத்த வேண்டியுள்ளது. இது தொடர்பாக மேலதிக விடயங்களை நோக்குவோமாயின் உடற்கல்வி செயற்பாடுகள் சமூக எண்ணக்கருக்களை வளர்க்க கூடிய ஆற்றல்மிக்கது. விளையாட்டு மைதானம் பிள்ளைகளின் ஒழுக்காற்று நடவடிக்கைகளை வளர்க்கும் ஒரு சிறந்த களமாகும். ஆசிரியரினால் மேற்பார்வை செய்யப்படும் விளையாட்டு செயற்பாடுகளினால்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமுதாயத்தில் பிரவேசிக்க தேவையான நற்பிரசைப் பயிற்சிக்கு அவசியப்படும். குணாம்சங்களைப் கொடுக்க முடியும். போட்டி, புரிந்துணர்வு, தலைமைத் துவம், சகிப்புத்தன்மை, பொறுமை ஆகிய குண இலட்சணங்கள் பயிற்சிகளின் மூலம் வாழ்வில் நடக்கும் சம்பவங்களுக்குத் துணையாக்கி கொள்ள கூடியதாய் அமைகின்றது.

மேலும் பாடசாலைகளை பொருத்தமட்டில் பிரதானமாக மாணவனை பரீட்சையில் சித்தியடைய வைப்பதை மாத்திரம் நோக்காக கொண்டு வகுப்பறையில் பிரதான மான பாடங்களை மட்டுமே கற்பிக்கின்றனர். இதனால் ஒரு சில மாணவர்களுக்கு கல்வியில் அதிக நாட்டமின்மையும் சோர்வும் ஏற்பட வாய்ப்பாக அமைகிறது. அத்தோடு ஒரு சில ஆசிரியர்களின் குறுகிய மனப்பான்மையால் (உடற்கல்வி செயற்பாட்டில் மாணவர்கள் ஈடுபடுவதால் பாடங்கள் வீணடிக்க ப்படுகின்றன) இப்பாடம் பாடசாலை களில் புறக்கணிக்கப் படுகின்றமை காணக்கூடியதாக உள்ளது. அவ்வாறு அல்லாமல் ஒரு சில பாடசாலைகளில் உடற்கல்வி பாடத்துறை சம்பந்தமான ஆர்வம் உள்ள ஆசிரியர்களும், வளங்களும் குறைபாடாகவே காணப் படுகின்றன. உதாரணமாக, பயிற்சிக்கான சிறந்த மைதானம் இன்மை, விளையாட்டு உபகரணங்கள் இன்மை போன்ற வற்றை குறிப்பிடலாம். அத்தோடு இத்துறை சார்பாக பெற்றோர்களுக்கும் கூட தெளிவான அறிவின்மையால் இப்பாடம் புறக்கணிக்கப் படுகின்றது. (தன்னுடைய பிள்ளை விளையாட்டு செயற்பாட்டில் ஈடுபடுவதால் பெற்றோர் நினைக்கின்றனர். (சித்தியடையாமல் போக வாய்ப்பிருக்கிறது) என்று.

அது மட்டுமன்றி பொதுவாக க.பொ.த (சா/த) பெறுபேறுகளை அடிப்படையாக கொண்டு உயர் தர வகுப்புகளுக்கு மாணவர்களை தெரிவு செய்யும் போது பிரதான பாடங்களில் மாணவன் சித்தியடைந்திருக்கின்றானா எனப் பார்ப்பதே வழமை. அந்த சந்தர்ப்பத்தில் கூட உடற்கல்வி பாடம் பின்தள்ளப்படுகின்றது. அது மட்டுமன்றி தரம் 10,11 மாணவர்களுக்கு உடற்கல்வி பாடம் விருப்பத் தெரிவாக அமைவதால் மாணவர்கள் இப்பாடத் துறையை தெரிவு செய்யாமல் விடுவதும், அக்கறை இன்றி செயற்படுவதும் வழமையாகி யுள்ளது. இதனால் இப் பாடத்து றையை மாணவர்கள் மத்தியில் விருத்தி செய்ய முடியாமல் உடற்கல்வி ஆசிரியர்கள் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கு கின்றனர்.

அபிவிருத்தி அடைந்த நாடுகளிலே சாதாரண கம்பனிக ளுக்கோ அல்லது அரசாங்க துறைக்கோ ஆட்களை தெரிவு செய்யும் போது பிரதானமாக கவனம் செலுத்துவர். அவர் விளையாட்டுத் துறையுடன் சம்பந்தப்பட்டிருக்கின்றாரா காரணம் அவரிடமே சிறந்த பண்புகள் (ஏற்றுக் கொள்ளல், விட்டுக்கொடுப்பு, தலைமைத்துவம், சமூக நலன்) காணப்பட அதிக வாய்ப்பிருக்கின்றது. ஒரு நாடு சர்வதேச ரீதியில் சிறந்த எல்லோராலும் பேசப்பட வேண்டு மானால் அந் நாடு ஏதோ ஒரு துறையிலாவது சிறந்த விளங்க வேண்டும். உதாரணமாக, 1953 டங்கன் வைட், 2004 சுசந்திகா ஜெயசிங்க போன்றோரும் 1996 அர்ஜின ரணத்துங்க தலைமையிலான கிரிகெட் அணி உலக கிண்ணத்தை சுவீகரித்தும் இலங்கை நாடு சர்வதேச ரீதியாக பேசப்பட்டும் புகழ்ப்பட்டும் வந்தது. இது போலவே ஒரு பாடசாலையும் அப்பாடசாலை அச்சமூகத்தில், அந்நாட்டில் சிறந்து புகழபட்டு பேசப்பட வெறுமனே பொதுக் கல்வி மாத்திரம் போதாது, விளையாட்டுத் துறையும் அதில் பெரும் பங்கு வைக்கின்றது. இதனை கல்வி உயர் அதிகாரிகளும், பாடசாலை அதிபர், ஆசிரியர்களும், மாணவர்களும், பெற்றோர்களும் உணர்ந்து செயற்படு வார்களாயின் விளையாட்டு துறையில் மாத்திரமன்றி நாட்டின் அபிவிருத்தியின் பால் நல்ல மக்களை கொண்டு செல்ல முடியும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.

உசாத்துணை :-
உடற்கல்வி கோட்பாடுகள்
விளையாட்டுக்களும் உடற்கல்வியும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உடலின் உறுதிக்கு உடற்பயிற்சி ஊன்றுகோல்



பி. குவேந்திரன்
விடுகை வருடம், ஆரம்ப நெறி

நமது வாழ்க்கை முறையில் உடற்பயிற்சியும் ஓர் முக்கிய இடத்தை வகிக்கின்றது. இன்றைய நவீன உலகில் வேலைகளை இலகுவாகச் செய் வதற்கு இயந்திரங்கள், பொறிகளின் புதிய வருகையினால் உடற்பயிற்சியின் அளவும் குறைந்துள்ளன. நாம் உடற்பயிற்சியினை தினமும் செய்வதுடன் முறையாகவும் மேற்கொள்ள வேண்டும். அவ்வாறின்றி தவறான முறைகளை கடைப் பிடிப்பதனால் தசைபிடிப்பு, சுளுக்கு, சவ்வு கிழிவு, மூட்டு மற்றும் தசைகளின் வலி போன்ற உபாதைகள் ஏற்பட வாய்ப்புக்கள் உள்ளன.

இவ்வாறான பிரச்சினை ஏன் ஏற்படுகின்றதென்றால் நாம் அதிக நேரம் தொடர்ந்து வேலையினை செய்யும் போது தசைகளில் லாக்டிக் அமிலம்(Lactic Acid) தேங்கி விடுகின்றது. இதனால் இரத்த ஓட்டம் தடைப்பட்டு தசைகள் வெகு விரைவாக சோர்வடைந்து வலியை ஏற்படுத்து கின்றன. எனவே, நாம் தினசரி உடற்பயிற்சியினை மேற்கொள்ள வேண்டும். இதன் விளைவாக சீரான இரத்த ஓட்டம், சுறுசுறுப்பு, மனஅமைதி, மகிழ்ச்சியான மனநிலை போன்றவை ஏற்படுகின்றன.

முறையான உடற்பயிற்சியினை மேற்கொள்ள சில இலகுவான வழிமுறைகள் :-

1. தினசரியும் அல்லது வாரத்தில் குறைந்தது 5 நாட்களாவது தவறாமல் உடற்பயிற்சியினை மேற்கொள்ள வேண்டும்.
2. பயிற்சியினை ஆரம்பிக்கும் சிறிது நேரத்திற்கு முன் சிறிது நீர் அருந்தவும். பயிற்சியினை முடித்தவுடன் நீர் அருந்துவதை தவிர்க்கவும்.
3. காற்றோட்டமான இடத்தில் பயிற்சியினை ஆரம்பிக்கவும்.
4. உடற்பயிற்சி செய்ய ஆரம்பிக்கும் முன் வாம் அப் (warm up) பயிற்சியினை 10-20 தடவைகள் செய்வதே சிறந்தது.
5. சுளுக்கு மற்றும் தசைப்பிடிப்பு ஏற்படாமல் தடுக்க Muscle Relamxant ஸ்பிரே(Spray) Stretching Exerxides போன்றவை மருத்துவரின் ஆலோசனைக்கு பின் மேற்கொள்ளவும்.
6. தசை பலப்படுத்தும் பயிற்சியை (Strcgtheing Exercises) மேற்கொள் பவர்கள் முதலில் குறைந்த அளவு எடையை தொடங்கவும்.
7. பயிற்சியினை சிரமமின்றி மேற்கொள்ள வேண்டும். சிரமம் ஏற்படின் தொடராமல் சிறிது நேர ஓய்வுக்கு பின்தொடரலாம்.
8. சரியான உணவு முறையினை கடைப்பிடிக்கவும்.
9. அதே போன்று பயிற்சி முடிந்தவுடன் கூல் டவுன்(Cool Down) பயிற்சிகளை மேற் கொள்ளவும்.
10. உடற்பயிற்சியின் போது உடலில் வீக்கம் தொடர்ந்து வலி போன்ற உபாதைகள் ஏற்படின் வைத்தி யரை நாடவும்.

"உடற்பயிற்சியினை செய்வோம் உடலினை உறுதிப்படுத்துவோம்"





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# PRONUNCIATION

N. Izzath Jahan
2nd Year English Course

Pronunciation is the way in which a word is pronounced. When we speak, it is important to pronounce the words correctly.

To improve pronunciation you must pay attention to the following points.

- Listen to the English news.
- Be attentive when you hear others speak.
- Look up the dictionary for the correct pronunciation of words.
- Read a paragraph loudly and then tape it, after listening to the tape, correct your mistakes and speak again.
- The formation of the mouth and placing of the tongue is important for correct pronunciation. Looking into a mirror will help.
- Even if you go wrong sometimes, do not be discouraged.
- Enjoy the company of people who speak fluent English.
- Buy tapes of the speeches of great leaders of the world and listen to these.

## SOME PROVERBS WITH MEANINGS

01. A stitch in time saves nine

When something goes wrong, if you rectify it or make amends immediately, you will have to spend very little time; but if you neglect it you will have to spend a lot of time to get it in order.

02. Birds of a feather flock together

People with similar habits, tastes, temperament, likes and dislikes make friends easily and are seen together often just like the birds of the same type.

03. Do unto others as your would have others do to you.
Your behavior towards the other people should be the type you expect from them towards yourself.

04. Once Bitten twice shy.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கட்டுருவாக்க கோட்பாட்டின் அடிப்படையில் அமைந்த புதிய கலைத்திட்ட சீராக்கமும் ஆசிரியர் வகிபாகமும்.





ஆர். ரவி
விடுகை வருடம், வர்த்தக நெறி

கட்டுருவாக்க வாத சிந்தனையை பின்புலமாகத் கொண்ட 2007ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட கலைத்திட்ட சீராக்கத்தில் (Curriculum reform) பாடசாலைக் கல்வியில் கலைத்திட்டம், பாடப்புத்தகம், ஆசிரியரின் கற்பித்தல் முறை, மாணவனின் கற்றல், உட்பட மொத்த கல்வி செயலொழுங்கையும் அடிப்படையாகக் கொண்டதாக அமைந்துள்ளது. தேடலை (Exploration) அடிப்படையாகக் கொண்ட மாணவனின் செயலொழுங்கும் அது தேர்ச்சி விருத்திக்கு (Competency) பிள்ளைக்கு உதவும் கற்றல் செயல் முறையாகவும் கட்டுருவாக்க கோட்பாடு அமைந்துள்ளது.

எனவே, கட்டுருவாக்க கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்ட 2007 ஆம் ஆண்டின் கலைத்திட்ட சீராக்கம் வகுப்பறைக் கற்றல் கற்பித்தல் செயலொழுங்கிலும் ஆசிரியர்களின் நடிபங்கிலும் மாற்றங்களை உருவாக்க வேண்டிய தேவை எழுந்தது. 21ம் நூற்றாண்டு ஆசிரியரின் ஆசிரிய வகிபாகத்தின் பண்பு ரீதியான விருத்திக்கும், மாணவர்களிடத்தில் எதிர்பார்க்கப்படும் தேர்ச்சிகளை விருத்தி செய்வதற்குப் பொருத்தமான ஒரு புதிய கற்றல் முறையாக கட்டுருவாக்க சிந்தனையில் ஆய்வுக் கண்டறிதல் என்னும் கற்றல் முறை வழிமொழியப்பட்டுள்ளது. பல நூற்றாண்டுகளாகக் வகுப்பறையில் பிரபல்யமாக இருந்து வரும் கடத்தல் வகிப்பாகத்திற்கும் பிற்காலங்களில் சிறப்பானதாக கருதப்பட்ட கலந்துரையாடல் வகிபாகத்திற்கும் விடை கொடுத்து மாணவர்களின் சிந்தனை ஆற்றல், சமூகக் கற்றல், அறிவு, திறன், மனப்பாங்கு என்பவற்றுக்கான பிரயோக வாய்ப்பு என்பவற்றினை இணைந்து வழங்கக் கூடியதான கற்றல், கற்பித்தல், செயலொழுங்கு ஒன்றனை வழங்கும் ஒரு புதிய பரிமாணமாக "நிலை மாற்று வகிபாகம்" என்னும் ஆசிரிய வகிபாக தளமாற்றம் பெற்றுள்ளது. இது புதிய கலைதிட்ட சீராக்கத்தை அடிப் படையாக கொண்டதாக அமைந்து ள்ளது.

**நிலைமாற்று வகிபாகம்.**

கட்டுருவாக்கவியல் கற்றல் கோட்பாட்டில் ஆசிரியர் ஒருவரின் மரபு ரீதியான வகுப்பறைச் செயற்பாடுகள் மாற்றமடைகின்றது. மேலும் நிலை மாற்று வகிபாகத்தினை எடுக்கும் ஆசிரியர் தன்னை இங்கு ஒரு வளவாளராக என்னும் நிலையில் இருத்தி கருமமாற்றுவார். பிள்ளைகள் தாமே கற்பதற்கான ஒரு பொருத்தமான கற்றல் கற்பித்தல் சூழலை அல்லது அத்தகைய கலாச்சாரத்தினை ஒழுங்குப்படுத்துவார். புதிய அனுபவங்களை பிள்ளைகள் பெற்றுக்கொள்ளவும் நிலவும் நடத்தையில் விருத்தி மாற்றத்தினை ஏற்படுத்தவும் கூடிய ஒரு Fascilitator ஆக செயற்படுவார்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனினும் நிலை மாற்று வகிபாகத்தில் மரபுரீதியான ஆசிரிய வகிபாகத்தின் பணிகளான பதவிக்குரித்தான பணிகள், பொறுப்புக்கள், அதிகாரங்கள் கடமைகள் என்பன எதிர்ப்பார்க் கப்படும். தொடர்ந்து இத்தகைய பணிகளுக்கும் ஆசிரியர் ஒருவர் இசைவாக்கமடைதல் அவசியமாகும். மாணவர் மைய வகுப்பறை சூழலில் மாணவர் செயற்பாட்டு ஆரம்பத்துடன் செயற்பாடுகளை அடிப்படையாகக் கொண்ட அறிவைத் தேடுவதற்கு வாய்ப்புக்களை கட்டுருவாக்க கோட்பாட்டில் நிலைமாற்று ஆசிரியர் வகிபாகம் வழங்கும். இது கூட்டான மாணவர் தேடலை முன்வைக்க வழிப் படுத்தும்.

நிலைமாற்று ஆசிரிய வகிபாகத்தில் கட்டுருவாக்க எண்ணக்கருவில் பண்புத்தரம் வாய்ந்த கற்றல் கற்பித்தல் கோலமொன்று நாளாந்த வகுப்பறைச் செயற்பாட்டில் 2007 ல் இருந்து வகுப்பறையிலிருந்து அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. இதனை 5E கற்றல் மாதிரி எனவும் அல்லது 5 படிமுறையிலான கற்றல் கற்பித்தல் மாதிரி எனவும் அழைக்கின்றனர். இந்த 5E மாதிரி அல்லது 5 Step method ல் கீழ்வருமாறு வகுப்பறை செயற்பாட்டுக் கோலம் படிமுறையில் திட்டமிடப்படும்.

1. Engagement-ஈடுபடுத்துதல் அல்லது தொடர்புபடுத்தும் முறை
2. Exploration-தேடல் அல்லது கண்டறிதல் முறை
3. Explanation-விளக்கமிளித்தல் முறை
4. Elaboration விரிவாக்கல் முறை
5. Assesment and Eralnation - கணிப்பிடல், மதிப்பிடல் முறை

**Engagement - ஈடுபடுத்தல் அல்லது தொடர்புபடுத்தல் முறை** மாணவரின் தேடலை மையமாக கொண்ட இந்த ஆசிரிய வகிபாகத்தில் Engagement ஈடுபடுத்தல் படி முறையில் கற்றல் சூழல் ஒன்றினை இருவழி தொடர்பாடல் மூலம் அல்லது உரையடல் மூலம் ஒரு செயற்பாட்டுக் பிரவேசத்தினை முதலாம் படியில் ஏற்படுத்துதல் என்பதனையே ஈடுபடுத்துதல் படி கருதுகின்றது. அறிவை கண்டறிவதற்கு மாணவர்களுக்கு சந்தர்ப்பம் வழங்கல் அனைத்து மாணவர்களுக்கும் அதனுடன் ஈடுபடும் வகையில் செயற்பாட்டுடன் கூடிய தொடர்புப்படுத்தலை இம் முதல் படியில் உருவாக்குவார். இம் முதலாவது படியானது தேடலுக்கான பொருத்தமான ஒரு பிரவேசத்தினை வழங்கும் செயலொழுங்காகும்.

**Exploration - தேடல் அல்லது கண்டறிதல்,** படி இரண்டில் மாணவரிர்கள் தேடலில் ஈடுபடுவதற் கான வழிகாட்டல், அறிவுறுத்தல்கள், வளங்கள் போன்ற வசதிகள் யாவும் மாணவர்களுக்கு வழங்கப்படல் வேண்டும். கற்றலுடன் தொடர்புபடும் வகையில் வகுப்பறை துணைக் குழுக்களாக்கப்பட்டு தேடலில் ஈடுபட சந்தர்ப்பம் வழங்கப்படல் வேண்டும். இது ஒத்துழைப்புக் கற்றலை ஏற்படுத்தும் வகையில் திட்டமிடப்படல் வேண்டும் கற்றல் எனப்படுவதனால் ஏற்படும் நடத்தை மாற்றத்திற்கு காரணமாக அமையும் சமூக இடைத் தொடர்புகள் நிகழும் சந்தர்ப்பமாக இக்கண்டறிதல்படிமுறை அமைகின்றது.

மாணவர்கள் தமக்கு கிடைக்கும் மானிட, பௌதீக வளங்களை பயன்படுத்து வதற்கும், குழுக்கலந் துரையாடலில் ஈடுபடுவதற்கும் விடயங்களை, தரவுகளை தகவல்களை திரட்டவும் பகுப்பாய்வு செய்வதற்கும் இப்படிமுறையில் ஆசிரியர் மாணவர்களின் மிக அருகிலிருந்து ஒரு வளவாளராக செயற்படுவார். இத்தகைய செயற்பாடுகளில் தொடர் தொடர்ச்சியாக ஈடுபடுவதன் மூலம் சுயகட்டுப்பாடு





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்றவர்கள் கருத்துக்கு இடமளித்தல், சகித்துக் கொள்ளுதல், பொறுமை, அர்ப்பணிப்பு, ஒத்துழைப்பு, ஒருவருக் கொருவர் உதவி செய்தல், நேர முகாமைத்துவம், நேர முகாமைத்துவம், நேர்மை போன்ற பண்புகள் இப்படி இரண்டிலுருவாடும்.

**Explanation - விளக்கமளித்தல்**

விளக்கமிளித்தல் படி மூன்றில் குழுக்களின் தேடல்கள் அல்லது இறுதிப் பெறுபேறுகள் வகுப்பில் முன்வைக்கப்படும் இதன் போது ஒவ்வொரு குழுவும் வெவ்வேறு பிரவேசங்களுடன் தேடலை முன்வைப்பதற்கு வசதிகளை நிலைமாற்று வகிபாக ஆசிரியர் வழங்க வேண்டும். அனைத்து உறுப்பினர்களுக்கும் பொறுப்புக்கள் கிடைக்கும் வகையில் முன்வைப்பின் போது சந்தர்ப்பம் வழங்கப்படல் வேண்டும். இங்கு வழமையான ஆசிரியர் முன்வைப்புக்குப் பதிலாக வித்தியாசமான மாணவர் குழுக்களின் முன்வைப்புகள் இடம்பெறும்.

**Elaboration - விரிவாக்கம்**

படி நான்கான விரிவாக்கல் படியானது மாணவர்கள் தமது தேடலை முன்வைக்கும் படி மூன்றுடன் சமாந்தரமாக இடம் பெறும். மாணவர்கள் தேடலை சுருக்கமாக விளக்கி, வலிவு, நலிவுகளை சுட்டிக்காட்டி மேலும் தேவையான விடயங்களை கோட்பாடுகளை எண்ணக்கருக்களை உட்படுத்தி விளக்கப்படுத்துவதுடன் படி மூன்றுடன் சமாந்தரமாக விரிவாக்கல் செயல்முறை (Process) முடிவடையும் வேறு வகையில் கூறினால் ஆசிரியரின் தொகுப்புடன் இது முடிவுக்கு வரும்.

**Assesment and Eralnation - மதிப்பீடு**

மதிப்பிடல் படியில் மாணவர் களிடையே உறுதிப்படுத்தப்பட வேண்டிய அறிவு, மனப்பாங்கு, திறன், பழக்கவழக்கங்கள் என்பன பற்றி விடயங்களை ஆசிரியர் கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும். அதாவது மாணவர்கள் அடைய வேண்டிய உரிய தேர்ச்சிகள் அடையப்பட்ட வகையில் தேடல்கள் நிகழ்ந்துள்ளனவா என்றும் உறுதிப்படுத்தப்படல் வேண்டும். இதன் போது பலவீனங்களை நீக்குவதற்கான on Spot feeding எனப்படும் feed forward கும் (முன்னூட்டல்) அது போலவே முன்வைப்பின் பேறு feed pack உம் (பின்னூட்டலும்) இடம் பெறும்.

மதிப்பீட்டின் போது மாணவர் களிடையே உறுதிப்படுத்த வேண்டிய நியதிகளை (Greteria) அறிவு, திறன், மனப்பாங்கு, பழக்கங்கள் என தீர்மானித்துக் கொண்டு பாட முன்னாயத்தத்தினை ஆசிரியர் வடிவமைத்துக் கொள்ள வேண்டும். இதனை சுருக்கமாக "KASP" என அழைப்பர்.

| | | |
|---|---|---|
| K | - | Knowledge |
| A | - | Attitude |
| S | - | Skill |
| P | - | Practice |

என விளக்கலாம்.


இங்கு K என்பது பிள்ளை தேடலின் போது பெறும் பாடம் சார்ந்த தேர்ச்சிகளை (Subject Competenay) அடைந்து கொள்வதனை குறிக்கும். P என்பது பாடம் சாராத தேர்ச்சிகளான (Subject Intependent Competency) சமூகத்திறன்கள் அல்லது பொது வாழ்விலும் தனிப்பட்ட வாழ்விலும் பிரயோகிக்கக் கூடிய பழக்கங்கள் என்பதனை குறிக்கின்றது. எனவே இந்த படிமுறையில் பிள்ளையானது பாடம் சார் தேர்ச்சிக்களைப் பெற்றுக் கொள்ளும் அதே வேலையில் அச்செயற்பாட்டின் மூலம் இணைந்த வகையில் பெறும் பாடம் சாராத தேர்ச்சிகளான சமூகத்திறன் களையும் பழக்கவழக்கங் களையும் பெற்றுக் கொள்கின்றனர்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# THE VALIDITY OF PUNCTUALITY



S. Yogeswari
2nd Year English Course

The globe is almost sphere shaped. It has latitudinal lines and longitudinal lines. The imaginary lines which goes through Greenwich in England in the Oo longitude or Greenwish line considering the east and west longitudinal lines, the globe is divided into twenty four time zones which amounts one hour. For each subsequent degree the time difference is four minutes so this tool of time is very essential to the human beings.

" A stitch in time saves nine" is a proverb. What do you mean by this? It means "Don't waste the time". Time is the most valuable and also the essential to human beings. It is an important role in punctuality so punctuality is the life wire of development to secure achievement, failing which the progress leads to negation. The punctuality means regulates a task to be expedited at a particular point of time. Our Endeavour is cast in a mould of specific goal. So to achieve this goal all the aspects of the goal should be performed at the appointed time. One who approaches to the appointed time, will lose his goal.

There is a proverb "Wasted time never returned it" it means, time will not stand in one position and taken over again for anyone this we've to give a respect to time, afterwards we won't face any obstacles to achieve our goals. We can see the people spend the hours in lazing around at present time, but if the same number of hours were valued and used fruitfully then, daily chore could be fulfilled easily.

For and instance, in this globe the scientists great thinkers and poets involve, to attempt the experiment with time factors, and also the administrative machinery of the government and the private sectors aimed at punctuality. In this care the



இறைவா, துன்பங்களைக் கொடு, அதைத் தாங்கும் சக்தியையும் கொடு. GTC

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

time factor plays an important role to our day to day life.

There are some golden facts about the validity of time are given below.

- * One second in hundred - a person lost the gold medal in the Olympic games in harr's breadth.
- * One second - a person met with an accident in one second.
- * One minute - a person missed the train in one minute
- * Ten minutes - a person got ten minutes late to enter the interview board and compelled to lose his job.
- * One hour - a doctor who came late to hospital by hour, couldn't save the life of a critical patient.
- * One week - The editor prepared and analysed the details, unfortunately he couldn't published the newspaper in a week.
- * Two years - a student has got less one mark in Advanced Level examination, then he'd failed to enter the University.
- ó Eleven years - a student got failure in the Ordinary level examination as wasted the time.

The above facts pinpoint the importance of time factor, especially in the adolescence stage to the youngsters. Not only for them, it is integrated teaching and learning process. Being teachers, we should try to make the maximum utility of time by learning, teaching and searching fruitful things in day to day life so we'll need more time to work, if we daily schedule the duties properly through out, then our life could be spent smoothly. Our goal is to devote the minimum amount of time to work so, don't squander the time. "Time is gold"

வெற்றி என்பது புரியாத புதிர் ஒன்றும் இல்லை, மாறாக சில அடிப்படைக் கொள்கைகளை விடாது தொடர்ந்து பயன்படுத் துவதால் வரும் விளைவே ஆகும்.
இதற்கு நேர் மாறானதும் உண்மையாகும். தோல்வி என்பது ஒரு சில தவறுகளைத் திரும்பத் திரும்பத் செய்வதன் பலனாகும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மாற்றம் வேண்டும்

கா. யோகேஸ்வரன்
விடுகை வருடம், ஆரம்ப நெறி

எல்லோரையும் போல எனக்குள்ளும் ஓரிரு ஏக்கங்கள், எதிர்பார்ப்புக்கள்! உங்கள் எல்லோருக்கும் போலவே சில சுதந்திரங்களும் தனிமைகளும் எனக்குள்ளும் அடைபட்டுக் கிடக்கின்றன வெகுகாலமாய். இவ்வுள்ளத்து உணர்வுகளை உலவவிட ஓர் வடிகால் கிடைத்திருப் பதாய் எண்ணியே இக்கருவோடு நான் கரம்கோர்க்க விரும்புகிறேன்.

மாற்றம் என்னும் மந்திரச் சொல் என்றும் மாறாதது. இதன் மாபெரும் சக்தியை இருவேறு திசைகளுக்குள் நாம் இனங்காணலாம். ஒன்று நன்மை, இன்னொன்று தீமை. இந்த இரட்டைகளுக்குள் அகப்பட்ட காலத்தின் நிஜங்கள் சின்னா பின்னமாகிச் சீரழிந்து நிற்கின்றன. இதற்கு நானொரு பதிலை சொல்கிறேன். நீயொரு பதிலைத் தருகிறாய் என்றாலும் நமக்கான பதில் இன்னும் நமக்கு வந்து சேரவில்லை.

நம் வீட்டைச் சுற்றிலும் ஏராளமான அழுக்குகள் குவிந்தவண்ணமே இருக்கின்றன. சாக்கடைக்குள் சங்கீதம் பாடிக்கொண்டு எத்தனை நாளைக்கு வாழ முடியும். எமது சாக்கடைக்குள் கிடக்கும் எத்தனை விடயங்களை நாம் எடுத்தாளலாம்? ஒன்றா, இரண்டா ஓராயிரம் கண்கள் வேண்டும் உண்மையை எதிர்கொள்ள. ஆனாலும், மூன்று முக்கிய முடிச்சுகளை இங்கே விசாரிக்கலாம் உங்கள் அனுமதியோடு. **மார்க்கம் சொல்லும் மதங்கள், ஆதிக்கம் செலுத்தும் அரசியல், மானுடம் காக்கும் ஆசான்கள்** இவை குறித்து பேசுவது இக் கட்டுரையின் நோக்கமாகும். இதில் சில இனிக்கலாம், சில வேப்பங்காயாய் கசக்கலாம். படிந்திருக்கும் பாரிய கறையை அழிக்கலாம் என்ற தாகத்தோடும் வேகத்தோடும் நான் கீழ்வரும் வரிகளை கிறுக்குகிறேன்.

மங்களகரமாய் இருப்பதென்பதற்காய் நான் மதங்களின் முன்பே மண்டி யிடுகின்றேன். நானும் ஒரு ஆத்திகன் என்பதால் ஆதங்கப்படுகிறேன். மதங்கள் உருவாக்கப் பட்டது மகத்தான நோக்கத்திற்காக. அந்த நோக்கத் தையே நொண்டியாக்கி மத நோயாளிகளை உருவாக்குகின்றனர் மதம் பிடித்த சில மதவாதிகள். தனது மதம் சிறந்ததெனக்காட்ட ஏனைய மதங்களை ஏளனம் செய்வதை மனமேற்பானா மாற்று மதத்தவன்? இங்கேயே ஆரம்பிக்கிறது இந்த எல்லைகடந்த விளையாட்டு.

பத்து பஸ்வண்டிகள் பற்றி எரிகின்றது; தொடரூந்தொன்று தொலைவில் எரிகிறது. மூலை முடுக்குகளில் சில முச்சக்கர வண்டிகள் எரிந்து கொண்டிருக்க எரிபற்று நிலையில் இன்னும் பல வண்டிகள்.

பரவாயில்லை, உனது உற்பத்திகளை உறிஞ்சிக் கொள்ள உனக்கு உரிமையுண்டு. ஆனால், இறைவன் படைப்பை இம்சை செய்ய உனக்கென்ன உரிமையுண்டு. வேலை முடித்து வீடு திரும்பும் ஐம்பிள்ளை களின் அப்பா, நண்பனோடு விளையாடும் விளையாட்டுப் பையன், அன்றாட உணவுக்காய் அலைந்து திரியும் அப்பாவிப் பிச்சைக்காரன் இந்த நாலுபேரின் உயிரைக் குடிக்க உனக்கென்ன உரிமையுண்டு.
இந்த வெறிப்பிடித்த வீணர்களின் விளையாட்டுக்கு மதக்கலவரம் என்று பெயர். மதங்களின் நாடகங்கள் மண்மீதில் எத்தனையோ நடந்தேறியிருக்கின்றன. ஆனாலும் பண்டிதன் முதல் பாமரன் வரை இவ் இன, மத மோதலில் எவனுமே இதனின்றும் பின்னிற்பதில்லை.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாற்றம் வேண்டும், மதங்களில் அல்ல மனங்களில்! தாள்களின் தரமுயர்த்தி நிற்கும் மத தத்துவங்களை மதவாதிகளின் தலைக்குள் தள்ள வேண்டும். எல்லா மதத்தவர் வீட்டிலும் எல்லா மதத்தினதும் புனித நூல்களும் இருக்க வேண்டும். மதங்களின் உண்மையை உணர வைக்க வேண்டும். அரவணைப்பவன் ஆத்திகன், மறுப்பவன் நாத்திகன் இதிலொன்றும் தவறில்லை. மதங்களே இல்லாமல் மனிதன் வாழலாம், மனித நேயம் மட்டும் போதும்! ஆனால் பாருங்கள், மனித நேயம் இல்லாமல் மனிதனாய் வாழ முடியாது. ஓ.......! என்னருமை மதபோதகர்களே நீங்கள் ஆன்மீகவாதிகளை உருவாக்குங்கள் மதவாதிகளை வேண்டாம்! ஆன்மிகம் என்பது அனைத்து மதங்களையும் அரவணைத்து செல்வது. "மேன்மை கொள் சர்வமத நீதி விளங்குக உலகமெல்லாம்"

வீதியோரம் விரைகையில் சமயங்களின் சந்நிதி கடந்திருக்கையில் அழகாய் மேடையமைத்த ஓர் விளையாட்டு மைதானம் அதன் நடுவில் ஓர் அரசியல்வாதி அவனைச் சுற்றிலும் ஐந்நூறு பேர். எமக்காய் வரும் தேர்தல் தலைவர்கள். அவர்களுக்கு அதுதான் திருவிழாக் காலம்.

இவர்கள் யாரென்று இன்னும் விளங்கவில்லையா, "நேற்றுவாங்கிய வங்கிக்கடன், இன்று எனது இரவு சாப்பாடு, நாளை என் தொழில், ஏழைக்கு கல்வி, எப்போது என் தேசத்தில் எனக்கு சுதந்திரம்" இத்தனை விடயங்களையும் இவர்களே தீர்மானிப்பர். இதனை அறிந்தும், அறியாத நாங்களே இப்படிச் சொல்லி "எஸ்கேப்" ஆகிறோம். "அரசியல் ஒரு சாக்கடை" இன்னும் எத்தனை காலத்துக்கு எங்களை நாங்களே ஏமாற்றிக்கொள்ள போகிறோம், அந்த சாக்கடை வழியே சாகும் வரை சவாரி செய்ய வேண்டுமா?

அழுக்காக்கியதை நாங்களே அகற்றவும் வேண்டும், பள்ளிகூடம் தொடங்கி பல்கலைக்கழகம் வரை அரசியல் கற்கின்றோம். என்ன பயன்? எவரோ சொன்னதை எழுத்தில் ஒப்புவித்து பரீட்சையில் சித்தி. பின் பாராட்டுக்களோடு பல பட்டங்கள் அத்தோடு அவருக்கு அரசியல் ஆகாது. ஆனால் தகுதியற்ற ஒருவனை தலைவனாக்க தானும் உடன் போவார். தன் வீட்டை சுத்தம் செய்ய தனக்கு உரிமையுண்டு என்ற உண்மையை உணரவேண்டும்.

இதுவரை சொன்ன இரண்டையும் இலக்கு நோக்கி நகர்த்த இவர்களால் முடியும். மனித உருவை மனிதனால் மாற்றும் மந்திரங்கள் தெரிந்தவர்கள். பலர் போற்றும் நல்ல பல மாற்றங்களுக்கு மன்னர்கள், இவர்கள் வரிசையில் நுழைய எனக்கும் ஒரு வாய்ப்பு. என் குலம் என்பதால் பிரச்சினைகளை மறைத்து பிணமாய் வாழ எனக்கு இஷ்டமில்லை.

மலையாய் உயர்ந்திருந்த எங்கள் மதிப்பு மடுவைநோக்கி பயணிக்கிறது படுவேகமாய். ஏன் இந்த அதிருப்தி மாற்றம்? இதுதான் காரணம், பொருத்தமற்ற சிலரை என்றோ பொசுக்கியிருக்க வேண்டும். அன்று வேடிக்கைப்பார்த்தோம் இன்று வேதனைப்படுகின்றறோம். அவ்வளவுதான்.

எல்லாருக்கும் போல எங்களுக்கும் ஒரு சங்கம் "ஆசிரியர் சங்கம்" என்ன செய்கிறது? ஊழியம் கூட்டிக்கேட்டு உண்ணாவிரதம். காரணம் சரி, கைகோர்ப்போம். ஆனாலும் எம்மில் ஒருவன் குலதர்மம் மீறி குற்றம் செய்கின்றான். அப்போதும் சங்கம் காரணம் தேடியே காலத்தைக் கடத்தும் ஏன் தெரியுமா எங்களில் சிலர் அரசியல்வாதிகளின் அரவணைப்பில் அகப்பட்டிருப்பர், அவர்களை அசைக்க ஆளில்லை என்ற அகந்தையில். பயிரை தாண்டி வளரும் களைகளின் தலையை கொய்வது போல் எங்களுக்குள்ளும், துஷ்டர்களை தூக்கியெறியும் துணிச்சலை வளர்த்துக்கொ ள்ள வேண்டும்.

எண்கோணத்தில் அசையும் எல்லையற்ற வாழ்வின் வக்கிரங்கள் வன்முறைகள் மனிதாபிமானத்தைக் கூறுபோட்டுத் திரிவதை மானிடன் என்ற ரீதியில் நாம் கண்வழித் துடைத்து வாழாவிருந்துவிட முடியாது. நீதியும் நியாயமும் தழைத்தோங்க வேண்டுமானால் மனிதனுக்குள் மானுடம் மீண்டும் வேண்டும்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர்களின் கல்வி உரிமையும், அதனை பெறுவதிலுள்ள சவால்களும்



வி. இளங்கோவன்
விடுகை வருடம், ஆரம்ப நெறி

மனிதர்களின் மனித உரிமை என்பது பற்றி 1948 ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் சபையினால் வெளியிடப்பட்ட அனைத்துலக மனித உரிமைகள் பிரகடனத்தில் "மனித பிறவியினர் சகலரும் சுதந்திரமாகவே பிறக்கின்றனர். அவர்கள் மதிப்பிலும், உரிமைகளிலும் சமமானவர்கள், அவர்கள் நியாயத்தையும் மன சாட்சியையும் இயற்பண்பாக பெற்றுள்ளார்கள், அவர்கள் ஒருவ ரோடு ஒருவர் சகோதர உணர்வு பாங்கில் நடந்துக் கொள்ள வேண்டும்" என்பதாக அமைந்துள்ளது.

எனவே, மனித பிறவியாக பிறந்த அனைவருக்கும் உரிமைகள் சமமானவை என்பதாலும் சிறுவர்களும் மனித பிறவியினர் என்ற கூட்டத்திற்குள் அடங்குவதாலும் அவர்களுக்கும் உரிமை உள்ளது என்ற அடிப்படையில் அவர்களின் உரிமையை பாதுகாப் பதற்காக விஷேடமான ஏற்பாடுகளின் தேவை உணரப்பட்டது. அதற்கான காரணம் வளர்ந்தோரைப் போலன்றி சிறுவர்களால் தமது தேவைகளை பூர்த்தி செய்து கொள்வதற்கு முடியாத நிலை காணப்படுவதால் அவர்கள் மீது விஷேட கவனமும், பாதுகாப்பும் செலுத்தப்பட்டது.

சிறுவர்கள் என்பவர்களை எந்த வயதில் உள்ளடக்குவது என்பது பற்றிய சர்ச்சை ஆரம்பத்தில் காணப்பட்ட போதும் 18 வயதிற்கு கீழ் பட்டவர்களை அதற்குள் அடக்குவது எனத் தீர்மானிக்கப்பட்டது எனினும் இவ் வயதெல்லை நாட்டுக்கு நாடு வேறுபட்டதாக காணப்படுகிறது. சிறுவர்களின் உரிமைகளில் பிரதானமாக அமைவது கல்வி உரிமையாகும். அதனை அவர்களுக்கு பெற்றுக்கொடுப்பதற்கும், பாதுகாப் பதற்குமான பல ஏற்பாடுகள் சர்வதேச ரீதியிலும், தேசிய ரீதியிலும் செய்யப்பட்டுள்ளன. அவற்றினை நோக்கும் போது, 1948 ஆம் ஆண்டின் மனித உரிமை பிரகடனத்தின் 26 ஆம் உறுப்புரையானது ஒவ்வொரு வருக்கும் கல்வி கற்பதற்கான உரிமை உண்டு. குறைந்தது தொடக்க அடிப்படை கட்டங்களிலாவது கல்வி இலவசமானதாய் இருத்தல் வேண்டும். தொடக்கக் கல்வி கட்டாயமாக்கப் பட்டிருத்தல் வேண்டும். தொழிநுட்பக் கல்வியும் உயர் கல்வியும் யாவருக்கும் திறமையின் அடிப் படையில் சமனான முறையில் கிடைக்கக் கூடியதாய் இருத்தல் வேண்டும் என்கிறது.

இக்கருத்தையே 1966 ஆம் ஆண்டு அறிமுகமாக்கி 1976 ஆம் ஆண்டு அமுலுக்கு வந்த பொருளாதார, சமூக, கலாசார உரிமைகள் மீதான சர்வதேச பொருத்தனையும் வலியுறுத்துகிறது.

1989 ஆம் ஆண்டு சிறுவர்களின் உரிமையை பாதுகாத்தல், அவர்களுக்கு உரிமையை வழங்குதல் தொடர்பாக ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் சபையால் சிறுவர் உரிமைகள்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பற்றிய சமவாயம் ஏற்படுத்தப்பட்டது. சிறுவர்களின் உரிமைகளையும் நலன்களையும் பிரதானமாகக் கொண்டு ஏற்படுத்தப்பட்ட சமவாயத்தில் சிறுவர்களின் கல்வி உரிமைப் பற்றியதாக உறுப்புரை 28 ல் கல்வி பயிலும் உரிமை பிள்ளைகளுக்கு உண்டு என்பதை அரசுத் தரப்பினர் ஏற்றுக்கொள்ள வேண்டும். இந்த உரிமையை படிப்படியாகவும் சமவாய்ப்பு என்னும் அடிப்படையிலும் அனுபவிப்பதற்கும் வகை செய்யும் பொருட்டு அரச தரப்பினர் பின்வரும் நடவடிக்கைகளை விஷேடமாக மேற்கொள்ள வேண்டும்.

1. எல்லோருக்கும் ஆரம்பக்கல்வி கட்டாயமாகவும் இலவசமாகவும் கிடைக்கச் செய்தல்.

2. பொது மற்றும் தொழில் சார் கல்வி உட்பட பல்வேறு தரப்பட்ட இடை நிலை கல்வியை ஊக்குவித்து ஒவ்வொரு பிள்ளைக்கும் அதை கிடைக்க செய்வதுடன் இலவச கல்வி தேவைப்படுவோருக்கு நிதி உதவி அளித்தல் போன்ற பொருத்தமான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

3. எல்லோருக்கும் ஆற்றலின் அடிப்படையில் பொருத்தமான வழிமுறையில் உயர் கல்வியை கிடைக்கச் செய்தல்.

4. எல்லா பிள்ளைகளுக்கும் கல்வி மற்றும் தொழில் சார் தகவல்களும் வழிகாட்டல்களும் கிடைக்கச் செய்தல்.

5. பிள்ளைகள் பாடசாலைக்கு கிரமமாக செல்வதை ஊக்குவிக்கவும் படிப்பை இடை நிறுத்திக் கொள்வோரின் தொகையை குறைக்கவும் நடவடிக்கை மேற்கொள்ளல் மற்றும் விஞ்ஞான தொழிநுட்ப அறிவு, நவீன போதனா முறைகள் முதலியன அனைவருக்கும் கிடைப்பதற்கு வழி செய்ய வேண்டும்.

உறுப்புரை 29 அரச தரப்பினர் பிள்ளைகளின் கல்வி தொடர்பாக பிள்ளையின் ஆளுமை திறமைகள், உடல் மற்றும் உள சார்ந்த ஆற்றல்கள் முழுமையாக பரிணமிக்க செய்வதாக கல்வி அமைய வேண்டும் எனக் குறிப்பிடுகிறது.

பிள்ளையின் கலாசார மொழி, சுகாதாரங்களை பாதுகாப்பதாக அமைத்தல், கல்வியினூடாக புரிந்துணர்வு சமாதானம் சகிப்பு தன்மை ஆகியவற்றை பாதுகாப்பதாக அமைய வேண்டும். மேற்படி சிறுவர் சமவாயத்தை இலங்கை அரசு 1991 ம் ஆண்டு ஏற்று அங்கிகரித்து அதன்படி செயற்படுவதாக கையெழுத் திடப்பட்டது.

இலங்கையில் தேசிய மட்டத்தில் பிள்ளைகளின் கல்விக்காக இலவசக் கல்வியின் அறிமுகம் தொடந்து அனைத்து அரசாங்கங்களினாலும் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. 14 வயதிற்கு குறைந்த பிள்ளைகளை பாடசாலைக்கு அனுப்புதல் கட்டாய மானதாகும். இது 1997 ம் ஆண்டின் 100/35 இலக்கம் கொண்ட அரசாங்க வர்த்தமானி பத்திரிகையில் வெளியிடப்பட்டது. மற்றும் தாய்மொழியில் கல்வி கற்பதற்கான வாய்ப்புகளும் வழங்கப்பட்டுள்ள போதும் நடைமுறையில் அதன் செயற்பாடுகள் பற்றியும் கவனிப்பது அவசியமாகும்.

கட்டாயக் கல்வியை இலங்கை அரசு நடைமுறைப்படுத்தி செயற்பட்டு வரும்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலையில் இலங்கையில் அதிகமான சிறுவர் தொழிலாளர்கள் வேலை செய்கின்றனர். இதற்கான காரணங்களை அறியும் போது இக்கல்வியானது கிராம மற்றும் பெருந்தோட்டப் பகுதிகளில் திட்டமிடலின்றி செயற்படுத்தப்பட்டு வருவதாகும். இப்பகுதி மக்கள் கல்வியில் பின்தங்கியுள்ள நிலையில் தேசிய ரீதியாக நடைமுறைப் படுத்தப்படும் கல்வி கொள்கை மூலம் அதாவது, ஒரே கல்விக் கொள்கையை வகுத்துக் கொண்டு நடைமுறைப் படுத்துதல் ஒரு சிறப்பான செயற்பாடாக அமையாது. குறிப்பாக நகர்பகுதிகளில் கல்வி நிலை உயர்வாகவும் கிராம மற்றும் தோட்டப்புறங்களில் கல்வி நிலை குறைவாகக் காணப்படுவதற்கும் தற்போது அறிமுகம் செய்யப்பட்டுள்ள 5E முறையானது பெரும் சவாலாக அமைகின்றது. இதன் பிரதான விடயமாக அமைவது மாணவர் செயற்பாடாகும். அதன் மூலம் மாணவரின் தேடலுக்கு அதிகம் வாய்ப்பளிக்கப்பட வேண்டும். ஆயினும் அதற்கான வாய்ப்புகள் அனைத்து மாணவர்களுக்கும் கிடைக்கின்றதா? என்பது கேள்விக் குறிய விடயமாகும். நகர்ப்புற மாணவர்கள் இணையம், கணனி என தனது தேடலை வளர்த்துக் கொண்டுவரும் நிலையில் நகர்புறத்தை விட்டு வேறுபகுதிகளிலுள்ள மாணவர்களின் தேடல் புத்தகங்க ளுக்குள் மட்டும் முடிந்து போகிறது.

எனவே, அனைத்து மாணவர்களிடமும் ஒரே அளவான ஆளுமை மற்றும் திறனை கல்வி மூலம் ஏற்படுத்தும் செயற்திட்டம் தோல்வியடைகிறது. அண்மையில் அரசால் அறிமுகம் செய்யப்பட்டுவரும் தொழிநுட்பத்தை அனைவருக்கும் வழங்குதல் செயல்திட்டம் மூலம் அனைத்து பாடசாலை மாணவர்களுக்கும் இவ்வாய்ப்பு கிட்டவில்லை என்பதும் குறிப்பிட்டாக வேண்டும். இவ்வாறான சூழலில் மாணவனின் தேடலுக்கு தனக்கு ஒரு சுமையென கருதும் போதும், குறிப்பாக கிராமப்புற பெருந்தோட்டப் புற மாணவர்கள் பாடங்களின் மீதும் கல்வியிலும் இயலாமை நிலையை ஏற்படுத்தி வருகின்றது. குறிப்பிட்ட செயற்பாட்டை செய்ய முடியவில்லையென பாடசாலைக்கு வருவதை தொடர்ச்சி யாக குறைத்து பின்னர் இடைவிலகல் நிலைக்கு போய் விடுகின்றது. எனவே, கல்வித் திட்டங்கள் கொள்கைகளை வகுக்கும் போது அதற்கான வாய்ப்பு க்களை ஏற்படுத்தி விட்டு அவற்றினை நடைமுறைப்படுத்துதல் சிறப்பான தாகும்.

மற்றும் குடும்பத்தின் வறுமை, பொருளாதாரம் தனது வாழ்க்கைக்கு போதுமானதாக அமைய வில்லை யெனக் கருதி தனது பிள்ளைகளை சிறுவர் தொழிலாளர்களாக இணைக்கின்றனர். இதன் மூலம் தனது ஆரம்ப, இடைநிலை கல்வியைக் கூட நிறைவு செய்யாத சிறுவர்கள் தொழிலாளர்களாக வேலை செய்கின்றனர். இதனை தடுப்பதற்கான வழிமுறைகளை சரிவர நடை முறைப்படுத்தி இருந்தால் இவ்வாறான சிறுவர் துஷ்பிரயோகத்தை தடுத்து அவர்களுக்கான கல்வியுரிமையை உறுதிப்படுத்துவதற்கு முடியுமாக இருந்திருக்கும்.

மற்றும் சிறுவர் துஷ்பிரயோகங்களால் வீடுகளிலும், சமூகத்திலும் சிறுவர்கள் பாலியல், போதை பொருள் துஷ்பிரயோகங்களுக்கு உட்படுவதால் அவர்களின் பாடசாலை வருகை குறைவாகக் காணப்படுவதுடன்



நல்ல பணியாட்கள் வேண்டுமா? நீங்கள் நல்ல எஜமானராக இருங்கள். GTC

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களின் கல்வி நிலையும் பாதிப்படைகின்றது. இலங்கையில் பாலியல் துஷ்பிரயோகம் தொடர்பான தண்டனைகள் வலுப்படுத்தப்பட்ட நிலையில் அவை அனைத்துப் பிரதேச மக்களுக்கும் விழிப்புணர்வுகளை ஏற்படுத்துவதாக அமையவில்லை. மற்றும் (80%) துஷ்பிரயோகங்கள் வீட்டிலேயே சிறுவர்கள் மீது நடாத்தப்படுவதாக காணப்படுகின்றது. அவற்றினை சிறுவர்கள் வெளிப் படுத்துவது இல்லை.

எனவே, இவர்களின் கல்வி நிலை குறைவடைகிறது. கல்வியை முழுமையாக பெற்றுக்கொள்ள முடியாத நிலை காணப்படுகின்றது. அண்மையில் இலங்கையில் நடந்து முடிந்த போரின் வடுக்களை அதிகம் சுமந்திருப்பவர்கள் சிறுவர்களே. அதாவது போரில் பங்குபற்றிய இரு தரப்பினரை விட அதிகம் மரணித்தது பெது மக்களே. அதிலும் அதிகமாக சிறுவர்களே இறந்தனர். மற்றும் பலர் அங்கவீனர்களாக இருக்கின்றனர். இவர்களின் உயிருக்கு உத்தரவாதம் அளிக்காத நிலையில் கல்வியுரிமை பற்றி எதிர்பார்ப்பது தவறுதான். ஆயினும், போரின் முடிவுடன் தொடர்ந்த முகாம் வாழ்வில் பெரியளவிலான சிறுவர்களின் கல்விநிலை காணாமல் போய்விட்டது. மேலும் இன்றும் அநேகமான சிறுவர்களின் கல்விக்கான ஏற்பாடுகள் செய்யாத நிலையிலேயே காணப் படுகின்றது. மற்றும் சிறுவர்களை ஆயுதப் படையில் இணைத்ததன் மூலம் அவர்களின் கல்வி பெறும் வாய்ப்பு இல்லாமல் போனது. ஆக, இதற்கான ஒரு நடவடிக்கையை உறுதிப்படுத்த அரசு தவறிவிட்டது என்றே கருத வேண்டும்.

ஆக, இலவச கல்வி, கட்டாயக்கல்வி, அனைவருக்கும் தொழிநுட்பம் மற்றும் சமகல்வி என அரச கொள்கைகளும் அரசின் அறிக்கைகளும் வெளிவந்த போதும் அவற்றின் நடைமுறைத் தன்மையும் என்கின்ற எதை நோக்கத்தில் சிறுவர்கள் கல்விக்கான உரிமை பற்றிய இலங்கை அரசின் ஏற்பாடுகள் ஓரளவு போதுமானதாக காணப்பட்டபோதும் நடைமுறைப் படுத்தலில் பல்வேறான இடர்பாடு களையும் தவறுகளையும் ஏற்படுத் துகிறது.

ஆசிரியர் இடப்படுத்துகையில் ஏற்படும் முறையீனங்கள் வள,பௌதிக வளப்பகிர்வு அதாவது ஆய்வுகூடம், மைதானம், சிறுவர்கள், ஆசிரியர்கள் மாணவர்கள் விடுதி என்பன அனைவருக்கும் சமனான நிலையில் காணப்படவில்லை. அதாவது பட்டதாரி ஆசிரியர்கள் அநேகமாக நகர்ப்புற பிரபலமான பாடசாலைகளிலேயே பணிக்கு அமர்த்தப்படுவதால் நகர்புறத்திற்கு வெளியேயுள்ள பாடசாலை மாணவர்களுக்கு அவர்களின் தேவையை பெற்றுக் கொள்ள முடியாத நிலை காணப்படுகிறது. இது நகர்புற மாணவர்கள் சூழலுக்கு மட்டும் சாதக நிலையை ஏற்படுத்தும். அனைவரு க்கும் சமகல்வி என்ற நிலை ஏற்படாது.

உசாத்துணை நூல்கள் :-


1. மனித உரிமைகள் கோட்பாடுகளும் வியாபகமும் (வேலுப்பிள்ளை குணரத்தினம்,
   குணநாயகம் விக்னேஸ்வரன்

2. சிறுவர் உரிமைகள் இலகுவான முறையில் - வழக்கறிஞர் சாருக்க சமரசேகர.








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Suggestions for Difficulties of speaking English in Sri Lanka



S. Sridharan
2nd Year English Course

English is the gateway to the world to Communicate with multilingual and multicultural of the people in the world. That is why the importance of English language is the essential part in our life and it is dispensable of our life existence. The people Communicate and fulfill their requirements effectively through using English language. This is why our president He Mahinda Rajapaksa has taken measures to improve spoken English in schools. However still the learners have enormous difficulties in speaking English, so I would like to express some difficulties that have been remaining in speaking English and I world try to suggest some solutions.

In Sri Lankan schools whether in urban area and rural areas the students do not communicate in English when they have good opportunities in class. In spite of teachers use the techniques such as role plays, debates, dialogue, conversation and group work. They have lack of knowledge in Speaking English. Because they don't have the necessary vocabulary.

But when we compare schools in India where the children comes to grade six with a vocabulary of 2000 words and they are able to speak English fluently. So my suggestion is expanding vocabulary in the class room is they way to rectify this problem.

Secondly, if we examine the problem we have new competency based curriculum and it was introduced in order to increase the speaking skills also. But our teachers do not allocate enough time to communicate with pupils in English and do not care about the oral practice. But some teachers explain this on account of the family background and the influence of environment they suffer in speaking English, but in India even through they do not come from educated family or have an English speaking family background they speak English fluently. So to avoid this problem teachers should provide more opportunity to the students to speak English in the classroom whether they make mistake or not.


If we survey the third view, in Sri Lanka at the primary level, language teacher (English) does not introduce the phonetic scripts. If they introduce the phonetic script, using phonic approach at the primary level, the pupils will improve their skills of speaking accurately, but in the case India this is the basic thing that they make the children to improve skills of English with. That is why they acquire more knowledge on phonic approach at the primary level. So, to recover this situation in our country pupils must be introduced with phonetic scripts at the primary level.

Ultimately, even the new curriculum provides and improves the skills. still we have to have some changes to improve the students' speaking skill in the classroom.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நேரத்தை பேணி நடப்போம்



எச். கே. எம். நியாஸ்
விடுகை வருடம், அரபு நெறி

"காலம் பொன்னானது" எனும் வார்த்தை யாவரும் அறிந்த விடயமே. பொன்னுக்கு மக்கள் மத்தியில் எவ்வளவு மதிப்பு உண்டோ, அதை விட காலம் மிக முக்கியம். பொன் இல்லாமல் வாழலாம் ஆனால் காலம் இல்லாமல் வாழ முடியாது. ஏனெனில் எந்தவொரு வேலையை செய்வதாக இருந்தாலும் நேரத்தின் அடிப்படை யிலேயே செய்ய வேண்டும் எந்த வேலைக்கும் குறித்த ஒரு காலம் உண்டு. இல்லையேல் இவ்வுலகம் நிலைத்திருப்பது அசாத்தியமே.

நாளொன்றில் நடைபெறும் அனைத்து நிகழ்வுகளும் காலத்தின் அடிப்படையி லேயே நடைபெறுகின்றது. அது இயற்கையாகவே இறைவனால் உருவாக்கப்பட்ட விடயம். அதனடிப் படையிலேயே எமது செயற்பாடு களையும் காலத்தின் அடிப்படையில் தீர்மானித்து செயற்படுத்துதல் வேண்டும். அதற்கு நாம் நேரத்தை பேணி நடப்பது அவசியமாகும்.

நேரத்தை பேணி நடக்காதவிடத்து ஏற்படும் விளைவுகளை,

1. பஸ்ஸை அல்லது புகையிரதத்தை தவறவிட்ட ஒருவரிடம் கேளுங்கள் அல்லது
2. பரீட்சை நிலையத்திற்கு அல்லது நேர்முகப்பரீட்சைக்கு தாமதமாக வந்த ஒருவரிடம் கேட்டுப் பாருங்கள்.
3. குறைப்பிரசவத்தில் பிறந்த பிள்ளையின் தாயிடம் கேட்டுப் பாருங்கள் அல்லது
4. பரீட்சை எழுதிவிட்டு தடுமாற்றத்தில் இருக்கும் ஒருவரிடம் கேட்டுப் பாருங்கள் அல்லது
5. வேலைக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பம் காலதாமதமாகி கிடைத்த ஒருவரிடம் கேட்டுப் பாருங்கள்.

உணர்வுபூர்வமாகக் கூறுவார்கள். இது போன்று தாம் யாரிடம் கேட்டாலும் நேரம் ஏதாவது ஒரு விதத்தில் எமது வாழ்வுடன் சம்பந்தப்பட்டிருக்கும்.

இதற்காக நாம் என்ன செய்வது? எவ்வாறு நாம் நேரத்தை பேணி நடப்பது? என்று சிந்திக்கின்றீர்களா? இதனை முயற்சித்துப் பாருங்கள். நாம் நேரத்தை பேணி நடந்து கொள்வ தற்காக ஒரு கால அட்டவணையை (TIME TABLE) தயாரித்துக் கொள்ளுதல் வேண்டும். அதில் நாம் நாளொன்றில் செய்ய வேண்டிய அனைத்து விடயங்களும் இடம் பெறுதல் வேண்டும். அதன்படியே செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும். மேலும், ஒவ்வொரு நாளும் இரவு எமது செயற்பாடுகள் பற்றிய ஒரு சுயவிசாரணையை மேற்கொள்ள வேண்டும். அதன் போது எமது வேலைகளை மேலும் சிறந்த முறையில் அடுத்த நாளில் மேற் கொள்ளலாம்.

சொன்ன சொல்லையும் முடிந்த காலத்தையும் திரும்பிப்பெற முடியாது என்று கூறுவர். அதாவது நாம் ஏதாவது பேசி விட்டு ஐயோ! நாம் அப்படி கூறியிருக்கக் கூடாதே என்று யோசிப்போம்.


யோசித்து என்ன பயன்? நாம் சொன்னதை திரும்பப் பெற முடியுமா? அது போலவே எம்மைக் கடந்து சென்ற காலத்தை திரும்பிப் பெற முடியாது. இறந்த காலம் சிந்தித்து செயற்பட உகந்ததல்ல. மாறாக, அது நினைத்து மகிழவே சிறந்தது. ஆனால் நிகழ்காலமும் எதிர்காலமுமே மிக முக்கியம். ஆகவே முடிந்ததை நினைத்து வருந்தாமல் நடக்கப் போவதை திட்டமிட்டு செயற்படுத்து வோமேயானால் காலத்தை நாம் வெல்லலாம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ENGLISH TRAINING CLASS (ETC)



S. Jayachandran
2nd Year, English course

1. "Hard work: Hard work is best investment a man can make."
   -C.M. Schwols –
2. "If you don't want anyone to know, don't do it."
   -Chinese Proverb –
3. "Behind an able man there are always other able men."
   - Chinese Proverb –
4. "He who laughs last is generally the last to get the joke."
   - Cahen, Terry –
5. "The one real objective of education is to leave a man in the condition of continually asking questions"
   - Cerighton Bishop –
6. "Men are what their mother made them."
   - Emersdon –
7. "Fear springs from ignorance."
   - Emerson –
8. "If you educate a man you educate a person, but if educate a woman you educate a family."
   - Manikan Ruby –
9. "An idea isn't responsible for the people who believe in it."
   - Marguis Don –
10. "No one really listen to anyone else. Try it for a while and you will see why."
    - Mignon –
11. "Wickedness is weakness."
    - Milton –
12. "Either do not attempt at all or go through with it."
    - Ovid –
13. "A good face is the best letter of recommendation."
    - Queen Elizabeth –
14. "Quality is never an accident; it is always the result of intelligent effort."
    - Ruskin John –





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

15. "Do one work at a time. Do that as if your life depended upon it."
- Euqune Grace -

16. "When you are making a success of something, it's not work, It's way of life. You enjoy yourself because you are making your contribution to the world."
- Granataelli Anthony –

17. "Responsibility walks hand in hand with capacity and power."
- J.G. Holland –

18. "There was never an age in which useless knowledge was more important that our onw."
- Joad C.E.M –

19. "A gentleman has all the qualities of a saint except saintliness."
- Kingsmill Hugh –

20. "Men think differently who live differently."
- Laski Horold –

21. It is easier to gain fame than to retain it."
- Schnabel Artur –

22. "It a man is worth knowing is all he is worth knowing well."
- Smith Alexander –

23. "It is the greatest of all mistakes to do nothing because you can do only a little. Do what you can."
- Sydney Smith –

24. "They are able because they think they are able."
- Vergil –

25. "Punctuality is the virtue of the bored."
- Whugh Evelyn –

26. Punctuality is the virtue of the bored."
- Gowlet –

27. Animals are such god friends. They ask no questions, pass no criticisms.
- George Eliot –

28. "The greatest remedy for anger is delay."
- Senaca –

29. "Those who school others should school themselves."
- Shakespeare –

30. " The root of the education is bitter but the fruit is sweet."
- Aristotle –





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகிழ்ச்சிகரமான கற்றல்



சசிகலா சிவநேசன்
விடுகை வருடம், கணித நெறி

இலங்கையில் கடந்த சில தசாப்தங்களில் கல்வியில் ஏற்பட்டுள்ள புதிய கருத்துக்கள், அமைப்பு மாற்றங்கள் கற்றல் வியூகங்கள் என்பவற்றில் பல புதிய நோக்குகள் காணப்படுகின்றன.

சிறுவர்களுக்கான கல்வியை வழங்குவது கடந்த காலங்களில் கல்வியில் சமவாய்ப்பை வழங்குவது கல்வியை பரவலாக்குவதற்கும் பல்வேறுபட்ட நடவடிக்கைகள் எமது நாட்டில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

எமது எதிர்கால சந்ததியினரின் எதிர்காலம் வெற்றிகரமான அமைவதே அனைவரினதும் எதிர்பார்ப்பாகும். பிள்ளைக்கு சிறந்த கல்வியைப் பெற்றுக்கொடுப்பது அத்தியாவசிய மாகும். சிறந்த கல்வியை பெற்றுக் கொடுக்க ஒரு சிறந்த அடிப்படை அவசியமாக அமைய வேண்டும். இத்தகைய சூழல் ஒன்றினை வீட்டில் அல்லது வீட்டிற்கு வெளியே அமைத்துக்கொடுக்க முடியும்.

சகலபிள்ளைகளும் விளையாட்டை மிகவும் விரும்புவர். விளையாட்டுக்கூடாக அறிவைப் பெறும் பிள்ளைகளின் உடல் உள அபிவிருத்தி உயர் மட்டத்தில் காணப்படும். விளையாட்டினூடாக கற்றலைப் பெற்றுக்கொடுக்க பல வழிகள் உள்ளன. பிள்ளைக்கு அதிக பாரத்தைக் கொடுக்காது கற்பித்தலைக் கொடுக்க வேண்டும். எனவே தான் முன்பிள்ளைப் பருவத்தில் பெற்றுக் கொடுக்கக்கூடிய சிறந்த கல்வியை விளையாட்டின் மூலம் ஆரம்பித்தல் சிறந்த முறையாகும்.

மனித உரிமைகள் பிரகடனத்தில் கல்வி தொடர்பான பிரமாணத்தின் படி உறுப்புரை 26 இல் கல்வி தொடர்பான பிரமாணங்களில் " அனைவருக்கும் கல்வி கற்பதற்கான உரிமையுண்டு" இதனடிப்படையில்

ஆரம்பக் கல்வியானது (அடிப்படைக் கல்வி) கட்டாயமாவதோடு இலவசக் கல்வியாகவும் இருத்தல் இன்றியமையாதது. தொழில் நுட்பக்கல்வி உயர்கல்வி பொதுவானது. உயர்கல்வி திறமையின் அடிப்படையில் சமமான முறையில் கிடைக்க வேண்டும்.

இதனடிப்படையில் சிறுவர் உரிமைகளை மதித்து பேணும் பாடசாலைகள் இன்று நம் நாட்டில் "பிள்ளை நேய பாடசாலைகள்" எனப்படுகின்றன. சிறுவர் உரிமை தொடர்பாக பாடசாலை மற்றும் பௌதீகசூழல், வகுப்பறை, வகுப்பறையில் ஆசிரியர் செயற் பாடுகள் என்பனவும் அவற்றை மதித்து சிறுவர்களின் கௌரவத்தை பாதுகாக்கும்


தலைவர்களைப் புரிந்துகொள்ளும் முன்னே வரம்பு மீறிப் பேசாதே. GTC
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விதத்தில் அமைதல் வேண்டும்.

மேற்படி பிள்ளைப் பருவ ஆரம்பமான முன்பிள்ளைப் பருவத்தில் பிள்ளைக்கு மொழியை கற்பித்தல்

அடிப்படைக்கணிதம் / ஆரம்ப விஞ்ஞான அறிவு மூன்று திறன்களை அபிவிருத்தி செய்தல் (வாசிப்பு, எழுத்து, செவிசாய்த்தல்) செயற் திறனை அபிவிருத்தி செய்தல்.

**சமூக நிபுணத்துவம் பெறல்.**

எச்சந்தர்ப்பத்திலும் மகிழ்ச்சியுடனும், வேடிக்கையாகவும் காலம் கழிப்பர்.

இதன்படி 5 - 10 வயதிலுள்ள சிறுவர்கள் விளையாட்டில் கூடிய விருப்பமுள்ளவர்களாகவும், பல திறமைகளை கொண்டவர்களாகவும் காணப்படுவதோடு, அன்பு, புகழ், வரவேற்பு என்பவற்றை விரும்பக் கூடியவர்களாகவும், உடல் தண்ட ணைகளிற்கு பயப்படும் வர்களாகவும் காணப்படுவர். மறைவான பல திறமைகளும், திறன்களும் இவர்க ளிடம் காணப்படும்.

இதனை கல்வியியலாளரான ரூஸோவும் பிள்ளை பிள்ளையாகள் நோக்கப்பட வேண்டும் வளர்ந்தோராக அல்ல, அவ்வாறே பிள்ளைகளுக்கே உரித்தான குணவியல்பு உள்ளவர் களாவர். இதற்கமைய கல்வியானது இயற்கைக்கேற்ப அமைதல் வேண்டும். ஒரு பிள்ளைக்கு வழங்கும் கல்வியானது பிள்ளை விருத்தியானது பிள்ளை விருத்தியின் படி நிலைக்கேற்ப அவர்களின் விருப்பம், தேவைகள் வளர்ச்சி போன்றவைகளுக் கேற்ப கல்வி அளிக்கப்பட வேண்டும் “ பிள்ளை ஒரு சிறிய மனிதனல்ல” என்று குறிப்பிடுகின்றார்.

ஒ இதற்கமைய ஆரம்பக் கல்வியின் தரத்தை முன்னேற்றும் நோக்குடன் எமது அரசாங்கத்தினால் கொண்டு வரப்பட்ட பொதுக்கல்வி மீதான சீர்திருத்தங்களின் முதலாம் கட்டம் நாடு முழுவதும் 1999ம் ஆண்டிலிருந்து செயற்படுத்தப்பட்டு வருகின்றது. இதற்கமைய நவீன அம்சங்களுக்கு மேலும் வசதிகளை விஸ்தீரணப்படுத்தி நிர்மாணத்திறன் வாய்ந்த, நற்பண்புகள் நிறைந்த, பூரண ஆளுமை விருத்தி கொண்ட, நாட்டின் முன்னேற்றம் அபிவிருத்தி என்பவற்றிற்கு சிறந்த நற்பிரஜைகளை உருவாக்குவது அவசியமாகும்.

ஆரம்பக்கல்வி பிள்ளைகளுக்கு பலன்தரும்கற்றலை பெற்றுக் கொடுத்தல் வேண்டும்.

பிள்ளைக்கு பாடசாலைக்கு வருவதற்கான விருப்பை கூட்டல்.

பிள்ளைகளிடம் உடல், மன உறுதிகளை விருத்தி செய்தல்.

ஆக்கத்திறன் நிறைந்த பிள்ளைப் பரம்பரை ஒன்றினை உருவாக்குதல்.

எல்லோருக்கும் கல்வி கற்கும் சந்தர்ப்பத்தை உண்டாக்கல்

பிள்ளைகளின் கல்வியில் பெற்றோரும் உதவி புரிய வேண்டும்.

ஆசிரியர்களின் மாணவர்களின் செயற்பாட்டிற்கு உதவிபுரிய வேண்டும்.

சிறந்த சமுதாயமொன்றை கட்டி யெழுப்புதல்.

பாடசாலைகளில் நவீன கல்வி





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீர்திருத்தத்திற்கமைய மகிழ்ச்சிகரமான கற்றலை மேற்கொள்ளும் முகமாக மகிழ்வையும், விநோதத்தையும் தரக்கூடிய வேலை விளையாட்டு, செயற்பாடுகள் என்பன தேவைப் படுவதைப் போல பிள்ளைகளின் எதிர்கால முன்னேற்றத்திற்கான கல்வியின் அவசியத்தை உணர்ந்து சில உபகரணத் தொகுதிகளை வகுப்பறை ரீதியாகவும், தனிப்பட்ட ரீதியாகவும் பெற்றுக்கொடுப்பது அவசியமாகும். உதாரணமாக,


- விளையாட்டு உபகரணங்கள்
- கதைப்புத்தகங்கள்
- எழுத்துப் புத்தகங்கள்
- தேசப்படங்கள்
- உலகப்படங்கள்

என்பன சிலவாகும். இதன் மூலம் மேலதிக தகவல்களை மாணவர்களுக்கு தெரியப்படுத்து வதற்கு இது உதவும்.

மகிழ்ச்சிகரமான விளை யாட்டுடன் கூடிய கல்வியை கற்று குழந்தைகள் நாட்டுக்கு தேவைப் படுவது அவசியமாகின்றது. கற்பித்தல் சாதனங்களும், உபகரணங்களும் பயன்படுத்தல் மூலம் பிள்ளைகள் சுயமாக கற்கும் திறன் பெறுவர்

- மகிழ்ச்சியாகவும் விநோதமாகவும் கற்பர் புதுமைகளை (மாறக்கூடிய தன்மை) வரவேற்பர்
- ஒழுக்கசீலர்களாய் இருப்பர்.
- சமாதானத்துடனும் ஒற்றுமையுடனும் வாழ்வர்.
- பகிர்ந்து வேலையாற்றுவர்.
- நன்மை தீமைகளை இனங்காண்பர்.
- நற்சிந்தனை உள்ளவர்களாய் இருப்பர். ஒற்றுமையாக வாழ்வர்.
- எழுத்து, வாசிப்பு, கணித திறன்களைப் பெறுவர்.
- ஆரோக்கியமான பிள்ளையாக இருப்பர்.

அங்கவீனப் பிள்ளைகளுக்கும் கல்விகற்கும் உரிமையுண்டு. அரசாங்கத்தினால் இவர்களுக்கென விசேட வேலைத்திட்டங்கள். செயற்படுத்தப்படுவதனால் அங்கவீனப் பிள்ளைகளையும் பாடசாலைக்கு அனுப்பவேண்டும். பெற்றோரின் அன்பும், பாதுகாப்பும், சுகாதாரமும், போசணையும் பிள்ளைகளுக்கு குறைவில்லாமல் பெற்றுக்கொடுப்பது பெற்றோரின் கடமையாகும். 5 - 14 வயதுப் பிள்ளைகளுக்கு கட்டாயக் கல்வி வழங்கப்பட வேண்டியது அவசிய மாகும். தினந்தோறும் பிள்ளைகளை பாடசாலைக்கு அனுப்புவது சிறந்த கல்வியை அப்பிள்ளை பெற வழிவகுக்கும். பிள்ளைகளை மற்றப் பிள்ளைகளுடன் ஒப்பிடக்கூடாது. பிள்ளையின் உலகில் மகிழ்வை அளிக்க இடமளிக்க வேண்டும். பிள்ளைப் பருவத்தை கல்வி விளையாட்டு மூலம் மகிழ்ச்சிகரமாகவும் அனுபவரீதியாகவும் பெற்றுக்கொடுக்க வேண்டியது எல்லோரினதும் கடமையாகும்.









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ALEXANDER THE GREAT

D. Daisy Priyaraj
2nd Year English

Alexander the great was a great soldier. He had performed many feats of valour. He was later bed – ridden. He told his courtiers that he expected he would die in a day or two. He ordered them to prepare his coffin and show it to him, when ready.

His minister was reluctant. O great king ! You are asking us to prepare a coffin, which should be thought of only in the event of the death of a person!'

I am your sovereign! Carry out my orders! Bellowed the great Alexander.

How could there be an objection to the great monarch's orders?

The coffin was prepared and placed before the dying general. He sent for his minister and ordered him to have two large holes bored at the front – end of the coffin.

The minister replied in perplexity. O' king ! you know everything; you also know that a coffin is not supposed to have holes in it"

Again Alexander insisted. " These are my order, have them carried out at once ! He barked. As instructed by the king, two large openings were made at the " head" of the coffin"

Alexander's last moments drew near. The dying monarch sent for his minister. These were his final instructions; "When I am dead, place my body in this coffin.

Let both my bare arms be exposed, hanging out through those openings, so that they are clearly visible to all beholders ! Then carry the coffin on an open hearse, so that all the people could see well. I am asking you to do this so that it may be made abundantly evident to all the people that however great a conqueror, it is he who takes nothing at all with him when he dies!


References – True friend.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விலங்கின விநோதங்கள்



ஆர். கயல்விழி
விடுகை வருடம், உடற்கல்வி நெறி

- பறக்கத் தெரியாத ஒரே பாலூட்டி இனம், கண்கள் இருந்தும் பார்வை இல்லாத விலங்கு - வௌவால்
- நீந்தத் தெரியாத விலங்கு - ஒட்டகம்
- மிக வேகமாகச் செல்லும் பாம்பினம் - பிளாக்மாம்பா
- வெள்ளை நிற இரத்தமுடைய உயிரினம், தலை இல்லாமல் ஒன்பது நாட்கள் உயிர் வாழும் உயிரினம் - கரப்பான் பூச்சி
- ஊர்வனவற்றில் ஓடு கொண்ட ஒரே உயிரினம், பூமியில் அதிக ஆண்டுகள் வாழும் உயிரினம் - ஆமை
- மூளை இல்லாத மீன் இனம் - நட்சத்திர மீன்
- குதிக்கத் தெரியாத, துள்ளித் தாவத் தெரியாத விலங்கினம், புயல் வருவதை முற்கூட்டியே அறியக் கூடிய விலங்கினம், நான்கு குழங்கால் உள்ள விலங்கினம், குறுகிய கழுத்துள்ள மிருகம் - யானை
- மிகப் பெரிய வாயுள்ள விலங்கினம் - நீர்யானை
- 640 நாட்கள் கருவில் குட்டியைச் சுமந்து பிரசவிக்கும் உயிரினம் - ஆபிரிக்க யானை
- எல்லாக் கண்டங்களிலும் எல்லாத் தட்ப, வெப்ப நிலைகளிலும் வாழும் ஒரே உயிரினம் - நாய்
- கருவுறாது முட்டைகளை இடும் உயிரினம் - குளவி
- எருமைக்கும் பசுவுக்கும் இடையே பிறக்கும் கலப்பின விலங்கு - திமிதுன்
- நாக்கை அசைக்க முடியாத விலங்கினம் - முதலை
- நடக்கத் தெரிந்த பறக்கும் பூச்சி - வெட்டுக்கிளி
- பறக்கவும், தாவவும் தெரியாமல் நடந்தே செல்லும் பறவை, இறக்கை இல்லாத பறவை - கீவி
- 11 வாரங்கள் கழித்து கண் திறக்கும் விலங்கு - பிளாடிபஸ்
- பித்தப்பை உள்ள ஒரே மான் இனம் - கஸ்தூரி மான்
- பறக்காத பறவை என்றாலும் நீச்சலில் திறமையான பறவை, மனிதனைப் போல இரண்டு கால்களாலும் நடந்து செல்லும் பறவை, வாழ்நாளில் ஒரே ஒரு முட்டையிடும் பறவை, கடல் நீரைப் பருகும் பறவை - பென்குயின்
- மனிதனைப் போல நிமிடத்திற்கு 12 - 20 தடவைகள் மூச்சு விடும் விலங்கு - ஆடு
- வெள்ளை நிறத்தைக் கண்டு பயப்படும் விலங்கு - புலி



நோயாளியைப் பார்த்து விசாரியுங்கள். பசித்து வந்தவர்களுக்கு உணவு கொடுங்கள். GTC

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகில் மிக மெதுவாக நடக்கும் பாலூட்டி விலங்கு - கடல் ஆமை(0.17 மைல் வேகம்)
ஓமோன் இல்லாத உயிரினம் - பக்றீரியா
உயிரினங்களில் தூங்காதது, தனது எடையைப் போல ஐம்பது மடங்கு எடையை தூக்கத் கூடிய உயிரினம் - எறும்பு
கால்கள் இருந்தும் நடக்கத் தெரியாத பறவை, பின்னோக்கிப் பறக்கும் பறவை - ஹம்மிங்பேர்ட்
இறக்கைகள் இருந்தும் நடக்கத் தெரியாத பறவை, ஒட்டகப் பறவை எனப்படுவது, மிக வேகமாக ஓடக்கூடிய பறவை - தீக்கோழி
25 கோடி ஆண்டுகளாக உருமாறாதிருக்கும் பூச்சியினம் - சிலந்தி
மனிதனைப் போல உருவம் உள்ள விலங்கு, மனிதனுக்கு அடுத்த அறிவு கூடிய விலங்கு - சிம்பன்ஸி
முட்டையிடாமல் குஞ்சு பொறிக்கும் இனம் - திமிங்கிலம்.
மிக நீண்ட ஆயுள் கொண்ட உயிரினம் - நீலத்திமிங்கலம்
(500 வருடங்கள்)
மிகச் சிறிய இதயம் கொண்ட மிருகம் - சிங்கம்
தலையை பின்னால் திருப்பாமலேயே பார்க்கக் கூடிய விலங்கு, சத்தமிடாத விலங்கு - ஒட்டகச் சிவிங்கி
செய்திப் பரிமாற்றத்திற்கு உதவும் பறவை, அதிக நீர் அருந்தும் பறவை - புறா
மிகச் சிறிய முட்டையிடும் பறவை - தேன்சிட்டு
பல் இல்லாத முலையூட்டி - தேவாங்கு
மண்டையோடும் அலகும் ஒரே எலும்பால் அமையப்பெற்ற பறவை - மரங்கொத்தி
காலைப் பிடித்துத் தூங்கினால் இறக்கும் பிராணி - தாரா
பிறந்த அன்றே இறக்கும் உயிரினம் - ஈசல்
கண்கள் மூலம் சத்தத்தைக் கேட்கும் ஈரூடக வாழி - தவளை
கண்களைத் திறந்த படி தூங்கும் பிராணிகள் -மீன்,முதலை, பாம்பு
நின்ற படி தூங்கும் பிராணிகள் -குதிரை, யானை, ஒட்டகச் சிவிங்கி
மழை வருவதை முன்கூட்டியே அறியக்கூடிய பறவை - மயில்
விமானம் போல தரையில் சிறிது தூரம் ஓடிப் பறக்கும் பறவை - அன்னம்
தனது வாலில் உணவையும் நீரையும் சேமித்து வைக்கும் உயிரினம் - பல்லி
இனிப்பின் சுவையை அறிய முடியாத விலங்கு - பூனை
சூரியனை நேருக்கு நேரே பார்க்கக்கூடிய சக்தியுடைய பறவை - கழுகு
ஒரு கண்ணை மட்டும் திறந்து வைத்துக் கொண்டு தூங்கும் பிராணி - டொல்பின்
பிறந்தது முதல் இறக்கும் வரை உடல் வளர்ச்சி பெறாத உயிரினம் - வண்ணத்துப் பூச்சி




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எண்களின் விந்தை

எம். கே. சாலிமா
முதலாம் வருடம், உடற்கல்வி நெறி

சர்வதேச ரீதியில் யாவரும் அறிந்த விடயம் எதுவென்று கேட்டால் இலக்கங்கள் என்றே கூறலாம். 0,1,2,3,4,5,6,7,8,9 ஆகிய எண்களை அறியாதவர்கள் யாரும் இல்லை. எவ்வளவு பெரிய எண்ணாயிருந்தாலும் 1 - 9 வரையுள்ள எண்களே மாறி மாறி வரும். இருந்தாலும் இவ்வெண்கள் சில சந்தர்ப்பங்களில் எம்மை வியக்க வைக்கும் விந்தையான விடயங்களை உள்ளடக்கியிருக்கும் அவ்வாறான சில சந்தர்ப்பங்களை அவதானிப்போம்.

01. எண் 1 இன் விந்தை

0 x 9 + 1 = 1
1 x 9 + 2 = 11
12 x 9 + 3 = 111
123 x 9 + 4 = 1111
1234 x 9 + 5 = 11111
12345 x 9 + 6 = 111111
123456 x 9 + 7 = 1111111
1234567 x 9 + 8 = 11111111
12345678 x 9 + 9 = 111111111

02. தொடர்ந்து வரும் எட்டுக்கள்

9 x 9 + 7 = 88
98 x 9 + 6 = 888
987 x 9 + 5 = 8888
9876 x 9 + 4 = 88888

03. விசித்திர எண் 15873

7 x 15873 = 111111
14 x 15873 = 222222
21 x 15873 = 333333

04. விசித்திர எண் 37

37 x 3 = 111
37 x 6 = 222
37 x 9 = 333
37 x 12 = 444

05. 142857 இன் விந்தை


1 - 6 வரையுள்ள எண்களால் இவ்வெண்ணெ பெருக்கம் போது இதே இலக்கங்களைக் கொண்ட எண்ணே விடையாக வரும்.

142857 x 6 = 857142
142857 x 5 = 714285
142857 x 4 = 571428
142857 x 3 = 428571
142857 x 2 = 285714
142857 x 1 = 142857





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# SARS

K. Saradhadevi
2nd Year, English Course

**(SEBERE ACUTE RESPIRATORY SYNDROME)**

SARS is a viral respiratory illness caused try a Corona virus, called SARS – associated coronaverus (SARS – COV). SARS was first reported in Asia in February 2003, over the next few months, the illness spread to more than two dozen countries in North America, South America, Europe, and Asia before the SARS global outbreak of 2003 was contained. This fact sheet gives basic information about the illness and what CDC has done to control SARS in the united States.

**THE SARS OUTBREAK OF 2003**

According to the world Health organigtion (WHO) , total of 8,098 people worldwide became sect with SARS during the 2003 outbreak of these, 774 died. In the United States, only eight people had laboratory evidence of SARS – COV infection. All of these people had traveled to other parts of the world with SARS. SARS did not spread more widely in the community in the United States. For an update on SARS cases in the United States and worldwide as of December 2003.

**SYMPTOMS OF SARS.**

In general, SARS begins with a high fever (temperature greater than 100.4° F [>38.0° C]). Other symptoms may include headache, an overall feeling of discomfort, and body aches. Some people also have mild respiratory symptoms at the outset. About 10 percent to 20 percent of patients have diarrhea. After 2 to 7 days, SARS patients may develop a dry cough. Most patients develop pneumonia.

**HOW SARS SPREADS.**

The main way that SARS seems to Spread is try close person – to – person Contact. The virus that causes SARS is thought to be transmitted most readily by respiratory droplets produced when an infected person coughs or sneezes. Droplet Spread can happen when droplets from the cough or sneeze of an infected person are propelled a short distance (generally up to 3 feet) through the air and deposited on the mucous membranes of the mouth, nose, or eyes of persons who are nearby. The virus also Spread when a person touches a surface or object contaminated with infectious droplets and then touches his or her mouth, nose, or eye(s). In addition , it is possible that the SARS virus might spread more broadly through the air (air borne spread) or by other ways that are not now known.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிந்திக்க சில வரிகள்



ஏ. சுரேஸ்வரன்
விடுகை வருடம், ஆங்கில நெறி

*. நண்பர்களைப் பெற முடியாதவன் பலவீனன், பெற்ற நண்பனை இழந்தவனோ அதனினும் பலவீனன்.

*. சமாதானமாகிவிட்ட உன் பகைவனைப் பற்றிக் கவனமாய் இரு.

*. எவ்விதம் மௌனமாய் இருப்பது என்பதை தெரியாதவன், எவ்விதம் பேசுவது என்பதை அறியமாட்டான்.

*. பொருத்தமாய் பேசு, அறிவோடு இதமாகப் பேசு.

*. திருப்தி ஒரு மந்திரக்கல் அது தொடுவதனைத்தும் பொன்னாகிவிடும்.

*. தடுக்க முடியாத ஒன்றுக்காக கவலைப்பட வேண்டாம்.

*. நாவிற்கு எலும்பில்லாவிட்டாலும் அது எலும்புகளை எல்லாம் உடைத்து விடும்.

*. கொழுத்த வெற்றிக்கு, மெலிந்த தோல்வி நல்லது.

*. மனிதனின் தீய பண்புகளை வெறுத்து விடு, ஆனால் அம் மனிதனை வெறுக்காதே.(ஷேக்ஸ்பியர்)

*. கல்வியில், பகட்டும் பிறருக்கு காட்ட வேண்டும் என்ற எண்ணமும் இருக்குமானால் அது கல் மனத்தையும் கபடத்தனத்தையும் உருவாக்கும்.(இமாம் ஷாபிஈ)

*. ஒரு மனிதனின் கரங்களுக்குள் உலகத்தின் சுகதுக்கங்களை முழுமையாக விளையாட இறைவன் ஒரு போதும் அனுமதித்ததே இல்லை. அடித்த பந்து திரும்ப வந்து தாக்கும் போது தான் இந்த உண்மை புலப்படுகிறது. (கண்ணதாசன்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலக தாபனங்கள் - நிறுவனங்கள்

எம். ஏ. நாஹூர் உம்மா
விடுகை வருடம், இரண்டாம் மொழி தமிழ்

1. ஐக்கிய நாடுகள் சபை - (U.N.O)
2. உலக வர்த்தக நிலையம் - (W.T.O)
3. தெற்காசிய பிராந்திய நாடுகளுக்கான ஒத்துழைப்பு கூட்டமைப்பு - (SAARC)
4. செஞ்சிலுவைச் சங்கம் - (R.C.S)
5. பிரித்தானிய ஒலிபரப்புக் கூட்டுத் தாபனம் - (B.B.C)
6. உலக தபால் சங்கம் - (E.A.O)
7. உலக உணவு விவசாய தாபனம் - (F.A.O)
8. உலக பலகலைக் கழக தாபனம் - (U.N.U)
9. உலக சுகாதார தாபனம் - (W.H.O)
10. சர்வதேச காவல் துறை ஆணைக்குழு - (I.P.C)
11. ஐரோப்பிய பொதுச் சந்தை - (E.C.M)
12. சர்வதேச நாணய நிதியம் - (I.M.F)

## அறிந்து கொள்ளுங்கள்


1. உருகும் உள்ளத்தில் உதிப்பது - அன்பு
2. இறுகும் உள்ளத்தில் எழுவது - அகந்தை
3. அன்பு விளைவிப்பது - ஒற்றுமை
4. அகந்தை விளைவிப்பது - வேற்றுமை
5. வேற்றுமை விளைவிப்பது - துன்பம்
6. வருவதும் போவதும் இரண்டு - துன்பம், இன்பம்
7. வந்தால் போகாதவை - புகழ், பலி
8. போனால் வராதவை - மானம், உயிர்
9. தானாக வருவது - இளமை, முதுமை
10. நம்முடன் வருவது - பாவம், புண்ணியம்
11. அடக்க முடியாதது - ஆசை, துக்கம்
12. தவிர்க்க முடியாதது - பசி, தாகம்
13. நம்மால் பிரிக்க முடியாதது - பந்தம், பாசம்
14. அழிவைத் தருவது - பொறாமை, கோபம்
15. எல்லோருக்கும் சமமானது - இறப்பு, பிறப்பு





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# TOP KEYS TO BE A SUCCESSFUL TEACHER




**Sharmila I. Waliullah**
2nd Year, English Course

Most of the teachers find difficulties in the teaching profession. Without proper professional management of the class. Here are some Top keys....

**01. Positive Attitude :**

A positive attitude is a great asset in life. You will be thrown many curve balls in life, especially in the teaching profession. This will help you cope with these in the best way.

**02. Sense of humour:**

Your sense of humour can relieve tense classroom situation before they become disruption. A sense of humour also make class more enjoyable for your students and possibly make students look forward attending and paying attention. This will allow you to see the joy in life and make you happier person as you progress through this sometimes stressful career.

**03. High expectation**

An effective Teacher must have high expectations. You should strive to raise the bar for your students. If you expect less effort you will receive less effort. You should work on an attitude that says that you know students can achieve to your level of expectations thereby giving them sense of confidence too. This will be one of the key factors in helping student learn and achieve.

**04. Consistency**

In order to create a positive learning environment your students should know what to expect from you each day. You need to be consistent. This will create a safe learning environment for students and they will be more likely to succeeded. Students will adopt to teachers throughout the day that range



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

from strict to easy. Students will dislike an environment in which the rules are constantly changing.

**05. Fairness**

A consistent teacher is the same person from day to day. A fair teacher treats students equally in the same situation, for example, students complain of unfairness when teachers treat one gender or group of students differently be careful of being labeled unfair.

**06. Flexibly**

One of the tenets of teaching should be that every thing is in a constant state of change. The flexible attitude is important not only for your stress level but also for your students who expect you to be in-charge and take control of any situation.

**07. Use a modular approach to topical coverage to force integration of topical ideas and concepts.**

**08. Develop very limited set of discussion questions that do not have "known answers"**

**09. Set student expectations for instructor guidance and feed back.**

"It is essential that students take the lead role in the evoluation of a discussion; instructor must limit his or her involvement in the discussion to a role as facilitator and provocateur and should do so only after other students decline the opportunity.

**10. Establish a reward system that encourages interaction and peer critique .**

**11. Provide additional incentive through assessment.**

| | | | | |
|---|---|---|---|---|
| **L** | - | Lovoble | - | கருணை, பணிவு, அன்புள்ளம். |
| **E** | - | Educated | - | கல்வி அறிவு, அனுபவம் உள்ளவர். |
| **A** | - | Active | - | சுறுசுறுப்பும், திறமையும். |
| **D** | - | Discipline | - | ஒழுங்கை நிலைமாற்றுபவராக இருத்தல். |
| **E** | - | Encourogе | - | உற்சாகம் ஊட்டுபவராக இருத்தல். |
| **R** | - | Responsibility- | | பொறுப்புள்ளவராக இருத்தல். |





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# IMPORTANCE OF DISASTER SAFETY EDUCATION AT SCHOOLS



A.M. Faizal (Lecturer)
D.R.M. Co-ordinator

Many schools in Sri Lanka are located in places vulnerable for natural disasters. Most of schools in the costal belt are located near the sea and were affected by the tidal waves(Tsunami) in 2004. Schools in Ratnapura, Kalutra and other hilly areas of the country, have the threats of floods and landslides.

Therefore schools can be a vulnerable place for most of the natural disasters in Sri Lanka where hazardous materials, utility failure, power failure flooding and leak can be a prominent danger.

The Tidal waves(Tsunami) in 2004, destroyed most of the schools in the coastal area. Since it happened in a day when the schools were closed, many lives of School children and teachers were saved, but the subsequent effects for the curricular activities are prominent issue in those area.

School children are one of the most vulnerable groups for natural hazards, due to several reasons they are inexperienced in the disaster context and their low level of exposure will make them more vulnerable for disasters. Therefore it is a responsibility of the authorities to provide a peaceful and undisturbed situation for their curricular activities.

Disaster safety education is more than an education process. It is a survival skill for school children and teachers. It gives values for human consciousness and it is an exercise for synergy development of the community for its own existence.

Awareness and education are important tools in creating this culture of prevention and preparedness. It is necessary to sensitize the young teachers to the basis elements of the management of these disasters. School children and teachers can become model disaster managers for a society. children can contribute in a unique manner with energy and vision to find local solutions and enlighten their elders and parents urging them for safety against disasters.

A safe school is either a school which is located in a hazard free area; or one has been constructed to withstand the hazard to which it is exposed. therefore a safe school will not collapse or get affected if a disaster strikes.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்வதற்காக உணவா? அல்லது உண்பதற்காக வாழ்வா?



ஏ. எம். பைசல்
விரிவுரையாளர்

உடலைப் பேணக் கற்றுக் கொள்
உனக்கிலை கவலை ஒத்துக் கொள்
இடமும் இல்லை நோய்க்கு
என்றால் கவலை ஏதுண்டு?

உணவே மருந்து உணர்ந்து கொள்
ஒதுக்கிடு தேவை இல்லையெனில்,
கணக்காய் உண்ண தெரிந்துவிடில்
காரணம் இல்லை நோய்க்கு!

குடலோ குப்பைக் கூடையில்லை,
கொட்டி நிரப்பல் சரியில்லை,
இடைவெளி இன்றி உண்பதனால்
இல்லை ஓய்வு வயிற்றுக்கு!

பசிக்கு தேவை உணவாகும்
புசித்துப் புசிக்க நோயில்லை,
ருசிக்கு உண்ணும் உணவெல்லாம்
நோயினை வளர்க்கும் அறிந்து கொள்!



உணவைப் பருகி உண்டிடுக,
உறிஞ்சி நீரை மென்றிடுக,
கனமும் உடம்பில் சேர்க்காதே
காண நலமாய் வாழ்ந்திடலாம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# WHAT IS TEACHING



P. Vijesundaram
2nd Year English Course

Teaching is the noble profession in the world. Teachers are more respactaable and valueable person in their society. Most of the rural and urban societies depending on the school sectors and their teachers. So Teaching is a main process, that facilitates learing. To the poor students. In this process the teacher has to play an important role, actively stimulating learning. In normal situations we usually say that children are taught by teachers but they learn from books. The teachers are able to respond in appropriate ways to the differing learning needs of individuals and the varying circumstance of particular situations. They use different materials for their teaching learning process it will make the class colourful, Educational medium can only be used in different ways as the result of the invention of a teacher.

If we go through the role of the teacher is therefore very important in teaching strategy, especially since his direct participation can range vary widely, from complete control over what is learned to minimal intervention. In schools which use the formal methods the teacher is the source of almost all the knowledge that the children acquire in class, whereas in those that use informal methods, the teacher simply helps his pupils to make efficient use of the learning resources that are available. The significant factor in every case is the relationship of learner to the learning material.

The more direct it is the less they will be influenced by the teacher, and the more they will be able to reach independent conclusions. Then what are the qualities of a good teacher, A good teacher is one who has a good understanding of what his pupils need to learn and also of their cababilities for learning. A perfect teacher will know the extent to which he needs to intervene in each pupil's learning and know the most effective way of providing this assistance. Thus you will realize that there are foor aspects regarding teaching. One should know who, when what and how to teach.

The teaching process are interwoven with what is teaching, so we have to preplaned will then only our teaching learning process will be succeed.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# PROPHET MUHAMMETH'S PEACE BE UPON HIM TEACHING IN RELATION TO WOMEN



**Ms. Muneera**
2nd Year English Course

**Prophet Mohammeth(sal) called for women's rights**

1) **Gender** :- Before the advent of Islam, Arabs used to give preference for male babies over female ones to the extent that many fathers used to bury their female babies or children alive. Muhammath (pbuh) conde mned such unethical behaviors and taught his companions to raise their children properly regardless of their gender. In fact he emphasized giving more care and attention to female children until they grow up and get married.

2) **Women inherit like men :-** Before Islam, women had no right to inherit. Prophet Mohammeth (sal) successfully changed this customs, Females gained the right to inherit as well as males. however, Muhammad (pbuh) did not create the Islamic in heriting system, but he conveyed God's words (preserved in the Holy Quran) which stipulate the portions for each individual (male and female) eligible to inherit.

3) **A woman is not a sex tool :-** Prophet Mohammed (pbuh) banned people from forcing their girls to practice prostitution to get money. He taught people god's commandments in this content. " Don't force your girls to practice prostitution in order to profit in this worldly life. God is oft – forgiving and most merciful for women who were forced to prostitution"

4) **A woman has a unique identity :-** A woman is no longer owned by a man or part of his belongings. A woman is a free person who has a unique identity. When a woman gets married and becomes a wife, she does not need to change her surname. Her identity is preserved and her money and belonging are protected by Islamic law.

5) **Muhammath(pbuh) empowered women :-** Women play a crucial role in the society as they nurture and raise the next generation who will form the society. Muslim women were. Empowered to take an active role in society without overlapping men's role. Although priority was always given to the task of raising children and caring for their wellbeing, women used to work and participate in the social and political life.

**Introductory paragraph**

Prophet Mohammeth (pbuh) emphasized on several occasions the good treatment of females and he described them as delicate and as fragile as glass. And Prophet (pbuh) Muhammad in so many ways called for women's rights,





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# නව විධ රසය

F.M. ෆෞෂර්,
දෙවන වසර, දෙවන බස දෙමළ

ආහාරයට ගනු ලබන යම් රස කැවිලි වර්ගයක් හෝ කෑමක් බීමක් කෑ විට හෝ බිව් විට එහි යම් කිසි රසයක් දැනෙනු එකාන්ත ය. පැණි රස, තිත්ත රස, ඇඹුල් රස, ආදි විවිධ රස අපේ කෑම බීම අතර අසුවෙයි. එය උගත්, නුගත්, බාල, මහලු කාටත් දැනෙන ගොරෝසු හෝ ස්වාභාවික රසය යි.

කාව්‍යයකින් හෝ සිංහල සාහිත්‍යයේ ගද්‍ය පද්‍යකින් ලබන හෝ ලබා ගන්නා රසය ඊට වඩා හාත් පසින් ම වෙනස් ය. එය සෑම දෙනකුට ම එක සේ ලබා ගැනීමට හෝ විඳීමට නුපුළුවන. තරමක් දුරට සාහිත්‍යය පිළිබඳ උගත් කමක් ඇත්තෙකුට කාව්‍යයකින්, ගද්‍ය පද්‍යයකින් ලැබෙන රසය වින්දනය කළ හැකිය.

අලංකාරිකයෝ ඒ නව රසය මෙසේ දක්වා ඇත.

ශෘංගාර හාස්‍ය කරුණ
රෞද්‍ර වීර භයානකඃ
විහත්ස්‍යාද්භූත ඉත්‍යෂෙටෞ
රසාඃ ශාන්ත ස්තථා මතඃ


01. ශෘංගාර - පසිඳුරන් පිනවීමේ රසය.
02. හාස්‍ය - සිනහ උපදවන රසය.
03. කරුණ - හදවත මෘදු මොලොක් කරන රසය.
04. රෞද්‍ර - රුදු බව පෙන්වන රසය
05. වීර - වීරත්වය පෙන්වන රසය.
06. භයානක- බිය ජනක ඇඟ කිලිපොළායන රසය.
07. බීභත්ස - පිළිකුල උපදවන රසය.
08. අත්භූත - හිතා ගන්නටවත් බැරිතරම් පුදුම උපදවන රසය.
09. ශාන්ත - ගත සිත නිවෙන සත්සුන් රසය.

01. <u>ශෘංගාර රසය</u>

ශෘංගාර රසය හඳුන්වන ආචාර්ය්‍ය වාග්භට සරාගී වූ අඹුසැමි යුවලකගේ රහස්‍ය ප්‍රවෘත්තිය ශෘංගාරයැයි කියනු ලැබේ.

ස්ත්‍රී පුරුෂ දෙදෙනකු ගේ කාමුක හැඟීම හඳුරුවා ගැනීමේ ඇති ආශාව ඊට පැමිණෙන බාධා එම හැඟීම් ඉටු කර ගැනීම, එය ඒ දෙදෙනගේ හිත ඒකාබද්ධ වීම එයින් ලබන ප්‍රීතිය සතුට මෙයින් අදහස් කරන ප්‍රධාන ම ශෘංගාර යි.

ශෘංගාර රසය කොටස් කිහිපයකට බෙදෙයි.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

තවත් කයින් ලබන ස්පර්ශ ශෘංගාරය තුනකට බෙදෙයි.

| | | |
|---|---|---|
| චක්ඛු | ඇස | දර්ශන ශෘංගාරය |
| ඩොත | කණ | ශ්‍රවන ශෘංගාරය |
| ඝාණ | නාසය | ආඝ්‍රාණ ශෘංගාරය |

02. හාස්‍ය රසය

හාස්‍ය යනු සිනාවයි. සිනහවෙන් හෝ සිනා රසයෙන් සපිරි සියළු ම කථාව, කවි ආදි නොයෙකුත් නිර්මාණවල් හාස්‍ය රසය වේ.

03. කරුණ රසය

කරුණ ශබ්දයෙහි සාමාන්‍ය තේරුම ධයාව යනුයි. එහෙත් මේ කරුණ රසය තමා විසින් අන්‍යයන් කෙරෙහි අයා, ක්ෂාන්ති ආදිය පැතිරිවීමේ ස්වභාවයක් නොපෙන්වයි. මෙහි දැක්වෙන්නේ තමා හට පැමිණි යම් යම් ඉෂ්ටාර්ථ ආදි හේතූන් නිසා තමන් අන්‍යන්ගේ අයාවට හා කරුණාවට භාජනය වී සිටින සුළු අවස්ථාවකි.

04. රෞද්‍ර රසය

යම් කිසි පුද්ගලයකු තුළ ක්‍රෝධ හැඟීමක් ඇති වීම, ඒ අනුව යම් දරුණු ක්‍රියාවක් සිදුවීම හෝ සිදු කිරීම රෞද්‍ර රසයට සම්බන්ධ වෙයි. සිංහයා කොටියා ගැන කථා කරන විට එම සතුන්ගේ ඇති දරුණු ක්‍රියා අපට මතක් වෙයි. රෞද්‍ර බවට සිහියට නැගෙයි. ඒ රෞද්‍ර රසය වේ.

05. වීර රසය

කෙනෙකුගේ වීරත්වය පිළිබඳ කියැවෙන මේ වීර රසය වෙයි. කැප්පටි පොල වීරයා ගැන කියවන විට විට ක්‍රියා පිළිබඳව සිහියට නැගෙයි. කවර කරුණෙහි දී වුවු ද නොපසු බස්නා ශක්තිය උට්ඨාන වීර්යය වීර රසය යි.

06. භයානක රසය

භය එළවන සුළු දේ දැකීම, ඇසීම නිසා පුහුදුන් සිතෙහි ඇති වන චලනය මින් අදහස් කරයි. සක්කාය දිට්ඨිය, අධික තැනත්තනුගේ භය අධිකය.

07. බීභත්ස රසය / පිළිකුල් රසය

සිත පිළිකුලින් ආවරණය කරනු ලබන ආලම්බනයන් නිසා සිතෙහි පතළ වන ජුගුප්සා සහගත හැඟීම බීභත්ස / පිළිකුල් රසය යි.

08. අද්භූත රසය

ඉන්ද්‍ර ජාලිකයකුගේ හෝ වෙනත් එබඳු ශක්තියක් බලයක් ඇති පුද්ගලයකුගේ අදහාගත නොහැකි මැවීමත් දුටු විට සිතේ ඇතිවන චිත්ත ස්වභාවය අද්භූත රසයයි.

09. ශාන්ත රසය

ආධ්‍යාත්මික අශාන්ත ධර්මයන් ශාන්ත බවට පැමිණි වූ හෙයින් ඔවුහු ශාන්ත නම් වෙති. එයින් ලැබෙන රසය ශාන්ත රසය යි.

මුනිවරුන් තාපසවරුන් පිළිබඳව ඇසෙන විට ඒ ශාන්ත බව සිතට නැගෙයි. එයින් උපදින රසය මින් අදහස් වෙයි.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# படி

கே. கணேஷமூர்த்தி
விடுகை வருடம், ஆரம்பநெறி.

இது
இளமைப் படி
அடடா இனிமைப்படி
இதில் இஷ்டப்படி
நம் இலட்சியப்படி

வானம் வாசற்படி
பூமி நேசப்படி
வாழ்வின் ஆசைப்படி
புறப்பட்டு வா இப்படி

கண்ணைத் திறந்தபடி
கருத்தில் நிறைந்தபடி
மண்ணை மறந்தபடி
விண்ணைத் துரத்திப்பிடி

இங்கே இருந்தபடி
எதையோ மறந்தபடி
தன்னைத் தொலைத்தபடி
உணர்வே அறுந்தபடி
இது எந்த படி

அன்று சொன்னபடி
நன்று வகுத்தபடி
அவர்தம் வாழ்ந்தபடி
நாம் வாழ்வதெப்படி?

இருளில் மறைந்தபடி
இதயம் உறைந்தபடி
இம்மை கசந்தபடி
இனி நாம் எழுவதெப்படி?

மண்ணைப் படி
மறம் வளர்ந்த
அறம் சிறந்த
மாண்பைப் படி

விண்ணைப் படி
வீரம் விளைந்த
சாரம் நிறைந்த
சரித்திரத்தைப் படி

மனிதனைப் படி – அவன்
மறுபக்கம் நமக்கும் படி
மரணத்தைப் படி – அதன்
அடுத்த பக்கம் வாழ்வுப் படி

உன்னைப் படி
ஊன்றி எழுந்து
என்னைப் படி
உலகைப் படி
உனக்குள் அது கொண்ட
உறவைப்படி

பூமியின் படி
புன்னகைக்கப் படி
சாமியின் படி
சத்தியத்தைப் படி

காற்றின் படி
கட்டறுக்கப்படி
ஆற்றின் படி
அணையுடைக்கப் படி



உனது லட்சியம் ஜடப்பொருள் என்றால் ஜடப் பொருளாகவே நீ ஆகிவிடுவாய்.

GTC

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூரியனின் படி
சுட்டெரிக்கப் படி
ஆரியனின் படி
ஐயமறப் படி

வள்ளுவனின் படி
வாழ்க்கையைப் படி
பாரதியின் படி
பாரதிரப் படி

வெற்றியைப் படி
தோல்வியைப் படி
வெற்றி எப்படி
தோல்வி எப்படி
இரண்டையும் படி

வாய்மையைப் படி
அதுதான் வாழ்க்கைக்கு
வாசற்படி
தாய்மையைப் படி
அதுதான் தரணியாள
தக்கபடி
ஏழ்மையைப் படி
அதுதான் ஏற்றத்திற்கு
ஏற்றபடி
நேர்மையைப் படி
அதுதான் உயர்வுக்கு
ஏணிப்படி

மெல்லப்படி
மெல்ல மெல்ல
வெல்லப் படி
சொல்லிப் படி
சொல்லி சொல்லி
பெயர் சொல்லப்படி

அறிவியல் படி
அதுதான்
அன்றாடத்தின் முதற்படி
அறவியல் படி
அதுகூட
அகவாழ்வின் ஆரம்பப்படி

அரசியல் படி
அதுவுந்தான் முதற்படி
அன்பியல் படி
அதுகூட அரிச்சுவடி

முதல்படிதான் உனக்கு
முதல்படி
முயன்றுப் படி
முன்னேறப் படி

நன்று படி – அதை
இன்று படி – உலகை
வென்று படி
நான் சொன்னபடி!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# සාරධර්මවලින් තොර සංවර්ධනයක් නොමැත

එස්.ඒ. මොහමඩ් රිස්වාන්,
දෙවන වසර. දෙවන බස දෙමළ

මිනිස් සමාජය එකනෙකා සාමකාමීව සම්බන්ධ කොට යහගුණ වඩවන ධාර්මික සිරිත් සාරධර්ම ගණයට අයත් වේ. දෙමාපියන්ට අප උපස්ථාන කිරීම, වැඩිහිටියන්ට සැලකීම, ගුරු ගෞරවය දැක්වීම, පිදිය යුත්තන් පිදීම, ආගමික භක්තිය වැනි සමාජ ආචාර ධර්ම සියල්ලම සාරධර්ම ලෙසට පිළිගත හැක. චාරිත්‍රවත් සමාජයක් තුළ නිරන්තරයෙන්ම සාරධර්ම දක්නට ඇත. සාරධර්මවලින් රටක් පිරිහෙන්නේ මිනිසා දුෂ්චරිතයන්ට පුරුදු වූ විටය.

හිෂණය, ප්‍රචණ්ඩත්වය, දූෂණය ආදී ව්‍යසනයන්ට රට ගොදුරු වන්නේ මිනිස් සමාජයේ පිරිහීම හේතු කොට ගෙනය. මිනිසාගේ අධ්‍යාත්මික පරිශුද්ධභාවය උදෙසාත් මානසික සංවර්ධනය සඳහාත් සාරධර්ම හේතු වේ.

පුරාතනයේ ධර්මද්වීපය යනුවෙන් හැඳින් වූ ශ්‍රී ලංකා භූමිය අද අපරාධ අතින් බිහිසුණු මිනිමැරුම්, මංකොල්ලකෑම්, ස්ත්‍රී දූෂණ තවත් විවිධ කාම අපරාධ හා දුරාචාර වලින් අපකීර්තියට ලක්ව ඇත. මෙවැනි සමාජයක වෙසෙන දරුවා අනාගතයේ රටට දැයට හිතැති පුද්ගලයන් වන්නේ කෙසේ ද? ඔවුන් නිවට නියාලු ජාතියක් බවට පත්වන්නට කුඩා කලදී මුහුණපාන මෙම ක්‍රියාදාමයන්ය. ඔවුන්ට හොඳ නරක කියාදීමට දැන උගත්කමක් දෙමව්පියන්ට නැත. එය එසේ වූයේ ඔවුන් ජීවත් වූ සමාජයේ තිබූ විවිධ ව්‍යසනයන්ට ලක්වීමට සිදු වූ බැවිනි.

පවතින සමාජය දෙස බලා එහි අඩුපාඩු කියමින් සිටීමෙන් කිසිදු යහපතක් නොවේ. මේ තත්ත්වයෙන් රට මුදවා ගැනීමට ගුරු ශිෂ්‍ය සම්බන්ධය තර කළ යුතුයි. ගුරුවරයාට ගරුකරන සමාජයක් නංවාලීමට වෙර දැරිය යුතුය. ගුරු ගෞරවය වැනි සාරධර්ම පෙර පර දෙදිගම අතීතයේදී දක්නට ලැබුණි. එහෙත් කල්යත්ව මේ තත්ත්වය පිරිහෙන්නට විය. ගුරුවරයාගේ නිවසට ගොස් ගුරු පඬුරුදී එහි නතර වී ලබාගත් අධ්‍යාපන ක්‍රමය යටපත් වී මුදලට අධ්‍යාපනය ලබා ගැනීමේ පිළිවෙල පුළුල් විය. මුදල් වලට සියළු දේ කළ හැකියැයි සිතූ නිසා ගුරුවරයාට දැක් වූ සැලකිල්ල අඩු වී ගියේ ය. මේ හේතුව නිසා සමාජය වැඩිපුර පිරිසක් හොඳ නරක තෝරා බේරා ගත නොහැකිව අතරමං වූහ.



கோபமாக இருந்தால் பத்துவரை எண்ணுங்கள். ரொம்பக் கோபமாக இருந்தால் நூறு வரை எண்ணுங்கள். GTC

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

මෙසේ නූගත් සමාජයක් බිහිවීම නිසා මත්පැන්, මත්ද්‍රව්‍ය භාවිතයට වැඩි දෙනෙක් පෙළඹුණ හ. මෙහි ආදීනව කියා දෙන වැඩිහිටියෝ ඒවායේ ම ඇලීගැලී වැදි බණ කියන නිසා ඇතැම් විට උගත් තරුණයෝ ද ඔවුන්ට ඇහුම්කන් නුදුන් හ. උසස් විද්‍යාලවල ඉගෙනුම ලබන දරු දැරියන් මත්පැන්, මත්කුඩුවලට මෙන්ම නොයෙකුත් අපචාරවලට පුරුදු වූහ. ගුරු ගෞරවය භක්තිය කෙමෙන් කෙමෙන් පිරිහුණි.

පෙර සමාජයේ ගුරුවරයාට තිබූ තැන වත්මනෙහි දක්නට නොලැබෙන්නේ මුදල් මතම සමාජය පැවතීමය. ශ්‍රී රාහුල හිමියෝ කාව්‍යශේඛරයේ ගුරු භක්තිය මෙසේ කවියට නැගූහ.

ගුරු සිත නොරිදවා
වේලාව නොවරදවා
බැති පෙම් උපදවා
අකුරු උගනී කුමරු සොඳමා

මේතුළින් ගුරුවරයාට ශිෂ්‍යයා දැක්විය යුතු ගෞරවය භක්තිය කොතෙක් ද යන්න පැහැදිලි වේ.

ආගමික නායකයන්ට ද ඇහුම්කන් නොදෙන සමාජයක් අද දක්නට ලැබේ. හිතුමතේ තම තමන්ට කැමති දේ කිරීමට තරුණ පරපුර නිතරම සූදානම් වෙති. ආගමික නායකයන් තම කැමැත්තෙන් විවිධ මංපෙත් ඔස්සේ නොයෙක් වැඩසටහන් දියත් කිරීමට සූදානම් වුව ද එයට උදව් උපකාර කිරීමට හා එම අවස්ථාවන්ට සහභාගී වීමට ඉදිරිපත් වන්නේ ඉතා සුළු පිරිසකි.

යුද ගිනි ඇවිලී රට විනාශ මුඛයට ගිය කාලවල ඕනෑම රටක් එම තත්ත්වයෙන් ගොඩනැගීමට ආගමික නායකයන්ට හැකි විය. ඉන්දියාවේ ධර්මාශෝක අධිරාජ්‍යයාගේ කාලය මෙයට හොඳම උදාහරණයකි. අප රටේ අද පවතින ප්‍රචණ්ඩත්වය, දූෂණය වැනි ව්‍යසනවලින් අප සමාජය බේරා ගැනීමට නම් ගුරු ගෞරවය හා ආගමික නායකයන්ට ගරු කිරීම වැනි සාරධර්ම තව තවත් රැකීමට බාල පරපුර මෙන්ම වැඩිහිටියන් ද ප්‍රයත්න දැරිය යුතුය. මෙමගින් එනම්, සාරධර්මයන්ගෙන් පෝෂණය වූ කළ සංවර්ධනයට යන්නා වූ මංපෙත් විවර වන බව ඔබටත් මටත් නොරහසකි.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆத்மார்த்த வாசல்.....

ஐம்பொறியில் நாலறுத்து
மெய்யுணரும் வேதம்
கம்பீரம் என்பது
தலை கவிழ்த்தலாகும்
உங்கள் பாடங்கள்
இதற்குள் வாரா!
இதை உயிருணர்தலாகு மெனினும்
மரணத்தின் தருணம்!

தொடர்ந்து நடப்பன

*. கவித்தூரல்கள்
*. கதையாடல்கள்
*. அன்பின் சிலிர்ப்புக்கள்..

இவற்றுடன் கலந்தன...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆன்மத் துளிகள்


01. ஊமையான உணர்வுகள் — 01

02. සිංහල, දෙමළ ජාතික භාෂා අධ්‍යාපනය තුළින් දේශය ගොඩ නැගීම — 04

03. வந்து போகும் நீ....... — 05

04. மானுடம் பரிணாமத்தின் இடைவழித் தேடல் — 06

05. நான் போகிறேன் — 09

06. ஆசை — 10

07. நண்பா — 11

08. நிதர்சனம் — 12

09. கடந்த வேளைகளில் — 12

10. பரதக் கலை — 13

11. நல்ல ஆசான் — 15

12. சத்தியம் சாகும் வரை — 15

13. பாரதி கண்ட மாதர் விடுதலை — 16

14. தொலைந்து விட்ட ஜனனம் — 18

15. Oh! How many Differences — 20

16. நதி — 21

17. தனித்தன்மையும், தன்னம்பிக்கையும் — 22

18. மகனின் பிரார்த்தனை — 23

19. பெற்றோரைப் பேணுவோம் — 24

20. மலைகளின் மலையகம் — 25

21. தாய் — 26

22. மானிட வாழ்வில் தாய்மைக்கே முதலிடம் — 27

23. மறக்க முடியவில்லை — 28

24. For my Mother — 29

25. அலட்சிய மனப்பாங்கு வாழ்க்கைக்குத் தடைபோடும் — 30

26. அறிவும் நம்பிக்கையும் — 31

27. Oh girls ! — 32



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

28. வாழும் கலைப் பயிற்சி (யோகாசனக் கலை) — — — — — — — — 33
29. தொலையும் நதிக்கரையில் — — — — — — — — — — — — 34
30. ஏனோ இன்னும் தாமதம்? — — — — — — — — — — — — 35
31. இந்து மதமும் ஜீவகாருண்யமும். — — — — — — — — — — 36
32. பாமரனின் உரிமைக் குரல் — — — — — — — — — — — — 37
33. நண்பன் பற்றி சில வரிகள் — — — — — — — — — — — — 37
34. ஞாபக அலைகளில் உன்னுடைய அழைப்புகள் — — — — — — 38
35. வள்ளலாய் வாழப் பார்த்தேன் — — — — — — — — — — — 38
36. ஆசான்களே..... — — — — — — — — — — — — — — — — 39
37. எங்கள் கிளைகள் நீளும் — — — — — — — — — — — — — 40
38. ஹைகூ....... — — — — — — — — — — — — — — — — — 41
39. இலட்சியத் தாயின் இலட்சிய மகன் — — — — — — — — — 42
40. සහෝදර භාෂාව ඉගෙනීම කාලෝචිත දඩි — — — — — — — — 45
41. மலைத் தமிழன் — — — — — — — — — — — — — — — 46
42. சின்னச் சின்ன உறுதிகளால் சிறக்கட்டுமே நம் வாழ்வு! — — — 47
43. வாழ்க்கை — — — — — — — — — — — — — — — — — 48
44. பசுப் பாலின் முக்கியத்துவம் — — — — — — — — — — — 49
45. வாழ்க்கை ஒரு நூலகம் — — — — — — — — — — — — — 52
46. கலாசாலை தாயே! — — — — — — — — — — — — — — — 53
47. ஹைக்கூ.... — — — — — — — — — — — — — — — — — 54
48. குணம் — — — — — — — — — — — — — — — — — — — 55
49. நெறியோடு வாழ்வதற்கு வழிகள் — — — — — — — — — — 56
50. ஏடு! — — — — — — — — — — — — — — — — — — — — 57
51. நிஜங்களின் நிழல் — — — — — — — — — — — — — — — 58

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு தசாப்தத்திற்கு முந்திய ஒரு சகாப்தத்தில்.....

# ஊமையான உணர்வுகள்

ஏ. சி. எம். சுபையிர்
பிரதி அதிபர்

தம்குறை முறையிட
தக்கத் தலைவனின்றி
விக்கத் தவித்து
விம்மிக் கலக்கமுற்று
மற்றவர் முன்னால்
மண்டியிட்டு - மௌனியான
தம்மினத்தின் தனித்துவத்தைத்
தரணிக்குக் காட்டவந்த
தலைமகனே,
நீ, முஸ்லிம்களின்
முதுகெலும்பல்லவா?
ஏனங்கே - இன்று முடங்கிக்
கிடக்கிறாய்?

பெரும்பான்மை ஆதிக்க
பொறிக்குள் அகப்பட்டு
அடிமைகளாகி, அடிவருடிகளாகி
அல்லலுற்ற சமூகத்தின்
பிடரியை நெருங்கிய
பேரினக் கரங்களின்
கோரப்பிடி தளர்த்தி
கொடுந்தளையறுத்து
அதிகாரம் தந்த - ஆண்மகனே
ஏனின்று - அடங்கிக் கிடக்கிறாய்.

சிறுபான்மை இனத்தைச்
சூறையாடிச் சுவீகரிக்கும்
சூதாட்டச் சூழ்ச்சிகள் மேல்
சீற்றம் கொண்டு
சீறிப்பாய வந்த ( இளம் ) சிங்கமே
ஏனங்கே
ஆறடிக் கூண்டுக்குள்
சிறைப்பட்டாய்.
மறுக்கப்பட்ட உரிமைகளால்
பறிக்கப்பட்ட உடமைகளால்
வதைக்கப்பட்ட உயிர்களும்
சிதைக்கப்பட்ட உணர்வுகளும்
தன்மானமிழந்து

சொந்த மண்ணில்
சுதந்திரமாய் உலாவர

ஓடி உழைத்த உத்தமனே
இன்று மட்டும் - ஏனின்னும்
உறங்கிக் கிடக்கிறாய்
பகலிரவு பாராமல்
பாடுபட்ட பாட்டாளியே
விடுதலை வேட்கையில்
வீறு கொண்ட வேங்கையே
இன்னும் நீ - விழிக்காதிருப்பதேன்.

தூங்கிய எம்மைத்
துயிலெழுப்பிவிட்டு
பயணம் தொடர்கையில்
பாதி வழியிலே
நீ மட்டும் - அயர்ந்து தூங்கி
ஆறுதல் பெறலாமா
அது முறையாகுமா?

ஓ, எங்கள் இறைவனே
எங்கள் அரசியலில்
முன்னின்றுழைத்த
முதல்வனுக்கு
நீ அளித்த அவகாசம்
இன்று - காலவதியாகிவிட்டதா?
இல்லை - இதுவரை அரசியலில்
அவராற்றிய பயணிகளுக்கு
வெகுமதியளித்து
விருந்தளித்துக் கௌரவிக்க
நீ அவரை - விரும்பி அழைத்தாயா?
அல்லது
ஓயாத உழைப்பால்
உடற்சோர்வு நீங்க
ஓய்வு பெறச் சொல்லி
ஒழித்து வைத்திருக்கிறாயா?





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூங்கிய நம் சமூகத்தை
துயிலெழுப்பித் துயர்துடைக்க
துணிவோடு செயற்பட்டுத்
துணை நின்ற தோழா
நீ என்ன - அங்கே
மீளாத் துயில் கொள்கிறாயா?

எங்கள் தூக்க மயக்கம்
தெளிவுற முன்னரே
மீதிப் பயணத்தை
முடிக்க முன்னரே
வீதி வழியில்
பாதி விழியின்
பார்வை இழந்தோம்
பாதை இருளாகப்
பயணம் தடுமாற
பரிதவிக்கும் எம்மை
பார்க்க வராமல்
வெண்புறாவே எங்கே பறக்கிறாய்.?

ஓ.....ஓ........உன் பயண வாகனம்
மரண தூதுவனாய்
மாறிவிட்ட மாயமென்ன?
எண்ணிப்பார்க்கவே
இதயம் பதைக்கிறதே
இதனால் உணர்வுகளிங்கே
ஒப்பாரி வைக்கிறதே
ஓலைக் குடிசைகளும், உயர்ந்த
கோபுரங்களும்
ஓவென்றழுது
ஓலமிடுகின்றனவே.
உன் மரணத் துயரை
மனதாற ஏற்கிறோம்
ஆனால் அதன் மர்மத்தை
மட்டுமாவது சொல்லிவிடு,
வனாந்தர வான்வெளியில்
பயணித்த வாகனம்
சுக்கு நூறாகி
சிதைவுற்ற நியாயம் என்ன?
சூக்கும மறைவா
அல்லது - சூழ்ச்சியின் விளைவா?
அதை - எங்கள் கனவுகளில்
எடுத்து இயம்பும் - ஐயா
நெஞ்சினில் கொஞ்சம்
நிம்மதி நிலவட்டும்.

ஓ, உன்னத சேவையாளனே
உன் உழைப்பில் உருவான
விருட்ச நிழலின் கீழ்
ஓய்வெடுத்த சமூகம்
உற்சாகமிழந்து,
உறங்கிவிடாமல்
தட்டி எழுப்பிய
அதட்டல் ஒலியா
கேகாலைப் பகுதியில் - கேட்ட பேரிடி
அதனால் - எங்கள் ஊரெல்லாம்
கண்ணீர் அடைமழை
எங்கும் பொங்கிப் புரள்கிறது
சோகப் பிரவாகம்
எங்கள் இதயங்களின் ஏக்கப்
பெருமூச்சுகள்
சுற்றிச் சுழலுது பெரும் சூறாவளி.

உயர்ந்த வெளியிலா
உன் உயிர்ப் பலிபீடமும்
அது உன் உயர் நிலைக்கு உறுதியுரை.
"அறநாயக்க" என்ற
ஊர்நாமம் கூட
"அவர் தலைவர்" என்று
அமைதியாய்ப் பொருளுரைப்பது
நீ தலைவன் என்பதற்குத்
தக்க சான்றல்லவா.

ஐயோ, எங்கள் இறைவனே
எங்கள் விடிவுக்காய்
கிழக்கில் - கிளம்பிய சூரியன்
மேற்கில் மறைந்து
மறுநாள் உதிப்பது
சகஜமானதே
நேற்றைய மறைவின்பின்
ஏனது - இன்னும்
கிழக்குவானை வெளுக்க வரவில்லை
அந்த மறைவு - நிஜமானதோ
அப்படியானால்
இனிமேல் இங்கே - விடியல் பிறக்காதா?
நீண்ட இரவு - நிலைத்துவிட்டதா
நிம்மதிப் பெருமூச்சு -
நின்றுபோய் விட்டதா?

இருளில் கிடந்த
ஏழைச் சமூகத்துக்கு
ஒளிகொடுக்க வந்த ஆதவனே





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்று உனது அஸ்தமனமா
வறுமை வெய்யிலில்
வாடிய மக்களுக்கு
நிழல் கொடுக்க வந்த
ஆல விருட்சமே நீ
அடர்ந்த காட்டில்
உன் சரீரம்
சரிந்து வீழ்ந்த சங்கதிதான் என்ன?
பௌத்தம் நிறைந்த
ஈழ நாட்டு - அரசு - மரத்தின்
ஆணி வேரான நீ
அறுந்துவிட்டதேன்.

எம் இலட்சியங்களை
ஈண்டெடுக்க வந்த
வீரமகனே
எம் கண்களால்
இனிமேலும் முன்வதனம்
புன்முறுவல் பூக்கக்
காண முடியாதே
ஆனாலும்
எம்மகத்தில் நீ பதித்த
அழகிய முத்திரையாம்
உன் சிரித்த முகம்
அழியாச் சித்திரமே.

முஸ்லிம் சமூகமே
உன் ஆண்மக்களின் அழுகுரலும்
பெண்களின் பெரும் புலம்பலும்
இளைஞர்களின் ஏக்கமும்
இளசுகளின் விக்கலும் விசும்பலும்
இழந்ததை இனிமீட்க
இயலாமற் போனதற்காய்
நீ சளைத்து விடாதே
தவிப்பால் தளர்ந்துவிடாதே
ஓரணியாய் ஒன்றுபட்டு உயர்வுபெறு.

எங்கள் இறைவனே
உன் விதி எப்போதும்
முடிவான கதைதான் - பரவாயில்லை
எம் பரிதாப நிலைமாற
சில பரிகாரம் கோருகிறோம்
முதலில் - முஸ்லிம் சமூகத்தின்
முன்னேற்ற ஏணியாகித்
தோள் கொடுத்த பெருமகனின்
பிழைகள் பொறுத்தும்
பெருந்தவறை மன்னித்தும்
பிர்தௌஸின் இடமளித்து
பிரியமுடன் ஏற்றருள்க.

சோகமே உருவாகச்
சோர்ந்துபோன சமூகத்தை
சேர்த்து வழிநடத்தும்
சிறப்பான தலைமையின் கீழ்
சேர்ந்து வாழும் சிறப்புணர்வை
சிந்தைகளில் தந்தருள்க.
உதிரிகளாய் ஆங்காங்கே
ஒவ்வொன்றாய்ச் சிதறாமல்
ஒன்றுபட்ட சமூகமாய்
உயரிய இலட்சியத்தில்
இஸ்லாமிய உணர்வுடனே
இதய சுத்தியாய் நடைபோட
துணிவுமிக்க தலைவனையும்
துணையாகத் தந்தருள்க.

(மர்ஹூம் எம்.எச்.எம். அஷ்ரப் அவர்களின் மறைவின் போது எமது பிரதி அதிபர் ஏ.சி.எம்.சுபையிர் அவர்களால் 2000.09.17 எழுதப்பட்ட கவிதை தசாப்தத்தைக் கடந்த நிலையில் மீள்பிரசுரம் செய்யப் படுகிறது)

'டேய் ராமு ! இமயமலை எங்கே இருக்கு?"
''தெரியாது சார் !"
''பெஞ்சு மேல ஏறு"
''பெஞ்சு மேல ஏறினா தெரியுமா சார் !"

''ம் ! இமயமலையும் தெரியும். அந்த மலையில் உன்னை மாதிரி பையனை என்னை மாதிரி ஆசிரியர் அடிக்கிறதும் தெரியும்" என்றவாறு பிரம்புடன் முன்னேறினார்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# සිංහල, දෙමළ ජාතික භාෂා අධ්‍යාපනය තුළින් දේශය ගොඩ නැගීම



ටී.එම්. චන්ද්‍රරත්න,
විශ්‍රාමික විදුහල්පති
අතිරේක කථිකාචාර්ය.

දෙවන භාෂාවේ අවශ්‍යතාවය වන්නේ එකිනෙකාගේ අදහස් හුවමාරු කර ගැනීම හා විවිධ සංස්කෘතීන් පිළිබඳ අවබෝධයක් ලබා ගැනීමට පමණක් නොව දෙශය සමෘද්ධය කරා ගෙන යාමට බෙහෙවින් ඉවහල්වන යාන්ත්‍රණයක් වශයෙනුයි.

සිංහල, දෙමළ, මුස්ලිම් ආදී විවිධ ජන වාර්ගික කොටස් වාසය කරන ශ්‍රී ලංකාව තුළ සමාජ සන්නිවේදන කටයුතු සඳහා බහුල වශයෙන් යොදා ගන්නේ සිංහල හා දෙමළ භාෂා දෙකයි. ශ්‍රී ලංකාවට නිදහස ලැබීමෙන් පසු මෙම භාෂා දෙක ම රාජ්‍ය පරිපාලන සන්නිවේදන කටයුතු සඳහා යොදා ගැනීමට විවිධ දේශපාලන නායකයන් උත්සාහ ගත්තත්, නොයෙක් බලපෑම්, විවිධ පුද්ගලයින්ගේ අනවබෝධය හේතුවෙන් එය වැළකී ගොස් රාජ්‍ය භාෂාව සිංහල පමණක් බවට පත් විය.

රාජ්‍ය භාෂා ප්‍රතිපත්තිය නියමිත අයුරින් ක්‍රියාත්මක නොවීමේ එක් ප්‍රතිඵලයක් වශයෙන් ලක්වැසි සියළු ජනවාර්ගිකයන් අතර සන්නිවේදනය දුරස්ථ වී එකිනෙකා දෙස සැකයෙන් බලමින් ගැටුම්කාරී තත්ත්වට පත්වී යුදමය තත්ත්වය දක්වා වර්ධනය විය.
මෙම භාෂා සහයෝගිතාවය, ජාතීන් අතර සහයෝගය, සමගිය හා රට සංවර්ධනය කරා ගෙන යාමට ඉතා හේතුකාරක වන බව අවබෝධ කරගත් ලක් රජය එයට වශයෙන් සිංහල මාධ්‍ය රජයේ සේවකයන් දෙමළ භාෂාවත්, දෙමළ මාධ්‍ය රජයේ සේවකයන් සිංහල භාෂාවත් ඉගෙනගත යුතු බවට අනිවාර්යය කර නීති සම්මත කරන ලදී.

ඒ අනුව, රාජ්‍ය භාෂා දෙපාර්තමේන්තුව පිහිටුවා, රජයේ සේවකයින් සඳහා නොමිලේ ද්විභාෂා අධ්‍යාපනය ලබා දීමේ පාඨමාලා හා වැඩසටහන් ක්‍රියාත්මක කර පවත්වා ගෙන යනු ලැබේ. නමුත්, මෙම පාඨමාලා සඳහා නිළධාරීන්ගේ උනන්දුව හා සහභාගීත්වය දියාරු තත්ත්වයක පත්වී ඇති බැවින් බලාපොරොත්තු පරමාර්ථය ඉටු කර ගැනීමට නොහැකි වී ඇත.

රජයේ භාෂා ප්‍රතිපත්තිය අනුව, වර්තමානයේ දී උතුර, නැගෙනහිර පළාත්වල විශේෂයෙන් දෙමළ භාෂාව ව්‍යවහාර කරන ප්‍රදේශවල පිහිටා තිබෙන රජයේ කාර්යාලයන් හි පරිපාලන කටයුතු දෙමළ, සිංහල භාෂා දෙකෙන්ම ඉතා යහපත් අයුරින් ක්‍රියාත්මක වෙන බවට දක්නට ඇත. නමුත්, සිංහල භාෂාව ව්‍යවහාර කරන වෙනත් පළාත්වල පිහිටි රජයේ කාර්යාලවල සිංහල භාෂාවෙන් පමණක් පරිපාලන කටයුතු සිදු කරන බව පෙනේ. මෙය එම ප්‍රදේශවල ජීවත්වන සුළු ජන වාර්ගික ජනතාවට විශාල



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

අසාධාරණයකි. අද ශීඝ්‍ර ලෙස, දෙමළ මාධ්‍ය නිළධාරීන් සිංහල භාෂාව ඉගෙනීමට පෙළඹී ඇත.

2007 වර්ෂයේ අධ්‍යාපන ප්‍රතිසංස්කරණය අනුව, රජයේ පාසල්වල දෙවන භාෂාව ඉගැන්වීමේ වැඩ පිළිවෙලක් ක්‍රියාත්මකව පවතී. ඒ අනුව, විෂය නිර්දේශ හා පෙළ පොත් පාසල්වලට බෙදා දී ඇත. ඒ සඳහා ගුරුවරුන් පත්කර පුහුණුව ලබා දී පාසල්වල දෙවන භාෂා අධ්‍යාපන කටයුතු සාර්ථකව සිදුකරමින් තිබේ.

තවද, දුරස්ථ අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව විසින් දැනට සේවයෙහි යෙදී සිටින ගුරුභවතුන් සඳහා අතිරේක භාෂා සංවර්ධන පාඨමාලා ක්‍රියාත්මක කර පවත්වාගෙන යමින් පවතී.

මෙම රාජ්‍ය භාෂා ප්‍රතිපත්තිය සාර්ථකව ක්‍රියාත්මක නොවන බව අවබෝධ කරගත් ගරු ජාතික භාෂා සහ සමාජ ඒකාබද්ධ අමාත්‍යතුමා රාජ්‍ය සේවයට 2007 ජූලි 01 වන දින සිට දෙවන භාෂාව අනිවාර්යය බවත්, ඒ සඳහා නීති කෙටුම්පත් සකස් කරන බවත් මෑතක දී ප්‍රකාශ කරන්නට යෙදුනි.

රාජ්‍ය භාෂා ප්‍රතිපත්තිය ඒ අයුරින් ම ක්‍රියාත්මක කරවීම සඳහා කටයුතු කිරීම ලක්වැසි සියළුම ජනතාවගේ වගකීම හා යුතුකම බවත්, දේශය ගොඩ වැංවීම සඳහා එය බෙහෙවින් ඉවහල් වන බවත් අවබෝධ කරගත යුතු වේ.

නැවත අප දේශය යුදමය තත්ත්වයට ඇද නොදමා, ජාතීන් අතර සහජීවනය හා සංස්කෘතීන් අතර සහයෝගය වර්ධනය කර සමෘද්ධිය කරා ළඟාකර දේශය නැවත ගොඩ නැගීමට මෙම භාෂා ප්‍රතිපත්තියේ යහපත් ක්‍රියාත්මකභාවය ඉතා උපකාරී වන බව සත්‍ය කරුණකි.

# வந்து போகும் நீ.......

அ. போல் அந்தனி
விடுகை வருடம், சித்திர நெறி.

எந்த சாயலும் இல்லாமல்
வாழ நினைத்தாலும்
எந்த சாயலாவது தெரிந்து
விடுகின்றது
சாயலற்று வாழ்வதில் தான்
அர்த்தமென சொன்னாலும்,
தவிர்க்க முடியாததாயிற்று
சாயலோடு வாழ்வது.

ஞாபகத்தை கிளறிவிட்டு
மௌனத்தில் உறைகிறாய்
முன்நின்று எதுவும் பேசாமல்
இயல்பாய் சிரித்து
நீ செய்த இதயமொன்று
எனக்கென என்றோ ஒரு நாள்
பதிலுக்கு எதையேனும் செய்ய.......
இப்போது தோன்றவில்லை

தொட்டிச் செடியுடன் பேசினேன்;
பூ மலர்ந்த விதம் பற்றியும்,
வாடிச் சருகானது பற்றியும்,
வருத்தமுடன் பேசியது
என் பேச்சை கேட்காமல்

சரியாய் எழுதத் தெரியவில்லை
எப்படி எழுதுவதென்று
சொல்லித்தர வந்தாய்
எழுத்தில் அழிந்துப் போன
என்னைத் தேடுகின்றேன்
போய் விட்டாய் நீ....................!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மானுடம்

## பரிணாமத்தின் இடைவழித் தேடல்

கந்தையா கணேஷமூர்த்தி
விடுகை வருடம், ஆரம்பப் பிரிவு

தீயின் நாவுகள் வேர்களின் தலைகளைச் சுடுகின்ற போழ்தில் காய்கள் வெம்பிக் கனிவதில் வியப்பேதுமில்லை. அர்த்தமற்றுப் போன வெற்று வார்த்தைகளுக்குள் வாழ்க்கைத் தன் சுயம் முழுவதையும் இழந்து வேற்றுருக் கொண்டு பேயென ஆடுகிறது தலைவிரித்தபடி. காலமும் வெளியுமான எல்லையற்றதொரு பரப்பில் தன் இருத்தலையும் நிலைத்தலையும் தேடித்தேடி ஓய்ந்தும் பின் சாய்ந்துமாக மரணத்தின் வெளிவாயினுக்குள் நுழைகிறது தன்னிஷ்டப்படி வாழ்வு.

காலத்தின் நீட்சியும் பூமியின் சுழற்சியும் லட்சமென வருடங்களைக் கடத்திய போதும் பரிணாமத்தின் கணிதப்படி மனிதத் தோற்றமே வெறும் ஐந்து நிமிடங்கள் மட்டுமானதாயிரு க்கையில் ஒரு நூறு வருடங்களைக் கடந்திட ஒரு கோடி வருடங்களை நடந்திட வேண்டியிருக்கும் அவன் தன் தடங்களில்.

பூச்சியினங்கள், பறவைகள், தாவரங்களைப் போலவே மானுடப் படைப்பின் உயரிய லட்சியம் கண்டு வியந்த தருணங்களில் அப்படைப்பின் இருள் வெளிகள் குறித்த வினாக்கள் எழுந்திருக்க நியாயமில்லை. முடிவற்றதான தன் பயணத்தில் குடும்பம், சமூகம், சமுதாயம் என விரிந்தபோது எண்ணிலடங்கா முகங்களுக்குள் சிக்கித் திணறியும் மூச்சு வாங்கியும் தன் சுயத்தினை நெஞ்சைப் பிளந்து காட்ட வேண்டியதாயிற்று தன்னை இழுத்தேகும் வரலாற்றுக் காலங்களுக்கு. பொருள்முதல்வாதமும் கருத்துமுதல்வாதமும் தமக்குள்ளே வெறிகொண்டு தம் உயிர்நிலைகளைக் கடித்துக் குதறி தம் சுயம் காட்டித் திரிகையில் இன்னொரு புறம் இன, மத மற்றும் சாதி வெறிகளும் பிற இன்னோரன்ன வெறிகளும் குதித்தாடுகின்றன மானுடத்தின் வீதிகளில். மானுடம் தன் இருத்தலைக் கசந்து விழிபிதுங்கி சாய்ந்திற்று இத்தனைக்கும் மையத்தில்.

கற்கள் மட்டும் தோன்றி மனிதன் தோன்றியிராத காலங்களில் கலவரங்கள் இருந்ததாக வரலாற்றுக் குறிப்பில்லை. இறைவன் மனிதனைத் தோற்றுவித்த பிறகே மனிதன் தன்னாலான அனைத்துக் கலவரங்களையும் படைத்தான் மனிதன் கலவரங்களின் படைப்பாளி. இன்றைப் போலவே பூமி தன்பாட்டில் சுற்றிக் கொண்டிருந்த காலமொன்றின் இடைவெளியில் இவன் வேறொரு கிரகமாய் தன்னைத்தானே சுற்றிக் கொண்டான்.

பேசவொரு மொழியிலாமலும் வாழவொரு உறைவிலாமலும் வனாந்தரமெங்கும் நிர்வாணமாய் திரிந்தவன் மதம் கொணர்ந்தான் இறையென்ற நாமத்தில் தன் நிர்வாணம் மறந்து. என்னிறைவன் உன்னிறைவன் எனும் வேற்றுமைக் கொணர்ந்தான். என் கடவுள், உன் கடவுள் எனும் நாத்திகம் கொணர்ந்தான். நான் இறைத்தூதன் என்றான் ஒருவன், நான் கடவுளின் ஏகப்பிரதிநிதி என்று கோஷமிட்டான் இன்னொருவன். நான் இறைவனின் தலையிலிருந்து பிறந்திற்றேன், நீ பாதத்திலிருந்து என்று உச்சியேறினான் ஒருவன். மனிதன் விலங்கு நிலைக்கு உயர்ந்தான். மண்ணில் வீழ்ந்தும் உருண்டும், புரண்டும், இரத்தம் கக்கியும், ஓவென அலறியும் கொன்று குவித்த மயானங்களில் மதங்கள் செழித்தன தன்பாட்டில் பூமியின் சுழற்சிக்கெதிராய்.



அச்சமே மரணம். அச்சத்திற்கப்பால் நீ போக வேண்டும். GTC

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதர்கள் சாத்தான்களாயினர். சாத்தான்கள் புனித நூல்களையும் வேதங்களையும்சமைத்தன. உள்ளங் கைகள் இறைவனைக் காட்ட விரல்கள் வெளியே பாய்ந்தன. நகங்கள் தமக்குள்ளே கண்களில் குத்திக் கொண்டு பார்வையற்று உலவின வீதிகளில்.

**"என் சமயத்தை தழுவும் வரை எந்தவொரு மனிதனும் என் சகோதரன் அல்ல"**

என்னும் ஆன்மீகக் கொள்கைகள் எழுந்தன.

**" என் மதக்கொள்கைகளைத் தவிர - ஏனைய எந்த மதக்கருத்தும் பிசாசு களின் வார்த்தைகளே"**

என்ற தெய்வீகத் தீர்ப்புக்கள் எழுதப்பட்டன.

காலம் மதங்களின் கோரப் பிடிக்குள் சிக்குற்று சின்னாபின்ன மாயிற்று. பிறப்பொத்த சகமனிதன் பிசாசு நிலைக்கு உயர்ந்தபொழுது பிசாசுகள் தெய்வீகம் சுமந்து மானுடம் பேசின. விபீஷண உலகைப்போன்று ஆங்காங்கே ஓரிருக் குடிசைகளில் வெளிச்சம் தெரிந்தது.

"ஒன்று பரம்பொருள்
நாம் அதன் மக்கள்"

மானுடத் தோற்றத்தின் பல்லாயிர வருட அனுபவச்சாற்றின் சாரம் இது. நாகரீகத்தின் தோற்றுவாயில் பண்பாட்டின் வகைமைப் பாடு எத்தனையானபோதும் மனிதக் குலத்தின் ஒற்றைத் தன்மையை மதங்கள் தனித்து நின்று சிதைத்தன. குரு பரம்பரைக் கதையொன்று " இருக்கும் சின்னதான ஓர் இடத்திலும் ஒருவர் படுக்கலாம்; இருவர் இருக்கலாம்; மூவர் நிற்கலாம்" என்ற சகோதரத்துவ சிந்தனையில் இறைவன் நான்காவதாய் வந்து நிற்கிறான் என்கிறது.

மதச்சிந்தனையில் ஊறிப் போயிருக்கும் ஒருவனிடம் மனித நேயத்தையோ, மானுடத்தையோ துளியும் நாம் எதிர்பார்த்து விட முடியாது. மானுடமா, மதமா என்று வருகிறபோது மதத்தை முன்னிலைப் படுத்த மதவாதியால் சாத்தியமாகிறது. எனவே தான் நாத்திகமே உண்மையான ஆத்திகம் என்னும் முதிர்ந்த தத்துவத்திற்கு நாம் செவிசாய்க்க வேண்டியிருக்கிறது. மதங்களின் இயலாமைகளும் இருட்டடிப்புக்களும் இறுக்கங்களுமாயிணைந்து மானுடப் பிரவாகத்தை ஓர் சாக்கடைக்குள் அடைத்தன.

இன்றளவில் இனங்கள் தம்மைத் தொன்மைப்படுத்திக் கொள்ளலும் அடையாளங்களை, தனித்துவங்களை மிகைப்படுத்திக்கொள்ளலும் மாற்றானினத் தானை தூரத்தள்ளி செல்லும் என்பது வரலாறெழுதாத பாடமல்ல. என் இனம், என் குலம் என வேற்றுமை போற்றுவது காட்டுமிராண்டித்தனத்திற்கு வழிகோலு மென்பது மிகையல்ல. பன்னெடுங்கால அனுபவ சிலிர்ப்புக் களத்தனையும் பன்மைத்துவத்தை நமக்கு கட்டளையிட்டுச் சென்றிருப்பது நினைவூட்டிக் கொள்ளவேண்டியது.

**மையம் ஒன்றின்**
**பிடிமானமின்றி - எங்கும்**
**பொருட்கள் விழுகின்றன**
**உலகில் ஆட்சியின்மை நிலவு கிறது**

என் கும்பலுக்கான சட்டங்கள் உன் இனத்திற்குமானவை என்பதாலோ, எனது இனத்திற்கான கோட்பாடுகள் உன் கும்பலுக்குமானவை எனப தாலோ மானுடப் படைப்பின் உயரிய இலக்கை நாம் அடைந்து விட முடியாது. எனக்கான உரிமை உங்கள் சுதந்திரத்திற்குட்பட்டதெனின் உங்களுக்கான சுதந்திரம் எனது உரிமைக்குட்பட்டது என்ற தனிமனித கூற்று ஜனநாயக சித்திரமன்றி வேறெது?

**நான் மேன்மைக்குடிப்பிறப்பு**
**உடையோன் - எனவே**
**என்னை நீ உடைமை கொள்ள முடியாது உனக்கு ஒத்து ஊத வைத்திட முடியாது உலகத்தில் எங்கும் எந்தவொரு சுதந்திர அரசினிடத்திலும் என்னை ஓர் ஊழிக்கருவியாகப்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயன்படுமாறு பிடித்தளித்துவிட முடியாது ஏனெனில் - நான் **மேன்மைக் குடிப்பிறப்பு உடையோன்**

சேக்ஸ்பியரின் மேதாவிலாசம் இது. மானிட நியதிகள் பொம்மைக ளுக்கானவை. மனிதன் ஆறாம் அறிவைக் கடந்து ஏழாம் அறிவை நோக்கி எட்டி நடப்பவன். நானும் நீயும் நல்ல நண்பர்களானால் நமக்குள் இனம் எதற்கு, மதம் எதற்கு, குலம் எதற்கு கோத்திரங்கள் எதற்கு? என்று வினாவெழுப்ப எந்த மனிதனுமிங்கே இவற்றைக் கடந்தவனாக இல்லை. உனக்கும் எனக்கும் விரோதத்தை உண்டுபண்ணும் எந்தக்கருத்துக்கும் என்னிடம் அனுமதியில்லை. உன்னையும் என்னையும் ஒரே நொடியில் இணைக்கும் ஓர் உணர்வுப் பிரவாகத்தையே நான் விரும்புகிறேன் என்னும் அனுபவப் பிழிவு எல்லோருக்கும் சாத்தியமானதன்று.

இதில் பெருக்கெடுத்தோடும் உணர்வுப் பிரவாகம் எது என்ற கேள்விக்கு மேற்சொன்ன சாதியோ, மதமோ எதுவும் பதிலிறுப்பதாக யில்லை. உன்னிலிலாத வொன்று என்னிட முளது; என்னிடமிலாத வொன்று உன்னிட முளது. இறைபடைப்பில் ஏதும் குறைவில்லை உனக்கும் எனக்கும் எனினும் உன்னை ஆளவென நானும் என்னை வீழ்த்தவென நீயுமாய் நேரெதிராய் எழுகிறோம் வரலா றெழுத.

அற்பத்திருடா என்றெனையழைத்த
வெற்பே யானும் விளம்பக் கேட்பாய்

..........................................

**வனங்களை முதுகில் வகித்து**
**நின்றிட வல்லை நீ ஆயின், மற்று**
**இங் கெனைப் போல் நெல்லைக்**
**கெறிக்க நின்னால் ஆகுமோ**
**யாவரே பெரியர் யாவரே சிறியர்**
**ஒன்றிற் பெரியர் ஒன்றிற் சிறியராம்**
**ஒன்றிற் சிறியர் ஒன்றிற் பெரியராம்**
**ஆதலின் அற்பர் ஆகாதவரென**
**ஓதுதல் மடமையின் சாதனையாமே**

என்ற ஞானி எமர்சனின் வேதம் தலைபெருத்த தடாலடிக்காரர்கள் மீது விழுந்த மிகப்பெரிய சாட்டை யடியாகும்.

ஒவ்வொரு மனிதனுக்குள்ளும் ஏதோவோர் வகையில் தனித் தன்மையும் திறமையும் வாய்த்து விடுகிறது. அந்த ஆற்றலே அவன் உடல் முழுக்க நாள, நாடிகளெல்லாம் வியாபித்து அவனை வேற்றுருக் கொள்ளச் செய்துவிடுகிறது. நினைவாற்றல் அற்புதமாக வாய்க்கப் பெற்றவன் தசாவதானம் செய்கிறான், வாதம் புரியும் திறமை படைத்தவன் வியாக்கியானம் செய்கிறான், பணம் சம்பாதிக்கத்தெரிந்தவன் மகா உலோபியாகிப் போகிறான். தனித்தன்மைகளால் நிரம்பி வழிபவன் தனக்கு எல்லாம் தெரியுமென்று நிர்வாகங்களில் சர்வாதிகாரத்தை அவிழ்த்து விடத்தொடங்குகிறான் இவ்வாறு தனித்தன்மை காரணமாக **மனிதத் தலைகளில் ஏற்படும் வீக்கங்களை சரிசெய்து சராசரி மனிதனாக வாழச் செய்வதே பண்பாடு**. வாழ்க்கையில் வெற்றி பெற்றவன் தலைகால் தெரியாமல் கண்மூடி நடக்கத் தொடங்கிவிடாதபடி அவனை தடுத்தாட் கொள்வதே பண்பாடு.

பண்பாட்டை மறுதலிக்கிறவன் சமூகத்திலிருந்து அந்நியப்பட்டு போகிறான். அவன் மக்கள் கூட்டங்களில் பங்குகொள்வதில்லை. தன் நெறி பிறழ்ந்த நடவடிக்கைகளால் சமூகத்திற்கு மாபெரும் தீங்குகளை இழைத்து வருகிறான். தன்னால்தான் உலகமே தடுக்கிவிழாமல் ஒடிக் கொண்டிருக்கிறது என்று கருதி விடுகிறான். இவ்வாறு நான்கு தற்பெருமைத் தான்தோன்றிகள் புகுந்து விட்டால் மானுட வீதியில் கலவரங்கள் ஏற்படாதா என்ன?

நானெனும் அகந்தை ஒரு மாபெரும் எதிரி. எல்லா மனிதரையும் எளிதில் தொற்றும் ஒரு கடூரக் காய்ச்சல் அது தன் சிறப்பாற்றலைக் கொண்டு ஒரு வட்டச் சிறையமைத்து மிகுந்த கர்வத்தோடு தன்னை அதற்குள் போட்டு தானே அடைத்துக் கொள்கிறான் மனிதன். வெளியுலகில் என்ன நடக்கிறதென்பதையே அவன் ஏறெடுத்தும் பார்ப்பதில்லை. தான் உண்டு தன் துறையுண்டு என்று தன் உலகிற்குள் ஆமையைப் போல ஜாதிப்பிரஷ்டம் செய்துகொள்ளும் தன்வெறி (Egotism) க்கு மாற்று பண்பாட்டைக்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்றுக்கொடுப்பதைத் தவிர வேறொரு வழியுமிராது.

உலகம் அழகானது; இறைவனின் ஒவ்வொரு படைப்பும் சுவாரஷ்யமானது. பண்பாடு படைத்த மனிதனுக்கன்றி பிறருக்கு சூரியோதயத்தின் அழகு தட்டுப்படுவதில்லை குட்டி மஞ்சள் நிறக் குருவியொன்று வானத்தில் அழகாய் வட்டமடித்துப் பறக்கின்றது. ஆகா என உள்ளம் பூரிக்க எத்தனை பேருக்கு முடிகிறது. வைகறைப் பனி, அந்திவானம் இதையெல்லாம் உற்றுப்பார்த்து இதயத்தைப் பறிகொடுக்காத மனிதன் முழு மனிதனேயல்ல. பயன், பிரயோசனம், உருப்படியான காரியம் என்று பலனைக் கட்டி மாரடிக்கிற ஜென்மங்கள் பிச்சைக்காரர்களேயொழிய வேறில்லை. சமுதாய இயந்திரத்தில் அவர்களுடைய இழுத்தல், தள்ளுதல் எனும் அசைவியக்கம் இருந்த போதிலும் அவர்ளை சுயபிரக்ஞை கொண்ட மனிதப் பிறவியாக எடுத்துக்கொள்ள முடியாது.

ஆக, மனிதப் பரிணாமத்தில் மானுடத்தின் எழுகை மண்மீது நிரந்தரமாக வேண்டுமெனில் மனிதனுக்குள் சீக்குப்பிடித்துக்கிடக்கும் காட்டுமிராண்டித்தனம் களையப்பட வேண்டும் மதம்,இனம், மொழி, சாதி, முதலாளித்துவம், ஆணாதிக்கம், அகந்தை என மனிதனுக்குள் வேற்றுமை காட்டி நிற்கும் அனைத்தையும் தீயினுக்கிரையாக்கி ஒற்றை வேதமொன்றை உலகினுக்கீந்திட ஒவ்வொரு மானிடனும் சிந்தித்திட வேண்டும். இறைமையின் ஒருமையில் எவ்வித ஏற்றத்தாழ்வும் இல்லை என்பதை உணர்ந்துகொள்ள வேண்டும். அகண்ட வானத்தை எந்த மதமோ, இனமோ உரிமை கொண்டாட முடியாது. காற்றில் எவனுடைய கையெழுத்தும் இல்லை. அருவிகளில், சோலைகளில் கோடு போட்டு பாகுபாடு காட்ட முடியாது. பூக்களை சொந்தம் கொண்டாட யாருக்கும் உரிமை யில்லை. காற்றைப் போலவே ஒவ்வொரு மனிதனும் சுதந்திர மானவன். பரப்பிரம்மத்தின் அனைத்து அம்சங்களும் ஒவ்வொரு மனித னுக்குள்ளும் வியாபித்து நிற்கின்றன. ஒவ்வொரு மனிதனும் பரிபூரணன். இறை தத்துவத்தோடு மானுடம் பேசி நாம் வெற்றி கொள்ள முடியாது.

# நான் போகிறேன்

**தவமணி பாக்கியநாதன்**
விடுகை வருடம், ஆரம்ப நெறி

இது ஒரு யாத்திரை
எனது மூன்றாம் கண்ணை
திறக்குமொரு முயற்சி
சூரியனின் கிரணங்களே
சோதனையின் பின்னால்
பிரவேசம் செய்யும் பிரதேசம்!

விளைச்சல் மறந்து
விகாரம் பெற்று
வெடிகுண்டுகளை
தன் கருப்பையில் தாங்கி
ஓவென்ற அலறலுடன்
வாழாவிருக்கிறது பூமி

இது
நரகத்தின் நுழைவாயில்
மரண
ஊர்வலங்களின் சாம்ராஜியம்!

வெடி ஓசைகள்
இடியின் காதை கிழித்ததால்
மழைக்கு
அழைப்புக் கொடுக்க
ஊமையாகி விட்டது பூமி!

குருதி வழிந்தோடும்
வாய்க்கால் வழியே
நெற்பயிர் செம்பயிராய்
தள்ளாடியது!

ஊருக்குள் நுழைகிறேன்
ஒருவரையும் காணவில்லை
மனிதர்கள் வாழாத
மயான பூமி
பேயோடு ஆகாது
வாழ்க்கை
புறப்படுகிறேன்
புது உலகம் தேடி !!




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசை

ஜே. எப். நிஹாறா
விடுகை வருடம், இஸ்லாம் நெறி

"ஆசை ஆசை இப்பொழுது
பேராசை இப்பொழுது
ஆசை தீரும் காலம் இப்பொழுது.......?"

மனமே ! ஒன்றிலிருந்து பத்துக்கும்
நூறுக்கும் தாவாதே...
ஒன்றிலிருந்து ஒழுங்குபடுத்து
உன் ஆசைகளை
ஓராசை தீர்ந்து விடும் போது
மற்றொன்று பிறந்து
உன்னைப் பயமுறுத்துகின்றது

இந்த உலகம் கூட ஆசைகளால் தான்
சுழல்கின்றது
ஆசைகளால்தான் இந்த உலகம்
உயர்ந்திருக்கிறது, நிமிர்ந்திருக்கிறது
ஆசை விசத்தை விடக் கொடியது

ஆசையே இல்லாதவனை
நீ ஆமோதிக்காதே...........
பறக்க ஆசைப்பட்டான்
விமானச் சிறகைப் படைத்தான்
நீந்த ஆசைப்பட்டான்
படகை உருவாக்கினான்
ஆசை பெற்றெடுத்த பிள்ளைதான்
விஞ்ஞானம்.
ஆசையும், அறிவும் திருமணம் புரியும்
போது
பயனுள்ள பிள்ளைகள் கிடைக்கின்றன.

ஆசை வெளிச்சம் தருகிறதா?
அந்த ஆசைக்கு வெளியே செல்லாதே
ஆசை அச்சம் தருகிறதா?
அந்த ஆசையை விட்டு கழன்று விடு.

பூக்களால் வாழ்க்கை செய்யப்படுகிறது
கற்களாலும் வாழ்க்கை செய்யப்படுகிறது
ஆசை என்ற தாகம் அழைக்கும் போது
குடிக்கக் குடிக்க அதிகரிக்கின்றது.

ஆசை தீயாக பற்றி எரியும் போது
வாழ்க்கை சாம்பலாகிவிடுகின்றது.
ஆசை மனிதனுக்கு எரிபொருள்
வாழ்கையை இயக்கும் சக்தி அது தான்
மனிதனின் விலாசம் ஆசையாகும் போது
துன்பம் அவனின் கதவைத் தட்டுகின்றது
திருப்தி இன்மைப் பசியால் நீ
துடிக்கின்றாயா?
ஆசை உன்னிடம் விருப்பம் கேட்கின்றது
ஆசைக்கு தகுதி வேலி போட வேண்டாமா?
கால் இல்லாதவன் செருப்புக்கு
எப்படி கடிதம் கொடுக்கமுடியும்
கையெழுத்துப் போடத் தெரியாதவன்
காசோலையைக் கையாளலாமா?

ஆசையின் பாஷை உனக்குமட்டும்
புரிகிறதா?
ஆசை தீச்சுடர் போன்றது
நீ வீட்டில் பூச்சியாகினால்
உன் இறப்பு
தற்கொலைக்குச் சமனாகிவிடும்

நீ பணத்தைச் சாப்பிட நினைக்கிறாய்
பணம் உன் சந்தோஷத்தை
கொன்று குவிக்கின்றது
நாற்காலிகள் மீது உன் மோகம்
விழுகிறது
உன் தாகம் தீர்கிறதா?
அது தொடர்கிறது
காகம் புல்லாங்குழலுக்கு
ஆசைப்படலாமா?
அது குயிலுக்குரியது

ஆசை என்ற சாப முத்திரை குத்தித்தான்
உனக்கு சுவாசம் வழங்கப்படுகின்றது
உன் உயிரில் அவ்வப்போது
குருதி கசிந்து வடிகிறதா?
நீ முதலில் உன்னைக்கண்டு பிடி
உன் இதயத்தில் பல ஓட்டைகள்



ஒருவனிடம் அச்சம் கொண்டால் அவனிடம் அன்பு கொள்ளமுடியாது. GTC

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசைகளால் ஓட்டைகளை
அடைக்க முயல்கிறாய்
ஓட்டைகள் இன்னும்பெரிதாவது
புரியாமலே!

நல்ல ஆசைகள் ஆசீர்வதிக்கக்கூடியவை
முள் போன்ற ஆசைகள்
அப்புறப்படுத்த வேண்டியவைகள்
தீமைகளுக்கு தீக்குச்சி கொடுக்க
ஆசைப்படு
தர்மங்களுக்கு வேர் கொடுக்க
ஆசைப்படு

அடுத்தவனின் வயலில்
நீ பயிர் செய்ய முயலாதே
அடுத்தவனின் உள்ளத்தைக் கேள்
அவனின் உயிருக்கு ஆசைப்படாதே
பேராசை போரை விட கொடியது
அதிதியாக நீ இருந்தாலும்
அகதியாகுவாய்.

ஆசை உன்னதமானதென்றால்
அதன் பின்னால் செல்
வாழ்க்கைக்கு ஒவ்வாததென்றால்
அதைக் கண்டு ஓரமாக ஒதுங்கு

பாலில் சீனி போல் ஆசைகளை
அளவோடு உன்னோடு கலக்கவிடு
இதயத்தை இலகுவாக்கு
வாழ்க்கைத் தோட்டத்தை
அழகாக்கு.

### 3 மாதம் கழித்து.....?

வேலைக்கு சென்றான் முத்துசாமி. முதலாளி அவனிடம் முதல் 3 மாதம் ரூ.500/- எனவும், 3 மாதம் கழித்து 1000 எனவும் கூற அவன் 'நான் நான்காவது மாதம் வருகிறேன்' என்று நடையைக் கட்டினான்.

# நண்பா

எம். தேவதாசன்
விடுகை வருடம், ஆரம்ப நெறி

இறந்து விட்ட கலங்களை
எடுத்துச் செல்லும்
இவ்வுடம்பை
என்னவென்று சொல்வது......?

சற்றே திரும்பி பார்
சதிகார கூட்டம் நம்மை
சாய்த்துக் கொண்டிருக்கிறது

துண்டு துண்டாய்
வெட்டி விட
துணிவிருந்தும் - உன்
துன்பநிலை
காரணம் என்கிறாய்

வேண்டாம் வேண்டாம்
என - விட்டு விட்டு
ஏன் விரைந்து செல்கிறாய் ?
வா! வா!!

புறப்படு
பூவும் நீதான்,
புலியும் நீதான்....என்பதை
புரியவை.........!

கூட்டத்தின் கூக்குரலுக்கு
கும்பிடு போடும்
சிலரின் வாட்டத்தின்
ஏக்கத்தை
போக்கிவிடு

இனியென்ன
உன் புத்திக்கு
சக்தி கொடு சிலரின்
சதிக்கு
நீ விதி எழுது....!

இனி நீதான்....!
இனியும் நீதான்..!
அரசியல்....
நமக்கு அத்துப்படி
அரசாங்கம்........
நாம் விட்டப்படி......!
புறப்படு............







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிதர்சனம்

கே. எம். றிஸ்வான்
விடுகை வருடம், இஸ்லாம் நெறி

கண்களைத் தேடி
கனவுகளாய் விரையும்
காட்சிகள்

மூச்சுக் குழலைத் தேடியே
மூச்சிரைத்து மாயும்
சுத்தச் சுவாசங்கள்

சமாதான வழக்குக்கு
காட்சி சொல்ல வந்து
சிறையிலடைப்படும்
சாட்சிகள்

இசையின்பம்
இலைந்து வந்து
இதம் தரும் போதெல்லாம்
இறந்து போகும் செவிச்செல்வங்கம்

பாதங்களைக் காண
பகலிரவாய்ப் பயணிக்கும்
பரிதாபப் பாதைகள்

காற்றோடு வந்து
கரங்களுக்குள் சிக்கித்தவித்து
காற்றோடு கரைந்து போகும்
கலாக் கலர் கவிதைகள்

ஷநா' க்களின் நர்த்தனம் காண
நாளைக் கொரு மேடையில்
நங்கூரமிட்டுக் காத்திருக்கும்
நல் ஒலிவாங்கிகள்

உதடுகளின்
உன்னதங்களைக் காணவே
உயிர்க் குறில்கள்
உதயம்
உள்ளங்களுக்காய்
உண்மையையும்
உறுதியையும்
உயிலெழுதிக் காத்திருக்கும்
உணர்வலைகள்

நீண்டு போகும்
வாழ்வின் தருணம்
நிதர்சனங்களை மறந்து
நிம்மதியைத் தேடும்

# கடந்த வேளைகளில்

எம். நௌபர்
விடுகை வருடம், இஸ்லாம் நெறி

தேடும் பொருள்
கிடைப்பதரிது
நமக்கான நண்பர்களும்
அப்படித்தான்!

சிவப்பு, மஞ்சள்
பச்சையென
எத்தனை நிறங்களில்
ஊரூராய்க் கூடினோம்
நண்பர்களே!

கிரிக்கட்
அரசியல்
கலை கலாச்சாரங்கள்
காதல்
இன்னும் பலவும் பேசினோம்!

எல்லோரும் சிரித்தவேளை
பசி வந்தது
எல்லோரும் பசி தீர்த்தோம்
எல்லோரும் காசு கொடுத்தோம்

மழை வந்தது
கைகோர்த்துக் கொண்டோம்
ஒரு குடைக்குள்

அந்தரங்கங்களை
பகிர்ந்து கொண்டோம்!
நமக்குள்
அன்பு கூட இல்லை பெரிதாய்
அவ்வளவு நெருக்கம்
அவ்வளவு வேகம், பிணைப்பு,

மீண்டும்
ஓர் அந்தி வந்தது
உன் முகத்தை எனக்கு மறைத்து
நீ தொலைவானாய்

என் முகத்தை உனக்கு மறைத்து
நான் தொலைவானேன்
நமதான
நட்பு மட்டும்
காத்துக் கிடக்கிறது
கல்லூரி வாசலில்!





உண்மை உங்களுக்குத் தெரிந்திருக்கும் போது மற்ற மனிதருக்கு அஞ்சி அதைக் கூறாமல் இருந்து விடாதீர்கள். GTC

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரதக் கலை



எம். கவிதா ஜெயகாந்தி
முதலாம் வருடம், உடற்கல்வி நெறி

பரதக் கலை இன்று பெரும்பாலும் தமிழ் மக்களாலும் தமிழ் மக்கள் தவிர்ந்த பிற இன மக்களாலும் பெரிதும் விரும்பி போற்றி உலகளாவிய ரீதியில் வளர்க்கப்பட்டு வருகின்ற ஒரு கலையாகும் இக்கலைப்பற்றி நோக்கும் போது கண்ணிற்கு இனிமையான காட்சி சார் கலையாக மிளிர்ந்து அநேக ருடைய மனதை கொள்ளை கொள்வதாக காணப்படுகின்றது.

அந்த வகையில் நாட்டியக் கலையின் தோற்றத்தை நோக்குவோமாயின் உலக வரலாறு லௌகீக வரலாறு ஆகும். பூமியில் ஜனனித்த மனிதனுக்கு மொழி ஞானம் உண்டாகவில்லை. அவனும் மற்றைய விலங்குகளைப் போல சந்தோசத்தையும் கஷ்டத்தையும் வெளிக்காட்ட கத்திக் கொண்டும் உறுமிக் கொண்டும் இருந்தான். படிப்படியாக அந்த சத்தத்திலிருந்து பாஷையை உண்டாக்கிக் கொண்டான். ஒரு நிமிடம் சிந்தித்தோமானால் மிருகத்தைப் போல வாழ்ந்த மனிதன் மொழி ஞானம் பெற்று அம்மொழியை உருவாக்க எவ்வளவு ஆயிரக்கணக்கான ஆண்டுகள் உருவாக கடந்திருக்க வேண்டும் என்பதையும் அதற்காக மனிதன் எப்படிப்பட்ட துன்பங்களை அனுபவித்திருப்பான் என்பதையும் அனுமானிக்க முடிகின்றது.

மனிதனுக்கு சந்தோஷம் வந்தால் சிரிப்பதும் கூத்தாடுவதும், கோபம் மிகுந்தால் இயற்கையையே அழிப்பதாகவும் கோப உணர்வுகளை வெளிப்படுத்தி சந்தோசத்தை கூச்சலிட்டும் குதித்துக் கூத்தாடியும் கைகளை கூத்திற்கேற்ப தட்டினான். இவ்வாறு கூச்சலிட்டது இசையாகவும் குதித்தது கூத்தாகவும் கைகளை தட்டியது தாளமாகவும் மாறியது. இவ்வித இசை, கூத்து, தாளம் முதலியவற்றை மனிதன் தான் அறியாமலே கண்டும் பிடித்தான். கூத்தாடுபவன் தனது சாமர்த்தியத்தால் சபையோரின் மனநிலையை உணர்ந்து அவர்களை கவரும் வகையில் நவரசங்களையும் சேர்த்து பார்த்து அனுபவிக்கும்படி செய்தான். இக்கூத்தே மனித நாகரீகத்துடன் போட்டியிட்டதென்று தொன்று தொட்டுவழங்கி வருகின்றது. இதுவே நாளடைவில் நாட்டியம் என பெயர் பெற்றது. பரத முனிவருக்கு ஆயிரம் வருடங்களுக்கு முன்பே இக்கலை தோன்றியிருக்க வேண்டும். பரதரின் காலத்தில் நாட்டியம் மேலும் மலரச்செய்தது.

அந்த காலத்தில் வேதங்கள் மக்களால் அறியவோ உணரவோ முடியாத நிலையில் இருந்தது. படித்தவர்கள் மட்டுமல்ல பாமரர்களும் இவ்வேதங்களை உணர வேண்டும். என்று மக்கள் விரும்பினர். இதனால் இறைவனிடம் சென்று முறையிட்டனர். இறைவனும் (சிவன்) பிரம்மனிடம் ஐந்தாவது வேதத்தை படைக்கும் படி சொன்னார். பிரம்மானும் அதற்கிணங் கினார். இருக்கு "ரிக்" வேதத்திலிருந்து வாக்கியமும் "யசூர்" வேதத்திலிருந்து அபிநயமும் "சாம" வேதத்திலிருந்து இரஸமும் எடுத்து அவற்றை ஒன்றாக்கி நாட்டிய சாஸ்திரத்தை வகுத்து பின் இதனை முதன் முதலில் பரத முனிவருக்கு கற்பித்தார்.

இவ்வாறு பரதர் தான் கற்ற கலையை கந்தர்வர், அப்சரஸ் முதலிய விண்ணுலக வாசிகளுக்கு பயிற்று வித்து சிவபெருமான் சந்நிதியில் நாட்டியம் நிருத்தம், நிருத்தியம், ஆகியவற்றை அரங்கேற்றினார். சிவபெருமான் தனக்கே உரித்தான நர்த்தனமான தாண்டவத்தை பரத முனிவருக்கு கற்பிக்கும் படி தம் கனல்களின் மேலான நந்திகேஸ் வரருக்கு ஆணையிட்டார். அவ்வாறே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நந்திகேஸ்வரரும் பரத முனிவருக்கு தாண்டவத்தை கற்பித்தார். சிவபெருமான் பார்வதிக்கு அதிலா வண்யமான லாஸ்யம் எனும் நாட்டியத்தை அருளினார். அதையும் பார்வதியின் வாயிலாக பரத முனிவர் கற்றுணர்ந்தார். நந்திகேஸ்வரர் மூலம் தாண்டவத்தை பயின்ற பரத ரிஷி மானிடருக்கு அதை கற்பித்தார். சிவபெருமான் பக்தர்களின் மேலானவரான பாணாசுரனுடைய மகள் உஷை பார்வதியிட மிருந்து இக்கலையை பயின்றாள். துவாரகையிலுள்ள இடைப்பெண்கள் உஷையிடமிருந்து இக்கலையைக் கற்று அவர்கள் சௌராஷ்டிரப் பெண்களுக்கு கற்பித்த பின் அவர்கள் மூலமாய் பிற நாடுகளுக்கும் பரவி பாரம்பரியமாய் உலகில் இன்று காணப்படுகிறது.

அபிநயம் என்பது சமஸ்கிருத சொல் ஆகும். ஒருவரை நோக்கி எடுத்துச் சென்று ரஸானுபவத்தை தூண்டுவது அபிநயமாகும். கீத பிரபந்தங்களில் குறிப்பின் சாரத்தை சபையோருக்கெல்லாம் பார்க்கும் போதே மகிழ்ச்சி உண்டாகும் படி பாத்திரமானவன் பிரியத்துடன் தாளத்திற்கு ஒத்தப்படி அபிநயத்துக் காட்டும் சிறப்பு அபிநயத்திற் குரியதாகும்கதைகளையும் கருத்துக் களையும் பாத்திரங்களில் குணச்சித்திரங் களையும் கதையில் வரும் சூழ்நிலை களையும் ரசிகர்கள் புரிந்து கொண்டு மகிழுமாறு செய்வதே நாட்டியத்தின் குறிக்கோள். ரசிகர்கள் மகிழ வேண்டுமானால் கலையை புரிந்து கொள்ள வேண்டும். அவர்கள் வெளிப்படுத்தும் முறையான கருத்துக்கள் தான் அபிநயம். இது ஆங்கிகம், வாசிகம், ஆஹார்யம் சாத்வீகம் என நான்கு பிரிவுகள் உண்டு; தாண்டவத்தை நோக்கும் போது தாளத்தோடும் அண்மைக்குரிய கம்பீரத்தோடும் அங்க சுத்தமோ ஸௌஷ்டவமோ சிறிதும் குறையாமல் கலை மெருகோடு ஆடும் நடனமாகும். தாண்டவத்தை சிவ பெருமான் உருவாக்கினார் என புராணங்கள் கூறுகின்றன. இவை மொத்தம் நூற்றியெட்டு தாண்டவங்கள் உண்டு. அவற்றுள் ஒன்பது தான் முக்கியமானவை என்றும் ஏழு தாண்டவங்களே பிரசித்தி அடைந்து "ஸப்த" தாண்டவமென குறிப்பிடப்படுகின்றது.

தாண்டவத்திற்கும் லாஸ்யத்திற்கும் தனித்தனி அசைவுகளோ அடவுகளோ இல்லை. அவை கையாளும் முறையில் தான் வேறுபாடு உண்டு. ஒரே அசைவை தாண்டவமாகவும், லாஸ்யமாகவும் ஆடமுடியும். ஆணுக்கும் பெண்ணுக்கும் உள்ள இயல்பான குண வேறுபாடு அசைவுகளில் பிரதிபலிப்பதால் இரு வேறு பெயர்கள் தரப்பட்டுள்ளன. தேவையான போது ஒரு பெண் தாண்டவத்தையும் ஒரு ஆண் லாஸ்யத்தையும் ஆடலாம். நூற்றியெட்டு கரணங்களுக்குரிய சிற்பங்களை சிதம்பரம் கோயிலின் கோபுரங்களில் காணலாம்.

நாட்டியத்தின் முக்கிய விடயம் அரங்கேற்றமாகும். அரங்கேற்றம் என்பது பல நாள் கற்ற கலையை ஒருநாளில் விழா எடுப்பது போல் பலர் முன்னிலையில் ஆடுதல் ஆகும். இதற்கு வசதியானவர்கள் சுலபமாக மேற்கொள்வதாகவும் ஏனையோருக்கு அவை எட்டாக்கனியாகவும் காணப்படுகிறது. இதனை நோக்கும் போது அனேகமாக திறமை இருந்தும் அதனை அரங்கேற்றுவதற்கு கடினப்படுவார்கள். இலங்கையை பொருத்தவரை இசைத் துறைக்கு முக்கியத்துவம் அளித்து வருகின்றது. இதனை சக்தி தொலைக்காட்சி சுப்பர் ஸ்டார் பாடல் தெரிவு முறை காணப்படுகின்றது. இசையோடு நடனத் திற்கும் முக்கியத்துவம் அளிக்கப்பட்டு வருகின்றது என்பதை பார்க்கும் போது பெரு மிதம் தான். இப்படிப்பட்ட சிறப்பான கலையை பாதுகாத்து மேலும் அக்கலையை வளரச் செய்ய வேண்டியது எமது தலையாய கடமையாகும்.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்ல ஆசான்

எம். வை. முனவ்வறா
விடுகை வருடம், அரபு நெறி

பள்ளிக்கூடம் என்றதுமே
கண்முன்னே வருவது ஆசானே
பள்ளிச் செல்லும் சின்னஞ்சிறு
மழலைச் செல்வங்களின் நேசர்கள்
என்றும் நல்ல ஆசான்கள்
நம் மனதில் நிலைக்கும் நல்லோர்கள்

மாணவர் தினமும் கௌரவித்து
மதிப்பும் வழங்கும் ஆசானாய்
கனிவும் குணமும் உடையவராய்
ஒழுக்கத்தின் ஊற்றாய் திகழும்
ஆசானே என்றும் நல்ல ஆசான்

பாரபட்சம் காட்டாமல் மாணவரை
தம் பிள்ளையாய் கருதும் ஆசான்
என்றும் நல்ல ஆசான்
மாணவர் சமூகம் சீர்கெடாமல்
சிறந்து சமூகத்தில் விளங்கிடவே
நல்ல முறையில் கல்வி அதை
தினமும் சொல்லும் ஆசானே
என்றும் மாணவர் மனங்களிலே
அழியா இடம்பிடிக்கும் ஆசானே

பிரதிபலன் எதுவும் எதிர்பாராமல்
நல்ல எண்ணம் மனதில் கொண்டு
நல்ல பல விடயங்களை
கற்றுக் கொடுப்பது கடமை என
மனதில் உறுதி பல கொண்டு
சேவை செய்யும் ஆசானே
என்றும் நல்ல ஆசானாம்

மாணவர் சமூகம் உயர்ந்திடவே
பற்பல புதிய விடயங்களை
தேடி வந்து ஒப்புவித்து
மாணவரை கல்வியில் உயரச்செய்வதே
நல்லாசான் ஒருவரின் கடமையதாம்

# சத்தியம் சாகும் வரை

எஸ். சுஹைறா,
விடுகை வருடம், இஸ்லாம் நெறி

காணாமல் போன நீதியைக்
கண்டுபிடியுங்கள்
கறுப்புப் பணத்தால் விலைபோகும்
கறுப்புக் கோட்டுக்களின் பெறுமானம்
அதிகரிக்கின்றதே!
அது சத்தியத்தின் சாவு மணி
சான்றோரின் சாகசம் கேள்
இல்லை

சத்தியத்தின் வெற்றியினைப் பார்
சான்றாய் இன்னும் எத்தனையோ!
நீதி தேவதையின் கண்கள் கூட
திரையிடப்படுகிறது
பாவம் நீதி வழங்கும் நீதி
தேவதைக்கு கூட
நீதியைக்காண நாதியில்லை...

பிணத்தை தின்னும் கழுகாய்
பணத்திற்கலையும் கூட்டம்
பக்கத் துணையாயிருக்கும் பாரினிலே
வக்கீல்களின் பைகள்
கறுப்புப் பணத்தின் கருவறைகள்
ஏழையின் வயிற்றில் அடித்து
ஏய்த்துப் பிழைக்கும்
காக்கி உடைக்காரர்கள்

கண்டு பிடியுங்கள்
நீதி மன்றமிருந்தும் நீதியைக்
காணவில்லை
நீதி தேவதையிருந்தும் - அவள்
கண்களைக் காணவில்லை
சட்டக் கோவையிருந்தும் சத்தியம்
ஜெயிக்கவில்லை
சத்தியம் இருந்தும்
வக்கீல்கள் சாதிக்கவில்லை
காணாமல் போன நீதியைக்
கண்டுபிடியுங்கள்
இது ஓர் ஏழையின் வயிற்றெரிச்சல்
கோழையாய் வாழ்வதில்
புண்ணியமேதுமில்லை.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பாரதி கண்ட மாதர் விடுதலை

இரஞ்சனி இராசலிங்கம்
விடுகை வருடம், கணிதப் பிரிவு

"அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்பதில்லையே
இச்சகத்து ளோரெலாம் எதிர்த்து நின்ற போதிலும்
அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்பதில்லையே............"

என்று வீரமுழக்கம் செய்த மகாகவி பாரதி இப்புவியில் வாழ்ந்த காலத்தில் ஒரு புது யுகத்தைப் புதிய சகாப்தத்தை சிருஷ்டித்து விட்டுப்போயிருக்கிறான்.கவிஞனாய், தேச பக்தனாய், புரட்சிக் கவியாய், மக்கள் கவியாய் மலர்ச்சியுற்ற பாரதியின் வாழ்வு பன்முகமானது, பல்வேறு அனுபவங்களைக் கண்டது. அடக்கு முறையின் ஆபத்து,வறுமையின் துன்பம், ஆதரிப்போர் அற்ற நிலை எந்தச் சூழலிலும் சற்றும் அஞ்சாத துணிவுடன் தனது பாடல்களைப் பாடிய கவிஞன் அவன். உலக மக்களுக்கே கூறத்தக்க புதுமையானக் கருத்துக்கள் அவனது படைப்பிலே பல்கிப்பெருகி இருத்தலைக் காணலாம்.

பாரதி வாழ்ந்த காலத்தில் பெண்கள் அடிமையாக வாழ்ந்து அவதியுறுவதைக்கண்டு மனம் நொந்து தன் படைப்பினூடாக பெண் விடுதலை கண்ணினும் இனியது எனக் கண்டு புதுமைப் பெண்ணை உருவாக்கினார்.

" கண்கள் இரண்டினில் ஒன்றைக் - குத்திக்
காட்சி கெடுத்திடலாமோ?
பெண்களறிவை வளர்த்தால் - வையம்
பேதமை யற்றிடுங் காணீர்" எனப் பாடுகிறான்.

"தையல் உயர்வு செய்" என்று ஆத்திச் சூடியிலே தொடங்கும் பாரதி பெண் விடுதலைக் குறித்துக் கருத்துக்களை புதுமைப் பெண்ணை அரங்கத்தில் ஏற்றி அவள் வாயிலாக பெண் சுதந்திரம் பற்றியக் கருத்துக்களை மணிமணியாக முன்வைக்கிறார். " புதிதாக முளைத்ததோர் தாமரைத் தேமலர் போல புதுமைப் பெண் சுதந்திர பேரிகை முழக்குகிறாள். மாதருக்குண்டு சுதந்திரம் " என அடித்துக் கூறுகிறான்.

'அறிவு கொண்ட மனித வுயிர்களை
அடிமையாக்க முயல்பவர் பித்தராம்'

என்று பாடும் புதுமைப் பெண், "ஆணும் பெண்ணும் நிகரெனக் கொள்வதால் அறிவிலோங்கி இவ்வையகம் தழைக்கும்"0 எனவும், நாணமும் அச்சமும் யாருக்கு வேண்டும்? ஞான நல்லறம் வீர சுதந்திரம் ஆகியவையே நற்குடிப்பெண்களின் குணங்கள் என்றும் செப்புகிறாள் புதுமைப்பெண். புதுமைப் பெண்ணிவள் சொற்களும் செய்கையும் பொய்மை கொண்ட கலியுகத்திக்கு புதியதே தவிர முன்னர் நிலவிய பொதுவான வழக்கமே என்று பாரதி வலியுறுத்துகிறான்.

"நிமிர்ந்த நன்னடை நேர் கொண்ட பார்வையும்
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகளும்
திமிர்ந்த ஞானச் செருக்கும் இருப்பதால்"


உலகத்திலேயே தவிர்க்க முடியாத விடயம் ஒன்று உண்டென்றால் அது வாழ்வுதான். GTC

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தப் புதிய மாதர் பெருமை மாறுவதில்லை என்கிறார். அத்தோடு களையின்றி அறியாமை எனும் பேரிருளில் அமிழ்ந்து அவலமெய்தாமல் வாழ முனைகிறாள் புதுமைப் பெண் என்கிறார். இது மட்டுமா? உலக வாழ்க்கையின் நுட்பங்களைத் தேர்ந்த பற்பல நூல்களைக் கற்றுச் சீருடை நாற்றிசை நாடுகளுக்கும் சென்று புதுமைகளைக் கொணர்ந்து பாரத தேசம் ஓங்க உழைத்திடல் வேண்டும் என்று புதுமைப்பெண் ஆர்வம் கொண்டிருக்கிறாள் என்கிறார்.

"சாத்திரங்கள் பலபல கற்பராம்
சவுரியங்கள் பலப்பல செய்யும்"

புதுமைப்பெண் மூத்த பொய்மைகள் யாவும் அழிப்பராம், மூடக் கட்டுகள் யாவும் தகர்ப்பராம், இவையெல்லாம் எதற்கு? இந்த வையத்தை மாற்றிப் புதுமையுறச் செய்து மனிதர்களை அமரர்களாக்கும் பொருட்டே என்று உன்னதமான லட்சியக்கொடியை ஏந்தி நிற்கிறாள் பாரதி கண்ட புதுமைப்பெண். இதனூடாக பாரதி மூட நம்பிக்கைகள் கொண்ட சமுதாயம் முன்னேற முடியாது என்கிறார்.

அடுத்து பெண் விடுதலை பெற்று மகிழ்ச்சி கொண்டாடிப் பாடிக் கும்மியடிப்பதையும் களிப்போடு பாடி வைத்து விட்டான் கவி. பெண் விடுதலை எதிர்காலத்தில் நிச்சயம் கிடைக்கும் என்ற நம்பிக்கையின் தூண்டலால் தொலைநோக்கோடு பாடியுள்ளான் பாரதி,

"தம்மைப் பிடித்தப் பிசாசுகள் போயின
நன்மை கண்டோ மென்று கும்மியடி"

என்று கும்மியடிக்கும் புதுமைப்பெண் நம்மைப்பிடித்த பிசாசுகள் எவை எனக்கூறுகிறாள். பெண்களுக்குக் கல்வி கூடாது என்று தடுத்து வீட்டுக்குள்ளே பெண்ணைப் பூட்டி வைக்க முனைந்த விந்தை மனிதர், மாட்டை வசக்கித் தொழுவினில் மாட்டும் வழக்கை வீட்டினில் பெண்களிடம் காட்ட வந்தவர் இவ்வியாதியோர் போன இடத்தில் புல் முளைத்துப் போய் விட்டது என்று ஆரவாரிக்கிறாள்.

"வற்புறுத்திப் பெண்ணைக் கட்டிக் கொடுக்கும்
வழக்கத்தைத் தள்ளி மிதித்திடுவோம்"

எனக் கூறும் புதுமைப்பெண் பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும் பாரினில் பெண்கள் நடந்த வந்து, எட்டுமறிவினில் ஆணுக்கிங்கே பெண் சளைத்தவளல்ல என்பதையும் கூறுகிறாள். அத்தோடு பாரதியின் புதுமைப்பெண் சிறுமை தீர தந்தாய்த்திருநாட்டை திரும்ப வெல்வதில் சேர்த்திங்குழைப்போம் என்று சபதமேற்றுப் போராட முன்வரும் தேசபக்தையாகவும் திகழ்கிறாள்.

மாதர் விடுதலைப்பற்றி இவ்வளவு முழுமையாக எல்லா விடயங்களை எடுத்துக்காட்டி விளக்கம் தந்திருப்பது பாரதியின் தனிச்சிறப்பு. இன்று பெண்களில் சிலர் முன்னேற்றப்பாதையில் பயணித்தாலும் கூட பல பெண்கள் ஆணாதிக்கத்திற்கு ஏற்றவாறு, கட்டமைக்கப்பட்ட நிலையிலிருந்து மாறாதவர்களாகவே இருக்கிறார்கள். இந்நிலை மாறி பாரதி கண்ட புதுமைப்பெண்ணாக மாற வேண்டுமானால் பெண் தைரியமானவளாகவும் மனவுறுதி மிக்கவளாகவும் உருவாக வேண்டும்.

'பெண் உரிமை என்பது மனித உரிமையே' என்பதனை யாவரும் விளங்கிக் கொண்டால், நடைமுறையிலும் அவற்றை கடைப்பிடித்தால் மகாகவி பாரதி கூறியதுப் போல் எல்லோரும் ஓர் குலம், எல்லோரும் ஓரினம், எல்லோரும் இந்நாட்டு மன்னர் என்பதற்கிணங்க அமைதியாகவும் மகிழ்ச்சியாகவும் வாழ்வர்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொலைந்து விட்ட ஜனனம்

மா. சிவபாலன்
விடுகை வருடம், ஆங்கிலப் பிரிவு

மேகங்கள் இருண்டு மழை பெய்வதற்கான அறிகுறியை உணர்த்தும் நேரம் வானம் கருமை கோலம் பூண்டிருந்தது. கருமை வானத்தில் மட்டுமல்ல சீலனின் மனதையும் குடிகொண்டிருந்தது. சூழ்நிலைக்கு ஏற்றாற் போல 'தென்றல்' வானொலியில் "ஆத்துக்குப் பக்கம் ஆத்துக்குப் பக்கம் ஆத்து சொமக்குற ஊத்துக்குப் பக்கம்" என்ற பாடல் ஒலித்துக் கொண்டிருந்தது. அப்பாடல் சீலனின் இதயம் கவர்ந்த பாடல், பாடலை தனக்குள்ளே முணுமுணுத்துக் கொண்டே அட்டலில் உள்ள பழைய பெட்டிகளையும், பைகளையும் ஓரிடத்தில் குவிக்கின்றான்.

பைகள் என்றால் பழைய கடதாசிகளையும், புத்தகங்களையும் என்றாவது ஒருநாள் தேவைப்படுமெனக் கருதி அட்டலில் பொக்கிஷமாக பாதுகாப்பது முன்னோர் வழக்கம். அது சீலனையும் விட்டுவைக்குமா என்ன? அவற்றில் உண்மை இல்லாமல் இல்லை தமக்கு தேவைப்படும் முக்கியமான குறிப்புக்களை பலர் இந்த பைகளில், பெட்டிகளில் இருந்து தான் பெற்றுக் கொள்வர்.

சீலனும் தனக்கு தேவையான முக்கியமான பொக்கிஷத்தை தேடுகிறான். அவனைப் பார்ப்பதற்கு ஒரு புறம் பாவமாகவும், மறுபுறம் நகைப்பாகவும் இருந்தது. அட்டலில் இருந்து பெட்டிகளை எடுக்கும் போது அதனோடு சேர்ந்திருந்து அவற்றை திறமையாக பாதுகாத்தோம் என பெருமைக்கொள்ளும் ஒட்டடைகள் அனைத்தும் அவன் மேலே ஒன்றாக சங்கமமாகி இருந்தது. வேற்று கிரக மனிதனைப் போல நிறமாறி காணப்பட்டான்.

சீலன்! யார் இவன்? இவனைப் பற்றி நாம் தெரிந்து கொள்ள வேண்டாமா? சுமாரான நிறம், நூற்றி அறுபத்தைந்து சென்றிமீற்றர் உயரமும் அகன்ற தோள்களும் உடையவர்கள் தான் ஒரு தூய இந்து மதத்தவன் என்பதை பறைசாற்ற நெற்றியில் பட்டை, அதன் நடுவில் சிறிய அளவிலான குங்குமப் பொட்டு. பார்த்தவுடனே சிரிக்கவைக்கும் தோற்றம். அதனால்தான் என்னவோ எந்நேரமும் கலகலவென சிரித்துக் கொண்டேயிருப்பான். முகத்தில் புன்னகையில்லாமல் சீலனைப் பார்த்த நாட்கள் குறைவு. எந்நேரமும் சிரித்துக் கொண்டிருப்பவரிகளிடத்திலும், மற்றையவர்களை சிரிக்க வைப்பவரிகளிடத்திலும் சொல்லொனா துயர் மறைந்திருக்கும் என்று யாரோ சொல்ல கேட்டு இருக்கிறேன்.

இருபத்தெட்டு வயதை அடைந்துவிட்ட சீலனை முழுமையாக அறியும் முன்னர் அவனது தாய் பார்வதியைப் பற்றியும் தெரிந்திருப்பது அவசியம். பார்வதி இதே ஊரைச் சேர்ந்தவள், 77களில் என நினைக்கின்றேன். அந்த பருவகாலத்திற்கு ஏற்றாற்போல மிகவும் அழகானவளாக காணப்பட்டாள். குடும்பத்தின் மூத்தப் பெண் என்பதனால் அனைவரினதும் பாசத்தினையும், அன்பினையும் தன்பால் ஈர்த்துக் கொண்டாள். அனைவரையும் கவர்ந்திழுக்கும் தோற்றம், தரையை தொடுமளவுக்கு நீண்ட கூந்தல், சிரிக்கும் போது விழும் கன்னக்குழி, கூர்மையான அழகிய விழிகள் மொத்தத்தில் தென்னிந்திய நடிகையைப் போல் இருந்தாள். பொதுவாக தோட்டத்தில் பிறந்து வளர்ந்தவர்கள் நகரங்களில் வசிப்பவர்களை விட அழகில் குறைந்தவர்களாக இருப்பார்கள் என்பது அனைவரினதும் எண்ணம். அதற்கு விதிவிலக்காய் இருந்தாள் சீலனின் தாய் பார்வதி.

பார்வதியின் குடும்பத்தினருக்கு ஊரில் நல்ல மரியாதை இருந்தது. இவளது அப்பா தோட்டக் கங்காணியாக இருந்தார். கங்காணி வீடு என்றால் தோட்டத்தில், அக்காலத்தில்







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்ல மரியாதை இருக்கும். இவ்வாறான நற்குடியில் பிறந்த பார்வதி திருமணம் முடித்து சொந்த ஊரிலேயே மகிழ்ச்சியாக வாழ்ந்து வந்தாள்.

அவள் ஈன்றெடுத்த முதல் பிள்ளை ஆண்பிள்ளை, குடும்பத்தில் மகிழ்ச்சி மேலோங்கிட, பார்வதி வழமையை விட செழிப்பாக காணப்பட்டாள். பார்ப்பவர்கள் பொறாமை கொள்ளும் அளவுக்கு அவளது இல்லற வாழ்க்கை குதுகலமாக இருந்தது. பிறர் சந்தோஷமாக வாழ்வதை சகித்துக் கொள்ளாதவர்கள் பலர் இன்றும் உள்ளனர். சீலனுக்கு இரண்டு வயது இருக்கும் போது உறவினர்களின் சதிப்பின்னலினால் பார்வதி தனது பிறந்த வீட்டை விட்டு வெளியேறி, தன் கணவனுடைய ஊரில் வசிப்பதற்கு சம்மதித்தாள். நல்ல மரத்தில் ஒரு புல்லுருவி என்பார்களே இதனைத்தான் போலும்.

கணவனுடன் ஊருக்கு செல்லும் போது, சீலனைக் கூட்டிச் செல்ல மறந்து விட்டாளா? அல்லது மறுத்து விட்டார்களா என நானறியேன். சீலன் தன் தாயின் பிறந்த வீட்டிலே பச்சிளம் பாலகனாய் தனித்து விடப்பட்டான். அவனுக்கு பிறகு அவளுக்கு இன்னும் இரண்டு குழந்தைகள் இருப்பதாக ஊரார் கூறக் கேட்டு அறிந்து கொண்டேன்.

சீலன் அன்றிலிருந்து தாயின் அரவணைப்பின்றி வளர்ந்தவன் என்பதை விட, தாயின் பெற்றோர்களால் வளர்த்து விடப்பட்டான் என்பதே உண்மை. பள்ளிப் பருவத்தில் தனது முழுக்வனத்தையும் படிப்பிலே செலுத்தினான், வகுப்பில் என்றும் முதல் மாணவனாகவே நிகழ்ந்தான். முதல் மாணவனாக வருவதில் கொள்ளைப் பிரியம் கொண்ட சீலனின் திறமையைக் கண்ட ஆசிரியர்கள், வீடு தேடி வந்தே இவனை பாராட்டிச் செல்வர். கல்வி தந்த வெற்றிகள், பாராட்டுக்கள் அந்த பிஞ்சு மனதில் பெற்றோரின் அரவணைப்பில்லாக் குறையை பெரிதாக வெளிக்காட்டவில்லை. கால ஓட்டத்தில் சீலன் வளர்ந்து ஒரு அரசாங்கத் தொழிலில் இருப்பதை எண்ணி என் மனம் அவனை காணும் நேரங்களில் எல்லாம் பூரிப்படையும்.

சிறிய வயது முதலே தாய், தந்தையரை பிரிந்திருந்ததனால் தாய் பாசத்தினை அறிந்திராதவன். அது அவனுக்கு தேவைப் பட்டிருக்கவும் இல்லை. "உனக்கு பிடிக்காதவர் யார்?" என்று கேட்டால் அவனிடமிருந்து வரும் பதில் "அம்மா'' என்பது தான், இது ஏற்றுக்கொள்ளக்கூடியது தானே!

சிறுவயதில் ஒரு நாள் சீலன் என்னிடம் வந்து எனது அப்பாவின் பெயர் என்ன என்று கேட்டான். நானும் பெயரைச் சொன்னேன். அவன் அந்தப் பெயரைக் கொண்டுதான் சகல பரீட்சைகளையும் எழுதினான். பின்னர் தான் தெரியவந்தது நான் சொன்னது அவனது அப்பாவின் நாமத்தின் ஒரு பகுதி தான் என்று. அவன் தனது பிறப்புச் சான்றிதழ் மூலம் தெரிந்து கொண்டான் உண்மையில் அவன் கூறும் மட்டும் எனக்கும் அது தெரிந்திருக்கவில்லை. அவன் கஷ்டப்பட்டு பெற்றச் சான்றிதழ்கள் இன்று அவனுக்கு உரிமையற்றனவாகி விட்டன.

இவை போன்ற பல சம்பவங்கள் அவனுக்கு தாயை வெறுக்கும் அளவுக்கு உள்ளத்தை மாற்றிவிட்டது. குரங்கினை மனிதனின் மனத்திற்கு ஒப்பிடுவார்கள். சீலனை பார்ப்பவர்களும் அவனது முகத்தினை குரங்கின் முகத்திற்குத் தான் ஒப்பிடுகின்றார்கள் என உள்ளத்தே வருந்துவதுண்டு.

இறைவனின் படைப்பில் வினோதமானவர்களும், வித்தியாசமான வர்களும் இருக்கத்தான் செய்கின்றார்கள். சீலனின் வாழ்வில் தாயை நினைப்பதற்கு ஒரு தடயத்தினையேனும் அவன் அறிந்திருக்க வில்லை, அறிய முற்பட்டதுமில்லை. தனது தாய் தந்தையை முதலில் போட்டோ பிரதியில் தான் கண்டிருக்கிறான்.

மனித எண்ணங்களோடு இணைந்து காலம் உருளுவதில்லை. அது தனது கடமையை வெகு சுலபமாக செய்து கொண்டு போகும். சில வருடங்களுக்குப் பின் அவனது தாய் நோய்வாய்ப்பட்டு இறந்து விட்டாள் என்ற செய்தி கேட்டு துடிதுடித்துப் போனேன் சீலனோ அச் செய்தி கேட்டு கலங்கவில்லை. அவளுக்காக ஒரு சொட்டுக் கண்ணீரைக் கூட விடவும் இல்லை. பெற்ற கடமைக்காக மூத்தவன் என்பதால் இறுதிச் சடங்கிலே தனது சம்பிரதாய சடங்கினை மட்டும் செய்து விட்டு திரும்பி விட்டான். " பெற்ற மனம் பித்து பிள்ளை





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனம் கல்லு " என்று இதற்காகத்தான் சொல்லியிருக்க வேண்டும். பார்வதி இறக்கும் போது சீலனுக்கு சரியாக இருபத்து மூன்று வயது!

சாகும் வயதிலும் தன் தாயின் மடியில் தலை வைத்து சாய்ந்து உறங்கத் தோன்றும் என் நிலை எங்கே? தாயை இன்னும் காணவில்லையே? என சாப்பிட மறுக்கும் பிள்ளை எங்கே? தாயிற்காக கோயில்கள் அமைத்துக் கொண்டு, அவளைப் பற்றி தோத்திரப்பாடல்கள் பாடிக் கொண்டிருக்கும் கூட்டங்கள் எங்கே?.........! அன்னையர் தினம் என ஒன்றை ஏற்படுத்தி அதனை கோலாகலமாக கொண்டாடி மகிழும் நம்மவர்கள் எங்கே? இவற்றுக்கெல்லாம் நடுவில் இந்த சீலன் எங்கே இருக்கிறான்? அதற்காக அவன் கூறுகின்ற காரணங்கள் தான் எத்தனை! இறைவா இதுவும் உன் படைப்பின் இரகசியமே!

ஒரு நபரோ, பொருளோ இல்லாத போதுதான் அதனது அருமை தெரியும் என்பார்கள். அதைப்போலவே சீலனின் தாயின் மரணமும் அவனை ஏதோ செய்து விட்டது. தற்போது இழந்து விட்ட தாயன்பினை தேட முனைகின்றான். தாய்மையின் வலியினை உணருகின்றான். தனது நண்பர்களின் தாய்மாரை தனது தாயாகவே உணருகிறான், அவர்கள் மீது இயல்பாகவே மதிப்புடன் நடந்து கொள்கிறான். தான் இதுவரை பெற்ற செல்வங்கள் அனைத்தும் அவனது தாய் அவனுக்காக விட்டுச் சென்ற ஆசிர்வாத எச்சங்கள் என புரிகிறது சீலனுக்கு. தான் செய்கின்ற தவறுகளுக்கான தண்டனைகளை தன் தாயிற்காக செய்யத்தவறிய கடமைகளுக்கான விளைவுகள் என விழிக்கிறான். தாயின் புகைப்படத்தினை புதிய வடிவில் உருவாக்கி, அதற்கு மலர் மாலை இட்டு பூஜிப்பதோடு, பார்க்கும் போதெல்லாம் ஒரு சொட்டு கண்ணீர் விடுகின்றான். தனது சகோதரர்கள் படிக்க வாய்ப்பில்லாமல் போயிருக்க, தான் ஓரளவுக்காவது படித்து நல்ல தொழிலில் இருப்பது தனது தாயின் கருணையே என தெளிவடைகின்றான். தாய் உயிரோடு இருந்த நாட்களை விட அவள் இறந்து இன்றோடு 2313 நாட்களாகி விட்டதெனவும் இது ஒரு பெரிய இடைவெளியெனவும் கூறிக்கொள்கிறான்.

உண்மை தான், நம்மவர்கள் விதி என்று சொல்கிறார்களே அதன் பொருள் என்ன? தீயவைகளை செய்வது மட்டுந்தான் விதியா? அவ்வாறாயின் இவ் நல்ல மாற்றத்திற்கு காரணம் தான் என்ன? என்னைப் பொறுத்தவரை இதுவும் விதிதான்.

சீலன் யாரையோ பேசிக் கொண்டிருக்கிறான். வீட்டில் அவன் மட்டும் தானே இருந்தான்! எவ்வாறு பேசாமல் இருப்பான் இரண்டரை மணித்தியாலயம் ஆகியும் அவன் தேடியது இன்னும் கிடைக்கவில்லை. தாயின் மரண தினத்தினை தேடிக் கொண்டிருக்கிறானா....? அல்லது.......?

# Oh! How many Differences

S. Subashini
2nd Year, English

North people, South people,
East people west people,
Hill country people,
Costal area people
Patharafa people
Town people
Rural area people
Oh! How many differences
How! we all are people
Specially, one country people

Labourer, Staff
Government servant
and others
But every person's services
are must for all people
If one service fails
all will be affected
When they are needed
then those are wanted
but after the need
they are neglected people
Oh! How is it possible?
But we all are in one nation





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நதி

க. ரமேஷ்
விடுகை வருடம், கணிதப் பிரிவு

மலையின் மகுடத்தில் மங்கலமாய் மலர்ந்து
அழகிய அன்னமாய் அழகு நடை அமைத்து
கரங்கள் கைக்கொட்ட கால்கள் வீறுநடை போட
காடு பள்ளம் தாண்டி கவலை மறந்து ஓடுவதே நதி

தாண்டி வரும்வேளை நண்பர்கள் பலர் சேர
அவர்களின் மகிழ்ச்சிக்கு எல்லை இல்லை
அவைகள் தான் தாண்டி வந்த கதைகூற களிப்புடன்
கைத்தட்டி மிக வேகமாய் பாய்வதே நதி

வாடிய பயிருக்கும் தன்னை நாடிய விலங்கிற்கும்
தாகம் தீர்த்து உலகம் போற்றும் உழவிற்கு
தன் முழுமூச்சையும் கொடுத்து
இந்த பார் சிரிக்க பார்த்து ரசிப்பதே நதி

மலர்கின்ற மனிதனுக்கு மனம் சோராது தன்னை அர்ப்பணித்து
அடி எடுக்கும் விஞ்ஞானத்திற்கும் அருமையாய் சேவை செய்து
செலாவணி தருகின்ற உல்லாச பயணிகளுக்கும்
தன்னை அழகிய ஓவியமாக்குவதே நதி

இவையனைத்தால் தன் உள்ளம் இன்புற
இவ்வையகம் என்றும் செழிப்புற இனிய பல
சேவைகளை ஊதியம் பார்க்காது செய்து - இறுதியில்
கடலுடன் தன் உடலை சங்கமிப்பதே - நதி

தான் கண்ட இன்பத்தின் கதை கூற - அதை
கேட்டு கடல் மீன்கள் கைகொட்டி நகைக்க
கரையை நாடி வரும் அலைகளுடன் கலந்து
தான் கண்ட இன்பத்தை அலைகளுக்கு தெரிவிப்பதே நதி

இன்பத்தின் களிப்பில் தனைமறந்து
அலையுடன் ஆழ்கடல் வரை சென்றதும்
அங்கு எங்குமே இல்லாத ஓர் அமைதி
அப்போது ஆழ்கடலில் சோகம் என்னவென்று அறிவதே நதி



ஆழ்கடலுக்கு தான் கண்ட இன்பம் சொல்லாது
ஆழ்கடலின் துயர் தீர்க்க எண்ணி
அலையின் சத்தத்துடன் இணைந்து
பேரிரைச்சலுடன் கரையை நாடுவதே நதி

கரையில் உதவ யாரும் இல்லை என்றதும்
ஆழ்கடலுக்கு ஆறுதல் சொல்ல மீண்டும்
ஆழ்கடல் வரை பயணித்து - அதன்
சோகம் தீர்க்க முடியாது கண்ணீருடன் கரைவதே நதி
இப்படி நாள்தோறும் ஆழ்கடலுக்கு
உதவப் போன பல நதிகளின்
கூட்டிணைப்பே இந்த அலையின் புலம்பல்
என்று மனமுருகுவதே நதி

**இதை என்றும் மாற்ற முடியாது என்பதே இயற்கையின் விதி!**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தனித்தன்மையும், தன்னம்பிக்கையும்

N.M. பாஸில்
விடுகை வருடம், இரண்டாம் மொழி சிங்களம்.

அண்ட சராசரங்களைப் படைத்து அதிலே பல நுட்பங்களையும், சிறப்புக்களையும் இறைவன் தோற்றுவித்துள்ளான். உலகில் காணக்கூடிய ஒவ்வொன்றிற்கும் ஒவ்வோர் சிறப்பும் இயல்பும் தனித்தன்மையும் காணப்படும். அவை அவற்றின் தனித்தன்மைகளுக்கேற்ப மாறுபட்ட செயற்பாடுகளைக் கொண்டுள்ளது. இவ்வாறு வேறுபட்ட தனித்தன்மை காணப்படாவிடின் உலகின் இயக்கம் சீரானதாக காணப்படுவது எவ்வகையிலும் சாத்தியமாகாது என்பது மாபெரும் உண்மையாகும்.

இந்த வகையிலே தனித்தன்மை உலகில் உள்ள ஒவ்வொரு பொருளிலும் இருப்பது போல, ஒவ்வொரு தனிமனிதனிடமும் காணப்படுகின்ற ஒரு விடயமாகும். தனித்தன்மையானது சிந்தனைகள், உணர்வுகள், செயல்கள் என்பன ஒவ்வொரு மனிதனிடமும் வித்தியாசமான கோணத்தில் காணப்படுவதாகும். இத்தகைய உணர்வுகளும், சிந்தனைகளும் வேறுபடுகின்றபோது தான் பல சிந்தனா ரீதியான போராட்டங்களும், கருத்துக்களும், உருவாகின்றது எல்லோரிடமும் ஒரே வகையான சிந்தனைகள், செயற்பாடுகள் காணப்படுமாயின் உலகின் இயக்கம் ஸ்தம்பித நிலையிலே காணப்படும்.

இவ்வாறான தனித்தன்மை வளர்ச்சியின் விளைவே இன்று காணக்கூடிய பலவேறு விதமான இயக்கங்களும், பிரிவுகளும் ஆகும். காந்தியின் அஹிம்சை போராட்டம், கார்ல் மாக்ஸின் பொருளாதார தத்துவம் என்பன தனித்தன்மையின் பிரதிபலிப்பேயாகும். இத்தகைய தனித்தன்மை வளர்க்கப்பட வேண்டிய ஒன்றாகும். ஏனெனில் பத்து பேர் ஒரு செயலைச் செய்யும் போது, எல்லாம் ஒரே மாதிரியான சிந்தனையில் உருவாவது அசாத்தியமான ஒன்றாகும். பல்வேறுபட்ட சிந்தனை கலந்த உணர்வுகளால் பல நிகழ்வுகள் உருவாகும் போதுதான் உலகின் நிலையும் சீராகும், உலகம் புதுப் பொழிவு பெறும். உலகிலே எல்லாவகையான மனிதர்களும் காணப்பட வேண்டும். எல்லோரும் ஒரே வகையாக மட்டும் இருந்தால் உலக இயக்கம் குன்றும், உலகின் இயக்கத்திற்கும் கால ஓட்டத்திற்கும் பல்வேறுபட்ட தனித்தன்மையின் சேர்க்கை அவசியமான ஒன்றாகும்.

தனித்தன்மையை வளர்ப்பது முக்கியமான ஒரு விடயமாகும். பெற்றோர், ஆசிரியருமே இதில் முக்கிய பங்குதாரர்கள் ஆவார்கள். ஒவ்வொரு பெற்றோரும், ஆசிரியரும் தம் பிள்ளைகளிடம் காணக்கூடிய தனித்தன்மையான விடயங்களை வெளிக்கொணர முயல்வதுடன் அதற்கு பல உந்து சக்தியையும் வழங்குவது அவசியமாகும். அவர்களிடம் காணக்கூடிய நற்பண்புகளை எடுத்துக் காட்டி தீயவற்றை விளக்கி சமூகத்துக்கு மதிப்பளிக்கக் கூடியவர்களாக மிளிர வைத்திட முயல வேண்டும்.

தனித்தன்மையின் வளர்ச்சிக்கு இன்றியமையாத ஒன்றே தன்னம்பிக்கையாகும். ஏனெனில் தன்னம்பிக்கையும், ஊக்கமும், முயற்சியும் இல்லாத ஒருவனிடம் எவ்வளவு தனித்தன்மை இருந்தாலும் அதிலே எந்த பிரயோசனமும் கிடைப்பதில்லை. தன்னிடம் உள்ள தனித்தன்மையான செயற்பாட்டை தன்னம்பிக்கையுடன் முன்னெடுக்க வேண்டும். அரசன் ஒருவன் போரிலே தப்பிச் சென்று குகையிலே ஒழிந்திருந்த சமயம் ஒரு சிலந்தியின் அயராத முயற்சியைக் கண்டு தானும் அதேபோல் முயற்சியுடன் போராடி வெற்றிபெற்றான் என்ற கதை யாவரும் அறிந்த விடயம். ஆயினும் அரசனிடம் போராடும்







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனித்தன்மை உள்ளது. அவன் அதனை தன்னம்பிக்கையுடன் முயற்சி செய்ததாலே தோற்றுப்போன நாட்டைப் பெற்றான். சிலந்தியின் முன்மாதிரியால் தனது தனித்தன்மைக்கு தன்னம்பிக்கை மூலம் கைகொடுத்து உலகப் புகழ் பெற்றான். ஆகவே ஒவ்வொருவரின் தனித்தன்மைக்கும் தன்னம்பிக்கை இன்றியமையாத ஒன்றாகும்.

உலகப் புகழ்பெற்ற தோமஸ் அல்வா எடிசனின் ஆய்வுகூடம் பற்றி எரிகிறது. இதனால் அவர் மனம் தளரவில்லை. மீண்டும் தனது ஆய்வுகளை மேற்கொண்டு உலகம் போற்றும் விஞ்ஞானியாகிறார். இது அவருடைய தன்னம்பிக்கைக்கு எடுத்துக்காட்டாகும். அன்று அவர் தன்னம்பிக்கையுடன் செயற்படாதிருந்தால் இன்று ஒரு மாபெரும் விஞ்ஞானியை உலகம் இழந்திருக்கும். அவருடைய தனித்தன்மையான சிந்தனையை தன்னம்பிக்கையுடன் செயற்பட்டதனாலே அவரால் இன்று உயர் விஞ்ஞானியாக திகழ முடிகிறது. ஆகவே, ஒவ்வொரு தனித்தன்மையான முயற்சிக்கும் தன்னம்பிக்கை அத்தியாவசியமான ஒன்றாகும்.

ஆகவே, ஒருவனிடம் காணக்கூடிய தனித்தன்மையை விளங்கி உன்னால் ஒன்றும் முடியாது என்ற கொள்கையை உருவாக்கு வோமாயின், அவனுடைய தனித்தன்மையால் எவ்வித பலனும் கிடைக்கப்போவதில்லை. அதனையே உன்னால் முடியும், நீ வெற்றி பெறுவாய் என்று அவனுள்ளே தன்னம்பிக் கையை மிளிரச் செய்வோமாயின் அவனுடைய ஆற்றலும் விவேகமும் எண்ணிலடங்கா பயனை கொண்டு வரக்கூடியதாக மாறிவிடும்.

ஆகவே, ஒவ்வொரு மனிதனும் வித்தியாசமான வகையில் உலகத்தின் இயக்கத்திற்கு படைக்கப்பட்டிருப்பதால் அவனிடம் காணக்கூடிய தனித்தன்மையான சிந்தனைகளையும், உயர்வு களையும், செயற்பாடு களையும் தன்ன ம்பிக்கையுடன் செயல்படுத்தி முன்னேற முயலும் இடத்தில் புதியதோர் உலகம் படைக்கலாம் புதியதோர் சமூகம் உருவாகும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.

# மகனின் பிரார்த்தனை

எஸ். ஏ. எம். நளீம்
விடுகை வருடம், இரண்டாம் மொழி தமிழ்

இந்தப் புனித உலகத்தை பார்ப்பதற்கு
அத்திவாரம் இட்டவனே
உன் அன்பான வியர்வையிலே
எனக்கு வந்த விக்கினங்களை தீர்த்தவனே

இறைவன் எனக்களித்த பொக்கிஷமே
பாசத்தின் ஒளி விளக்கே!
என் வாழ்க்கையின் கோபுரத்தில்
தூண்களாய் நின்றவனே!

என் வாழ்வில் இன்பத்திலும் துன்பத்திலும்
என் நிழலாய் வந்தவனே!
உன் உயிர் போல் என் உயிரை
காத்தவனே!

இவ்வளவும் செய்த என் அன்புத் தந்தையே!
இன்று உன்னை இழந்துவிட்டேன்
உன் பிரிவுத்துயர் என்னை
என்றும் வாட்டுதே

நானும் ஒரு நாள் மரிப்பேன்
இறப்பு பிறப்பு இறைவன் நியதியே
தந்தையே உனக்காக பிராத்திக்கின்றேன்
கண்ணீர் வடிக்கின்றேன்

சிறுவயதில் என்னை பரிவோடு
வளர்த்துக் காத்தாய்
பாவங்கள் மன்னிக்கப்பட்டு சுவர்க்கத்தில்
பிரவேசிக்க இறைவனை துதிக்கிறேன்

இறைவா! என் தந்தையின் பாவங்களை
மன்னித்து விடு
மண்ணறையை விசாலமாக்கி அதில்
ஒளியை ஏற்படுத்து !





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெற்றோரைப் பேணுவோம்



எஸ். ஏ. துல்பி
விடுகை வருடம், இஸ்லாம் நெறி

ஒரு வீடு என்பது மண்ணாலும் கற்களாலும் ஆனது. அது போல் ஒரு குடும்பம் என்பது அன்பாலும் பாசத்தாலும் ஆனது. அந்தப் பாசப்பிணைப்பு இன்று கொஞ்சங் கொஞ்சமாக மனித மனங்களிலிருந்து கழன்று கொண்டிருக்கிறதோ என்கின்ற ஐயப்பாடு தோன்றுகிறது.

பெற்றோர் அன்பு, சகோதர பாசம், உறவுத் தொடர்புகள் எல்லாம் குறைந்து வருகின்றது. வீட்டின் பெயரோ அன்னை இல்லம் அன்னை இருப்பதோ முதியோர் இல்லம். சில இடங்களில் இன்று இந்த நிலைதான். இந்த நிலையில் தாய் - தந்தை உறவு பற்றி இஸ்லாம் என்ன கூறுகின்றது என்பதைப் பார்ப்போம்.

தாய்க்கு முதலிடம் :- "மனிதர்களுள் யாருக்கு நான் அதிகம் கடன்பட்டுள்ளேன்? இது நபித்தோழர் ஒருவரின் வினா? தாய் என்று பதிலளித்தார்கள் நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள். அடுத்து யார்? என மீண்டும் அவர் கேட்க, தாய் என்றே கூறினார்கள். மூன்றாவது முறையாக அடுத்தது யார்? என்று கேட்ட போது தாய் என்றே பதில் வந்தது. அடுத்தது யார்? என நான்காம் முறையாக அவர் கேட்க, தந்தை என்று பதிலளித்தார்கள்'' நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள்.

*(அபூ ஹுரைரா ரழியல்லாஹு அன்ஹு - புகாரி ஷரீ.்ப்)*

ஒரு குழந்தையின் வளர்ச்சிக்கு தாய் - தந்தை இருவருமே காரணம் என்பது உண்மையானாலும் தந்தையை விட தாய்க்கே முதலிடம் வழங்குகிறது இஸ்லாம். காரணம் என்ன? குர்ஆன் கூறுகிறது ''சிரமப்பட்டுத்தான் அவனைப் பெற்றெடுத்தாள். மேலும், அவனைச் சுமந்திருப்பதற்கும் பால்குடிப்பை மறக்கடிப்பதற்கும் முப்பது மாதங்கள் ஆகின்றன" (46:15)

தியாகத்திற்கு தாயை விட வேறு சிறந்த உதாரணம் சொல்வது சிரமம் அவள் ஒரு குழந்தையின் பிறப்புக்காக இறப்பின் வாசல்வரை சென்று வருகிறாள். தன் உயிரைப் பணயம் வைத்துக் குழந்தையைப் பெறுகிறாள். குழந்தைக்காக தாய் செய்யும் தியாகம் மகத்தானது. பொதுவாக குழந்தை பெற்ற பின் தாய்மார்களில் 25 முதல் 50 சதவிகித தாய்மார்கள் மனநலக்குறைவு அடைகிறார்கள் என்கின்றனர் மருத்துவ மேதைகள். மெய் சிலிர்க்க வைக்கும் தாயின் தியாகத்தை மறக்கலாமா?

முக்கியத்துவம் யாருக்கு (தாய் / மனைவி / பிள்ளைகள்) :- நம் எல்லோருக்கும் தெரிந்த ஒரு சம்பவம், 03 பேர்கள் குகையில் பாரங்கல் மூடிய போது, அதில் ஒருவர் தன்னிடம் இருந்த பாலை தன் மனைவி, குழந்தைக்கு கொடுக்காமல் இரவெல்லாம் விழித்து தன் பெற்றோருக்கு கொடுத்த பிறகு தான், தன் மனைவி, குழந்தைக்கு கொடுத்தார்.

**சிந்தனைக்கு சில அறிவுரைகள் :-**

குழந்தைப் பருவத்தில் உங்கள் பெற்றோருக்கு நீங்கள் உபகாரம் புரிந்தால் முதுமைப்பருவத்தில் உங்களுடைய குழந்தைகள் உங்களுக்கு உபகாரம் புரிவார்கள்.(அபூஹுரைரா ரழியல்லாஹு அன்ஹு) (ஹாகிம்). இதை இப்படியும் புரட்டிப்போட்டுச் சொல்லலாம். தம்முடைய பெற்றோரை அவமதிக்கும் ஒவ்வொருவரும் அவர்தம் பிள்ளைகளால் பிற்காலத்தில் அவமதிக்கப்படுவது நிச்சயம்.



ஒரு நூல் நிலையக் கதவு திறக்கப்படும் பொழுதே ஒரு சிறைச்சாலையின் கதவு தாழிடப்படுகிறது. GTC

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அபூபக்கர் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் அறிவிக்க, பைஹகியில் பதிவாகியுள்ள ஆதாரப்பூர்வமான நபி வழிச் செய்தி "ஒவ்வொரு குற்றத்திற்கான தண்டனையும் மறுமையில் வழங்கப்படுவது தான் இறைவிதி, ஆனால் பெற்றோருக்கு நோவினை செய்தவன் அதற்கான பிரதிபலனை இவ்வுலகிலேயே கண்கூடாகக் கண்டபின்பே இறப்பான்." (நஆதுபில்லாஹ்) அல்லாஹ்வின் அருள் மறை தெரிவிக்கின்றது.

"அந்த இறைவனைத் தவிர வேறு எவரையும் நீங்கள் வணங்காதீர்கள். தாய், தந்தையாரிடம் மிக கண்ணியமான முறையில் நடந்து கொள்ளுங்கள். பெற்றோரில் ஒருவரோ இருவரோ முதுமையை அடைந்து விட்ட நிலையில் உம்மிடம் இருந்தால், அவர்களை 'சீ' என்று கூட கூறவேண்டாம். மேலும் அவர்களைக் கடிந்து பேசி விரட்டவும் வேண்டாம்" (17:23)

**இராட்சசியாக இருக்கும் தாய்க்குமா மரியாதை!**

சிலருக்கு ஒரு சந்தேகம் ஏற்படுவதுண்டு. ஒரு இராட்சசியாக இருக்கும் தாய்க்குமா மரியாதை செய்ய வேண்டும்? ஆம், மரியாதையும் பணிவிடையும் செய்தே ஆக வேண்டும். இஸ்லாத்தின் பார்வையில் அல்லாஹ்வுக்கு இணை வைக்கிற பாவத்தை விட பெரும்பாவம் எதுவும் இந்த உலகில் இல்லை. அப்பேர்ப்பட்ட பாவம் புரிபவர்களாக ஒரு தாய் இருப்பினும் அவருக்குச் செய்ய வேண்டிய பணிவிடைக ளைச் செய்தே ஆக வேண்டும்.

ஹஸ்ரத் அஸ்மா பின்த் அபூபக்கர் ரழியல்லாஹு அன்ஹா என்கின்ற பெண்மணியின் தாயார் முஸ்லிமாகாத நிலையில் அல்லாஹுவுக்கு இணைவைப்பவராக இருந்து கொண்டு தம் மகளை தேடி வந்த போது யா ரசூலுல்லாஹ் என் தாயார் என்னிடம் ஆசையுடன் வந்துள்ளார், நான் அவருடன் உறவாடலாமா? என்று கேட்டார். அதற்கு நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், 'ஆம்' நீ உன் தாயை பேணி இரக்கத்தோடு நடந்து கொள், என்றார்கள். (புஹாரி)

"தாயின் காலடியில் சொர்க்கம் இருக்கிறது" என்று சொன்ன மார்க்கம் இஸ்லாம் மட்டுமே என்பதை மறந்து விட வேண்டாம். நாம் அனைவரும் பெற்றோரைப் பேணக்கூடியவர்களாகத் திகழ எல்லாம் வல்ல அல்லாஹு நல்லருள் புரிவானாக, ஆமீன்!

## மலைகளின் மலையகம்

ஆ. எட்வேட்
விடுகை வருடம், கணித நெறி

தேங்காயும் மாசியும்
தேடித் தேடியே
தேயிலைச் செடிகளுக்குள்
தொலைந்து போன - தம் மக்கள்
வாழ்வை விழிப்படுத்த எண்ணுகிறாள்
அவள் எண்ணத்தின் வண்ணத்தில்

கசடுகளைச் சாம்பலாக்க
கல்வித்தீயை காட்டுத் தீயாய்
பற்ற வைத்தால் மட்டுமே
பழுதுகள் மாறி புது
விழுதுகள் தோன்றும் எனும்

விடியலுக்கான இவரது பூபாளம்
மலைகள் முழுவதும் எதிரொலிக்கட்டும்
அந்த ஒலியின் நாதத்தில்
புதிய கீதங்கள் பிறக்கட்டும்

அறிவென்னும் வேள்வித் தீ எறியட்டும்
அதில் அஞ்ஞானபேய் அழிந்து
போகட்டும்
சாத்தான்கள் ஓதிய வேதங்கள் சாகட்டும்
சரித்திர வீரர் சாதனை படைக்கட்டும்.

வெள்ளிகள் மட்டுமா
விடியலைக் கட்டும்? இந்த
மலையகத்தில் ஒரு நாள்
சுள்ளிகள் கூட - கல்விச்
சுரங்களை மீட்டும்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாய்

ஏ. ஆர். சில்மியா பேகம்
விடுகை வருடம், இஸ்லாம் பாடநெறி

நான்..........
உலகில் தரிக்க
உயிரை வைத்து
உதிக்கச் செய்து
உதிரம் சிந்தி
உரிமைப் பால் கொடுத்தவளே !

என்
உதயம் கண்டு
உடல் வலி மறந்து - புது
உலகம் பெற்றவளே

கண்ணிமையாமல்
கண்ணயராது
கண்மணி போலே
காத்து வளர்த்தவளே



சிறு நோயென்றாலும்
உயிர் துடிதுடிக்க
உள்ளம் நொந்து
உடைந்து போனவளே

என்
அழுகுரல் கேட்டு
பதறித் துடித்து
அள்ளி அணைத்து
அன்பு முத்தம் பொழிந்தவளே

உன் நெஞ்சம் மீது
எட்டி உதைத்திட
உளப் பூரிப்பால்
உவகை அடைந்தவளே

என்
மழலை மொழியில்
மயங்கி நின்று
மீண்டும் கேட்க
மீட்டல் செய்தவளே

பற்கள் முளைக்க
பரவசத்தாலே
சிரிப்பொலி கேட்க
மகிழ்வினையூட்டி
இன்பம் கொண்டவளே

அன்னம் தனை
அள்ளித்தந்து
நிலவைக் காட்டி
ஒரு பிடி ஊட்டி
நிம்மதி கண்டவளே

தத்தித் தத்தி
நடைகள் பயில
நாட்கள் தோறும் - அதைக்
கண்டு ரசித்தவளே

கேட்கும் பொருட்கள்
வாங்கித் தந்து
ஆவல் தீர்த்து
ஏக்கம் தனித்தவளே

அறிவுக் கண்ணை
திறந்து வைத்து - என்
பிறப்புக்கு அர்த்தம்
சேர்த்தவளே

ஒழுக்கந்தனில்
நுழையச் செய்து
உலக மாந்தர்
மதிப்பைப் பெற்றுத் தந்தவளே

அன்னை நீயே
அன்புக் கடலே
அகில தெய்வம்
அனைத்தும் நீயே

கருணைக் கடலே
கற்பின் சிகரமே
உந்தன் மடியில்
மீண்டும் தவழ

ஓர் வரம் தாராயோ...?
தாயே
எனையீன்ற பயனை
நானும் - தீர்க்க
ஓர் வழி சொல்வாயோ ?

கண்ணீர் சிந்தி
கதறி அழுகிறேன்
கல்வியின் பயனால்
உன் நிகர் காண்பேனே

உன் ஆழம் கண்டேன்
ஆளுமை பெற்றேன்
ஓர் சேவகி போலே
நீ.....இருந்தது போதும்
செய்ததும் போதும்
ஓய்வெடு தாயே......
நீ.......ஓய்வெடு தாயே !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மானிட வாழ்வில் தாய்மைக்கே முதலிடம்

கா. தனலெட்சுமி
இரண்டாம் வருடம், ஆங்கிலப் பாடநெறி

"அரிது, அரிது மானிடராய் பிறத்தல் அரிது, அதனிலும் அரிது ஊனமின்றி பிறத்தல்" இவை அனைத்திற்கும் முன் நிற்பவள் தாயாவாள். தாய்மை என்ற ஒன்றில்லையேல் இவ்வுலகம் சுற்றுவது எவ்வாறு? ஆதி முதல் அந்தம் வரை அனைத்திற்கும் தாய் என்ற புனித பதம் ஒன்று உயர்ந்து நிற்கின்றது.

இயற்கையே தாய்க்குலத்திற்கு ஒரு தனித்துவமானதும் மகத்தானதும் ஆகும். கடவுளின் கொடையான இப் பெண்ணினத்தை வள்ளுவப் பெருந்தகையும் " பெண்ணிற் பெருந்தக்கது வேறொன்றில்லை " எனும் விடையையும் அதனுள் பொதித்து வைத்துப் பெண்ணின் பெருமையை மிக அழகாக பேசுகிறார்.

நாளைய உலக வாழ்க்கையில் நல்லொழுக்கம் கட்டுப்பாடு, பணிவு, கீழ்ப்படிவு என்பன இருக்க வேண்டியது மிக அவசியம். அவையே மானிட வாழ்க்கைக்கு மெருகூட்டும் பொக்கிஷங்களாகும். இவற்றோடு நாளைய சமுகம் நல்ல ஒழுக்கமுள்ள சமுதாயமாக மலர்ச்சி பெறுவதற்கு தாய்க்குலத்தின் பங்களிப்பு இன்றியமையாதாகும். "ஈன்ற பொழுதில் பெரிதுவக்கும் தன் மகனைச் சான்றோன் எனக் கேட்ட தாய்" என்பது பொய்யாமொழி. தாய் என்பவள் மதிப்பிற்கும் மகத்துவத்திற்கும் உடையவளாகின்றாள்.

இவ்வுலகில் எத்தனையோ கோடிக்கணக்கான படைப்புக்களை கடவுள் படைத்திருக்கின்றான் இவற்றில் தாய்மை என்ற ஒன்றை உருவாக்கி புகழின் உச்சத்திற்கே செல்லக் கூடிய மனிதனின் வாழ்க்கைப் பருவத்தைப் பல பகுதிகளாக வகுத்திருக் கின்றான்.

ஒரு சமூகத்தில் தாயின் பிரிவானது (Maternal Deprivataion ) பிள்ளைகளின் அன்பு அரவணைப்பு, கவனிப்பு, பாதுகாப்பு போன்றவற்றை இழந்து விடுகின்றனர். ஒரு தாயின் பிரிவையும் அதனால் ஏற்படக்கூடிய தாக்கங்களையும் உளவியலாளர்களான " சீக்மன் பிராய்ட், ஜோன்போல்ட், ஸ்வோம்ரீஸஸ் " போன்றவர்களின் கருத்தை உற்று நோக்கும் போது தாய்மையின் முதலிடம் அதி உயர் உச்சத்திற்கே கொண்டு செல்லுகிறது. பத்து ஊரின் தந்தையை ஒரு ஊரின் தாயிற்கு ஒப்பிட்டு கூறுப்படுகிறது.

"எந்தக் குழந்தையும் நல்லக்குழந்தை தான் மண்ணில் பிறக்கையிலே அவர் நல்லவர் ஆவதும் தீயவராவதும் அன்னை வளர்ப்பதிலே " எனவே ஒரு தாய்மை இல்லையேல் அங்கு ஒரு நல்ல சமூகம் உருவாக வாய்ப்பில்லாமல் போகிறது.

இந்த அன்பிற்கு உருவான பொக்கிசத்தையே மதிக்காமல் அனாதை மடங்களிலும் முதியோர் இல்லங்களிலும், தெரு ஓரங்களிலும் பிச்சை எடுத்துக் கொண்டு திரியும் தாய்மார்கள் எத்தனை? இதை ஒரு கணம் சிந்தித்து பார்ப்போம். இதன் பிறகும் நாம் தாய் தந்தையானாலும் நமக்கும் இந்நிலை ஏற்படும் என்பதை மறந்து செயல்படுபவர்கள் எத்தனை பேர்.

எனவே, சமூகத்தின் தாயானவள் மதிப்பிற்கும் மகத்துவத்திற்கும் உரியவளாகின்றாள் என்பதை எள்ளளவும் ஐயமின்றி கூறலாம். உலகில் உன்னதமான ஜீவன் தாய்மையே ஆகும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மறக்க முடியவில்லை

எஸ் எம். பதுர்தீன் மொஹமட்
விடுகை வருடம், இரண்டாம் மொழி தமிழ்

மறக்க முடியவில்லை
மறக்க முடியவில்லை
கலாசாலையின் முதல் நாளை
மறக்க முடியவில்லை.

முதல் நாளின் அனுபவங்கள்
மறக்க முடியவில்லை
கலாசாலை அமைவிடம் தான்
மறக்க முடியவில்லை

பொதுவான நுழைவாயில்
மறக்க முடியவில்லை
அதிலே நிற்கும் காவற்காரன்
மறக்க முடியவில்லை

உள்ளே செல்லும் வீதியைத்தான்
மறக்க முடியவில்லை
இரு மருங்கும் பூமரங்கள்
மறக்க முடியவில்லை

சுற்றிவரப் பாதைகள்
மறக்க முடியவில்லை
மத்தியிலே மைதானம்
மறக்க முடியவில்லை

இடது பக்கம் விடுதியும் தான்
மறக்க முடியவில்லை
வலது பக்கம பள்ளிவாசல்
மறக்க முடியவில்லை

எத்தனையோ பாடநெறி
மறக்கமுடியவில்லை
அதிலும் என் வகுப்பைத்தான்
மறக்க முடியவில்லை

எத்தனையோ ஆசான்கள்
மறக்க முடியவில்லை
அதிலும் எங்கள் அதிபரைத்தான்
மறக்க முடியவில்லை

என் வகுப்பில் பதினேழு பேர்
மறக்க முடியவில்லை

வகுப்புப் பொறுப்பு ஆசானை
மறக்க முடியவில்லை
அவர்கள் சொன்ன அறிவுரைகள்
மறக்க முடியவில்லை

கல்லூரிக் கம்பனையும்
மறக்க முடியவில்லை
கற்றுத் தந்த பாடங்களும்
மறக்க முடியவில்லை

கல்வியியல் பாடத்தையும்
மறக்க முடியவில்லை
தொடர்ந்து சொல்லும் அறிவுரைகள்
மறக்க முடியவில்லை

உளவியலும் உண்மையிலே
மறக்க முடியவில்லை
வாழ்க்கைக்கது தேவையென்றால்
மறுக்கும் உரிமையில்லை

கலைப் பிரிவின் ஆசானாம்
மறக்க முடியவில்லை
அவர் வடிக்கும் சிற்பங்கள்
மறக்க முடியவில்லை

ஆங்கிலமும் அவ்வாறே
மறக்க முடியவில்லை
ITயும், PTயும்
மறக்க முடியவில்லை
இந்து மத சகோதரர்கள்
மறக்க முடியவில்லை
அவர்களது விழாக்களையும்
மறக்க முடியவில்லை

கிறிஸ்தவமும் அதிலேயொன்று


முதியோருக்கு மரியாதை செலுத்துதல் இறைவனுக்கு மரியாதை செலுத்துவது போலாகும். GTC

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறக்க முடியவில்லை
அவர்களது விழாக்களையும்
மறக்க முடியவில்லை

மும்மதமும் ஒரு மொழியாம்
மறக்க முடியவில்லை
ஒற்றுமையாய் வாழ்ந்திருந்தோம்
மறக்க முடியவில்லை

விடுதி வாழ்க்கை நாட்களைத்தான்
மறக்க முடியவில்லை
அதிலும் நாங்கள் பதினேழு பேர்
மறக்க முடியவில்லை

ஒன்னாம் நம்பர் VIP டோம்
மறக்க முடியவில்லை
அதில் கற்ற பாடங்கள்
மறக்க முடியவில்லை

விட்டு விட்டுச் சண்டைகள்
மறக்க முடியவில்லை
மறுகணமே சமாதானம்
மறக்க முடியவில்லை

ஆங்காங்கே மாமரங்கள்
மறக்க முடியவில்லை
காய்க்கும் காலம் கல்லடிகள்
மறக்க முடியவில்லை

மணியடித்தால் சாப்பாடு
மறக்க முடியவில்லை
ஆகா! அதன் ருசியும் தான்
மறக்க முடியவில்லை

கடலை தந்த நாட்களையும்
மறக்க முடியவில்லை
கணக்கிட்டே சாப்பிடுவர்
மறக்கமுடியவில்லை

மொத்தத்தில் அனைத்தையுமே
மறக்க முடியவில்லை
கலாசாலை வாழ்நாளை
மறக்க முடியவில்லை

## FOR MY MOTHER

J. Isaac
2nd year, Science Course

**MELODY SONG**

Bravely you have been scolding
me If all my promises are true
Don't you know I'll do anything
for you.

Sometimes I haven't been
right to you Sometimes I' ve made
you think, and I am sorry for
everything.

But I need you, Mum
I need you this

**CHORUS**

When the sunlight is over this
surface Your are the shadow of
the world in my eyes
When I'm all alone with the clouds
are above
You are my mum, I love.

So, There's no reason to worry um
My life is left for you
And no one's gonna involved in it

But I need you mum
I need you this



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அலட்சிய மனப்பாங்கு வாழ்க்கைக்குத் தடைபோடும்

எஸ். பிரியதர்ஷனி
விடுகை வருடம், உடற்கல்விப் பாடநெறி

மனித வாழ்வில் இலட்சியங்கள் இருக்கவேண்டியது அவசியம். இந்த இலட்சியங்கள் செயல் வடிவம் பெறுகின்ற பொழுதுதான் பயன்களாக மாறுகின்றன. பயன்தராத இலட்சியங்கள் வெறும் பகற்கனவுகளாகவே அமைகின்றன. நல்ல இலட்சியங்களுக்குப் பதிலாக தற்காலத்தில் நாம் காணக்கூடியவை அலட்சியங்களாகவே பெரும்பாலும் உள்ளன. சிறுவர்கள் முதல் பெரியோர்கள் வரை இன்று அலட்சிய மனப்பாங்குள்ளவர்களாகவே அதிகமான சந்தர்ப்பங்களில் நடந்து கொள்கின்றார்கள். அலட்சியங்கள் நமது வாழ்க்கைக்கு தடையாக அமைகின்றது என்பதனை நாம் ஒவ்வொருவரும் உணர்ந்து கொள்ள வேண்டும்.

சமூகத்தில் மூத்தோர்களை இளைய சந்ததியினர் அலட்சியம் செய்வதனால் வாழ்க்கை அனுபவங்களையும் நல்ல ஆலோசனைகளையும் அவர்களிடமிருந்து பெற்றுக் கொள்ள முடியாதுள்ளனர். அத்தோடு பாடசாலைகளில் ஆசிரியர்கள் பாடங்களை சொல்லிக்கொடுக்கும் போது மாணவர்கள் அலட்சியம் செய்கின்றார்கள். பாடங்களை அலட்சியம் செய்வதால் கல்வியில் முன்னேற முடிவதில்லை. குடும்பத்தில் கணவன் மனைவியை அலட்சியம் செய்வதும் மனைவி கணவனை அலட்சியம் செய்வதும் பெற்றோரைப் பிள்ளைகள் அலட்சியம் செய்வதும் சர்வ சாதாரணமாகிவிட்டது. இத்தகைய அலட்சிய மனப்பாங்குகள் குடும்பத்தினரிடையே இருக்க வேண்டிய சுமுகமான உறவுகளை பாதிப்படையச் செய்கின்றது.

வீடுகளிலும், பொது இடங்களிலும் சுகாதார விதிகள் அலட்சியப்படுத்தப்படுகின்றது. இதனால் மனிதர்களின் ஆரோக்கிய வாழ்வுக்கு பாதிப்பு ஏற்படுகின்றது. சமூகத்தில் சட்ட விதிகள், ஒழுங்கு விதிகள், ஒழுக்க விதிகள், நடத்தை விதிகள் என்பன அலட்சியத்திற்குள் ளாகின்றன. இதனால் சமூகத்தில் சீர்கேடுகள், சீரழிவுகள் ஏற்பட வாய்ப்பு அதிகமாவதற்கு இத்தகைய அலட்சியங்களே காரணமாகின்றன.

ஒரு சிலர் உணவில் அலட்சியம், உடையில் அலட்சியம், உடலைப் பேணுவதில் அலட்சியம். பண்பாட்டுப் பாரம்பரியங்களில் அலட்சியம் செய்கிறார்கள். இவ்வாறு பார்க்கப்போனால் அலட்சியம் என்பது ஒரு வாழ்க்கைத் தத்துவமாக, வாழ்க்கை முறையாக, நாகரிகமாக இடம் பெற்று வருவதை உணரக்கூடியதாக உள்ளது. இது எங்கே கொண்டுபோய் மனித சமூகத்தை விடப்போகின்றது என்பது தான் இன்றைய புரியாத புதிராய் உள்ளது.

அலட்சியம் எங்கு உள்ளதோ, அங்கு மனிதத்துவம் மனிதாபிமானம், மனித உறவுகள் என்பன மறைந்து விடுகின்றன. அலட்சிய சுபாவம் மிக ஆபத்தான விளைவுகளை ஏற்படுத்துவன. அகந்தை,கர்வம், செருக்கு ஏனோ தானோ என்ற போக்கு என்பவற்றின் உந்தலே பிறரை அலட்சியம் செய்யுமாறு தூண்டுபவை.

ஒருவர் தமது பிரச்சினை களையோ, மன வேதனைகளையோ எடுத்துக்கூறுவதற்கு சந்தர்ப்பம் அளித்து அவற்றை உன்னிப்பாகக் கேட்டால் அவரின் அரைவாசிப் பிரச்சினைகள் தீர்ந்து விட்ட உணர்வும் மனச் சுமைகளில் பாதிக்கு மேல் எங்கோ பறந்து விட்ட எண்ணமும் அவருக்கு ஏற்பட்டு விடுகின்றது. அவரை நாம் அலட்சியம் செய்யாமையும் அவருக்கு நாம் கொடுத்த மதிப்பும் அவர்மீது காட்டிய அக்கறையுமே அவருக்கு அந்த சுகத்தையும் திருப்தியையும் கொடுத்தன. இந்த மாதிரி நல்ல இனிய மனித உறவுகளை வேண்டியவர், வேண்டாதவர் என்ற பேதமின்றி ஏற்படுத்துவதற்கு அலட்சிய மனப்போக்கினைக் கைவிட்டு பிறர்மீது, ஆர்வம், அன்பு போன்ற நல்லெ ண்ணங்களை வளர்த்துக் கொள் வோமாக.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிவும் நம்பிக்கையும்

ஏ. எஸ். பர்ஸானா
விடுகை வருடம், இஸ்லாம் பாடநெறி

வரலாற்றிலே அறிவும், நம்பிக்கையும் இன்றியமையாத இரு பதங்களாகும். இவையிரண்டும் ஒன்றுடனொன்று தொடர்புபட்டும், வெவ்வேறு கருத்துக்களைக் குறித்தும் நிற்கின்றது. பொதுவாக நிச்சயத்தன்மை வாய்ந்த கூற்றுக்களால் அமைந்த உண்மை அறிவு என்றும், நிச்சயத்தன்மை அற்ற கூற்றுக்களால் அமைந்த உண்மை நம்பிக்கை என்றும் வரையறை செய்யலாம். மேலும் நிரூபிக்கக் கூடியது அறிவு என்றும், நிரூபிக்க முடியாதது நம்பிக்கை என்றும் வேறு கருத்தில் கூறலாம்.

அறிவு பற்றியும், நம்பிக்கை பற்றியும் பல்வேறு சிந்தனையாளர்கள் வெவ்வேறு கருத்துக்களைக் கூறியிருக்கின்றார்கள். மேலும் இவர்கள் அறிவைப் பல்வேறு வகையாகவும் பிரித்துக் காட்டியிருக் கிறார்கள். அவையாவன.

1. உடன் பிறந்த அறிவு
2. முன்னது ஏதுவான அறிவு
3. உய்த்தறி முறை அறிவு
4. பகுப்பெடுப்பு சார் அறிவு

என்பனவாகும். இவற்றில் உடன் பிறந்த அறிவு என்பது மனிதன் பிறக்கும் போது சிலவகையான அறிவுகளுடன் பிறக்கின்றான் என்பதாகும். ஒரு குழந்தையானது தாயின் கருவறையில் இருக்கும் போது சில வகையான கருத்துக்கள் பதியப்படுகின்றன. அத்தகைய கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டு மனித அறிவு தோற்றம் பெறுகின்றது என்பதே இதன் விளக்கமாகும்.

முன்னது ஏதுவான அறிவு என்பது புலன்களைப் பயன்படுத்தாது அறிவினைப் பெற்றுக் கொள்வதாகும். புலன்களைப் பயன்படுத்தி அறிவினைப் பெறாமல் எமது சுய அறிவைப் பயன்படுத்தி அறிவினைப் பெற்றுக் கொள்ளும் முறையாகும்.

உய்த்தறி முறை அறிவு என்பது பொது உண்மையிலிருந்து நியாயரீதியாக தனிப்பட்ட உண்மையைப் பெற்றுக்கொள்வதாகும். பகுப்பெடுப்பு சார் அறிவு என்பது ஒரு வாதத்தின் உண்மை, பொய்யைத் தீர்மானிப்பதற்கு அனுபவத்திற்குச் செல்லாது எமது சிந்தனையைப் பயன்படுத்துவதன் மூலம் அதன் உண்மை, பொய்யைத் தீர்மானிக்கக் கூடியதாக இருத்தலாகும்.

இவ்வாறு அறிவை வகைப்படுத்தி அவற்றைப் பல்வேறு விதத்தில் விளக்கிய சிந்தனையாளர்கள் அறிவுக்கும், நம்பிக்கைக்குமிடையிலான வேறு பாட்டினையும், அவற்றுக்கிடையிலான தொடர்பினையும் வெவ்வேறு விதமாக விளக்கியுள்ளார்கள். இந்த சிந்தனையாளர்களான பிளேட்டோ, J.S. மில், வில்லியம் ஜேம்ஸ், ஹூஸ்லி, டேக்காட்ஸ், டேவிட் ஹியூமீன், காண்ட் போன்றோர்களாவர்.

இவர்களில் பிளேட்டோ அறிவுக்கும், நம்பிக்கைக்குமிடையிலான வேறுபாட்டினை முதன் முதலில் விளக்கியவராவார். இவர் ஒரு விடயத்தைப் பற்றி இன்றியமையாத உண்மைகளை அறிந்து கொள்ள முயற்சிப்பது அறிவு என்றும் இன்றியமையாதென அல்லாத உண்மைகளை அறிந்து கொள்ள முயற்சிப்பது நம்பிக்கை என்றும் கூறுகின்றார்.

டேக்காட்ஸ் உயிர்த்தறி சார்ந்த அணுகுமுறையை அறிவு எனவும் தொகுத்தறி சார்ந்த அணுகுமுறையை நம்பிக்கை எனவும் கூறினார்.

J.S. மில் கூறும் போது பூரண உறுதித் தன்மையுடையது அறிவு. பூரண உறுதித்தன்மை அற்றது நம்பிக்கை எனச் சுட்டிக்காட்டினார். இதன் படி குறிப்பிட்ட விடயத்தைப் பற்றிய சான்றுகள் நிகழ்தகவுடையதாக இருந்தால் அத்தகைய சான்றுகளிலிருந்து பெறப்படுவது நம்பிக்கை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றும் மாறாக நிச்சயத்தன்மை உடைய சான்றுகளில் இருந்து பெறப்படுவது அறிவு என்றும் இவர் விளக்கினார்.

வில்லியம் ஜேம்ஸ் என்பவர் நம்பிக்கையையும், அறிவையும் வேறுபடுத்த முடியாது எனவும் ஒரு காலத்தில் அறிவாக நம்பப்பட்டது. இன்னொரு காலத்தில் நம்பிக்கையாக மாறலாம். உதாரணமாக :- பூமி தட்டையானது என்பது ஒரு காலத்தில் அறிவாக இருந்தது. இன்னொரு காலத்தில் நம்பிக்கையாக இருந்தது. எனவே அறிவு மாற்றமடையாது. அறியப்படும் பொருளே மாற்றமடைகிறது. என இவர் சுட்டிக் காட்டினார்.

கான்ட் என்பவர் அறிவு என்பது எப்போதும் காட்சிக்கு உட்படுத்தக்கூடியது. எதனைக் காட்சிக்கு உட்படுத்த முடியாதோ அதனை நம்பிக்கை எனவும் கூறினார்.

சமய சிந்தனையாளர்கள் அறிவாக ஏற்றுக் கொள்ளும் ஒரு விடயத்தை விஞ்ஞானிகள் நம்பிக்கையாகக் கொள்வர். அதே போன்று விஞ்ஞானிகள் அறிவாகக் கொண்டிருப்பதனை சமய சிந்தனையாளர்கள் நம்பிக்கையாகக் கொள்வார்கள்.

எனவே, அறிவு, நம்பிக்கை என்ற இரு பதங்களும் வெவ்வேறு வகையாக விளக்கம் அளிக்கப்படுவதை நாம் அறிய முடிகின்றது. அதே நேரம் அவை இரண்டும் ஒன்றோடொன்று தொடர்புபட்டும் காணப்படுவதை நாம் அறியலாம்.

நியூட்டனுடைய புவியீர்ப்பு தொடர்பான அறிவு நம்பிக்கையை அடிப்படையாக வைத்து தோற்றம் பெற்றதாகும். அதே போல் பல அறிவுகள் நம்பிக்கையின் அடிப்படையில் தோற்றம் பெற்றிருக்கின்றன. இருந்த போதிலும் சாதாரண நம்பிக்கையை விட மூட நம்பிக்கைகளும் மக்கள் மத்தியில் மலர்ந்து கிடக்கின்றன. இவை அறிவு என்ற அந்தஸ்தினைப் பெறுவதில்லை.

எனவே, அறிவு, நம்பிக்கை என்ற பதங்களின் விளக்கத்தினையும், அவை ஒன்றுடனொன்று தொடர்பு பட்டிருக்கும் விதத்தினையும் நாம் அறிந்து கொண்டோம்.

# Oh girls !

S. Suresh Kumar,
2nd year, English

**Oh girls !**
You have a world,
When you are bold,
It is gold.

**Oh girls !**
Those days, you were slave,
These days, you are brave,
Your Life is not a grave,
For you rights, you don't crave.

**Oh girls !**
Those days, you were in the dark,
These days, you are in the light,
Now, you have no break,
Make you Life bright.

**Oh girls!**
Those days, you were in a place,
These days, you are in the space,
Now, you are ataince,
Word hard to be brainy.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழும் கலைப் பயிற்சி (யோகாசனக் கலை)

கே. சத்திய பாலன்
விடுகை வருடம், ஆரம்பப் பிரிவு

நாகரிகங்களின் வளர்ச்சியினால் பழைமை பேணும் பண்பினை மறந்து உலகமயமாதல் எனும் போர்வைக்குள் மனிதன் சிக்குண்டு கிடக்கின்றான்.

தனது வாழ்க்கையைக் கூட கவனிக்க முடியாதவனாக வாழ்கின்றான். இதன் காரணமாக பலவாறான உடல், உள, மனவெழுச்சி தொடர்பான நோய்களில் சிக்குண்டு நாளாந்தம் வைத்தியசாலைகளுக்கு தனது பணங்களை செலவிட்டு கொண்டிருக்கின்றான்.

பாரம்பரியமாக தொன்று தொட்டு பேணிவரும் பாரம்பரிய கலாச்சார பண்பாட்டு விடயங்கள் நவீன நாகரீகத்தின் மோகத்தினால் அழிவடைந்து வருவது கவலைக்குரிய விடயமாகும்.

அந்த வகையில், வாழும் கலை பயிற்சிகளில் யோகாசனக் கலையும் அதன் மகத்துவமும் எண்ணில் அடங்காதவை. ஆரம்ப காலத்தில் யோகிகள், ஞானிகள், சித்தர்கள், தவப்புதல்வர்கள் போன்றோர்களினாலும் குருகுல கல்வியின் மூலமாகவும் பின்பற்றப்பட்டு வந்தது.

சித்த மருத்துவம் போன்ற சிறப்பு கொண்ட இவ் யோகாசனக் கலையில் எண்ணில் அடங்காத பயிற்சிகள் இருக்கின்றன. அவற்றில் குறித்த சில ஆசனங்களை குறிப்பிடலாம்.

| | | |
|---|---|---|
| 01. | சூரிய வணக்கம் | பிரயாணம் |
| | பத்மாசனம் | திரிகோணாசனம் |
| | புஜங்காசனம் | தனுராசனம் |
| | உட்கட்டாசனம் | பச்சி மோதாசனம் |
| | வஜ்ராசனம் | சர்வாங்காசனம் |
| | சுகாசனம் | கருடாசனம் |
| | சிரசாசனம் | மயிலாசனம் |
| | மயுராசனம் | கர்பாசனம் |
| | சலாபாசனம் | பர்வதாசனம் |
| | பத்த கோணாசனம் | அர்த்த ஹலாசனம் |
| | நவாசனம் | சப்த வஷ்ராசனம் |
| | யோக முத்ராசனம் | சர்வாங்காசனம் |

இன்னும் பல்லாயிரம் பெயர்கள் கொண்ட ஆசனங்கள் நவீன விஞ்ஞான மருத்துவத்தினால் தீர்க்க முடியாத நோய்களை கூட தீர்க்கின்றது என்பது அற்புதமான விடயமாகும். இவற்றினால் ஏற்படும் பயன்கள் எண்ணில் அடங்காதவை. இவை ஒவ்வொரு ஆசனத்திற்கும் தனித்தனியே சிறப்புக்கள் காணப்படுகின்றது. இவ் ஆசனங்களின் பொதுவான நன்மைகளை பார்த்தோமானால்,

1. நரம்பு மண்டல நோய்களை குணப்படுத்துகிறது.
2. ஈரல், பித்தப்பை, சிறுகுடல் சிறுநீரகம் என்பன சரிவர இயங்க உதவுகின்றது.
3. முதுகுக் கூனை தடுக்கின்றது.
4. உடலின் இரத்த ஓட்டத்தை சீர் செய்கின்றது.
5. உடலின் எலும்புகளை வலிமை அடையச் செய்கின்றது.
6. மூட்டுகளுக்கு பலம் கிடைக்கின்றது.
7. நரம்புத் தளர்ச்சி கைகால் நடுக்கம் நீங்குகின்றது.
8. மூலவியாதி, மலச்சிக்கல், குடல் புண், வாய்வு தொல்லை நீக்கம்.
9. தொப்பை குறையும்.
10. ஈரல் நோய், வாயுத் தொல்லை, நுரையீரல் நோய், இதய நோய், சுவாசக் கோளாறு, கண் நோய், தலைவலி, மூக்கடைப்பு, ஆஸ்மா, பித்த நோய், சிறுநீரகக் கோளாறு, கால் குடைச்சல் போன்றவை குணமடையும். மன ஒருமைப்பாட்டையும் உடல் புத்துணர்ச்சியையும் தேக பொழிவையும் கொடுக்கின்றது.

இவ்வாறான உயிர் வாழ வைக்கும் கலை நவீன மோகத்தினால் அழிந்து கொண்டு வருவது கவலைக்குரிய விடயமாகும். தனது





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேலைகளை இயந்திரங்களிடம் ஒப்படைத்து விட்டு தான் முழு நேர ஓய்வெடுப்பதினால் தனது உடலிற்கு தானே நோய்களை தேடி கொள்கின்றான்.

இவ்வாறான வாழும் கலைகள் விரல் விட்டு எண்ணக் கூடிய அளவே உலகில் பயிற்சி கொடுக்கப்படுகின்றது. பழைமை பேணும் பண்பில் பாரம்பரியத்தினால் தொடர்ந்து வந்த கலையினை நவீன உலகில் நாம் பின்பற்றாவிடின் இவ்வாறான ஒரு கலை இருந்த தடயமே தெரியாத வகையில் மறைந்து விடும். எனவே மனிதனின் தேடல்கள் இவ்வாறான கலைகளை பின்பற்ற வேண்டும் அதன் உச்சப் பயனை அடைய வேண்டும். எமது தலைமுறைக்கு இவற்றின் சிறப்புக்களை எடுத்துக் கூற வேண்டும் என்பதே பலரின் எதிர்பார்ப்பு.

## இது தியாகம்...?

இந்திய கேப்டன் தன்(சொத்தை) பற்களைப் பிடுங்க டாக்டரை வரவழைத்து தனது பிடுங்க வேண்டிய பற்களை காண்பித்தார். டாக்டர் பிடுங்க இருக்கும் சமயம் அமெரிக்க கேப்டன் இந்திய கேப்டனை சந்திக்க வரவே " ஒரு நிமிடம் காத்திருக்கவும்" என டாக்டரிடம் கூறிவிட்டு இருவரும் பேசினர். வந்தவன் தற்பெருமைக் காரன். தாங்கள் தம் நாட்டுக்கு தியாகம் செய்வதில் வல்லவர்கள் என தற்பெருமை அடித்துக்கொண்டான். இந்திய கேப்டனால் ஒரு கட்டத்தில் பொறுக்க முடியவில்லை. "நாட்டுக்காக ஒரு பல் தியாகம் செய்ய முடியுமா?" என்று அமெரிக்கனை கேட்டுவிட்டு தாம் இரண்டு பல் நாட்டுக்காக தியாகம் செய்வதாகக் கூறி டாக்டரைப் பார்த்து கண் சிமிட்ட, டாக்டர் சொத்தைப் பற்களைப் பிடுங்கிவிட்டார். அமெரிக்க கேப்டனுக்கு உணர்ச்சி பீறிட்டு தனது இரண்டு பற்களை (நல்ல) பிடுங்குமாறு கூறி, தானும் தன் நாட்டுக்கு இரண்டு பற்களை தியாகம் செய்தான்.

# தொலையும் நதிக்கரையில்

அ. போல் அந்தனி
விடுகை வருடம், சித்திர நெறி

புதுப்பிறப்பாய் சுரக்கும்
நீருக்குள் தெரிகின்றன
தாக சாந்திகள்
புதையும் வேர்கள்
புட்டிகளின் காசுகள்
இன்னும்
மெல்லமெல்ல மாறும்
மின் நெருப்புகள்

பின் எதற்கு
பூங்காவின் சிமெண்ட் சிற்பத்தில்
மலட்டு வழிதல்

கால்களில் சினுங்கும் மீன்களில்
நெருடுகின்ற
தொண்டு சுயம்
பிறப்புரிமை
விதவித சுவை

அப்புறம் ஏன்
உயிர்களின் வண்ண வண்ண
அவஸ்தையாய்
கண்ணாடி குட்டைகள்

பொருள் நாகரிக வாழ்வில்
நாகரிகத்தின் பொருள்
புழு பூத்து விட்டது

பண்பும் - பயனும் அது அதுவாய்
தேடியும் தெரியவில்லை
அன்பும் - அறனும் எதுஎதுவாய்?



இதயத்தின் வாசல்கள் திறக்கப்படாதவரை ஒரு நாடு சுதந்திரம் பெற்றதாகச் சொல்ல முடியாது. GTC

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏனோ இன்னும் தாமதம்?

எஸ். ஏ. சி. உம்முஸஹ்மா,
விடுகை வருடம், இரண்டாம் மொழி தமிழ்,

அகிலக் கண்ணை
அன்னை திறக்க
அறிவுக் கண்ணை
ஆசான் திறக்க
ஆன்மீகக் கண்ணை
ஆண்டவன் திறக்க
ஏனோ.......?
இன்னும்
உலகம் கண் திறக்கவில்லை

இரவுகள் படர
இருள்கள் சூழ
இதயங்கள் கருக்க......
இமைகள் மறுக்க
ஏனோ........?
இன்னும்
இதழ்கள் திறக்கவில்லை!

ஞாயிறு புலர
நாட்கள் நகர
நாணயங்கள் சேர
நாகரீகம் தோன்ற
மானுட வேடங்கள் மாசுற
மாய உலகின்
ஈனச் செயல்கள்
தீர்க்க யாரும்
ஏனோ.........?
இன்னும்
முன்வரவில்லை!

நாளைய தலைமுறை
நம்மைக் கேட்கும் - நம்மால்
தவறிப் போன தடயங்களில்
தத்தளிக்கக் கூடும்
என்பதில் யாருக்கும்
ஏனோ........?
இன்னும்
ஐயம் வரவில்லை.

இனங்கள் சேர்ந்து
மதங்கள் சொல்லும்
இறைவன் வாக்கை
இதயம் உருக
எடுத்துக் கூற
சமயப் பெரியோர்
தயங்கி நிற்றல்
ஏனோ......?
இன்னும்
எமக்குப் புரியவில்லை

தவறி நிற்கும்
மனிதர் தம்மை
தட்டிக் கேட்க
தலைமைத்துவங்கள்
தாழ்ந்து நின்று........
சுயநலம் காப்பது
ஏனோ.........?
இன்னும்
நமக்கு விளங்கவில்லை!

அழகிய உலகம்
அமைத்திட - நாமும்
அணி திரள்வோமே
நாளைய தளிர்கள்.........
சிறப்புடன் வளர.........
ஏனோ.....?
இன்னும் தாமதம்
எழுந்துவாரீர் ஆசான்களே!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்து மதமும் ஜீவகாருண்யமும்.

பா. சத்தியநாதன்
விடுகை வருடம், சித்திர நெறி

நிலத்தில்,வானத்தில் அல்லது நீரில் வாழும் எந்தவொரு உயிருக்கேனும் இம்சை புரியாதீர்.
*(யசுர்வேதம்)*

இரு கால்களைக் கொண்ட எந்த வகையிலான விலங்குகளையும் அவற்றின் உணவு,நீர் ஆகியவற்றையும் காத்தருள்க. அவை எம்மோடு அளவிலும் பலத்திலும் வளர்க! கடவுளே எவருக்கேனும் இம்சை புரிவதினின்றும் எம்மைத் தவிர்த்துக் கொள்ளும்.
*(இருக்கு வேத சம்ஹிதா)10:37.11*

தியானம் புரியும் உத்தம யோகியரும் எல்லா உயிர்கள் மீதும் அக்கறை கொண்டு வாழ்ந்து அவற்றைக் காப்போரே. *(அதர்வ வேத சம்ஹிதா)*

கடவுள் உங்களுக்கு அருளிய உடலைக் கடவுள் படைத்த விலங்குகளைக் கொல்லப் பயன்படுத்தாதீர்கள்.
*(யசுர் வேதம்)*

சுவர்க்கத்தில் சாந்தி நிலவுக! ஆகாயத்தில் சாந்தி நிலவுக! பூமியில் சாந்தி நிலவுக! தாவரங்கள் ஆகியவற்றிலும் சாந்தி நிலவுக! கடவுளிடத்தில் சாந்தி நிலவுக! பிராமணரில் சாந்தி நிலவுக! எல்லோரும் என் மீது தோழைமையோடு பார்வையைச் செலுத்துவார்களாக! நானும் எல்லோரையும் தோழமைக் கண்களோடு பார்ப்பேனாக! நாமெல்லோரும் ஒருவரை ஒருவர் தோழமைக் கண்களோடு பார்ப்போமாக! *(தக்வயசுர் வேத சம்ஹிதா)*

இப்புவியினில் எந்தவொரு விலங்கும் வேதனையை அனுபவிக்காது இருப்பதாகுக! அஹிம்சை என்பது எந்தவொரு உயிருக்கும் எச்சந்தர்ப்பத்திலேனும் தம் மனத்தால், சொல்லால், உடலால் எந்தவொரு வேதனையையும் அளிப்பதைத் தவிர்த்துக் கொள்ளுதலே ஆகும்.
*(சந்தில்ய உபநிசத்)*

கருணை என்பது எம் இதயங்களை எல்லோர் மீதும் இளகச் செய்கிறது.
*(திருக்குறள் - 74)*

தமது ஊனைப் பெருக்குதற்காக பிறரது ஊனைப் புசிப்பவரில் எவ்விதம் உண்மையான பரிவு தோன்றும் ?
*(திருக்குறள் - 2.53)*

விலங்குகளைக் கொல்லல் இதயத்தைக் கரடுமுரடாக்கும். *(திருக்குறள் - 2.54)*

விலங்கொன்றைக் கொல்லும் போது அவ்விலங்கு அனுபவிக்கும் கடும் வேதனையை நினைக்க இயலுமாயின் ஒருவர் மாமிசம் உண்ண முயலமாட்டார்.
*(திருக்குறள் - 26.257)*

கொல்லுதலையும் ஊன் உண்ணுதலையும் விலக்கல் ஆயிரம் பூசைகள் நடத்துவதிலும் மேலானது.
*(திருக்குறள் - 259)*

அடுத்தவரது வேதனையைத் தம் வேதனையாக உணர்ந்து அதனைத் தவிர்த்துக் கொள்ள நினைக்க முடியாத விவேகத்தால் ஒருவர் பெறத்தக்க பயன் யாது?
*(திருக்குறள் - 315)*

இந்துக்கள் விலங்குகள் மீது காட்டும் மதிப்புக்குச் சிறந்த உதாரணம் எல்லாத் தெய்வங்களுக்கும் வாகனமாக விலங்கொன்றைக் கொண்டிருப்பதாகும். ஒருவர் தெய்வத்தை வணங்கும் போது அவ் விலங்குகளையும் வணங்குகிறார். சைவசமயத்தின் அனைத்து ஞானத்தையும் குறியீடாக கொண்ட தெய்வமாகிய கணபதி (கணேசர்) யானையின் சிரசு கொண்டவராக சித்தரிக்கப்படுகிறார்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாமரனின் உரிமைக் குரல்

எ. எல். சர்மிலா
விடுகை வருடம், இரண்டாம் மொழி தமிழ

ஏன்
இப்படி.........
இத்தனை துன்பம்!

ஓலைக் குடிசையாய் எம்
மாளிகையிருக்க
கிழிஞ்ச பாய்த் துண்டும்
தகரத் தட்டும்
ஒன்றேயிருக்க
கரையானின் இரையாய்
கட்டிய மண் சுவர்கள்
அதில் மழைக்கோர்
மட்டில்லா மகிழ்ச்சி
வருடா வருடம் வந்தே
சுவர்களின் ஓவியம்
வரைய - மண் சுவரும்
கரையும்

கிழிசல்கள் தைத்து
கிழிந்தே போயின
எம் ஆடைகள்
வயது வந்த பெண் - தனில்
வாழ்க்கை தான் இல்லை!
மானம் மறைக்க - ஓர்
மாற்றுத் துணி இல்லையே!

அரை கூலிக்குச் சென்று
கால் வயிற்று கஞ்சி குடித்தோம்
எம் அரசு செய்த வேலை

அதிகமாக்கிய அரிசியின் விலை
நாம் ஈரத்துணி கொண்டு
வயிற்றை சமாளிக்க - எம்
சின்னஞ்சிறிசுகள் என்ன செய்யும்?
பாவம்.............
பஞ்சாமிர்தம் தான்
வேண்டுமென்றில்லை
பச்சையரிசி சோறு தான்
நிஜத்தில் வராதா?
வெள்ளம் வந்து
தள்ளாமல் இருக்க
ஓர் குடிசை தான் வேண்டும்

எம் இன்றைய கனவுகள்
இன்றில்லை
எம் சந்ததிகளின்
ஜீவிதம் தனில் நிஜமாகுமா?

இது எம் உரிமைக் குரல்
உணர்ச்சிகளின் உந்துதல்!

# நண்பன் பற்றி சில வரிகள்

எம். எம். எம். மிரஷா
விடுகை வருடம், இஸ்லாம் பாடநெறி.

தேவையில் உதவுபவனே நல்ல நண்பன்.

இழப்பதை போல் அவ்வளவு இலகுவாக ஒரு நல்ல நண்பனை அடைய முடியாது.

நல்ல நண்பர்களை பெறமுடியாதது பலவீனம், ஆனால் நல்ல நண்பனை இழப்பது அதை விடப்பலவீனம்

ஒருவரின் ஒழுக்கத்தை அவனது நண்பர்களை வைத்தே மதிப்பிடலாம்.

நல்ல நண்பன் நாம் இல்லாத இடத்திலும் நல்லதையே பேசுவான்.

பகைவனின் முத்தத்தை விட நண்பனின் கண்டிப்புச் சிறந்தது.

ஒரு நல்ல நண்பன் உறவினரை விட மேலானவன்.

நல்ல நண்பன் ஒரு நல்ல நூலைப் போன்றவன்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞாபக அலைகளில் உன்னுடைய அழைப்புகள்

அருச்சுனன் குமுதம்
வருடம், உடற்கல்வி நெறி

நீ அழைத்ததும்
திரும்பி பார்த்தேன்
கண்களைக் காணவில்லை
காதுகளால் மட்டுமே
ஓர் அழகான உலகம்
உருவானது!

ஒரே ஒரு முறைதான்
அழைத்தாய்; இங்கே பார்,
திசைகள் எல்லாம்
என்னைத் திரும்பிப் பார்க்கின்றன!

பாதைகளுக்கு கூட ஆசை
வந்துவிட்டது
உன்னை நான் பார்க்க வரும்போது
என் பாதங்கள் அவற்றின் மீது
பட வேண்டும் என்று!

பட்டிக்காட்டுத் தனமான பெயர்தான்
உன்னுடைய பெயர்
அதுதான் எனக்கு
நாகரிகத்தின் ஞாபகச் சின்னமாகிவிட்டது
நைல் நதி மாதிரி!

என்னைக் கூப்பிட்ட
பல குரல்களின் மத்தியில்
உன் குரலின் ஒலிமட்டும்
எந்நேரமும் என் செவியோரம்!

தொலைவில் நீ இருக்கும் போது
என் அருகில் இருப்பது போல்
தோன்றுகிறது எனக்கு!

உன் அருகில் வந்த பிறகுதான்
நீ வெகு தொலைவில்
இருப்பதே விளங்குகிறது எனக்கு!

# வள்ளலாய் வாழப் பார்த்தேன்

என். மலர் விழி
விடுகை வருடம், உடற்கல்விப் பிரிவு.

வள்ளலாய் வாழப் பார்த்தேன்
வறுமையில் வாடி நின்றேன்
வெள்ளையாய் பழகப் பார்த்தேன்
வேஷங்கள் போட்டார் கண்டேன்

குயிலென்று பாடப் பார்த்தேன்
குரலிலே இனிமை இல்லை
மயிலை போல ஆடப்பார்த்தேன்
ஆடத்தான் முடியவில்லை

ஆசையில் வடிவம் பார்த்தேன்
அங்கெல்லாம் சேர்க்கவில்லை
பாசத்தின் வடிவம் பார்த்தேன்
பாசம் தான் கிடைக்கவில்லை

கவர்ச்சி, நடிப்பு பார்த்தேன்
அதெல்லாம் எனக்கு பிடிப்பில்லை
எத்தனை மனிதர் பார்த்தேன்
எல்லோரும் நல்லோர் இல்லை

அன்னையின் தியாகம் பார்த்தேன்
அவளது தியாகம் கிடைக்கவில்லை
மனிதர்களுக்கு உதவி செய்ய சென்றேன்
உதவி செய்ய ஏற்றுக்கொள்ளவில்லை

என்னை நினைத்து பார்த்தேன்
எனினும் நிறைவு இல்லை
நான் பிறந்தது ஏன் என்ற கேள்வி
பதில் எனக்குத் தெரியவில்லை


ஒரு ஜீவனாய் பிறந்த இவ்வுலகில்
என் மரணத்தைதான் அனுபவிக்க
வேண்டும் என்று
இவ் பூமித்தாயை வேண்டுகின்றேன்
பூமித்தாய் என்னை ஏற்பாளாக!



வாங்குபவனுக்கு நூறு கண்களும் குறைவே. அனால் விற்பவனுக்கு ஒரு கண் போதும். GTC

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசான்களே.....



**எஸ். ரோஜ்மன்**
விடுகை வருடம், ஆரம்ப நெறி.

உலகில் உள்ள அனைத்து மக்களும் நீதி, நியாயத்தின் வழியில் நடப்பவர்கள் அல்ல, என்ற போதிலும் எல்லா சுயநலமிக்க அரசியல்வாதிகளிடமும் மக்கள் சேவைக்காக அர்ப்பணிப்புள்ள தலைவன் ஒருவன் இருக்கின்றான் என்றும், ஒருவனுக்கு எதிரிகள் இருப்பது போல நண்பர்களும் இருக்கிறான் என்பதனையும் மாணவனுக்குக் கற்றுக் கொடுங்கள். இவற்றுக்கு அதிக காலம் எடுக்கும் என்பதையும் நான் அறிவேன் என்றாலும், தானாக கிடைக்கின்ற ஒரு கோடி ரூபாவை விட அவனே கஷ்டப்பட்டு உழைத்துப் பெறும் ஒரு ரூபாய் அவனுக்கு மதிப்பும், மகிழ்ச்சியும் மிக்கது என்று அவனுக்கு கற்றுக் கொடுப்பீர்களாக! அவனுக்கு தோல்வி வரும் போது அதனை ஏற்கவும் வெற்றியின் போது மகிழவும் பயிற்றுவியுங்கள்.

உங்களால் முடியும் புன்னகையின் இரகசியத்தை அவனுக்கு புரியவைக்க, ஏனெனில் வீராப்புக்காரர்கள் அருகில் வரும் போது அவர்களை சாதுவான வர்களாக மாற்றிவிடலாம் என்பதையும், புத்தகங்களில் உள்ள பெறுமதியையும் அவனுக்கு எடுத்துக் கூறுங்கள்.

பரீட்சையில் மோசடிகள் செய்து தேறுவதைவிட தேறாதிருப்பதே மேலானது என்று அவனுக்கு புரியச் செய்யுங்கள். தான் தவறான வழியில் இருப்பதாக மற்றவர்கள் கூறினாலும் தான் தவறான வழியில் செல்லவில்லை என்ற நிலைப்பாட்டில் உறுதியாக இருக்க அவனுக்கு கற்றுக் கொடுங்கள்.

அனைவரதும் குரலுக்குச் செவி சாய்க்க அவனுக்கு உணர்த்துங்கள். அதில் சரியானவற்றை பிரித்தெடுக்க கற்றுக்கொடுங்கள். சோகமான நிலையிலும் புன்னகை புரியும் விதத்தை அவனுக்கு கற்றுக்கொடுப்பீர்களாக. கண்ணீர் சிந்துவது வெட்கப்படக்கூடிய விடயமல்ல என்பதையும் அவனுக்கு உணர்த்துங்கள்.

எல்லா விடயத்திலும் பிழை காண்போரை தட்டிக்கழிக்கவும், தன்னைப்பற்றி அதிகம் புகழ்வோரைப் பற்றி எச்சரிக்கையாக இருக்கவும் அவனுக்கு கற்றுக் கொடுப்பீர்களாக. தான் சரியானவை என எண்ணுகின்ற வற்றுக்கு போராட வேண்டும் என்பதையும் அவனுக்கு கற்பியுங்கள். தன்மீது தைரியம் கொள்ளவும் நம்பிக்கை கொள்ளவும் கற்றுக் கொடுக்கப்படுமாயின் அவன் மனித வர்க்கம் மீது நம்பிக்கை ஏற்படுத்திக் கொள்ள தவறமாட்டான். நான் உங்களுக்கு வழங்கியுள்ள பொறுப்பு பாரியதொன்று என்பதை நான் அறிவேன் என்றாலும், உங்களால் சாத்தியமான வற்றை மாத்திரம் நிறைவேற்றி வைப்பீர்களாக. இதற்கான காரணம் என்னவென்றால் எனது மகன் இம்மண்ணில் நல்லதொரு பிள்ளையாக இருப்பதற்காக!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் கிளைகள் நீளும்

ஐ. அன்டனி பிரகாஷ்
விடுகை வருடம், விஞ்ஞானப் பிரிவு

யாரந்த மூடன்
நான் தூங்கும் போது
என் கால்களுக்கு விலங்கிட்டவன்?
என் கைகளும்
கால்களும்

ஆழ்ந்த உறக்கத்திலிருக்க.
எங்களை கிளிகளாக்கி
ரசித்தீர்கள்
எங்கள் கௌரவங்கள் தலைகவிழ,
நாங்கள்
இளவு காத்த கிளிகளென்பது
பின்னரல்லவாபுரிந்தது.

தோல்வி எனக்குப் புதிதல்ல,
நாம் பிறந்தபோதே
எம் பெயரை
வேறொருவர் சூடியதே
முதல் தோல்விதான்

யாருங்கே ஏமாந்தவன்?
முதல் முறையா
சகித்துக் கொள்!
இரண்டாம் முறையா
விழித்துக் கொள்!
மூன்றாம் முறையா
நெறித்துக் கொல்!

உன் எதிர்காலங்கள்
முன்னோக்கி நடக்கின்றன
உன் வலது கால்கள் ஏன்
பின்னுக்குச் செல்கின்றன?

முட்டி மோதி
முன்னாலே போய் பற்றிக்
கொள் வெற்றியை!
எரித்து சாம்பலாகட்டும்
உன் எதிரிகள்!!

உனக்கென யாருமில்லை
என வருந்தாதே
கண்ணாடி முன் நின்று
கை குலுக்கிக் கொள்
ஒரு முறை
திரும்பிப் பார் உன் நிழல்
உன்னோடு கூடவே!

சொன்னவை யாவும்
எண்ணங்கள் தான்!
எண்ணங்கள் யாவும்
விதைகளல்லவா?
விதைகளுக்குத்
தெரியுமல்லவா?
விருட்சமாகும் சேதி!

நேர்மையான எண்ணங்கள் தந்த வெற்றியை, சரியாக கண்காணிப்பதன் மூலம்தான் நிரந்தரமாக்க முடியும்; பாதுகாக்க முடியும். வெற்றி வந்ததும் பலர், முன்பு கொண்டிருந்த மன உறுதியை இழந்து விடுகிறார்கள்; ஆணவம் தலைக்கேறி விடுகிறது; தோல்வி அவர்களை வேகமாகத் தழுவுகின்றது.



புத்தகம் குழந்தைகளுக்கு வழிகாட்டி முதியவர்களுக்குப் பொழுதுபோக்கு. GTC

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# GOVERNMENT TEACHERS' COLLEGE - ADDALAICHENAI

## COURSE - 2ND LANGUAGE (TAMIL & SINHALA)

## ACADEMIC YEAR 2009/2010



**Row 1 (L/R) :** (Seated) Mr.MJM Nizam, Mr.TM Shiffa, Mr.SHM Shakeer, Mr. MIA Lathief (Deputy Principal), Alhaj. Moulavi. MSA Hafeel "Sharqiyy" Principal (SLEAS), Alhaj. Moulavi. ACM Zubair "Sharqiyy" (Deputy Principal), Mr. MT Wafee (Lectr.) Mr.SAM Naleem, Mr.BRM Suwaideen, Mr.HHS Mohamed.

**Row 2 (L/R) :** Mrs.AL Sarmila, Ms.N Rismiya, Ms.J Fasmiya, Mrs.RS Sharmila, Mr.SAM Rizwan, Mr.FM Fawzar, Mr.SM Ali, Mr.SMB Mohamed, Mr. NM Fasil, Mrs.SACU Saheema, Mrs.A Pushparani, Mrs. ACF Riswana, Mrs.MA Nagur Umma.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# GOVERNMENT TEACHERS' COLLEGE - ADDALAICHENAI
## COURSE - PHYSICAL EDUCATION
### ACADEMIC YEAR 2009/2010



**Row 1 (L/R) :** (Seated) Ms.P Thevakumary, Ms.T Saratha, Ms.T Komalaselvi, Mr.M Thiruchelvam, Mr.S Suresh Kumar, Mr. MIA Lathief (Deputy Principal), Alhaj. Moulavi. MSA Hafeel "Sharqiyy" Principal (SLEAS), Alhaj. Moulavi. ACM Zubair "Sharqiyy" (Deputy Principal), Mr.SLM Saleem (Lectr.), Mr.S Dickneshwaran, Ms.C Morien Chrisshanthy, Mrs.P Shiyamala Devi, Mrs.S Komathy.

**Row 2 (L/R) :** Ms.G Rajeshwary, MsV Sharmila, Ms.P Sahayamary, Mrs.A Mahaluxmi, Ms.S Subathradevi, Mrs.S Kamaladevi, Ms.N Pathminidevi, Mrs.R Malarvili Ms.M Shiroshini, Mrs.S Priyadharshini, Mrs.S Ambiga, Ms.R Kayalvili, Mrs.A Mohanwathani, Ms.A Clera jesili, ms.S Thirosammah, Ms.A Kumurtham

**Row 3 (L/R) :** Mr.S Paneerselvam, Mr.N Karunagaran, Mr.A Anuratha, Mr.SM Rasith, Mr.N Krishnakumar, Mrs.V Pushparaj, Ms.M Kavitha jayakanthy, Mrs.S Ramamoorhty, Mr.T Elilvendran, Mr.A Sarawana Kumar, Mr.R Panneerselvam, Mr.P Krishna Prabu, Mr.S Loganathan, Mr.A Zackriyas.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஹைக்கூ........

பா. தேவகுமாரி,
விடுகை வருடம், உடற்கல்வியும் சுகாதாரமும்.

இரவு தன் கூந்தலுக்கு
சூடிக்கொண்ட
மல்லிகைச் சரங்கள்
நட்சத்திரம்!

கற்பனையின்
ஊற்றிலிருந்த
பேனை முனை
கவிதை !

எப்போதும்
தெவிட்டாதவன்
ஆனால்
சுவையற்றவன் !
நீர்

இவ்வுலகில்
நம்பத் தகுந்த
நல்ல நண்பன்
புத்தகம் !

இதயத்தை
கிழித்து
துடிதுடிக்க
வைத்திடும்
கத்தி
வார்த்தை !

இருமனங்கள்
சேர்ந்து
தொலைந்து
போகும் திருவிழா
காதல் !

மாசற்ற
அன்பையும்
வெட்டிப்பிரித்து
பாரத்து விடும்
சுயநலம் !

மனிதன் மட்டுமே
பேசுகின்ற
சர்வதேச
மொழி
சிரிப்பு !





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலட்சியத் தாயின் இலட்சிய மகன்

முத்துசாமி சுதாஹரன்
தொடுகை வருடம், உடற்கல்விப் பிரிவு

அன்று மார்கழி மாதம் நான்காம் திகதி. ஆகாஷ் சாளரத்தின் வழியே ஆகாயத்தையும், அழகு நிறைந்த மலைகளையும் பார்த்தபடி ஏதோ யோசனையில் ஈடுபட்டுக் கொண்டிருந்தான். அது அவனது இதமான, ஈரமான இதயச் சுமைகளை இறக்கி வைக்கும் உணர்வுகளின் சங்கம்மாய் இருந்தது. அவனது கடந்தகால வாழ்க்கையில் ஏற்பட்ட திசை திருப்பங்களையும், திசை மாறுதல்களையும், அசைப்போடுபவையாக இருந்தன.

ஆகாஷ் வீட்டிலே செல்லப் பிள்ளையாகவும், அனைத்துச் செல்வங்களுக்கும் வாரிசாகவும், செல்லையாவுக்கும், சொர்க்கத்திற்கும் அரும் மகனாகப் பிறந்தான். எவ்வித துன்பங்களும் இல்லாது செல்லப் பிள்ளையாக வளர்ந்து வரும் நாளிலே காலத்தின் கோலத்தால் தந்தை மாரடைப்பால் மரணித்தார். தந்தை இறந்ததை அறியாத ஆகாஷ் தந்தையின் சடலத்தருகே படம் கீறி விளையாடினான். அப்படம் அவன் தன் எதிர்காலத்தில் காணப்போகும் இன்னல்களை முன்பே கோலமாய் வரைந்தான் போலும். காலமும் கரைந்தது. சொர்க்கம் வேலை என்றால் அறியாதவள், உணராதவள். வேலையை அறியாதவள் என்றால் வயிறு கேட்குமா? வறுமைத் துன்பங்கள் ஆகாஷையும் சேர்த்து வதைக்கத் தொடங்கின. சொர்க்கமோ வீட்டுக்குள்ளே இவ்வளவு காலமும் செல்வச் செழிப்பாய், வசதியாய் வாழ்ந்த வாழ்வை இழந்து வெளியுலக வாழ்வை நோக்கி நகர்ந்தாள். வேலைகள் பல தேடியும் வேலை ஏதும் கிடைக்கவில்லை. இறுதியாக ஓர் கரும்பு அரைக்கும் ஆலையிலே வேலைக்கமர்ந்தாள்.

மோதிரமும், வலையல்களுமாக காட்சிதந்த கைகளில் தற்போது மோதிரமும், வலையல்களுமாக கரும்புக் கட்டுகளும், பாணி காய்ச்சுகின்ற பெரிய கரண்டிகளுமே காட்சிதந்தன. இரத்தத்தை வியர்வையாக சிந்தி தன் மகனின் கல்விக்காக அயராது உழைத்தாள். ஒரு நாள் அடுப்பருகே பாணி கிண்டிக் கொண்டிருக்கும் போது பாணி உள்ள தாச்சு புரண்டு சொர்க்கத்தின் முகத்தையும், கால்களையும் பதம் பார்த்தது. "ஐயோ அம்மா" எனக் கத்திக் கதறினாள் அவ்வளவு தான். மறு நாள் காலை கண் விழித்துப் பார்த்தாள் வைத்தியசாலையில் முகத்திலே "பண்டேஜ்" சுத்தப்பட்டும், கால்களால் நடக்க முடியாதவளுமாகக் காணப்பட்டாள்.

ஆகாஷ் "ஏனம்மா இந்தக் கொடுமை, முற்பிறப்பில் என்ன பாவம் பண்ணினம். உங்களை இந்த நிலையில் பார்ப்பதற்காகவா நான் பிறந்தேன். என்னையும் ஏன் படைத்தாய் என்னோடு சேர்த்து வறுமையையும் படைத்தாய். என்னை பெற்ற பாவத்திற்காகவா இவ்வாறு இறைவன் உங்களை சோதிக்கின்றான். நான் ஏன் பிறந்தேன். இறைவா உனக்குமா கண்கள் இல்லை." எனக் கத்திக் கதறி குமுறிக் குமுறி அழுதான்.

நடக்க முடியாமலும், தன்னை அறியாமலும் கட்டிலிலே காலம் கழித்தாள். ஆகாஷின் குடும்பம் வறுமையின் கொடூர பிடிக்குள் துயில் கொள்ள ஆரம்பித்தது. அன்னையை காப்பாற்றவும், அடைபட்டுள்ள வறுமை பகவானின் பிடிக்குள் இருந்து விடுபடவும் ஆகாஷ் பதினான்காம் வயதிலே கத்தியை தூக்கினான். எதற்கு? மறுநாள் அடுத்தவீட்டு ஆண்டியோடு கரும்பு வெட்டச் செல்வதற்கு ! வெயிலின் கொடுமையிலும் வெட்டினான். ஐம்பது கட்டுக்கள் வெட்டிவிட்டான். மாலை அவன் கையில் இருநூறு ரூபா காசு தவழ்கின்றது. இறைவனை வேண்டி ஓட்டமும் நடையுமாக வீடு நோக்கி வருகின்றான். வரும் வழியில் அரிசி ஒரு கிலோவும், கத்தரிக்காயும், அம்மாவிற்கு விசுக்கோத்தும், தேயிலையும் வாங்கிக் கொண்டு வீடு நோக்கி வருகிறான். அடுப்பை மூட்டுகிறான். தண்ணீர் சுட வைக்கின்றான். தாயிற்கு அன்று தான் மிக


நகைச்சுவை மிகுந்தவர் அனைவரும் அன்பு மிகுந்தவர் என்பதை அனுபவத்தில் அறிவேன். GTC

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீண்ட நாட்களுக்குப் பிறகு விசுக்கோத்துடன் மிகப் பெரிய தேநீர் விருந்து உபசாரம் செய்கின்றான். பிறகு அவசர அவசரமாக பாத்திரங்களைக் கழுவி தனக்கு தெரிந்த விதத்தில் உணவு சமைத்து தாயிற்கு கொடுத்துவிட்டு தானும் உண்டு, மிகுதிப் பணத்தை எறும்புகள் சேர்க்கும் சிறு உணவைப் போல் தாயின் கண்களை சுகப்படுத்துவதற்காக சேர்த்தான். ஆகா பட்ட கஸ்டங்களுக்கும், துன்பங்களுக்கும் இறைவன் கண்திறந்துவிட்டார். அவன் சேர்த்த பணத்தால் வைத்தியர் அவன் தாயின் கண்களை திறந்து விட்டார். அன்று ஆகாஷ் சந்தோசத்தின் உச்சிக்கே சென்றுவிட்டான். அன்னையே அகிலம், அன்னையே இதயம், அன்னையே கோவில், அன்னையே மூச்சு என்றிருந்தவனுக்கு இறைவன் வழங்கிய பரிசாய் சொர்க்கம் அழகிழந்த முகத்தோடும், ஒரு கண் பார்வையோடும், வெள்ளை படர்ந்த தோல்களோடும், பாரப்பவர்கள் கேலி செய்பவள் போல காட்சி தந்தாள். எப்படி இருப்பினும் தன் அன்னையைக் காப்பற்றிய இறைவனுக்கு பூமாலை சாத்தி அர்ச்சனை செய்து வணங்கினான்.

தாய் தன் மகனை நினைத்து கவலை அடைந்தாள். பேனையையும், புத்தகத்தையும் ஏந்துகின்ற காலத்தில் கத்தியையும், கரும்புக் கட்டுகளிலுமே காலம் கழிவதை நினைத்து கவலை அடைந்தவளாய் மீண்டும் தன் வேலையைத் தொடர்ந்தாள் சொர்க்கம் ஆகாஷ் மீண்டும் பள்ளியில் சேர்த்தான். தான் சம்பாதிக்கும் பணத்தில் ஆகாஷை படிக்க அனுப்புகிறாள். எதையும் உணராத வயதில் ஆகாஷ் தன் தாயின் கஸ்டத்தையும், தன் குடும்ப கஷ்டத்தையும் உணர்ந்து நன்றாக படிக்கின்றான். மற்ற மாணவர்கள் மாலை நேர வகுப்புகளுக்கு செல்கின்றார்கள். ஆகாஷ் செல்ல வழியில்லாது செலவழிக்க தாயிடம் பணமில்லாததை உணர்ந்து வகுப்புகளுக்கு செல்லாமல் கிடைப்பதை நன்றாகப் படிக்கின்றான். க.பொ.த. (சா/த) பரீட்சையும் நெருங்கிவிட்டது. பிள்ளைகள், பெற்றோர்கள் வற்புறுத்தியும் படிக்காத வயதில் தாயின் நிலைமையை அறிந்து இரவில் நீண்ட நேரம் கண்விழித்துப் படிக்கின்றான். பரீட்சை வந்து விட்டது ஆகாஷ் தந்தையின் படமருகே சென்று வணங்கி விட்டு தாயையே கோயிலென வணங்கிவிட்டு பரீட்சை நிலையத்தை நோக்கி ஓட்டமும் நடையுமாக சென்று பரீட்சை எழுதுகின்றான்.

பரீட்சைப் பெறுபேறுகளும் வருகின்றது. அவ்வருட (சா/த) பரீடசையில் ஆகாஷே இலங்கையில் முதல் மாணவனாக வந்துள்ளமை வானொலி வாயிலாகவும், TV வாயிலாகவும், எல்லா ஊடகங்களிலும், எல்லா இடங்களிலும் பரபரப்பாக பேசப்பட்டுக் கொண்டிருந்தது. அதை அறியாத ஆகாஷ் பள்ளிக்குச் சென்று பெறுறேகளை பார்த்துவிட்டு சந்தோஷ மிகுதியால் "அம்மா அம்மா நான் பாசாகிட்டேனம்மா, உங்கள் கனவ நனவாக்கிட்டேனம்மா" என தாயிடம் சொல்ல தாய் கரும்புக் கட்டுகளை அப்படியே போட்டுவிட்டு மகனைத் தூக்கி உச்சி முகர்ந்த வண்ணம் சந்தோசத்தின் உச்சிக்கே சென்றவளாய் "என் ராசா இல்லே நீ நன்றாய் படிப்பாய் என்று தெரியும்டா என் தங்கம் என்று உச்சி முகர்ந்தாள். மறுநாள் அதிபர் சொர்க்கத்தைப் பாடசாலைக்கு வரச் சொல்லியிருந்தார். சொர்க்கமும் மறுநாள் பாடசாலைக்குச் சென்றாள். பாடசாலை அதிபர் சொர்க்கத்தைக் கண்டு "உன் மகன் பாஸ் பண்ணுவானு நாங்க கனவிலும் நினைக்கல பாஸாகிட்டான் கெட்டிக்காரன் என புகழ்ந்து பின் "இந்தா பாரு சொர்க்கம் உன் மகனுக்கு மட்டும் கொழும்புல படிக்க வாய்ப்பு கிடச்சிருக்கு, நீ இஷ்டமுனா சொல்லு அனுப்புவம். உனக்கு செலவழிக்க முடியுமா? முடியுமானா சொல்லு அரசாங்கத்திலே மாதா மாதம் ஐந்நூறு ருபா கொடுப்பாங்க மிச்சமெல்லாம் உன் பாடுதான்." என்று அதிபர் சொல்ல சொர்க்கம் "சேர் போமை நெரப்புங்க சேர். என் உயிர கொடுத்தாவது படிக்க வைப்பேன். நெரப்புங்க சேர்" என்றாள். அதிபரும் நிரப்பி அனுப்புகிறார்.

ஆகாஷுக்கு ஒரு புறம் ஆசை, மறு புறம் கவலை. எப்படி செலவழிப்பாள் என்று "என்னம்மா எனக்காக எத்தனை நாளா கஷ்டப்பட போறீங்க இதெல்லாம் வேணாம்மா. நா இங்கேயே படிக்கிறேன்'' என வற்புறுத்தினான். சொர்க்கமே நீ போனாலே போக வேண்டும் என வற்புறுத்துகின்றாள். ஆகாஷும் கொழும்பு பிரபல பாடசாலை





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவனாக சேருகின்றான். அங்கு நாளொரு மேனியும், பொழுதொரு வண்ணமுமாக காலம் கழிகிறது. ஆகாஷ் குடும்ப நிலை அறிந்து மிகவும் கஷ்டப்பட்டு படிக்கிறான். இவன் வகுப்பறையில் ஒதுக்கப்பட்ட மாணவனாகவே காணப்படுகின்றான். காரணம் அவன் ஏழ்மையின் வாரிசு என்பதால். ஏழ்மை நிலையிலும் மனம் தளரவில்லை. அயராது தன் முயற்சியால் நன்றாக கற்று பல்கலைக்கழகம் செல்வதற்கான தகுதியைப் பெற்றான். தாயே இயலாத வயதிலும் மனம் தளராது உறுதியோடு ஆகாஷ் பல்கலைக்கழகத்திலே பட்டப்படிப்பை மேற்கொள்ள பெரிய அளவில் பணம் செலவழிக்கின்றாள். அவளால் செலவழிக்க இயலவில்லை. தன் காணியையும் விற்று பணமனுப்புகிறாள். அன்றொரு நாள் மகனிடமிருந்து ஓர் தந்தி சொர்க்கத்திடம் கிடைக்கின்றது. "அன்பு அம்மா நான் நலம்.உங்கள் நலம் காண ஆவல். நான் மருத்துவத்துறையில் இறுதிப் படிப்பிற்காக ஒரு வருடம் வெளிநாடு செல்லவேண்டியுள்ளது. ஒரு இலட்சம் பணம் தேவையம்மா. கட்டாயம் போகவேண்டும்மா. போகாவிட்டால் நான் இவ்வளவு காலம் படித்ததெல்லாம் மண்ணாகிவிடும் என்னம்மா செய்வது அடுத்த மாதம் முப்பதாம் திகதி போகவேணும்" இப்படிக்கு அன்பு மகன்.

கடிதத்தை பார்த்த சொர்க்கத்திற்கு இடிவிழுந்தாற் போலிருந்தது. ஆயிரங்களை காணுவதற்கே தவமிருந்த கைகளுக்கு ஒரு லட்சம் எங்கே? இறைவா ஏன் என்னை சோதிக்கிறாய் என புலம்புகிறாள். நாட்களும் நெருங்குகின்றன. சொர்க்கத்தின் இதயம் இடம் மாறி துடிப்பதாய் ஒரு லட்சமே நினைவில் நிற்கின்றது. மறு நாள் காலை வேலைக்கு வழமை போல செல்லும் வழியில் சிவப்பு நிறத்தால் ஒரு 'போஸ்டர்' ஒட்டப்பட்டிருந்தது. பார்த்தாள் அதில் க.சுப்பையா என்பவருக்கு அவசரமாக சிறுநீரகம் ஒன்று தேவைப்படுவதாகவும், யாராவது சிறுநீரகம் தந்து உதவுபவர்களுக்கு சன்மானமாக ஒரு லட்சம் வழங்கப்படும் எனவும் போடப்பட்டிருந்தது. அதை வாசித்து பெரு மகிழ்ச்சியால் துள்ளிக்குதித்தவளாய் வைத்தியசாலைக்கு விரைந்து சென்றாள். தன் லட்சியத்தை நிறைவேற்ற சிறுநீரகத்தை தானமாய் வழங்க முடிவு பண்ணியவளாக வைத்தியசாலையில் சிகிச்சையில் ஈடுபட்டாள். சிறுநீரக பொருத்தம் சரியாக இருந்ததால் பணத்தை ஆகாஷின் பெயரில் வைப்புச் செய்துவிட்டு சிறு நீரகமும் தானமாய் வழங்கினாள். அன்றிலிருந்து தன்னால அதிகம் வேலை செய்ய முடியாத நிலை ஏற்பட்டவளாக காலம் கடத்தினாள். ஆகாஷும் வெளிநாடு சென்று கற்றுக் கொண்டிருக்கும் தருவாயில் சொர்க்கத்திற்கும் நிலை தடுமாற்றம் அடைகின்றது. மகனைக் காண தவித்தவளாய் நோய் நொடிகளுக்கு ஆளாகின்றாள். மகனும் தன் பட்டப் படிப்பை நிறைவு செய்துவிட்டு வைத்தியராக காரில் ஊர் நோக்கி வருகின்றான். "ம்...ம்... ம்.." ஓர் முனகல் சத்தம் கேட்கிறது. ஆகாஷ் காரிலிருந்து இறங்கி உள்ளே செல்கின்றான். சொர்க்கம் "மகனே வந்துட்டாயா? என் ராசா எப்படி இருக்கிறாய்?" என்கின்றாள். ஆகாஷ் "அம்மா நீ சொன்ன மாதிரி நான் டொக்டர் ஆகிட்டேனம்மா." என அம்மாவிடம் கூறுகின்றான் தாய் ஒரு புறம் சந்தோஷத்தில் மிதக்கின்றாள். மறு புறம் நோய் வாட்டுகிறது. அத்தோடு அவளது பேச்சுக்கள் நிலை தடுமாறுகின்றன. ஆகாஷ் தற்போது அன்னையை உயர்ந்த வைத்தியசாலையில் வைத்து கவனிக்கின்றான். தாயின் நிலை எப்படியாயினும் தற்போதைய இலட்சியத்தை நிறைவேற்றியவளாய் மரணப்படுக்கையை மலர் படுக்கையாக கொண்டு அழகாய் துயில்கின்றாள்.

ஆகாஷ் கண்களிலிருந்து கண்ணீர் வடிய வானத்தையும், மலை முகடுகளையும் பார்த்த பார்வையிலிருந்து விடுபட்டு அம்மாவிற்கு மருந்து கொடுக்க நேரமாகிவிட்டதை உணர்ந்து உள்ளே ஓடுகிறான். தாய் அவ்வேளை இவ்வுலகைவிட்டு மெது மெதுவாக போய்க்கொண்டிருக்கின்றாள். தன் இலட்சியத்தை நிறைவேற்றிய நம்பிக்கையில் கண்கள் அகல விரிகின்றன. ஆகாஷ் அம்மா! அம்மா! என அலறுகிறான், இலட்சியத் தாயை நினைத்து இலட்சிய மகன் !

யாவும் கற்பனையே!



வணங்க ஆரம்பிக்கும் போதே வளர ஆரம்பிக்கிறோம். GTC

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# සහෝදර භාෂාව ඉගෙනීම කාලෝචිත ද?

තාහා මොහමඩ් ෂිෆා,
දෙවන වසර, දෙවන බස දෙමළ

අපේ රට ශ්‍රී ලංකාවයි. මේ පුංචි රට ලොවට ම ආඩම්බරයක් ගෙන දෙන්නේ ද විවිධ හේතූන් නිසා ය. විවිධ ජාතීන්, විවිධ ආගම් තිබෙන්නා වූ රටකි. පල්ලි, පන්සැල්, කෝවිල් ඈ පූජනීය ස්ථාන පුරුකෝ.

ජාතිය, ආගම් අතර සුළු සුළු ප්‍රශන තිබුණත් එය ඉතා ඉක්මනින් යතා තත්ත්වයට පත්වෙයි. ශ්‍රී ලාංකික ජනයා ජනවාර්ගික ප්‍රශ්නය, ප්‍රචණ්ඩත්වය හේතුවෙන් දසක තුනක් කඳුළු සැලූ හ. උතුර දකුණ වෙනුවෙන් රට වෙන් කොට ජීවත් වූහ. උතුරේ දෙමළ භාෂාව කථා කරන ජනයා ද්‍රවිඩයා, දකුණේ සිංහල කථා කරන ජනයා සිංහලයා යැයි භාෂාවලින් හා ආගම්වලින් වෙන් වී ඉතා දුෂ්කර අසීරු ජීවිතයක් ගත කළ හ.

මෙම තත්ත්වයන්ගේ ප්‍රතිඵලයක් වශයෙන් ශ්‍රී ලංකාවේ ආර්ථිකය පසු බැසීය. අනාගතය අභියෝගයට ලක්විය. ව්‍යාපාරිකයන්ගේ ව්‍යාපාර කටයුතු අඩාල විය. ගොවියන්ගේ ගොවි නිෂ්පාදන වෙළෙඳ පොළ කරා ගෙන යාමට නොහැකි විය. ඩාමාන්‍ය ජන ජීවිතය සහ ඔවුන්ගේ ඉඩ කඩම් අහිමි විය. පාසල් දරුවන්ගේ ඉගෙනුම් කටයුතු අඩාල විය. මෙවෙනි බොහෝ දේ සිදුවූයේ භාෂාවෙන් ජාතිය වෙන්කොට දැමූ නිසා විය හැකිය.

ඒ නිසා, රටක් තුළ ජාතීන් අතර ගැටුම්කාරී ජීවිතයක් පැවතිය තම රට තුළ නිදහසේ ගමන් බිමන් යෑමට පවා පාස් ක්‍රමයක් අනුගමනය කළ හ. දෙමළ භාෂාව කථා කරන පුද්ගලයා, සිංහල භාෂාව කථා කරන පුද්ගලයාගේ විරුද්ධ වාදියා බවට පත්විය. ඒ පුද්ගලයා ගැන විමසිල්ලෙන් සිටිය හ. දැන් එම තත්ත්වය මුළුමනින් ම වෙනස් විය. මානුසිය මෙහෙයුමෙන් පසු ජන ජීවිතය යතා තත්ත්වයට පත් වී ඇත. සාමය පතා දිනෙන් දින සාමාන්‍ය ජනයා සුසුම් හෙළති. රටේ ජන නායකයා පවා දෙමළ භාෂාව කතා කරද්දී අපිත් සිංහල භාෂාව කතා කරමු යැයි දෙමළ ජනයා සිතන්න පටන්ගෙන ඇත.

දැන් සිංහල ජනයා ද දෙමළ භාෂා කතා කිරීමට උනන්දු වන බව අපට අසන්නට ලැබේ. දෙමළ හා සිංහල භාෂා දෙකම අපේ රටේ භාෂාවන් වේ. එය සතා කරන පුද්ගලයෝ දෙපිරිසක් අපේ රටේ ජීවත් වෙති. එම භාෂාවන් ඉගෙන ගැනීමෙන් අපට අපේ සහෝදර ජනයාගේ අපහස් තේරුම් ගනිමින් සාමකාමී ජීවිතයක් ගත කරන්නට පුළුවනි.

තම තමන්ගේ අදහස් නිවැරදිව ප්‍රකාශ කළ නොහැකිව පීඩා විඳින පුද්ගලයින්

කොපමණක් ඇද්දඩි එම භාෂාව කතා කරන විට ඇතිවන වැරදි වචන උච්චාරණ හේතුවෙන් ද ප්‍රශ්න ඇති විය හැක.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

පාසල් දරුවන්ට දෙමළ මාධ්‍ය විද්‍යාලවල බොහෝ සෙයින් ම සිංහල බසට එතරම් තැනක් අද දක්වාම ලැබී නොමැත. උතුරු නැගෙනහිර පළාත්වලට යවනු ලැබූ සිංහල ගුරුවරුන්ට ඉතා අල්පස්ථානයක් පමණක් ලැබුණි. එහි සිංහල බසට නම් අදටත් තැනක් නම් ලැබී නැත. සිංහලට දක්වන්නේ ආවාට ගියාට යන මතයයි. මුලින්ම සිංහල දෙමාපියන්ටත්, දෙමළ, මුස්ලිම් දෙමාපියන්ටත්, ගුරුවරුන්ටත් සිංහල, දෙමළ භාෂාවල ඇති වුවමනාව හා වටිනාකම ගැන දැනුවත් කිරීම අවශ්‍යයි.

පාසල් දරුවන්ට නව අධ්‍යාපන ක්‍රමය අනුව දෙවන බස දෙමළ සිංහල ඉගෙන ගැනීමට අවකාශ ලැබී ඇත. එම පාඩම ඉගැන්වීම සඳහා පුහුණු ගුරු පුරප්පාඩුවක් පවතී. මෙය ළමුන්ට නිසි අයුරින් තම අධ්‍යාපන කටයුතු කරගෙන යෑමට බාධා එල්ල විය හැක. ඒ බැවින් පුහුණු ගුරුවරුන් පාසල්වලට ලබා දීමෙන් එම ප්‍රශ්ණය ද විසඳේ. වෙනත් විෂයක් භාර ගුරුවරු දෙවන භාෂාව ඉගැන්වීමෙන් උච්චාරණය සහ නිවැරදි අකුරු යෙදෙන ස්ථාන නිවැරදි අකුරු ලිවීමට නිවැරදි අකුරු සොයා ගැනීමට අපහසුතාවයට ලක් වී ඇත. තවද දෙමළ වචනයකට නිවැරදි තේරුම කියා දීමේ දී ගැටළු මතුවේ. මේ නිසා, ළමුන්ගේ අධ්‍යාපන කටයුතු හරියාකාර කරගෙන යෑමට ද බාධා ඇති වේ.

එම නිසා, අපි හැමෝ ම භාෂාවලින් ගැටුම් ඇති නොවන්නට ඉඩ සළසා ගමු. දෙමළ, සිංහල භාෂා නිවැරදි ආකාරයට කතා කරමු. ඉගෙන ගනිමු. අපි අපේ සහෝදර ජනයා තේරුම් ගනිමු. සාමයෙන් සතුටෙන් ජීවත් වෙන්නට අධිෂ්ඨාන කර ගනිමු.

# மலைத் தமிழன்

**ஆர். விக்னேஷ்,**
விடுகை வருடம், ஆரம்ப நெறி

தேனீர் பருகுவதும் - காலை
தேகம் சூடாவதுவும்
தேயிலை தேசத்துக்கு தீபம் ஏற்றுவதும்
நீங்கள்
தென்னிலங்கையை சீர்படுத்துவதும்
காசுப் பெட்டிகளை நிரப்புவதும் -
கடைசியில்
கடைக்கண்ணால் பாரத்தேசுவதும்
சட்ட சபைக்கு சென்றதுவும் - நீங்கள்
சாப்பிட்டு சந்தோஷமடைவதும்
தோற்றம் ஏற்றமுற வாழ்வதுவும் -
கடைசியில்
செல்லாக் காசென்று திட்டுவதும்
அபிவிருத்தி அடைந்ததுவும் - கடைசியில்
"ஆகாத" பேடிகளென்று பேசுவதுவும்
காடெல்லாம் நாடானதும் - நீங்கள்
கார் பங்களாவென்று வாழ்வதும்
சேறெல்லாம் சோறாக்கியதும் - நீங்கள்
கூறு கெட்டு பேசுவதும்
மாடாய் உழைத்ததுவும் - உங்கள்
மாலையெல்லாம் மணியானதுவும்
மண்ணை பொன்னாக்கியதும் - பின்னர்
என்னென்று கேட்காமல் ஏங்க விட்டது.
யாரை என்று கேட்பீரா?
மேற்பணி ஆற்றிய - மேலிடத்து
மலைத் தமிழனை தானே!!



பொறுமை மிகுந்த மனிதனில் கோபத்தில் எச்சரிக்கையாய் இருங்கள். GTC

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னச் சின்ன உறுதிகளால் சிறக்கட்டுமே நம் வாழ்வு!

கவிதா ராஜேந்திரன்
விடுகை வருடம், சித்திரப் பாடநெறி.

மனித அறிவு, பகுத்தறிவையும், மனிதநேயத்தையும் அடிப்படையாகக் கொண்டே இருப்பதால்தான் அவன், மற்ற உயிர் வாழ் பிராணிகளை விட உயர்ந்த, சிறந்த வாழ்வியலுக்கு உரியவனாகிறான்.

தந்தை பெரியார் அவர்கள் கூறுவார்கள் - "மனிதன் ஒரு சமூகத்தில் வாழும் கூட்டுப் பிராணி. ஒருவருக்கொருவர் உதவி செய்து கொண்டு மகிழ்ந்து, பல்லுயிர் ஓம்பி, பகுத்துண்டு வாழும் பண்புக்கும், பழக்கத்திற்கும் உரியவன் ஆவான்.

ஒரு குருவி இன்னொரு குருவிக்குக் கூடு கட்டுவதில்லை. ஆனால் மனிதனோ மற்றவர்களுக்கு வீடு கட்டித்தருகின்றான், ஏன்? மிகப் பெரும்பாலான நாடுகளில் அவன் தொழிலாக அதைச் செய்தாலும் கூட அது தொண்டினையும் அடித்தளமாகத் தானே கொண்டுள்ளது?

இந்தக் கருத்தினை உற்று நோக்கி சீர்தூக்கி பார்த்தால், தொண்டறம் என்ற அடித்தளத்தில் தான் மனித வாழ்வு என்ற கட்டடம் எழுப்பப்பட்டுள்ளது என்பது புரியும்.

"அறிவினான் ஆகுவ துண்டோ பிறிதின்
நோய் தன்நோய் போல் போற்றாக் கடை"

என்ற இந்தக் குறள், அறிவை ஒரு வாய்ப்பாக, மற்றவருக்கு உதவிட, துன்பம் கலைத்திட ஓர் அற்புதமான கருவியாகப் பயன்படுத்துங்கள் என்பதை தானே வலியுறுத்துகிறது!

புத்தாண்டு பிறந்தவுடன் எல்லோரும் மகிழ்ச்சியான புத்தாண்டு என்று ஒருவருக்கொருவர் வாழ்த்துக்களை நாம் பரிமாறிக் கொள்கின்றோமே, அதன் தத்துவம் என்ன?

ஆய்ந்து பாருங்கள்! அது வெறும் ஒலி அல்ல, அச்சிடப்பட்ட எழுத்தல்ல, எந்த நிலையிலும் நாம் அனைவரும் உறவினர் ஒருவருக்கொருவர் உதவ வேண்டியவர்கள் அந்த உறுதியைத்தான் புத்தாண்டு வாழ்த்தாகக் கூறுகிறோம் என்பதைப் புரிந்து கொண்டு, அதன்படி செயல்பட வேண்டும்.

"இந்தப் புத்தாண்டு முதல் புதிய புதிய உறுதிகளை, செயற்பாடுகளை ஏற்கிறோம், செய்வோம்'' என்று பல நண்பர்கள் கூறுவதை நாம் கேட்கிறோம். அது வரவேற்கத்தக்கதுதான். ஆனால் ஏற்றபின் ஒரு சில நாள்கள்தான்.....! பிறகு அது மறந்தே போய்விடுகிறது என்றால் அதைவிடக் கேலிக் கூத்து வேறு உண்டா?

1. இன்று முதல் தொலைக்காட்சி முன் நான் அதிக நேரத்தைத் தொலைக்க மாட்டேன்.!
2. எப்போது, எவர் சிறு சிறு உதவி செய்யினும் நன்றி காட்டத் தவறமாட்டேன்.!
3. கைமாறு என்ற எதிலும் கணக்குப் போட்டு எவருடனும் பழகும் போலி நடிப்பு வாழ்க்கையை மேற்கொள்ள மாட்டேன்.!
4. பசுத்தோல் போர்த்திய ஓநாய் போல் இரட்டை வாழ்க்கையாக சொல்வேறு, செயல் வேறு என்று வாழ மாட்டேன்!
5. தகுதியில்லாதவர்களை அவர் மன நிறைவேற்றுவதற்காக "முகஸ்துதி" செய்து அதன் மூலம் எனது சுயமரியாதையை அடகுப் பொருள் ஆக்க மாட்டேன்.!






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. நல்வாழ்வுக்காக, நாக்கு ருசிக்கு அடிமையா அவதியுறும் எதனையும் செய்ய மாட்டேன்.

7. இரவில் படுக்கப் போகுமுன் பல் துலக்கினால் பல நோய்த் தடுப்புக்குப் பாதுகாப்பாக அது அமையும் என்ற மருத்துவர் கூற்றுக்கு ஏற்ப நாளும் சோம்பலுக்கு இடம் தராது உறங்குமுன் அதைச் செய்வேன்.

8. பசிக்கு உணவு என்பது எவ்வளவு முக்கியமோ அவ்வளவு முக்கியம் அறிவுக்கு உணவு என்று கருதி, பயனுள்ள நூல்களை வாங்கிப்படிப்பேன்.

9. பிறரிடம் புத்தகங்களை வாங்கினால், தவறாமல் - மறக்காமல் - அவற்றைத் திருப்பித் தருவேன்.

இப்படிப் பலப்பல உறுதிகள் - சின்ன சின்ன உறுதிகளை செய்தால் சிறக்குமல்லவா நம் வாழ்க்கை?

அதற்குப் புத்தாண்டுதான் தேவை என்பதல்ல, அது ஒரு காலக் குறியீடு, ஒரு சாக்கு, ஒரு நிர்ப்பந்தம் - அவ்வளவே?




# வாழ்க்கை

எம். புனிதவதி
விடுகை வருடம், உடற்கல்விப் பிரிவு.

வாழ்க்கை ஒரு சவால் - அதனைச் சந்தியுங்கள்
வாழக்கை ஒரு பரிசு - அதனை ஏற்றுக்கொள்ளுங்கள
வாழ்க்கை ஒரு சாகசப்பயணம் - அதனை மேற்கொள்ளுங்கள்
வாழ்க்கை ஒரு சோகம் - அதனைக் கடந்து வாருங்கள்
வாழ்க்கை ஒரு துயரம் - அதனை தாங்கிக் கொள்ளுங்கள்
வாழக்கை ஒரு கடமை - அதனை நிறைவேற்றுங்கள்
வாழ்க்கை ஒரு விளையாட்டு - அதனை விளையாடுங்கள்
வாழ்க்கை ஒரு வினோதம் - அதனைக் கண்டறியுங்கள்
வாழ்க்கை ஒரு பாடல் - அதனைப் பாடுங்கள்
வாழ்க்கை ஒரு சந்தர்ப்பம் - அதனைப் பயன்படுத்திக் கொள்ளுங்கள்
வாழ்கதை ஒரு பயணம் - அதனை முடித்து விடுங்கள்
வாழ்க்கை ஒரு உறுதி மொழி - அதனை நிறைவேற்றுங்கள்
வாழ்க்கை ஒரு காதல் - அதனை அனுபவியுங்கள்
வாழ்க்கை ஒரு அழகு - அதனை ஆராதியுங்கள்
வாழ்க்கை ஒரு உணர்வு - அதனை உணர்ந்து கொள்ளுங்கள்
வாழ்க்கை ஒரு போராட்டம் - அதனை எதிர் கொள்ளுங்கள்
வாழ்க்கை ஒரு குழப்பம் - அதற்கு விடை காணுங்கள்
வாழ்க்கை ஒரு இலக்கு - அதனை எட்டிப் பிடியுங்கள்


அதிக வறுமைப்பட்டவரும் அதிக செல்வமுடையவரும் நியாயத்தைச் சொன்னால் கேட்கமாட்டார்கள். GTC
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பசுப் பாலின் முக்கியத்துவம்



கே. சசிகலா
தொடுகை வருடம், உடற்கல்விப் பிரிவு.

உடலிற்கு போசணை வழங்கும் தாவர விலங்குணவு வகைகளில் பாலானது ஓர் முக்கிய இடத்தை வகிக்கின்றது. இளம் முலையூட்டிகள் பாலில் முற்றாகத் தங்கியுள்ளன. பாலானது வளர்ச்சிக்கும், உடலின் பராமரிப்பிற்கும் தேவையான அதிக போசணைச் சத்துக்களைக் கொண்டுள்ளது. பாலானது திரவ நிலையில் காணப்படுவதால் இலகுவாக சமிபாடு அடைந்து அகத்துறிஞ்சிப் படுகின்றது. இதனால் குழந்தைகள், நோயுற்றவர்கள் சிறுவர்கள் யாவரும் இவ் இயற்கையான குடிபானத்தை அருந்தலாம்.

பால் ஒரு நிறைவான அல்லது சமநிலையான உணவாக கொள்ளப்படுகின்றது. புதிய பாலில் தனித்தன்மையான மணம், நிறம், சுவை உண்டு. பாலின் நிறத்திற்கு அதில் கரைந்துள்ள புரதமும், கல்சியமுமே காரணமாகும்.

**பாலின் உள்ளடக்கங்கள்**

ஆரோக்கியமான பசுவின் பூரணமான பால் கறத்தலின் பின் கொழுப்பு தவிர்ந்த திண்மங்கள் 8.3% லும் குறைவில்லாமலும், கொழுப்பு 3.3% இலும் குறைவில்லாமலும் பெறப்படும் பால் "முலைச்சுரப்பு பால்" என அழைக்கப்படும்.

பால் என்பது நீரும் திண்மங்களும் ஒன்றாகச் சேர்ந்த கூட்டான கலவை. இதில் காபோவைதரேற்று, இலிப்பிட்டு, புரதம், கனியுப்புக்கள், (முக்கியமான கல்சியம், பொசுபரசு) விற்றமின்கள், நொதியங்கள் யாவும் காபோவைதரேற்றுக்களில் அதிகளவில் காணப்படுகின்றது. புரதத்தில் கேசின் அல்புமின் மற்றும் குளோபியூலினும் அதிகளவில் காணப்படும்.

புரதப் பகுதியில் கேசின் ஆனது இலகுவாக சமிபாடடைகின்றது. அல்புமினும் குளோபியூலினும் பால் கொதிக்க வைக்கும் போது கட்டியாக்கப்படுகின்றன. இதில் கொழுப்புப் பகுதியும் கலக்கப்பட்டு மேற்பகுதியில் "ஆடையாக" உருவாக்கப் படுகின்றது.

கல்சியம் / பொசுபரசு பாலிலும் பாலுற்பத்திப் பொருட்களிலும் 1:1 விகிதமாக காணப்படும். பசுப்பாலில் தாய்ப்பால் போலவே விற்றமின் B அதிகளவில் காணப்படுகின்றது. விற்றமின் A விற்றமின் K ஆகியவை அதிகமாகவும் விற்றமின் D குறைந்த அளவிலும் காணப்படுகின்றன.

**போசணையில் பாலின் முக்கியத்துவம்**

பாலானது போசணையில் உயர்ந்த, ஆரோக்கியமான, இயற்கையான குடிபானம் ஆகையால் எல்லா வயதினர்களிற்கும் பொருத்தமானது.

பாலில் சக்தியைப் பெறுவதற்கும் வளர்ச்சியை ஊக்குவிப்பதற்கும் அவசியமான சகல போசணைச் சத்துக்களும் அடங்கியுள்ளது. விசேஷமாகக் கல்சியம் நிறைந்த ஆகாரம்.

பால், பால் உணவு வகைகள் சொற்ப அளவிலேனும் உள்ளெடுப்பின், அரிசி, கோதுமை உணவுகளிலே காணப்படும் இலைசின் என்னும் அத்தியாவசியமான அமினோ அமிலத்தின் குறைபாடு நிவர்த்தி செய்யப்படும்.

பாலிலுள்ள இயற்கையான உள்ளடக்கங்கள் அதிக போசணையுள்ள உணவை இலகுவாக அகத்துறிஞ்ச உதவுகிறது. உதாரணமாக இலக்ரோசு, இலக்ரிக் அமிலமாக மாறுவதால் உணவில் காணப்படும் கல்சியம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகத்துறிஞ்சல் அதிகரிக்கப்படுகின்றது.

விற்றமின் A குறைவாக உணவில் அக்குறைபாட்டை நிவர்த்தி செய்யப் பால் மிக முக்கியமான ஆகாரம், விசேஷமாக ஆகார வேளையில் கடும் பச்சை மரக்கறி வகைகள் காணப்படாவிடின் அக்குறைபாடு பால் மூலம் நிவர்த்தி செய்யப்படும்.

**பால் பதனிடும் வெவ்வேறு வழிகளும் அதிலுள்ள நன்மைகளும், தீமைகளும்.**

பால் அதிக போசணையுள்ளதால் நுண்ணுயிர்களின் வளர்ச்சிக்கு உகந்த ஊடகமாகும். இக்காரணத்தால் பால் இலகுவாக பழுதடைகின்றது. இதனால் பாவனைக்கு எடுக்கும் வரை பாலைப் பாதுகாப்பதற்கு வெவ்வேறு முறைகள் பாவிக்கப்படுகின்றது. இவ் எல்லா முறைகளிலும் பின்வரும் விடயங்கள் கருத்தில் கொள்ளப்படுதல் வேண்டும்.

பாலின் தரம் பாதுகாக்கப்பட்டு, தேவையற்ற பொருட்கள் உட்செல்லாது பாதுகாக்கப்படுதல் வேண்டும்.

புதிய பானமாகையால் போசணைத் தரம் சுவை, சுகாதாரம் ஆகியவை பேணப்படுதல் வேண்டும்.

செயற்கையான சுவையூட்டிகள், பால் பாதுகாப்பதற்கான இரசாயனப் பதார்த்தங்கள் தவிர்க்கப்பட்டதாகக் காணப்படல் வேண்டும். கீழ் வரும் மூன்று முறைகளில் பால் பதனிடப்படும்

1. சூடாக்குவதனால் திண்மமாகவோ, பகுதி திண்மமாகவோ பால் அடர்த்தியாக்கப்படல்.
2. மனிதர்களுக்கு தீமை விளைவிக்காத நுண்ணுயிர்களைப் பயன்படுத்தி பாதுகாத்தல்.
3. சீஸ்(வெண்ணெய்கட்டி) உற்பத்தி செய்தல்.

பாய்ச்சர் முறைக்குப்படுத்தப்பட்ட பால்

இம் முறையின் போது பாலில் காணப்படும் நோயை உண்டாக்கும் நுண்ணுயிர்கள் வெப்பத்தினால் அழிக்கப்படுகின்றது. பாய்ச்சர் முறைகள் 2 வகைப்படும். ஒன்று பால் $63^0c$ வெப்ப நிலைவரை சூடாக்கப்பட்டு, இவ்வெப்ப நிலையில் பால் 30 நிமிடம் பேணப்படுகின்றது. பின் சடுதியாக $4^0c$ க்கு குளிரவைக்கப்படுகிறது.

இரண்டாவது முறையில் பால் $73^0c$ வரை சூடாக்கப்பட்டு இவ் வெப்பநிலையில் 15 செக்கன்கள் வரை பேணப்பட்டு $4^0c$ க்கு குளிர வைக்கப்படுகின்றது.

பாய்ச்சர் முறைக்கு உட்படுத்தப்பட்ட பால் $20^0c$ வெப்ப நிலையில் 48 மணிநேரமும் $15^0c$ வெப்ப நிலையில் 72 மணி நேரமும் சேமிக்கப்படலாம். நுகர்வோர் இப்பாலைப் பெற்றுக்கொள்ளும் வரை $10^0c$ யில் சேமிக்கலாம்.

**கிருமியழிக்கப்பட்ட பால்**

இம் முறையில் பால் $120^0c$ வரை சில செக்கன்களிற்கு வெப்பமாக்கப்படுகின்றது. 60 - $70^0c$ இல் போத்தல்களில் நிரப்பி தக்கையிட்டு போத்தல்கள் மீண்டும் $120^0c$ வரை 20 - 60 நிமிட நேரம் வெப்பமாக்கப்படுகின்றது. இச் செயற்பாடு போத்தல்களில் உள்ள பால் சீரான வெப்பத்தைப் பெற்றுக் கொள்ள உதவுகின்றது.

நன்மைகள்

1. சுவையில் சிறந்த மாற்றம் உண்டு
2. சகல நுண்ணுயிர்களும் அழிக்கப்படுவதனால் அதிக காலம் ஆரோக்கியமாக வாழலாம்.
3. அறை வெப்ப நிலையில் சேமிக்கப்படலாம்
4. நுண்ணுயிர்கள் உட்செல்வது தடை செய்யப்படுகின்றது.
5. போத்தல்கள் திறக்கப்படும் வரை குளிரூட்டியில் வைக்க வேண்டிய அவசியமில்லை
6. இயற்கையான சுவையூட்டல்கள், பாதுகாப்பிற்கான இரசாயனங்கள் இல்லாமல் அதிக காலம் சேமிக்கலாம்.

போத்தல்களில் அடைக்கப்பட்ட பால் கிருமி அழிக்கப்பட்ட பால் சூரிய ஒளிக்கு வெளிப்படுத்தப்படின் அவற்றின் போசணைத் தரம் குறைவடையும். இச் சேதம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தவிர்க்கப்படுவதற்கு பாய்ச்சராக்கப்பட்ட பால், கிருமியழிக்கப்பட்ட பால் மூடப்பட்ட வாகனங்களில் எடுத்துச் செல்லப்பட்டு, இருளான குளிர்மையான இடங்களில் சேமிக்கப்படுவது மிகவும் நல்லது.

**சுவையூட்டப்பட்ட செறிவான பால்**

பால்$80^0$c வரை 15 நிமிடம் வெப்பமாக்கப் படுகின்றது. வெப்பமாக்கப்பட்ட பின்னர் சீனி சேர்க்கப்பட்டு குறைந்த அமுக்கத்தின் கீழ் அடர்த்தியாக்கப்பட்டு குளிராக்கப்பட்ட பின் அடைக்கப்படுகின்றது. இது சுவையூட்டப்பட்ட செறிவான முழு ஆடைப்பாலாக காணப்படலாம். இதனால் இப்பால் முதியோருக்கு மிகவும் உகந்தது.

யோகட், தயிர் என்பன சுவையூட்டப்பட்ட உணவுகளாகும் இலங்கையில் எருமைப்பால், பசுப்பால் என்பன தயிர் தயாரிக்கப்படுவதற்கு பயன்படுத்தப்படுகின்றது. எருமைப் பாலில் 7 - $9^0$c கொழுப்பு காணப்படுவதனால் பசுப்பாலிலும் விட நன்றாக கட்டியாக்கப் படுகின்றது.

தயிராக்கப்பட்ட எருமைப்பால், பசுப்பாலிலும் அதிக வெள்ளை நிறமாகக் காணப்படும். எருமைப் பாலில் கரோட்டின் இல்லாமையே இதற்கு காரணமாகும். தயிராக்கப்படும் போது பற்றீரியாவில் காணப்படும் நொதியத்தால் புரதமானது புரோத்தியேசு, பெப்ரோன்களாக உடைக்கப்படுகின்றது. இதனால் தயிராக்கப்பட்ட பால் புதிய பாலிலும் விட இலகுவாக சமிபாடு அடைகின்றது. இதற்கு காரணம் அமிலமாக்கப்பட்ட பாலுள்ள போது உமிழ் நீரில் உற்பத்தியும், பித்தச்சாறு, சதையச்சாற்றின் உற்பத்தியும் அதிகரிக்கப்படுகின்றது. இவ்வாறு நீரில் கரையும் விற்றமின்கள் நன்கு அகத்துறிஞ்சப் பட்டு சேமிக்கப்படுகின்றது. நொதிக்கும் போது பாலில் தயமின், றைபோபிளேவின், விற்றமின் B12 என்பவற்றின் அளவு அதிகரிக்கப் படுகின்றது. இதனால் தயிராக்கப்பட்ட பாலின் போசணை அதிகரிக்கப்படுகின்றது.

வளரும் பிள்ளைகளில் ஆய்வு மேற்கொள்ளப்பட்ட போது நைதரசன், கல்சியம், பொசுபரசு மற்றும் இரும்பு ஆகியவற்றை உடல் சேமிக்கும் தன்மை புதிய பாலிலும் பார்க்க தயிரில் அதிகமாகக் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது.

# மயக்கமென்ன...?

ஒருவன் அனாதை. சொத்து ஒரே ஒரு மாடி வீடு மட்டும் அது ஒரு லட்சம் போகும். ஒரு முறை அவன் மிகவும் நோய்வாய்ப்படவே தன்னைக் கவனிக்க வந்த டாக்டரிடம் 'சார்' என்னைக் காப்பாற்றிவிட்டால் இந்த வீட்டை விற்று மொத்தப் பணம் உங்களுக்கே தருவேன்' என்றான். டாக்டரும் பலவித மருந்துகளைத் தந்து உயிரைக் காப்பாற்றிவிட்டு பின் அவனிடம் 'எப்போ வீடு விற்று பணம் தருவாய்' என்றார் 'இப்பவே' என்றான். வீடு விற்க டாக்டரே பல ஆட்களை அழைத்து வந்தார். ஏலம் போட்டு அப்பொழுதே பணம் தந்துவிட வேண்டும் என்று இவன் கூறவே பலரும் சம்மதித்தனர். இவன் வீட்டு விலை 10 ரூபாய் என்றான். டாக்டர் உட்பட பலர் அதிர்ந்தனர். ஒருவன் இதோ 10 ரூபாய் எனக் கொடுக்க வந்தபோது எல்லோரும் 10 அது கூட இந்த பூனையை வாங்கினாதான் வீடு" என்றான். சரி... பூனை எவ்வளவு எனக் கேட்க, ரூ 1,00,000/-என்றான். பாதிப்பேர் ஓடிவிட்டார்கள். ஒருவன் மட்டும் அதற்கும் சம்மதித்து வாங்கினான். நம்மாள் 10 ரூபாயை மட்டும் டாக்டரிடம் தர நீட்டினான் அவர் தரையில் விழுந்து கிடந்தார்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்க்கை ஒரு நூலகம்



ஜே. எஸ். டிரோன்,
விடுகை வருடம், வர்த்தக நெறி

மனிதன் :- கடவுளே ஒரு சின்ன சந்தேகம்
கடவுள் :- சொல்லப்பா
மனிதன்:- உங்களை பொறுத்தளவிற்கு ஒரு கோடி வருடம் என்பது என்ன?
கடவுள் :- சும்மா ஒரு நொடி போலத்தான்
மனிதன் :- உங்களை பொறுத்தளவிற்கு ஒரு கோடி ரூபாய் என்பது?
கடவுள் :- சும்மா ஒரு ரூபா போலத் தான்
மனிதன் :- அப்படின்னா ஒரு சின்ன உதவி எனக்கு நீங்க செய்ய முடியுமா?
கடவுள் :- ம்.........முடியும்
மனிதன் :- எனக்கு ஒரு ரூபா கொடுங்கள்..........
கடவுள் :- ஒரு நொடி பொறுத்திரு!

கடவுள் கடவுளாயிருப்பது அவரது எளிமைத்துவத்தால் தான். ஒரு ரூபாயும் ஒரு கோடி ரூபாயும் கடவுளுக்கு ஒன்று தான். அந்த கடவுளுக்கு மனிதன் வாழும் பூமியே ஒரு சிறு புள்ளிதான்.

ஆனால், அதில் ஒரு புழுதிபோல் இருக்கும் மனிதன்தான் மானப்பிரச்சினை. வரம்புச் சண்டை, எல்லையோர கலவரம் எனச் சிறிதும் பெரிதுமாய் தன்னை சுற்றிச் நிகழ்பவற்றை பெரிதுபடுத்திப் பார்க்கிறான். சில நேரம் அது போரில் கூட கொண்டு போய் விட்டு விடுகிறது.

சிலர் பேசும் போது தான் வாழ்க்கையில் படாத கஷ்டமில்லை. எனக்கு நேர்ந்த கொடுமை யாருக்கும் நேரக்கூடாது. இவ்வளவு தொல்லைகள் எனக்கு மட்டும் ஏன் வர வேண்டும்? என சொல்லி புலம்புவார்கள்.

இந்த நிலையிலிருக்கும் மக்களுக்குச் சொல்லும் தீர்வு இது தான். உலகம் ஒரு ஜோக் கிளப். வாழ்க்கை ஒரு ஜோக் சீரியல்..........ஆகவே நீங்கள் ஒரு ஜோக்கர். ஒரு ஜென் ஞானியின் வாழ்வில் நிகழ்ந்த திருட்டுச் சம்பவமிது. அவருடைய வீடு, பல பணக்காரப் பக்தர்கள் தந்த விலையுயர்ந்த பொருட்களால் நிரம்பியிருக்கும்.

ஊருக்கு வெளியே மலையடிவாரத்தில் அவர் தங்கியிருந்த வீட்டில் அவரைத் தவிர வேறு யாருமில்லை. அறையிலிருக்கும் கட்டிலில் படுத்தபடியே ஜன்னல் வழியே தெரிந்த நிலவைப் பார்த்து ரசித்துக் கொண்டிருந்தார்.

சந்தடியில்லாமல் அறைக் கதவைத் திறந்து திருடன் சத்தமேயில்லாமல் அங்கிருந்து பொருட்கள் ஒவ்வொன்றையும் எடுத்து வெளியே இருக்கும் தன் கையாட்களிடம் கொடுத்துக் கொண்டிருந்தான். தன்னைச் சுற்றி நடப்பது பற்றித் தெரிந்திருந்தும் ஞானி அதைக் கவனிக்காதவர் போல கண்களை மூடியே படுத்திருந்தார்.

எல்லாவற்றையும் திருடி முடித்த திருப்தியில் திருடன் அறைக்கதவைத் திறந்தான். அப்போது ஞானி 'அப்பா நில்லப்பா' என்றார். எதிர்பாராத அழைப்பில் திருடன் ஒடுங்கி போனான். ஞானி



சிந்திக்காதவன் மூட்டாள். சிந்திக்கத் தெரியாதவன் கோழை. சிந்திக்க மறுப்பவன் பிடிவாதக்காரன். GTC

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இந்த கட்டிலை யார் எடுத்துப்போவார்களாம் இதையும் எடுத்துட்டுப் போப்பா! என்றார்.

திருடனால் அங்கு நிகழ்வதை ஜீரணிக்கவே முடியவில்லை. இருந்தாலும் அதையும் எடுத்துக் கொண்டு வெளியேறினான். ஞானியின் வீட்டை விட்டு கொஞ்சத் தூரம் சென்ற திருடனை ஞானி, மீண்டும் அழைத்தார். "இந்தக் கம்பளியைப் போர்த்திக்கோ வெளியே குளிர் அதிகமிருக்கும்" என தான் போர்த்தியிருந்த கம்பளியையும் தந்தார்.

கம்பளியை எடுத்துக்கொண்டு திருடன் இரண்டடி எடுத்து வைப்பதற்குள் "இந்தாப்பா இதையும் எடுத்துச் செல்" என தான் அணிந்திருந்த ஆடைகளையும் அவனிடம் தந்து விட்டு நிலவைப் பார்த்து ரசிக்க ஆரம்பித்தார். உடைகளை எடுத்துக்கொண்டு அறையைவிட்டு வெளியேறும் போது திருடனின் காதில் விழுந்த ஞானியின் பேச்சு அவனை உலுக்கியது.

"ஒரு வேளை என்னால் முடிந்திருந்தால் இந்த நிலவை கூட உனக்காகத் திருடி தந்திருப்பேன் என்ன செய்வது நிலவை யாராலும் திருட முடியாது" என இனிமையான குரலில் ஞானி சொன்ன வார்த்தைகள் திருடனின் மனதையே உருக்கியது. பிற்காலத்தில் அவன் அவருடைய சீடர்களில் ஒருவனாகிவிட்டான்.

ஞானி தன்னிடம் இருப்பவையெல்லாம் தந்த பின்னும் இனிமையாகவே இருந்தார். திருடன் எல்லாவற்றையும் பெற்றப் பின்னும் துக்கமாகவே இருந்தான். குதூகலமாகவோ இனிமையாகவோ மாறவேயில்லை. ஞானியின் இந்த நிலைக்கு காரணம் அவரின் இனிமைத்துவம் தான்.

வாழ்வு அவ்வளவு இனிமை தருவதாக இருக்கும் ஏதோவொரு வகையில் தன்னை பெரிய ஆளாக நினைக்கும் மனிதர்களுக்குத் தான் வாழ்க்கையின் கஷடங்களையே அதிகம் சந்திக்கின்றேன் என்ற உணர்வு பிறக்கும், கஷ்டப்படுவார்கள்.

எனவே, மனிதனின் இனிமையைப் பறிக்கும் தனிமையுணர்வைக் தாண்டுங்கள். நீர்த்துளியானது கடலை கண்டு பிடிப்பதுபோல நீங்கள் கடவுளை கண்டு பிடிப்பீர்கள்.


# கலாசாலை தாயே!

கே. காளிதாஸ்
விடுகை வருடம், கணித நெறி

கலாசாலை தாயே...!
இருண்ட யுகத்தில் இருந்த
எம்மை ஒளிரச் செய்த
ஒளிச்சுடர் - நீயே

எமக்கு அறிவு புரட்சியை
பூக்கள் செய்தவளும் - நீயே
எமது சிந்தனைக்கு வித்திட்டு
கல்வியில் சிகரத்தை தொட
திடசங்கற்பம் கொண்டவளும் -நீயே
எமது எதிர்காலம் சிறக்க
வித்திட்டவளும் - நீயே
எம்மை வெளியுலகிற்கு
எடுத்துக் காட்டியவளும் - நீயே

உனது கல்வி பயணத்தில்
நாம் வெற்றி கண்டு
ஆயிரமாயிரம் காலம்
உனது பெயரை உச்சரித்துக்
கொண்டே இருப்போம்
கலாசாலை தாயே...! வாழ்க.








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஹைக்கூ....



ஆர். கயல்விழி
விடுகை வருடம், உடற்கல்விப் பிரிவு

பிரம்மன் படைப்பில்
உயிருள்ள அலாரம்
"சேவல்"

சீ......சீ......
இந்தப் பழம்
புளிக்கும்
"சமாதானம்"

மண்புழுவுக்கு
எங்கள்
சன்மானம்
"வரதட்சணை"

தற்காலிக
விடுமுறை
எங்களுக்கு
"அடையாள அட்டை"

உணர்வை
வெளிப்படுத்துவோம்
உணரமாட்டோம்
"சிலைகள்"

நீ
சிரிக்க
நான் அழுவேன்
"மெழுகுவர்த்தி"

ஒட்டுக்குச் சேர்ந்திடும்
சூட்டுக்கு பிரிந்திடும்

"அரசியல் கட்சிகள்"
வயிறுகள்
நிறையாவிட்டாலும்
உன்னை நிறைந்திடுவோம்
"கொழுந்து கூடை"

சிரித்தால் ஓடிவரும்
அழுதால் ஓடிவரும்
"உறவுகள்"

இதற்கு மட்டுந்தான்
நாம் பேரம்
பேசியதில்லை
"காற்று"

பலகோடி
கண்கள் சேர்ந்து
கண்ணீர் விட்டது
"மழை"

நினைத்தால்
இன்பம்
அடைவது கடினம்
"சொரக்கம்"

கொன்ற பாவம்
உடுத்தினால்
போச்சு...............
"பட்டு"

எண்ணங்களை
விரல்கள்
வெளிப்படுத்தும்
"சித்திரம்"



கோபமாக இருந்தால் பத்துவரை எண்ணுங்கள். ரொம்பக் கோபமாக இருந்தால் நூறு வரை எண்ணுங்கள். GTC

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# குணம்

ஆர். காமிலா
விடுகை வருடம், இஸ்லாம் நெறி

மனிதன் நிலை மாறிவிட்டான்
மண்ணில் பெருமை கொண்டு விட்டான்
தன்னை யாரென மறந்து விட்டான்
மாற்றான் பொருளில் கண்வைத்து விட்டான்
மார்க்கம் யாதாயினும் பெறுவதில்
மோகம் கொண்டு விட்டான்

உழைத்து வாழ, வாழ்வில் நிலைத்து நிற்க,
சுய கௌரவம் பெற்றிட
தவறிவிட்டான்

பொன்னும் பொருளும் அள்ளிப் பெறவும்
பொய்யும் புறமும் சொல்லித் திரியவும்
பழகி விட்டான்

கல்லுக்கும், மண்ணுக்கும்
ஆட்டுக்கும், மாட்டுக்கும்
விலை பேசியவன்
ஆணுக்கும், பெண்ணுக்கும்
விலைபேசி வலை விரிக்கிறான்

கூட பிறந்த ரத்த பந்தங்களை
தேடிக் கொண்ட தேடல்களினால்
தேவையற்றுக் கிடங்கள் என்று
தெருக்களோரம் துரத்தி விட்டான்

நாகரிகம் தெரியாத
சாதிகள் என்று
விருந்தின் போதும்
விழாக்களின் போதும்
விலக்கி வைக்கிறான்

இவனை யாரடா உள்ளே விட்டது?
தமது தகைமை என்ன?
அவன் நிலைமை என்ன?
தூர இருத்து - இன்றேல்
துரத்தி விடு என்கின்றான்
மனிதன் இங்கே
மனிதன் இல்லை
மரித்துப் போன
சட நெஞ்சங்களோடு
நடமாடும் சடலங்களாக
ஊசலாடும் பிணங்கள்

நிலையற்ற உலகின்
தலைக்கனத்தோடு
அலையும் தரமற்ற மானிடா
தரங்கள் என்பது
நிறங்களுமல்ல, மணமுமல்ல
மாடி வீடுமல்ல
மாறாக நல்ல குணங்கள் தான்!

### காலில்லா பாம்பு...!

''ஏண்டா பாலு! 'பாம்பு' என்று எழுதச் சொன்னா 'பாம்பு'-ன்னு எழுதியிருக்கிறியே ! கால் எங்கே?'' என்றார். ஆசிரியர். ''சார் ! நீங்கதானே சொன்னீங்க பாம்புக்கு கால் இல்லேன்னு'' என்றான் கோபு.



GTC | முன்னேற்றத்தை நோக்கி அது எவ்வளவு சிறியதாக இருந்தாலும் பரவாயில்லை. அடி எடுத்து வையுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெறியோடு வாழ்வதற்கு வழிகள்

மா. அன்னாத்துரை
விடுகை வருடம், சித்திர நெறி

ஒருவன் அதிகாலையில் எழுவதில் இருந்து இரவு உறங்கப் போகும் வரை திட்டமிட்ட நடைமுறையின் அடிப்படையில் இயங்க வேண்டும். அதிகாலையில் விழித்தெழுந்து காலைக்கடன்களை முடித்துவிட்டு உடனே குளித்து முழுகி இறைவனை வழிபடுவதையே ஒரு நியதியாக கொள்ளவேண்டும்.

சூரிய உதயத்தின் போது சூரிய நமஸ்காரம் செய்வதை ஒரு பழக்கவழக்கமாக ஆக்கிக்கொள்வது சிறந்த நடைமுறையாகும்.

ஒவ்வொருநாளும் அன்று நாம் மேற்கொள்ளவேண்டிய அலுவல்களை கால அட்டவணையின் படி பட்டியல் போட்டுக் கொண்டு முறையாக அவற்றை நிறைவேற்ற வேண்டும்.

எப்போதும் சுறுசுறுப்பாக இயங்க பழகிக் கொள்ளவேண்டும் உழைப்பு என்பது அன்றாட வாழ்வில் ஓர் அம்சமாக அமைய வேண்டும் உடற்பயிற்சியையும் ஒரு நியதியாகக் கொள்ள வேண்டும்.

காலத்தோடு உணவு பசித்த நேரத்தில் மட்டும் உணவு பிரதான உணவு சத்தான உணவு இவையெல்லாம் பலவீனமற்ற உடல் நிலையைப் பெறுவதற்கான திட்டமாகும்.

இரவில் காலத்தோடு உறங்கச் சென்று நிம்மதியாக உறங்கி அதிகாலையில் விழித்தெழ வேண்டும்.

மனத்தில் உயர்ந்தசிந்தனைகளுக்கு இடந்தர வேண்டும். தீய நினைவுகளுக்கு மனத்தில் எந்தநிமிடமும் இடமிருக்கக்கூடாது. போட்டிமனப்பான்மை, பொறாமை உணர்ச்சி வஞ்சக உணர்வு, புறங்கூறுதல், மனத்தாலும் உடலாலும் பிறரை துன்புறுத்தல் போன்றவையெல்லாம் மனிதனின் நிம்மதியை, மகிழ்ச்சியை கெடுக்கும் பலவீனங்களாகும். இவற்றை அடியோடு மனத்தை விட்டு அகற்ற வேண்டும்.

நமது சூழ்நிலையில் உள்ள ஒவ்வொருவரிடமும் அன்பு செலுத்த வேண்டும். நமக்கு அறிமுகமானனவராக இருந்தாலும் இல்லாவிட்டாலும் அவர்கள் மீது அன்பு செலுத்தவதை முக்கிய கடமையாகக் கொள்ள வேண்டும்.

நம்மால் முடிந்த மட்டில் பிறருக்கு உதவ வேண்டும் இதே போன்று நமக்கு பிறர் உதவி தேவைப்படும் போது உரிமையோடு கேட்டும் பெற வேண்டும்.

சமுதாயத்தில் நாம் யாருக்கும் ஒரு சுமையாக இருக்கக்கூடாது நமது தனித்தன்மையைக் காத்து நமது தேவைகளை நமது சுய பலத்தால் பூர்த்தி செய்து வாழ வேண்டும்.

நமக்கென்று ஒருவேலை அல்லது தொழில் இருக்க வேண்டும். அந்தத் தொழில் மூலம் நமது வாழ்க்கை தேவைகளை நமது சுய பலத்தால் பூர்த்தி செய்து கொள்ளப் போதுமான வருவாய் இருக்குமாறு ஏற்பாட்டினைச் செய்து கொள்ள வேண்டும். இறைவழிபாடு என்பது மனித வாழ்க்கையின் உயிரோட்டமான அம்சமாகும். மனிதனுக்கு மட்டுமல்ல ஒவ்வொரு உயிரினத்திற்கும் இறைவனை ஒருவன் தான் பாதுகாவலன்.

இறை நம்பிக்கை இறைவழிபாடு என்பனவெல்லாம் உயிரினங்களின் மகத்தானவலிமையாகும். "கடவுளை நம்பினோர் கைவிடப்படார்" என்ற பழமொழிக்கு எவ்வளவோ உயர்ந்த அர்த்தம் உண்டு.

கடவுள் நம்பிக்கையுள்ளவன் வாழ்க்கையின் எந்த நிலைகுறித்தும் - எந்த - நெருக்கடி குறித்தும் அஞ்சவேண்டியிருக்காது.

கடவுளை நம்பவோர் தாங்களே ஒரு மகத்தான சக்தியையும் சேர்த்து இணைத்து கொள்கின்றார்கள் என்பதை நிச்சயமாக உணர


கடவுள் உலகை எப்படி ஆண்டு வருகிறார் என்பதைப் பார்க்க நான் பத்திரிகைகளைப் படிக்கிறேன். GTC

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டும். நன்றாக யோசித்துப் பார்த்தோமானால் பலவீனங்கள் என்று நாம் நினைப்பவைகளில் பெரும் பகுதி நாமாக வலிந்து செய்து கொண்ட கற்பனை என்பது புலப்படும்.

**மனிதனுக்கு உடலை விட மனம் தான் பலமாக இருக்க வேண்டும்! உள்ளத்து பலம் தான் உயர்ந்த பலம் உடல் பலமல்ல!**

நல்ல சிந்தனைகள் - உயர்ந்த உண்ணங்கள் அன்பு வழிப்பட்ட உணர்வுகள் நட்பு வழிப்பட்ட செயற்பாடுகள் போன்றவை உள்ளத்தின் பலத்திற்கு ஆதாரமான ஆதாரங்களாகும்.

**எந்த வகையிலும் மனிதன் பலவீனமானவன் அல்ல!!!** இந்த உணர்வு ஒவ்வொருவரிடம் நிலைக்கட்டும்.

# ஏடு!

**செல்வராஜ் சுபத்திராதேவி**
விடுகை வருடம், உடற்கல்விப் பிரிவு

நல்ல ஏடு - இது
வெள்ள ஏடு
கள்ளம் இல்லா - இது
வல்ல ஏடு

சுத்தமாய் நீ இருந்தும்
சுவீடனுக்கா போவாய் - இந்த நாட்டில்
சுற்றி திரியும்
சுடுகாட்டில் கடவாய்

மனம் ஒரு நல்
குணம் என்றால்
கவிதையாய் நீ மலர் வாய்
